முகலாயப் பேரரசு-I

(THE MUGHAL EMPIRE)

ஆசிரியர்

ஏ. எல். ஸ்ரீவத்ஸவா

தமிழாக்கம்

[illegible], எம்.ஏ.

அரசினர் [illegible] கல்லூரி, கோவை.

[illegible], எம்.ஏ., பி.டி.,

விரிவுரையாளர், வரலாற்றுத்துறை

[illegible] கல்லூரி, சென்னை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—148

முகலாயப் பேரரசு-I
(THE MUGHAL EMPIRE)

ஆசிரியர் :

ஏ. எல். ஸ்ரீவத்ஸவா

தமிழாக்கம் :

ஏ. உஸ்மான் ஷெரீப், எம்.ஏ.,
பேராசிரியர், வரலாற்றுத்துறை,
அரசினர் கலைக் கல்லூரி, கோவை.

எம். எக்ஸ். மிராண்டா, எம். ஏ., பி. டி.,
விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
லயோலாக் கல்லூரி, சென்னை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—April 1967

B.T.P. No. 143

THE MUGHAL EMPIRE

A. L. Srivastava

Translation
A. OOSMAN SHERIFF
M. X. MIRANDA

Price Rs. 7–50

PRINTED BY
KUMARAN PRESS.
MADRAS-1.

அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வியமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாண வர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந் துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரி யர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும், மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'முகலாயப் பேரரசு-I' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் **143**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 178 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலை மண்டபத்தில் கொலுவீற்றிருக்கிறாள். எனவே, இவ் அன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

நான்காம் பதிப்புக்கு முன்னுரை

இப் பதிப்பில் இந்நூல் மிகக் கவனத்துடன் திருத்தம் செய்யப் பட்டுள்ளது. புதிய விவரங்களைச் சேர்க்கவேண்டும் என்று கருத வில்லையாயினும் முற்பட்ட பதிப்பிலுள்ள அச்சுப் பிழைகளும் இதர பிழைகளும் சரிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆக்ரா: செப்டம்பர் 1, 1964. A. L. ஸ்ரீவத்ஸவா

மூன்றும் பதிப்புக்கு முன்னுரை

முகலாயப் பேரரசு என்ற நூல் மாணவ சமுதாயத் திற்குப் பயனளித்துள்ளது என்பதுவும் முதல்முதலாக ஜூலை, 1952ஆம் ஆண்டில் தோன்றியதற்குப் பிறகு ஆறு ஆண்டு களுக்குள் மூன்றும் பதிப்பு கொண்டுவரும் அளவுக்குப் பெரும் பாலோரால் விரும்பப்பட்டிருப்பதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

வழக்கம்போல இந்தப் பதிப்பும் மிக்க கவனத்துடன் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பதிப்பில் காணப்படும் அச்சுப் பிழைகள் முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளன.

மார்ச்சு 7, 1959. A. L. ஸ்ரீவத்ஸவா

இரண்டாம் பதிப்புக்கு முன்னுரை

வெளியீடானதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகளுக்குள் இந் நூலின் முதல் பதிப்பு முற்றிலுமே விற்கப்பட்டுவிட்டது. நமது பெரும்பாலான பல்கலைக் கழகங்களைச் சார்ந்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயனளித்தமையால் இரண்டாம் பதிப்புக்காக இடையரு தேவை ஏற்பட்டது. ஆனால், குறிப்பிட்ட சில அசந்தர்ப்பங்களால் இரண்டாம் பதிப்பின் வெளியீடு சுமார் இரண்டரை ஆண்டுக் காலமாகத் தாமதமாயிற்று.

இப் பதிப்பில் இந்நூல் முற்றிலும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது மன்றிச் சிற்சில இடங்களில் திருத்தி எழுதப்பட்டுள்ளது. இத் தலைப்பைப்பற்றிக் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்துவந்த திறனாய்வின் முடிவுகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன; ஆகையினால், இப் பதிப்பு முதல் பதிப்பைவிடப் பயனுள்ளதாக

இருக்கிறது. முதல் பதிப்புக்கு மாணவர்கள், உடன் ஆசிரியர்கள், பொது வாசகர்கள் அனைவரும் அளித்த அமோக வரவேற்பு இப் பதிப்புக்கும் அளிக்கப்படும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

நவம்பர் 25, 1956. A. L. ஸ்ரீவஸ்தவா

முதலாவது பதிப்புக்கு முன்னுரை

இந்நூல் இதன் ஆசிரியர் எழுதியுள்ள 'டெல்லி சுல்தானியம்' (Sultanate of Delhi) என்ற நூலின் தொடர்பாகும். உடன் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரின் வேண்டுகோளுக்கு இணங்க இது எழுதப்பட்டுள்ளது. 'டெல்லி சுல்தானியம்' பின்பற்றும் அமைப்பு முறையையே, இந்நூலும் பின்பற்றுகிறது. பாரசீக, மராட்டிய, ஆங்கில, ஃபிரெஞ்சு மூலாதாரங்களின் அடிப்படையில் இது அமைந்துள்ளது. B.A., M.A., பட்டப் படிப்புகளுக்காகப் படிக்கும் மாணவர்களின் தேவைகளையும், இந்திய நிருவாகப் பணி, மாகாண சிவில் பணி தேர்வுகளையும் இதர போட்டித் தேர்வுகளையும் எழுத நினைப்பவர்களின் தேவைகளையும் இந்நூல் நிறைவேற்றும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

சுல்தானியர் காலம் என்று விளங்கிவரும் நமது வரலாற்றின் இடைக்காலத்தின் முற்பகுதி அந்நியர்களின் ஆதிக்கம் பெற்றிருந்த காலமாக இருக்க, அக்பர் காலந்தொட்டு முகலாயர்களின் காலம், இந்திய தேசிய உணர்ச்சிக்கும் நாட்டில் இஸ்லாமிய இறைமையை மீண்டும் நிலைநாட்டுவதற்கான பிற்போக்கு முயற்சிக்குமிடையில் உண்டான போட்டியாகும். மத்திய ஆசியாவிலிருந்து வந்து, இந்தியாவைத் தமது தாய்நாடாக ஏற்றுக்கொண்ட முகலாய இனமும், இதர இனங்களும், அவர்கள் நிலைநாட்டிய நிறுவனங்களும் இந்திய மயமாக்கப்படுதல் ஷேர்ஷாவின் ஆட்சிக் காலத்தில் அறுபட்டு, அவுரங்கசீப்பின் காலத்தில் முற்றிலும் நின்றுவிட்டது வருந்தத்தக்கதாகும். இதன் விளைவாக, சுல்தானிய காலத்துப் பிற்போக்குச் சக்திகள் தம்மை மீண்டும் வலுப்படுத்திக்கொண்டு தேசிய சக்திகளை மூழ்கடித்தன. அவுரங்கசீப் திரையின்மீது தோன்ருமலும், இந்தியாவை ஓர் இஸ்லாமிய நாடாக மாற்றம் செய்திராவிடினும் இந்திய வரலாற்றின் போக்கு எத்திசையில் சென்றிருக்கும் என்று யூகித்தல் பயனற்றதாகும். அவருடைய மேற்கோள் அவருக்குப் பிறகு வந்தவர்களுடைய நடத்தைக்கும்

நிர்வாகத்திற்கும் வழிகாட்டியது; இறுதியில் அவர்கள் தமது அமைச்சர்களின் கைபொம்மைகளாயினர்; அல்லது வடக்கிலிருந்த பீஷ்வாக்களின் முகவர்களின் கைபொம்மைகளாக இருந்தனர். தங்களுடைய தனி இயல்புகளைக் கைவிடும்படி அவர்கள் வற்புறுத்தப்பட்டனர். குறிப்பிடப்பட்ட கருத்துகளின் மோதல்கள் ஏற்பட்டதாயினும், எல்லாச் செயல் துறைகளிலும் இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவரோடு ஒருவர் நமது வரலாற்றிலேயே முதல் முதலாக ஒத்துழைக்கும்படி முகலாயர்களின் காலம் வற்புறுத்தியது. ஓர் உறுதியான பேரரசை நிலைநாட்ட ஒன்றுபடும்படி செய்தது; பொது இலக்கியம், கட்டடக் கலை, இசைக் கலை, ஓவியக் கலை ஆகியவற்றையும் மற்றும் பல கலைகளையும் தோற்றுவிக்க முயன்றது; நிர்வாகம், வெளிநாட்டுக் கொள்கை, இலக்கியம், கலை அனைத்திலும்—சுருங்கச் சொல்லின் எல்லாவித மனிதச் செயல் துறைகளிலும் நாட்டின் சாதனைபற்றிய இடையரு குறிப்பு அளிப்பதற்கான முயற்சி இந்நூல் எடுத்துள்ளது. இதில் எழுதப்பட்டுள்ள வரலாற்றில், மராட்டியப் பேரரசும், முகலாயப் பேரரசின் சீர்குலைவும்பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன. 'டெல்லி சுல்தானியம்' என்ற நூலில் காணப்படும் விவரங்கள் இந்நூலிலும் கொடுத்தல் தவிர்க்கமுடியாததாகும். அதேபோல இந்நூலில் காணப்படும் எல்லா முக்கிய சகாப்தங்களைப்பற்றி விவரங்கள் மிக்க கவனத்துடன் வரையப்பட்ட நிலப்படங்களினால் வருணிக்கப்பட்டுள்ளன.

இத்துறையில் எனக்கு முற்பட்டவர்களுக்கு, குறிப்பாக முகலாய வரலாற்றின்மீது தனி வரைவு நூல்கள் எழுதியுள்ளவர்களுக்கு எனது நன்றி உரியதாகும். இந்நூலை எழுதும் சமயத்தில் அந்நூல்களை யெல்லாம் கலந்து ஆலோசித்துள்ளேன். எனது குருவான சர் ஜாதுநாத் சர்க்காருக்கு எனது சிறப்பு நன்றி உரியதாகும். அவருடைய எண்ணற்ற நூல்கள் இந்த நூலில் குறிக்கப்பட்டுள்ளன; அவற்றிலிருந்து பல மேற்கோள்கள் இங்கு எடுத்தாளப்பட்டிருக்கின்றன. நிலப் படங்களை எனது மூத்த மகனை தாம்பானு, எம்.ஏ., வரைந்துள்ளார்; திருத்தத்துக்கான அச்சுப் படிகளை எனது கடைசி மகன் தயாபானு, பி.எஸ்ஸி., கூர்ந்து பார்த்துள்ளார். இந்நூலைக் கவர்ச்சிமிக்க நூலாக்குவதற்கு எவ்வித கஷ்டத்தையும் பொருட்படுத்தாத எனது நூல் வெளியீட்டாளர்களுக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

ஆக்ரா கல்லூரி,
ஆக்ரா,
ஜூலை 15, 1952.

A. L. ஸ்ரீவத்ஸவா

பொருளடக்கம்

1. 1526-ல் இந்தியாவின் நிலைமை

(அ) அரசியல் நிலைமை

1. டெல்லி இராச்சியம்

கி.பி. பதினைன்றும் நூற்றாண்டின் துவக்கத்தில் ஒன்றோடொன்று போட்டியிட்டுக்கொண்டிருந்த இராச்சியங்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்தன. பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த நமது நாட்டின் நிலையை அந் நிலை ஒத்திருந்தது. ஆனாலும், குறிப்பிடத்தக்க ஒரு வேறுபாடு இருந்தது. பதினொன்றும் நூற்றாண்டில் நமது நாடு நிலத்துக்குரிய அரசர்களால் ஆளப்பட்டுவந்தது; ஆனால், பதினாறும் நூற்றாண்டில் நம் அரசர்களுள் பலர் வெளிநாட்டினராவர். முகம்மது பின் துக்ளக்கின் (Muhammad Bin Tughlak) காலத்திலிருந்தே சீர்குலைந்துகொண்டிருந்த டெல்லி சுல்தானியம் தன் ஆதிக்கத்தை நாட்டில் மீண்டும் நிலைநாட்ட முடியவில்லை. 1517-ல் இப்ராஹிம் லோடி (Ibrahim Lodi) அரியணையேறினர். அவரது ஆட்சி டெல்லி, ஆக்ரா (Agra), டோஆப் (Doab), ஜானபுரி (Jaunpur), பீஹாரின் (Bihar) ஒரு பகுதி, பெயானா (Bayana), சந்தேரி (Chanderi) ஆகியவற்றுக்கப்பால் பரந்திருக்கவில்லை. அவன் ஒரு தன்மூப்புள்ள மூட அரசனுவான். தனது ஆப்கானியத் தலைவர்களின் குணாதிசயங்களை அவன் சரிவர அறிந்துகொள்ளவில்லை. அரசர்களின் தெய்வீக உரிமைத் தத்துவத்தில் நம்பிக்கை (divine right of kings) உடையவன். அவன் தன் அரசவையில் தளர்ச்சியற்ற சடங்குகளையும் ஒழுங்கையும் வற்புறுத்த முயன்றான். இப்ராஹிமின் தந்தையுடனும் பாட்டனுடனும் சரிசமமாக ஒரே சமுக்காளத்தில் உட்கார்ந்த பெருமை படைத்த ஆப்கானியப் பிரபுக்களைத் தன் அரசவையில் குனிந்து கைகட்டிக்கொண்டு நிற்கும்படி அவன் செய்தான். அரசனுக்கு உறவு கிடையாது என்றும், தன் பிரபுக்களெல்லாம் தன் கீழாட்களும் பணியாட்களுமாவர் என்றும் சுல்தான் வெளிப்படையாக அறிவித்தான். பரம்பரையாகக் கொண்டாடிய உரிமைகளைப் பிரபுக்கள்

வற்புறுத்தியபொழுது அவர்களுக்கு அவன் கடுந்தண்டனை விதித்தான். ஆகையால், லோடி (Lodi), லொஹானி (Lohani), ஃபர்மூலி (Farmuli), நியாஸி (Niyazi) பிரிவினைகளைச் சார்ந்த உயர்தர ஆப்கானியர்கள் அவனுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். அவர்களது கிளர்ச்சியை அடக்க அவன் வன்முறையைக் கையாள வேண்டி நேர்ந்தது. இதனால் எங்கும் குழப்பமும் பீதியும் பரவின. சுல்தானின் சிற்றப்பனான ஆலம்கான் லோடி (Alam Khan Lodi) என்பவர் டெல்லியின் சிம்மாசனத்திற்கு உரிமை கொண்டாடினார். மனநிறைவற்ற பிரபுக்களுள் பலர் அவனை ஆதரித்தனர். பஞ்சாபின் (Punjab) கவர்னரான தௌலத்கான் லோடி (Daulat Khan Lodi) என்பவர் சுல்தானின் அரசாங்கத்தை எதிர்த்ததுமன்றி ஓர் உண்மை அரசனாகவும் நடந்துகொண்டிருந்தார். பீஹாரின் பிரபுக்கள் தர்யாகான் லொஹானி (Darya Khan Lohani) என்பவரை ஆதரித்தனர். அவரது மரணத்திற்குப்பின் (சுமார் 1521) அவருடைய மகனான பஹார்கான் (Bahar Khan) (பகதூர்கான்—Bahadur Khan) என்பவர் தம்முடைய சுதந்திரத்தைப் பிரகடனப் படுத்திக்கொண்டார். ஜானபுரியிலும்கூட நசீர்கான் லோஹானி (Nasirkhan Lohani), மாரூப் ஃபர்மூலி (Marub Farmuli) ஆகியவர்களின்கீழ் ஆப்கானியர்கள் கிளர்ந்தெழுந்தனர். இவ்விதமாக லோடி இராச்சியம் ஒற்றுமை இழந்திருந்தது. சுல்தான் மதிப்பிழந்திருந்தான்.

2. வங்காளம்

ஃபிரோஸ் துக்ளக்கின் (Firoz Tughlag) (1351-1388) காலத்திலிருந்தே வங்காளம் (Bengal), ஹுசைனி (Hussaini) வமிசத்தின்கீழ் ஒரு சுதந்திர நாடாக இருந்தது. இவ் வமிசத்தின் முதல் அரசனான அலாவுத்தீன் ஹுசைன் (Alauddin Hussain) (1493-1518) ஒரு திறம்படைத்த அரசனாவார். அவர் தமது இராச்சியத்தின் எல்லையை ஒரிஸ்ஸா (Orissa) வரையிலும் பரப்பியதுமன்றி அஸ்ஸாமின் (Assam) எல்லையில் கூச்பீஹாரில் (Cooch Bihar) உள்ள காமட்பூரிலும் (Kamatpur) நுழைந்துவிட்டார். ஜானபுரியைச்சார்ந்த ஹுசைன் ஷா ஷர்கி (Hussain Shah Shargi) என்பவருக்கு அவர் தஞ்சம் அளித்ததனால், டெல்லியைச் சார்ந்த சிக்கந்தர் லோடியுடன் அவர் மோத வேண்டி நேரிட்டது; ஆனாலும், உடன்படிக்கை செய்துகொண்டு, பீஹாரின் கிழக்கு எல்லையை அங்கீகரிக்குமாறு அவர் வற்புறுத்தப் பட்டார். அவருடைய மகனான நுஸ்ரத் ஷா (Nusrat Shah) பாபரின் சமகாலத்தவராவார்; அவருடனும் அவர் உடன்படிக்கை செய்துகொள்ள நேர்ந்தது. நுஸ்ரத் ஷா திறமைவாய்ந்த ஓர்

அரசர்; வங்காள இலக்கியத்தின் புரவலர். அவருடைய ஆணையின்படி மகாபாரதம் (Mahabaratha) வங்காளத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. மாகாணம் செழுமை வாய்ந்ததாக இருந்தது. பொதுவாக மக்களும் மனநிறைவுடன் வாழ்ந்துவந்தனர்.

3. மாளவம் (Malwa)

மத்திய இந்தியாவில் இறைமைக்காக மூன்று இராச்சியங்கள் போட்டியிட்டுக்கொண்டிருந்தன. அவை—மாளவம் (Malwa), குஜராத்து (Gujarat), மீவார் (Mewar) ஆகியவை. பதினரும் நூற்ருண்டின் துவக்கத்தில் மீவார் ஒரு சிறந்த நிலையை அடைந்திருந்தது. மாளவம் ஓர் இரண்டாந்தர நாடாக மாறியிருந்தது. மாளவ இராச்சியம் திலாவர்கான் கோரி (Dilawar Khan Ghori) என்பவரின்கீழ் சுதந்திர நாடாகியது. ஆனலும், கோரி அரசரின் அமைச்சரான மகமூத்கான் (Mahmud Khan) என்பவர் 1435-ல் அரியணையைக் கைப்பற்றி கல்ஜி (Khalji) வமிசத்தை நிறுவினர். அச் சமயத்தில் மாளவத்தின் அரியணையில் வீற்றிருந்த இரண்டாம் மகமூத் (Mahmud II) பாபரின் சமகாலத்தவராவார். அவர் ஒரு திறமையற்ற அரசராவார். அவரது ஆட்சிக் காலத்தில் மாளவம் மெதினி ராய் (Medini Rai) என்ற வீரம்படைத்த இராசபுத்திரரின் கைவசப்பட்டது. அவர் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் நம்பிக்கையும் பொறுப்பும் மிக்கதான பல பதவிகளைத் தமது இனத்தினருக்கு அளித்தார். அச் செயல் முஸ்லிம் பிரபுக்களின் பொருமையைத் தூண்டிவிட்டது. குஜராத்தினது சுல்தானின் உதவியைக்கொண்டு மெதினி ராயைக் கவிழ்க்க அவர்கள் முயன்றனர். ஆனலும், மெதினி ராய் மீவாரைச் சார்ந்த ராணு சங்காவின் (Rana Sanga) ஆதரவுடன் இரண்டாம் மகமூத்தை (Mahmud II) முறியடித்து, அவரைச் சித்தூருக்குக் (Chittor) கைதியாகக் கொண்டுசென்ருர். இராசபுத்திரருக்குரிய தாராள மனப்பான்மையுடன் ராணு அரச கைதியை விடுவித்து, அவரது இராச்சியத்தை மீண்டும் அவருக்கே கொடுத்துவிட்டார். இத் தாராள மனப்பான்மையுடைய செயலும் மாளவத்தைக் காப்பாற்ற முடியவில்லை. இனப்போரினல் அது நீடித்து ஒற்றுமையற்றிருந்தது.

4. குஜராத்து (Gujarat)

1401-ல் குஜராத்து மாகாணம் டெல்லியுடன் தொடர்பு இழந்தது. மதமாற்றம் செய்யப்பட்ட இராஜபுத்திரரின் மகனை சபர்கான் (Zafar Khan) என்பவர் தமது சுதந்திரத்தை வற்புறுத்தி முஸப்பர் ஷா (Muzaffar Shah) என்ற பட்டப் பெயருடன் அரியணை

ஏறினர். மகமூத் பேகரா (Mahmud Begarha) (1458-1511) என்பவர் அவ் வமிசத்தைச் சார்ந்த அரசர்களுள் சாலச் சிறந்தவர். பாபரின் படையெடுப்பின்பொழுது இரண்டாம் மூஸஃபர் ஷா (Muzaffer Shah II) என்பவர் குஜராத்தின் அரசராக ஆட்சி புரிந்துகொண்டிருந்தார். அவர் மகமூத் பேகராவுக்குப் பிறகு 1511-ல் பதவியேற்றூர். அவரது ஆட்சிக் காலம் முழுவதும் அவர் பல எதிரிகளுடன் போரிட நேரிட்டது. ராணு சங்காவுடனும் அவர் போர் செய்தார்; ஆனுலும், அவரால் முறியடிக்கப்பட்டார். 1526 ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட அவரது மரணத்திற்குப் பின் எங்கும் குழப்பம் பரவியது. அதனுல் குஜராத்து இராச்சியம் மேலும் பலவீனமுற்றது. அவருடைய மகனுன பகதூர் ஷா (Bahadur Shah) அரசரானுர். பேரவாமிக்க அவ் அரசர் வெற்றியுடன் ஆட்சி புரிந்தார்.

5. மீவார் (Mewar)

சித்தூரைத் தலைநகராகக் கொண்டிருந்த மீவார் இராசபுதனத்திலேயே மிக விஸ்தாரமானதும் சக்தி வாய்ந்ததுமான நாடாகும். அதை ஆட்சி புரிந்துவந்தவர்கள் குஹில்லின் (Guhil) வழித்தோன்றல்களாவர். கி.பி. ஆரும் நூற்ருண்டிலிருந்தே சித்தூரையும், அதன் சுற்றுப்புறப் பகுதிகளையும் அவர்கள் ஆண்டுவந்தனர். அவ் வமிசம் சிறப்பு மிக்க பல அரசர்களைத் தோற்றுவித்தது. அவர்களுள் மிகப் பிரசித்திவாய்ந்தவர் ராணு கும்பா (Rana Kumbba) (1433-1468) என்பவராவார். பல அரண்களைக் கட்டித் தமது இராச்சியத்தின் பாதுகாப்பை வலுப்படுத்தியதுமன்றிப் பல பெரிய கட்டடங்களையும் கட்டி அவர் தமது தலைநகரை அழகுபடுத்திஞர். மாளவத்தின் சுல்தானை அவர் தோற்கடித்து மீவாரின் இறைமையை மத்திய இந்துஸ்தானத்தில் நிலைநாட்டிஞர். சித்தூரின் அரசர், பிரசித்திவாய்ந்த ராணு சங்கராம் சிங் என்பவர் (Rana Sangaram Sing) பாபரின் சமகாலத்தவராவார். மக்கள் அவரை ராணு சங்கா என்று அழைத்தனர். அவர் ஒரு பெரும் வீரரும் தளபதியுமாவார். நூறு களங்களில் போர்புரிந்த அவ் வீரரின் உடலில் வாளாலும் ஈட்டியாலும் உண்டான எண்பது காயங்கள் இருந்தன. ஒரு கண்ணையும் கையையும் இழந்ததனுலும், ஒரு கால் நொண்டியாகிவிட்டதனுலும் டாட் (Tod) அவரை 'வீரரின் ஒரு துண்டு' என்று அழைக்கிருர். இராசபுத்திரத் தலைவர்கள் பலரைப்போலல்லாமல் சங்கா ஓர் அரசியல்வாதிக்கும் அரசியல் மேதைக்குமுரிய இயல்புணர்ச்சிகளைப் பெற்றிருந்தார். இராசபுத்திரர்களுக்கிடையில் தமது குடும்பம் அனுபவித்துவந்த சமுதாய முதல் நிலையை அவர் இராசபுதனத்

தில் மிகச் சாதுரியமாக அரசியல் இறைமையாக மாற்றி அமைத்துக் கொண்டார். இருநூறு இராசபுத்திரத் தலைவர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். டெல்லியின்மீது இந்து ஆட்சியை நிறுவ ராணா சங்கா பேரவாக்கொண்டிருந்தார். இப் பேரவாவை நிறை வேற்றுவதற்காக இப்ராஹிம் லோடியின் இராச்சியத்தை வட புறத்திலிருந்து தாக்கும்பொழுது தாம் அதை ஆக்ராவிலிருந்து தாக்குவதாக அவர் பாபருக்கு வாக்குறுதி அளித்ததாகக் கூறப்படு கிறது. இவ்விதமாக, பதினாறும் நூற்றாண்டில் அவர் வட இந்தியா வில் மிகப் பெரிய இந்து அரசரும், நாட்டின் சிறப்பு மிக்க அரசர் களுள் ஒருவருமாவார்.

6. சிந்து (Sindh)

முகம்மது பின் துக்ளக்கின் ஆட்சிக் காலத்தின் முடிவிலிருந்தே சுதந்திர நாடாகிவிட்ட சிந்து மாகாணம் பதினாறும் நூற்றாண்டின் முதல் கால்பாகத்தில் ஒற்றுமை இழந்த ஒரு நாடாக இருந்தது. பதினான்காம் நூற்றாண்டின் இடையில் அம் மாகாணத்தின்மீது தமது ஆட்சியை நிறுவிய சும்ரா (Sumra) வமிசம் சிதறுண்டு இருந்தது. பாபரால் தாக்குண்டவரும் காந்தாரத்தின் (Kandhar) கவர்னருமான ஷா பேக் அர்கூன் (Shah Beg Arghun) என்பவர் அம் மாகாணத்தைப் பெற விரும்பினார். காந்தாரத்தைக் கைவிட பாபரால் கட்டாயப்படுத்தப்பட்ட ஷா பேக், 1520-ல் சிந்துவுக் குத் திரும்பி சும்ராக்களை முறியடித்து அம் மாகாணத்தைக் கைப் பற்றினார். அவருடைய மகனான ஹுசைன் ஷா அவரது ஆட்சியை உறுதிப்படுத்தியதோடு முல்தானையும் (Multan) கைப்பற்றினார். பாபர் படையெடுத்தபொழுது சிந்துவில் அர்கூன்களின் ஆட்சி உச்சநிலையடைந்திருந்தது.

7. பஞ்சாப் (The Punjab)

அண்டையிலிருந்த பஞ்சாப் மாகாணம் பெயரளவிற்கு டெல்லி இராச்சியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. ஆனாலும், அதன் கவர்னரான தௌலத்கான் லோடி, சுல்தான் இப்ராஹி முடன் நல்லுறவு கொண்டிருக்கவில்லை; உண்மை அரசனாகவே அவர் நடந்துகொண்டிருந்தார். அவருடைய மகன் திலாவர் கான் (Dilawa khan) என்பவர் டெல்லியிலிருந்து தப்பிவிட்டார். அவர் மீது சுல்தான் தீய எண்ணங்களைக் கொண்டிருக்கின்றார் என்றும், தமது இன்னல்களிலிருந்து விடுதலை பெற்றவுடன் தமது கவனத் தைப் பஞ்சாபின்மீது செலுத்தவிருக்கின்றார் என்றும் திலாவர் கான் தௌலத் கானுக்குத் தெரிவித்தார். தம்மைக் காக்க நினைத்து தௌலத் கான் தமது சுதந்திரத்தை வலியுறுத்துவதற்கான முயற்சி

களில் ஈடுபட்டார். அவர் தமது எண்ணங்களை நிறைவேற்று வதற்கு உதவ பாபருக்கு அழைப்பும் அனுப்பிவைத்தார். இவ்வித மாக டெல்லி சுல்தானியத்தின் வடமேற்கு எல்லையானது அந்நியப் படையெடுப்பாளரை எதிர்க்கும் நிலையில் இல்லை.

8. காஷ்மீரம் (Kashmir)

காஷ்மீரம் பஞ்சாபின் வடமேற்கில் ஒரு சுதந்திர நாடாக இருந்துவந்தது. இன்பப் பள்ளத்தாக்கின் (Happy Valley) இந்து அரசரின் பணியில் புகுந்த ஷா மீர்ஸா (Shah Mirza) என்னும் முஸ்லீம் துணிகர வீரர் ஒருவர், 1339-ல் அரியணை யைக் கைப்பற்றி ஒரு முஸ்லிம் வமிசத்தைத் தோற்றுவித்தார். ஸெய்னுலாப்தீன் (Zainul-Abideen—1420-1470) என்பவர் காஷ்மீரத்தின் மிகச் சிறப்புவாய்ந்த சுல்தானுவார். அறிவு படைத்ததும் தாராள மனப்பான்மையுடையதுமான சமயப் பொறுமைக் கொள்கையைப் பின்பற்றினுர்; சமஸ்கிருத இலக்கியத் தையும் (Sanskrit literature) அவர் ஆதரித்தார். 'காஷ்மீரின் அக்பர்' (Akbar of Kashmir) என்று அவருக்குத் தகுதியுறவே பெயர் வழங்கப்பட்டது. 1470-ல் அவர் மரணமடைந் தார். அதற்குப்பின் எங்கும் குழப்பம் பரவியது. டெல்லிக்கு வெகு தூரத்திற்கப்பால் இருந்ததாலும் ஒற்றுமையற்றிருந்ததாலும், காஷ்மீரத்தின் செல்வாக்கு அரசியல் பொறுத்தவரை வட இந்தியா வில் மிகக் குறைந்தே இருந்தது.

9. ஒரிஸ்ஸா (Orissa)

இந்து இராச்சியமான ஒரிஸ்ஸா ஒரு மிகப் பெரிய நாடாகும். ஆற்றல்மிக்க அரசர்கள் பலர் அதை ஆண்டுவந்தனர். எந்த டெல்லி சுல்தானும் அதுவரை அதைச் சரிவர அடக்கவில்லை. ஆனுலும், வட இந்தியாவின் அரசியலில் ஒரிஸ்ஸா மிக்க செல்வாக் கைப் பெற்றிருக்கவில்லை. எனினும், அது ஒரு தடையாக நின்று வங்காளம் தெற்கில் பரவாவண்ணம் தடுத்தது.

10. காந்தேஷ் (Khandesh)

தபதி நதிப் பள்ளத்தாக்கில் (Tapti river valley) இருந்த காந் தேஷ் இராச்சியம் பதினுன்காம் நூற்ருண்டின் இறுதிப் பத்தாண்டி லிருந்து சுதந்திர நாடாகியது. மலிக் ராஜா ஃபருகி (Malik Raja Farugi) என்பவர் அதை நிறுவினுர். அவர் அமைதியாக ஆட்சி புரிந்து 1399-ல் உயிர் நீத்தார். குஜராத்தின் சுல்தான்கள் தொடக்கத்திலிருந்தே காந்தேஷின்மீது தமது இறைமையை நிலை

நாட்ட விரும்பினர்கள். அதனல் அவ்விரு இராச்சியங்களும் இடைவிடாமல் போரில் ஈடுபட்டிருந்தன. 1508-ல் தாவூத் இறந்ததற்குப் பின் போட்டி உரிமையாளர்களுக்கிடையில் சிம்மாசனத்திற்காக நிகழ்ந்த கடும் போட்டியின் விளைவாகக் காந்தேஷ் குழப்பத்தில் மூழ்கியது. அவர்களுள் ஒருவர் ஆமத்நகராலும் (Ahmadnagar), மற்ருெருவர் குஜராத்தாலும் ஆதரிக்கப்பட்டனர். இறுதியில், குஜராத்தைச் சார்ந்த சுல்தான் மகமூத் பேகரா தமது அபேட்சகரான மூன்ரும் ஆதில் கானை (Atil Khan III) காந்தேஷின் சிம்மாசனத்தில் 1520, ஆகஸ்ட் 25ஆம் நாள் அமர்த்தினர். அவருடைய மகனை முதலாம் முகம்மது (Muhammad I) அவருக்குப் பின் பதவியேற்ருர். காந்தேஷ் டெல்லியிலிருந்து மிகத் தொலைவில் இருந்ததுமன்றிப் பலவீனமாகவும் இருந்தது. அதனல் அது அக்காலத்திய அரசியலில் முக்கியப் பங்கு பெற முடியவில்லை.

11. தக்காணத்து இராச்சியங்கள் (The Kingdom of the Dekahn)

தக்காணத்தின் சிறப்பு மிக்க பாமனி இராச்சியம் (Bhamani Kingdom) வடக்கே பீராரிலிருந்து (Berar) தெற்கில் கிருஷ்ணு (Krishna) நதிவரை பரவியிருந்தது. முகம்மது பின் துக்ளக்கினது கொடுங்கோலாட்சிக்கு எதிராக வெற்றிகரமாக நடந்த கிளர்ச்சியின் விளைவாக 1347-ல் இது தோற்றுவிக்கப்பட்டதாகும். திறம் படைத்த பல அரசர்கள் அதை வரிசையாக ஆண்டுவந்தனர். அவ்வரசர்கள் இந்து இராச்சியமான விஜயநகரத்திற்கு (Vijayanagar) எதிராக இடைவிடாமல் போர் நடத்தினர். மகமூத் காவான் (Mahamud Gavan) என்னும் மாபெரும் அமைச்சர் 1481-ல் கொலையுண்டதற்குப்பின் பாமனி இராச்சியம் சீர்குலையத் தொடங்கியது. அதன் சிதைவின்மேல் ஐந்து சுதந்திர இராச்சியங்கள் தோன்றின. அவையாவன பீரார் (Berar—1484-1527), ஆமத்நகர் (Ahmadnagar—1489-1633), பிஜப்பூர் (Bijapur—1489-1686), கோல்குண்டா (Golkunda—1512-1687), பீடார் (Bidar—1526-1590).

12. விஜயநகரம் (Vijayanagar)

நாட்டின் மிக முக்கிய இந்து இராச்சியங்களுள் விஜயநகர இராச்சியம் ஒன்ருகும். அதாவது, சிம்மாசனத்தில் பாபரின் சமகாலத்தவரான கிருஷ்ண தேவராயர் (Krishna Devaraya) வீற்றிருந்தார். அவர் விஜயநகரின் மாபெரும் அரசராவார். அச் சகாப்தத்திலேயே நாட்டின் மிகச் சிறந்த அரசருமாவார். தமது பகைவர்களையும் சுற்றுப்புறத்திலிருப்பவர்களையும் தோற்கடித்துத் தமது இராச்சியத்தின் எல்லையை விரிவுபடுத்திய மாபெரு

வீரரும் தளபதியுமாவார். மேலும், அவர் இலக்கியத்தையும் கலையையும் வளர்த்த பண்புமிக்க புரவலருமாவார். அரசியலிலும், பொருளாதாரத்திலும், நாகரிகத்திலும் அவ்விராச்சியம் பாபரின் வட இந்தியப் படையெடுப்பின்பொழுது மிக உச்சநிலையை அடைந்திருந்தது. அதன் செல்வமும், செழுமையும், ஆற்றலும் வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளையும் தூதர்களையும் வியப்புக்குள் ளாக்கின. வட இந்தியாவின் அரசியலில் விஜயநகரம் மிக்க செல் வாக்கினைப் பெற்றிராவிடினும், தெற்கில் முஸ்லீம்கள் பரவுவதைத் தடுப்பதற்கும், தென் இந்தியாவின் தொன்மை வாய்ந்த சமயத்தை யும் நாகரிகத்தையும் காப்பதற்கும் அது பெரும் உதவியாக இருந்தது.

தமது தனிப்பட்ட இறைமையை நிலைநாட்டுவதற்குப் பேரவாக் கொண்டிருந்த அவ்விராச்சியங்கள் இடைவிடாமல் ஒன்றோடு ஒன்று போரில் ஈடுபட்டிருந்தன. ராணு சங்காவின் தலைமையின் கீழ் இராஜபுதன வீரன் உள்ளுக்குள்ளே பிளவுபட்டுக்கொண் டிருந்த டெல்லி சுல்தானியத்தின் அரசியல் விஸ்தரிப்பை, அதுவுமல்லாமல் டெல்லியின்மீது தமது ஆட்சியை நிலைநாட்டு வதற்கான அவர்களது பேரவா அச் சுல்தானியத்தின் இருக் கையையே பாதித்துக்கொண்டிருந்தது. சுல்தான் இப்ராஹிம் உண்மையிலேயே மீவாரின் சிசோதியாக்களிடம் (Sisodias) மாபெருந் தோல்விற்றார்; தமது ஆக்கிரமிப்புப் படையெடுப் பைக் கைவிடும்படியும் வற்புறுத்தப்பட்டார். மத்திய இந்துஸ் தானத்தில் மாளவம், குஜராத்து ஆகிய இரண்டு முஸ்லிம் இராச் சியங்களும் சித்தூரின் ராணுவப் படையால் மிகக் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டன. கிழக்கில் அஸ்ஸாம், ஒரிஸ்ஸா ஆகிய வற்றின் இந்து அரசர்கள் முஸ்லிம் இராச்சியமான வங்காளத்து விஸ்தரிப்பைத் தடுத்தனர். தக்காணத்தில் பாமனி இராச்சியத் தையும், அதற்குப்பின் தக்காணத்தில் தோன்றிய ஐந்து இராச்சி யங்களையும் தெற்கில் பரவவொட்டாதபடி விஜயநகரம் அதுவரை வெற்றிகரமாகத் தடுத்துக்கொண்டிருந்தது. இவ்விதமாக, இந்தி யாவின் ஒவ்வொரு பகுதியிலும் துருக்கிய - ஆப்கானிய முஸ்லிம் தலைவர்களும், நிலத்திற்குரிய முஸ்லிம் குறுநில மன்னர் களும் தோற்கடிக்கப்பட்டுத் தமது உயிருக்கே போரிட்டுக்கொண் டிருக்கும்படி வற்புறுத்தப்பட்டனர்.

(ஆ) சமுதாயம், நாகரிகம் ஆகியவற்றின் நிலைமை

சமுதாயத் துறையில் நம் நாடு ஒரு நிலைமாற்றுக் காலத்தைக் கடந்துகொண்டிருந்தது. நிலத்திற்குரிய மக்களிடையில் நெடுங் காலமாகவும், அதே இந்திய சூரியனின்கீழும் வாழ்ந்துவந்ததனால்

நம் துருக்கிய-ஆப்கானிய அரசர்களும், அவர்களுடைய தாழ்மை யான பின்பற்றுவோரும் தமது வெளிநாட்டுப் பழக்கங்களைப் படிப்படி யாகக் கைவிட்டு இந்தியர்களாக மாறிக்கொண்டிருந்தனர். இஸ்லா முக்கு மதமாற்றம் செய்யப்பட்டவர்களுடைய எண்ணிக்கை நாட்டில் அதிகமாகிக்கொண்டிருந்தது. இதனால் முஸ்லீம் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுடைய எண்ணிக்கையும் அதிகமாகி யது. போரிலும், அமைதிக்காலப் பணிகளிலும், நிர்வாகத்திலும் குடிமக்கள் ஈடுபட்டிருந்தனர். அதன் விளைவாக, அவர்களுக்கும் ஆட்சியாளர்களுக்குமிடையில் மன ஒத்திசைவு ஏற்பட்டது. ஃபிரோஸ் துக்ளக்கின் (Firoz Tughlak) மறைவுக்குப்பின் இந்துக்களுக்கும் முஸல்மான்களுக்குமிடையில் வளர்ந்துகொண் டிருந்த நல்லிணக்கத்தைத் தடுக்க சிக்கந்தர் லோடியைத் தவிர மற்ற எந்த டெல்லி அரசரும் ஆற்றல் பெற்றிருக்கவில்லை. டெல்லி யையும்விட மாநில இராச்சியங்களில் இவ்விரு சாதிகளுக்கு மிடையில் இருந்த நெருங்கிய தொடர்பு மிகவும் முனைப்பாகவே இருந்தது. குறிப்பாகக் காஷ்மீரத்திலும் வங்காளத்திலும் அறிவு படைத்த அரசர்கள் சமயப் பொறுமைக் கொள்கையைப் பின்பற் றினர். அவர்கள் சமஸ்கிருத மொழிக்கும் தற்கால இந்திய மொழி களுக்கும் ஆதரவு தந்தனர். காஷ்மீரத்தைச் சார்ந்த ஸெய்னுலாப் தீன் (1420-1470) நாடுகடத்தப்பட்ட பிராமண குடும்பங்களைத் திரும்ப அழைத்துக்கொண்டதுமன்றிக் கற்றறிந்த இந்துக்களையும் தம்முடைய கூட்டத்தில் சேர்த்துக்கொண்டார்; அவர்களுக்குச் சமய உரிமையும் அளித்தார்; ஜெஸ்ஸியா (Jisya) வரியையும் ரத்து செய்தார்; தம் இராச்சியத்தில் பசுக்களைக் கொல்லுவதற்குத் தடை விதித்தார்; அரசவையில் சமஸ்கிருத அறிஞர்களையும் ஹிந்தி அறிஞர்களையும் பதவிகளில் நியமித்தார். இவர் 'காஷ் மீரின் அக்பர்' என்று தகுதியுறவே அழைக்கப்பட்டார். இவரது ஆட்சியில் இன்பப் பள்ளத்தாக்கில் வாழ்ந்துவந்த மக்கள் சம வுரிமை வாழ்க்கையை மேற்கொள்ள ஆரம்பித்தனர். அதே போல், வங்காளத்தைச் சார்ந்த அலாவுதீன் ஹுசைன் ஷா (Alauddin Hussian Shah) (1493-1518) வங்காளத்து அரியணை யேறி மக்கள் விருப்பத்தைப் பெற்ற அரசர்களுள் ஒருவராவார். தமது இந்து முஸ்லிம் குடிமக்களிடையில் அவர் எவ்வித வேறு பாட்டினையும் உண்டாக்கவில்லை. அவருடைய மகன் நசீருத் தீன் நஸரத் ஷா (Nasir-ud-din Nusrat Shah—1518-1533) என்பவர் வங்காள இலக்கியத்தை ஆதரித்த பெரும் புரவல ராவார். அவர் மகாபாரதத்தை மொழிபெயர்க்ம்குபடி செய்து இந்து அறிஞர்களுக்குத் தாராளமாக உதவியளித்தார். மற்ற மாகாணங்களிலும் நிலைமை அங்ஙனமே இருந்தது. ஆனாலும், அவ்வப்பொழுது அங்குமிங்குமாக வெறிகொண்ட அரசர்கள்

டெல்லியின் முந்திய சுல்தான்கள் கையாண்ட வேறுபடுத்தும் கொள்கையையும், சமயத் துறையில் துன்புறுத்தும் கொள்கையையும் பின்பற்றினர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்து அரசர்கள் பதவியிலும் முக்கியத்திலும் துரிதமாக உயர்ந்து கொண்டிருக்கும்பொழுது அதுபோன்ற செயல்கள் மிக அரிதாகி விட்டன. பதினுன்காம் நூற்ருண்டின் முதல் கால்பாகத்தில் முந்திய துருக்கியப் படையெடுப்பில் மறந்துபோன பழைய நாட்களை உயிர்ப்பித்தல் நலமற்றதாகும் என்று கருதப்பட்டது.

சுல்தானியமும், முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்குமிடையில் வளர்ந்து வந்த நட்பின் தொடர்பும் பலவீனமடைந்துகொண்டிருந்ததனுல், பதினுரும் நூற்ருண்டின் துவக்கத்தின் சிறிது காலத்திற்கு முன் இந்து மதத்திற்கும் இஸ்லாமுக்குமிடையிலும், அவற்றைப் பின்பற்றுவோரிடையிலும் தோன்றிய வேறுபாட்டைக் குறைக்க ஓர் உறுதியான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது. கபீர் (Kabir) (சுமார் பதினைந்தாம் நூற்ருண்டின் முதல் கால்பகுதி), நானக் (Nanak—1469-1538) போன்றவர்கள் பக்தி மார்க்கத்தைச் சார்ந்த (Bhakti cult) பிந்திய சீர்திருத்தவாதிகளாவர். இவர்கள் குறிப்பாக இந்து முஸ்லிம் ஒற்றுமையை வளர்த்ததுமன்றி, இவ்விரு மதங்களும் ஒரே குறிக்கோளுக்குக் கொண்டுசெல்லும் வெவ்வேறு பாதைகள் என்றும் பிரசாரம்செய்தனர். இந்துக்களையும் முஸ்லிம் களையும் அவர்கள் தடையின்றி மதமாற்றம் செய்தனர். நம்முடைய வரலாற்றில் இவ்வியக்கம் முதல் முறையாக இரு சாதிகளுக்கிடையில் மேலும் நல்லிணக்கத்தை உண்டாக்கியது. பக்தி மார்க்கத்தைச் சார்ந்த சீர்திருத்தவாதிகள் செய்த பணிக்கு இஸ்லாமைச் சார்ந்த சூஃபிக்களின் (Sufis) பணிகள் பிற்சேர்க்கையாக இருந்தன. சில முஸல்மான்கள் இந்து யோகிகளுடனும் (yogis) துறவிகளுடனும் கலந்துகொண்டு அன்னுருக்கு மிக்க மரியாதையும் காட்டினர்.

சுல்தானிய வரலாற்றின் முந்திய நாட்களிலும் அரசியல், நிர்வாகம் ஆகியவற்றில் முற்றிலும் தனித்திருத்தல் யோசிக்க முடியாததாக இருந்தது. பதினுன்காம் நூற்ருண்டின் தொடக்கத்திற்குச் சிறிதுமுன் இரு சாதிகளுக்குமிடையில் இருந்த ஒத்துழைப்பு இலக்கியத்துறைக்கும் பரவியது. இந்து மதத்திலிருந்து இஸ்லாமுக்கு மதமாற்றம் செய்தவர்கள் தலத்திற்குரிய மொழிகளைத் தங்கள் தாய்மொழியாக மாகாணங்களில் ஏற்றுக்கொண்டனர். தெற்கிலும் வடக்கிலும் உருது மொழி (Urdu) துருக்கிய-ஆப்கானிய அரசர்களுக்கும் நிலத்துக்குரிய மக்களுக்குமிடையில் பேச்சுவார்த்தைக்கான மொழியானது. நமது மொழி வளர்ச்

சிக்குப் பக்தி இயக்கம் ஒரு பெரும் ஊக்கத்தை ஊட்டியது ; குறிப்பாக வங்காள, ஹிந்தி, மராட்டிய, மதில் (Mathil) மொழிகள் ஆதரவு பெற்றன. அக் காலத்தில் அம் மொழியில் பல சிறந்த நூல்கள் தோன்றின. அவைகள் உயர்தர இலக்கியங்களாகக் கருதப்பட்டன. சமஸ்கிருதம் புறக்கணிக்கப்படவில்லை. அது இந்து அரசர்களின் அவைகளில் செம்மையாக வளர்ச்சிபெற்றுக் கொண்டிருந்தது. ஆனாலும், மாகாண முஸ்லிம் அரசர்களின் அவையில் பணியாற்றிய சில அலுவலர்களும் சமஸ்கிருதத்தில் நூல்கள் எழுதினார்கள். உதாரணமாக, வங்காளத்தைச் சார்ந்த ஹுசைன் ஷாவின் அமைச்சர் ரூப் கோசாமி (Rup Gosami) என்பவர் சமஸ்கிருதத்தில் பல நூல்கள் எழுதினார். அவற்றுள் மிக முக்கியமானவை 'விதக்தா மாதவம்' (Vidagdha Madhava), 'லலிதா மாதவம்' (Lalitha Madava) என்ற நூல்களாகும். கட்டடக் கலையிலும் இந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து சிறந்த பணியாற்றியுள்ளனர். இதர கலைத்துறைகளிலும் அதுபோன்ற ஒத்துழைப்பு இருந்தது.

(இ) பொருளாதார நிலைமை

வெளிநாட்டுப் படையெடுப்பாளர்களும் கொள்ளைக்காரர்களும் நமது நாட்டின் செல்வத்தைத் திரட்டிக்கொண்டுபோய்விட்ட போதிலும், பதினாறும் நூற்றாண்டின் துவக்கத்தில் நமது நாடு செல்வ மிக்கதாகவே இருந்தது. டெல்லியிலும், ஆக்ராவிலும், குவாலியரிலும் (Gwalior) பாபர் கைப்பற்றிய செல்வம் நமது இடைக் காலத்தில் முன்னோரின் ஆக்கத்திறனையும் சிக்கனத்தையும் நாம் பார்த்து வியக்கும்படி செய்கிறது. இந்துஸ்தானத்தில் இமைப் பொழுதில் கிராமங்கள் தோன்றி மறைந்தன என்று பாபர் வியப்புடன் குறிப்பிட்டபோதிலும், விவசாயம் செம்மையான நிலையில் இருந்தது. விவசாயிகளுக்குச் சரிவர ஊக்கம் அளிக்கப்பட்ட பொழுதெல்லாம் நாடு பசுமை நிலங்களால் நிறைந்திருந்தது. ஆனால், அரசியல் புரட்சி ஏற்பட்டபொழுதோ, வறுமை உண்டான பொழுதோ பல மைல் நீள அளவில் வெறுங் கரம்பு நிலத்தைத் தவிர மற்றெதையும் கண் காணவில்லை. எனினும், சாதாரணக் காலங்களில் நம் குடியானவர்கள் நமது நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்குத் தானியங்களை உற்பத்தி செய்தனர். உள்நாட்டு வாணிகம் சுறுசுறுப்பாக நடந்துகொண்டிருந்தது. மலயாவுடனும் (Malaya), சைனாவுடனும் (China), பசிபிக் மகாகடலில் உள்ள மற்ற நாடுகளுடனும் ஏராளமான கடல்கடந்து செல்லும் வாணிகத்தை நாம் நடத்திவந்தோம்.

நமது நாடு மத்திய ஆசியா (Central Asia), ஆப்கானிஸ்தான் (Afghanistan), ஈரான் (Iran), திபெத் (Tibet), பூடான் (Bhutan) ஆகிய நாடுகளுடன் பெரிய நிலைச்சாலைகளால் இணைக்கப்பட்டிருந்தது. அந் நாடுகளுடன் நம் நாடு லாபகரமான வர்த்தகத்தை நடத்திவந்தது. பலவிதமான தொழிற்சாலைகளும், குறிப்பாக நெசவுத் தொழிலும், பஞ்சு, கம்பளி, பட்டுத் துணி, சர்க்கரைத் தொழில்களும், உலோக, காகிதத் தொழில்களும் நாட்டின் பல பகுதிகளில் காணப்பட்டன. உயர்தர மக்களும், நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்களும் செல்வ வாழ்க்கை நடத்திவந்தனர்; இன்ப வாழ்வையும் விரும்பினர். அதற்கு மாருக, பாமர மக்கள் ஏழைகளாகவே இருந்தனர். ஆனுலும், அவர்களது தேவைகள் ஒரு சிலவே இருந்ததாலும், நாட்டில் ஏராளமான தானியம் கிடைத்ததாலும் அவர்கள் பட்டினியால் வாடவில்லை. சுருங்கச் சொல்லுங்கால், இந் நாட்டில் உஷ்ணம் அதிகமாக இருந்தபோதிலும், கோடையில் பயங்கரக் காற்று அடித்தபோதிலும், பாபரின் கவனத்தைக் கவரும் அளவுக்கு நமது நாடு செல்வத்தையும் வளத்தையும் பெற்றிருந்தது. நாணயங்களாகவும் நாணயமில்லாததாகவும் கிடைத்த ஏராளமான தங்கம் இந்துஸ்தானத்தின் தலையார்ந்த சிறப்பாகும் என்று பாபர் தமது குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிடுகிருர்.

(ஈ) இராணுவத்தின் நிலைமை

செல்வமும் வளமும் இருந்தபோதிலும், நம் நாடு இராணுவத் துறையில் வலிமையற்றதாகவே இருந்தது. பதினாரும் நூற்ருண்டின் முதல் கால்பாகத்தில் நிலைத்திருந்த அரசியல் குழப்பம் நாட்டின் தற்காப்புக்கும் பாதுகாப்புக்கும் செய்யவேண்டிய கூட்டு முயற்சியைத் தடுத்தது. இராணுவத் திறமைக்குக் குறைவு இல்லையெனினும், இராணுவ முன்னேற்றம், ஆயுதங்களின் தரம், சூழ்ச்சி முறை, வளர்ச்சி ஆகியவற்றில் நம் நாடு மற்ற நாடுகளுக்கு மிகப் பின்ருல் இருந்தது. ஈரானும் ஆப்கானிஸ்தானும்கூட ஆயுதங்களை மேற்கிலிருந்து இரவல் வாங்கின; ஆனுல், வட இந்தியாவில் ஆட்சி புரிந்துவந்த நமது இந்து, முஸ்லிம் அரசர்கள் எவரும் ஆயுதப் படையைத் திரட்டுவதில் கவனத்தைச் செலுத்தவில்லை. லோடிகளின்கீழ் டெல்லிப்படை ஒரு தேசியப்படையாக இல்லாது இனத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. வீரர்கள் சுல்தானுக்குக் கீழ்படியாமல் அவர்களுடைய மேலதிகாரிகளுக்கு அடிபணிவது ஒரு சட்டமாகவே இருந்தது. அந் நிலையே ராணு சங்காவின் கீழோ, மற்ற எந்த இந்து அரசனின் கீழோ இருந்த இராசபுதனப் படையிலும் காணப்பட்டது. நமது படைகள் பரம்பரையாக வந்த

நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன; டெல்லி சுல்தானியர் களின் முந்திய நாட்களில் தென்பட்ட எளிதில் இயங்கும் தன்மையை நம் படை இழந்துவிட்டது. நம் படைத்தலைவர்களும் வீரர்களும் வழக்கத்திலில்லாத முறைகளைக் கையாண்டுவந்தனர். வடமேற்கு எல்லையில் அரண்களைக் கட்டுவதையும், அவ்வெல்லை யைப் பாதுகாப்பதையும் அரசர்கள் புறக்கணித்தனர். இவ்விதமாக நாட்டின் இராணுவ நிலை திருப்தியற்றதாக இருந்தது.

2. பாபர், 1483–1530

பிறப்பும் இளம்பிராயமும் (1483–94)

ஜஹீருத்தீன் முகம்மது பாபர் (Zahiruddin Muhammad Babur) 1483, ஃபிப்ரவரி 14ஆம் நாளில் ஃபர்கானுவில் (Farghana) பிறந்தார். அவருடைய தந்தை உமர் ஷேக் மீர்ஸா (Umar Shaik Mirza) என்பவர் அதன் அரசராவார். அவர் மத்திய ஆசியாவின் (Central Asia) இரு வீரர்களின் வழித்தோன்றலாவார்; அவர்கள் துருக்கிய வீரரான தைமூரும் (Timur), மங்கோலியர் களின் (Mongol) தலைவரான சிங்கிஷ் கானுமாவர். அவர் தம் தகப்பனுரின் வழியில் தைமூரின் ஐந்தாம் வழித்தோன்றலும், குத்லுக் நிகார் கானும் (Kutlug-nigar Khanum) என்ற அவருடைய தாயின் வழியில் சிங்கிஷ் கானின் பதினுன்காம் வழித்தோன்றலுமாவார். அவருடைய குடும்பம் துருக்கிய இனத்தைச் சேர்ந்த சகாதி (Chagathi) வகுப்பினைச் சேர்ந்ததாகும். இருந்தபோதிலும், அவர் பொதுவாக முகல் (Mugal) என்றே வழங்கப்பட்டார். உமர் ஷேக் மீர்ஸா என்பவர் அமைதியற்ற குணத்தினர். ஃபர்காணுவின் சிறு மூலவளங்கள் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. ஃபர்காணு என்பது நவரவுன் நஹர் (Navaraun Nahr) அல்லது டிரான்ஸோக் ஸியானு (Trans Oxiana) என வழங்கப்படும் பகுதியைச் சார்ந்த தாகும்; தற்போது துருக்கியின் ரஷ்ய மாகாணமாக அமைந் துள்ளது. அவர் தம்முடைய சகோதரரும் சாமர்கண்ட் (Samarqand), புகாரா (Bukhara) ஆகியவற்றின் அரசனுமான அகமது மீர்ஸா ((Ahmad Mirza) என்பவருடன் நட்பின் தொடர்பு கொண் டிருக்கவில்லை; அவருடைய வளம்பெற்ற இராச்சியப் பகுதியின் மீது பேராசை கொண்டிருந்தார். தம்முடைய மைத்துனர்களான மகமூத்கான் (Mahamud Khan) [தாஷ்கண்ட் (Tashkent), சாய்ராம் (Sairam), ஷருகியா (Shahrukia) ஆகியவற்றின் அரசர்], அகமது கான் (Ahmad khan) (தாஷ்கண்டுக்கும் யெஸ்துஸுக்கும் இடை யில் உள்ள பகுதியின் அரசன்) ஆகியவர்களுடனும் அவர் நட்புடன் நடந்துகொள்ளவில்லை. அவருடைய மாமனுரான யூனுஸ் கான்

(Yunus Khan) என்ற மங்கோலியர் உயிருடன் இருக்கும்வரை போட்டியாளர்கள் தீவிரமாக நடந்துகொள்ள முடியவில்லை. அன்னுர் 1486-87-ல் இறந்ததற்குப்பின் அகமது மீர்ஸாவும் மகமூது கானும் ஃபர்கானுவின்மீது கூட்டுப் படையெடுப்பு நடத்தத் திட்டமிட்டனர். முன்னவர் அந்திஜான் (Andijan) என்ற தலை நகரைத் தாக்கினுர்; பின்னவர் ஃபர்காணுவிற்கு வடபுறத்திலுள்ள அக்ஷ (Aksha) என்ற மலைக்கோட்டையைத் தாக்க முன்னேறினுர். தம்முடைய மூத்த மகனுன பாபரின் பொறுப்பில் தலைநகரை விட்டு விட்டு உமர் ஷேக் தம்முடைய மைத்துனனுன மகமூத் கானைத் தாக்க எதிர்நோக்கிச் சென்ருர். மகமூத் கான் அக்ஷி அரணை முற்றுகையிட்டார். ஒரு நாள் தம்முடைய புருக்களின் காட்சியை அனுபவிக்க உமர் ஷேக் சென்றிருந்தபோது அன்னுரின்மீது வீடு இடிந்து விழுந்ததனுல் அவர் உடனே உயிர் நீத்தார் (1494, ஜூன் 8ஆம் நாள்). தம்முடைய தகப்பனின் எதிர்பாரா மரணத் தின் காரணமாக, அப்பொழுது பதினெரு வருடங்கள் நான்கு மாதம் வயதடைந்திருந்த பாபர் அரியணை ஏறவேண்டியிருந்தது.

பாபரின் முந்திய ஆண்டுகள் மிகப் பயனுள்ளனவாகவே இருந் தன. பின்னுளில் அறிவு வளர்க்கப் போதிய ஓய்வு கிடைத்திருக்க முடியாது. இதனுல் இவர் தம்முடைய தாய்மொழியான துருக்கி மொழியையும் பாரசீக மொழியையும் சிறு குழந்தையாக இருக்கும் பொழுதே சிறப்பாகக் கற்றுக்கொண்டார் என்று உறுதியாகக் கூறலாம். இவர் சிறு வயதிலேயே அளவுக்கு மீறிய அறிவு பெற்றவர். அரசியல் நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தை உணரவும், மனிதர்களின் குணவியல்புகளைச் சரிவர மதிப்பிடுவதற்குமான அளவுக்கு இவருடைய செயல்திறன்கள் வளர்ச்சி பெற்றிருந்தன. உமர் ஷேக்கைப்பற்றியும், தம் காலத்திய உயர்குடி மக்கள் சிலரைப்பற்றியும் இவர் அளிக்கும் எழுத்தோவியம் இவருடைய திறனைப் புலனுக்குகிறது. இவர்களை எல்லாம் அவர் தாம் பதினெரு வயதினராக இருந்தபொழுது கடைசி முறையாகப் பார்த்தார். இவர் இராணுவப் பயிற்சி பெற்றிருந்திருக்கவேண்டும்; நிர்வாகம், போர்முறை, தூதரகம் ஆகியவற்றிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

ஃபர்கானுவின் அரசன் என்ற நிலையில் பாபர் (1494–1502)

1494, ஜூன் மாதத்தில், தமது பதினென்ருவது வயதில் பாபர் அரியணை ஏறியபொழுது அவருடைய நாட்டை இரண்டு பகைவர் இருபுறங்களிலிருந்து தாக்கிக்கொண்டிருந்தனர். அனுபவத்திலும் அறிவிலும் முதிர்ந்திருந்த தமது பாட்டியார்

ஏய்சான் தௌலத் பேகம் (Aisan Daulat Begam) என்பவரின் உதவியைக்கொண்டு பாபர் தம்முடைய முடிசூட்டு விழாவை நடத்திக்கொண்டு, தம்முடைய வீட்டை ஒழுங்குபடுத்திக் கொண்டார். பிறகு அவர் தம்முடைய நாட்டை அந்நியப் படையெடுப்பாளர்களிடமிருந்து காக்கும் முயற்சியில் ஈடுபட்டார். முதன்முதலாகத் தம்முடைய சிற்றப்பனுன அகமது மீர்ஸா என்பவருக்கு ஃபர்கானுவைக் கைப்பற்றியதற்குப்பின் அதை எவருடைய பொறுப்பிலாவது வைத்துவிடுவதாகச் செய்தி அனுப்பியிருந்தார். அப்படி இருக்க, ஓர் உறவினரும், தம்முடைய கீழாளாக மகிழ்ச்சியுடன் பணியாற்றக்கூடியவருமான அவரிடம் ஏன் அந்தப் பொறுப்பை ஒப்படைக்கக்கூடாது ? ஆனுல், இவருடைய இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதனுல் போர் மூண்டது. ஆனுலும், நல்வசமாக அவருடைய உடல் நலமற்றிருந்ததனுலும், ஓடையைக் கடக்கும்பொழுது அவருடைய படை துன்புற்றதனுலும், பாபரின் மனவுறுதியின் விளைவாகவும், அவரைப் பின்தொடர்ந்தவர்களின் பற்றுதலினுலும் அகமது மீர்சா சாமர்கண்டுக்குத் திரும்ப எத்தனித்தார். ஆக்ஷினயில் முற்றுகையிடப்பட்டவர்கள் அளித்த தீவிர எதிர்ப்பினுல் மனச்சோர்வுற்ற மகமூத் கான் என்பவரான பாபரின் தாய்மாமனும் தம்முடைய நாட்டிற்குத் திரும்பிவிட்டார். இவ்விதமாக ஃபர்கானு காக்கப்பட்டது. தம்முடைய நிலையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பாபர் இப்பொழுது எடுத்தார். அவருடைய நல்ல நிர்வாகமும் கவர்ச்சி மிக்க ஆளுமையும் அவரைக் குடிமக்கள் விரும்பும்படி செய்தன.

சாமர்கண்டு இரு முறையும் வெல்லப்பட்டு இழக்கப்படுதல் (1497-1502)

தைமூரின் தலைநகரான சாமர்கண்டு, ஃபர்கானுவின் பேரவாமிக்க இளைய அரசனைக் கவர்ந்தது. அது ஒரு மாபெரு நகரமாகும்; அதில் மசூதிகளும், கல்லூரிகளும், குளிக்கும் அறைகளும், குடியிருப்பதற்கான பெரிய கட்டடங்களும், கவர்ச்சி மிக்க பூங்காக்களும் நிறைந்திருந்தன. அது அவருடைய முன்னேரான தைரிமூன் தலைநகரமாக இருந்திருக்கிறது. தைமூர் பாபரின் கருத்தில் மிகச் சிறந்த மனிதராவார். தம்முடைய முன்னேரின் தலைநகரில் அவருடைய சிம்மாசனத்தில் வீற்றிருக்க பாபர் விரும்பினுர். நல்வசமாக அவருடைய சிற்றப்பனுன அகமது மீர்ஸா என்பவர் 1494, ஜூலை மாதத்தில் மரணமடைந்தார்; அன்னுருடைய மக்களுக்கிடையில் உள்நாட்டுப் போரும் மூண்டது. 1496-ல் சாமர்கண்டைக் கைப்பற்றுவதில் முதன்முதலாக ஈடுபட்டார்.

ஆனால், அம் முயற்சி முறியடிக்கப்பட்டது. மறு ஆண்டில் அம் முயற்சி மீண்டும் எடுக்கப்பட்டது; முயற்சி வெற்றி பெற்றது. அவர் தைமூரின் சிம்மாசனத்தில் அமர்ந்தார்; அவருடைய பேரவாவும் நிறைவேறியது. ஆனாலும், நூறு நாட்களுக்குப்பின் அதை அவர் கைவிடவேண்டியிருந்தது. அவர் சாமர்கண்டில் நோய்வாய்ப்பட்டிருந்தார். அச் செய்தி ஃபர்கானுவுக்குப் பரவியது; அங்கே ஒரு கிளர்ச்சியையும் தூண்டியது. உடல் நலமுற்றபின் கிளர்ச்சியை அடக்க பாபர் ஃபர்கானுவுக்குச் சென்றார்; ஆனாலும், அண்டிஜான் ஏற்கெனவே கிளர்ச்சியாளர்களிடம் சிக்கிவிட்டிருந்தது. பாபர் சாமர்கண்டுக்குத் திரும்பியபொழுது அந் நகரமும் அவர் கையிலிருந்து நழுவிவிட்டது என்பதை அறிந்தார்.

இப்பொழுது பாபர் குன்றுகள் நிறைந்த சிறிய மாவட்டமான கோஜெண்டைத் (Khojend) தவிர மற்ற எந்த நிலப்பகுதியையும் பெற்றிருக்கவில்லை. ஒவ்வொருவராக அவருடைய ஆட்கள் அவரை விட்டுச் சென்றனர். இருநூறு அல்லது முன்னூறு ஆட்களே அவரைப் பின்தொடர்ந்தனர். வீடில்லாத நாடோடியாக அவர் திரிந்துகொண்டிருந்தார். ‘அது எனக்கு மிகவும் கடுமையாக இருந்தது. நான் கதறுவதைத்தவிர வேறெதுவும் செய்வதற்கில்லை’ என்று பாபர் தமது குறிப்பேடுகளில் எழுதுகிறார். சாமர்கண்டைக் கைப்பற்ற அவர் செய்த முயற்சி தோல்வியுற்றது. அந்திஜானைக் கைப்பற்றுவதற்கான முயற்சியும் பயன் விளைக்கவில்லை. இரண்டு ஆண்டுகளாக அவர் பல மாறுதல்களுக்குள்ளாகவேண்டியிருந்தது. அப்பொழுதும், மன மகிழ்வோடிருக்கும் தன்மையையும், கடவுளின்மேல் வைத்திருந்த நம்பிக்கையையும், தமது நோக்கத்தில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் அவர் விட்டுவிடவில்லை. அவ்விரண்டு ஆண்டு மாறுதல்களுக்குப்பின் அவர் 1498-ல் ஃபர்கானுவைக் கைப்பற்றினார்; ஆனால், 1500-ல் அதை இழக்க நேரிட்டது. அவர் மீண்டும் வீடில்லாத நாடோடியாகத் திரிந்து பாறைகளுக்கிடையில் இருந்த அபாயமான பாதைகளில் தஞ்சம் புக நேர்ந்தது. 1500-01-ல் அவர் சாமர்கண்டின்மீது துணிகரத் தாக்குதல் ஒன்றை நடத்தினார். அப்பொழுது சாமர்கண்ட் ஷெய்பானிகான் (Shaibani Khan) என்ற உஸ்பெக் (Uzbeg) குறுநில மன்னரின் கைவசப்பட்டிருந்தது. பாபர் அத் தலைவரைத் தோற்கடித்து இரண்டாம் முறை சாமர்கண்டைக் கைப்பற்றினார். ஆனால், இப்பொழுதும் அதை வெகு நாட்களாகப் பிடித்துவைக்க முடியவில்லை. ஏனென்றால், தமது தோல்வி ஷெய்பானிகானை முள்ளுபோல் குத்திக்கொண்டிருந்ததனால் அவர் அதை மீண்டும் பெற மன உறுதி கொண்டிருந்தார். அவர் பாபரை 1502-ல் சர்-இ-புல் (Sar-i-Pul) என்ற இடத்தில்

தோற்கடித்தார். பாபர் எட்டு மாதங்களுக்குள்ளாக சாமர்கண்டைக் கைவிட நேரிட்டது. பாபர் தமது சகோதரியைத் தமது பகைவரான ஷெய்பானிகானுக்கு மணம் செய்துவைத்துத் தமது சுதந்திரத்தை விலைக்கு வாங்கவேண்டியிருந்தது. பாபர் மூன்றும் முறை நாடோடியாகி அடுத்த மூன்று ஆண்டுகளை மறைவிலும், வறுமையிலும், அவலநிலையிலும் கழித்தார். அவருக்கு நாடும் கிடையாது; வீடும் கிடையாது; ஒரு சிலரே அவரைப் பின்தொடர்ந்தனர். சில வேளைகளில் தமது உணவுக்காக அவர் கிராமவாசிகளிடமிருந்து யாசகம் கேட்கவேண்டியிருந்தது; வெறுங் காலுடன் நடக்கவேண்டியிருந்தது; குளிரில் ஆபத்துகள் நிறைந்த பாதைகளில் பயணம் செய்ய நேரிட்டது. இவையெல்லாம் அவருக்கும் அவரைப் பின்தொடர்பவர்களுக்கும் பெரும் இன்னல்களை விளைவித்தன. ஆனாலும், அவர் தமது நினைவுக் குறிப்புகளில் குறிப்பிடுவதுபோல, அவர் மன மகிழ்ச்சியை இழக்க வில்லை; பல பெரும் இன்னல்களுக்குமிடையில் தம்மைத் துயருக்கு ஆளாக்கிக்கொள்ளவில்லை. வழக்கம்போல அவர் விளையாட்டுகளிலும் வேடிக்கைகளிலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டே இருந்தார்.

காபூலின் அரசர் (1504–1526)

1501-ல் பாபர் தோல்வியுற்றதற்குப் பின் அவருடைய பெரும் பகைவரான ஷெய்பானிகான் என்ற உஸ்பெக் குறுநில மன்னர், படிப்படியாகத் தம்மை டிரான்ஸோக்ஸியானாவின் தலைவராக ஆக்கிக்கொண்டார். அவர் குன்துஸ்ஸின் (Qunduz) கவர்னரான குஸ்ரௌ ஷா (Khusrav Shah)என்பவரைத் தோற்கடித்து அவரது படையையும் விரட்டியடித்தார். குஸ்ரௌ ஷாவின் வீரர்கள் பலர் இப்பொழுது பாபருடன் சேர்ந்துகொண்டனர். இங்ஙனமாக பாபர் நாலாயிரம் ஆட்களுக்குத் தலைவரானார். காபூலுக்குச் சென்று முகீம் (Muqim) என்ற அர்கூனிடமிருந்து அதைக் கைப்பற்றுவதற்கான பலத்தைப் பாபர் பெற்றிருந்தார். முகீம் என்பவர் பாபரின் மாமனான உலுக்பேக்மீர்ஸா (Ulugh Beg Mirza) என்பவருடைய மகனான அப்துல் ரசாக் (Abdul Razzaq) என்பவரைப் பதவியிலிருந்து விலக்கி அப் பதவியைத் தாமே ஏற்றுக்கொண்டார். இது 1504-ல் நிகழ்ந்தது. 'ஒரு சண்டையின்றியும், முயற்சியின்றியும், எல்லாம்வல்ல இறைவனின் அருளாலும் கருணையாலும் இரண்டாம் ராபியின் (Rabi) (அக்டோபர், 1504) இறுதிப் பத்து நாட்களில் நான் காபூலையும் காஸ்னியையும், அவற்றின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த பகுதிகளையும் கைப்பற்றி எனக்கு அடிபணியும்படி செய்தேன்' என்று பாபர் எழுதுகிறார். அடுத்த ஆறு ஆண்

டில் அவர் தமது படையை அதிகமாக்கி, தமது புதிய இராச்சியத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்தார். 1507-ல் அவர் பாத்ஷா (Padshah) அல்லது பேரரசர் என்ற பட்டப் பெயரைப் புனைந்துகொண்டு, தமது முன்னோர்கள் மேற்கொண்டிருந்த மீர்ஸா என்ற பட்டப்பெயரைக் கைவிட்டார். அதே ஆண்டில் அவர் காந்தாரத்தைக் கைப்பற்றினார்; ஆனால், ஒரு சில வாரங்களில் அதை அவர் இழக்க நேரிட்டது. 1508, மார்ச்சு மாதத்தில் அவருடைய மூன்றும் மனையாளான மாஹிம் (Mahim) என்பவளுக்கு அவருடைய மூத்த மகனான ஹுமாயூன் பிறந்தான்.

சாமர்கண்டு மூன்றும் முறை கைப்பற்றப்பட்டு இழக்கப்படுதல் (1511)

பாபர் தமது புதிய இராச்சியமான ஆப்கானிஸ்தானத்தில் நிரந்தர வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். இருந்தபோதிலும், அவர் சாமர்கண்டுக்காக ஏங்கிக்கொண்டிருந்தார். தமது வமிசத்தின் பெரும் பகைவரும் டிரான்ஸோக்ஸியானாவிலிருந்து தைமூரிய வமிசத்தை ஒழித்தவருமான ஷெய்பானிகானைத் தோற்கடிக்க வேண்டும் என்று பாபர் பேரவா கொண்டிருந்தார். ஷெய்பானியைத் தோற்கடிக்க எவ்வளவிற்குத் தமது ஒன்றுவிட்ட சகோதரர்கள் தமக்கு உதவியளிப்பார்கள் என்பதை அறிந்து கொள்ள பாபர் சுல்தான் ஹுசைன் மீர்ஸா பைகரா (Sultan Husain Mirza Baiqara) என்பவரின் தலைநகரான ஹெராட்டுக்கு (Herat) 1507-ல் விஜயம் செய்தார். ஆனால், அவர் ஏமாற்ற முற்றுத் திரும்பிவர நேரிட்டது. இருந்தபோதிலும், மெர்வ் போரில் (Battle of Merv) ஈரானைச் சார்ந்த ஷா இஸ்மாயில் சஃபவி (Shah Ismail Safavi) என்பவரால் ஷெய்பானிகான் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார் என்ற மகிழ்ச்சிதரும் செய்தி பாபருக்கு 1510ஆம் ஆண்டின் இறுதி நாட்களில் எட்டியது. பாபருடைய இதயத்தில் தமது மூதாதையரின் இராச்சியத்தை மீண்டும் பெறும் அவா துடிதுடித்தது; உடனே அவர் குந்துஸ்ஸை நோக்கிப் புறப்பட்டார். அவர் ஷா இஸ்மாயிலுடன் கூட்டுறவு ஏற்படுத்திக் கொண்டு அவருடைய உதவியுடன் 1511-ல் சாமர்கண்டைக் கைப்பற்றியதுமன்றி, புகாரா (Bukhara), குரேசான் (Khurasan) ஆகியவற்றையும் தம் வசமாக்கிக்கொண்டார். உஸ்பெக்குகள் துருக்கிஸ்தானத்திற்குப் பின்வாங்கினர். இப்பொழுது பாபரது இராச்சியம் தாஷ்கண்ட் (Tashkent), குன்துஸ் (Qunduz), ஹிஸ்ஸார் (Hissar), சாமர்கண்ட், புகாரா, ஃபர்கானா, காபூல், காஸ்னி (Ghazni) ஆகியவற்றை உட்கொண்டிருந்தது. ஆனால், அவரது வெற்றி சிறிதுகாலமே நீடித்திருந்தது. ஷா பின்வாங்கிய

பிறகு உஸ்பெக்குகள் திரும்பிவிட்டனர்; டிரான்ஸோக்ஸியானுவை மீண்டும்பெற மன உறுதி கொண்டனர். அவர்களுடைய தலைவரான உபைதுல்லாகான் (Ubaid-Ullah Khan) என்பவர் குல்-இ-மாலிக் (Kul-i-Malik) என்ற இடத்தில் பாபரோடு மோதினுர். அதில் பாபர் தோற்கடிக்கப்பட்டார். பாபர் சாமர்கண்டிலிருந்து ஹிஸ்ஸாருக்குப் பின்வாங்க நேரிட்டது; இறுதியில் டிரான்ஸோக்சியானுவை முற்றிலும் கைவிடவேண்டி இருந்தது. 1513-ல் அவர் காபூலுக்குத் திரும்பினுர். ஈரானின் ஷாவின் தூண்டுதலின் மேல் பாபர் ஷியா (Shia) மதத்தைத் தழுவியதே அவர் சாமர்கண்டில் அடைந்த தோல்விக்கு முக்கிய காரணமாகும். டிரான்ஸோக்சியானுவின் அம் மதம் அருவருப்புத் தந்தது; அவர்களுள் பலர் வைதிக சுன்னிகளாவர் (Sunnis). ஈரானின் ஷாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி அவர் தமது புதிய இராச்சியத்தில் ஷியா மதத்தினை வலிந்து செயற்படுத்தவேண்டியிருந்தது. 1512-ல் அவர் சாமர்கண்டிலிருந்து பின்வாங்கியது பாபர் தமது முன்னேர்களது இராச்சியத்தை ஆட்சி புரிவதற்கான முயற்சிக்கு முற்றுப்புள்ளியிட்டது. மும்முறையும் கைப்பற்றி இழந்த சாமர்கண்டினது அரியணையின்மீது மீண்டும் ஏறும் நம்பிக்கையை அவர் இப்பொழுது கைவிட்டார். மத்திய ஆசியாவில் பதக்ஷான் (Badakhshan) என்ற இடம் ஒன்றுதான் இன்னும் அவர் கைவசப்பட்டிருந்தது. அதை அவர் கான்மீர்ஸா (Khan Mirza) என்பவரிடம் ஒப்படைத்தார்.

காபூலின் அரசராக இருக்கும்பொழுது, தமது கொடூர ஆப்கானியக் குடிமக்களை அடக்கப் படையெடுப்புகள் நடத்தி அவர்களிடமிருந்து வருமானமும் பெறவேண்டியிருந்தது.

இந்துஸ்தானத்தில் அவர் தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆயத்தம் செய்தல்

பாபர் தமது பதினுென்றும் வயதிலிருந்தே, சில சமயங்களில் தற்காப்புக்காகவும், அநேகமாக ஆக்கிரமிப்பு படையெடுப்புகளை நடத்தவும் போரில் ஈடுபட வேண்டியிருந்தது. அவர் பலமுறை தம்மைப்போன்ற துருக்கியர்களை அல்லது மங்கோலிய, உஸ்பெக், பாரசீக, ஆப்கானிய எதிரிகளை எதிர்க்கவேண்டியிருந்தது. போரில் அவர் தமது பகைவர்களின் போர்முறைகளையும் சூழ்ச்சிகளையும் மிகச் சாதுர்யமாகத் தமதாக்கிக்கொண்டார். உஸ்பெக்குகளிடமிருந்து துல்குமா (tulghuma) என்ற முறையை அவர் கற்றுக்கொண்டார். இது பகைவனின் படையின் புடையணிகளைத் திருப்பி அவனை ஒரே காலத்தில் முன்னிருந்தும் பின்னு

லிருந்தும் மிக வேகமாகத் தாக்கும் முறையாகும். ஆப்கானியர் களிடமிருந்தும் மங்கோலியர்களிடமிருந்தும் அவர்களது பதுங்கித் தாக்குவதற்கான சூழ்ச்சிகளைக் கற்றுக்கொண்டார். இதன்படி, ஏற்கெனவே குறிக்கப்பட்ட நிலத்தில் ஆட்களையும் பொருள்களையும் நிரப்பிப் பகைவனை அபாயமிக்க அவ்விடத்திற்கு மிகத்தந்திரமாகக் கொண்டுபோவர். பாரசீகர்களிடமிருந்து அவர் சுடுபடைக் கலங்களைப் பயன்படுத்தும் முறையைக் கற்றுக்கொண்டார்; தம் முடைய துருக்கிய உறவினர்களிடமிருந்து வெகு எளிதாக நட மாடும் குதிரைப்படையைத் திறனோடு பயன்படுத்தக் கற்றுக் கொண்டார். இவ்விதமாக, பல இனங்களோடு அவர் தொடர்பு கொண்டதனால் பாபர் தனக்கென்றே ஓர் உயர்தரப் போர்முறையை ஏற்படுத்திக்கொண்டார். அம் முறை, பல மத்திய ஆசிய மக்க ளுக்கே உரிய பலவகைப்பட்ட போர்முறைகளை விஞ்ஞான முறை யில் கூட்டிணைக்கப்பட்டதன் விளைவாகும். சிறந்த முறையில் பயிற்சி பெற்றதும் வெகு எளிதாக இயங்கும் குதிரைப்படை, விஞ்ஞானமுறையில் செய்யப்பட்ட ஆயுதங்கள் ஆகியவற்றைத் திறமையுடன் சேர்த்துப் பயன்படுத்துதல், துல்குமாபோன்ற சிறந்த சூழ்ச்சிகளைப் பயன்படுத்துதல், சங்கிலியால் பல வண்டிகளைக்கட்டி அரண்போல் நிற்கவைத்தல்—இவையெல்லாம் அப் போர் முறை யின் சிறப்பு அம்சங்களாகும். மேலும், இளமையிலேயே துரதிர்ஷ் டம் என்ற பள்ளியில் பாபர் பயிற்சி பெற்றார். அது அவரிடத்தில் இன்னல்களைச் சகிக்கும் தன்மை, பொறுமை, அசையா வீரம், மரணத்தைப் பொருட்படுத்தாமை போன்ற அரிய குணங்களை உண்டாக்கியது. இக் குணவியல்புகளெல்லாம் அவரை மனிதரின் மாபெரும் தலைவராக்கின. மிகக் கடுமையான சூழ்நிலைகளிலும் அவர் நம்பிக்கையும் ஆசையும் கைவிடவில்லை. 1514ஆம் ஆண் டுக்கும் 1519ஆம் ஆண்டுக்குமிடையில் அவர் ஒரு துருக்கிய ஆயுத வீரனை—உஸ்தாத்அலி (Ustad Ali) என்பவரைத் தமது பணித்துறையில் சேர்த்துக்கொண்டு அவரைப் படைக்கலச் சாலையரங்கத்தின் தலைவராக நியமித்துக்கொண்டார். அம் மனிதர் ஆயுதப்படை ஒன்றை ஏற்படுத்தவும், ஏராளமான துப்பாக்கி வீரர்களைத் தேர்ந்தெடுக்கவும் பாபருக்கு உதவி அளித்தார். கான்ஸ்டான்டிநோபுலைச் (Constantinople) சார்ந்த துருக்கியர் களிடமிருந்து பாரசீகர்கள் சுடுபடைக் கலங்களைப் பயன்படுத்தும் முறையைக் கற்றுக்கொண்டனர்; பாரசீகர்களிடமிருந்து பாபர் அம் முறைகளைக் கற்றுக்கொண்டார். சில ஆண்டுகளுக்குப்பின் முஸ்தஃபா (Mustafa) என்ற மற்றொரு துருக்கிய நிபுணரை பாபர் தமது ஊழியத்தில் சேர்த்துக்கொண்டார். அவ்விரு துருக்கியத் துப் பாக்கி வீரர்களின் கண்காணிப்பின்கீழ்த் தமது படை பயன்படுத்த பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் தயார் செய்தார். அவரிடத்தில்

ஒரு சிறப்பு வாய்ந்த ஆயுதப்படை இருந்தது. அதுவே அவர் இந்தியாவில் பெற்ற வெற்றிகளுக்குக் காரணமாகும். இவ்விதமாக அவரது மத்திய ஆசிய வாழ்க்கை இந்திய வரலாற்றில் அவர் பெறப்போகும் இடத்திற்கு அவரைத் தயார் செய்தது.

முந்திய படையெடுப்புகள்; பானிபட் போரை விளைவித்த சூழ்நிலைகள்

முதல் படையெடுப்பு

அவ்வப்பொழுது திரிந்துகொண்டிருக்கும்பொழுது 1503-ல் டிரான்சோக்சியானுவில் திக்கத் (Dikhkat) என்ற கிராமத்தின் தலைவருடைய விருந்தாளியாக பாபர் தங்கி இருந்தார். அப்பொழுது, அங்கே வாழ்ந்துவந்த கிராமத் தலைவருடைய தாயான நூற்றுப்பதினெரு வயது கிழவியிடமிருந்து தைமூர் இந்தியாவின்மீது படையெடுத்த நிகழ்ச்சியை பாபர் முதன்முதலாகக் கேள்வியுற்றார். அவரது கற்பனை தூண்டப்பட்டது. ஒரு நாள் தமது மாபெரும் மூதாதையரின் அரிய பெரிய இந்திய செயல்களைத் திரும்பவும் புரிய மனஉறுதி செய்துகொண்டார். ஆனாலும், வடமேற்கு எல்லையில் அவரது முயற்சிகளெல்லாம் தோல்வியுற்ற பொழுதுதான் அவர் தென்கிழக்கில் தன் அதிர்ஷ்டத்தைச் சோதித்துப் பார்க்க முடிவு செய்தார். காபூலின் அரசராக இருக்கும்பொழுது அவர் இந்தியாவின்மீது நான்கு படையெடுப்புகளை நடத்தினர். இவைகளெல்லாம் முன்னீடான ஆய்வுச் செயல்களாகவே இருந்தன. 1519ஆம் ஆண்டின் துவக்கத்தில் அவர் இந்தியாவின்மீது முதல் முதலாகப் படையெடுத்தார். அப் படையெடுப்பு வாள்முனையின்பேரில் கப்பம் கட்டுவதும் கொடுமை வாய்ந்ததுமான யூசுப்ஸாய் (Yusufzai) இனத்தை நோக்கி நடத்தப்பட்டது. அவர்கள் போதிய அளவுக்குத் தண்டிக்கப்பட்டதற்குப்பின் பாபர் பஜெளரை (Bajaur) நோக்கிச் சென்றார்; அதைத் தகர்த்தெறிந்தார். மிகக் கடுமையாக நடந்த அப் போரில் அவரது புதிய ஆயுதப்படை மிக முக்கியப் பங்கு பெற்றது. சுற்றுப்புற ஜனங்களுக்கு பீதியைத் தர அவர் அவ்விடத்திலிருந்த குடிமக்களையெல்லாம் படுகொலை செய்யும்படி ஆணையிட்டார். பஜெளர் அரண் கைப்பற்றப்பட்டது. பிறகு அவர் ஜீலம் (Jhelam) நதிக்கரையிலுள்ள பேரா (Bhera) என்ற நகரை நோக்கிச் சென்றார்; அதுவும் கைப்பற்றப்பட்டது. குடிமக்கள் எதிர்ப்பு அளிக்காமல் அடி பணிந்தனர். குசாப்பும் (Khushab) அவர் கைவசப்பட்டது; ஆனாலும், அதன் குடிமக்களுக்கு எவ்விதத் தீங்கும் இழைக்கக் கூடாது என்று அவர் ஆணை பிறப்பித்தார். 1399-ல் பஞ்சாப்

தைமூரால் கைப்பற்றப்பட்டதனால் அதை அவர் தமதாகவே கருதினார். ‘இந்துஸ்தானத்தைக் கைப்பற்றவேண்டும் என்னும் எண்ணம் என் மனத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருந்ததனாலும் அந்தப் பல நாடுகளையும் ஒரு காலத்தில் துருக்கியர்கள் கைப்பற்றியதனாலும் அவையெல்லாம் என்னுடையதே என்று நான் கருதினேன் ; அமைதியாகவோ அல்லது வன்முறையாலோ அவற்றை என் கைவசமாக்க முடிவு செய்துவிட்டேன். இக் காரணங்களுக்காக, மலைவாசிகளைச் சரிவர நடத்தவேண்டியிருந்ததனால் இவ்வாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த ஜனங்களின் ஆடு மாடுகளுக்குத் தீங்கிழைக்காதீர்கள் ; அவர்களுடைய நூல்களையும் உடைந்த ஊசிகளையும் துன்புறுத்தக்கூடாது’ என்று பாபர் எழுதுகிறார். பிறகு அவர் டெல்லிக்கு ஒரு தூதரை அனுப்பிப் ‘பண்டைக்காலத்திலிருந்தே துருக்கியருக்குச் சொந்தமான நாடுகளை எனக்குத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டும்’ என்று கோரினார். ஆனால், தௌலத்கான் லோடி தூதரை லாகூரில் (Lahore) நிறுத்தி வைத்துக்கொண்டதனால் பாபர் எவ்விதச் செய்தியையும் பெற முடியவில்லை. ஹிந்து பேக் (Hindu Beg) என்பவரின் பொறுப்பில் விட்டுவிட்டு பாபர் காபூலுக்குத் திரும்பினார். இப் படையெடுப்பினால் அவருக்கு நிரந்தரப் பலன் எதுவும் ஏற்படவில்லை. ஏனென்றால், பாபர் பின்வாங்கியவுடன் குடிமக்கள் ஹிந்து பேக்கை விரட்டியடித்துவிட்டனர்.

இரண்டாம் படையெடுப்பு

1519, செப்டம்பரில் பாபர் மீண்டும் இந்தியாவை நோக்கித் திரும்பினார். யூசப்சாய் ஆப்கானியர்களை அடிபணியவைக்க அவர் கைபர் கணவாயின் வழியாக (Khaibar Pass) அணிவகுத்துச் சென்றார். பிறகு, மேலும் நடவடிக்கைகளுக்காக அவர் பெஷாவரைத் (Peshawar) தமது தளமாக்கிக்கொள்ள நினைத்து அங்கே அரண்களைக்கட்டி, அதில் உணவுப் பொருள்களையும் நிரப்பினார். ஆனாலும், பதக்ஷானில் குழப்பம் ஏற்பட்டுவிட்டதாகச் செய்தி கிடைத்த உடன் தமது குறிக்கோளை நிறைவேற்றாமலேயே அவர் காபூலுக்குத் திரும்பவேண்டியிருந்தது.

மூன்றாம் படையெடுப்பு

1520-ல் பாபர் தமது மூன்றாம் இந்தியப் படையெடுப்பை நடத்தி பஜௌரையும் பேராவையும் திரும்பப் பெற்றார். அவ்விடத்திலிருந்துதான் அவருடைய ஆட்கள் 1519-ல் துரத்தியடிக்கப்பட்டனர். பிறகு அவர் சையால்காட் (Sialkot) நோக்கிச் சென்றார். எவ்வித எதிர்ப்பும் இன்றி அது அடிபணிந்தது. ஆனால், எதிர்ப்

பின்றிக் கீழ்ப்படிய விரும்பாத சைய்யித்பூர்வாசிகள் (Sayyidpur) வன்முறையால் அடக்கப்படவேண்டியிருந்தனர். அதற்கிடையில், பாபருக்குக் காந்தாரத்திலிருந்து அமைதி குலேக்கும் தகவல் எட்டியது. அங்கே ஷா பேக் அர்கூன் என்பவர் கலகம் செய்து கொண்டிருந்தார். அதனுல் அவர் அந் நகரைத் தமது ஆதிக்கத் துக்குட்படுத்துவதற்காக அந் நகருக்குத் திரும்பினுர். அடுத்த இரண்டு ஆண்டும் ஷா பேக்குக்கு எதிராக நடவடிக்கைகளே பாபர் எடுத்துக்கொண்டிருந்தார். 1522-ல் காந்தாரத்தின் கவர்னரான மௌலானு அப்துல் பாகி (Maulana Abdul Baqi) என்பவருடைய வஞ்சகச் செயலால் பாபர் அதைக் கைப்பற்றும் முயற்சியில் வெற்றியடைந்தார். காந்தாரத்தைக் கைவிட்டுவிட்ட ஷா பேக் அர்கூன் தம்மைச் சிந்துவின் அரசனுக ஆக்கிக் கொண்டார்.

நான்காம் படையெடுப்பு

பாபர் இப்பொழுது தமது ஊரில் சிக்கல்களிலிருந்து விடுதலே பெற்றிருந்தார். அந் நிலேயில் அவருடைய நிலேமை பின்புறத்தில் மிக உறுதியாக இருந்தது. ஏனெனில், காந்தாரத்தின் வலிமை மிக்க அரண் அவர் கைவசப்பட்டிருந்தது. இச் சமயத்தில், பஞ்சாபின் கவர்னரான தௌலத்கான் லோடியிடமிருந்து பாப ருக்கு ஓர் அழைப்பு வந்தது. தௌலத்கான் டெல்லியைச் சார்ந்த சுல்தான் இப்ராஹிம் லோடியுடன் நல்லுறவு கொண்டிராத தால் பாபரின் உதவியைப் பெற்றுத் தம்மைப் பஞ்சாபின் கவர்னராக ஆக்கிக்கொள்ள விரும்பினுர். அதற்குக் கைம்மாருக அவர் பாப ரைத் தமது அரசனுக ஏற்றுக்கொள்வதாக வாக்குறுதி அளித்தார். பாபர் அவ்வழைப்பை உடனே ஏற்றுக்கொண்டு ஆற்றல் மிக்க ஒரு படையுடன் 1524-ல் லாகூரை நோக்கிச் சென்ருர். இச் சமயத்தில்தான் இப்ராஹிம்லோடி தௌலத்கானேத் தண்டிப்பதற் காக ஒரு படையை அனுப்பிவைத்திருந்தார். இப் படை தௌலத் கானேத் தோற்கடித்து அவரை நாட்டிலிருந்து விரட்டியது. பாபர் லாகூரை அடைய இன்னும் சில மைல்கள் இருக்கும்பொழுது அப்பொழுதுதான் தௌலத்கானின்மீது வெற்றிபெற்றிருந்த டெல் லிப்படை படையெடுப்பாளர்களின் பாதையில் குறுக்கிட்டது. அதன் பிறகு பாபர் அதைத் தாக்கிச் சிதறடித்தார். அடுத்து, பாபர் லாகூரைக் கைப்பற்றி அதைக் கொள்ளேயிட்டு எரித்தார். அதன்பின் அவர் தற்போதைய மாண்ட்கோமரி மாவட்டத்தி லுள்ள (Montgomery district) திபால்பூர் (Dipalpur) என்ற இடத்தை நோக்கிச்சென்று அதைத் தாக்கி அதன் படையை வெட்டி வீழ்த்தினுர். பஞ்சாபின் பெரும்பகுதி இவ்விதமாக

அவரது ஆதிக்கத்துக்குட்பட்டது. மறைவிடத்திலிருந்து அப்பொழுதுதான் வெளிவந்த தௌலத்கான் திபால்பூரில் பாபருடன் சேர்ந்துகொண்டார். அவ்விதம் சேர்ந்துகொண்டால் அவரது மாகாணம் திரும்ப அவருக்குக் கிடைத்துவிடும் என்று அவர் நம்பினுர். ஆனுல், பாபர் பஞ்சாபைத் தன் கையிலேயே வைத்துக்கொண்டு தௌலத்கானுக்கு ஜலந்தர் (Jalandar), சுல்தான்பூர் என்ற இரண்டு மாவட்டங்களையும் அளித்தார். இதனுல் ஏமாற்றமுற்ற தௌலத்கான் தமது படையைப் பிரித்துவிடுமாறு பாபருக்கு வஞ்சகமான ஆலோசனை கூறினுர். அவரது பேரவாமிக்க மகனுன திலாவர்கான் அவருடைய நலனுக்கு மாருக அவரது தீய எண்ணங்களைப் பாபருக்குத் தெரிவித்துவிட்டார். இதனுல் சுல்தான்பூரை திலாவர்கானுக்கு அளித்து தௌலத்கானிடம் ஜலந்தரைமட்டும் விட்டுவைத்தார். அவர் இப்ராஹிம் லோடியின் மாமனுன ஆலம்கான் லோடி (Alam Khan Lodi) என்பவரிடம் திபால்பூரை ஒப்படைத்தார். ஆலம்கான் என்பவர் டெல்லி சிம்மாசனத்துக்கு ஓர் அபேட்சகராவார்; தம்முடைய மைத்துனரான சுல்தான் இப்ராஹிமுக்கு எதிராக எடுக்கவிருக்கும் நடவடிக்கைக்காக பாபரின் உதவியை நாடிக்கொண்டிருந்தார். இந்த ஏற்பாடுகளெல்லாம் செய்துவிட்டு திபால்பூர், லாகூர், சையால்காட் ஆகிய இடங்களில் படைகளை நிறுத்திவைத்து பாபர் காபூலுக்குத் திரும்பினுர். இப்பொழுது அவர் இந்துஸ்தானத்தைப் பெற முழு மனத்துடன் விரும்பினுர். அதன் படையெடுப்புக்காகத் தமக்கு மேலும் ஆற்றல்வாய்ந்த ஒரு படை தேவையாக இருக்கும் என்றும் அவர் உணர்ந்தார்.

பாபர் திரும்பியவுடன் தௌலத்கான் தமது மகனுன திலாவர்கானைத் தாக்கினுர்; சுல்தான்பூரையும் கைப்பற்றிக்கொண்டார். அதன் பிறகு அவர் திபால்பூர் நோக்கிச் சென்று ஆலம்கானைத் துரத்தி அடித்தார். பஞ்சாபை மீண்டும் பெற அவர் துரிதமாக முயற்சி எடுத்தார்; ஆனுல், சையால்காட்டிலிருந்த பாபரின் படையால் முறியடிக்கப்பட்டார். இவ்வளவு காலமும் இப்ராஹிம் லோடி காலத்தை வீணுக்கிக்கொண்டிருக்கவில்லை; பஞ்சாபிலிருந்து கிளர்ச்சியாளர்களையும் படையெடுப்பாளர்களையும் நீக்க ஒரு படையை அனுப்பினுர். இப் படையை தௌலத்கான் லோடி மிக எளிதாகத் தோற்கடித்துச் சிதறும்படி செய்தார்.

தௌலத்கானிடம் தோல்வியுற்ற லோடி போலி உரிமையாளனுன ஆலம்கான் காபூலுக்கு ஓடிச்சென்று அங்கே பாபருடன் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி தம்மைப் பஞ்சாபின் மீது முழு ஆதிக்கம் பெற்றிருக்கும்படி விட்டுவிட்டால் அதற்குப் பதி

லாகத் தாம் ஆலம்கான் டெல்லியின் அரியணைக்குக் கொண்டாடும் உரிமையை ஆதரிப்பதற்கு பாபர் இணங்கிவிட்டார். அவ் உடன் படிக்கை முகலாய அரசனுக்குப் பயனுள்ளதாக இருந்தது; ஏனெனில், 'தாம் வன்முறையை மேற்கொண்டு கைப்பற்றியதற்கு முறைப்படியான உரிமையை அது தமக்கு அளிக்கும்.' இவ் உடன் படிக்கைக்குப்பின் ஆலம்கானை லாகூருக்கு அனுப்பிவைத்து அவருக்கு உதவியளிக்கும்படி அங்கிருந்த படைகளுக்கு பாபர் உத்தரவிட்டார். பால்க்கில் (Balkh) உஸ்பெக் கிளர்ச்சி ஒன்றின் விளைவாக பாபர் உடனே எங்கும் போக முடியவில்லை. அக் கிளர்ச்சியை அடக்குவது அவரது தற்காப்புக்கே மிக இன்றியமையாததாக இருந்தது. ஆனால், ஆலம்கான் லாகூருக்குத் திரும்பிய உடன் தௌலத் அவரை பாபரின் கூட்டுறவை விட்டுவிடும்படியும் தமக்குப் பஞ்சாபை அளிக்கும்படியும் தவறான வழியில் செல்லச் செய்தார். அதற்குப்பின் அவ்விருவரும் இப்ராஹிம் லோடியுடன் போரிட டெல்லி நோக்கிச் சென்றனர். ஆனால், இப்ராஹிம் லோடி அவ் இருவரையும் உறுதியாகத் தோற்கடித்தார். இந் நிகழ்ச்சிகளைப்பற்றிய செய்தி பாபருக்கு எட்டியவுடன் இந்துஸ்தானத்தின்மீது படையெடுக்க அவர் இறுதியாக முடிவு செய்தார்.

முதலாம் பானிபட்டுப் போர் (1526, ஏப்ரல், 21ஆம் நாள்) (The first battle of Panipat)

உஸ்பெக்குகளின் துன்புறுத்தலிலிருந்து விடுதலை பெற்றதும் பாபர் 1525, நவம்பரில் நமது நாட்டை நோக்கி முன்னேறினார். வழியில் ஹுமாயூன் பதக்ஷானிலிருந்து தம் படையுடன் பாபரோடு சேர்ந்துகொண்டார். ஆலம்கான் தம்மிடமிருந்து பிரிந்துவிட்டார் என்பதையும் டெல்லியைத் தாக்கினதில் தோல்வியுற்றார் என்பதையும் பாபர் சையால்காட்டில் அறிந்தார். தௌலத்கானும் காஸிகானும் இப்பொழுது பீதியுற்று மில்வாட் (Milwat) அரணில் தஞ்சம் புகுந்தனர். பாபர் அவ் இடத்தை உடனே முற்றுகையிட்டு தௌலத்கானைச் சரணடையும்படி வற்புறுத்தினார். தம்மோடு போர் செய்யும்பொருட்டு வைத்துக்கொண்டிருந்த இரண்டு வாள்களும் அவரது கழுத்திலிருந்து தொங்கும்படி செய்து தௌலத்கானைத் தம்முன் கொண்டுவரும்படி பாபர் ஆணையிட்டார். தௌலத் குனிவதில் தாமதம் செய்ததனால் அவரைக் குனியும்படி செய்வதற்கு அவருடைய கால்களை இழுக்கும்படி பாபர் உத்தரவிட்டு, அவரது கிளர்ச்சி செயலுக்காக அவரைக் கண்டித்தார். பிறகு சிறையில் அடைப்பதற்காக அல்பேராவுக்கு அனுப்பப்பட்டார்; ஆனால், வழியிலேயே இறந்துவிட்டார். அச் சமயத்தில் ஆலம்கான் துயர்

மிக்க நிலையில் அங்கு வந்து பாபரைக் கண்டார். பாபர் மீண்டும் எவ்வித இடையூறுமின்றி பஞ்சாபைக் கைப்பற்றினுர்.

பிறகு இப்ராஹிம் லோடியுடன் போரிடவேண்டியிருந்தது. இது பஞ்சாபைக் கைப்பற்றுதலைவிட அதிகக் கடினமான செயலாகும். இதனால் பாபர் தேவையான ஆயத்தங்களையெல்லாம் செய்து கொண்டு லோடி போலி உரிமையாளரான ஆலம்கானின்மீது தமது கவனத்தை வைத்திருந்தார். ஆலம்கான் தம்முடன் இருத்தல் அரசியலைப் பொறுத்தவரை உண்மையில் மிக முக்கியமான தாகும். பாபர் டெல்லியை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும் பொழுது டெல்லி அரசவையிலிருந்த பிரபுக்கள் பலர் அவருக்கு உதவி அளிப்பதற்கு முன்வந்தனர். சித்தூரைச் சேர்ந்த ராணு சங்காவும் ஒருவேளை அச் சமயத்தில்தான் இப்ராஹிம்மீது கூட்டுத் தாக்குதல் செய்வதற்கான திட்டத்தை பாபருக்கு அனுப்பி இருக்கக்கூடும். படையெடுப்பாளரின் நோக்கத்தைச் சரிவர உணர்ந்து கொண்டதும் இப்ராஹிம் பெரும் படை ஒன்றைத் திரட்டிக்கொண்டு, படையின் இரண்டு பகுதிகளை முன்னதாகவே ஹிஸ்ஸாருக்கு அனுப்பிவைத்து பஞ்சாபை நோக்கி முன்னேறினுர். அவற்றுள் ஒன்றை ஹுமாயூன் விரட்டியடித்தார். மற்றப் பகுதியும் முறியடிக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டது. சில அணிவகுத்துச் செல்லுதல்களுக்குப்பின் பாபர் பானிபட்டை அடைந்தார்; தம்முடைய முகாமை அங்கே நிறுவினுர். இப்ராஹிமைத் தமது பன்னிரண்டாயிரம் வீரர்களைக்கொண்டு தாம் தோற்கடித்ததாக பாபர் தமது வாழ்க்கைக் குறிப்புகளில் பெருமையுடன் எழுதுகிருர். அவரைப் புகழும் ரஷ்புரூக் வில்லியம்ஸ் (Rushbrook Williams) என்ற ஆசிரியர், மேலும் ஓர் அடி எடுத்துவைத்து எட்டாயிரம் ஆட்களைக் கொண்டு அல்லது அதற்குக் குறைந்த ஆட்களையோகொண்டு பானிபட் களத்தில் போரிட்டார் என்று கூறுகிருர். உண்மையில், தௌலத்கானை முறியடித்ததற்குப்பின் பாபருடைய படை மேலும் அதிகரித்தது. ஏனென்ருல், வழக்கம்போல், ஆயிரக்கணக்கான இந்தியக் கூலிப்படையாட்கள் அவருடன் சேர்ந்துகொள்ளத் தயாராக இருந்தனர். பல முக்கிய பிரபுக்கள் ஏற்கெனவே அவருடன் சேர்ந்துகொண்டனர். பானிபட்டில் அவரது படையின் எண்ணிக்கை இருபத்தைந்தாயிரத்துக்குக் குறைந்திருக்க முடியாது. பாபர் தமது படையைப் பானிபட் நகருக்குக் கிழக்கில் கொண்டுவந்து தெற்கு நோக்கி நின்ருர். அவரது முன்னணி இயங்கும் எழுநூறு வண்டிகளை (araba) வட்டமாக நிறுத்தி வைத்து அமைத்த கூடாரத்தில் பாதுகாக்கப்பட்டிருந்தது. ஒவ்வோர் இரண்டு வண்டிகளின் சக்கரங்கள் பச்சைத் தோலினுல் செய்யப்பட்ட கயிறுகளால் கட்டப்பட்டிருந்தன. இவ்வித வண்டித்

தொகுதிகளுக்கிடையில் நூறு அல்லது அதற்கு மேற்பட்ட குதிரை வீரர்கள் முன்னேறித் தாக்க—ஒவ்வொன்றும் அறுபது அல்லது எழுபது கஜ அகலத்திற்கு இருக்கப்போதுமான இடைவெளிகள் அவர் விட்டிருந்தார். பீரங்கி வீரர்களுக்குப் பாதுகாப்பளிக்க ஒவ்வொரு ஜோடி பீரங்கிகளுக்குமிடையில் ஆறு அல்லது ஏழு நகர்த்தப் படக்கூடிய மார்பு உயரத் திரைகளை (துரா-tura) அவர் அமைத்தார். ஆயுதப்படை மார்பு உயர திரைகளுக்குப்பின் நிறுத்திவைக்கப் பட்டது. உஸ்தாத் அலி அதற்கு வலப்புறத்திலும் முஸ்தாஃபா அதற்கு இடப்புறத்திலும் நிற்கவைக்கப்பட்டனர். ஆயுதப் படைக்குப் பின்னால் அவரது முன்னணிப்படை நிற்கவைக்கப்பட்டது. குஸ்ராவ் குகல்தஷ் (Khusrav Kukaltash) என்பவரும் முகம்மது அலி ஜங்-ஜங் (Muhammad Ali Jang-Jang) என்பவரும் அதற்குத் தலைமை தாங்கினர். அதற்குப் பின்புறத்தில்தான் மத்தியப் பகுதி (குல்-Ghul) இருந்தது. இங்குதான் பாபர் நின்றுகொண்டிருந்தார். மத்தியப் பகுதி இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது—வலது மத்தியப் பகுதி, இடது மத்தியப் பகுதி. இவ்விரண்டிற்குமிடையில் பாபர் குதிரைமேல் வந்து போய்க்கொண்டிருந்தார். பானிபட் நகரம் அவரது வலப் படை பக்க அணியைத் தாங்கிக்கொண்டது மின்றி அதற்குப் பாதுகாப்பும் அளித்தது; இடப் படை பக்க அணி யமுனை (Yamuna) நதியின் வரண்ட படுகையில் நிறுத்தி வைக்கப்பட்டது. அவ் இடம் அப்பொழுது பானிபட்டுக்கு இரண்டு மைல் கிழக்கிலிருந்தது. இப்பொழுது இது பத்து மைல் கிழக்கில் உள்ளது. அதைச் சுற்றி அகழிகள் தோண்டப்பட்டிருந்தன; மரக்கிளை அரண்களும் அதைக் காத்தன. அப் படை அணிநிரையின் வலக் கோடியில் வலப்புறப் படையின் புடை அணியும் (வலது துல்குமா) இடக் கோடியில், இடப்புறப் படையின் புடை அணியும் (இடது துல்குமா) நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இவை தேர்ந்தெடுக்கப்பட்ட துருக்கியக் குதிரைவீரர்களைக் கொண்டிருந்தன. எதிரியின் படைப் புடை அணியைத் திருப்பி அவனைப் பின்னாலிருந்து தாக்குவது அவர்களின் முக்கியக் கடமையாகும். படை அணி நிரையின் பின்னால் சிறிது தூரத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட குதிரை வீரர்களின் சேமப்படை ஒன்று நிறுத்திவைக்கப்பட்டது. குதிரைப்படைத் தலைவரான அப்துல் அஜீஸ் (Abdul Aziz) அதற்குத் தலைமை தாங்கினார். வலப்புறப் படைப் புடை அணிக்கு ஹுமாயூனும் காஜா கிலானும் (Khwaja Kilan) இடப்புறப் படைப் புடை அணிக்கு முகம்மது சுல்தான் மீர்ஸாவும் (Muhammad Sultan Mirza) மாதி காஜாவும் (Mahdi Khwaja) தலைமை தாங்கினார்கள்.

அதற்குமாறாக, இப்ராஹிம் லோடியின் படை, பாபரின் கூற்றின்படி, ஒரு லட்ச வீரர்களையும் ஓர் ஆயிரம் யானைகளையும் கொண்

டிருந்தது. ஆனால், அக் காலத்தில் ஒவ்வொரு படைவீரனுக்கும் பல பணியாட்களும் உடன் சேவகர்களும் இருந்ததைக் கருத்தில் கொள்ளுங்கால், இப்ராஹிமின் உண்மையில் போர் புரியும் படையின் எண்ணிக்கை நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்டிருக்கமுடியாது. அது அச் சமயத்தில் மிக அவசரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பலவகைப்பட்ட வீரர்களைக் கொண்டிருந்தது. அப் படைகள் பரம்பரையாக வழக்கத்திலிருந்த நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன—முன்னணிப்படை, மத்தியப் பகுதி, வலப்புறப் படைப் புடை அணி, இடப்புறப் படைப் புடை அணி. படைகள் சில மைல் தூரத்துக்கிடையில் 1526, ஏப்ரல் 26ஆம் நாள் நேருக்குநேர் தோன்றின. ஆனால், எட்டு நாட்களாக ஒவ்வொரு பக்கமும் வலியத் தாக்குதல் செய்யவில்லை. ஏப்ரல் 20ஆம் நாளின் இரவில் ஆப்கானியர்களின் முகாமை இரவில் தாக்க நாலாயிரம் அல்லது ஐந்தாயிரம் ஆட்களை பாபர் அனுப்பினார். ஆனால், அத் தாக்குதல் தோல்வியுற்றது. ஆனாலும் அதனால் தூண்டப்பட்ட இப்ராஹிம் அடுத்த காலையில் முன்னேறுமாறு தமது படைக்கு உத்தரவிட்டார். வெகு காலையிலேயே அப் படை அணிவகுத்துச்சென்று இடையிலிருந்த நான்கு மைல்களை மூன்று மணி நேரத்தில் கடந்தது. படைவீரர்கள் அருகில் வந்து பாபரின் முன்னணிப் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்த்தபொழுது அவர்கள் தயங்கி, வேகமாக முன்னேறுவதை நிறுத்திக்கொண்டனர். இவ்விதமாக, திடீரென்று தாக்குவதற்கான வாய்ப்பை அவர்கள் இழந்தனர். மேலும், அவர்களது முன்னணிப்படை திடீரென்று நின்றுவிட்டதால் பின்னால் வந்துகொண்டிருந்த படை குழப்பத்தில் மூழ்கியது. பகைவனின் தயங்குதலைப் பாபர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வலிந்து தாக்கும்படி தமது படைவீரர்களுக்கு உத்தரவிட்டார். இவ்விதமாக 1526, ஏப்ரல் 21ஆம் நாள் போர் மூண்டது. உடனே சுற்றிவந்து பகைவனைப் பின்புறத்திலிருந்து தாக்கும்படி பாபர் தமது படைப் புடை அணிகளுக்கு உத்தரவிட்டார். பின்புறத்தில் குழப்பமும் உறுதியற்ற நிலையும் ஏற்பட்டிருந்தது. அவர்கள் வலப்புறத்தையும் இடப்புறத்தையும் சுற்றிவந்தனர்; ஆப்கானியர்களிடம் நெருங்கி அவர்கள்மீது அம்புகளைப் பொழிந்தனர். அதேசமயத்தில் பாபரின் வலப்புறப் படை அணியும் இடப்புறப் படை அணியும் முன்னேறிப் பகைவனைத் தாக்கும்படி ஆணையிடப்பட்டன. ஆப்கானியர்கள் எதிர்ச் செயலாற்ற தாமதிக்கவில்லை. பானிபட் நகருடன் முகலாயனின் தொடர்பை அறுக்கவும் அவனது படைப் புடை அணியை இவ்விடைவெளியின் திசையில் திருப்புவதற்காகவும் இப்ராஹிம் இப்பொழுது மிக இடுக்கான நிலையில் சிக்கிக்கொண்டிருந்த பாபரினது வலப்படை அணியைத் தாக்க ஆணை பிறப்பித்தார். இப்ராஹிமின் திட்டமாவது : பகை

வனின் வண்டிகள் வட்டமாக நிறுத்திவைத்து அமைத்த கூடாரத்தையும் பீரங்கிகளையும் விலக்கிக்கொண்டு பாபரின் படையின் முக்கியப் பகுதியைத் துரிதமாகத் தாக்கவேண்டும் என்பதாகும். ஆனால், பாபர் வெகு விரைவில் மத்தியப் பகுதியிலிருந்து உதவி அனுப்பினர். அவ் உதவிப்படை ஆப்கானியர்களின் இடப்புறப் படை அணியை முறியடித்தது. இப்பொழுது போர் பொதுவான போராக மாறியது. பாபர் எதிரிகளைச் சுடுமாறு தமது பீரங்கி வீரர்களுக்கு உத்தரவிட்டார். இவ்விதமாக லோடிப் படையானது சூழப்பட்டு முறியடிக்கப்பட்டது. அதை முன்புறத்திலிருந்து பீரங்கிகள் தாக்க, பக்கங்களிலிருந்தும் பின்புறத்திலிருந்தும் அம்புகள் தாக்கின. இந்தியப்படை சூழ்ச்சித்திற மேம்பாட்டால் வெல்லப்பட்ட போதிலும் அவர்களது ஆயுதங்கள் மற்றவரைவிட மேல்வகுப்புக்குரியவையாயில்லாவிடினும் இப்ராஹிம் வீரதீரத்துடன் போரிட்டார். போர் காலை ஒன்பது மணியிலிருந்து நடுப்பகல்வரை நீடித்து நடந்தது. அப்பொழுது பாபரின் சிறந்த இராணுவத் திறனும் போர்முறைத் திறனும் வெற்றியடைந்தன. கடைசி மூச்சுவரை வீரத்துடன் போர் புரிந்த இப்ராஹிம் லோடி கொல்லப்பட்டார். அவருடைய பதினைந்தாயிரம் ஆட்கள் போர்க்களத்தில் மடிந்து கிடந்தனர். அவற்றுள் ஆறாயிரம்பேர் தமது அரசனைச் சூழ்ந்து கிடந்தனர். குவாலியரைச் சார்ந்த ராஜா விக்ரம்ஜித் (Raja Vikramajit of Gwalior) மடிந்தவர்களுள் ஒருவராவார். அவர் தமது முன்னாள் விரோதியான இப்ராஹிமின் புறத்தில் உண்மை ராஜபுத்திரனைப்போலப் போரிட்டார். 'தாக்குதல் நடக்கும் பொழுது சூரியன் உச்சிக்கு வந்துவிட்டான். போர் நடுப்பகல் வரை நீடித்தது. அப்பொழுது பகைவர்கள் முற்றிலும் முறியடிக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர். எனது ஆட்கள் வெற்றி பெற்றனர். எல்லாம் வல்ல இறைவனின் அருளாலும் கருணையாலும் இந்தக் கடினமான விஷயம் எனக்கு மிக எளிதாகிவிட்டது. அந்த மாபெரும் படை அரைநாளுக்குள் மண்ணோடு மண்ணாகியது.' இப்ராஹிம் வீழ்ச்சியுற்றதும் டெல்லிப் படை பீதிகொண்டு சின்னபின்னமாகியது. வெற்றிகொண்ட முகலாயர்கள் பகைவனை டெல்லியின் வாயில்கள்வரை விடாது துரத்திச் சென்றனர்; ஆயிரக்கணக்கான அகதிகள் படுகொலைக்குள்ளாயினர்.

அதன் விளைவுகள்

பானிபட் போர் முற்றிலும் முடிவான ஒரு போராகும். லோடிகளின் இராணுவ பலம் சின்னபின்னமாக்கப்பட்டது. அவர்களுடைய அரசரும் போர்க்களத்தில் மடிந்து கிடந்தார். மிகக் குறைவாகவே கணக்கிட்டாலும் அவர்களுடைய இருபதாயிரம்

படைவீரர்கள் மாண்டனர். இந்துஸ்தானின் இறைமை ஆப்கானியர் களின் கைகளிலிருந்து ஒரு குறுகிய காலத்திற்காவது நழுவி விட்டது. அது முகலாயர்கள் கைக்கு வந்து சேர்ந்தது. அவர்கள் அதைப் பதினைந்து ஆண்டுகள் இடைக்காலம் தவிர, இரண்டு நூற் ருண்டுக்கு மேற்பட்டுத் தம்மிடமே வைத்திருந்தனர். இந்தியாவி லிருந்த துருக்கிய-ஆப்கானிய ஆளும் வகுப்புச் சீர்கேடுற்றிருந்தது; அதனுடைய உச்ச உயர்நிலை பேராபத்துக்குட்பட்டிருந்தது. பானிபட்டில் பாபர் அடைந்த வெற்றியின் விளைவாக, வெளி நாட்டு ஆளும் வகுப்பினரிடத்தில் புதிய இரத்தமும் ஆற்றலும் புகுந்தன. இவ்விதமாகத் தோற்றுவிக்கப்பட்ட முகலாய வமிசம் வரிசையாகப் பல சிறந்த அரசர்களை நாட்டுக்கு அளித்தது. அவர் களின்கீழ் நாடு பல்வகை தொக்க ஒரு நாகரிகத்தை ஏற்படுத்து வதற்கான முயற்சியில் ஈடுபட்டது. பாபரைப் பொறுத்தவரை பானிபட் தமது இந்தியப் படையெடுப்பு திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் முடிவாகியது. அவரது வெற்றிக்குப்பின் பாபர் டெல்லி, ஆக்ரா ஆகியவற்றின் அரசனுனபோதிலும் அவருடைய உண்மையான வேலை பானிபட்டுக்குப் பிறகுதான் ஆரம்பமானது. இந்துஸ்தானத்தின் அரசனுவதற்குமுன் அவர் சக்திவாய்ந்த இன்னும் சில பகைவர்களை வெல்லவேண்டியிருந்தது. ஆனுலும் பானிபட் இறைமைக்கான முறையுள்ள உரிமையை அவருக்கு அளித்தது. அவரது மற்ற முயற்சிகளெல்லாம் அவ் உரிமையை வற்புறுத்தும் செயல்களேயாகும்.

அவரது வெற்றிக்குக் காரணங்கள்

பல காரணங்கள் பாபருக்கு வெற்றியைத் தந்தன; அவருடைய பகைவரான இப்ராஹிமுக்குத் தோல்வி விளைவித்தன. முதல் முதலாக, பாபரைவிட இன்னும் குறைந்த வலிமைகொண்ட பகை வரின்மீதும் வெற்றி கொள்ளமுடியாத அளவுக்கு இப்ராஹிமின் அறிவுத் தகுதியற்ற கொள்கையும் அவருடைய ஆப்கானியப் பிரபுக் களிடம் அவர் கொண்டிருந்த சந்தேகமும் அவருடைய சக்தியைக் குறைத்திருந்தன. மக்களுடைய உதவியோ, ஆப்கானியப் பிரபுக் களின் உதவியோயின்றி அவர் தனித்தே போரிட்டார். இரண்டாவ தாக, மிக அவசரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அனுபவமற்ற, புதிய படைவீரர்களைக் கொண்டிருந்ததுமான அவருடைய படை பல்வேறுன முரண்பாடான கூறுகளைக் கொண்டிருந்தது. அவர்களை யெல்லாம் சுல்தானின் சுய ஆளுமைதான் இணைத்திருந்தது. அதற்கு அவ்விதமான தேசிய உணர்ச்சியோ அல்லது சமய உணர்ச்சியோ கிடையாது. அது இனத்தின் அடிப்படையில் அமைக்கப்பட் டிருந்தது. தனிப்பட்ட படைவீரர், படையின் தலைவருக்குக்

கீழ்ப்படியாமல் தமது மேலதிகாரியின் ஆணைகளைத்தான் ஏற்றுக் கொண்டார். படைகள், சந்தேகமின்றி, ஆற்றல் மிக்கவையாய் இருந்தன. ஆனாலும், பயிற்சி பெற்றவர்களும் திறன் படைத்தவர்களுமான வீரர்களின் குணவியல்புகளை அவர்களிடத்தில் காண முடியவில்லை. இந்திய வீரர் மடிவதற்குத் தெரிந்திருந்தாரேயன்றிப் போரிடுதலைத் தெரிந்துகொள்ளவில்லை என்று பாபர் தமது குறிப்பேடுகளில் எழுதியது உண்மையே. அதற்கு மாறாக, முகலாயப்படைலோடி சுல்தானது படையைப்போலப் பல்வேறு கூறுகளைக் கொண்டிருந்தாலும், பாபரால் இந்துஸ்தானத்தைக் கைப்பற்ற அதனது தலைவர்கள் பெற்றிருந்த ஆர்வத்தையும் பேரவாவையும் அப் படை பெற்றிருந்தது. மூன்றாவதாக, வெடிமருந்தினைப்* பயன்படுத்தும் முறை பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்தே இந்தியா அறிந்திருந்த போதிலும், பாபர் வருவதற்கு முன்னால் வடஇந்தியாவில் சுடு படைக் கலங்களைத் தயாரிக்க எவரும் அறிந்திருக்கவில்லை. இதனால் இப்ராஹிமினிடம் சக்திவாய்ந்த பீரங்கித் தொகுதி எதுவும் கிடையாது. அவருடைய வீரர்களும் அதனைப் பயன்படுத்தும்முறை முற்றிலுமே அறிந்துகொள்ளாமல் இருந்தனர். அதற்கு மாறாக, பெரிய பீரங்கிகளையும் சிறிய துப்பாக்கிகளையும் கொண்ட சக்தி வாய்ந்த பீரங்கித் தொகுதி ஒன்று பாபரிடம் இருந்தது. அதனின் பொறுப்பு உஸ்தாத் அலி, முஸ்தஃபா என்ற இரண்டு திறன்படைத்த பீரங்கி வீரர்களிடம் இருந்தது. இந்துஸ்தானத்தில் பாபரின் வெற்றிக்குரிய காரணங்களில் ஒன்று மிக முக்கியமானது என்று கூறவேண்டுமெனில், அவரது பீரங்கித் தொகுதிக்கு முதலிடத்தை அளிக்க வேண்டும். நான்காவதாக மிகச் சிறப்பாகத் தோற்றுவிக்கப்பட்ட ஒரு போர் முறையில் பாபர் வல்லுனராவார். நாம் ஏற்கெனவே கண்டதுபோல், அது பல மத்திய ஆசிய மக்களின் சூழ்ச்சித் திறமைகள் விஞ்ஞான முறையில் அமைக்கப்பட்ட கூட்டிணைப்பின் விளைவாகும். ஆனால் இப்ராஹிமோ அப்பொழுது நாட்டில் இருந்த பழமையானதும், வழக்கத்திலில்லாததுமான முறையைக் கையாண்டார். இறுதியாக, பாபர் அவரது காலத்திய மிகப்பெரிய தளபதிகளில் ஒருவராவார். இம்ராஹிமோ அனுபவமற்றவனும் கர்வம் பிடித்தவனுமான ஓர் இளைஞன்; அவன் தனது பெரும் பகைவருக்கு நிகராகமாட்டான். பாபரின் கூற்றின்படி ' அவன் ஓர் அனுபவமற்ற இளைஞன்; அவன் தனது நடமாட்டங்களில் சரியான கவனத்தைச் செலுத்தவில்லை. எவ்வித முறையுமின்றி அவன் முன்சென்றான்; அல்லது நின்றான் ; அல்லது பின் வாங்கினான். எவ்வித முன்னேக்கில்லாமலும் சண்டையிட்டான்.' சிறந்தவர்களும் அனுபவம்

---

* அது வாணவேடிக்கைகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதன்றிச் சுடு படைக் கலங்களைச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படவில்லை.

பெற்றவர்களுமான படைவீரர்களைப் பெற அவர் சரியான ஊதியத்தை அளிக்க முன்வரவில்லை. ராணு சங்காவின் தலைமையின்கீழ் இருந்த இராசபுத்திரர்களின் உதவியை அவர் பெற்றுப் பொதுப்பகைவனை விரட்டியடிக்கக் கூட்டுமுயற்சி செய்திருப்பாராயின் ஒருவேளை பாபர் நாட்டைவிட்டு விரட்டி யடிக்கப்பட்டிருக்கக்கூடும்.

பின்தொடர்ச்சி

வெற்றி பெற்றவுடன் பாபர், ஆக்ராவைக் கைப்பற்ற ஹுமாயூன், காஜாகிலான் ஆகியவர்களின் தலைமையின்கீழ் ஒரு படையை அனுப்பிவைத்தார். அதே சமயத்தில், டெல்லியைக் கைப்பற்றுவதற்காகவும், அங்கிருந்த பொதுப் பொக்கிஷங்களைப் பெறுவதற்கும் தமது படையின் மற்றொரு பகுதியை அனுப்பிவைத் தார். பிறகு அவரே டெல்லிக்குச் சென்றார்; தலைநகருக்குள் நுழைவதற்கு முன் அங்கே இருந்த முஸ்லீம் வீரர்களின் கல்லறை களுக்கும் முனிவர்களின் கல்லறைகளுக்கும் 'விஜயம் செய்தார். அதற்குப் பின் அவர் ஆக்ராவுக்குப் போந்தார்; மே மாதம் 10ஆம் நாள் இப்ராஹிமின் அரண்மனையில் குடியிருக்கத் தொடங்கினார். ஹுமாயூன் அங்கே தமது தந்தைக்கு வருகை தந்து பல பொக்கிஷங்களுடன் புகழ்வாய்ந்த கோஹினூர் வைரத்தை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். குவாலியரைச் சார்ந்த ராஜா விக்ரமஜித் என்பவரின் குடும்பம், ஆக்ரா அரணில் ஹுமாயூன் தனக்குக் காட்டிய தாராள குணத்திற்காக அவ் வைரத்தை அவருக்கு அளித்தது. அதனது மதிப்பு உலகத்தின் தினச் செலவில் பாதிக்குச் சமமாகும் என்று கணக்கிடப்பட்டது. ஆனால், அவருக்கே இயல்பான தாராள மனப்பான்மையுடன் பாபர் அவ் வைரத்தையும் எழுபது லட்ச தாம்முகளையும் (dams) ஹுமாயூனின் பணிகளுக்காகக் கொடுத்தார். ஆக்ராவுக்கு வெளியி லிருந்த ஓர் அரண்மனையில் இப்ராஹிம் லோடியின் தாயார் தங்கி இருக்க பாபர் அனுமதித்தார்; அவளுடைய செலவுக்காக ஒரு பர்கானாவின் (pargana) வருவாயையும் ஒதுக்கிவைத்தார். அவ ளுடைய அதிகாரிகளுக்கும் சிறிய ஜாகீர்கள் (Jagirs) அளிக்கப் பட்டன. பாபர் தமது ஆட்களுக்கும் மிகத் தாராளமாகப் பரிசு களை வழங்கினார். அவருடைய முக்கிய பேக்குகளுள் (Begs) ஒவ்வொருவரும் ஆறு லட்சத்திலிருந்து பத்து லட்சம் தாம் (dam) வரை பெற்றனர். ஒவ்வொரு படைவீரருக்கும், உடன் சேவக ருக்கும், அவர்களுள் மிகத் தாழ்ந்தவர்களுக்கும் கொள்ளையடிக்கப் பட்ட பொருளில் பங்கு கிடைத்தது. தங்கம், வெள்ளிப் பரிசு களையும் மற்றும் பல அரிதான பொருள்களையும், அடிமைகளையும் பாபர், ஃபர்கானா, குரேசான், காஷ்கர், ஈரான் ஆகிய இடங்களி

லிருந்த தமது நண்பர்களுக்கு அனுப்பிவைத்தார்; மெக்கா (Mecca), மதீனு (Madina), சாமர்கண்டு, ஹெராட் போன்ற இடங்களில் உள்ள திருத்தலங்களுக்குக் காணிக்கைகள் செலுத்தப்பட்டன. ஆண், பெண், குழந்தை உள்பட எல்லா காபூல்வாசிகள் ஒவ்வொரு வரும் ஒரு வெள்ளி நாணயத்தைப் பெற்றனர். பல பரம்பரைகளாக டெல்லி, ஆக்ரா, குவாலியர் ஆகிய இடங்களில் சேமித்து வைக்கப் பட்டிருந்த பொக்கிஷங்களை பாபர் வெகு தாராளமாகப் பங்கிட்டுக் கொடுத்து அதில் ஒருசிறிதே தமக்காக வைத்துக்கொண்டார். அதற்காக அவர் 'கலந்தர்' (qalandar) (யாசகன்) என்று விளையாட்டாக அழைக்கப்பட்டார்.

பானிப்பட்டுக்குப் பிறகு ஏற்கவேண்டியிருந்த பொறுப்பு : நாட்டைக் கைப்பற்றுதல்

பானிப்பட்டுக்குப் பிறகு தோன்றிய இடர்ப்பாடுகள்

நாட்டில் பாபரது உண்மையான பொறுப்பு பானிப்பட்டுக்குப் பின் ஆரம்பமானது. இப்ராஹிம் லோடியின் மறைவைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட ஆப்கானியத் தலைவர்கள் பலர் தம்மைச் சுதந்திர மன்னர்களாக ஆக்கிக்கொண்டனர். காசிம் சாம்பாலி (Qasim Sambhali) என்பவர் தம்மை சாம்பாலின் (Sambhal) அரசனுக்கிக்கொண்டார்; நைசாம்கான் (Nizam Khan) பெயானுவின் அரசரானுர்; ஹசன்கான் மீவாடி (Husan Khan Mewati) மீவாட்டின் அரசனுனுர். முகம்மது ஸெய்தூன் (Muhammad Zaitun) தோல்பூலின் (Dholpul) மன்னராகவும், ஹுசைன்கான் லோஹானி (Husain Khan Lohani) ராப்ரியின் (Rapri) மன்னராகவும், தாதார் கான் (Tatar Khan) குவாலியரின் மன்னராகவும், குதுப் கான் (Qutub Khan) எடாவாவின் (Etawa) மன்னராகவும், ஆலம்கான் (Alam Khan) கல்பியின் (Kalpi) மன்ன ராகவும் பதவியேற்றனர். கங்கைக்கு அப்புறத்திலுள்ள கனேஜ் (Kanauj), அதனின் சுற்றுப்புறங்கள் ஆகியவை நசீர்கான் லோஹானி, மாரூஃப் ஃபர்மூலி போன்ற அமீர்களின் (பிரபுக்கள்) கைவசப்பட்டிருந்தன. தரியாகான் லோஹானியின் மகனுன பஹார்கான், சுல்தான் முகம்மது (Sultan Muhammad) என்ற பட்டப் பெயரைப் புனைந்துகொண்டு தம்மை பீஹாரின் அரசனுக ஆக்கிக்கொண்டார். மர்கூப் (Marghub) என்ற ஓர் அடிமை மஹாபனின் (Mahaban) அரசனுனுர். மேலும் பாபர் ஆக்ராவை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும்பொழுது நாட்டுப்புறங்களி லிருந்த மக்கள் பீதிகொண்டு ஓட ஆரம்பித்தனர். இதனுல், தமது ஆட்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களும் விலங்கு களுக்குத் தேவையான தீனி வகையும் பாபருக்கு வெகு எளிதில்

கிடைக்கவில்லை. மக்கள் கொள்ளையடிக்கத் தொடங்கிவிட்டனர். சாலைகள் ஆபத்தானவையாக இருந்தன. கோடைக்காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. காபூலுக்குத் திரும்பவேண்டும் என்று பாபரின் ஆட்கள் வற்புறுத்தினர். இந்த இன்னல்களுக்கிடையில் பாபர் தமக்கு இயல்பாகவே இருந்த பொறுமையுடனும் குணவன்மையுடனும் நடந்துகொண்டார். அவர் மன உறுதியை இழந்துவிடாமல் நிலைமையை மிக அமைதியுடன் சமாளித்தார்; தம்முடைய ஆட்களைத் தங்கும்படியும் அவசரப்பட்டுத் துணிவு இழந்து சிறந்த வாய்ப்பினை நழுவவிடாதபடியும் அவர் வேண்டிக்கொண்டார். ஆற்றல் முனைப்பார்ந்த தோரணையில் அவர் தமது ஆட்களுக்கு அறிவுரை கூறினர். 'போருக்குரிய பொருள்களும் சாதனங்களுமன்றிப் பேரரசும் படையெடுப்பும் முடியாததாகும்; குடிமக்களும், துணைமையான மாகாணங்களுமன்றி அரச பதவியும் உயர்குடிப் பிறப்பும் இருக்கமுடியாது ; பல துன்பங்களை அனுபவித்து, பல ஆண்டுகளாக உழைத்து, கடும் உழைப்புடைய பயணங்களைச் செய்து படைகளை எழுப்பி—என்னையும் என்னுடைய படை வீரர்களையும் பெரும் ஆபத்துக்குட்படுத்திய பிறகு, போர்கள் செய்த பின்பும், இரத்தம் சிந்திய பிறகும், ஆண்டவனின் அருளால் நான் என்னுடைய பகைவர்களைத் தோற்கடித்து, இப்பொழுது நம் கைவசப்பட்டுள்ள பல மாகாணங்களையும், இராச்சியங்களையும் கைப்பற்றுவதை சாதித்தேன். அந் நிலையில், நம்முடைய படையெடுப்புகளைக் கைவிடவும் அவற்றிலிருந்து ஓடிவிடவும் இப்பொழுது என்ன இன்னல்கள் உள்ளன? எந்தச் சக்தி நம்மை அவ்விதம் செய்யக் கட்டாயப்படுத்துகிறது? என்னை நண்பன் என்று அழைக்கிற ஒவ்வொருவரும் இப்பொழுதிலிருந்து அத்தகைய திட்டத்தைப் போடவேண்டாம். ஆனால், உங்களில் எவருக்காவது இங்கே தங்கமுடியவில்லை என்றால் அவர்கள் இவ்விடத்தைவிட்டுப் போகட்டும்' என்று பாபர் எழுதுகிறார். அந்த வேண்டுகோள் வெற்றிபெற்றது. எல்லா அதிகாரிகளும் ஆட்களும் தங்க முடிவு செய்தனர். ஒருசிலரே ஒத்துக்கொள்ளவில்லை ; அவர்கள் காபூலுக்குத் திரும்பினர்.

மத்திய இந்துஸ்தானத்தைக் கைப்பற்றுதல்

பாபர் நாட்டிலேயே தங்கி அதன்மீது ஆட்சியை நடத்த முடிவு செய்துவிட்டார் என்பது தெளிவானதும் வேலியின்மேல் உட்கார்ந்திருந்த பல ஆப்கானிய தலைவர்களும் ஆப்கானியரல்லாத தலைவர்களும் அவருக்கு அடிபணிந்தனர். கோயிலைச் சார்ந்த ஷேக் குரன் (Shaikh Guren of Koil), அலிகார் (Aligarh), ஷேக் பையஸித் (Shaik Bayazid), ஃபிரோஸ் கான் (Firoz Khan), மகமூத் கான் லோஹானி (Mahmud Khan Lohani) ஆகிய

வர்களும் இன்னும் பல முக்கியப் பிரமுகர்களும் படையெடுப்பாளருக்கு அடிபணிந்து தம்முடைய படைகளுடன் அவரோடு சேர்ந்துகொண்டனர். அவர்களெல்லாம் அவர்களுடைய இராச்சியங்களில் வலியுறுத்தப்பெற்றனர். கீழ்ப்படியாது இன்னும் எதிர்த்துக்கொண்டிருந்தவர்களைப் பொறுத்தவரை அவர்களைக் கீழ்ப்படியும்படி செய்வதற்கான நடவடிக்கைகளை பாபர் உடனடியாக எடுத்தார். கைப்பற்றப்படாத நகரங்களையும், அரண்களையும், மாவட்டங்களையும் தமது முக்கிய அதிகாரிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்து அவற்றைக் கைப்பற்றுவதற்காக அவர்களை அனுப்பிவைத்தும் மிகச் சாதுர்யமான முறையை பாபர் கையாண்டார். இக் கொள்கை மிக மும்முரமாக வெற்றியளித்தது. ஹுமாயூன் சாம்பாலைக் கைப்பற்றினர்; முகம்மது அலி ஜங்-ஜங் ராப்ரியைக் கைப்பற்றினர்; மாதி காஜா எடாவாவையும், சுல்தான் முகம்மது கானுஜையும், ஜுனைத் பர்லாஸ் (Junaid Barlas) டோல்பூரையும் கைப்பற்றினர்கள். இன்னும் இரண்டு பெரிய கூட்டங்களை அழிக்கவேண்டியிருந்தது—அவாத்தையும் (Awadh) பீஹாரையும் சார்ந்த ஆப்கானியத் தலைவர்களும் இராசபுதனத்தைச் சார்ந்த ராணா சங்காவின் தலைமையின்கீழ் இருந்த இராசபுத்திரர்களுமாவர். ஆப்கானியர்கள் எளிதில் வெல்ல முடியாத பகைவர்கள், அதனால் அவர்களை உடனே தாக்கவேண்டும் என்ற கருத்துப் பொதுவாக பாபரின் ஆட்களிடம் குடிகொண்டிருந்தது. ராணா சங்கா வெகு தூரத்திலிருந்தார்; ஆக்ராவை நோக்கி முன்னேற அவருக்குச் சக்தி கிடையாது. ஆகையால், நசீர்கான் லோஹானி, மாரூஃப் ஃபர்முலி ஆகியவர்களைத் தாக்க ஹுமாயூன் அனுப்பப்பட்டார். அவ்விருவரும் கனோஜைக் கைப்பற்றி டெல்லியின் அருகில் நிலைத்து நின்றனர். ஜம்ஜமோவுக்கு இருபது மைல் தூரத்துக்குள்ளாக கான்பூருக்கு (Kanpur) அருகில் அவ்விரு ஆப்கானியத் தலைவர்களும் போர் செய்யாமலேயே பின் வாங்கினர். கனோஜ், இவ்விதமாக, முகலாயர்களின் கையில் சிக்கியது. ஹுமாயூன் அவர்களைப் பின் தொடர்ந்து ஜான்புரியையும் காஸிபூரையும் (Ghazipur) கைப்பற்றினர். ஏறக்குறைய அச் சமயத்தில்தான் ஒரு யுக்தியினல் குவாலியரும் பிடிக்கப்பட்டது.

கான்வாப் போர் (1527, மார்ச்சு மாதம் 17ஆம் நாள்)

காரணங்கள்

பாபர் காபூலில் இருக்கும்பொழுது ராணா சங்கா அவருடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார் என்று கருதப்படுகிறது. அதன்படி

ராணு இப்ராஹிமை ஆக்ராவிலிருந்து தாக்கும்பொழுது பாபர் அவரை வடபுறத்திலிருந்து தாக்கவேண்டும். டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றியபின் படையெடுப்பாளர், ராணு நம்பிக்கைத் துரோகம் செய்தார் என்று அவர்மீது குற்றம் சாட்டினுர். அதற்கு மாருக, பாபர் கல்பி, டோல்பூர், பெயாணு ஆகியவற்றைக் கைப்பற்றிஞர் என்றும், ஒப்பந்தத்தின்படி அவை தமக்குச் சேர வேண்டும் என்றும் பாபரின்மீது ராணு குற்றம் சாட்டினுர். ஆனுல், இதுதான் அவர்களுக்கிடையில் ஏற்பட்ட பிளவுக்குக் காரணம் என்று சொல்லிவிடமுடியாது. பாபர் தமது மூதாதையரான தைமூரும் மற்றப் பல படையெடுப்பாளர்களும் செய்ததுபோல நாட்டைக் கொள்ளையிட்ட பிறகு பின்வாங்கிக்கொள்வார் என்று ராணு சங்கா நினைத்தார். ஆனுல், அதில் அவர் ஏமாற்றமுற நேர்ந்தது. முகலாயப் படையெடுப்பாளர் நாட்டைக் கைப்பற்றி அங்கேயே தங்கிவிட முடிவு செய்ததை உணர்ந்த ராணு விழித்துக் கொண்டார். நமது இடைக்கால வரலாற்றில் முதன்முதலாக ஓர் இராசபுத்திர அரசர் இராசபுதனத்தின் பல அரசர்களைக்கொண்ட கூட்டுறவு ஒன்றை வட இந்தியாவை ஆப்கானியர்களிடமிருந்து மீட்பதற்கான தெளிவான எண்ணத்துடன் ஏற்படுத்துவதில் வெற்றிகொண்டார். அவர் முதலில் இப்ராஹிமுடன் சேர்ந்து கொண்டு படையெடுப்பாளரை நாட்டிலிருந்து துரத்தி பிறகு சீர்கேடுற்ற லோடி அரசனுடன் தமது பகைமையைத் தீர்த்துக்கொண்டிருக்கவேண்டும். அவ்விதம் அவர் செய்யாதது வருந்தத்தக்கதாகும். அப்பொழுது இருந்த நிலையில், பாபர் என்னும் தோற்றத்தில் புதிய துருக்கிய படையெடுப்பாளர் ஒருவர் டெல்லியின்மீது நிலத்துக்குரிய ஆட்சியை மீண்டும் நிலைநாட்டும் வாய்ப்பை அவரிடமிருந்து பறித்துக்கொண்டுவிட்டார் என்பதை ராணு வியப்புடன் உணர்ந்தார். சங்கா பெரும் புகழ்பெற்ற போர்வீரராவார். அவரது வீரச் செயல்கள் யாவருக்கும் தெரிந்திருந்தன; நாடெங்கிலும் அவை புகழ்பெற்றன. படையெடுப்பாளரை விரட்டியடித்து நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து காப்பாற்ற அவருடைய திறமையும், வலிமையும், பேரவாவும், நாட்டுப் பற்றும் அவரை வற்புறுத்தின. ஏழு இராசபுதன அரசர்களையும், 104 குறுநில மன்னர்களையும் உட்கொண்ட ஓர் ஆற்றல்மிக்க படையை அவர் திரட்டிக்கொண்டு பெயாணவை நோக்கிச் சென்று அதனின் கவர்னரான மாதி காஜா (Mahdi Khwaja) என்பவரை முறியடித்து வெல்ல முடியாததாக இருந்த அந் நகரில் அடைக்கலம் புகுமாறு அவரைக் கட்டாயப்படுத்திஞர். ரெய்சினைச் சார்ந்த சிலாஹதி (Silahadi of Raisin), ஹசன் கான் மீவாடி (Hasan Khan Mewati), சுல்தான் இப்ரஹிமின் சகோதரரான மகமூத் லோடி (Mahmud Lodi) ஆகியவர்கள் உட்பட ஆற்றல்வாய்ந்த பல தலைவர்கள்

இப்பொழுது ராணாவுடன் சேர்ந்துகொண்டனர். ராணா மிக அறிவுக் கூர்மையுடன் மகமூத் லோடியை டெல்லியின் அரசராக ஏற்றுக்கொண்டார். ராணாவுக்கும் ஹசன் மீவாட்டிற்குமிடையில் ஏற்பட்ட கூட்டுறவு 'ஒரு புனிதமற்ற கூட்டுறவு' என்றும் 'பாபரை இந்தியாவிலிருந்து விரட்டியடிப்பதற்கான பொது விருப்பம் அக் கூட்டுறவை இணைக்கும் தளை' என்றும் ரஷ்புருக் வில்லியம்ஸ் கூறுவது உண்மைக்கு மாறானதாகும். அந்நியப் படையெடுப்பாளருக்கு எதிராக ஒன்றுகூடுவது உலக இயல்பேயாகும். ஏனெனில், மேலே குறிப்பிடப்பட்ட கற்றறிந்த வரலாற்று ஆசிரியர் மாறுபட்டிருப்பினும், எங்கும் அரசியல் கூட்டுறவுகள் கருத்து ஒற்றுமையின் அடிப்படையில்தான் அமைகின்றன. சிறிது காலத்துக்கு முன்புதான் இப்ராஹிம் லோடியின் தாயினால் விஷமிடப் படுவதிலிருந்து தப்பிய பாபர் 'பெயானாவின்' உதவிக்காக முகம்மது சுல்தான் மீர்ஸாவை பாரமற்ற குதிரைப் படை ஒன்றுடன் அனுப்பிவைத்தார். இராசபுத்திரர்களுடன் இறுதியாகப் போர் புரிவதற்கு பாபரும் தம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார். ஆனாலும் அவர் அனுப்பிவைத்த படை பெயானாவிலிருந்த படையுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. அது பயந்து மிரண்டது; இராசபுத்திர வீரர்களின் வீரத்தைப்பற்றியும் சாதனைகளைப்பற்றியுமான நிகழ்ச்சிகளை அது பாபருக்கு எடுத்துக்கூறியது. அச் சமயத்துக்குள் பாபர் சிக்ரியை (Sikri) அடைந்துவிட்டார்; தமது பகைவனின் நிலையை முன்னதாக அறிந்துகொள்ள 1,500 படைவீரர்களை அனுப்பினார். அப் படை மிகக் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டது. அப் படைவீரர்களுள் பலர் கொல்லப்பட்டனர்; தமது கொடியையும் இழந்தனர். இப்பொழுது ஒரு போர் தவிர்க்க முடியாததாக இருந்தது. ஏற்கெனவே ராணா கான்வா (Khanua) என்ற இடத்திற்கு அருகிலுள்ள குன்றை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தார். கான்வா தற்போதைய பாரத்பூர் (Bharatpur) பகுதியில் ஒரு குக்கிராமமாகும்; ஆக்ராவுக்கு 37 மைல் மேற்கிலும் சிக்ரியிலிருந்து பத்து மைல் தூரத்திலும் உள்ளது. பாபரின் நிலை மிக அபாயமானதாக இருந்தது. அவருடைய படைவீரர்கள் இராசபுத்திர வீரர்களின் ஆற்றலையும் வீரத்தையும் கண்டு அஞ்சினர். காபூலிலிருந்து வந்த சோதிடர் ஒருவர் பாபர் தோல்வியுறுவார் என்று முன்னறிவித்தார். இது முகலாயப் படைகளை மேலும் பீதிக்குட்படுத்தியது. தமது அதிகாரிகளுக்கும் படைவீரர்களுக்கும் முன்னிலையில் மது அருந்துவதைக் கைவிட்டுவிடுவதாக எல்லாரும் வியக்கும்படி அறிவித்தும், தம் கையிலிருந்த மதுவைக் கீழே கொட்டியும், தமது விலை உயர்ந்த பாத்திரங்களை உடைத்தும் பாபர் அவருடைய போர்வீரர்களுக்கு உற்சாகமூட்டவேண்டியிருந்தது. எல்லா

முஸ்லீம்கள்மீதும் விதித்திருந்த அஞ்சல் வரியை (Stamp duty) (தம்கா-tambha) அவர் தவிர்த்தார். அப்பொழுதும் அவருடைய ஆட்களின் உற்சாகம் அவர் விரும்பிய அளவுக்கு உயரவில்லை. அதனால் அவர் தமது படைவீரர்களைக் கூட்டி அவர்களிடம் பின்வருமாறு நேரடியாக வேண்டிக்கொண்டார். 'என்னுடைய பிரபுக்களே! போர்த் தோழர்களே! நமக்கும், நாம் பிறந்த நாட்டுக்கும், நமக்குப் பரிச்சயமான நகருக்குமிடையில் சில மாதங்களில் முடிக்கக்கூடிய பயணம் உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா? நமக்குத் தோல்வி ஏற்பட்டால் (ஆண்டவன் நம்மை அதிலிருந்து காப்பாளுகை—ஆண்டவன் அதைத் தடுக்க வேண்டும்) நாம் எங்கிருக்கிறோம்? நமது பிறப்பிடம் எங்கே? எங்கே நம் நகரம்? நாம் அன்னியர்களுடனும் வெளிநாட்டாருடனும் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனாலும், இவ்வுலகத்திற்கு வருபவர் ஒவ்வொருவரும் அழியவேண்டியிருக்கிறது என்பதை நினைவுபடுத்திக்கொள்ளட்டும். எவர் ஒருவர் வாழ்க்கையின் விருந்தை அருந்துகிறாரோ அவர் கட்டாயமாக மரணக் கோப்பையை காலிசெய்ய வேண்டியிருக்கும். ஆகையினால் இகழ்ச்சியுறுவதைக் காட்டிலும் புகழுடன் மடிதல் சிறந்ததாகும். புகழுடன் நான் மடிந்தால் அதுவே நல்லதாகும். என் மறைவுக்குப் பின்னும் என் புகழ் இருக்கட்டும்; ஏனெனில், நான் மடிவது உறுதி. எல்லாம் வல்ல இறைவன் இந்த நல்வினையை நமக்குத் தந்துள்ளான்; இந்த உன்னதமான விதியை நம்மெதிரில் வைத்திருக்கிறான்; அதாவது, நாம் தோற்கடிக்கப்பட்டால் தியாகிகளாக மரணமடைகிறோம்; ஆனால், நாம் வெற்றி கண்டால், அவனது குறிக்கோளுக்கு வெற்றி கொணர்ந்தவர்களாவோம். ஆகையினால், இதுபோன்ற புகழ்மிக்க மரணத்திலிருந்து ஓட மாட்டோம் என்றும், நம்முடைய ஆவி நம்முடைய உடலைவிட்டுப் பிரியும்வரை இப் போரின் பேராபத்துகளிலிருந்து நமது உடலை பிரித்துக்கொள்ளமாட்டோம் என்றும் இறைவனுக்கு உறுதி கூறலாம்.'

வெற்றிக்குப்பின் எவர் வீடு திரும்ப விரும்புகிறார்களோ அவர்களை அவ்விதமே செய்வதற்கு அனுமதிப்பதாக அவர் வாக்குறுதி தந்தார். ஏற்கெனவே அவர் ராணாவின்மீது புனிதப் போர் (Jihad) தொடுத்துள்ளார்; தமது மதத்தின் புகழுக்காக அவர் போரிடுவதாகவும் அவருடைய ஆட்களுக்கு நினைப்பூட்டினார். இவ் வேண்டுகோளுக்குக் கிடைத்த விடை உடனடியானதாகவும் உற்சாகமுள்ளதாகவும் இருந்தது. கடைசிவரை போர் செய்வதாகவும் பாபரைக் கைவிடப்போவதில்லை என்றும் ஒவ்வொருவரும் குரானின்மீதும் (Quran) தமது மனைவியின்மீதும் சத்தியம்

செய்தனர். இவ்விதமாக அவருடைய படைவீரர்களின் உற்சாகமும் ஆர்வமும் புத்துயிர் பெற்றன. முன்னமேயே அனுப்பப்பட்டிருந்த சில வீரர்கள் ராணாவின் படையினருள் அங்குமிங்குமாகத் திரிந்துகொண்டிருந்த சிலரைத் தாக்கி, அவர்களுடைய தலையைக் கொண்டு வந்தனர். அச் செயல் முகலாயர்களின் நம்பிக்கையை மீண்டும் உயிர்ப்பித்தது.

அதற்குள் பாபர் கான்வாவை அடைந்துவிட்டார். ராணா அங்கே ஏற்கெனவே வந்திருந்தார். இப்பொழுது இரு படைகளும் நேருக்குநேர் வந்தன. பாபரின் கூற்றின்படி இராசபுதனப் படை இரண்டு லட்சம் வீரர்களைக் கொண்டிருந்தது; ஆனாலும் அதில் உண்மையாகப் போர் புரிபவர்களின் எண்ணிக்கை எண்பதனாயிரத்துக்கு மேற்பட்டிருக்காது. ரஷ்புருக் வில்லியம்ஸின் கணக்குப்படி பாபருடைய உண்மையாகப் போரிடுபவர்களின் எண்ணிக்கை எட்டாயிரத்திலிருந்து பத்தாயிரம் வரை இருந்தது. இது உண்மையில் மிகக் குறைந்த மதிப்பீடாகும். பாபர் நாமாவின் (Babur nama) கணக்குப்படி பானிப்பட்டுப் போருக்குப் பிறகு பல்லாயிரக்கணக்கான ஆப்கானியர்களும் இதர போர்வீரர்களும் பாபருடன் சேர்ந்துகொண்டு அவரது படையின் எண்ணிக்கையை அதிகரித்தனர். அதனின் எண்ணிக்கை நாற்பதாயிரத்துக்குக் குறையாமல் இருந்தது. இராசபுதனத் தலைவரின் உண்மைப் போர்வீரர்களின் எண்ணிக்கை அவருடைய பகைவரது படையின் எண்ணிக்கையைவிட ஒன்றுக்கு ஏழு அல்லது எட்டாக இருந்தது என்று கற்பனைக் காரணங்களின் அடிப்படையில் ரஷ்புருக் வில்லியம்ஸ் முடிவு செய்கிறார். உண்மையில் அப் படைகளின் விகிதம் அநேகமாக இரண்டுக்கு ஒன்றாக இருந்தது.

பாபர் தமது படையைப் பானிப்பட்டில் அமைத்தது போலவே இங்கும் அமைத்திருந்தார். நீள வரிசையில் அமைக்கப்பட்டதும் இரும்புச் சங்கிலிகளால் கட்டுண்டதுமான ஓர் ஆயிரம் பீரங்கி வண்டிகள் முன்னால் நிறுத்தப்பட்டிருந்தன. பானிப்பட்டில் கட்டியிருந்ததுபோல அவ் வண்டிகள் விலங்குத் தோலினால் செய்யப்படவில்லை. இணைக்கப்பட்ட ஒவ்வோர் இரண்டு வண்டிகளுக்குமிடையில் சுமார் அறுபது அல்லது எழுபது கஜ அகலமான இடைவெளி விடப்பட்டிருந்தது. அதன் வழியாக நூறு குதிரை வீரர்கள் பாய்ந்தோட முடிந்தது. வண்டிகளின் வரிசைக்குப்பின் பீரங்கிப் படை அமைக்கப்பட்டிருந்தது. நைஸாமுத்தின் அலி கலீஃபா (Nizam ud-din Ali Khalifa) என்பவர் அதற்குத் தலைமை தாங்கினார். உஸ்தாத் அலி கூலி (Ustad Ali Quli) என்பவர் அவரது சிறிய பீரங்கிகளுடனும் வண்டிகளில் ஏற்றப்பட்டிருந்த பீரங்கி

களுடனும் இதய பாகத்துக்கு முன்னல் நிறுத்தி வைக்கப் பட்டார். முஸ்தஃபா கான் என்பவர் அவரது துப்பாக்கிப் படை யினருடனும் சுழல்மூட்டு பீரங்கிகளுடனும் வலப்புறப் படைப்புடை அணியின் மத்திய பகுதிக்கு முன்னல் நிறுத்தி வைக்கப்பட்டார். மார்பு உயர காப்புத் திரைகளுக்குப் பதிலாக பாபர் சுற்றக்கூடிய பாதுகாப்புக் குடைகள் அல்லது போர்வைகளைக்கொண்ட சக்கரம் பூட்டிய முக்காலிகளை அமைத்தார். அவை பீரங்கிகளைத் தாங்கி யதுமல்லாமல் பீரங்கி வீரர்களுக்குப் பாதுகாப்பும் அளித்தன. பீரங்கிப் படைக்குப் பின் வாகனப் படைவீரர்கள் வரிசையாக அமைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மத்திய பகுதியாகவும் இடப் புடை அணியாகவும் வலப்புடை அணியாகவும் பிரிக்கப்பட் டிருந்தனர். முக்கிய பகுதியின் வலக் கோடியிலும் இடக் கோடி யிலும் துல்குமா அல்லது படையின் புடை அணிகள் அமைக்கப் பட்டிருந்தன. பாபர் மத்தியில் நின்றுகொண்டார். பாபரது வலப் புறத்தில் சின் தைமூரும் (Chin Timur) குஸ்ராவ் குகால்தாஷும் (Khusrav Kukaltash) நிற்க, ஹுமாயூன் திலாவர்கானுடனும் இதர இந்தியப் பிரபுக்களுடனும் வலப்புறத்தில் நிறுத்திவைக்கப்பட் டிருந்தார். மாதிகாஜா இடப் படைப்புடை அணிக்குத் தலைமை தாங்கினர். வலக் கோடியிலும் இடக் கோடியிலும் படைப்புடை அணிகள் இருந்தன. ராணுவின் படை பரம்பரையாக வந்த நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது—முன்னணி, மத்தியத் தொகுதி, இடதுகை அணி, வலதுகை அணி. உஸ்தாத் அலியின் சிறிய பீரங்கிகள் சுட 1527, மார்ச்சு மாதம் 17ஆம் நாள் காலை சுமார் ஒன்பது மணி அளவில் போர் துவங்கியது. அப் பீரங்கிகளிலிருந்து ஒரு பெரிய கல் வெளிவந்தது. இதனல் உண்டான சப்தம் இராச புத்திரர்களை அச்சுறுத்தியது. அதற்கு எதிராக யானைகளும் நிற்க முடியவில்லை. இதனலும், சிலாதி தம்மைவிட்டுப் பிரிந்துசென்று பகைவருடன் சேர்ந்துகொண்டதனலும் சங்கா தமது முந்திய திட்டத்தை மாற்றி அமைத்துக்கொண்டு வெல்லமுடியாத பீரங்கிப் படையுடன் அமைந்திருந்த பாபரது மத்திய பகுதி அணியிலிருந்து ஒதுங்கிப் போகவேண்டி நேரிட்டது. அதுபோன்ற பீரங்கிப் படை யினை ராணுவின் ஆட்கள் அதுவரை கண்டதும் இல்லை; அதனல் தாக்குண்டதுமில்லை. வலப்புறத்திலிருந்து முகலாயர்களை விரட்டி யோட்ட பாபரது வலப் படைப் புடை அணியைத் (துல்குமா) தாக்கும்படி ராணு தமது இடப் படைப் புடை அணிக்கு உத்தர விட்டுத் தாக்குதலைத் தொடங்கினர். வலது துல்குமா வலது அணியும் மிகக் கடுமையாகத் தாக்குண்டன. அதிர்ச்சியினல் அவர்கள் விட்டுக்கொடுப்பதற்குத் தயாராகிவிட்டனர். அச் சமயத்தில் பாபர் அவர்களுடைய உதவிக்காக சின் தைமூரை அனுப்பிவைத்தார். சின் தைமூர் இராசபுதன இடப் படை

வெளிப்படையாகக் கூறும் அளவுக்கு இராசபுத்திரர்களின் வீரம் அவருடைய மனத்தைக் கவர்ந்தது. பாபர் தமது வெற்றிக்குப் பின்பும் இராசபுதனத்தின்மீது படையெடுக்கவும் இராசபுத்திரர்களை மேலும் சினமூட்டவும் பின்வாங்கினர் என்பது குறிப்பிடத்தக்க தாகும். அவர் சந்தேரி (Chanderi) அரணைக் கைப்பற்றியவுடன் தம்மை நிறுத்திக்கொண்டார். இப் போரின் அரசியலுக்குரிய விளைவுகளும் மிக முக்கியமானவையாக இருந்தன. பகைவனை நாட்டிலிருந்து விரட்டியடிக்க இராசபுத்திரர்கள் கொண்டிருந்த பேரவா முற்றிலும் சின்னுபின்னமாக்கப்பட்டது. இனிமேற் பட்டு வட இந்தியாவில் இந்து ஆட்சியை மீண்டும் நிலை நாட்ட இராசபுத்திரர்கள் ஒன்றுகச் சேருவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. பாபரைப் பொறுத்தவரை, அவர் திரிந்துகொண் டிருந்த காலம் முடிவடைந்தது. அவருடைய பாதுகாப்புக்கோ, அல்லது இந்தியாவில் புதிதாகத் தோற்றுவித்த இராச்சியத்தின் பாதுகாப்புக்கோ அவர் இனிமேல் போரிடவேண்டியதில்லை. அவர் போரில் ஈடுபட்டிருப்பாராயின், அவரது இராச்சியத்தை விஸ்தரிப் பதற்கோ அல்லது அதற்குள் தோன்றிய கிளர்ச்சிகளை அடக்கு வதற்கோதான் அவர் அங்ஙனம் செய்யவேண்டியிருந்தது. 'இதுவரை இந்துஸ்தானத்தைக் கைப்பற்றுதல் பாபரின் துணிகர வாழ்க்கையில் ஒரு கிளைக் கதை என்றுதான் கருதி இருக்கக்கூடும்; ஆனல், இனிமேல் அது அவரது வாழ்க்கையின் முடிவுவரை அவரது செய்கைகளின் அடிப்படைக் கருத்தாக அமைந்து விட்டது......அவருடைய வாழ்க்கையின் புதிய கட்டத்தில் அப் போர் ஒரு தனிச் சிறப்பைக் காட்டுகிறது. ஒரு பிரச்சினைமீது, இன்னலுக்குட்பட்ட போர்க்களத்தில் பிற்காலத்தில் அவரது உயிரையும் அரியணையையும் பணயம் வைக்கவேண்டியதில்லை...... அப் போருக்குப்பின் அவரது அதிகார மைய ஈர்ப்பு காபூலிலிருந்து இந்துஸ்தானத்திற்கு மாறியது போன்ற முக்கியப் பிரச்சினைகளை அவர் புரிந்துகொண்டார். எவ்வகையிலும் அது சிறப்புமிக்க தாகும்' என்று ரஷ்புரூக் வில்லியம்ஸ் குறிப்பிடுகிறர்.

கான்வாவுக்குப் பின் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் : கக்ராப் போர் (The Battle of Ghaghara), 1529, மே 6ஆம் நாள்

இம் மாபெரும் வெற்றிக்குப்பிறகு பாபர் மீவாட்டின்மீது படை யெடுத்து அதனின் தலைநகரான ஆல்வாருக்குள் (Alwar) 1527, ஏப்ரல் 7ஆம் நாளில் நுழைந்தார். கான்வாப் போரின் தறுவாயில் அவர்மீது கொண்டிருந்த பற்றுதலைப் பின்வாங்கிக்கொண்ட குறுநில மன்னர்களையும் அடியாட்களையும் கீழ்ப்படியவைக்க

தமது படைகளைப் பல திசைகளிலும் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை பாபர் எடுத்தார். சந்த்வாரும் (Chandwar) ராப்ரியும் (Rapri) மீட்கப்பட்டன. எடாவாவும் (Etawa) மீண்டும் கைப்பற்றப்பட்டது. பண்டேல்கண்ட் (Bundelkhand) மாளவம் (Malwa) ஆகியவற்றின் எல்லையிலும் போபாலுக்கு (Bhopal) அருகிலும் உள்ள சந்தேரியின் மீது பாபரே நேரில் படையெடுப்பு நடத்தினர். அது புகழ்மிக்க இராசபுதனத் தலைவரான மெதினிராயின் கைவசப்பட்டிருந்தது. அவர் மாளவத்தின் அரசர்களை ஆக்கும் நிலையை அடைந்திருந்தார். முகலாயர்கள் அவரை முற்றுகையிட்டனர். நீடித்து எதிர்க்க முடியாது என்று உணர்ந்த படைவீரர்கள் தமது பெண்டிரைக் கொன்று, உருவின வாளுடன் எதிரியைத் தாக்கி அநேகமாக யாவரும் மடிந்தனர். பாபர் 1528, ஜனவரி 29ஆம் நாள் அவ்விடத்தைக் கைப்பற்றினர். இப்பொழுது அவருடைய நிலை மிக உறுதிவாய்ந்ததாக இருந்தது. உடல்நலமற்று இருந்த தமது அலுவலர்களைக் காபூலுக்குத் திரும்பிப்போக பர்பர் அனுமதியளித்தார். பதக்ஷானின் பொறுப்பை ஏற்க ஹுமாயூன் பதக்ஷானுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

அடுத்து அவர் பிப்பானுக்கு (Bibban) எதிராக முன்னேறினர். பிப்பான் என்பவர் முகலாயர்களை அவுத்திலிருந்து (Audh) விரட்டியடித்திருந்தார்; லக்னோவையும் (Lucknow) கைப்பற்றி இருந்தார். கங்காவைக் கடந்து சென்று பாபர் பிப்பானைத் தோற்கடித்து அவரை வங்காளத்துக்கு ஓட்டினர். இதற்குச் சிறிது காலத்திற்குமுன், ராணு சங்காவின் தோல்விக்குப்பின் கான்வாவிலிருந்து தப்பி ஓடிய மகமூத் லோடி தம்மை பீஹாரில் நிலைநாட்டிக்கொண்டு ஒரு லட்சம் போர்வீரர்களைக் கொண்டிருந்த ஒரு பெரும் படையைத் திரட்டினர். இப் படைக்குத் தலைமை தாங்கி அவர் பனரஸ் (Banaras) மீது படையெடுத்து அதற்கும் அப்பால் சூனர் (Chunar) வரையிலும் முன்னேறினர். அவர் சூனர் அரணை முற்றுகையிட்டார். ஆனாலும், அவருக்கு எதிராக பாபர் சென்றபொழுது ஆப்கானியர்கள் குழப்பத்துக்குள்ளாகி முற்றுகையைக் கைவிட்டுப் பின்வாங்கினர். பாபர் அவர்களைப் பின்தொடர்ந்து வங்காளத்துக்குள் விரட்டியடித்தார்.

ஆப்கானியர்களின் பேரச்சுறுத்தலுக்கு அறவே முற்றுப்புள்ளியிடவும் அவர்களைப் போருக்கு இழுக்கவும் பாபர் முடிவுசெய்தார். ஆனாலும், வங்காளத்தைச் சார்ந்த நுஸ்ரத் ஷா (Nusrat Shah) என்பவருடன் அவர் அமைதியுடன் இருந்தார். மகமூத் லோடியின் தலைமையின்கீழ் ஆப்கானியத் தலைவர்கள் நுஸ்ரத் ஷாவிடம்தான் தஞ்சம் புகுந்திருந்தனர். அதனால் பாபர்

நுஸ்ரத் ஷாவுடன் பேச்சுவார்த்தைகள் தொடங்கினுர். ஆனுல், அவை பயனற்றவையாயிருந்தன. ஆகையினுல், போவதற்கான வழி விடவேண்டுமென்றும் அவ்விதம் செய்யாவிடில் அதனுடைய விளைவுகளின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்குமென்றும் பாபர் நுஸ்ரத்துக்கு இறுதி எச்சரிக்கை விடுத்தார். கங்கையும் அதனுடைய கிளைநதியான காக்ராவும் (Ghagara) சேருமிடத்தில் 1529, மே 6ஆம் நாள் அவர் ஆப்கானியர்களுடன் போர் புரிந்தார். மிகக் கடுமையாக நடந்த போரில் படகுகளேயும் பீரங்கிகளையும் இருதரத்தாரும் பயன்படுத்தினர். ஆப்கானியர்கள் தோற்கடிக்கப்பட்டனர். பாபருக்கும் நுஸ்ரத் ஷாவுக்குமிடையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. ஒவ்வொருவரும் மற்றவருடைய இறைமையை அங்கீகரிக்க வேண்டும். பாபரின் பகைவர்களுக்கு அடைக்கலம் தருதல் கூடாது என்பதை நுஸ்ரத் ஷா ஏற்றுக் கொண்டார். இந்தியாவில் இது பாபரின் இறுதிப் போராகும். இப் போரின் விளைவாக பாபர் இந்துஸ்தானத்தின் அரசரானுர். ஆப்கானியத் தலைவர்களும் தம்முடைய படைகளுடன் அவரோடு சேர்ந்துகொண்டனர். சிந்துநதிதொட்டு பீஹார் வரையிலும் இமயமலைதொட்டு குவாலியர், சந்தேரி வரையிலும் நாடு இப்பொழுது அவர் வசப்பட்டிருந்தது. முகலாயர்கள் முல்தானைக் கைப்பற்றிக்கொண்டனர் ; ஆகையால், நாட்டின் வடமேற்கு மூலையில் சிந்துமட்டும் முகலாயர்களின் ஆட்சிக்கப்பால் இருந்தது.

இறுதிநாட்களும் மரணமும்

இறைமையைப்பற்றி அவரது கருத்து

வட இந்தியாவை முற்றிலும் கைப்பற்றிவிட்டதனுல் பாபருக்கு இராணுவப் பிரச்சினை எதுவும் எதிர்நோக்க வேண்டியதில்லை. ஆனுல், அவர் ஓர் அரச தத்துவத்தைத் தோற்றுவிக்கவேண்டியிருந்தது. அரச பதவியைப்பற்றி ஆப்கானியர்கள் கொண்டிருந்த தத்துவத்தின்படி உயர்குடி மக்களுக்குள் தலைவராயிருப்பவரே அரசராவார். அத் தத்துவம் பொருத்தமற்றதாயிருந்ததோடு லோடிகளின் காலத்தில் நாடு அனுபவித்த இன்னல்களுக்கு இடமளிப்பதாகவும் இருந்தது. இப்ராஹிமின் அரசாங்கம் தெய்வீக உரிமை கொண்டாடும் மன்னராட்சியாக இல்லாமல் 'மனித நிறுவனமாக' இருந்ததனுல் தனது ஆதிக்கத்தை வலிந்து சுமத்த முடியவில்லை. சுல்தான் என்னும் பட்டம் பாபருக்கு ஏற்கத்தக்கதாயில்லை. அவர் ஏற்கெனவே மீர்ஸா (Mirza) என்ற பட்டத்தைக் களைந்தெறிந்துவிட்டார். சுல்தானியருடைய காலத்தில் அரசர்கள் அனுபவித்த அதிகாரத்தைவிட தமது அதிகாரம் மேம்பட்டது

என்பதை வற்புறுத்த அவர் பாதுஷா (Badusha) அல்லது பேரரசர் (Emperor) என்ற பட்டப் பெயரைப் புனைந்துகொண்டார். அரசன் தனது அதிகாரத்தை இறைவனிடமிருந்து பெற்ருன் என்று அவர் நம்பினுர். சுருங்கக்கூறின், பாபர் தெய்வீக உரிமை கொண்டாடும் மன்னராட்சியை ஆதரித்தார். அத் தத்துவம் அக் காலத்துக்குரிய தேவையை நிறைவேற்றியது. அக் கருத்து இறைமையைப்பற்றி இந்து கருத்தை யொத்திருந்தது. இந்து கருத்தின்படி அரசர் மனிதனைவிட உயர்ந்தவராவார்.

இந் நாட்டைத் தமது சொந்த நாடாக ஆக்கிக்கொள்ள பாபர் முடிவு செய்துவிட்டார். ஆகையினுல், பானிப்பட்டில் வெற்றிபெற்ற வுடன், அவர் இடை ஓய்வுக்காலங்களில் ஆக்ராவில் தமக்கென்று ஓர் அரண்மனையைக் கட்டி, மற்ற இடங்களிலும் கட்டடங்களையும் குறிப்பாகக் குளிக்கும் அறைகளையும் கட்டினுர்; இந்துஸ்தானத்தின் முன்று சாபக்கேடுகளான வெயில், தூசு, காற்று ஆகியவற்றிலிருந்து காப்பாற்றிக்கொள்ள கவர்ச்சிமிக்கதும், செவ்வொழுங்கானதுமான பூங்காக்களையும் அமைத்தார். பேரரசில் அமைதியை மீண்டும் நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில் அவர் தமது ஓய்வுக்காலங்களைச் செலவிட்டார். இப்ரஹிமின் ஆட்சியின் இறுதி நாட்களில் பேரரசு குழப்பத்தில் மூழ்கியிருந்தது. ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஆற்றல்வாய்ந்த கவர்னர்களை நியமித்து அப் பகுதிகளில் அமைதி நிலைநாட்டும் பொறுப்பை அவர்கள் ஏற்கும் படி செய்தல் அவருடைய கொள்கையாக இருந்தது, எவ்வள விற்கு முடியுமோ அவ்வளவிற்கு மக்களை இணக்கப்படுத்த அவர் முயன்ருர். அவர் 1529ஆம் ஆண்டின் கடைசி ஆறு மாத காலம் வரை அந்தப் பணியில் முனைந்திருந்தார்.

உடல்நலக் கேடும் மரணமும்


கான்வாப் போருக்குப்பின் பதக்ஷானின் கவர்னராக அனுப் பப்பட்டிருந்த ஹுமாயூன் அதற்கிடையில் தமது தகப்பனுரின் உத்தரவின்றித் தமது பொறுப்பை விட்டுவிட்டு ஆக்ராவுக்குத் திரும்பினுர்; சாம்பாலிலுள்ள தமது ஜாகீருக்குப் போகுமாறு அவர் உத்தரவிடப்பட்டார்; அங்கே அவர் நோய்வாய்ப்பட்டார். ஆகையினுல் அவர் ஆக்ராவுக்குப் படகில் கொண்டுவரப்பட்டார். எல்லாவித சிகிச்சைகள் செய்தும் அவர் சுகம் பெறவில்லை.

அபு பகா (Abu Baqa) என்ற புகழ்வாய்ந்த முனிவரை பாபர் கலந்தாலோசித்தார். இன்னலைத் தீர்க்க இறைவனை வேண்டும் படியும் தமது உடைமைகளில் மிக விலையுயர்ந்ததைத் தருமமாகக் கொடுக்கும்படியும் அம் முனிவர் ஹுமாயூனுக்கு அறிவுரை கூறினுர். 'ஹுமாயூனின் உடைமைகளில் நான்தான் மிக விலை

யுயர்ந்தவன்......என்னையே நான் தியாகம் செய்துகொள்ளு கிறேன். எல்லாம் படைத்த இறைவன் அதை ஏற்றுக்கொள்வா னுக' என்று பாபர் குறுக்கிட்டுச் சொன்னர். அவ்விதம் கூறி ஹுமாயூனின் படுக்கையை பாபர் மும்முறை சுற்றிவந்து அவ ருடைய நோயைத் தான் மேற்கொண்டுவிட்டதாகக் கூறினர். நாடகம் போன்ற இந்த நிகழ்ச்சிக்குப்பின் பாபர் நோய்வாய்ப் பட்டார் என்றும் ஹுமாயூன் சுகம்பெற ஆரம்பித்தார் என்றும் வரலாற்று நிகழ்ச்சி கோப்பாளர்கள் குறிப்பிடுகிருர்கள். பாபர்தமது மரணப் படுக்கையில் இருக்கும்பொழுது, ஹுமாயூனைத் தமது வாரிசாக நியமித்தார்; தமது மற்ற மகன்களின் பொறுப்பையும் குடும்பப் பொறுப்பையும் அவரிடம் ஒப்படைத்தார். அவர் 1530, டிஸம்பர், 26ஆம் நாள் உயிர்நீத்தார். பேராசிரியர் ஸ்ரீ ராம் ஷர்மா (Professor Sri Ram Sharma) 'கல்கத்தா ரெவ்யூ'வில் (Calcutta Review) எழுதிய கற்றறிந்த கட்டுரையில் பாபர் தமது மகனின் நோயைத் தன்மேல் கொண்டு அவ்வித மாற்றத்தினுல் உயிர்நீத்தார் என்னும் கதையை ஏற்றுக்கொள்ளவில்லை, ஹுமாயூன் நோயி லிருந்து மீட்சிபெற்ற ஆறுமாதங்களுக்குப் பிறகுதான் பாபர் நோய் வாய்ப்பட்டார் என்று அவர் எழுதுகிருர். அவரது முடிவை வெகு எளிதாகப் புறக்கணிக்க முடியாது. வழிபாடுகளாலும் இறையருள் வேண்டுதலாலும் ஒருவருடைய நோயை மற்ருெருவர் மாற்றிக் கொள்ளலாம் என்று கருதுவது மூடநம்பிக்கையாகும். பாபரின் பூதவுடல் ஆக்ராவிலுள்ள ஆராம்பாக் (Arambagh) என்ற தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது, பிறகு அது காபூலுக்குக் கொண்டு போகப்பட்டு அடக்கம் செய்வதற்காகவே பாபரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அழகுவாய்ந்த ஓர் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்துஸ்தானத்தைப்பற்றி பாபர் அளிக்கும் வருணிப்பு

அசாதாரண, கூர்ந்து கவனிக்கும் இயல்பை பாபர் பெற் றிருந்தார். வட இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்துகொண்டு இருக்கும்பொழுது பாபர் நாட்டின் பூகோள அம்சங்கள், தட்ப வெப்ப நிலை, விலங்குகள், தாவரங்கள், குடிமக்களின் சமுதாய, பொருளாதார, நாகரிக நிலைமைகள் ஆகியவற்றையெல்லாம் மிக உன்னிப்பாகக் கவனித்தார். அவர் இவற்றையெல்லாம் தமது சுயசரிதத்தில் வருணித்துள்ளார். அவர் நாட்டின் இதய பாகத் திற்குள் நுழையும்பொழுது அது அவருக்கு அவ்வளவாகக் கவர்ச்சி தரவில்லை. அவர் அதை ஒரு படையெடுப்பாளரின் கண்ணேட் டத்தில் பார்த்தார். அவரது எண்ணப் பதிவுகளை அவரது வாக்கியங்களிலேயே குறிப்பிடலாம்.


INDIA IN 1530 A.D.
Babar
CHINA
TIBET
KASHMIR
BALTISTAN
TRANS-OXIANA
FARGHANA
KHORASAN
HAZARA
AFGHANISTAN
BADAKHSHAN
HINDUKUSH MTS.
BAJAUR
SWAT
PERSIA
ARGHUNS
RAJASTHAN
MEWAT
GUJARAT
MALWA
KHANDESH
BARAR
GONDWANA
ORISSA
BANGAL
KAMARUPA
AHMADNAGAR
BIJAPUR
BIDAR
GOLKUNDA
VIJAYANAGAR EMPIRE
CEYLON
ANDAMAN Is.
ARABIAN SEA
BAY OF BANGAL
Boundary of the Empire
Independent Kingdoms.
Miles
Copyright DHARMA BHANU.

'இந்துஸ்தானம் ஒரு சில கவர்ச்சிகளையே கொண்டிருக்கும் நாடாகும். அதன் குடிமக்கள் பார்ப்பதற்கு அவ்வளவு நல்ல தோற்றமுடையவர்களாக இல்லை; சமுதாய உறவுகளோ, ஒருவரை ஒருவர் சந்தித்து உபசரிப்பது என்பதோ கிடையாது; திறமையும் மோதல் தன்மையும் கிடையாது; பழக்கவழக்க நடை முறைகள் கிடையாது; வேலையிலும் கைத்தொழிலிலும், தோற்றமோ, செவ்வொழுங்கோ, முறையோ, தன்மையோ கிடையாது; அங்கே நல்ல குதிரைகளும், நாய்களும், திராட்சையும், முலாம் பழமும் முதல்ரகப் பழங்களும், பனிக்கட்டியும் குளிர்ந்த நீரும், சிறந்த ரொட்டியும், சமைத்த உணவும் கடைத் தெருக்களில் கிடைப்ப தில்லை; வென்னீராடும் மனைகளும், கல்லூரிகளும், மெழுகுவத்தி களும், தீவட்டிகளும், மெழுகுவத்தி மாடங்களும் கிடையாது.'

'மெழுகு, தீவட்டிகள் ஆகியவற்றுக்குப் பதிலாகத் தீவட்டிக் காரர்கள் (தீவட்டி—divati) என்று அழைக்கப்பட்ட அழுக்குத் தோற்றமுடைய மனிதர்களின் பெருங்கூட்டம் ஒன்று இருந்தது. அவர்கள் இடது கரத்தில் சிறிய பலகை முக்காலி ஒன்றைப் பிடிப்பார்கள். அதனுடைய ஒரு மூலையில் மெழுகுவத்தி மாடம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். அது பெருவிரல் கனத்திற்கு இருக் கும்; வலது கரத்தில் ஒரு பூசனிக்காயைப் பிடித்துக்கொள்வார்கள். அதனுள் துளையிட்டு எண்ணெயூற்றி ஒரு மெல்லிய நூல் திரியை வைப்பார்கள். பிரமுகர்கள் இதுபோன்ற நூறு அல்லது இருநூறு தீவட்டிக்காரர்களை வைத்திருந்தனர். இதுதான் விளக்குகளுக்கும் மெழுகுவத்தி மாடங்களுக்கும் பதிலாக இருந்த இந்துஸ்தானிய விளக்குகளாகும். அவர்களுடைய அரசர்களும் பேக்குகளும் இரவில் வேலைசெய்ய நேரிட்டால் இந்த அழுக்கு நிறைந்த தீவட்டிக்காரர்கள் அவ் விளக்குகளை அருகில் கொண்டுவந்து நிற்பார்கள். குறுகிய மலையிடுக்குகளில் அல்லது குகைகளில் பாய்ந்து ஓடுகிற அவர்களது பெரிய நதிகளையும் ஏரிகளையும் தவிர மற்றபடி நீர் கிடையாது. அவர்களுடைய பூங்காக்களிலும் இல்லங்களிலும் (இமாரத்லார்—imaratlar) பாயும் கால்வாய்கள் கிடையாது. அவர்களுடைய இல்லங்கள் கவர்ச்சியற்றதாக இருக்கின்றன; அவற்றில் காற்றோ (ஹவா—hawa), உருவொழுங்கோ, செவ்வொழுங்கோ கிடையாது.

'குடியானவர்களும் கீழ்த்தர வகுப்பினர்களும் நிர்வாணமாக நடமாட்டம் செய்கிறார்கள். அவர்கள் லங்குட்டா (langutta) என்று அழைக்கப்படும் ஒன்று அணிந்துகொள்கிறார்கள். அது இடுப் புக்குக்கீழ் இருக்கும் பாகத்தை மறைக்கும் கோவணமாகும். இந்தத் துணியை முன்னாலிருந்து இரு தொடைகளுக்கும் நடுவி

லிருந்து பின்னுல் கொண்டுவந்து கட்டிக்கொள்கிருர்கள். பெண்களும் ஒரு துணியை (lang) உடுத்திக்கொள்கிருர்கள். அத் துணியில் பாதி இடுப்பைக் சுற்றிக் கட்டப்படுகிறது; மற்றப் பாதியால் தலையை மூடிக்கொள்கிருர்கள்.'

'இந்துஸ்தானம் ஒரு பெரிய நாடு என்பதும், அங்கே ஏராளமான பொன்னும் வெள்ளியும் கிடைக்கின்றன என்பதும் மகிழ்ச்சி அளிப்பனவாகும். மழைக்காலத்தில் அங்கே வீசும் காற்று மிக இன்பம் தருவதாகும். சில வேளைகளில் அங்கே பத்து, பதினைந்து, அல்லது இருபது முறை மழை பெய்கிறது; திடீரென்று பெருமழை பெய்கின்றது; இதனுல் நீர் வற்றியிருந்த ஆறுகளிலெல்லாம் நீர் நிறைந்துவிடுகின்றன. மழை பொழியும்போதும் மழையின் மூலமாகவும் சிறந்த காற்று வீசுகின்றது. சுக நலத்திலும், கவர்ச்சியிலும் அதை மிஞ்சுவதற்கில்லை. ஆனுல், அங்கே காற்று மிக மென்மையாகவும் ஈரமுள்ளதாகவும் ஆகிவிடுவது ஒரு குறையாகும். டிரான்ஸோக்ஸியானுப் பகுதி நாடுகளின் அம்பு இந்துஸ்தானத்தில் பொழியும் மழையில் நனைந்துவிட்டால் அதை மீண்டும் விடமுடிவதில்லை; அது கெட்டுவிடுகிறது; அம்பு மட்டுமின்றி ஆயுதங்கள், துணி, பாத்திரங்கள் ஆகியவையெல்லாம் கெட்டுவிடுகின்றன. வீடு நீண்டகாலத்துக்கு நிலைத்திருப்பதில்லை. மழைக் காலங்கள் மட்டுமின்றி வெயிலிலும் குளிரிலும் காற்று மிகச் சிறப்பு வாய்ந்ததாக இருக்கின்றது. எனினும், இக்காலங்களில், வடமேற்குப் பருவக் காற்று அடித்து மண்ணையும் தூசையும் தூவிவிடும். ஒவ்வோர் ஆண்டும் மழை பொழியும்பொழுது அது மிகக் கனமாக அடிக்கும்; ஏராளமான மண்ணையும் தூசையும் தூவி ஒருவரை ஒருவர் பார்க்க முடியாத அளவுக்கு அக் காற்று அடிக்கும். இக் காற்றுக்கு மக்கள் வானத்தைக் கருமையாக்கும் காற்று (Darkener of the Sky—Hindi Andhi—ஹிந்தி ஆந்தி) என வழங்குகின்றனர். தட்பவெப்ப நிலை மிகவும் உஷ்ணமாக இருக்கின்றது; ஆனுலும், சமாளிக்க முடியாத அளவுக்குச் சூடாக இல்லை. பால்கிலும் (Balk) காந்தாரத்திலும் இருப்பதுபோல அவ்வளவிற்கும், அவ்வளவு நீண்ட காலத்திற்கும் சூடாக இருப்பதில்லை.'

'கணக்கற்ற பல்வகைப்பட்ட தொழிலாளர்கள் கிடைக்கின்றனர் என்பது இந்துஸ்தானத்தின் மற்ருெரு சிறப்பாகும். ஒவ்வொரு வகைப்பட்ட தொழிலுக்கும் எல்லாவற்றுக்கும் குறிப்பிட்ட ஒரு சாதி (ஜாமி—Jami) நியமிக்கப்பட்டுள்ளது. அது அத் தொழிலை இப்பொழுதுவரை பரம்பரையாகச் செய்துவருகின்றது. ஸபர்நாமாவில் (Zafar-Nama) முல்லா ஷரஃப்

(Mullah Sharaf) தைமூர் பேக்கினது கல் மசூதியைப் (Stone Mosque) பற்றி எழுதும்பொழுது அம் மசூதியைக் கட்டுவதில் கல்வெட்டுக்காரர்கள் 200 பேர் வேலை செய்தனர் என்றும், அவர்கள் ஆசர்பாய்ஜான் (Azarbaijan), ஃபார்ஸ் (Fars), இந்துஸ்தானம் ஆகியவற்றிலிருந்தும் இதர நாடுகளிலிருந்தும் வந்தவர்களாவர் என்றும் குறிப்பிடுகிறார். ஆனால், 680 பேர் ஆக்ராவில் என்னுடைய கட்டடங்களைக் கட்டுவதில் ஈடுபட்டிருந்தனர். அவர்களெல்லாம் ஆக்ராவைச் சார்ந்த கல்வெட்டுக்காரர்களே யாவர்; அவ்வமயம் ஆக்ரா, சிக்ரி, பெயானா, டோல்பூர், குவாலியர், கோயில் (Koil) ஆகிய இடங்களில் 1,491 கல்வெட்டுக்காரர்கள் என்னுடைய கட்டடங்களைக் கட்டிக்கொண்டிருந்தனர். அதுபோலவே, இந்துஸ்தானத்தில் எண்ணற்ற கைவினைஞர்களும் பல்வகைப்பட்ட தொழிலாளர்களும் உள்ளனர்.' (வாழ்க்கைக் குறிப்புகள்—பக்கங்கள் 518-20).

பாபரின் சார்பாயிராத குறிப்புகளில் சில பரபரப்புடையதும் மிக்க விரிவானதுமான தீர்ப்புகளாகும். இந் நாட்டில் அவர் இன்னும் சிலகாலம் நீடித்துத் தங்கியிருப்பாராயின் தமது கருத்துகளை நிச்சயமாக மாற்றி அமைத்துக்கொண்டிருப்பார்; தன்னையே திருத்திக்கொண்டிருப்பார். அவரது கருத்துகள் கீழ் அடக்கப்பட்ட மக்களைப்பற்றித் தாழ்மையாக நினைக்கும் வெற்றியாளருடைய கருத்துகளாகும். நாட்டுப்புறங்களில் வசிக்கும் மக்கள் அவர் முன்னரிருந்து ஓடிவிட்டனர். ஆகையினால் இந்தியர்கள்கூட மகிழாதவர்களாகவும் இணங்கிப் பழகும் பாங்கற்றவர்களாகவும் இருக்கின்றனர் என்று அவர் கருத நேரிட்டது. கல்வி வாசனை நுகர்ந்திருந்த நடுத்தர வகுப்பினரோடும் உயர்தர வகுப்பினரோடும் அவர் தொடர்புகொண்டிருந்திருப்பாராயின் நமது முன்னோர்கள் சிறந்த கற்றறிந்தவர்களும் மேதைகளுமாவர் என்பதை அவர் உணர்ந்திருப்பார். ஆகையினால் பாபரின் சில குறிப்புகளை உண்மையென்று கொள்ளவேண்டியதில்லை.

வாழ்க்கைக் குறிப்புகள் (The Memoirs)

நமது நாட்டைப்பற்றி பாபர் கொண்ட கருத்துகளைத் தமது சுய சரிதையில் எழுதியுள்ளார். அதற்கு துஸுக்கி பாபரி (Tuzuk-i-Baburi) என்று பெயர்; பாபரின் வாழ்க்கைக் குறிப்புகள் (Memoirs of Babur) என்று பெருவாரியாக அறியப்பட்டு வருகிறது. இந்த நூல் முதலில் தமது ஓய்வு இடைக்காலங்களில் பாபரால் அவரது தாய்மொழியான துருக்கிய மொழியில் எழுதப்பட்டதாகும். அது இருமுறை பாரசீகத்தில் மொழிபெயர்க்கப்பட்டது; முதலில்

பையாண்டாகானாலும் (Payanda Khan) பிறகு அப்துர் ரஹீம்கான் கானானாலும் (Abdur Rahim Khan Khana) மொழிபெயர்க்கப் பட்டது. அது பல ஐரோப்பிய மொழிகளில் குறிப்பாக ஃபிரெஞ்சு, ஆங்கிலேய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கிங்கும் (King) லெய்டனும் (Leyden), எர்ஸ்கின் (Erskine), ஏ. எஸ். பெவரிட்ஜ் ஆகியவர்கள் செய்துள்ள மொழிபெயர்ப்புகள் ஆங்கிலத்தில் செய்யப்பட்ட மூன்று மொழிபெயர்ப்புகளாகும். கடைசியில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றறிஞர் (திருமதி பெவரிட்ஜ்) அந்நூலைத் துருக்கி மூலத்திலிருந்து மொழிபெயர்த்துள்ளார்; மற்ற இருவரும் பாரசீக மொழிபெயர்ப்பிலிருந்து மொழி பெயர்த்துள்ளார்கள். ஆகையினால் பெவரிட்ஜ் செய்துள்ள மொழி பெயர்ப்பு அதிகாரபூர்வமானதும் நம்பத்தக்கதுமாகும்.

பாபரின் எழுத்துநடை தெளிவானதாகவும் நேர்த்தியான தாகவும் உள்ளது. அக்காலத்துக்குரிய இதர எழுத்தாளர்களைப் போலல்லாமல் அவர் நேரிடையாகத் தமது பொருளை எடுத்துக் கொள்வார்; விரிவான முன்னுரை எதையும் எழுதுவதில்லை; அவரது வருணிப்புகள் விவரங்கள் நிறைந்ததாகவும், சுருக்கமாகவும் அதே சமயத்தில் தீர்வாய்வானதாகவும் உள்ளன. அவர் துருக்கி மொழியில் குற்றம் குறையில்லாது எழுத்து நடைமுறையில் எழுது வதற்கான திறம் பெற்றவர். அவருக்கே உரியதான நேர்மையும் இளவழகும் அந்நூலின் சிறப்பு அம்சங்களாகும். பாபர் தமது குறைகளையும், தோல்விகளையும், தீய குணங்களையும், பண்புகளையும் பற்றி ஒளிவுமறைவின்றி எழுதுகிறார். அந்த முழு நூலும் படிப்பதற்கு முற்கால வீரகாதை ஒன்றைப்போல் இருக்கிறது. ஒரு வாசகர் அதைப் படிக்கத் துவங்கிவிட்டால் அதை அவர் படித்து முடிக்க விருப்பங்கொள்கிறார்; ஏனென்றால், கதையில் அவரது ஆர்வம் குன்றுவதேயில்லை. அரசியல், இராணுவ நிகழ்ச்சிகளை வருணிப்பதையும், அக்காலத்துக்குரிய பிரமுகர்களைப் பற்றி எழுத்தோவியங்களை வரைவதையும் தவிர அவர் நாட்டின் அமைப்பைப்பற்றிய விரிவான வருணிப்பையும் அதன் விலங்குகள், பறவைகள், பூக்கள், மரங்கள் ஆகியவற்றைப்பற்றிய வருணிப்பையும் அளிக்கிறார். அவ் வாழ்க்கைக் குறிப்புகள் பாபர் எவ்வளவுக்கு இயற்கையின் அழகை விரும்பியவர் என்பதையும் மனிதருக்குரிய பண்புகளையும் குறைகளையும் எவ்வளவுக்குப் பெற் றிருந்தார் என்பதையும் வெளிப்படுத்துகின்றன. 'எக்காலத்துக்கு முரிய கவர்ச்சியால் கட்டுப்படுத்துவதும், உணர்ச்சி எழுப்புவதுமான இலக்கிய நூல்களுள் அவை ஒன்றாகும்' என்று கருதப்படுகிறது. அந்நூல் அக்காலத்திற்குரிய முதல்தர மூலாதாரமாகும். துர்வச மாக அது முற்றுப்பெறவில்லை. கிடைத்துள்ள பிரதிகளில் மூன்று

இடைவெளிகள் உள்ளன—1508ஆம் ஆண்டிலிருந்து 1519ஆம் ஆண்டுவரை, 1520ஆம் ஆண்டிலிருந்து 1525ஆம் ஆண்டு வரை, 1529ஆம் ஆண்டிலிருந்து 1530ஆம் ஆண்டுவரை.

அவரது குணவியல்பும் அவரைப்பற்றிய மதிப்பீடும்

பாபர் இடைக்கால ஆசியாவின் மிகப் புகழ் வாய்ந்த அரசர்களுள் ஒருவராவார் என்று சமகாலத்திய வரலாற்ருசிரியர்களும் தற்போதைய வரலாற்ருசிரியர்களும் ஏக மனத்துடன் ஏற்றுக்கொள்கின்றனர். ‘அவர் பல பண்பாடுகளையும் எண்ணற்ற சிறப்புகளையும் பெற்றிருந்தவர். எல்லாவற்றையும்விட மிக உயர்ந்திருந்தது அவரது வீராண்மையும் மனிதத் தன்மையுமாகும். உண்மையில் அவரது குடும்பத்தில் அவருக்கு முன்ஞல் மற்றெவரும் அதுபோன்ற திறமைகளைப் பெற்றிருக்கவில்லை. அவருடைய இனத்தைச் சேர்ந்த மற்றெவரும் அதுபோன்ற வியப்புக்குட்படுத்தும் சாதனைகளைப் புரியவில்லை; அதுபோன்ற விசித்திர வீரச்செயல்களையும் கண்டதில்லை’ என்று அவருடைய ஒன்றுவிட்ட சகோதரரும், தாரிகி-ரஷீதி (Tarikh-i-Rashidi) என்ற புகழ்வாய்ந்த நூலின் ஆசிரியருமான மீர்ஸா ஹைதர் (Mirza Haider) கருதுகிருர். அவருடைய மகளான குல்பதன் பேகம் (Gulbadan Begam) என்பவர் தனது நூலான ஹுமாயூன் நாமாவில் (Humayun Nama) அதேபோன்ற தோரணையில் எழுதுகிருள். தற்போதைய ஆசிரியர்களும் யாவரும் சமகாலத்திய ஆசிரியர்களின் கருத்துகளையே ஒலிக்கின்றனர். உதாரணமாக, வி. ஏ. ஸ்மித் என்பவர் அவரை ‘அவரது காலத்திய ஆசியாவின் மிகச் சிறந்த இளவரசர்’ என்றும், ‘எக்காலத்துக்குரியதும் எந்நாட்டுக்குரியதுமான அரசர்களுக்கிடையில் மிக உயர்ந்த இடத்தைப் பெறத் தகுதியுள்ளவர்’ என்றும் அழைக்கிருர். ‘இஸ்லாமின் வரலாற்றில் கவர்ச்சிமிக்க மனிதர்களுள் ஒருவராவார்’ என்று அவரைப்பற்றி ஹாவெல் (Havell) கருதுகிருர். ரஷ்புருக் வில்லியம்ஸ், அவரை மனிதர் என்ற நிலையிலும் அரசர் என்ற நிலையிலும் வானளாவப் புகழ்கிருர். டெனிசன் ராஸ் அக்காலத்துக்குரிய அரசர்களுள் அவருக்கு மிக உயர்ந்த இடத்தை அளிக்கிருர்.

பாபரின் மனிதப் பண்பை ஆராய்தல்

தனிப்பட்ட மனிதர் என்ற நிலையில் பாபரின் குணவியல்பு மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். அவர் ஒழுங்கு தவருமல் கீழ்ப்படிகிற மகஞவார். அவர் பதிஞெரு வயதுக்குச் சிறிது மேம்பட்டிருக்கும் பொழுதே அவருடைய தகப்பஞர் இறந்துவிட்டபோதிலும்

அவருடைய நினைவை அவர் மிக அன்புடன் போற்றிவந்தார். அவர் தமது தாயையும், பாட்டியையும், தாய்ப் பாட்டனையும் அன்புடன் விரும்பினூர்; தலைவணங்கல் என்று கருதும்படியான மரியாதையை அவர்களுக்குக் காட்டினூர். பல முகம்மதிய அரசர் களைப் போலவும் பிரபுக்களைப் போலவும் அவர் பலரை மணம் புரிந்துகொண்டபோதிலும் அவருடைய மனைவிகளிடம் அவர் மிக்க பற்றுக்கொண்டிருந்தார்; ஒருவர் தமது வாழ்க்கைத் துணைவியைக் காதலிப்பது என்ன என்பதை உணர்ந்திருந்தார். அவர் ஒரு நட்பு மறவா நண்பராவார், தமது இளம்பிராய விளையாட்டுத் தோழர்களை அவர் மறவாமல் நினைவு வைத்திருந் தார். அவர்கள் இறந்துவிட்டால் துயருடன் கண்ணீர் விட்டார். அவர் ஒரு கனிவுள்ள உறவினராவார்; தமது சொந்த நிலையையும் பாராது, தம்மிடம் உதவி நாடிய உறவினருக்கு அவர் உதவியளித் தார். மனித இயல்பின் சிறப்பில் அவர் அசையா நம்பிக்கை பெற்றிருந்தார்; அவருடைய இதயத்தில் மனிதாபிமானம் என்ற அன்புப்பால் நிறைந்திருந்தது. உயர்குடி மக்களாகப் பிறந்தவர் களிடம் காணும் அவர்களுக்கே உரிய குறைகளை பாபரிடமும் காண நேரிட்டாலும், அவரது தனிப்பட்ட வாழ்க்கை பொதுவாக அவர் பிறந்த நாட்டிலும் அக்காலத்திலும் மிக அரிதாக இருந்த ஒழுக்கத் தரத்தைப் பெற்றிருந்தது. அவர் மது அருந்துவதை விரும்பினூர்; சில சமயங்களில் அளவுக்கு மீறியும் குடித்துவிடுவார்; ஆனூலும், அவருடைய மகனூன ஹுமாயூனைப் போலல்லாமல் அவர் குடிபோதைகளுக்கு அடிமையாகிவிடவில்லை. பெண்ணுற வில் அவர் கொண்டிருந்த கட்டுப்பாடு அவரது காலத்தில் மத்திய, ஆசியாவில் வாழ்ந்தவர்கள் அறிந்திராத ஒன்ருகும். வாழ்க்கை யின் இன்பங்களுக்கோ, வசதிகளுக்கோ, ஆடம்பரங்களுக்கோ அவர் அடிமையாகவில்லை. துணிகரச் செயல்களை நாடிய அவர், உடலிலும் மனத்திலும் அமைதியற்றவராக இருந்தார். வாழ்க்கை யில் அசாதாரண ஆபத்துகளை எதிர் நோக்குவதில் அவர் மிக்க மகிழ்ச்சியுற்ருர். இன்னல் என்னும் பள்ளியில் பயிற்சி பெற்றிருந் ததனூல் அவர் வறுமையில் அடிபட்டுப் பழகியவராவார்; வீரம், பொறுமை, துன்பங்களைச் சகிக்கும் தன்மை ஆகிய உயர்தர குணவியல்புகளை அவர் தம்மிடத்தில் வளர்த்துக்கொண்டார். உடல் வலிமை பெற்றிருந்த அவர் தமது கைகளில் இரு மனிதர் களைப் பிடித்துக்கொண்டு மதிலின்மீது ஓடமுடிந்தது. கங்கையைத் தவிரக் குறுக்கிட்ட ஒவ்வொரு நதியையும் அவர் நீந்திக் கடந்தார். ஒரு சமயத்தில், ஆணவ உணர்ச்சி வசப்பட்டிருக்கும்பொழுது அவர் கங்கையையும் கடந்தார். அவ்வாறு செய்யும்பொழுது அவரது கைவீச்சுகள் முப்பத்திமூன்ருக எண்ணினூர்.

பாபரின் அறிவாற்றல்

நாகரிகத்திலும் இணக்க நயப் பண்பிலும் பாபருக்கு மிஞ்சிய வர்கள் இல்லை. பாபர் மிகக் கற்றறிந்தவர்; கலைகளைக் காதலித் தவர்; இயற்கையின் வன்மைகளை மிக உன்னிப்பாகவும் திறனாய் வுடனும் ஆராயும் தன்மை பெற்றவர்; மனிதர்களையும், விவரங் களையும் மிக உன்னிப்பாகக் கவனிப்பவர். துருக்கி மொழியில் குற்றங்குறையின்றி எழுத்து நடையில் சிறப்பாக எழுதும் அவர், தமது வாழ்க்கைக் குறிப்புகளின் மூலமாகத் தமக்கு அழியா இடத்தைத் தேடிக்கொண்டார். துருக்கிய மொழியில் அவர் உயர்தரக் கவிஞருமாவார். அம் மொழியில் அவர் எழுதியுள்ள திவான் (Diwan) என்ற நூல் மிகச் சிறப்புவாய்ந்த கவிதையாகும். அதை அவருடைய காலத்தில் வாழ்ந்தவர்களும் மனிதவர்க்கமும் புகழ்ந்துள்ளனர். அவர் பாரசீக மொழியிலும் கவிதைகளை இயற்றி யுள்ளார்; முபையன் (Mubaiyan) என்ற ஒரு செய்யுள் நடையை யும் அவர் தோற்றுவித்தார். ஆசிரியர் என்ற நிலையிலும் கவின் கலைகளைக் காதலிப்பவர் என்ற நிலையிலும் குறிப்பாக, கவிதைகளை எழுதுபவர் என்ற நிலையிலும், இசைக் காதலர் என்ற நிலையிலும் அவர் நுணுக்க நயத்திலும் திறனாய்விலும் சுவை கொண்டவர். தம் வரலாற்றைத் தாமே எழுதுபவர்களுள் அரசர் என்று அவரை அழைக்கலாம். பின்வரும் தலைமுறைகளுக்கு அவர் தமது செயல் களைப்பற்றிய மகிழ்ச்சிதரும் குறிப்பை அளித்துள்ளார். அக் குறிப்பில் அவர் விஜயம் செய்த நாடுகள், அவற்றின் அமைப்பு, இயற்கை வளங்கள், தட்பவெப்ப நிலை, உற்பத்திகள், கலைத் தொழில்கள், பறவைகள், பழங்கள், பூக்கள் ஆகியவற்றைப்பற்றிய உயிர்ததும்பும் வருணிப்பைக் காணலாம். ஓர் அறிஞருக்குத் தேவைப்படும் குணாதிசயங்களையெல்லாம் பெற்றிருந்த பாபரை ஒரு படை வீரர்—அறிஞர் என்று அழைக்கலாம். அவர் முதலில் வீரரும் பிறகுதான் அறிஞருமாவார். அவருடைய அறிவாற்றலும் நாகரிகமும் அவருடைய இடையறு இராணுவ நடவடிக்கைகளுக்கு இடையூறாக நிற்கவில்லை; சாதாரணமாகப் புலமையுடன் ஒன்றி இருந்த மென்மையும் அவரிடத்தில் கிடையாது.

சமயப் பற்றுக் கொண்டவர் என்ற நிலையில் பாபரை ஆராய்தல்

பாபர் ஒரு வைதீக ஸுன்னி முகம்மதியராவார்; ஆனாலும், அவர் மத வெறி பிடித்தவரல்லர். மற்ற வைதீக சுன்னி முஸ்லிம் அரசர்களைப் போலல்லாமல் முஸ்லிம் அல்லாதாரைத் துன்புறுத்து தல் தமது கடமையாகும் என்று அவர் கருதவில்லை. அவர் வைதீக

ஸுன்னியாக இருந்தாலும் ஷா இஸ்மாயில் சஃபவி என்ற பாரசீக ஷியா அரசருடன் அவர் கூட்டுறவு செய்துகொண்டார். அப் பாரசீக அரசர் தமது இராச்சியங்களில் சுன்னிகளை மிகக் கொடுமைப்படுத்திக்கொண்டிருந்தார். சாமர்கண்டில் ஷியா மதத் தைப் பரப்புவதற்கு பாபர் இணங்கிவிட்டார். இறைவனின்மீது முழு நம்பிக்கையும் கொண்டிருந்ததனால் பாபர் உண்மையில் மதப் பற்றுடைய ஒரு மனிதர் என்று அழைக்கப்படுகிறார். ‘இறைவ னுடைய விருப்பமின்றி எதுவும் நடக்காது, அவருடைய பாது காப்பில் முழு நம்பிக்கைகொண்டு நாம் முன்னேறவேண்டும்’ என்று அவர் திரும்பத் திரும்பக் கூறுகிறார். இறைவர் ஒவ்வொரு செயலிலும் தமக்கு வழிகாட்டியாக இருக்கிறார் என்று அவர் நம்பினார். அவரது வெற்றிக்காக அவர் இறைவனுக்கு நன்றி செலுத்தினார்; அவ் வெற்றிகளெல்லாம் இறைவனுடைய அருளால் தான் பெறப்பட்டவை என்றும் அவர் நம்பினார். அக்காலத்தில் இந்தி யாவிலிருந்த சூழ்நிலைகளுக்கு எதிராக அவர் போகமுடியவில்லை. இந்திய மக்களிடம் அறிவு படைத்ததும் தாராள மனப்பான்மை கொண்டதுமான சமயக் கொள்கையை அவர் பின்பற்றவில்லை.* அவர் ராணா சங்காவின்மீது புனிதப் போர் (Jihad) ஒன்று தொடுத் தார்; அவருக்கு எதிராகப் போர் புரிவது அவர்களது சமயக் கடமை என்று அவர் அவர்களைத் தூண்டினார். அவரது வெற் றிக்குப்பின் அவர் காஸி (Ghazi—சமய நம்பிக்கையற்றவர்களைக் கொல்லுபவர்) என்ற பட்டப்பெயரைப் புனைந்துகொண்டார். சந்தேரியைச் சார்ந்த மெதினி ராவின்மீதும் அவர் புனிதப் போர் தொடுத்தார்; வெறி கொண்ட ஒரு சுன்னியைப்போல் நடந்துகொண்டார். அயோத்தியாவில் (Ayodhya) ஸ்ரீராமச் சந்திரனின் பிறப்பிடம் என்று லட்சக்கணக்கான இந்துக்களால் மதிக்கப்பட்டுவந்த இடத்தில் பாபர் தமது மசூதியைக் கட்டினார். முஸ்லிம் வர்த்தகர்களின்மீது விதிக்கப்பட்டிருந்த அஞ்சல் தீர்வை யைத் தவிர்த்தும் வாணிக வகுப்பினைச் சார்ந்த முஸ்லிமல்லா தாரின்மீது இருந்த வரியை அவ்விதமே விட்டுவிட்டும் அவர் இந்து வர்த்தகர்களின் நலனுக்கு மாறாக நடந்துகொண்டார். இருந்தபோதிலும், உண்மையில் கூறுங்கால், இந் நாட்டு மக்களிடம் அவரது போக்கு சுல்தானிய காலத்தில் பல அரசர் களின் போக்கைவிட மோசமாக இல்லை.

* இந்துக்களிடம் சமயப் பொறுமையுடன் நடந்துகொள்ளும்படி பாபர் தமது மகனான ஹுமாயூனுக்குக் கூறியிருக்கும் அறிவுரையை (பாரசீக மொழியில் உள் ளது; துருக்கிய மொழியில் அன்று) பூபால் குறிப்பேடு என அழைக்கப்படும் குறிப்பேட்டில் (Bhupal document) காணலாம் என்று கூறப்படுகிறது. ஆனால், அது ஒரு போலி குறிப்பேடாகும். அதன்மீது கவனத்தைச் செலுத்த வேண்டியதில்லை.

பாபரை வீரர் என்ற நிலையிலும் தளபதி என்ற நிலையிலும் ஆராய்தல்

தொட்டிலிலிருந்து சுடுகாடுவரை பாபர் தமது உயிருக்காகவும், சிம்மாசனத்துக்காகவும், ஆக்கிரமிப்புப் படையெடுப்புகளுக்காகவும் போரிடவேண்டியிருந்தது. இங்ஙனமாக, தமது இளமைப்பருவத்திலிருந்தே பாபர் ஒரு சிறந்த வீரராவார்; அவர் 'ஒரு மெச்சத்தக்க குதிரைப்படை வீரர்; சிறப்பான இலக்கு குறித் திறலாளர்; சிறந்த வாள்வீரர்; வேட்டையாடுவதில் திறம்படைத்தவர்.' மேலும் அவர் பெரும் உடல் வலிமையும் வீரமும் படைத்தவர்; துணிகரச் செயல்களைப் புரிவதற்கான ஆற்றலைப் பெற்றவர்; சாவை அலட்சியம் செய்பவர்; அசாதாரண பொறுமையும் இன்னல்களைச் சகிக்கும் தன்மையும் கொண்டவர். அவர் ஒரு சிறந்த தளபதியும் மக்களின் தலைவருமாவார். ஆணையிடும் தோற்றத்தைப் பழக்கமாகவே கொண்டிருந்த அவர் தமது படை வீரர்களையும் தம்மைப் பின்பற்றுபவர்களையும் இயல்பாகவே கீழ்ப்படியும்படி செய்ய முடிந்தது. அவர் படைவீரர்களோடு இருத்தலை இயல்பாகவே விரும்பியதனாலும், மனித குணத்தைச் சரிவர மதிப்பிடும் அரசத்திறமையில் வல்லுனராக இருந்ததனாலும் அவருடைய அதிகாரிகள் அவரை முற்றிலும் புரிந்துகொண்டனர்; பெரும்பாலோராலும் விரும்பப்பட்டார். அவருடைய படைவீரர்களுடன் இன்னல்களை அனுபவிப்பதை அவர் மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். ஒரு படையெடுப்பின்பொழுது அவருடைய ஆட்களுடன் சென்றுகொண்டிருக்கும்பொழுது மிகக் கடுமையான உறைபனியிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள பாபர் ஒரு சிறிய குகைக்கு ஓடினர் என்றும், தமது கையினாலேயே பனியை அப்புறப்படுத்தி அக் குகை வாயிலில் உட்காருவதற்காக ஒரு சிறிய இடத்தைப் பற்றிக்கொண்டார் என்றும், அவருடைய ஆட்கள் உள்ளே சென்று சிறிது ஓய்வு பெறும்படி அவரை வற்புறுத்தியும் அங்ஙனம் செய்யாது தமது படைவீரர்களுடன் அவர் அவ்விடத்திலேயே இருக்க விரும்பினர் என்றும், அவரது வாழ்க்கைக் குறிப்புகளிலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். "என்னுடைய ஆட்கள் பனியிலும் சறுக்காற்றிலும் கஷ்டப்பட நான் சுகமாக இருப்பதும், நான் மிக வசதியுடன் உள்ளே உறங்க அவர்கள் துயரிலும் இன்னலிலும் மூழ்கி இருத்தல் ஒரு மனிதப் போக்காக இருக்காது என்றும், தோழமைக்கு மாறுனதாகும் என்றும் நான் கருதினேன். நான் பொறுக்க முடியாததை வலிமை வாய்ந்த எம் மனிதன்தான் பொறுக்க முடியும். 'நண்பர்களுக்கிடையில் மரணமடைதல் திருமணத்திற்குரிய விருந்தாகும்' என்பது பாரசீக மொழியில் வழங்கிவரும் ஒரு பழமொழியாகும். ஆகையினுல், பனி என் தலைமீதும் முதுகிலும் காதுகளிலும் நான்கு அங்குல

கனத்திற்குப் படிந்திருந்தபோதிலும் நான் தோண்டிய குழியிலேயே நான் தங்கி இருந்தேன்'' என்று அவர் எழுதுகிறார். அவருடைய படைவீரர்களை அவர் அவ்வளவு விரும்பினாலும், தேவையான பொழுது அவர் அவர்களிடம் மிகக் கடுமையாக நடந்துகொண்டார். அவர் கண்டிப்பான ஒழுங்கினைக் கடைப்பிடிக்கச் செய்பவராவார் ; தமது ஆட்களுடன் பரிச்சயமாக நடந்துகொள்ளுதலை ஒழுங்குக்கு இடையூறாக இருக்க அனுமதிக்கமாட்டார். கீழ்ப்படியாமையையும், ஒழுங்கைக் குறைய விடுவதையும் அவர் மிக உறுதியாக ஒடுக்கினார். அடாச் செயல் புரிந்த படைவீரர்களை அவர் கொன்றார். 'அவர்களில் சிலரை நான் கொன்றேன் ; மற்றச் சிலருடைய மூக்குகளை அறுத்து அவர்களைப் பாசறையைச் சுற்றிக்கொண்டு வரும்படி ஆணை பிறப்பித்தேன்' என்று அவர் எழுதுகிறார். இதுபோன்ற தண்டனை பேரளவில் அத்துமீறி நடந்தவர்களுக்கும் கொள்ளையிட்டவர்களுக்கும் விதிக்கப்பட்டது. ஒரு தளபதி என்ற நிலையில் அவர் மத்திய ஆசியாவில் தாம் நீண்டகாலமாகப் போரிட்ட பல்வகைப்பட்ட மக்களுடைய போர் முறைகளையும் சூழ்ச்சித் திறங்களையும் மிகப் புத்தி கூர்மையுடன் ஒன்றாக இணைத்தார். பீரங்கிப் படையை மிகத் திறனுடன் முதல் முதலாகப் பயன்படுத்திய மத்திய ஆசிய அரசர்களுள் பாபர் ஒருவராவார். இந் நாட்டில் எண்ணிக்கையில் அதிகமாக இருந்த பகைவர்களின்மீது புகழ்மிக்க வெற்றிகளைப் பெற அவரது போர் முறைத்திறம் ஏதுவாக இருந்தது. ஆனால், செங்கிஷ்கான் (Changiz Khan) அல்லது தைமூரைப்போல பாபரை ஒரு வானப் பிறவித் தளபதி என்றோ அல்லது ராணா சங்காவின் வரிசையைச் சார்ந்த அச்சமற்றும் வீரத்துடனும் போர் புரியும் வீரர் என்றோ அழைக்க முடியாது. அவரது முந்திய நாட்களில் பாபர் ஒரு போரிலும் வெற்றி பெறவில்லை. அவர் பலமுறை தோற்கடிக்கப்பட்டுத் தமது தாய்நாட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்டார். ரஷ்புருக் வில்லியம்ஸ் அவரைப் புகழ்ந்திருப்பினும், இராணுவக் குறைபாடுகள் நிறைந்த வாழ்க்கை, பேராபத்துக்குள்ளாக்கும் பயணங்கள், போர் புரியும் இனங்கள் பலவற்றுடன் தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றின் மூலமாகத்தான் பாபர் படிப்படியாக ஒரு முதல்தர தளபதியானார்.

ஆட்சியாளர், அரசியல் விரகர் என்ற நிலைகளில் பாபரை ஆராய்தல்

முதிர்ந்த வயதில் இந்தியாவிலும், அதற்கு முன் டிரான் ஸோக்ஸியானாவில் தமது பிறப்பிடத்திலும் ஓர் உறுதியான அரசருக்குரிய குணவியல்புகளை பாபர் வெளிப்படுத்தினார். அவ்விதம் செய்தல் அவரைப்போன்ற வெற்றிகர இராணுவத்

தலைவர்களுக்கு இயல்பேயாகும், அவர் தமது குடிமக்களுக்கிடையில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டியிருந்தார். பதக்ஷானிலிருந்து பீஹாரின் கிழக்கு எல்லைவரை பரவி இருந்த அவரது பரந்த இராச்சியத்தில் கொள்ளைக்காரர்களின் கொடுமையிலிருந்து தமது குடிமக்களைப் பாதுகாக்க அவர் நடவடிக்கைகளை எடுத்தார். இராச்சியத்தின் முக்கியப் பகுதிகளுக்கிடையில் போக்குவரத்துக்காக சாலைகளை அவர் பாதுகாப்பளிக்கும்படியாக வைத்திருந்தார். குறுநில மன்னர்களும் மக்களிடத்தில் கொடுமையாக நடந்து கொள்ளா வண்ணம் அவர் நடவடிக்கைகளை எடுத்திருந்தார். அவருடைய அவை நாகரிகத்தின் மையமாக இருந்ததுமன்றி மிகக் கடுமையான ஒழுங்குக்கும் மையமாக இருந்தது. தமது குடிமக்களின் நலனில் அவர் மிக்க அக்கறை காட்டினார்; வெளி நாட்டுப் படையெடுப்புகளிலிருந்தும் உள்ளூர் ரகளைகளிலிருந்தும் அவர்களைக் காக்க அவர் மிகப் பாடுபட்டார். ஆனாலும், தமது குடிமக்களின் ஆன்ம நிலையையும் ஆன்மத்துறை சாராத நிலையையும் முன்னேற்ற அவருக்கு எண்ணமோ திறமையோ கிடையாது. அவர் ஒரு சிறந்த அரசியல் தந்திரவாதியாவார். அவர் பதினொரு வயதுக்குச் சிறிது மேற்பட்டிருக்கும்பொழுது 1494-ல் தமது மாமனை அகமது மீர்ஸாவுக்கு அனுப்பிய செய்தி, அவரது திறமை இயல்பாகவே அமைந்ததாகும் என்பதை வலியுறுத்துகிறது. நேர்மையே மிகச் சிறந்த சூழ்ச்சித்திற நயமாகும் என்றும் அவர் நம்பியிருக்கக்கூடும். ஒரு பகைவனின்மீது படையெடுப்பதற்குமுன் அதற்கான காரணங்களை யெல்லாம் அவர் சரிவர அமைத்துக்கொள்வார். ஃபர்கானாவிலும் சாமர்கண்டிலும் இருந்த அவரது உறவினர்களிடம் காட்டியதைவிட காபூலின் மக்களிடம் பாபர் மிக அதிக திறநயத்தைக் காட்டினார். தமது பகைவர்களைப் பிரிப்பதற்கு அவர் பயன்படுத்திய முழு நிறைவான திறநயம் இந்தியாவில் அவர் வெற்றி பெறுவதற்குப் பெருமளவு காரணமாக இருந்தது. டெனிஸன் ராஸ் (Denison Ross) என்பவரின் கருத்துப்படி 'சுல்தான் இப்ராஹிமின் கிளர்ச்சி செய்யும் பிரபுக்களை ஒருவரை மற்றொருவருக்கு எதிராக அவர் தூண்டிவிட்டது. மாக்கிய வில்லியின் (Machiavelli) திறமைக்கு ஒப்பாகும்'.

ஒரு நிர்வாகி என்ற நிலையில் பாபரை ஆராய்தல்

பாபர் ஒரு வெற்றிகரப் படைவீரராகவும் படையெடுப்பாளராகவும் இருப்பினும் நிர்வாகி என்ற நிலையில் அவர் மிகக் குறைந்தவராகவே இருந்தார். ஆக்கும் மேதைமையை அவர் படைத்திருக்கவில்லை. பழமைவாய்ந்ததும் காலங் கடந்துவிட்டதுமான நிறுவனங்களை எங்கும் அவர் நீடிக்கச் செய்ததுமன்றி அவற்றுக்குப் பதிலாகப்

புத்தம் புதியதும் காலத்துக்கொத்ததுமான நிர்வாக அமைப்பை அமைக்கவும் இல்லை. உண்மையில் அவர் அங்ஙனம் செய்வதற்குத் தகுதியற்றிருந்தார். நமது நாட்டில் அவரது செயல்கள் சேதம் விளைவிப்பதாக இருந்தனவேயன்றி ஆக்கும் திறனைப் படைத்ததாக இருக்கவில்லை. டெல்லி சுல்தானியத்தின் பழமைவாய்ந்த நிர்வாக அமைப்பு முகலாயர்களின் தாக்குதலின் காரணமாகச் சின்னாபின்ன மாகிக்கொண்டிருந்தது. நாட்டிற்கு ஒரு சிறந்த நிர்வாக முறையை அமைத்துக்கொடுக்க பாபர் முயற்சி எடுக்கவில்லை. இராச்சியத் தைத் தமது தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையில் பிரித்துக் கொடுத்து அவர்களிடமே நிர்வாகத்தின் பொறுப்பை அவர் ஒப் படைத்துவிட்டார். இங்ஙனமாக இராணுவ மாநில ஆட்சிகள் நிறுவப்பட்டன. அவைகள் அரை சுதந்திரப் பகுதிகளாக இருந் தன. பேரரசர்தாம் அவற்றையெல்லாம் இணைக்கும் தளையாக இருந்தார். இங்ஙனமாக 'பாபரின் பேரரசு ஓர் இளவரசனின் கீழிருக்கும் சிறிய நாடுகளின் தொகுதியேயன்றி, ஒழுங்காகவும் ஒரே மாதிரியாகவும் ஆளப்படும் இராச்சியமாக அமைந்திருக்க வில்லை. பல குன்று மாவட்டங்களும் எல்லை மாவட்டங்களும் பெயரளவில்மட்டும் கீழ்ப்படிந்திருந்தன' என்று எர்ஸ்கின் (Erskine) குறிப்பிடுகிறார். ஒவ்வொரு தல கவர்னரும் தம்முடைய நிர்வாகத்தையே நிறுவியிருந்தார்; தம் எல்லைக்குள் முழு உரிமையைப் பெற்றிருந்தார். பேரரசர் விரும்பியபொழுது படைகளை அனுப்பி அவருக்கு உதவி தருவதும் மத்திய கருவூலத் திற்கு வருடாந்தர வருவாயை அனுப்பிவைத்தலும்தான் அக் கவர் னர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டது. மற்றபடி அவர் சுதந் திரம் பெற்றவராகவே இருந்தார். பேரரசுக்குத் தேவைப்பட்ட ஒரு பொது வருமான முறையை பாபர் தோற்றுவிக்கவில்லை. நிலத்தைச் சரிவர அளப்பதற்கோ நிலத்தின் உண்மை விளைச்சலின் அடிப்படையில் கோரிக்கைப் பொருளை ஒரேமாதிரியாக நிர்ணயிப் பதற்கோ முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை. நீதி நிர்வாக முறையும் ஒழுங்கற்றதாகவிருந்தது. இவ்விதமாக, 'பரந்திருந்த பேரரசின் பல்வேறு பகுதிகளின் அரசியல் நிலையில் ஒரு சிறிதேனும் ஒற்றுமை கிடையாது. இளவரசனின் கட்டுப்பாடற்ற அதிகாரத் தைத்தவிர மற்ற எந்தச் சட்டத்திற்கும் எவரும் கீழ்ப்படியவில்லை.'

கணக்குகளின் சிக்கல்களை உணரும் திறனற்றிருந்த பாபர் பொருளியல் ஆட்சி வல்லுனர் என்ற நிலையிலும் மிகக் குறைந்தவ ராக இருந்தார். நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்த முழு நிறை வான பொது நிதி இன்றியமையாதது என்பதை அவர் உணர்ந்து கொள்ளவில்லை; டெல்லி, ஆக்ரா ஆகியவற்றின் கருவூலங்களி லிருந்து நல்வசமாகக் கைப்பற்றிய பெருவாரியான செல்வத்தை

அவர் வீணுகச் செலவிட்டார். அவரது தாராளமான ஆனுலும் தகுதியற்றதாக இருந்த வண்மை நிதிப் பற்ருக்குறையை விளைவித்தது. அப்பொழுதும் அவர் மற்ருெரு தவருன செயலைப் புரிந்தார்; கான்வாப் போருக்குச் சிறிது முன் முஸ்லிம்களின்மீது விதிக்கப்பட்டிருந்த அஞ்சல் தீர்வையைத் தவிர்த்ததனுல் அவர் ஏராளமான வருமானத்தை இழக்க நேரிட்டது. நிதியின்றி நாட்டின் நிர்வாகத்தை நடத்த முடியாது என்பதை அவர் வெகு விரைவில் உணர்ந்துகொண்டார். இராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்களைப் பெறுவதற்கும், படைவீரர்களுக்கும் சிவில் நிறுவனத்தைச் சார்ந்தவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும் கூடுதலான வரிகளை விதிக்கும்படி அவர் கட்டாயப்படுத்தப்பட்டார். அதன் பிறகு எல்லா அலுவலர்கள்மீதும் மிகக் கடுமையான கட்டணங்களை அவர் விதிக்கவேண்டியிருந்தது. இது மிக மோசமான விளைவுகளை விளைவித்தது. விலை கொடுத்துப் பதவிகள் வாங்கப்பட்டன; அரசாங்கப் பதவிகளுக்குத் தகுதியுடையவர்கள் நியமிக்கப்படவில்லை. இது போன்ற முறைகள் கையாளப்பட்டும் நிதி கட்டிறுக்கம் நீடித்து நிலைத்திருந்தது. அவருடைய மகனும் வாரிசுமான ஹுமாயூன் நிதியின் நிலைகுலைவினுல் உண்டான விளைவுகளை எதிர்நோக்க நேர்ந்தது. இங்ஙனமாக பாபரின் பேதமை வரம்பிடப்பட்டிருந்தது. ஆதலால், அவர் போர்க்காலத்திற்குரியதான நிர்வாகத்தையே நிலை நாட்டினுர். 'அப்பொழுதிருந்த நிலையில் போர்நிலை நீடித்திருந்ததனுல்தான் ஒன்ருக இணைக்கப்படக்கூடிய மன்னராட்சியை பாபர் தமது மகனுக்கு விட்டுச் சென்ருர். அமைதி காலத்தில் அது பலவீனமுற்றதாகவும், தோற்றமற்றதாகவும், உறுதியற்றதாகவும் இருந்ததென்று' ரஷ்புருக் வில்லியம்ஸ் குறிப்பிடுகிருர். ஹுமாயூனின் இன்னல்களுக்கு பாபர் பெரிதும் காரணமாக இருந்தார்.

வரலாற்றில் பாபருக்குரிய இடம்

பாபர் தமது தாய்நாடான டிரான்ஸோக்ஸியானுவிலிருந்து எவ்வித மரியாதையுமின்றி காபூலில் தஞ்சம்புக விரட்டியடிக்கப்பட்டவராவார். அத் தாய்நாட்டின் வரலாற்றில் பாபர் ஒரு தலையார்ந்த இடத்தைப் பெறவில்லை. பின்வரும் தலைமுறைகள் அவர் செய்ததாகக் கருதக்கூடிய பயன்தரும் நிர்வாகச் சீர்திருத்தங்களை ஆப்கானிஸ்தானத்தில் அவர் செய்யாததனுல் அவரை ஆப்கானியர்களும் விரும்பவில்லை. அவருடைய மகனை ஹுமாயூன் விரட்டியடிக்கப்பட்ட பிறகு முகலாயர்கள் ஒரேயடியாக நாட்டை யிழந்திருப்பார்களாயின் இந்தியாவின் வரலாற்றிலும் பாபரை மறக்க நேரிட்டிருக்கும். ஆனுலும், அக்பரைப் போன்ற ஒரு பேரனைப் பெற்றிருந்தது அவரது நல்வினையாகும். அப் பேரன்தான்

முகலாயப் பேரரசின் அடிக்கல்லை மிக ஆழமாகப் பதியவைத்து அதை இருநூறு ஆண்டுக்கு மேற்பட்டு நீடித்து வாழும்படி செய்தார். ஆகையினால், அவருடைய பாட்டனார், அக்பரேதான் முகலாயப் பேரரசை இந் நாட்டில் உண்மையாக நிறுவினார் என்று கருதவேண்டும். அப் பேரரசின் அஸ்திவாரத்திற்கு பாபர் முதற் கல்லைமட்டும் அமைத்தார். ஆகையால், ஒரு படையெடுப்பாளர் என்றும் முகலாயப் பேரரசுக்கு அடிகோலியவர் என்றும் இந்திய வரலாற்றில் பாபர் இடம் பெறுகிறார். அவருடைய பேரனை மாண்புமிக்க அக்பர் அப் பேரரசைச் சிறப்புமிக்க நிர்வாகம் என்ற கட்டடத்துடன் மீண்டும் நிலைநாட்டினார்.

இந்துஸ்தானத்தைக் கைப்பற்றி அவருடைய மகனுக்கு அவர் அளிக்க முடியவில்லை என்றாலும் இலக்கிய உலகத்திலும், வாழ்க்கை வரலாற்று இலக்கிய உலகத்திலும் பாபர் நிரந்தர இடம் பெற்றிருந் திருப்பார். அவருடைய அரசியல் சாதனைகளைவிட அவருடைய கவர்ச்சியான ஆளுமையே பொது வாசகர்களுக்குக் கவர்ச்சியளிக் கிறது. உலக வரலாற்றிலேயே அவர் ஒரு கவர்ச்சிமிக்க ஆளுமை யாளராவார். இவர் அமைதியற்ற மனிதர்களில் ஒருவர் ; சோம்பி யிராத உடலையும் உள்ளத்தையும் கொண்டவர். எப்பொழுதும் அயராது எல்லாவற்றையும் இத்தகைய மனிதர்கள் கவனித்து வந்தனர். மாண்புமிக்க இளவரசனுக்கும் ஒரு நல்ல மனிதனுக்கு முரிய மகிழ்ச்சி தருவதும் ஒழுங்காகச் சேர்க்கப்பட்டதுமான பண்பு கள் அவரிடத்தில் காணப்பட்டன. அவர் எக் காலமும் களிப்பாக இருப்பார் ; கவடில்லாமல் பேசுவார் ; மிதப்பண்புடையவர். இக் குணங்களையெல்லாம் அவர் பெற்றிருந்ததனால் எவ்விதத் துயரமும், இடையூறும், வறுமையும் அவரது அமைதித்தன்மையைக் கலைக்க முடியவில்லை, துணிகர வீரம் என்பது அவரது உயிர் மூச்சாகும்; சிற்சில வேளைகளில் அவர் மிகக் கொடுமையாகவும் இரக்கமில்லா மலும் நடந்துகொண்டார் ; ஆனாலும், அது சாதாரணமாக அவர் கொண்டிருந்த மகிழ்ச்சி தருவதும் அன்பு நிறைந்ததுமான குணத் தின் கண நேரமே நிலைத்திருக்கும் ஒரு கட்டமாகும். ‘கீழ் நாடு களின் வரலாற்றில் பாபர் கவர்ச்சிமிக்க ஆளுமையாளர்களுள் மிகச் சிறந்தவராவார். அக் கவர்ச்சியைத் தமது வாழ்க்கைக் குறிப்பு களுக்கும் அவர் அளிக்கிறார் என்ற உண்மை அவருடைய புகழுக்கு மிக முக்கிய காரணமாகும். அவர் மத்திய ஆசியாவையும் இந்தியா வையும், கொள்ளையடிக்கும் கூட்டங்களையும் மத்திய அரசாங் கத்தையும், தைமூரையும் அக்பரையும் இணைக்கும் சங்கிலி வளைய மாவார். ஆசியாவின் இரண்டு கொள்ளைநோய்களாகத் தோன்றிய மங்கோலியர்கள், துருக்கியர்கள், சிங்கிஷ், தைமூர் ஆகியவர் களின் இரத்தம் இவருடைய நரம்புகளில் பாய்ந்தோடியது.

நாடோடியாகத் திரிந்துகொண்டிருந்த டாடார்களின் (Tatar) துணிகர வீரத்துடனும் அமைதியுடன் ஓரிடத்தில் அமர்ந்திராத தன்மையுடனும், பாரசீகர்களின் நாகரிகமும் பண்பமைதியும் கலந்தன. முந்திய நாட்களில் அவர் புரிந்த துணிகரச் செயல்களும், இடைவிடாமல் பின்தொடர்ந்து எடுத்த முயற்சிகளும் வாழ்க்கை வரலாற்றிலும் இலக்கியத்திலும் அவரது இடத்தை நிர்ணயிக்கின்றன. பாபரது வம்சாவளியின் ஆதிக்கமும் பகட்டும் மறைந்து விட்டாலும் இவருடைய வாழ்க்கைச் சாதனைகள்—காலத்தைப் பார்த்து நகைக்கும் இலக்கியப் பதிவுகள்—மாறுமலும் அழியாமலும் நிலைத்திருக்கின்றன.

மேலும் படிப்பதற்கான நூல்கள்

1. 'பாபரின் வாழ்க்கைக் குறிப்புகள்' (The Memoirs of Babur), ஏ. எஸ். பெவரிட்ஜால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

2. 'தாரி கி ரஷீதி' (Tarikh-i-Rashidi), மீர்ஸா ஹைதர் தௌலத் (Mirza Haider Daughlat) என்பவர் எழுதியது. இ. டெனிஸன் ராஸ், என். எலியாஸ் ஆகியவர்களால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

3. 'அக்பர்நாமா' (Akbarnama), அபுல் ஃபாசல் (Abul Fazl) எழுதியது. பகுதி I, எச். பெவரிட்ஜால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, 1921.

4. 'பாபர் ஹுமாயூன் ஆகியவர்களின் காலத்தில் இந்திய வரலாறு' (1854), பகுதி I, எர்ஸ்கினுல் எழுதப்பட்டது. ('A History of India in the Time of Babur and Humayun,' 1854, by Erskine, Vol. I.)

5. 'பாபர்' (Babur—Rulers of India Series), லேன்பூல் (Lane-Poole) எழுதியது.

6. 'பாபரின் வாழ்க்கை' (Life of Babur), கால்டிஸாட் (Caldecott) இயற்றியது.

7. 'An Empire Builder of the 16th Century' (1918) by Rushbrook Williams.

8. 'Babur: Diarist and Despot' (1926) by S. M. Edwards.

9. 'Babur, First of the Mughuls' (1930) by Fernand Grenard, Homer White, Richard Glaenzer ஆகியவர்கள் மொழி பெயர்த்துள்ளனர்.

10. 'Cambridge History of India', Vol. IV, Chapter I.

3. ஹுமாயூன் (1530-1556)

முந்திய வாழ்க்கை (1508—1530)

நஸீருத்தீன் முகம்மது ஹுமாயூன் என்பவர் 1508ஆம் ஆண்டில் மார்ச்சு 6ஆம் நாளில் காபூலில் பிறந்தார். அவருடைய தாயான மாஹிம் பேகம் (Mahim Begam) என்பவளை பாபர் 1506-ல் மணம் புரிந்தார். அவள் ஒருவேளை ஷியா மதப் பிரிவினையைச் சார்ந்தவளாக இருக்கக்கூடும். ஓரிடத்தில் தங்கி இருக்கும் வாழ்க்கையை ஆப்கானிஸ்தானத்தில் பாபர் மேற்கொண்டபொழுது தமது மூத்த மகனின் கல்விக்காக சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும். அவர் துருக்கி, அராபிய, பாரசீக மொழிகளைக் கற்றார். ஆனால், எழுத்துக் கூட்டலிலும் எழுத்து நடையிலும் அவர் அக்கறை செலுத்தாததனால், கருத்துகளிலும் சேர்த்து எழுதுவதிலும் அறிஞர்களுக்குரிய சரிநுட்பத் திறத்தை அவர் பெற்றிருக்கவில்லை. பாபரின் வட இந்தியப் படையெடுப்பிற்குப் பிறகு அவர் ஹிந்தியையும் ஓரளவு கற்றுக்கொண்டார் என்று கூறப்படுகிறது. இலக்கியத்திலும் கவிதையிலுமன்றிக் கணித சாஸ்திரம், தத்துவம், வானநூல், சோதிடம் ஆகியவற்றிலும் அவர் ஊக்கம் கொண்டிருந்தார். இராணுவப் பயிற்சியும் அவரது கல்வியின் ஒரு பகுதியாக அமைந்திருந்தது. சிறுவனாக இருக்கும்பொழுதே சிவில் இராணுவ நிருவாகத்தில் அவர் தமது தகப்பனாருக்குத் துணையாக இருந்தார். இருபதாம் வயதில் பதக்ஷானின் கவர்னராக நியமிக்கப்பட்டார். பானிப்பட் போரின்தறுவாயில் ஹமீத்கான் (Hamid Khan) என்பவரின் தலைமையின்கீழிருந்த ஆப்கானிய முன்னணிப் படை ஒன்றைத் தாக்க ஹுமாயூன் அனுப்பப்பட்டார். ஹமீத்கானை ஹிஸ்ஸார் ஃபிரோஸா என்ற இடத்தில் அவர் முறியடித்தார். அப்பொழுது அவருக்கு வயது பதினெட்டாகும். அதுதான் அவரது போரின் முதல் அனுபவம். அதற்குப்பின் அவர் பானிப்பட்டிலும் கான்வாவிலும் ஆப்கானியர்களுடன் மற்றப் பல இடங்களிலும் போரிட்டார். 1526-ல் ஹிஸ்ஸார் ஃபிரோஸா மாவட்ட

மும் பிறகு சாம்பாலும் ஜாகீராக அவருக்கு அளிக்கப்பட்டன. கான்வாப் போருக்குப்பின் பதக்ஷானின் பொறுப்பை ஏற்பதற்கு அவர் அனுப்பப்பட்டார். ஆனால், அதை அவர் இரண்டு ஆண்டுக்குப்பின் கைவிட்டு 1529-ல் ஆக்ராவுக்குத் திரும்பினார். பிறகு சாம்பாலிலிருந்த தமது ஜாகீரைச் செயலாட்சி செய்ய அனுப்பிவைக்கப்பட்டார். அங்கே அவர் நோய்வாய்ப்பட்டதனால் ஆக்ராவுக்குத் திரும்பக் கொண்டுவரப்பட்டார். ஏற்கெனவே அவர் பட்டத்துக்கு வரவேண்டிய இளவரசராக நியமிக்கப்பட்டிருந்தார். மரணப்படுக்கையில் இருக்கும்பொழுது பாபர் அவரைத் தமது வாரிசாக நியமித்துத் தமது அதிகாரிகள் அவரை ஏற்றுக் கொள்ளும்படியும் செய்தார்.

அரியணையேறுதல் 1530, டிசம்பர் 30ஆம் நாள்

பாபரின் இறப்புக்கும் (டிசம்பர் 26ஆம் நாள்) ஹுமாயூன் அரியணையேறியதற்குமிடையில் (டிசம்பர் 30ஆம் நாள்) நான்கு நாள் இடைக்காலம் இருந்தது. அக் காலத்தில் அவரை விலக்கி அவரது இடத்தில் மாதி காஜாவைக் கொண்டுவர சதி ஒன்று நடந்தது. பிரதம மந்திரியான நைஸாமுத்தின் அலி முகம்மது கலிஃபா (Nizam-ud-din-Ali Muhammad Khalifa) என்பவர் ஹுமாயூனைப்பற்றி உகந்த கருத்தைக் கொண்டிருக்கவில்லை. ஹுமாயூனின் உரிமைகளைப் புறக்கணித்து மாதி காஜா அரியணையேறுதலுக்கு உயர் அதிகாரிகளின் ஒப்புதலைப் பெறுதல், நாட்டிற்கு நலனை விளைவிக்கும் என்று அவர் கருதினார். மாதி காஜா என்பவர் பாபருடைய மைத்துனரும் மறைந்துபோன அரசனின் சகோதரியான கான்ஸாதா பேகம் (Khanzada Begum) என்பவளுடைய கணவருமாவார்; அனுபவமும் திறமையும் பெற்ற நிர்வாகி அதற்கு மாறாக ஹுமாயூனும் மிக்க நம்பிக்கைக்கு இடமளிக்கவில்லை; டெல்லியிலிருந்த கஜானாப் பெட்டிகளைத் திறந்து அவற்றிலிருந்த பொருளை, அவருடைய தந்தையின் அனுமதியின்றி எடுத்துக் கொண்டு பதக்ஷானிலிருந்து வெளியேறிவிட்டார்; அவ்விதம் அவர் செய்தது கடமையைக் கைவிடுதலாகும். மேலும், முனைந்து முயற்சி செய்தல், விடாமுயற்சி, மனித விவகாரங்களைச் சரிவரப் புரிந்துகொள்ளுதல்போன்ற குணாதிசயங்களின் பற்றுக்குறை இளவரசரிடம் காணப்படுகிறது என்பதை மனித இயல்பினைச் சரிவர மதிப்பிடுவதில் வல்லுநரான கலிஃபா உணர்ந்திருக்க வேண்டும். இளம் வயதினர், அனுபவமற்றவர்கள் என்ற காரணங்களின் அடிப்படையில் கமரன் (Kamran), அஸ்காரி (Askari), ஹிண்டால் (Hindal) ஆகியவர்கள் புறக்கணிக்கப் பட்டனர். பாபரின் இறப்புக்கு முன்பே அச் சதி முற்றுப்பெற்றது.

ஆனாலும் அதைச் செயல்படுத்துவதற்கு முன்னமேயே கலிஃபா மனமாற்றம் செய்துகொண்டார். தபகாதி அக்பரி (Tabakat-i-Akbari) என்ற நூலின் ஆசிரியரான நைஸாமுத்தீன் அகமதுவின் தந்தை, முகம்மது முகீம் (Muhammad Muquim) என்பவர் மாதி காஜாவுக்கு அரியணை அளிப்பதற்கான சதியைக் கலிஃபா கைவிட்டதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகளை நேரில் கண்டார். மாதி காஜாவின் அறையிலிருந்து பிரதம மந்திரி வெளியேறின பிறகு மாதி காஜா மிக உரத்த குரலில் 'இறைவன் விரும்பினால், நான் அரசனான பிறகு உன்னுடைய தோலையும் மற்றத் துரோகிகளுடைய தோலையும் உரித்துவிடுவது என்னுடைய முதல் செயலாகும்' என்று தமக்குத்தாமே கூறிக்கொண்டார். மறைமுகமாக இருந்து இதைக் கேட்ட முகீம் பிரதம மந்திரிக்குத் தெரியப்படுத்தினார். அதன்மேல் கலிஃபா அத் திட்டத்தைக் கைவிட்டார்; சதியும் முற்றுப்புள்ளி பெற்றது. ஹுமாயூனின் முடிசூட்டல் 1530, டிசம்பர் 30ஆம் நாள் நடந்தேறியது.

அவரது இடையூறுகள்

(அ) உள்நாட்டு இடையூறுகள்

ஆப்கானியர்கள்: டெல்லியின் சிம்மாசனம் இடையூறு நிறைந்ததாகும் என்பதை ஹுமாயூன் கண்டார். முகலாயப் பேரரசு மத்திய ஆசியாவில் பால்க், குன்துஸ் (Qunduz) ஆகியவற்றையும், இந்தியாவில் பஞ்சாப், முல்தான், தற்போதைய உத்தரப்பிரதேசம் (Uttarpradesh), பீஹார், குவாலியர், டோல்பூர், பெயானா, சந்தேரி ஆகியவற்றையும் உட்கொண்டிருந்தது. அவற்றையெல்லாம் கொண்டிருந்த அப் பேரரசு சரிவர அடக்கப்படாததும், ஒழுங்கற்றதுமான இராச்சியமாக இருந்தது. பேரரசில் இருந்த ஆற்றல் வாய்ந்த பல குறுநில மன்னர்களும் குறிப்பாக ஆப்கானியர்களும் அடக்கப்படாமல் விட்டுவைக்கப்பட்டிருந்தனர். முகலாயர்களிடமிருந்து அவரது முன்னோரின் அரியணையைத் திரும்பப்பெறும் பேரவாவை மறைந்துபோன சுல்தான் இப்ராஹிமின் சகோதரரான முகம்மது லோடி கைவிடவில்லை. ஆப்கானியர்களின் உதவியைக் கொண்டு ஒரு சுதந்திர இராச்சியத்தை நிலைநாட்ட அவர்களை ஓர் ஆற்றல்வாய்ந்த சமுதாயமாக ஒன்றுபடுத்துவதற்கான வாய்ப்பினை ஷெர்கான் சூர் (Sherkhan Sur) தேடிக்கொண்டிருந்தார். மேலும், எந்த இராச்சியத்திலிருந்து தாம் விரட்டியடிக்கப்பட்டிருந்தார்களோ அவ்விராச்சியத்துக்குத் திரும்பி, அதை மறுபடியும் கைப்பற்றுவதற்கான வாய்ப்பைப் பிப்பானும் பயஸித்தும் (Bayazid) எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். வங்காளத்தைச் சார்ந்த நுஸ்ரத் ஷா

ஆப்கானியரை மிகத் துரிதமாக ஆதரித்துவந்தார். இந்தியாவில் பாபர் வருவதற்கு அழைப்பு அனுப்பியிருந்தவர்களுள் ஒருவரான ஆலம்கான், குஜராத்தைச் சார்ந்த பகதூர் ஷாவின் (Bahadur Shah) அரசவையில் அடைக்கலம் புகுந்திருந்தார். அவருக்குப் பண உதவியையும் அளித்து ஒரு பெரும்படையைத் திரட்டவும் பகதூர்ஷா உதவினார். அவருடைய மகனான தாதர்கானின் (Tatar Khan) தலைமையின்கீழ் அப் படை ஆக்ராவைக் கைப்பற்ற அனுப்பிவைக்கப்பட்டது.

மீர்ஸாக்கள் : ஹுமாயூனின் மிக நெருங்கின உறவினர்கள் குறிப்பாக பாபருடன் உறவு கொண்டாடிய தைமூரியத்துகளும் மீர்ஸாக்கள் என்ற பட்டப் பெயருடன் வழங்கியவர்களும் அவருடைய மிக உறுதியான பகைவர்களாவர். அவர்களுள் தலையார்ந்தவர் முகம்மது ஸமன் மீர்ஸா (Muhamad Zaman Mirza) என்பவராவார். அவர் ஹெராட்டைச் சார்ந்த சுல்தான் ஹுசைன் பைகராவின் பேரனாவார். ஹுமாயூனின் மாற்றாந்தாயின் மகளான மாசுமா பேகம் (Masuma Begam) என்பவளை மணம்புரிந்துகொண்டிருந்தார். அவர் ஓர் அனுபவ முதிர்ந்த வீரர்; ஆனாலும் மிகக் கொடுமை வாய்ந்தவர்; ஓரிடத்தில் அமைதியாக வாழ விருப்பமற்றவர். ஆகையால், டெல்லியின் அரியணையேறுதல் அவரது சக்திக்கு அப்பாற்பட்டது என்று அவர் கருதவில்லை; அவ்வளவிற்கு அவரது பேரவா முற்றியிருந்தது. முகம்மது சுல்தான் என்பவர் அடுத்த முக்கிய மீர்ஸா ஆவார். அவரும் தைமூரின் வழியில் தோன்றியவர்; இந்துஸ்தானத்தின் அரியணையின்மீது அவா கொண்டிருந்தவர். மூன்றாவதாக காஜா மீர்ஸா என்பவர் இருந்தார்; அவரைத்தான் பாபரின் பிரதம மந்திரி வாரிசாகத் தேர்ந்தெடுத்திருந்தார். செயல் நோக்கற்றவராக இருந்ததனால் அவர் தமது வாய்ப்பை இழந்துவிட்டார். இருந்தபோதிலும், பேரரசப் படையின் ஆற்றல்வாய்ந்த ஒரு பகுதிக்குத் தலைமை தாங்கியிருந்ததனாலும் மறைந்துபோன நெருங்கின உறவினரானதனாலும் தாம் ஹுமாயூனுக்குச் சமமானவர் என்று அவர் கருதினார். மேலும் பல உயர் பதவியாளர்களும் இருந்தனர்; அவர்கள் சகதாய்த் துருக்கியர்களும் ஆட்சிபுரியும் முகலாயக் குடும்பத்துடன் உறவுகொண்டவர்களுமாவர். பெரிய இராச்சியங்களின் தலைவர்களானதனாலும் ஆற்றல்மிக்க படைகளைத் தம்மிடம் வைத்துக்கொண்டிருந்ததனாலும் அவர்களும் மிக்க பேரவாக் கொண்டிருந்தனர்; புதிய அரசரின் போட்டியாளராகத் தம்மை நிலைநாட்டிக்கொள்ள விரும்பினர்.

அவருடைய சகோதரர்கள் : மீர்ஸாக்களேயன்றி ஹுமாயூனுடைய சகோதரர்களுடனும் அவர் போரிடவேண்டியிருந்தது.

மிக்கதாயிருந்தது; ஆனால், அது முனைப்பாக அமைந்திருக்க வில்லை. அவருடைய அந்தரங்க வாழ்க்கையில் அவர் உவகை ததும்பும் தோழராக இருந்தார். அவருடைய பண்புகள் மிகத் தூய்மையானவை; அவருடைய முழு வாழ்க்கையும் பண்பு மிக்கவர் ஒருவருடைய வாழ்க்கையை ஒத்திருந்தது. ஆனால், அரசர் என்ற நிலையில் அவர் ஒரு படுதோல்வியாவார்.' இங்ஙனமாக, ஹுமாயூன் தமக்குத்தாமே இடையூறாக இருந்தார்; தமக்குத்தாமே ஒரு பெரும் பகைவராவார்.

அவருடைய தவறுகள்

பேரரசின் பிரிவு

ஹுமாயூன் தமது ஆட்சியின் துவக்கத்திலிருந்தே உறுதியான முடிவை எடுப்பதற்கான திறமையற்ற நிலையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார், அவருடைய சகோதரர்களுக்கும் ஒன்றுவிட்ட சகோதரர்களுக்குமிடையில் பேரரசைப் பிரித்தது அவரது முதல் தவறாகும். அவருடைய கடும்போட்டியாளர்களான அவருடைய சகோதரர்களை உறுதியான கட்டுப்பாட்டுக்குட்படுத்தாமல் அவரது இராச்சியத்தில் பங்குகொள்பவர்களாக அவர் அவர்களை நடத்தினார். சுலைமான் (Sulaiman Mirza) என்பவர் பதக்ஷான் உடைமையில் உறுதியாக்கப்பட்டார். பதக்ஷானிலிருந்து திரும்பியவுடன் ஹிண்டாலுக்கு மிகப் பரந்த மீவாட் இராச்சியம் ஜாகீராக அளிக்கப்பட்டது. அவ்விராச்சியம் தற்போதைய ஆல்வார், கர்கோன் (Gurgaon), மதுரா மாவட்டங்கள், ஆக்ராவின் ஒரு பகுதி ஆகியவற்றை உட்கொண்டிருந்தது. ஆற்றல் வாய்ந்த ஒரு படையின் தலைவராக அவர் மீவாட்டின் தலைநகரான ஆல்வாருக்கு அனுப்பப்பட்டார். சாம்பால் மாவட்டம் அஸ்கரியிடம் ஒப்படைக்கப்பட்டது. அது மீவாட்டைப்போலவே பரந்ததாகவும் ஏராளமான ஜனத்தொகையைக் கொண்டதாகவும் இருந்தது. வெளிப்படையாகவே பகைமை பாராட்டிய கம்ரான், காபூல், காந்தாரம் ஆகிய உடைமைகளைப் பெற்றதுமன்றி பஞ்சாபையும் ஹிஸ்ஸார் ஃபிரோஸா மாவட்டத்தையும் வன்முறையினால் கைப்பற்றுவதற்கும் அனுமதிக்கப்பட்டார். பஞ்சாபையும் ஹிஸ்ஸாரையும் வன்முறையினால் கைப்பற்றியதை ஹுமாயூன் ஏற்றுக்கொண்டதனால் தமது தந்தையின் பேரரசின் அடிப்படையையே அவர் குலைத்தார். சிந்துப் பகுதியையும் (Indus), காபூலையும், காந்தாரத்தையும் கம்ரானுக்கு மாற்றியதால் தமது படைக்கு வீரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான சிறந்த இடத்தை அவர் இழக்க நேர்ந்தது. முகலாயர்கள் தமது படைவீரர்களை மத்திய ஆசியாவிலிருந்து தேர்ந்தெடுத்துக்

கொண்டிருந்தார்கள். ஆப்கானிஸ்தானம், பஞ்சாப் ஆகியவற்றின் உண்மை அரசராக கம்ரான் வீற்றிருந்தது மத்திய ஆசியாவுடன் ஹுமாயூன் கொண்டிருந்த தொடர்பை அறுத்து சிந்துநதிக் கப்பாலிருந்து வீரர்களைப் பெறுவதற்குத் தடையிட்டது. ஹிஸ்ஸாரைக் கைப்பற்றியதனால் பஞ்சாபுக்கும் டெல்லிக்குமிடையிலிருந்த நெடுஞ்சாலையைக் கம்ரான் பெற முடிந்தது. இராணுவ அதிகாரிகளுக்கிடையில் இராச்சியத்தைப் பெருவாரியாகப் பிரித்துக் கொடுக்கும் கொள்கையின் தீவிர விளைவுகளை ஹுமாயூன் உணர்ந்துகொள்ளவில்லை. அக் கொள்கைக்கு அவருடைய தந்தை பொறுப்பாளியாவார். பேரரசினைத் தமது சகோதரர்களுக்கிடையில் பிரித்துக்கொடுத்தல் போதாதெனத் தமது ஒவ்வோர் அமீரினுடைய ஜாகீரையும் ஹுமாயூன் அதிகரித்தார். இது உயர்தர முகலாய அதிகாரிகளிடம் கீழ்ப்படியாமையை வளர்த்தது. அவருக்கும் எல்லையற்ற கவலையைத் தந்தது.

கலஞ்சாரின்மீது படையெடுத்தல் (Expedition to Kalinjar) 1531

அரியணையேறிய ஆறு மாதத்திற்குள் ஹுமாயூன் பண்டேல் கண்டிலுள்ள கலஞ்சார் அரணை முற்றுகையிடச் சென்றார். அவ்வரணின் ஆட்சியாளர் ஆப்கானியர்களுடன் நல்லுறவு கொண்டிருந்தனர் என்று கருதப்பட்டது. முற்றுகை சில மாதங்களாக நீடித்தது; இறுதியில் ஒப்பந்தம் செய்துகொண்டு ராஜாவினிடமிருந்து பெரும் இழப்பீட்டை ஹுமாயூன் பெற்றார். இங்ஙனம் அவர் செய்ததற்குக் காரணம் கிழக்கிலிருந்து வந்துகொண்டிருந்த ஆப்கானிய பேரச்சுறுத்தலாகும். அதை அடக்க அவர் அங்குச் சென்றார். கலஞ்சார் படையெடுப்பு ஒரு தவறுகும்; ராஜாவை முறியடிக்க முடியவில்லை. ஹுமாயூன் தமது எண்ணத்தை நிறைவேற்ற முடியவில்லை. சாதுர்யமான ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து அவர் அந்த ராஜாவைத் தமக்கு நண்பனுக்கிக்கொண்டிருக்கக்கூடும்.

ஆப்கானியர்களுக்கெதிராக நடத்திய முதற் படையெடுப்பு: முதற் சூனர் (Chunar) முற்றுகை, 1532

முகலாய மாகாணமான ஜான்புரியை (Janpur) நோக்கி முகம்மது லோடியின் தலைமையின்கீழ் பீஹாரைச் சார்ந்த ஆப்கானியர்கள் முன்னேறிக்கொண்டிருந்ததனால் கலஞ்சார் முற்றுகையை ஹுமாயூன் கைவிடவேண்டி நேரிட்டது. அம் மாகாணம், பிரதம மந்திரியான கலீஃபாவின் தம்பியான ஜுனைத் பர்லாஸ் (Junaid Barlas) என்பவரின் பொறுப்பில் இருந்தது. தாக்குதலைச் சமாளிக்க முடியாது ஜுனைத் பின்வாங்கினர். பாரா

பங்கி (Barabanki) மாவட்டத்திலுள்ள தற்போதைய நவாப்கஞ்ச் (Nawabganj) என்னும் நகரம் வரை ஆப்கானியர்கள் முன்னேறினர். 1532, ஆகஸ்டில் தௌரியா (Dauhria) என்ற இடத்தில் மகமூத் லோடியை ஹுமாயூன் தாக்கினர். ஆப்கானியர்கள் முறியடிக்கப்பட்டனர்; ஒரே குழப்பத்தில் பீஹாருக்குத் திரும்பி ஓடி வந்தனர். பிறகு ஹுமாயூன் சூனரை (Chunar) முற்றுகையிட்டார்; அப்பொழுது அது ஷேர்கானின் (Sher Khan) பொறுப்பில் இருந்தது. முற்றுகை நான்கு மாதங்களாக நீடித்து நடந்தது (1532, செப்டெம்பரிலிருந்து டிஸம்பர் வரை). ஹுமாயூன் அதைக் கைப்பற்றாது முற்றுகையைக் கைவிட்டு ஷேர்கானிடமிருந்து பெயரளவு கீழ்படிதலைப் பெற்றார். அதன்படி, தமது மகனை குதுப்கானின் (Qutub Khan) தலைமையின்கீழ் ஓர் ஆப்கானியப் படையை முகலாயப் பேரரசரிடம் ஒப்படைக்க ஷேர்கான் இணங்கினர். பிறகு ஹுமாயூன் ஆக்ராவுக்குத் திரும்பினர்; ஷேர்கானை அவரது மூலப்பொருள்களை வளர்த்துக்கொள்வதற்கும் அதிகாரத்தை அதிகப்படுத்திக்கொள்வதற்கும் விட்டுவைத்தார். இது இவரது மூன்றும் தவறுகும்.

காலமும் பணமும் வீணுக்குதல், 1533-34

குஜராத்தில் பகதூர்ஷா ஆக்கிரமிப்புக் கொள்கை ஒன்றை இடைவிடாமல் பின்பற்றிவந்தார். அங்கிருந்து அமைதி குலைக்கும் செய்திகள் வந்துகொண்டிருந்தபோதும் அடுத்த ஒன்றரை ஆண்டு ஆக்ராவிலும் டெல்லியிலும், விருந்துகளிலும் களிப்புகளிலும் வீணுக்கினர். அவரது கருவூலம் வற்றிவிட்டது; இருந்தபோதிலும், ஏராளமான பணத்தை விருந்துகளிலும் ஆயிரக்கணக்கான தமது அடிப்பணியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பரிசுகளையும் பதவிகளுக்குரிய விலையுயர்ந்த சிறப்புடைகளையும் அளிப்பதிலும் ஹுமாயூன் செலவிட்டார். டெல்லியில் பெரிய அரண் ஒன்றைக் கட்டுவதில் காலத்தையும் பணத்தையும் வீணுக்கினர். அதற்கு தீன்பன (Din Panah) என்று அவர் பெயர் வழங்கினர். இவ்விதமாக, பகதூர்ஷா தமது இராச்சியத்தையும் அதிகாரத்தையும் அதிகரித்துக்கொள்ள அவருக்கு ஹுமாயூன் வாய்ப்பளித்தார்.

பகதூர் ஷாவுடன் போர் (1535–36); மாளவம், குஜராத்து ஆகியவற்றைக் கைப்பற்றி இழத்தல்

ஹுமாயூன் ஒப்புற விளங்குங் கொள்கையைப் பின்பற்றியும் முகம்மது ஸமன் மீர்ஸா (Muhammad Zaman Mirza), முகம்மது சுல்தான் மீர்ஸா (Muhammad Sultan Mirza) ஆகியவர்களைத் தம் வசப்படுத்த அவரால் முடியவில்லை. அவர்கள் முறையே பீஹாரி

லும் கன்னேஜிலும் ஜாகீர்கள் அளிக்கப்பட்டிருந்தனர். அவருடைய ஆப்த நட்பையும் ஆதரவையும் பெற ஹுமாயூன் முகம்மது ஸமினை பீஹாரின் கவர்னராக உறுதிப்படுத்தினர். இவ்விரு மீர்ஸாக்களும் வலி குப் மீர்ஸா (Wali Khub Mirza) என்பவருடன் சேர்ந்துகொண்டு 1534, ஜூலையில் கிளர்ந்தெழுந்தனர்; ஆனல், அவர்கள் முறியடிக்கப்பட்டனர். முகம்மது ஸயிமன் மீர்ஸா சிறையிலடைக்கப்பட்டார். அவரைக் குருடாக்க ஆணையிடப்பட்டது; ஆனல், அவர் குருடாக்கப்படுவதிலிருந்து தப்பித்துக்கொண்டு குஜராத்தைச் சார்ந்த பகதூர்ஷாவிடம் ஓடிவிட்டார் (1534, நவம்பர் மாதம்). கைதியைத் திருப்பிக் கொடுத்துவிடுமாறு பகதூர் ஷாவை ஹுமாயூன் வேண்டிக்கொண்டார். ஆனல், அவர் அதற்கு மறுத்துவிட்டார். முகலாய அரசனின் ஆப்கானியப் பகைவர்கள் பலருக்குக் குறிப்பாக ஆலம்கான் லோடிக்கு அவர் ஏற்கெனவே மறைவிடம் அளித்துள்ளார்; பேரரசின் இராச்சியத்துக்கெதிராக அவர்கள் கொண்டிருந்த திட்டங்களில் அவர்களுக்கு ஆதரவு தந்தார். பகதூர்ஷா ஒரு பேரவா மிக்க அரசராவார். அவர் ஏற்கெனவே மாளவத்தைக் கைப்பற்றியுள்ளார் (1531). ரெய்சன் அரணைத் (Fortress of Raison) தம் வசமாக்கிக்கொண்டார் (1532, மே மாதம்); சித்தூரைச் சார்ந்த சிசோதியத் தலைவரை முற்றுகையிட்டு அவரைத்தோற்கடித்துள்ளார் (1533). சிறந்த துப்பாக்கிப் படையினரைத் திரட்டியும், கான்ஸ்டான்டிநோபிளைச் (Constantinople) சார்ந்த ரூமிகான் (Rumi Khan) என்னும் புகழ்வாய்ந்த பீரங்கி வீரரின் பணிவிடையைப் பெற்றும் அவர் தமது இராணுவ பலத்தை அதிகரித்துக்கொண்டார். டெல்லியைக் கைப்பற்றித் தம்மை வட இந்தியாவின் பேரரசராக ஆக்கிக்கொள்ளும் பேரவா அவரைப் பிடித்தாட்டியது. ஆகையால், ஹுமாயூன் கோரிக்கைகளுக்கு இணங்க அவர் தயாராயில்லை. எரிச்சலான பேச்சுவார்த்தை நெடுங்காலமாக நடந்தது. இறுதியில் அது போர் தொடங்குவதில் முடிந்தது. இது தவிர்க்க முடியாததாக இருந்தது. ஏனென்ருல், இராசபுதனத்திலும் மத்திய இந்தியாவிலும் குஜராத்து இராச்சியம் நீடித்துப் பரவிக்கொண்டிருந்தது ஹுமாயூனுக்குப் பீதி விளைவித்திருக்கக்கூடும். மேலும், ஆற்றல்மிக்க படையைத் தேர்ந்தெடுத்து முகலாயர்களுக்குரியதான பெயானவைக் கைப்பற்றுவதற்காக ஆலம்கான் லோடியின் மகனை தாதர்கானுக்கு பகதூர்ஷா ஏற்கெனவே உதவியிருந்தார். ஹுமாயூன் தமது இரு சகோதரர்களான அஸ்கரி, ஹிண்டால் ஆகியவர்களை அரணைக் கைப்பற்ற அனுப்பிவைத்தார். அவர்கள் தாதர்கானை மன்டிரேல் (Mondrael) என்ற இடத்தில் தோற்கடித்தார்கள் (1534, நவம்பர்).

பகதூர்ஷாவுக்கெதிராக ஹுமாயூன் தாமே நேரில் சென்றார். அப்பொழுது பகதூர்ஷா சித்தூரின்மீது இரண்டாம் முறையாக முற்றுகையிட்டுக்கொண்டிருந்தார். முற்றுகை மிகக் கடுமையாக இருந்ததனால் ராணா விக்ரமாதித்யரின் (Rana Vikramaditya) தாயான கரமேதி (Karameti) (கர்ணாவதி—Karnawati) ஹுமாயூனின் உதவியை நாடி, அவருக்கு ஒரு ராகியையும் (Rakhi) அனுப்பிவைத்தாள். அவ்விதம் செய்தல், பகைவர்களின் கைகளிலிருந்து சகோதரர் என்ற முறையில் தமது சகோதரியைக் (ராணியை) காப்பாற்றுவது அவருடைய கடமையாகும் என்பதைக் குறிப்பதாகும். அப் பரிசை ஹுமாயூன் ஏற்றுக்கொண்டு சித்தூரை நோக்கி முன்னேறினார் என்று கூறப்படுகிறது. ஆனால், அவர் சாரங்கபூரில் (Sarangpur) தங்கினார் (1535, ஜனவரி மாதம்). பகதூர்ஷா பீதியடைந்தார். ஆனால், முஸ்லிமல்லாதவருக்கெதிராகப் போரில் ஈடுபட்டிருந்த சமய சகோதரரைத் தாக்கக்கூடாது என்ற முஸ்லிம் மரபினை முகலாய அரசர் பின்பற்றுவார் என்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் அவர் அம் முற்றுகையை மேலும் மும்முரமாக நடத்தினார். அவர் அவ்விதம் எண்ணியது சரியே. அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்காது மூட அடிப்படையிலே நோக்கிய ஹுமாயூன் ராணாவைப் போன்ற பிற சமயத்தினர் ஒருவருடன் பகதூர்ஷா போர்புரிந்துகொண்டிருக்கும் சமயத்தில் அவரைத் தாக்குவது பாவச் செயலாகும் என்று கருதினார். இது ஹுமாயூனின் மிகப்பெரிய தவறாகும். இராசபுத்திரர்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறுவதற்கான மிகச் சிறந்த வாய்ப்பை அவர் இழந்தார். 'அவ்வாதரவின் விலையுயர்ந்த மதிப்பினை அவருடைய மகனான அக்பர் உணர்ந்திருந்தார்.'

சித்தூர் வீரத்துடன் எதிர்த்து வீழ்ச்சியுற்றது (1535, மார்ச் எட்டாம் நாள்). ஜௌஹர் (Jauhar) என்ற பயங்கரச் சடங்கினைப் பெண்கள் மேற்கொண்டனர். மூன்று நாட்களாக நகரம் சூறையாடப்பட்டது, அதற்குள் ஹுமாயூன் சித்தூருக்கு 60 மைல் தூரத்திலிருந்த மண்டேசருக்கு (Mandasor) அருகில் வந்து சேர்ந்தார். பகதூர்ஷா தமது வெற்றிப்படையைக் கொண்டு முகலாயர்களைத் தைரியமாகத் தாக்காது தற்காப்பு நிலையை மேற்கொண்டார்; உண்மையில் அவரது பாசறையில் அவர் முற்றுகையிடப்பட்டார். அவருடைய பொருள்களுக்குப் பற்றுக்குறை ஏற்பட்டது. பட்டினி கிடக்கவேண்டுமோ என்ற நிலையையும் அவர் எதிர்நோக்க நேர்ந்தது. ஆகையினால் 1535, ஏப்ரல் 25ஆம் நாள் அவர் ஓட்டம் பிடித்து மாண்டு (Mandu) அரணில் அடைக்கலம் புகுந்தார்.

பகதூர்ஷாவின் பாசறையிலிருந்து வந்த சப்தம் பகைவர்கள் தாக்குதல் செய்ய ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றனர் என்று முகலாயர்களை நம்பும்படி செய்தது. அதனால் ஹுமாயூன் குதிரை மேலேயே அமர்ந்திருந்தார். அவருடைய படையினரும் போருக்கு ஆயத்தமாக இருந்தனர். காலையில் உண்மை வெளியாகியது. பகதூர்ஷாவைப் பின் துரத்திச்செல்ல குதிரைப்படை வீரர்கள் அனுப்பப்பட்டனர். வெகு விரைவில் மாண்டு அரணை ஹுமாயூன் முற்றுகையிட்டார். பகதூர்ஷா பேச்சு வார்த்தைகளைத் தொடங்கினார். அதற்கிடையில் சில முகலாய வீரர்கள் நகரத்தின் சுவரேறி வாயிலைத் திறந்துவிட்டார்கள். அதன்பிறகு பகதூர்ஷா அரணில் அடைக்கலம் புகுந்து பிறகு பரோடாவுக்கு (Baroda) இருபத்து எட்டு மைல் தூரத்திலிருந்த சாம்பானெருக்கு (Champaner) (1535, ஜூன் முதல் நாள்) ஓடிவிட்டார். மாளவம் முழுவதையும் ஹுமாயூன் கைப்பற்றி சாம்பானெருக்கு விரைந்து அரணை முற்றுகையிட்டார். பகதூர்ஷா மனமுடைந்து காம்பேயுக்கு (Cambay) ஓடினார் (1535, ஜூன் 15ஆம் நாள்). போர்ச்சுகீசியர்களை (Portuguese) எதிர்க்கத் திரட்டிய கப்பற்படையை அவர் அங்கே அழித்தார். காம்பேயிலிருந்து அவர் டையூவுக்கு (Diu) ஓடினார். ஹுமாயூன் நீடித்துப் பின்தொடர்ந்து காம்பேயை அடைந்தார். அங்கே அவருடைய பாசறை தல குறுநில மன்னர் ஒருவரால் தாக்குண்டது. ஆனால், தாக்கியவர்கள் முறியடிக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர்; பலர் கொல்லப்பட்டனர். காம்பேயிலிருந்து சாம்பானெருக்கு ஹுமாயூன் திரும்பினார் (ஜூலை முதல் நாள்). சாம்பானெர் இக்தியார் கான் (Ikhtiyar Khan) என்ற குஜராத்திய அதிகாரி ஒருவரின் பொறுப்பில் இன்னும் இருந்தது. அடர்த்தியான காட்டின் நடுவில் இருந்த அரணை மீண்டும் தாக்க துரிதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நான்கு மாதங்கள் கழிந்த பின்பும் முற்றுகையிடுவதில் முகலாயர்கள் முன்னேற்றம் பெறவில்லை. நல்வசமாக, ஒரு நாள் சில கிராமவாசிகள் காட்டிலிருந்து வெளிவருவதை ஹுமாயூன் கண்டு, அப் பக்கத்திலிருக்கும் சுவர் மனிதர்களை உள்ளே அனுமதிக்கும் அளவுக்குத் தாழ்வாக இருக்கிறது என்பதை யூகித்தார். ஆகையால், ஓர் இரவில் சுவர் ஏறுவதற்கான வழியைக் கண்டுபிடித்தார். சுவரின் கற்களுக்கிடையிலிருந்த சுண்ணும்பில் இரும்பு முட்களை அடித்து அவற்றின் உதவியால் சுவர் ஏறுவதற்கு முயற்சி செய்தார். பகைவனின் கவனத்தை மற்றப் புறங்களில் திருப்புவதற்காக அரணின் மற்றப் பகுதிகளைத் தொடர்ந்து தாக்கும்படி தமது வீரர்களுக்கு ஹுமாயூன் உத்தரவிட்டார். அவரும் அவருடைய வீரர்களும் நில ஒளியில் சுவர் ஏறினார்கள். குஜராத்தியர்கள் அச்சமுற்றனர்; குழப்பமடைந்தனர். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்

கொண்டு ஹுமாயூனின் ஆட்கள் வாயிலைக் கைப்பற்றினர். சரணடையுமாறு இக்தியார் கான் 1535, ஆகஸ்டு 6ஆம் நாள் வற்புறுத்தப்பட்டார். சாம்பானெர் குஜராத்து அரசர்களின் செல்வக்களஞ்சியமாக இருந்ததனால் பேரரசர் பெரும் கொள்ளைப் பொருளைப் பெற்றார்.

மாண்டு, சாம்பானெர் ஆகியவற்றைக் கைப்பற்றியது ஒரு மாபெரும் சாதனையாகும். ஆனாலும், தமது ஆட்சியை உறுதிப் படுத்த எவ்வித நடவடிக்கையையும் ஹுமாயூன் எடுக்கவில்லை; களியாட்டங்களிலும் இன்பங்களிலும் பல வாரங்களை வீணாக் கினார். சாம்பானெரில் அவரது கையில் சிக்கிய பெருவாரியான செல்வத்தை வீணாகச் செலவிட்டார். குஜராத்தில் உண்டான நிருவாகக் குழப்பத்தை பகதூர்ஷா தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொண்டு வருவாயைத் திரட்டத் தமது நம்பிக்கைக்கு உரியவரான இமாதுல் முல்க் (Imad-ul-Mulk) என்ற அதிகாரியை ஆமதாபாத்துக்கு (Ahmadabad) அனுப்பிவைத்தார். அவருக்கு உதவியாகப் பெரும்படை ஒன்றும் சென்றது. திரட்டிய நிதியி லிருந்து பணத்தைச் செலவழித்து ஆற்றல் வாய்ந்த ஒரு பெரும் படையை அவர் திரட்டினார். இப்பொழுதுதான் ஹுமாயூன் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டார். இமாதுல் முல்க்கைத் தாக்க ஹுமாயூன் தமது சகோதரரான அஸ்கரியை அனுப்பினார். இமாதுல் முல்க் அஸ்கரியை வியப்புக்குள்ளாக்கினார்; ஆனாலும் அவரால் முறியடிக்கப்பட்டார். அதற்கிடையில் ஹுமாயூன் தமது சகோதரருக்கு உதவியளிக்க முன்னேறி ஆமதாபாத்தைக் கைப்பற்றினார் (1535 அக்டோபர்). இப்பொழுது அவர் அஸ்கரி யைக் குஜராத்தின் கவர்னராக நியமித்து அவருக்கு உதவியாக அனுபவமிக்க அதிகாரியான ஹிந்து பேக் (Hindu Beg) என்பவரை அனுப்பி வைத்தார். அதே சமயத்தில் பகதூர்ஷாவுக்கு அடைக் கலம் தந்திருந்த டையூவைத் தாமே நேரில் தாக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருந்தார். ஆனால், இதை அவரால் சாதிக்க முடியாது என்பதை அவர் உணர்ந்தார். ஏனென்றால், அமைதி குலைக்கும் செய்திகள் அவருக்கு மாளவத்திலிருந்து எட்டின. அங்கே, ஒழுங்காக அமைக்கப்பட்ட நிர்வாகம் இல்லாததனால் முகலாயத்துருப்புகள் கிளர்ச்சியாளர்களால் உஜ்ஜெய்னுக்கு(Ujjain) விரட்டியடிக்கப்பட்டனர். மாண்டுவுக்குத் திரும்பும்படி (1536, பிப்ரவரி 22ஆம் நாள்) ஹுமாயூன் வற்புறுத்தப்பட்டார். அங்கே அவர் மீண்டும் சோம்பலில் மூழ்கினார். இதற்கிடையில் குஜராத்து மீண்டும் குழப்பத்தில் சிக்கியது. அவ்விடத்தைவிட்டு அவர் விலகிய பிறகு அவர்கள் கிளர்ந்தெழுந்தனர். கப்பற்படை ஒன்றை வைத்திருந்த பகதூர்ஷா போர்ச்சுகீசியர்களிடமிருந்த

உதவியையும் சில ஆஃப்ரிக்க அடிமைகளையும் (African slaves) பெற்று முகலாயர்களிடமிருந்து பல நகரங்களை மீட்டுக்கொண்டார். அஸ்கரி திகிலுற்று மாகாணத்தின் பாதுகாப்பைக் கவனிக்காது தன் பாதுகாப்பிலேயே கவனத்தைச் செலுத்தினார். முகலாயர்களின் ஆட்சியில் அதிருப்தி கொண்டிருந்த தல குஜராத்திய தலைவர்கள் பகதூர்ஷாவைத் திரும்பி வருமாறு அழைத்தனர். அவர் படையைத் திரட்டிக்கொண்டு ஆமதாபாத் நோக்கி முன்னேறினார். அந் நெருக்கடியான தறுவாயில், அஸ்கரியும் ஹுமாயூனிடமிருந்து உதவி எதிர்பார்க்க முடியாத நிலையில், அவருடைய படை வீரர்களுக்கிடையில் பிளவு ஏற்பட்டது. ஹுமாயூனிடமிருந்து தாம் சுதந்திரம் அடைந்துவிட்டதாக அறியப்படுத்தினால் அது அவரது படைக்கு ஊக்கமூட்டும் என்று சிலர் அவருக்கு அறிவுரை கூறினார்கள். அதற்கிடையில் பகதூர்ஷா ஆமதாபாத்துக்கு அருகில் வந்து சேர்ந்தார். ஒரு சிறு போருக்குப்பின் அஸ்கரி தமது இடத்திலிருந்து விலகிக்கொண்டு சாம்பானெரை நோக்கி ஓடினார் (1536, ஏப்ரல்). அவ்விடத்தின் கவர்னரான தார்தி பேக் (Tardi Beg) என்பவருடையபற்று, பகதூர்ஷா சாம்பானெர் அரணில் கருவூலத்தைக் கைப்பற்றுவதையும் தம்மை ஒரு சுதந்திர அரசனாக அறியப்படுத்திக்கொள்வதையும் தடுத்தது. தார்தி பேக் ஆக்ராவை நோக்கி முன்னேறினார் (1536, ஏப்ரல் 21ஆம் நாள்). இதற்குள், பகதூர்ஷா சாம்பானெர் வந்து சேர்ந்தார். இதனால் அக் கோட்டையைத் தார்தி பேக் கைவிட்டு (1536, ஏப்ரல் 22ஆம் நாள்) தம்மிடம் வசப்பட்ட செல்வத்தை யெல்லாம் திரட்டிக்கொண்டு மாண்டுவுக்குப் பின்வாங்கினார். இவ்விதமாக, ஓர் ஆண்டுக்குச் சிறிது மேற்பட்ட கால அளவில் குஜராத் கைப்பற்றப்பட்டு இழக்கப்பட்டது (1535-36). ஹுமாயூனின் பேரரசின் அமைதியற்ற நிலையைப்பற்றிய செய்தி தொடர்ந்து வந்துகொண்டிருந்ததனால் மாளவத்தைக் கைப்பற்றமுடியும் என்று அவர் கருதவில்லை. ஆகையினால், 1536ஆம் ஆண்டு மே மாத இடையில் அவர் மாண்டுவை விட்டுவிட்டு ஆக்ரா நோக்கி முன்னேறினார். அவ்விடத்திற்கு அவர் ஆகஸ்டு மாதம் வந்துசேர்ந்தார். இவ்விதமாக மாளவ மாகாணம் முழுவதும் இழக்கப்பட்டது. அம் மாகாண இராச்சியத்தின் முந்திய அரசர்களின் ஊழியத்தில் அதிகாரியாக இருந்த மல்லு கான் (Mallu Khan) அதைக் கைப்பற்றினார்.

ஷேர் கானுடன் போட்டி (1537, அக்டோபர்—1540, ஜூன்).

(i) சூரர்கள் இரண்டாம்முறை முற்றுகையிடப்படுதல்: அக்டோபர் 1537—மார்ச்சு 1538

முகலாயர்களுக்கு மிக நெருக்கடியான நிலையில் அஸ்கரியுடன் சண்டை செய்தல் பயனற்றதாகும் என்று உணர்ந்து ஹுமாயூன்

அவருடைய விசுவாசமின்மையையும் இறைமைக்குக் கொண்டாடிய போலி உரிமைகளையும் மன்னித்துவிட்டார். ஆக்ராவில் ஹுமாயூன் நுழைவதற்குச் சிறிது காலத்திற்கு முன், ஹிண்டால் கன்னோஜ்தொட்டு ஜான்புரிவரை பரவியிருந்த இராச்சியத்தை வன்முறையால் கைப்பற்றியவரும் வழக்கமாகவே கிளர்ச்சியாளராக இருந்தவருமான முகம்மது சுல்தான் மீர்ஸா என்பவரைத் தோற்கடித்து அவரை வங்காளத்துக்கு விரட்டியடித்தார். ஆக்ராவில் ஓராண்டுக் காலமாக ஹுமாயூன் தங்கியிருந்தார் (1536 ஆகஸ்டு—1537 ஜூலை). ஆனாலும், முகலாயப் பேரரசின் கீழ்ப் பகுதிகளில் ஷெர்ஷா மிகத் துரிதமாக முன்னேறிக்கொண்டிருந்ததை அவர் பொருட்படுத்தவில்லை. ஷெர்ஷா 1532-ல் ஹுமாயூனுக்குக் கீழ்ப்படிந்தபோதிலும் டெல்லிக்கு அவர் கப்பத்தைச் செலுத்தவில்லை. பேரரசரால் பிணையாகக் கொண்டுபோகப்பட்டவரும் ஷெர்ஷாவின் மகனுமான குதுப்கான் (Qutub Khan) தமது படைகளுடன் சேர்ந்துகொண்டு தமது தகப்பனை விட்டு விலகினார். பேரரசர் குஜராத்துப் படையெடுப்பில் மூழ்ந்திருக்கும்பொழுது முகலாயர்களிடமிருந்து எவ்வித எதிர்ப்புமின்றித் தெற்கு பீஹாரில் ஷெர்கான் தமது பிடிப்பை மேலும் வலியுறுத்திக்கொண்டார். 1534-லும் 1536-லும் இரு போர்களில் வங்காளத்து அரசரையும் அவர் முறியடித்தார்; அதனால் அவரது பொருள்களும் புகழும் பெருமளவு அதிகரித்தன. இந்த ஆப்கானியத் தலைவர் இவ்வளவு வல்லமைமிக்கவராகிவிட்டார் என்பதை 1537ஆம் ஆண்டின் மழைக்காலம்வரை ஹுமாயூன் உணர்ந்துகொள்ளவில்லை. குஜராத்தையும் மாளவத்தையும் மீட்பதற்கான யோசனைபுரிவதிலும் தமக்குப் பிரியமான இன்பங்களிலும் ஒரு முழு ஆண்டுக் காலத்தை (1536ஆகஸ்டு—1537ஜூலை) ஆக்ராவில் ஹுமாயூன் மூடத்தனமாக வீணாக்கினார். குஜராத்தின் அரியணையைத் தான் கைப்பற்றுவதில் தோல்வியுற்ற பின்னும் பஞ்சாபில் வீணான கிளர்ச்சி ஒன்றைச் செய்தபின்னும் திரும்பிய வஞ்சகமிக்க முகம்மது ஸமன் மீர்ஸாவை மூடத்தனமாக மன்னித்த பின்னர் ஹுமாயூன் 1537 ஜூலை 27ஆம் நாள் சூனார் நோக்கி முன்னேறினார். சூனார்கர் கோட்டையை ஹுமாயூன் முற்றுகையிட்டார். அக் கோட்டையின் முன்னாள் கவர்னரான தாஜ்கான் (Taj Khan) என்பவரின் விதவையான லாட் மலீகா (Lad Malika) என்பவளை ஷேர்கான் மணம் புரிந்துகொண்டதனால் அக் கோட்டை அவருடையதாயிற்று. அவருடைய மகனான குதுப்கானின் பொறுப்பில் அக் கோட்டை இருந்தது. முற்றுகையிடுபவர்களுக்குத் துன்பம் விளைவிக்க சுற்றுப்புற மலைகளிலிருந்த தமது படைகளை அவர் பின்வாங்கிக்கொண்டார். ஆறுமாத காலமாக முற்றுகை நீடித்தது (1537 அக்டோபர்—1538, மார்ச்சு). ரூமிகான் (Rumi Khan) பெரு முயற்சி செய்தும்

கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. ரூமிகான் மண்டேசர் (Mandasor) போருக்குச் (1535 ஏப்ரல்) சிறிது காலத்திற்குமுன் தமது முன்னுள் தலைவரான பகதூர்ஷாவைக் கைவிட்டு ஹுமாயூனுடன் சேர்ந்துகொண்டவராவார். அதனுல் அவர் ஓர் சூழ்ச்சித் திட்டத்தைக் கையாளவேண்டியதாயிற்று. ஓர் ஆஃப்ரிக்க அடிமைச் சிறுவன் கசையடி கொடுக்கப்பட்டு அரணுக்குள் அனுப்பி வைக்கப்பட்டான். ஆற்றுக்குப் பக்கத்தில் இருந்த அமைப்புகளின் பலவீனத்தைக் கவனித்ததற்குப் பிறகு அச் சிறுவன் சில நாட்களுக்குள் வெளிவந்துவிட்டான். மிதந்துவரும் பீரங்கிப் படைக் குழுக்களை ரூமிகான் நகர்த்தி, அரணின் பலவீனமுற்ற பகுதியை நோக்கிச் சுட்டுச் சுவரில் பிளவு ஒன்றை ஏற்படுத்தினர். பிறகு தாக்குதல் செய்யும்படி அவர் உத்தரவிட்டார்; அரணும் கைப்பற்றப்பட்டது. எல்லாருக்கும் குற்ற மன்னிப்பு அளிப்பதாக வாக்குறுதியளித்ததை முகலாயர்கள் காப்பாற்றிக்கொள்ளவில்லை. பல நூற்றுக்கணக்கான ஆப்கானியத் துப்பாக்கி வீரர்களின் கைகளைத் துண்டிக்குமாறு அவர் ஆணையிட்டார். ரூமிகானை அரணின் தளபதியாக நியமித்ததற்குப் பிறகு ஹுமாயூன் ஷேர்கானை நோக்கி முன்னேற முடிவு செய்தார். அதற்குள் ஷேர்கான் வங்காளத்துக்குள் நுழைந்து அதை அனேகமாகக் கைப்பற்றினர். சூனரைக் கைப்பற்றுதல் ஒரு முக்கிய இராணுவ சாதனையாயினும் அதனுல் பேரரசருக்குப் பெருத்த இலாபம் எதுவும் ஏற்படவில்லை. முக்கிய நிலப் பாதைகள் எதுவும் அதிலிருந்து செல்லவில்லை. அதனின் முற்றுகையில் அரிய ஆறு மாதங்கள் வீணுக்கப்பட்டன. அந்நிலை, வங்காளப் படையெடுப்பை வெற்றி முடிவுக்குக் கொண்டு வரவும் கௌரிலிருந்தும் (Gaur) ரோட்டாஸிலிருந்தும் (Rohtas) ஏராளமான செல்வத்தைக் கொண்டுபோகவும் ஒரு பொன்னுன வாய்ப்பினை ஷேர்கானுக்கு அளித்தது.

(ii) வங்காளத்தைக் கைப்பற்றுதல், 1538

சூனரிலிருந்து ஹுமாயூன் வங்காளத்திற்குச் சென்று அங்கே சில காலம் வரை தங்கியிருந்தார். முகலாயர்களுடன் பிளவு இருப்பதாக வெளிப்படையாக அறியப்படுத்திக்கொள்ளாத ஷேர்கானுடன் நெடுநாட்களாகப் பேச்சுவார்த்தை நடத்தியதன் விளைவாக பீஹாரை ஆப்கானியத்தலைவர் ஒப்படைக்கவேண்டும் என்றும் ஆண்டுதோறும் பத்து லட்ச ரூபாய் கப்பம் செலுத்துவதன் அடிப்படையில் முகலாய அடியாளாக வங்காளத்தைத் தம்மிடமே வைத்துக்கொள்ள அவர் அனுமதிக்கப்படவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. அந் நிபந்தனைகளை ஷேர்கான் ஏற்றுக் கொண்டார். ஆனுல், ஒப்பந்தத்தை உறுதிப்படுத்த ஹுமாயூன் தயங்கினர். அப்பொழுது வங்காளத்தைச் சார்ந்த மகமூத்துடன்

பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்தார்; அதற்குள் மானெர் வரையிலும் அவர் முன்னேறியிருந்தார். ஷேர்கானுடன் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கும் தாமே வங்காளத்தைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புக்குமிடையே அவர் ஊசலாடிக்கொண்டிருந்தார். இறுதியில் வங்காளத்தைக் கைப்பற்ற அவர் முடிவு செய்தார்.

ஷேர்கானின் தளபதியான கவாஸ்கான் (Khawas Khan) வங்காளத்தின்மீது படையெடுத்தபொழுது, அதனின் அரசனை கியாஸுத்தீன் மகமூத், ஹுமாயூனின் உதவியை நாடினர்; ஆனல், எத் திசையிலிருந்தும் உதவி வராததனுல் அவர் ஹாஜீபூருக்கு (Hajipur) ஓடிவிட்டார். அவருடைய தலைநகரான கௌர் 1538, ஏப்ரல் 6ஆம் நாள் ஆப்கானியர்களின் கையில் வீழ்ந்தது. நாடோடியாகத் திரிந்துகொண்டிருந்த மகமூதை ஷேர்கான் பின் துரத்திச்சென்ருர்; ஆனல், அவர் உயிருடன் தப்பித்துக்கொண்டு, மானெரில் இருந்த ஹுமாயூனின் முகாமுக்குச் சென்று வங்காளத்தை மீண்டும் பெற அவரது உதவியை நாடினர். ஹுமாயூன் அவர்மீது இரக்கம் கொண்டு, அண்மையில் ஷேர்கானுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தையும்மீறி, கௌரை நோக்கி முன்னேறினர். காயமுற்ற மகமூத் கல்கோன் (Khalgaon) (கோல்கோன்—Kolgaon) என்ற இடத்தில் உயிர்நீத்தார். இருந்தபோதிலும், ஹுமாயூன் முன்னேறி மே மாத இறுதியில் தெலியாகரை (Teliagarhi) அடைந்தார். கோருக்குக் கொண்டுசெல்லும் சாலையை ஜலால்கான் (Jalal Khan) முற்றுகையிட்டார் என்பதை ஹுமாயூன் உணர்ந்தார். அச் சாலையைப் பாதுகாக்க ஜலால்கானை அவருடைய தகப்பனுர் அங்கே நியமித்திருந்தார். முகலாயர்கள் அவ்விடத்தையடைந்ததும் அவர்கள் ஜலால்கானுல் தாக்குண்டனர். அவர்களுக்கு அவர் பெருஞ் சேதத்தை இழைத்தார். நாட்டில் பெருவெள்ளம் ஒன்று ஏற்பட்டதனுல் ஹுமாயூன் முன்னேறுவது பல நாட்களாகத் தடைப்பட்டது. கௌரிலிருந்து ரோட்டாஸுக்குச் செல்வத்தை ஜலால்கானின் தகப்பனுர் மாற்றிவிட்டார் என்ற செய்தி எட்டிய பிறகுதான் ஜலால்கான் தெலியாகரைக் கைவிட்டு ஷேர்கானுடன் சேர்ந்துகொள்ள பின்வாங்கினுன். ஆப்கானியர்கள் பின்வாங்கிவிட்டனர் என்று உணர்ந்து பிறகு ஹுமாயூன் வங்காளத்தில் புகுந்து கௌரை அடைந்தார் (1538, ஆகஸ்ட், 15ஆம் நாள்). அவ்விடம் தனிமையில் விடப்பட்டிருப்பதையும் அதனின் வீதிகளில் பிணங்கள் சிதறுண்டு கிடந்ததையும் கண்டார். இருந்தபோதிலும் அவ்விடத்திலேயே தங்க முடிவுசெய்தார். அவ்விடத்திற்கு ஜன்னதாபாத் (Jannatabad) (சுவர்க்கத்தின் இருப்பிடம்) என்று பெயர் வழங்கினர்; சிற்றின்பங்களில் எட்டு மாதங்களை வீணுக்கினர். அவருடைய அலுவலர்களும்

படைவீரர்களும் அவரது மேற்கோளைப் பின்பற்றினர்கள். ஒவ்வொருவரும் இன்பத்திலும் இன்னலத்திலும் மூழ்கியிருந்தனர்.

திர்ஹுட் (Tirbut) என்ற இடத்தில் ஹிண்டாலை நியமித்ததைத் தவிர டெல்லியுடனும் ஆக்ராவுடனும் பேரரசர் செய்திப் போக்கு வரத்து வைத்துக்கொள்ளவில்லை. வாரணசியுடனும் அவர் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. முகலாய இராச்சியத்தில் வாரணசி மிக அருகிலிருந்த இடமாகும்; கௌரிலிருந்து 350 மைல் மேற்கில் இருந்தது. மிக இன்றியமையாத இராணுவ எச்சரிக்கைகளும் எடுக்கப்படவில்லையாதலால், ஷேர்கான் ஹுமாயூனை அவரது தலைநகரிலிருந்து அப்பாற்படுத்த முடிந்தது. தெற்கு பீஹாரில் முட்காடுகள் சூழ்ந்திருந்த ஒரு மலைப்பகுதியான ஜார்கண்டை (Jharkhand) ஷேர்கான் தமது தளமாக்கிக்கொண்டு தெலியாகருக்கும் கனோஜுக்குமிடையிலிருந்த முழு நாட்டையும் கைப்பற்றப் படைகளை அனுப்புவதற்கான ஒரு தலைசிறந்த திட்டத்தை ஏற்படுத்தினர். அந் நாட்டை அவர் தம்வசமாக்கி வாரணசியையும் கைப்பற்றினர். அவருடைய மகனான ஜலால் கான் ஜான்புரியை முற்றிகையிட்டார்; சூனர்கரையும் தாக்கினர். கரா (Kara), பாரைச் (Bahraich), கனோஜ், சாம்பல் ஆகியவற்றை ஆப்கானியர்கள் கைப்பற்றினர். இங்ஙனமாக, கோசிக்கும் (Kosi) கங்கைக்குமிடையிலிருந்த முழு நாடும் 1539, ஜனவரியின் மத்தியில் ஷேர்கானின் ஆதிக்கத்துக்குட்படுத்தப்பட்டது. ஹுமாயூனின் சகோதரரான ஹிண்டால் வட பீஹாரில் ஏற்கெனவே தமது பதவியைக் கைவிட்டு ஆக்ரா வந்தடைந்தார். அங்கே தம்மை அரசனுக்கிக்கொள்வதற்கான கட்டுக்கடங்கா ஆசை பெற்றிருந்தார். அவருடைய தாயின் அறிவுரையையும் அவர் புறக்கணித்து, அரச பட்டத்தைப் புனைந்துகொண்டு, ஹுமாயூனின் மதிப்புக்குரியவரான ஷெக் பஹ்லோல் (Shaik Bahlol) என்பவரையும் கொன்றார். நிலைமை மிக மோசமாகிவிட்டது. அதனுல் அதுவரை இந் நிகழ்ச்சிகளை மறைத்து வைத்திருந்த முகலாய அதிகாரிகள் பீதியுற்று இராச்சியத்தின் இழப்பை ஹுமாயூனுக்கு அறியப்படுத்தினர். தாமதமின்றி ஆக்ராவுக்குத் திரும்ப ஹுமாயூன் முடிவு செய்தார். கௌரின் பொறுப்பை ஐயாயிரம் வீரர்களுடன் ஜஹாங்கீர் கூலி பேக் (Jahangir Quli Beg) என்பவரின் பொறுப்பில் அவர் விட்டுவிட்டு 1539, மார்ச்சு மாத முடிவில் பாட்னவுக்குப் (Patna) பின்வாங்கத் தொடங்கினர்.

(iii) சௌசாப் போர் (Battle of Chausa), 1539 ஜூன் 26ஆம் நாள்

ஹுமாயூன் தமது படையை இரண்டு பகுதிகளாகப் பிரித்து, அஸ்கரியை முதற் பகுதியின் தலைவராக்கி, அவரை முன்னேறுமாறு

உத்தரவிட்டார். ஹுமாயூனின் பொறுப்பிலேயே இருந்த இரண்டாவது பகுதி சில மைல்களுக்குப்பின் வந்துகொண்டிருந்தது. முங்கிர் (Mungir) என்ற இடத்தில் இரண்டு பிரிவுகளும் ஒன்று சேர்ந்தன. இங்கே, தமது அனுபவமிக்க அதிகாரிகளின் அறிவுரையையும் புறக்கணித்து ஹுமாயூன் கங்கை நதியின் தென் கரையைக் கடந்து ஆக்ராவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பழைய நாட்டுப் பெருஞ்சாலை (Grand Trunk Road) வழியாக முன்னேறினர். இது ஒரு பெருந் தவருகும். சாதகமான சாலையில் ஹுமாயூன் முன்னேறிக்கொண்டிருந்தபோதிலும், தெற்கு பீஹார் வழியாகச் சென்றுகொண்டிருந்த தெற்குப் பாதை முற்றிலும் ஷேர்கானின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தது. முகலாயப் படையின் நடமாட்டங்களை விழிப்புடன் கவனித்து வந்த ஆப்கானிய ஒற்றர்கள் தமது தலைவருக்குத் தெரியப் படுத்திக்கொண்டிருந்தனர். ஹுமாயூனின் இத் தவறு ஷேர் கானை வெளிப்படையாகப் போரிட முடிவுசெய்வதற்கு ஏதுவாயிருந்தது. ஆனாலும், பேரரசர் நாட்டுப் பெருஞ்சாலையிலேயே செல்ல முடியவில்லை. பிஹியா (Bihiya) (போஜ்பூர் மாவட்டத்தில் உள்ளது—in Bhojpur district) என்ற இடத்திற்கு அருகில் கங்கையைக் கடந்து அதனின் வடகரைக்குத் திரும்பி வருமாறு அவர் வற்புறுத்தப்பட்டார், ஹுமாயூன் சௌசாவை அடைந்ததும், ஷேர்கான் அருகில் வந்துவிட்டார் என்ற செய்தி அவருக்குக் கிடைத்தது. பக்சாருக்கு (Baksar) 10 மைல் தென் மேற்கிலும், கர்மனசா (Karmanasa) நதிக்குச் சிறிது தூரத்திலும் சௌசா இருந்தது. அந் நதி பீஹாருக்கும் தற்போதைய உத்தரப் பிரதேசத்திற்குமிடையில் உள்ள எல்லையாகும். அவருடைய அதிகாரிகள் ஆப்கானியர்களை உடனடியாகத் தாக்க விரும்பினர். பல நாள் பயணம் செய்திருந்ததால் ஆப்கானியர்கள் களைத்திருந்தனர்; அதே சமயத்தில் முகலாயப் படையினர் சோர்வற்றவர்களாகத் தென்பட்டனர். ஆனல், மிக மூடத்தனமாக அவர்களுடைய ஆலோசனையை ஹுமாயூன் பின்பற்றவில்லை. ஆனாலும், அந் நதியின் தெற்குக் கரையை மீண்டும் கடந்து எதிரியை உடனே தாக்காமல் அங்கே காத்துக்கொண்டிருக்க அவர் முடிவு செய்தார். ஷேர்கான் தமது பாசறையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், அவருடைய வீரர்களுக்குத் தேவையான ஓய்வை அளிப்பதற்கும் இத் தாமதம் உதவியது. பெருவாரியான ஆப்கானியப் படைவீரர்கள் அவர் கொடியின்கீழ் ஒன்றுபட்டனர். இதற்கு மாருக, ஹுமாயூன் தமது சகோதரர்களிடமிருந்து எவ்வித உதவியும் பெறவில்லை. ஹிண்டால் வெளிப்படையாக ஆக்ராவில் அரசரைப்போல் நடந்துகொண்டிருந்தார். அஸ்கரியுங்கூட துரோகத் திட்டங்களிட்டுக்கொண்டிருந்தார். நோய், இன்னல்

கள், பகைவரின் அச்சம் ஆகியவற்றின் காரணமாக ஹுமாயூனின் படைவீரர்கள் பலர் அவரை விட்டுச் சென்றனர். ஆனாலும், தப்பித்துக்கொள்ள வழியில்லை. ஆக்ராவுக்குப் போகும் பாதையை ஷேர்கான் அடைத்துவிட்டார். வாளினால்தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஆனாலும், மூன்று மாத காலமாக எதிரிகள் ஒருவரை ஒருவர் எதிர்நோக்கி நின்றுகொண்டிருந்தனர் (1539, ஏப்ரலிலிருந்து ஜூன் 26ஆம் நாள்வரை). ஆனால், எப் பக்கமும் தாக்குதல் தொடங்கவில்லை. வரும் மழைக்காலம் முகலாயர்களைத் தடுத்து இடர்ப்படுத்தித் தமக்குச் சாதகமான நிலையை உண்டாக்கக்கூடும் என்று ஷேர்கான் கருதியதனால் வேண்டுமென்றே போரைத் தாமதித்தார். அச் சமயத்தில் ஓர் அமைதியான ஏற்பாட்டிற்காகத் தூதர்கள் மாற்றப்பட்டனர். சுமார் ஓராண்டுக்குமுன் ஹுமாயூன் ஒப்பந்தத்தை மீறினார். அதனால் விளைந்த கடும் அனுபவத்தை ஷேர்கான் மறக்கவில்லை. முகலாயர்களின் நேர்மை எண்ணங்களில் அவர் நம்பிக்கை இழந்திருந்தார்; ஆகையால், பகைவன் ஆபத்து இனி இல்லை எனப் பாதுகாப்பைக் கைவிடுமாறு அவனைத் தூண்டும் நடவடிக்கைகளில் அந்த இடை நேரத்தில் அவர் ஈடுபட்டிருந்தார். மழைக்காலம் துவங்கியவுடன் ஆப்கானியத் தலைவர் தமது கைத்திறனைக் காட்டத் தொடங்கினார். வடக்கில் கங்கைக்கும் மேற்கில் கர்மனசா நதிக்குமிடையில் தாழ் நிலத்திலிருந்த முகலாயர்களின் பாசறையில் வெள்ளம் புகுந்ததனால் படைவீரர்களிடையில் குழப்பமும் ஒழுங்கின்மையும் தோன்றின. முகலாயர்களுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டும், அவரது படைகளைச் சீரோச்சுகளுக்கெதிராக (Cheros) அனுப்பியும் ஷேர்கான் முகலாயர்களை ஏமாற்றினார். 1539, ஜூன் 25ஆம் நாள், தமது படைகளைத் திரட்டிக்கொண்டு மராட்டிய சீரோவைத் தாக்கப்போவதாக ஷேர்கான் அறியப்படுத்தினார். மராட்டிய சீரோ பீஹாரைச் சார்ந்த ஷாபாத் (Shahabad) மாவட்டத்திலிருந்த தொன்முதிய இனம் ஒன்றின் தலைவராவார். ஷேர்கான் உண்மையில் சீரோ இராச்சியத்தை நோக்கி ஐந்து மைல் தூரம் முன்னேறிவிட்டதனால், இச் செய்தி முகலாயர்கள் விழிப்பைக் கைவிடும்படி தூண்டியது. ஆனால், அதற்குப் பிறகு ஷேர்கான் கிழக்குத் திசை நோக்கித் திரும்பி, ஹுமாயூனின் பாசறைக்கு ஐந்து மைல் இப்பால் எவரும் காணுவண்ணம் நதியைக் கடந்து, பிறகு வடக்கு நோக்கிச் சென்று நள்ளிரவுக்குப் பிறகு திரும்பிவந்து, தமது பாசறைகளில் தூங்கிக்கொண்டிருந்த முகலாயர்களின்மீது திடீரெனப் பாய்ந்தார். முறையே ஷேர்கான், அவருடைய மகனான ஜலால்கான், அவருடைய மிகச் சிறந்த தளபதியான கவாஸ்கான் ஆகியவர்களின் தலைமையின்கீழ் ஆப்கானியப் படை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அப்

படைகள் மூன்று திக்குகளிலிருந்து முகலாயர்களைத் தாக்கின. பேரரசினரிடம் குழப்பம் பரவியது. அமளியால் விழித்தெழுந்த ஹுமாயூன் உடனே குதிரைமீதேறித் தம்முடைய ஆட்களைத் திரட்ட முயன்றார். ஆனால், அவருடைய படைவீரர்களில் பலர் ஏற்கெனவே கலைந்துவிட்டனர்; தம்மைக் காத்துக்கொள்ளத் தப்பி ஓடிவிட்டனர். ஹுமாயூன் தமது கூடாரத்தை அடைய முடியவில்லை; ஆனாலும், அவருடைய பற்றுடைய பணியாட்கள் சிலர் அவரை ஆபத்திலிருந்து வெளியே கொண்டுபோயினர். யானைமீது ஏறிக் கங்கையைக் கடக்க அவரால் முடியவில்லை. ஆகையால், அக்கரைக்குப் பத்திரமாகப் போய்ச்சேருவதற்காக நீர்கொண்டுசெல்பவர் ஒருவருடைய (நைஸாம்) தோல்பையை (மஷக்-Mashak) அவர் பயன்படுத்தவேண்டியதாயிற்று. அவருடைய அந்தப்புரத்து (harem) பெண்கள் பலர் உட்பட அவருடைய பாசறை முழுவதும் ஷேர் கானின் கையில் சிக்கியது. அநேகமாக முகலாயப் படை முழுவதும் நிர்மூலமாக்கப்பட்டது. ஒருசிலரே பின்தொடர ஹுமாயூனும் ஆக்ராவுக்கு விரைந்தோடினார்.

எட்டாயிரம் முகலாயப் படைவீரர்களும், ஏராளமான முகலாயப் பிரமுகர்களும், ஒரு நிலையற்றிருந்த முகம்மது ஸமன் மீர்ஸாவும் போரில் மடிந்தனர். ஹுமாயூனின் இரண்டு இராணிகளும் ஒரு மகளும் கொல்லப்பட்டனர்; அல்லது நீரில் மூழ்கி இறந்தனர். அவருடைய முதன்மை இராணியான பேகா பேகம் (Bega Begum) பல முகலாயப் பெண்டிர்களுடன் சிறையடைக்கப்பட்டாள். அவர்களுடைய பாதுகாப்புக்காகவும் ஷேர்கான் எல்லா ஏற்பாடுகளும் செய்துவைத்தார்; பிறகு அவர்களைத் தக்க பாதுகாப்புடன் ஹுமாயூனிடம் அனுப்பிவைத்தார்.

(iv) பில்கிராம் போர் (The Battle of Bilgram) 1540, மே 17ஆம் நாள்

எல்லா சகோதரர்களும் ஆக்ராவில் கூடிப் பகைவனுக்கெதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி நெடுநேரமாக விவாதித்தனர். அவரோ தாம் அண்மையில் பெற்ற வெற்றியால் மகிழ்ச்சியுற்று 'ஷேர் ஷா' என்ற பட்டப் பெயரைப் புனைந்துகொண்டு அரியணையேறினார். ஹுமாயூன் தலைநகரில் இல்லாதபோது கம்ரன் அங்கே வந்துசேர்ந்தார்; சுயநலத்தால் தூண்டுவிக்கப்பட்ட அவர் பஞ்சாபிலிருந்து தமது 20,000 படைவீரரைக் கொண்டு ஆப்கானிய அரசருக்கெதிராகப் படையெடுப்பு நடத்த முன்வந்தார். ஹுமாயூன், அவரது எண்ணங்களை உணர்ந்துகொண்டு அவ் வுதவியை ஏற்றுக்கொள்ளவில்லை; அவ் வுதவியை ஏற்றுக்

கொண்டால் முகலாய ஆட்சி புரியும் குடும்பத்தின் தலைவர் என்ற நிலையில் அவருக்கு அவதூறு உண்டாகும் என்ற காரணத்தாலும் அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சகோதரர்களுக்கிடையில் இருந்த வேறுபாடுகளைப் போக்க பாபரின் ஒன்றுவிட்ட சகோதரரான மீர்ஸா ஹைதர் துக்லத் (Mirza Haider Dughlat) என்பவர் பாடுபட்டும், அவர்கள் எல்லாவற்றையும் இழக்கும்படியான பேராபத்துக்குட்பட்டிருந்தபோதிலும், அவர்கள் ஒன்றுபட இணங்கவில்லை. ஹுமாயூனுடன் ஒத்துழைக்காதிருந்தால், ஷேர்ஷா பஞ்சாபையும் ஹிஸ்ஸார் ஃபிரோஸாவை கம்ரானிடமே வைப்பார் என்று கம்ரான் மூடத்தனமாக நம்பினார். மேலும், அவர் ஆக்ராவில் அப்பொழுது நோய்வாய்ப்பட்டிருப்பதற்குக் காரணம் ஹுமாயூனின் தூண்டுதலின்மேல் தாம் விஷமிடப்பட்டதாகும் என்றும் அவர் கருதினார். அவ்விதம் அவர் கருதுவதற்கு ஓரளவு காரணமும் இருந்தது. தேவையான உறுதிநிலையை ஹுமாயூன் பெற்றிருக்கவில்லை என்று அஸ்கரி கருதினார்; அதனால் அவர் எதையும் பொருட்படுத்துவதில்லை. பயனற்ற இவ் விவாதங்களில் அரிய காலம் வீணாக்கப்பட்டது. சௌசாப் போருக்குப் பின் முதன் முதலாக வங்காளம் முழுவதையும் கைப்பற்றி, கௌரில் ஹுமாயூன் விட்டுச் சென்ற படையைச் சிதறடித்ததற்குப் பிறகு, ஷேர்ஷா இப்பொழுது மேற்குப் பகுதிக்குத் திரும்பி, ஒரு பெரும்படையுடன் ஆக்ராவை நோக்கி விரைவாக முன்னேறிக் கொண்டிருந்தார். அவருடைய ஆட்கள் ஏற்கெனவே லக்னோவையும் கனோஜையும் கைப்பற்றிவிட்டனர். அவரே இப்பொழுது கனோஜ் வந்தடைந்தார் (1540, ஃபிப்ரவரி). ஆகையால், காலத்தை வீணாக்க முடியாது. அவருடைய சகோதரருடைய வேண்டுகோளையும் பொருட்படுத்தாமல் கம்ரன், அவருக்குப் படை உதவியளிக்க மறுத்துவிட்டார்; தமது படைவீரர்கள் பலருடன் அவர் லாகூருக்குத் திரும்பினார். ஆக்ராவை அடைந்த படைவீரர்களைத் தவிர சௌசாப் போரில் சிதறுண்ட படையின் எஞ்சிய பகுதியிலிருந்து புத்தம் புதிய படை ஒன்றைத் திரட்ட மும்முரமான முயற்சி ஒன்று செய்யப்பட்டது. அப் படையின் எண்ணிக்கை 90,000 ஆக இருந்தது. ஆனால், அவர்களுள் பலர் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்; போர் அனுபவம் பெற்றிராதவர்கள். இக் கதம்பத்திரள் கூட்டத்துடன் ஹுமாயூன் பகைவனுக்கெதிராகச் சென்றார். கனோஜுக்கு அருகிலிருந்த போஜ்புரை அடைந்து அங்கே தமது முகாமை அமைத்தார். ஷேர்ஷா ஏற்கெனவே அங்கு வந்தடைந்து, கங்கைக்கு அப்புறத்தில் கனோஜுக்கெதிராக ஹுமாயூனின் பாசறைக்குச் சுமார் 23 மைல் தூரத்தில் தமது முகாமை அமைத்துக்கொண்டார். ஹுமாயூனின் படை அதிகமாகிக்கொண்டு போயிற்று; அவர்

களுடைய எண்ணிக்கை இரு இலட்சமாக இருந்தது. ஒரு மாதம் கழிந்தது (1540, ஏப்ரல்); இருதரத்தாரும் வலிந்து தாக்குதல் நடத்தவில்லை. பில்கிராம் (Bilgram) நகரத் திசையை நோக்கி ஹுமாயூன் கங்கையைக் கடந்தது அவரது ஒரே ஒரு செயலாகும். பில்கிராமுக்கு அருகிலும், கங்கைக்கு மூன்று மைல் தூரத்திலும் இருந்த இடத்தில் அவர் தமது முகாமை அமைத்துக்கொண்டார்.

மே 15ஆம் நாள் கனமழை பெய்ததனால் முகலாயர்களின் முகாம் சேற்றில் சிக்கியது. ஆகையால், முகாமை அண்டைப் புறத்திலுள்ள ஓர் உயரிடத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது. பாசறை மாற்றம் அடுத்த நாளுக்கு வைக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்னீடாக, 1540, மே 17ஆம் நாள் எதிரியை அச்சுறுத்துவதற் காக முகலாயப் படைவீரர்கள் பாசறையைவிட்டு வெளியே தோன்றியபொழுது, போர்க்களத்தைப் பற்றிக்கொண்டு எதிரியைத் தாக்கும்படி ஷேர்ஷா தமது படைவீரர்களுக்கு உத்தரவிட்டார். இங்ஙனமாக, ஹுமாயூன் பீரங்கிகளைப் பயன்படுத்துவதை அவர் மிகச் சாதுரியமாகத் தடுத்தார். மேலும், போருக்கு இன்னும் தயா ராகாத முகலாயர்கள் திகைப்புக்குள்ளானார்கள். மீர்ஸா ஹைதர் என்பவரை ஹுமாயூன் தமது படைத்தளபதியாக்கினார். அவ ருடைய தலைமையின்கீழ் முகலாயப் படைகள் போர்க்கோலத்தில் விரைந்து திரட்டப்பட்டனர். மத்தியப் பகுதிக்கு ஹுமாயூனும் மீர்ஸா ஹைதரும் தலைமை தாங்கினர். நதியின் அருகிலிருந்து இடப்படை அணி ஹிண்டாலின் பொறுப்பிலும், வலப்படை அணி யாத்கார் நஸீர் மீர்ஸா (Yadgar Nasir Mirza) என்பவரின் பொறுப்பிலும் வைக்கப்பட்டிருந்தன. அஸ்கரி முன்னணிக்குத் தலைமை வகித்து முன்சென்றான். முன்னணி 5,000 துப்பாக்கி வீரர்களால் வலுப்படுத்தப்பட்டது. சேமப் படையோ படைப் புடை அணிகளோ கிடையா. முகலாயர்களின் தரப்பில் உண்மையில் போரிடுபவர்களின் எண்ணிக்கை 40,000 ஆக இருந்தது.

ஆப்கானியப் படையின் எண்ணிக்கை 15,000ஆக இருக்கும் என்று மீர்ஸா ஹைதர் மதிப்பிட்டபோதிலும், ஷேர்ஷாவினிட மிருந்த படைவீரர்களின் எண்ணிக்கை நாற்பதாயிரத்துக்குக் குறைவாக இருந்திருக்க முடியாது. அவர் தமது படையை ஏழு பிரிவினைகளாகப் பிரித்தார். மத்தியப் பகுதியினிடம் அவர் நின்று கொண்டார். அகழி ஒன்று அதைப் பாதுகாத்தது. சேமிப்புப் படையைத் தவிர, தமது படை அணிகளுக்கு வலக்கோடியிலும் இடக்கோடியிலும் படைப் புடை அணிகளை அவர் அமர்த்தினார். முகலாயர்களைத் திடீரென்று தாக்கவும், நதியிடமிருந்தும் அவர்

களது தளத்தினிடமிருந்தும் அவர்களை அப்பாற்படுத்தவும் ஹுமாயூன் வலப்படை அணியைத் தாக்கும்படி அவர் உத்தரவிட்டார். இடப்படை அணிக்குத் தலைமை தாங்கிய ஹிண்டால் போரின் ஆரம்பத்தில் மிகச் சிறப்பாகப் போர்புரிந்து ஜலால்கானைக் காயப் படுத்தினுர். ஆனுலும், தமது மகனுக்குத் தக்க நேரத்தில் ஷேர்ஷா உதவியனுப்பிவைத்தார். அம் மகன் இப்பொழுது மிகத் துரிதமாக வலிந்து தாக்கத் தொடங்கினுர். படையின் முன்னணிகளோடு மோதல் ஏற்பட்டது. அஸ்கரி ஆப்கானியர்களால் விரட்டியடிக்கப்பட்டார். போரின் அவசரத்தில் பளுவுள்ள முகலாயப் பீரங்கிகளைப் போர்க்களத்திற்கு இழுத்துக்கொண்டுவர முடியாததனுல், முகலாய பீரங்கிப் படை போரில் பங்குகொள்ள வில்லை. 'ஒரு பீரங்கியும் சுடவில்லை; ஒரு துப்பாக்கியும்கூடச் சுடவில்லை. பீரங்கிப் படை முற்றிலும் பயனற்றதாயிற்று' என்று மீர்ஸா ஹைதர் குறிக்கவேண்டியிருந்தது. ஆப்கானியர்களின் தாக்குதல் மிக மும்முரமாக இருந்ததனுல், உடன் சேவகர்களை அதிகமாகக் கொண்டிருந்ததால், தடுமாறிக்கொண்டிருந்த முகலாயப்படை ஓட்டம் பிடித்தது; அவர்களைத் திரட்ட ஹுமாயூன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் வீணுயின. ஆகையினுல், அவர் களத்தை விட்டுவிட்டு ஆக்ராவுக்கு ஓட நேர்ந்தது. பெருங் கஷ்டத்துடன் அவர் நதியைக் கடந்தார். அவருடைய வீரர் களில் பலர் கங்கையில் மூழ்கி மடிந்தனர். ஒருசிலரே அவருடன் இருந்தனர். வழியில் அச் சிறு கூட்டமும் மைன்புரி (Mainpuri) மாவட்டத்திலுள்ள போகோன் (Bhogaon) மக்களால் தாக் குண்டது; பல இடையூறுகளுக்குள்ளாகி ஹுமாயூன் ஆக்ரா அடைந்தார்.

ஹுமாயூன் ஒரு நாடோடியாகத் திரிதல், 1540

ஆப்கானியர்களின் கூட்டம் ஒன்று ஹுமாயூனைப் பின் தொடர்ந்து வருகிறது என்ற செய்தி எட்டியதனுல், அந் நாடோடி மன்னருக்கு ஆக்ரா நெடுங்காலமாக அடைக்கலம் தர முடிய வில்லை. ஆகையினுல், ஹுமாயூன் அந் நகரைக் கைவிட்டு வெள் ளத்தால் நிறைந்த பஞ்சாபின் ஆறுகளைப் பல இன்னல்களுக் கிடையில் கடந்துசென்று லாகூருக்கு விரைந்தார். லாகூர் அடைந்தவுடன் ஆப்கானியர்கள் ஆக்ராவையும் டெல்லியையும் எவ்வித எதிர்ப்புமின்றிக் கைப்பற்றினர் என்பதை அவர் கேள்விப் பட்டார். லாகூரில் ஹுமாயூனின் சகோதரர் அவரைச் சந்தித் தார். ஆனுல், பொதுப் பகைவனுக்கெதிராக ஒன்றுபட மறுபடியும் அவர் மறுத்துவிட்டார். பஞ்சாபையும் ஆப்கானிஸ்தானத்தை யும் தம்மிடத்திலேயே வைத்துக்கொள்ள அஸ்கரி விருப்பங்

கொண்டார் ; அதனால், ஹுமாயூனுக்கு உதவியளித்து ஷேர் கானின் வெறுப்பைப் பெற கம்ரன் விரும்பவில்லை. அதற்குள் ஷேர்ஷா பஞ்சாபுக்கே வந்துசேர்ந்து சர்ஹிண்டை (Sarhind) இரு இராச்சியங்களுக்குமிடையில் உள்ள எல்லையாக அனுமதிக்க வேண்டும் என்று முன்னாள் மன்னர் கோரியதை அவர் மிக ஏளனத்துடன் மறுத்தார். ஓடுவதன்றி வேறு வழியில்லை. ஹுமாயூன் காஷ்மீருக்குப் பின்வாங்கி, அங்கிருந்துகொண்டு இந்துஸ்தானத்தைக் கைப்பற்றவேண்டும் என்று மீர்ஸா ஹைதர் யோசனை கூறினார். ஹிண்டாலும் யாத்கார் மீர்ஸாவும் சிந்து வழியாகக் குஜராத்துக்குப் பின்வாங்கி, அங்கிருந்து டெல்லியின் மீது படையெடுக்கவேண்டுமென்று யோசனை கூறினார். இவ்விரு யோசனைகளுக்குமிடையில் ஹுமாயூன் ஊசலாடினார். இது போன்ற பயனற்ற விவாதங்கள் நடந்துகொண்டிருக்கும்பொழுது, ஷேர்கானுடன் கம்ரன் வஞ்சகமாகப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தது தெரியவந்தது. அதன்படி பஞ்சாபையும் காபூலையும் கம்ரனிடம் இருக்கும்படி ஷேர்கான் அனுமதித்தால் கம்ரன் அவருக்கு உதவியளிப்பதாகக் கூறினார். இப் பேச்சு வார்த்தை கண்டுபிடிக்கப்பட்டதனால் அக் கூட்டம் கலைந்தது. காஷ்மீருக்குச் செல்லவேண்டும் என்ற மீர்ஸா ஹைதரின் சிறந்த ஆலோசனையை ஹுமாயூன் ஏற்றுக்கொண்டார். ஆனால், வன்முறையால் அவருடைய பாதையில் குறுக்கிடக் கம்ரன் ஆயத்த மாகிக்கொண்டிருந்ததனால் அத் திட்டம் கைவிடப்பட்டது. ஹிண் டாலும் அவரைக் கைவிட்டு சிந்துவின்மீது படையெடுத்தார். இப்பொழுது, மீண்டும் காஷ்மீருக்குப் போவதற்கு ஹுமாயூன் முயன்றார்; ஆனால், தமது நாடோடி சகோதரருக்கெதிராக இராணுவ நடவடிக்கைகளை வஞ்சகமிக்க கம்ரன் எடுத்து அவரது முயற்சியை முறியடித்தான். ஹுமாயூன் காபூலையும் கைப்பற்றி விடுவார் என்று கம்ரன் சந்தேகங் கொள்வதாக அவருடைய நடத்தை ஹுமாயூனுக்கு அறியப்படுத்தியதனால், ஹுமாயூன் பதக் ஷானுக்கும் போகமுடியவில்லை. இவ்விதமாகத் தமது சகோதரர் தமக்கென்று ஒரு புதிய இராச்சியத்தை நிறுவிக்கொள்வதற்குக் கம்ரன் மூன்றும் முறையாகத் தடையிட்டார். இப்பொழுது சிந்து நோக்கிச் சென்று ஹிண்டாலுடன் சேர்ந்துகொள்ளும்படி ஹுமாயூன் கட்டாயப்படுத்தப்பட்டார் (1540, டிசம்பர்). குஷாப் புக்கு அருகில் மீண்டும் கம்ரனுடன் சண்டை புரிவதற்கான சூழ் நிலை தோன்றியது. உப்பு மலைத்தொடரில் (Salt Range) இருந்த நீண்ட ஒடுக்கமான வழிமூலமாகத்தான் முந்திச் செல்லவேண்டும் என்று கம்ரன் விரும்பினார். ஆனால், புனித மனிதர் ஒருவர் குறுக் கிட்டதனால் தகராறு தவிர்க்கப்பட்டது. இந் நிகழ்ச்சிக்குப்பின்

ஹுமாயூன் சிந்துவை நோக்கிப் புறப்பட்டுக் கரம்பான நாட்டின் வழியாக நடந்து சென்றுகொண்டிருந்தார்.

ஹுமாயூன் விரட்டியடிக்கப்படுவதற்குக் காரணங்கள்

ஹுமாயூன் தமது இராச்சியத்திலிருந்து விரட்டியடிக்கப்படுவதற்கான காரணங்களை இங்கே ஆராயலாம். திறமைவாய்ந்தவரும் முன்நோக்குடையவருமான நிருவாகிக்கே தலைவலி உண்டாக்கும் சூழ்நிலைகளில் இன்னல் மிக்க சிம்மாசனத்தையும் காலியான பொக்கிஷத்தையும் தமது தந்தையிடமிருந்து ஹுமாயூன் பெற்றாரெனினும், அனுபவ அறிவு வாய்ந்ததும் அரசியலில் மேன்மை சார்ந்ததுமான ஒரு கொள்கையைப் பின்பற்றியிருந்தால் அவரது ஆரம்ப இடையூறுகளையெல்லாம் வென்றிருக்கலாம். ஆகையால், அவருடைய தவறுகளே அவர் பதவியிலிருந்து விலகுவதற்குக் காரணமாகும் என்று கருதவேண்டும். முதன்முதலாகக் குழந்தைப் பருவத்திலேயே உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் பகைவர்களை எதிர்க்கவேண்டியிருந்த முழு வளர்ச்சியடையாததும் மிகப் பரந்திருந்ததுமான முகலாயப் பேரரசின் மிக விசாலமான பகுதிகளின்மீதும் ஒன்றுபட்டதும் மையமாக்கப்பட்டதுமான ஆதிக்கத்தை நிலைநாட்டுதல் அத் தறுவாயில் மிக இன்றியமையாததாக இருப்பினும், ஹுமாயூன் தமது தகுதியற்ற வஞ்சகமிக்க சகோதரர்களுக்கிடையில் தமது இராச்சியத்தைப் பிரித்தது இவர் ஆரம்பத்திலேயே செய்த தவறாகும். காபூலும் பஞ்சாபும் பகைமைகொண்டிருந்த கம்ரனுடன் சேர்ந்துகொண்டன. தமது படைவீரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தலைசிறந்த இடத்தை ஹுமாயூன் இழக்கும்படி செய்ததுமன்றி, இராணுவ பலத்தை நம்பியிருந்த அவரது ஆதிக்கத்தின் அஸ்திவாரத்தையும் அது பாதித்தது. இரண்டாவதாக, தம் குடிமக்களைத் தம்வசப்படுத்த உறுதிப்படுத்தல், சீர்திருத்தம் ஆகியவற்றுக்குத் தேவையான ஆக்கமுறைகளை அவர் அனுசரிக்கவில்லை; அவ்விதம் செய்தல் தமது இராச்சியத்திற்கும் வமிசத்திற்கும் இன்றியமையாததாகும். ஆனால், பேரரசர் தமது ஆட்சியின் துவக்கத்திலிருந்தே ஓர் ஆக்கிரமிப்புப் போர்க்கொள்கையைக் கையாண்டார். கலஞ்சாரைச் சார்ந்த சந்தேள அரசரின்மீது ஹுமாயூன் படையெடுத்ததற்குத் தேவையில்லை. அரசர் ஆப்கானியர்களுடன் நல்லுறவுகொண்டிருப்பினும் அது சந்தேகத்துக்குரியதாகும்—சூழ்ச்சித்திறம் வாய்ந்ததும் தாராளமானதுமான ஒரு கொள்கையைப் பின்பற்றி அவரைத் தம் வசமாக்கி யிருக்கலாம். அப்பொழுது இருந்த நிலையில், அரசர் ஒரு பெருந்தொகையை முன்காப்பீடாகத் தர இணங்கினார் எனினும், உறுதியான கலஞ்சார் அரசருக்கு முன்னிலையில்

ஹுமாயூன் தோல்வியுற்றது அவருடைய புகழுக்குச் சேதம் விளைவித்தது. மூன்றாவதாக, ஷேர்கானுடைய ஆதிக்கமும் புகழும் எவ்வளவுக்கு உயர்ந்துகொண்டிருந்தன என்பதை ஹுமாயூன் புரிந்துகொள்ளவில்லை. ஆப்கானியத் தலைவர் புதுப் பவிசாளர் என்றும், அவரை வெகு எளிதாகத் தம் வசப் படுத்திவிடலாம் என்றும் 1539ஆம் ஆண்டின் தொடக்கம் வரையில் ஹுமாயூன் கருதிவந்தார். ஷேர்கானைக் களைந்தெறியப் பேரரசர் நீடித்து முயற்சி செய்யவில்லை. 1532-ல் முதல் சூனர் முற்றுகை நடந்தபொழுது, ஷேர்கானுடன் பேரரசர் மிக மூடத்தன மாக மேலோட்டமான ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டு, அவ்வரணை அவரிடத்திலேயே இருக்கும்படி அனுமதித்தார். அனுபவமிக்க ஓர் அரசன் தமது முதல் வெற்றிகளைப் (1532, ஆகஸ்ட்டு) பின்தொடர்ந்து இதர இராணுவச் செயல்களை மேற் கொள்ளுவதற்குமுன் ஆப்கானியர்களை அழிப்பதற்காகத் தமது ஆற்றலையும் கவனத்தையும் திரட்டியிருப்பார்.

நான்காவதாக, குஜராத்தைச் சார்ந்த பகதூர்ஷாவுக்கும் தென் பீஹாரைச் சார்ந்த ஷேர்கானுக்குமிடையில் ஓர் ஒப்பந்தம் இருந்தது என்பதையும், அதன்படி பேரரசர் ஒருவருடன் போர் நடத்தும் பொழுது மற்றவர் அவரது கவனத்தைத் திருப்பச் சச்சரவு உண் டாக்க வேண்டும் என்பதையும் ஹுமாயூன் உணரவில்லை. அதனால் தான், விளையாட்டுத்தனமான விருந்துகளிலும் கேளிக்கை விருந்து களிலும் ஆக்ராவிலும் டெல்லியிலும் காலத்தை வீணாக்கியதுமன்றி, ஏற்கெனவே வற்றியிருந்த தமது செல்வத்தை விருந்துகள் அளித்த லிலும், தம் கூட்டாளிகளுக்குப் பரிசுகள் வழங்குவதிலும், கட்டடங் களைக் கட்டுவதிலும் அவர் வீண் செலவு செய்தார் போலும். அவற்றையெல்லாம் அவரே மேற்பார்வையிட்டார். ஐந்தாவதாக, குஜராத்தைச் சார்ந்த பகதூர்ஷாவின்மீது தாமதித்து நடத்திய படையெடுப்பின்பொழுது ஹுமாயூன் பல தவறுகள் புரிந்தார். அத் தவறுகள், அவர் அண்மையில் கைப்பற்றிய குஜராத்தையும் மாளவத்தையும் இழக்கச் செய்ததுமன்றி, வருங்கால இகழ்ச்சியை யும் வீழ்ச்சியையும் முன்னறிந்து கூறின. பகதூர்ஷா சித்தூரைச் சார்ந்த இராசபுத்திரர்களுடன் கடும்போரில் ஈடுபட்டிருக்கும் பொழுது, ஹுமாயூன் அவரை மிகத் துணிச்சலுடன் தாக்கியிருக்க வேண்டும். இது பகதூரின் ஆட்சியை வீழ்த்தி மேற்கு இந்தியா வில் நீடித்த படையெடுப்பு ஒன்றைச் செய்வதிலிருந்து ஹுமாயூனைக் காத்திருக்கும்; அதுவுமன்றி, பேரரசருக்கு இராச புத்திரர்களின் உதவியும் ஆதரவும் அளித்திருக்கும். மாளவத்தை யும் குஜராத்தையும் கைப்பற்றியதற்குப் பிறகு மாண்டுவில் ஹுமாயூன் வெற்றுக் கேளிக்கைகளில் பல வாரங்களை வீணாக்கியது

துர்வசமான செயலாகும். அவ்விதம் அவர் செய்தது டீயூவிலிருந்து தமது ஆட்களை அனுப்பி குஜராத்தின் பெரும்பகுதியை மீட்கும்படி பகதூர் ஷாவுக்கும் ஒரு வாய்ப்பு அளித்தது. கைப்பற்றிய மாகாணங்களில் எவ்வித சிவில் நிர்வாகத்தையும் பேரரசர் நிலைநாட்டவில்லை. இராணுவப் படைகளைப் பல பாகங்களில் நிறுவிவைத்து, நாட்டில் ஒரு சிறந்ததும் தாராள மனப்பான்மை வாய்ந்ததுமான வருமானமுள்ள நிர்வாகத்தை ஏற்படுத்தி, குஜராத்தின்மீது முகலாயர்களின் பிடிப்பை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை ஹுமாயூன் செய்திருந்தாரானால், அவருடைய சகோதரர் அஸ்கரி அவரிடம் ஆமதாபாத்தில் வஞ்சகமாக நடந்திருக்கமாட்டார். இவ்வித நடவடிக்கைகளை எடுக்காததனால், மாளவத்திலும் குஜராத்திலும் நிலைநாட்டப்பட்டிருந்த தற்காலிக முகலாய ஆட்சியானது நாடு இராணுவ ஆதிக்கத்துக்குள்ளாவது போலிருந்தது. இராணுவத் தோல்வி ஏதாகிலும் ஏற்பட்டால் அது கட்டாயமாக வீழ்ச்சியுறும். ஆருவதாக, ஷேர்கானின்மீது இரண்டாம் முறை படையெடுப்பு நடத்தியதும் அதேபோன்ற ஒழுங்கற்ற முறையிலேயே இருந்தது. பகதூர்ஷாவுக்கெதிராகவோ, ஷேர்கானுக்கெதிராகவோ சரிவர ஆலோசிக்கப்பட்ட செயல்முறை எதையும் ஹுமாயூன் கொண்டிருக்கவில்லை. சூனர் முக்கிய நிலச்சாலைகளைக் கொண்டிராததனால் அதைக் கைப்பற்றியிருக்கவேண்டியதில்லை. ஆனாலும், மிக அரிதான ஆறு மாதங்களை ஹுமாயூன் அதைக் கைப்பற்றுவதில் வீணாக்கினார். மேலும், அக் காலம் ஷேர்ஷா கௌரைக் கைப்பற்றி, அதனின் செல்வங்களை ரோடாஸ்காருக்கு (Rhodasgarh) மாற்ற அவருக்கு வாய்ப்பளித்தது. பிறகு, சூனர்காரை முற்றுகையிடாது விட்டுவிடுவதா அல்லது ஷேர்கானுக்கு எதிராக முன்னேறுவதா என்று ஹுமாயூன் தயங்கினார். வங்காளத்தைக் கைப்பற்றுவதா அல்லது பீஹாரில் ஷேர்கானின் அதிகாரத்தை வேரோடு களைந்தெறிவதா என்று அவர் உண்மையில் முடிவு செய்யவில்லை. கௌருக்குச் சென்றதும், அவர் மீண்டும் சோம்பலிலும் சிற்றின்பங்களிலும் மூழ்கி எட்டு மாதங்களுக்கும் மேற்பட்ட காலத்தை வீணாக்கினார். சூழ்ச்சி முறையில் வல்லவரான ஷேர்கான் அத் தறுவாயில் ஆக்ராவுடன் பேரரசர்கள் கொண்டிருந்த தொடர்பை அறுத்துத் தெலியர்கரிதொட்டு கனோஜ் வரையிலிருந்த நாட்டைத் தம்வசப்படுத்திக்கொண்டார். தமது தலைநகரிலிருந்து எட்டு மாத காலமாக எவ்விதத் தகவலும் பெருதிருந்தும், எல்லாம் சரிவர நடக்கிறது என்று கருதும் அரசரைக் காண்பதரிது.

அவர் ஆக்ராவுக்குத் திரும்பிவரும்பொழுது மனிதர்களை ஆளும் ஓர் அரசருக்குத் தகாத மனஊசலாட்டினை அவர் வெளிப்படுத்தினர்

எவ்வழிச் செல்வது என்று அவருக்குத் தெரியவில்லை. மும்முறை அவர் கங்கை நதியைக் கடந்து ஷேர்கானின் கையினில் சிக்கினர். அவர் ஹிந்து சீரோஸுக்கெதிராக முன்னேறிக்கொண்டிருக்கிருர் என்று அறிவித்தபொழுது, சௌஸாவில் ஷேர்கானை அவர் தாக்காதது தவருகும். அதேபோன்ற தவற்றைப் பகதூர்ஷா சித்தூரை முற்றுகையிடும்பொழுது ஹுமாயூன் புரிந்தார். ஏழாவதாக, 1539, ஜூன் மாதத்தில் சௌசாவில் அவர் தோல்வியுற்ற பொழுது, கனேஜ்தொட்டு வார்ணசிவரை இருந்த அவரது இராச்சியத்தை ஷேர்கானின் கைகளிலிருந்து அவர் மீட்காது ஆக்ராவில் தம்மைப் பாதுகாப்பதில் முனைந்திருந்தார். பேரரசின் கீழ்ப் பகுதிகளைத் தாம் இழந்துவிட்டதாகவே அவர் கருதினர். இக் கொள்கை மக்களுக்குப் பெருநஷ்டத்தைத் தந்திருக்கவேண்டும்; அவர்களைப் பொறுத்தவரை ஹுமாயூனின் முடிவு தீர்மானிக்கப்பட்டுவிட்டது. எட்டாவதாக, வெற்றிகொண்டிருந்த ஷேர்கானுடன் போர் நடத்த அனுபவம் முதிர்ந்த படை ஒன்று ஹுமாயூன் வைத்துக்கொள்ளவில்லை; கனேஜ் போரில் பெருங்கேடு விளைவிக்கும் தவறுகளை அவர் புரிந்தார். முகாமை அமைத்துக்கொள்வதற்கு மிகத் தாழ்ந்த நிலத்தை அவர் தேர்ந்தெடுத்தல், போர்க்களத்தில் இரண்டு மாதகாலமாக வாளாவிருத்தல், மேலும் சிறந்த இடத்திற்குத் தமது முகாமை மாற்றும்பொழுது தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளாமை, இறுதியில் மிகப் பளுவான பீரங்கிப் படையைப் போரின்பொழுது பின்னிட்டுவருதல், போர் புரியாதவர்கள் பலர் கூட்டமாகச் சேர்ந்திருந்ததனுல் நிகழ்ந்த நெருக்கடி ஆகியவையெல்லாம் அவரது தோல்விக்கும் அவர் ஓட்டம் பிடித்ததற்கும் போதிய காரணங்களாகும். ஒன்பதாவதாக, தமது பத்தாண்டு ஆட்சிக் காலம் முழுவதிலும் தலைமை தாங்குவதற்கான திறனையும், தமது அதிகாரிகளின்மீதும் படைகளின்மீதும் தமது ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கான தகுதியும் அவர் பெற்றிருக்கவில்லை. மீண்டும் தமது தலைவரின்கீழ்ப் பணியாற்ற நேரிட்டால் அவர் தாம் கிளர்ந்தெழுந்ததை மன்னித்துவிடுவார் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அவருடைய தளபதிகளும் படைத்தலைவர்களும் அவரது நல்வாய்ப்பின் மிக நெருக்கடியான காலங்களில் மீண்டும் மீண்டும் கிளர்ந்தெழுந்தனர். பத்தாவதாக, தகுதியற்ற அவருடைய சகோதரர்களின்மீது அவர் இரக்கங்கொண்டது அவருடைய வீழ்ச்சிக்குப் பெரும்பாலும் காரணமாயிற்று. மூன்று பேரும் கிளர்ந்தெழுந்தனர்; சில வேளைகளில் சிலர் அரசப் பதவிக்குரிய சின்னங்களையும் மேற்கொண்டு எல்லையற்ற கவலையைத் தந்தனர்; ஆனல், பலமுறையும் அவர்களை ஹுமாயூன் மன்னித்தார். அவர்களுடைய முதல் துரோகக் குற்றத்திற்கு அவர்களைத் தண்டித்துத் தம்மை அவர் ஓர் உதாரண

புருஷராகச் செய்திருப்பாராயின், அவருடைய ஆட்சிக் காலத்தில் தொல்லைகள் வந்திரா. இறுதியாக, நாம் ஏற்கெனவே ஆராய்ந்த படி, ஒருமுகப்பட்ட செயலாற்றலை ஹுமாயூன் பெற்றிருக்கவில்லை. இராணுவச் செயல்களைப் புரிந்து ஒரு சிறு வெற்றியைப் பெற்ற தற்குப்பின் சோம்பலிலும் கேளிக்கை இன்பங்களிலும் மூழ்கி, பிறகு தமது தூக்கத்திலிருந்து விழிப்புற்று, மீண்டும் அதில் மூழ்குவது அவருடைய வழக்கமாகும். விட்டுவிட்டு வேலை செய்வதான அவரது பழக்கமும், அந்தப்புரத்தின் இன்பங்களில் மூழ்கிக் கிடப்பதும், குதிரைமீதேறிப் போர்புரியவேண்டிய சமயத்தில் விருந்துண்ணுதல் ஆகியவைகளெல்லாம் அவருடைய தோல்விக் குத் தலையாய காரணங்கள் என்று கருதப்படவேண்டும்.

நீடித்த தாயகம் நீத்த வாழ்வை ஹுமாயூன் மேற்கொள்ளுதல்: 1541–1555; அக்பரின் பிறப்பு, 1542, அக்டோபர் 15ஆம் நாள்

குஷப்பிலிருந்து (Khushab) தொடங்கிய பயணத்தில் பல இன்னல்களுக்குள்ளாகிய ஹுமாயூன் ரோரியை (Rohri) அடைந் தார். ரோரி, பக்கார் (Bakkar) தீவு அரணுக்கு அருகிலும், சிந்து நதியின் இடது கரையோரமாகவும் இருந்தது. சிந்து இராச்சியத் துடன் அவ்விடம் இணைக்கப்பட்டிருந்தது. ஷா ஹுசைன் அர்கூன் என்பவர் (Shah Hussain Arghun) அவ்விராச்சியத்தின் அரசராவார். அக் கோட்டையை ஹுமாயூன் முற்றுகையிடுகை யில் ஹிண்டாலும் ஸாத்கார் மீர்ஸாவும் சேவானைக் (Sehwan) கைப்பற்றச் சென்றனர். முற்றுகை நீடித்து நடைபெற்றது. முக்கியப் பொருள்களை ஹுமாயூன் பெறுவதைத் தடுக்க இராச்சியம் முழுவதும் ஷா ஹுசைன் சூறையாடியதனால், முகலாயர்களுக்குப் பெருந் துன்பம் ஏற்பட்டது. ஹிண்டால் தமது சகோதரரது செய லற்ற நிலையின்மீது வெறுப்புக்கொண்டு சேவானை முற்றுகையிட் டார். அவருடன் சேர்ந்துகொள்வதற்காக ஹுமாயூன் அவ் விடத்திற்கு விரைந்து சென்றார். 1541-ல் ஹிண்டாலின் பாசறை யில் தங்கியிருக்கும்பொழுது, ஹுமாயூன் ஹமீதா பேகம் (Hamida Begam) என்பவளைப் பார்க்க நேர்ந்தது. அவள் ஹிண்டாலின் ஆன்ம குருவான மீர் பாபா தோஸ்த் (Mir Baba Dost) என்பவ ருடைய மகளாவாள். மீர் அலி அக்பர் ஜாமி (Mir Ali Akbar Jami) என்றும் வழங்கப்பட்ட அவர் ஒரு பாரசீக ஷியா ஆவார். அவளை மணம் புரிந்துகொள்ள ஹுமாயூன் விருப்பம் தெரிவித்தார். ஹிண்டால் அவளைத் தமது சகோதரியாகவே கருதிவந்ததனால் அத் திட்டத்தினால் சினமுற்றார். பதினான்கு வயது பெண்ணா யிருந்த ஹமீதா பானுவும், முன்னாள் அரசராக இருந்த ஒருவரை மணம் புரிந்துகொள்ள விரும்பவில்லை. அவளுடைய கை அவ

ருடைய தோளையும் எட்டாது என்று அவளே அச்சத்தைத் தெரிவித்தாள். எனினும், அந்தப்புரத்துப் பெண்கள் வெற்றிகரமாக வற்புறுத்தியதன்மேல், 1541, ஆகஸ்ட்டு 29ஆம் நாள் திருமணம் நடைபெற்றது. வெகு விரைவில் ஹுமாயூன் பக்காருக்குத் திரும்ப வேண்டியிருந்தது. ஹிண்டால் காந்தாரத்துக்குப் புறப்பட்டார். நாடோடிப் பேரரசர் ஷா ஹுசைனின் தலைநகரான தட்டாவைத் (Thatta) தாக்குவதற்கு இப்பொழுது ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். ஆனால், சேவானை மீண்டும் முற்றுகையிடுவதற்காக வழி திரும்ப நேரிட்டது. குஜராத்தைக் கைப்பற்ற உதவி யளிப்பதாகவும், தமது மகளை யாத்கார் நஸீர் மீர்ஸாவுக்கு மணம் புரிந்து வைப்பதாகவும் அவருக்கு ஹுசைன் வாக்குறுதியளித்துப் பேரரசரின் ஆதரவாளர்களுக்கிடையில் பிளவுகளை விதைத்தார். சிந்துவின் அரசர் திறநயனை வெற்றியுடன் பயன்படுத்தியதனால், ஹுமாயூன் மீண்டும் சேவானின் முற்றுகையைக் கைவிட்டு பக்காருக்குப் பின்வாங்க நேரிட்டது. யாத்கார் மீர்ஸா தம் மிடத்தில் முற்றிலும் பகைமை பாராட்டியதை அவர் உணர்ந்தார். வருங்காலத்திற்காக அச்சங்கொண்டு இவ் வையகத்திலிருந்தே விடுபட்டு மெக்காவுக்கு (Mecca) யாத்திரை செய்யப்போவதாகவும் அவர் பேசிக்கொண்டிருந்தார்.

மார்வாரைச் சார்ந்த மால்தேவர் (Maldeva of Marwar) என்பவரிடமிருந்து அப்பொழுது ஹுமாயூனுக்கு ஓர் அழைப்பு வந்தது. ஓர் ஆண்டுக்கு முந்தியே அவருக்கு உதவி தருவதாக மால்தேவர் வாக்குறுதி தந்திருந்தார். அதன்படி, ஹுமாயூன் ஜோதிபுரிக்கு (Jodhpur) புறப்பட்டார். ஆனால், அவர் மார்வாரின் தலைநகருக்கருகில் வரும்பொழுது, மால்தேவர் தமது போக்கை மாற்றிக்கொண்டதையும், அவரைச் சிறைப்பிடித்து ஷேர்ஷா விடம் ஒப்படைக்க விரும்பியதையும் ஹுமாயூன் உணர்ந்தார். அச் சேவையைத் தமக்குப் புரியும்படி ஷேர்ஷா ஒருவேளை மால் தேவருக்கு எழுதியிருக்கக்கூடும். ஆகையால், அவர் சிந்துவுக்குப் பின்வாங்கினார். வழியில் இராசபுதனப் பாலைவனத்தில் கோடைக் காலத்தில் சொல்லமுடியாத பல இன்னல்களுக்கும் துன்பங் களுக்குமுட்பட்டார். ஒரு சமயத்தில் மூன்று நாட்களாக அவருடைய ஆட்கள் தண்ணீரின்றி நடக்கவேண்டியிருந்தது; ஒரு கிணற்றை அடைந்தவுடன் அவருடைய பல ஆட்களும் குதிரைகளும் நிரம்ப தண்ணீரைக் குடித்தனர். அளவுமீறித் தண்ணீரைக் குடித்ததனால் பலர் மடிந்தனர். சிந்துவிலுள்ள அமர்காட் ராணா (Rana of Amarkot) அவருக்கு அடைக்கலம் தந்தார் (1542, ஆகஸ்ட்டு 22ஆம் நாள்). அந்த ராணா அவரை உபசரித்து சிந்துவின் தென்கிழக்குப் பகுதியை வெல்ல வீரர்களையும் பணத்தையும் அவர்

உதவியாக அளித்தார். ராணு வீரசாலர் பிரசாத் (Prasad) என்று சில ஆசிரியர்கள் தவறுகக் கருதுகிறுர்கள். தமது அரண்மனைக் கோட்டையிலேயே முகலாயப் பெண்கள் தங்கியிருக்க அனுமதித்தார். வீரசாலரின் உதவியைப் பெற்று ஹுமாயூன் அக்டோபரில் சிந்துவைக் கைப்பற்ற முன்னேறினுர். பதினைந்து மைல் கடந்து செல்லும்பொழுது அமர்காட்டில் (Amarkot) ஒரு மகன் பிறந்த நற்செய்தி அவருக்கு எட்டியது. வருங்கால அக்பர்தான் அக் குழந்தை. ஜலாலுத்தீன் முகம்மது அக்பர் (Jalal-ud-din Muhammad Akbar) என்ற பெயரை ஹுமாயூன் அக் குழந்தைக்குச் சூட்டினுர். அவர் வறுமையில் மூழ்கியிருந்ததனுல், அத் தறுவாயை அதற்குரிய ஆடம்பரங்களுடன் கொண்டாட அவரால் முடியவில்லை; பிரபுக்களுக்குப் பரிசுகளும் வழங்குவதற்கில்லை. சிந்துவையும் அவரால் கைப்பற்ற முடியவில்லை. இது போதாதென, அவருடைய கர்வம் படைத்த வீரர்கள் ராணு வீரசாலருடைய ஆட்களுடன் சண்டையிட்டுக் கொண்டதனுல், அப் புதிய நண்பருடைய ஆதரவையும் அவர் இழந்தார். ஆனுல், நல்வசமாகப் பட்டினியால் வாடும் படையெடுப்பாளரைத் தமது முன்னிலிருந்து விலக்க விரும்பியவராய், ஷாஹுசைன் அர்கூன் தமது நாட்டின் வழியாகக் காந்தாரத்துக்குப் போகப் படையெடுப்பாளரை அனுமதித்து, அவருடைய பயணத்துக்கான பொருள்களையும் பணத்தையும் கொடுத்து உதவினுர். ஹுமாயூன் ஒரேயடியாக இந்தியாவைவிட்டு விலகினுர். கம்ரன் காந்தாரத்தின் சுதந்திர அரசராக ஆட்சிபுரிய அவர் சார்பாக அஸ்கரி, அதனின் கவர்னராக ஆட்சி புரிந்துவந்தார். ஹுமாயூன் பாதையை அடைக்கவும் அவரைச் சிறைபிடிக்கவும் ஒரு படையைக் கம்ரன் இப்பொழுது அனுப்பிவைத்தார். ஹுமாயூன் மயிரிழையில் தப்பினுர். அவரது ஒரு வயது மகனுன அக்பரைத் தாம் ஓடும்பொழுது அவர் பின்விட்டுச் செல்ல நேர்ந்தது. அவர் காந்தாரத்துக்குப் போகாமல் பாரசீகம் அடைந்தார். அங்கே ஷா தாமஸ்ப் (Shah Tahmasp) அவருக்கு அமோக வரவேற்பளித்தார். ஆனுலும், மதவெறி கொண்ட ஈரானிய அரசர் தமது விருந்தாளி ஷியா மதத்தைத் தழுவவேண்டுமென்று விரும்பியதுமன்றி, தமது கோரிக்கைக்கு அவர் இணங்கும்படி மறைமுகமாக அச்சுறுத்தினுர். இவ்விதமாகத் தம்மை இகழ்ச்சி நடத்தைக்குட்படுத்தியதை ஹுமாயூன் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டார். இறுதியில், 1544-ல் ஹுமாயூன் ஒரு ஷியாவாக வேண்டும், அவரது இராச்சியத்தில் அம் மதத்தைப் பரப்பவேண்டும், காந்தாரத்தைக் கைப்பற்றினுல் அதை ஈரானுக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் ஷா ஹுமாயூனுக்குப் படையுதவி அளிப்பதற்கு இணங்கினுர். இப் படைக்குத் தலைமை வகித்து ஹுமாயூன் காந்தாரத்தை அடைந்து, அஸ்கரியைத்

தோற்கடித்து, அவ் அரணைக் கைப்பற்றினார். அஸ்கரி மன்னிக்கப் பட்டார்; காந்தாரம் பாரசீகர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், பாரசீகத்தின் ஷா மரணமடைந்ததும் ஹுமாயூன் காபூலை மீண்டும் முற்றுகையிடத் தொடங்கினார். காபூல் கைப்பற்றப் பட்டது. அங்கே ஹுமாயூன் தமது இரண்டு வயது மகனை 1544, நவம்பரில் சந்தித்தார். கம்ரன் காஸனிக்கும், பிறகு அங்கிருந்து சிந்துவுக்கும் ஓட்டம் பிடித்தார்.

வெற்றியுடன் காந்தாரத்தையும் காபூலையும் ஹுமாயூன் கைப் பற்றியது, ஆப்கானிஸ்தானத்தில் அவருக்கு இடரில் காப்பான இடத்தைத் தந்தது; ஆனாலும், அவருடைய இன்னல்கள் இன்னும் முடிவடையவில்லை. ஹிந்துகுஷ்ஷுக்கப்பால் (Hindukush) இருந்த நாட்டின்மீது படையெடுத்தபொழுது, ஹுமாயூன் நோய்வாய்ப் பட்டதைக் கம்ரன் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, காபூலின்மீது திடீர்த் தாக்குதல் செய்து, அதை 1546-ல் கைப்பற் றினார். ஹுமாயூனின் ஆட்களுள் பலர் தமது குடும்பங்களை அவர் காபூலில் படுகொலை செய்வார் என்று அஞ்சி அவரைக் கைவிட்டுக் கம்ரானுடன் சேர்ந்துகொண்டனர். உடல்நலமுற்றவுடன் ஹுமா யூன் காபூலை முற்றுகையிட்டார். ஹுமாயூனுடைய பீரங்கிகள் சுடும்பொழுது, நகரின் அரண்மதிலின்மீது அக்பரைக் கம்ரன் வைத்து, அவரைப் பேராபத்துக்குட்படுத்தினார் என்று கூறப்படு கின்றது. ஆனால், முற்றுகை மேலும் மும்முரமாக நடத்தப்பெற்றது. 1547-ல் காபூல் மீண்டும் கைப்பற்றப்பட்டது. தண்டனையி லிருந்து தப்பித்துக்கொள்வதற்காகக் கம்ரன் ஓடிவிட்டார். ஆனால், அவர் மீண்டும் திரும்பிவந்து தமது சகோதரருடன் போரிட்டார்; மீண்டும் தோல்வியுற்று அடிபணிய வேண்டியதாயிற்று (1548). மீண்டும் அவரை ஹுமாயூன் மன்னித்து ஆக்ஸஸ் (Oxus) நதிக்கு வடக்கிலிருந்த இராச்சியத்திற்கு கவர்னராக்கினார். 1549-ல் கம்ரன் மீண்டும் தம் சகோதரருடன் வஞ்சகமாக நடந்துகொண்டு உண்மையில் காபூலை மீண்டும் கைப்பற்றினார். தம் சகோதரருடன் போரிட்டதில் கடுங்காயமுற்ற ஹுமாயூன் ஒரு தனியிடத்தில் அடைக்கலம் புக நேர்ந்தது; அவர் இறந்து விட்டாரென்றும் நம்பப்பட்டது. எனினும், பதக்ஷானைச் சார்ந்த சுலைமான் (Sulaiman) என்பவரின் உதவியுடன் அவர் மீண்டும் போர்க்களத்தில் குதித்தார்; அவர் கம்ரனைத் தோற்கடித்துக் காபூலைக் கைப்பற்றினார். கம்ரன் தப்பி ஓடி நமது நாட்டில் இஸ்லாம் ஷாவினிடம் (Islam Shah) அடைக்கலம் புகுந்தார்; ஆனால், பிடிபட்டு ஹுமாயூனிடம் ஒப்படைக்கப்பட்டார். அவ ருடைய பிரபுக்கள் கம்ரனைக் கொல்லும்படி அறிவுரை செய்தும், அதைப் பொருட்படுத்தாமல் ஹுமாயூன் அவருடைய சகோதரரை

மன்னித்தார்; ஆனால், அவரைக் குருடாக்கும்படி ஆணை பிறப்பித்தார். கம்ரன் தமது தோழர்களால் கைவிடப்பட்டார்; அவருடைய மனைவியுடன் மெக்காவுக்கு யாத்திரை செய்தார். அங்கே 1557-ல் அவர் உயிர் துறந்தார். ஹுமாயூனுடைய மற்றச் சகோதரர்கள் ஏற்கெனவே மறைந்துவிட்டனர். கம்ரனுடன் இறுதியாகப் போரிட்டதற்குப்பின் அவர் கைதுசெய்யப்பட்டுப் பிறகு மெக்காவுக்கு அனுப்பப்பட்டார்; அங்கிருந்து அவர் திரும்பவே இல்லை. இரவில் நடந்த ஒரு தாக்குதலில் ஹிண்டால் ஓர் ஆப்கானியரால் கொலையுண்டார். இவ்விதமாகத் தமது பயங்கரப் பகைவர்களிடமிருந்து ஹுமாயூன் விடுபட்டார். அப் பகைவர்கள் அவர் வெளியே துரத்தப்படுவதற்கும் அவருடைய வீழ்ச்சிக்கும் காரணமாவர்.

ஹுமாயூனின் மீட்சி: அவர் நாடு கடத்தப்பட்டிருந்த பொழுது அவரை இந்தியாவிலிருந்து விரட்டியடித்து, விசாலமான ஆற்றல்மிக்க பேரரசு ஒன்றை நிறுவுவித்து, அதை ஒரு சிறந்த நிர்வாகத்தினால் வலுப்படுத்திய அவரது மாபெரும் பகைவரான ஷெர்ஷா 1545 மே மாதத்தில் உயிர்நீத்தார். அவருக்குப்பின் அவருடைய மகன் இஸ்லாம் ஷா என்பவர் பதவியேற்றார். குடிமக்களின் நலனுக்காகப் பாடுபடுவதற்காக ஷெர்ஷா மேற்கொண்ட கொள்கையை அவரும் கடைப்பிடித்தார்; ஆனாலும், தமது ஆப்கானியப் பிரபுக்களை வரம்புக்குட்படுத்த அவரால் இயலவில்லை. அவரது உரிய காலத்திற்கு முற்பட்ட மரணத்திற்குப்பின் (1553, அக்டோபர், 30ஆம் நாள்), ஆப்கானியப் பேரரசு தனது சீர்குலைவுப் பாதையில் சென்றுகொண்டிருந்தது. அவருடைய பன்னிரண்டு வயது மகன், அச் சிறுவனின் தாய்மாமனான முபாரிஸ் கான் (Mubariz Khan) என்பவரால் கொல்லப்பட்டான். முபாரிஸ் கான், முகம்மது ஆதில்ஷா என்ற பட்டப் பெயரைப் புனைந்துகொண்டு தம்மை அரசனாக்கிக்கொண்டார். ஆதில் என்று அவர் பெருவாரியாக வழங்கப்பட்டு வந்தார். இம் மனிதர் தன்னலத்தையும் சிற்றின்பங்களையும் நாடினார். நிர்வாகத்தின் சுவையற்ற விவரங்களை விரும்பாத இவர், பொறுப்பைத் தமது ஹிந்து அமைச்சரான ஹேமூ (Hemu) என்பவரிடம் ஒப்படைத்து சூனருக்கு ஓய்வுபெறச் சென்றுவிட்டார். இப்ராஹிம் ஷா (Ibrahim Shah), சிக்கந்தர் ஷா (Sikandar) என்ற இரண்டு சூர் அரச குடும்பத்தினர் ஆதில் ஷாவின் ஆட்சியை எதிர்த்தனர். இவ்விருவரும் தமக்குள்ளேயே மிகக் கடுமையான பல போர்களைச் செய்துகொண்டவர்கள். ஷெர்ஷாவின் வீரத்தாலும், புத்தி சாதுர்யத்தினாலும், அரசியல் மேதமையினாலும் நிறுவப்பட்ட ஆப்கானியப் பேரரசின் சிதைவு எத் தறுவாயிலும் நிகழும்போலிருந்தது. நமது நாட்டின் தொல்லை

மிக்க நிலையை ஹுமாயூன் கவனித்துக்கொண்டிருந்தார்; தாமிழந்த இராச்சியத்தைத் திரும்பிவந்து பெறுவதற்கான வாய்ப்பை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். இஸ்லாம் ஷா இறந்த ஓர் ஆண்டுக்குள் அவ் வாய்ப்பு எட்டியது. சோதிடத்தில் நம்பிக்கை கொண்டிருந்த இவர், ஒரு நாள் தாம் சந்தித்த மனிதர்களில் முதல் மூவரின் பெயரிலிருந்து சகுனம் பார்த்தார். ஹஃபீஸின் கவிதைகளிலிருந்து அடுக்கப்பட்ட ஒரு சகுனம் அதை உறுதிப்படுத்தியது. இச் சகுனங்களெல்லாம் இந்துஸ்தானத்தை மீண்டும் கைப்பற்றவேண்டும் என்ற அவருடைய முடிவுக்குச் சாதகமாகவே இருந்தன. தொல்லை மிக்க தமது சகோதரர்களை அவர் விட்டுக் கழித்ததனாலும், ஆப்கானிஸ்தானத்தில் தம் நிலையை வலுப்படுத்திக்கொண்டதனாலும் திட்டமிட்ட அவருடைய செயலுக்கு எதுவும் தடைசெய்வதற்கில்லை. ஆயத்தங்கள் விரைவாக நடந்தன. அவர் காபூலை விட்டுச்சென்று 1554, டிசம்பர் 25ஆம் நாள் பெஷாவரை (Peshavar) அடைந்தார். சிந்து நதியைக் கடந்ததும், அவருடைய அதிகாரிகளில் மிக்க பற்று வாய்ந்தவரும், காந்தாரத்திலிருந்து வந்த பல தளபதிகளும் அவருடன் சேர்ந்துகொண்டனர். கக்கார் (Gakkhar) தலைவரான சுல்தான் ஆதம் (Sultan Adam) என்பவரின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெறுவதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. ஆனால், அவர் சிக்கந்தர் ஷா சூர் (Sikandar Shah Sur) என்பவருடன் ஏற்கெனவே கூட்டுறவுஒன்றை ஏற்படுத்திக்கொண்டதனால், அவ் உதவியை மறுத்துவிட்டார். ஹுமாயூன் பர்ஹலா (Parhala) வழியாகச் சென்று கிழக்குப் பஞ்சாபில் குந்தாஸ்புர் மாவட்டத்திலுள்ள கலானூர் (Kalanaur) அடைந்தார். இங்கே இவர் தமது படையை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். ஒரு பிரிவு சைஹாபுத்தீன் கானின் (Saihab-ud-din Khan) தலைமையின்கீழ் லாகூருக்கும், இரண்டாவது பிரிவு பைராம்கானின்கீழும் இன்னும் சில தலைவர்களின்கீழும் நசீப்கான் (Nasib Khan) என்ற ஓர் ஆப்கானியருக்கு எதிராகவும் அனுப்பப்பட்டன. நசீப்கான் ஹரியனாவைத் தம்மிடம் வைத்திருந்தார். எவ்வித எதிர்ப்புமின்றி லாகூர் கைப்பற்றப்பட்டது. சில நாட்களுக்குப் பின் (1555, பிப்ரவரி 24ஆம் நாள்) ஹுமாயூன் அவ் இடத்தை வந்தடைந்து, அந் நகருக்கும் மாவட்டத்துக்கும் தேவைப்பட்ட நிர்வாகத்தை அமைக்க ஏற்பாடுகள் செய்தார். அதற்கடுத்து, ஷாபாஸ் கான் ஆஃப்கன் (Shahbaz Khan Afghan) என்பவருடன் கடும்போர் செய்தபின் மார்ச் மாதத்தில் திபால்பூர் (Dipalpur) கைப்பற்றப்பட்டது. ஏறக்குறைய அதேசமயத்தில் பைராம்கான் நசீப்கானை விரட்டியடித்ததற்குப்பின் ஹரியனா பர்கானாவைக் கைப்பற்றினார். பிறகு அவர் ஜலந்தருக்கு (Jalandar) முன்னேறினார். ஜலந்தரி

லிருந்து பைராம்கானும் மற்றும் சில முகலாயப் பிரபுக்களும் சட்லெஜ் (Sutlaj) நதிக்கரையிலிருந்த மச்சிவாராவை (Machhiwara) நோக்கி முன்னேறினர். அந் நகரம் லூதியானுவிலிருந்து (Ludhiana) 19 மைல் தூரத்திலுள்ளது. இங்கே, முகலாயர்களுக்கும் நசீப்கான், தாதார்கான், மற்றும் சில முக்கியத் தலைவர்களின்கீழ் இருந்த ஆப்கானியர்களுக்குமிடையில், 1555, மே 15ஆம் நாளன்று கடும்போர் நிகழ்ந்தது; நள்ளிரவுக்குச் சற்றுப் பின்வரை அது நடந்தது. நல்வசமாக ஆப்கானிய முகாமுக்கருகில் தீ மூண்டது. இதனுல் ஆப்கானியர்களின் நடமாட்டத்தையும், தமது அம்புகளையும், பீரங்கிகளையும் குறிபார்க்கவும் முகலாயர்களுக்கு முடிந்தது. ஆப்கானியர்கள் மிகக் கடுமையாக எதிர்த்த போதிலும், அடுத்த நாள் அதிகாலையில் அவர்களுடைய படை உடைபட்டது; படைவீரர்கள் களத்தைவிட்டு ஓட்டம் பிடித்தனர். சர்ஹிண்டைக் கைப்பற்ற பைராம்கான் விரைவில் ஏற்பாடுகள் செய்தார்.

மச்சிவாராப் போர் முகலாயர்கள் பஞ்சாபைக் கைப்பற்றும்படி செய்தது. இது சிக்கந்தர் சூரை அச்சுறுத்தியது. இந்துஸ்தானத்தின் இறைமைக்குப் போட்டியிட்டுக்கொண்டிருந்த மூன்று சூர் அரசர்களில் இவர் ஒருவராவர். இவர் எண்பதினுயிரம் படைவீரர்களைத் திரட்டிக்கொண்டு சர்ஹிண்டை மீட்பதற்காக 1555, ஜூன் 22ஆம் நாள் அன்று டெல்லி நோக்கி முன்னேறினுர். போர் ஒருவேளை முடிவான போராக இருக்குமாகையால், பைராம்கானின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவருடைய படைகளோடு சேர்ந்துகொள்ள லாகூரிலிருந்து புறப்பட்டார். இரத்தம் சிந்தும் போர் ஒன்று சர்ஹிண்டுக்கு அருகிலிருந்த ஓர் இடத்தில் 1555, ஜூன் மாதம் 22ஆம் நாள் அன்று நிகழ்ந்தது. சிக்கந்தரின் பிரமாண்டமான படையினுல் முகலாயர்கள் முதலில் அச்சமுற்றனர். அப் படைக்குமுன் மலைபோன்ற யானைகள் நின்றுகொண்டிருந்தன. ஆனுல், பைராம்கானின் இராணுவத் திறனுல் முகலாயர்கள் வெற்றி பெற்றனர். சிக்கந்தரும் விரட்டியடிக்கப்பட்டார். அவர் மன்கட்டுக்குத் (Mankot) தப்பியோடினுர். அங்கிருந்து, வடமேற்குப் பஞ்சாபின் மலைகளுக்கு ஓடினுர். நினைவுக்குரிய இவ் வெற்றிக்குப்பின் ஹுமாயூன் சர்ஹிண்டை அடைந்து அங்கிருந்து சமானுவுக்குச் (Samana) சென்றுர். அங்கே அவர் சில நாட்கள் கழித்தார். பிறகு அவர் டெல்லியை நோக்கி முன்னேறி, 1555, ஜூலை 20ஆம் நாள் அதை அடைந்தார். நல்ல சகுனத்தில் ஜூலை 23ஆம் நாளன்று அவர் அந் நகருக்குள் நுழைந்தார்; பதினைந்தாண்டுகளுக்குப் பின் அவர் டெல்லி சிம்மாசனத்தை மீண்டும் கைப்பற்றினுர். சிக்கந்தர் சூரைப் பிர்

தொடரப் பேரரசர் ஏற்கெனவே ஒரு சிறு படையை அனுப்பியிருந்தார். இவர் தமது இள மகனை அக்பரை இப்பொழுது பஞ்சாப்பின் கவர்னராக நியமித்தார்; அவருடைய ஆசிரியரான பைராம் கான் அவருக்கு உதவியாக நியமிக்கப்பட்டார். சிறிது காலத்திற்கு முன்பே அக்பர் அரச பதவிக்கு வரவேண்டிய இளவரசராக நியமிக்கப்பட்டிருந்தார். சிக்கந்தர் சூரை அடக்கவேண்டி அக்பரைப் பஞ்சாபின் கவர்னராக நியமிக்கவேண்டியிருந்தது. சூரின் படைபலம் அதிகமாகிக்கொண்டிருந்தது. மேலும், பஞ்சாபை அவர் சூறையாடிக்கொண்டிருந்தார். பதோனின் தலைக் கலகக்காரரான கமர் பேக் (Qamar Beg) என்பவரை அடக்க அலிகூலி கான் ஷைபானி (Ali Quli Khan Shaibani) என்பவர் அனுப்பப்பட்டிருந்தார். அச் சாதனையை அவர் மிக எளிதாகச் செய்து முடித்தார். ஆக்ராவையும் சுற்றுப்புற மாவட்டங்களையும் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இங்ஙனமாக, சில மாதங்களுக்குள், ஒரு காலத்தில் தமது ஆட்சிக்குட்பட்டிருந்த இராச்சியத்தின் பெரும் பகுதியை மீண்டும் கைப்பற்றினர்.

இறுதி நாட்களும் இறப்பும்: மீட்கப்பட்ட மன்னரை எதிர்நோக்கி நின்ற பொறுப்பு உண்மையில் மிகப் பெரிதானதாகும். அவரது இராச்சியத்தின் ஒரு பகுதியையே அவர் பெற்றிருந்தார். அவருடைய ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த சிறு பகுதியிலும் அடக்கப்படவேண்டிய, மனநிறைவற்ற குறுநில மன்னர்கள் பலர் இருந்தனர். அவர்கள் பெருவாரியாக ஆப்கானியர்களாவர். சிறந்த நிர்வாக முறை ஒன்றை நிறுவுவதும், குடிமக்களின் ஆதரவைப் பெறுவதும் மிகக் கடுமையான வேலையாக இருந்தது. அடிபணியாத தலைவர்களை அடக்குவதிலும், முகலாய ஆதிக்கத்தை மீண்டும் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்வதிலும் ஹுமாயூன் ஈடுபட்டிருந்தார். ஆனாலும், ஷெர்ஷாவின் காலத்திய சிறந்த நிர்வாக அமைப்பை உயிர்ப்பிக்க அவர் எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. இந்தியாவின்மீது முகலாயர்கள் நடத்திய படையெடுப்பினால் ஓரளவும், ஷெர்ஷாவின் வாரிசுகளின் காலத்தில் நடந்த கட்சிப் போர்களினால் ஓரளவும் அந் நிர்வாகம் சிதறிவிட்டிருந்தது. அவருடைய இறுதிக் காலம் விரைந்து கொண்டிருந்தது. 1556, ஜனவரி 24ஆம் நாள் அன்று அவர் தமது நூலகத்தில் வீற்றிருந்தார். தீன்பனா (Din Panah) என்ற கட்டடக் கூட்டத்தில் அந் நூலகம் அமைந்திருந்தது. பிறகு அதற்கு ஷேர் மண்டல் (Sher Mandal) என்ற பெயர் வழங்கப்பட்டது. அவர் தமது சிறந்த பிரபுக்களுடனும் சோதிடர்களுடனும் உரையாடிக்கொண்டிருந்தார். வெள்ளிக் கோள் (Planet Venus) தோற்றமளிக்கும்பொழுது அரசவையைக் (darbar) கூட்டத் திட்ட

மிடப்பட்டது. பக்கத்திலிருந்த மசூதியிலிருந்து மௌஸ்ஸினின் (Muazzin) தொழுகை அழைப்புக் குரலை இப்பொழுது அவர் கேட்டார். அதனால், மிகச் செங்குத்தாக இருந்த படிகளின் வழியாக இறங்கிச் சென்று மாலைத் தொழுகையில் ஈடுபட அவர் எழுந்தார். அவருடைய கழி நழுவி விழுந்ததனால் அவர் படிக்கட்டிலிருந்து விழுந்தார்; அவரது கபால எலும்பு முறிந்தது. பிறகு அவர் அரண்மனைக்குக் கொண்டுபோகப்பட்டார். மூர்ச்சை தெளிவுற்றதும் தமது நிலைமை மோசமாக இருப்பதை அவர் உணர்ந்தார். ஆகையினால், அவருடைய மகனை அக்பருக்குத் தமது நிலையைப்பற்றித் தெரியப்படுத்தி அவரைத் தமது வாரிசாக நியமித்தார். 1556, ஜனவரி 26ஆம் நாள் அவர் உயிர்நீத்தார். இங்ஙனமாக, லேன் பூல் (Lane Pool) எழுதுவதுபோல, 'வாழ்க்கையில் பன்முறை தடுக்கி விழுந்த ஹுமாயூன் வாழ்க்கையைவிட்டே வெளியில் தடுக்கி விழுந்துவிட்டார்.'

குணவியல்பு: நாகரிக மனிதர் என்ற முறையில் ஹுமாயூனைப் பற்றி இரண்டு கருத்துகள் இருக்க முடியாது. மனிதர் என்ற நிலையில் அவருடைய குணத்தில் எவ்விதக் குறைவும் கிடையாது என்பதை அவர் காலத்துக்குரிய வரலாற்றாசிரியர்களும் தற்போதைய வரலாற்றாசிரியர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். அவர் ஒரு கீழ்ப்படியும் மகனாவார்; தமது தந்தையின் ஆணைகளை அவருடைய வாழ்நாளிலும், அவர் இறந்த பின்பும் நிறைவேற்றுவதில் எப்பொழுதும் ஹுமாயூன் தயங்கியதில்லை. பாபருடைய இறுதி அறிவுரை அவருடைய காதுகளில் எக்காலமும் ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. அதை மிகத் தீவிரமாக அவர் பின்பற்றியதனால், அவருடைய தகுதியற்ற சகோதரர்களுக்கு எத்தகைய தீங்கும் இழைக்கக்கூடாதென்பதற்காகப் பலமுறை அவருடைய சிம்மாசனத்தையும் அவருடைய உயிரையும் ஹுமாயூன் பேராபத்துக்குட்படுத்த வேண்டியிருந்தது. அவருடைய தாயான மாஹிம்பேகம் (Mahim Begam) என்பவளின்மீதும் அவர் அங்ஙனமே பற்றுக் கொண்டிருந்தார். எண்ணற்ற தமது ஆண்பெண் உறவினர்களிடத்தில் அவர் மிக்க அன்பு செலுத்தினார். பல பெண்களை மணம் புரிந்திருந்தபோதிலும். தம்முடைய மனைவியரிடம் அவர் பற்றுதல் கொண்டிருந்தார். தமது மக்களையும், குறிப்பாக அக்பரையும் ஒரு தகப்பன் விரும்பும் முறையில் அவர் நேசித்தார். முகம்மது ஸமன் மீர்ஸா, முகம்மது சுல்தான் மீர்ஸா, அவர்களுடைய எண்ணற்ற சந்ததியார்கள்போன்ற அவருடைய நெருங்கிய உறவினரும் இனத்தினரும் நிரந்தரமாகக் கிளர்ந்தெழுந்துகொண்டிருந்தபோதிலும், அவர்களை அவர் மீண்டும்மீண்டும் மன்னித்து, ஊதியமும் பொறுப்புமுள்ள பதவிகளையும் அவர்களுக்கு அளித்

தார். அவருடைய தந்தையைப் போலவே இவரும் தமது அதிகாரிகளுடனும் பணியாட்களுடனும் தடையின்றிக் கலந்துகொண்டு, அவர்களுடைய மகிழ்ச்சிகளையும் துயரங்களையும் பங்கிட்டுக் கொண்டார். கற்றறிந்தவர்களுடைய கூட்டத்தை இவர் விரும்பினர். பலதரப்பட்ட நாகரிக, சமயப் பொருள்களைப்பற்றி அவர்களுடன் இவர் விவாதங்கள் நடத்தினர். நூல்களைக் கற்பதில் விருப்பம் கொண்டவரும், துருக்கிய பாரசீக மொழிகளிலும், தத்துவம், கணிதம், வானநூல், முஸ்லிம் அநுபூதி நெறியிலும் தேர்ச்சி பெற்றவருமான இவர் தம்மைச் சுற்றிப் புகழ்மிக்க அறிஞர்களைத் திரட்டி, அவர்களுக்குத் தம்மால் இயன்ற ஆதரவைத் தந்தார். இருந்தபோதிலும், கற்றறிஞர் என்ற நிலையில் ஹுமாயூன் பாபரைப் போல் சரிநுட்பமானதும் துல்லியமானதுமான அறிவைப் பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவருடைய எழுத்துப் பாணியிலும் எழுத்துக் கூட்டிலும் அவர் அக்கறை செலுத்தவில்லை; தெளிவற்றதும் ஆடம்பரமானதுமான மொழியைப் பயன்படுத்துவதை அவர் விரும்பினர். இப் பழக்கம் அவருடைய வாழ்நாளில் நெடுங்காலம்வரை இருந்துவந்தது. இருந்தபோதிலும், அவர் முற்றிலும் நாகரிகமான மனிதர். அவருடைய உரையாடலில் மிக்க பண்பட்ட வகையிலும் கவனத்துடனும் ஈடுபடுவார்; நடைப் பாங்கில் கவர்ச்சிமிக்கவராவார். நடையுடைத் தோற்றத்தில் அவை நயப்பகட்டராவார். ஃபெரிஷ்டாவின் (Ferishta) கூற்றின்படி, 'அவர் உயர்ந்த தோற்றத்தைப் படைத்தவராவார்; பழுப்பு நிறமுடையவர். மென்னயம், இரக்க மனப்பான்மைபோன்ற குணங்களை அளவு மீறிக் காணக்கூடுமெனில் ஹுமாயூன், குணவியல்பில் அவை அதிகமாகவே காணப்பட்டன.' 'அறஞ்செய்தல், வாரி வழங்குதல் ஆகிய பண்புகள் அவரிடத்தில் மிக அதிக அளவில் காணப்பெற்றன.'

வைதீக ஸுன்னி வகையைச் சேர்ந்திராதபோதிலும், ஹுமாயூன் ஓர் உண்மை முஸல்மானுவார்; நாள்தோறும் ஐந்து முறை தொழுவதையும், தமது சமயத்தின் இதரச் சடங்குகளையும் ஒழுங்காக மேற்கொண்டவர். இவருடைய தந்தையைப்போலவே இவரும் சமயப் பிரிவு வெறியினின்று விடுபட்டவர்; ஷியாக்களிடம் எவ்வித அருவருப்பும் கொண்டிராதவர். அவருடைய தலையாய அரசியான ஹமீதா பானு பேகம் ஒரு ஷியா ஆவாள்; அங்ஙனமே அவருடைய பற்றுமிக்க, சிறந்த சேவகரான பைராம்கானும் ஒரு ஷியா ஆவார். அக் காலத்திற்குரிய பழக்கத்துக்கு மாருக, இஸ்லாமிலிருந்த முரண் சமயக் கருத்தைத் துன்புறுத்த அவர் மறுத்துவிட்டார்; பாரசீகத்தில் இருக்கும்பொழுது பெருமளவும் விருப்பமின்றியும் உள்ளடக்க மறைப்புடனும் ஷியா மதத்தின் பழக்கங்களை இவர்

பின்பற்றினர். ஆனல், ஹிந்துக்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்புபொறுத்தவரை அக் காலத்து வழக்கத்தைவிட்டு அவர் இருக்கவில்லை. பொய்மை வாய்ந்த போபால் குறிப்பேட்டில் ஹிந்துக் களுக்குச் சமய உரிமையை முற்றிலும் காட்டவேண்டுமென்றும், பசுக் கொலைக்குத் தடைபோடவேண்டுமென்றும் அவருக்கு பாபர் அறிவுரை கூறியிருந்தபோதிலும், எண்ணற்ற தமது இந்து குடி மக்களிடம் ஹுமாயூன் முகலாயக் காலத்திற்குமுன் இருந்த சுல்தானியர்களைப்போலவே நடந்துகொண்டார். அவர் தமது சக சமயத்தினருக்குச் சலுகைகள் காட்டினர். அவருடைய நலனுக்கே பெருந்தீங்கிழைத்தபோதிலும், இந்துக்களை எதிர்த்துப் போரில் ஈடுபட்டிருந்த சமயச் சகோதரர் ஒருவரை அவர் தாக்க மறுத்தார். காலஞ்சாரிலிருந்த இந்துக் கோயில்களை அவர் அழித்தார். இந்துக்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்தவும் அவர் தயங்கவில்லை. ஆனலும், அவர் மிகக் கடுமையாகத் துன்புறுத்து பவரல்லர்; இந்துசமயத்தை அடக்குவதற்கான ஒழுங்கான கொள்கை எதையும் அவர் பின்பற்றவில்லை.

பெருவாரியான உடல்வன்மை பெற்றிருந்த ஹுமாயூன் ஒரு சிறந்த வீரருமாவார். அவர் களத்தில் வீரத்துடன் போர் புரிந்ததுமன்றிக் களத்தில் அடிக்கடி தமது உயிரைப் பேராபத்துக் குட்படுத்திக்கொண்டார். நெருக்கடி காலங்களில் பொறுமை படைத்தவரான இவர் எவ்வளவு களைப்பையும், இன்னலையும், துயரையும் பொறுத்துக்கொள்ளும் தன்மைபெற்றவர். அவர் ஒரு குறிப்பிடத்தக்க நுண்நய வல்லுனராவார்; ஆனலும், அவரை அவருடைய தந்தையுடனே, அவருடைய பகைவரான ஷெர்ஷா வுடனே ஒப்பிட முடியாது. அவர் ஒரு சிறந்த தளபதியல்லர்; மனிதர்களின் தலைவருக்குரிய தனிப்பட்ட காந்தம் அவரிடத்தில் காணுவதற்கில்லை. ஒரு வெற்றிக்குப்பின் மற்றொரு வெற்றியாக பாபரைப் பின்பற்றியவர்களும் அவரிடம் பெரும் அச்சம் கொண் டிருந்தவர்களுமான அதே அதிகாரிகளும் படைவீரர்களும் மீண்டு மீண்டும் ஹுமாயூனுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். பாபரின் காலத்தில் தன் சிறப்பின் திறனை அறியப்படுத்தி யிருந்த முகலாயப் படை வலிமையிழந்த ஒரு கருவியாயிற்று; ஹுமாயூனின் ஆட்சிக் காலத்தில் அப் படை உட்பூசலினல் குலைக்கப்பட்டிருந்தது. முகலாயர்களின் போர் முறையை ஹுமாயூன் சரிவரப் பயன்படுத்தவில்லை; துரிதமாகப் போரிடப் படை வீரர்களுக்கு ஊக்கமூட்டவும் அவர் தவறிவிட்டார். ஒரு தளபதி என்ற நிலையில், அவருடைய பகைவர்களின் பலவீனங்களையும் இன்னல்களையும் அவர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. போருக்குத் தேவையான வலிமையைப் பகைவர்

அவருக்கெதிராகத் திரட்டிக்கொள்ளும்படி எப்பொழுதும் அவர் வாய்ப்பளித்தார்.

ஒரு சிறந்த நிர்வாகி என்றோ அல்லது ஆட்சியாளர் என்றோ கூட ஹுமாயூனை அழைக்க முடியாது. உண்மையிலே அரசியல் ஆக்கத்திறனைப் பெறாத இவர், தமது ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த இராச்சியப் பகுதிகளில் ஒரு சிறந்த நிர்வாக முறையை நிறுவ நினைக்கவில்லை. நிர்வாகத்திற்குரிய சீர்திருத்தங்களைப் புகுத்த அவருக்குப் போதிய காலம் எட்டவில்லை என்று சில வேளைகளில் கருதப்படுகிறது. ஆனால், அக் கருத்து தவறான கருத்தாகும். அவர் பதவியிலிருந்து விலகியதற்கும் விரட்டியடிக்கப்பட்டதற்கும் பின்பு அவர் ஏறக்குறைய பத்துஆண்டுகளாக ஆட்சிபுரிந்தார். ஆனாலும், அக் காலத்தில் குடிமக்களின் ஆன்ம, சமுதாய, பொருள்சார் நிலையையுங்கூட அவர் முன்னேற்றவில்லை. உண்மை; அவர் இது போன்ற செயல்களுக்கான திறனையும் தகுதியையும் பெற்றிருக்க வில்லை. அவருடைய மீட்சிக்குப்பின் ஓர் ஆண்டு ஆட்சியின் பொழுது, ஷெர்ஷாவின் காலத்திலிருந்த சிறந்த நிறுவனங்களை உயிர்ப்பிக்க முன்னணியான ஏற்பாடுகள் எதையும் அவர் செய்ய வில்லை. அவரது ஆட்சியின்பொழுது அவர் பிறப்பித்த சில ஆணைகள் பயனற்றனவாகவே இருந்தன. அஹ்லி தௌலாத் (Ahl-i-Daulat), அஹ்லி சாதாத் (Ahl-i-Saadat), அஹ்லி முராத் (Ahl-i-Murad) என்று அவருடைய பிரபுக்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்தது பொருளற்றதாகவும் முறையற்றதாகவும் இருந்ததுமன்றி, எவ்வித நிர்வாகப் பயனையும் அளிக்கவில்லை. மற்றோர் ஆசிரியரின் கூற்றுப்படி, அவர் தமது அதிகாரப் படிமுறையைப் பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு வகுப்பும் ஓர் அம்பால் சுட்டிக் காட்டப்படும்படி அமைத்தார். இது மேலும் வேடிக்கையாக இருந்தது. வாரத்தில் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு நிறமான ஆடைகளை அணிந்துகொள்ளுதல் இவரின் மற்றொரு புதுமைச் செயலாகும். உதாரணமாக, ஞாயிறன்று மஞ்சள் நிற ஆடைகளையும், சனியன்று கருநிற ஆடைகளையும், திங்களன்று வெண்ணிற ஆடைகளையும் அவர் அணிந்துகொண்டார். இது சில சோதிடக் காரணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது போலும்; நிர்வாகத்துடன் இது எவ்விதத் தொடர்பும் கொண்டிருக்கவில்லை. அவர் செய்த மற்றப் பல புதிய செயல்களையும் அவர் செய்ததாக அக் காலத்துக்குரிய குறிப்புகளிலும் காணலாம். ஆனால், வருமானத்துறையிலோ அல்லது மற்ற எந்த நிர்வாகக் கிளையிலோ அவர் எவ்வித உறுதியான முன்னேற்றத்தையும் கொண்டுவந்ததாக ஓர் ஆசிரியரும் குறிப்பிடவில்லை. எதைப்பற்றியும் சரிவர ஆராயாத திட்டம்

எதையும் படைக்காததும், ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன் அத் திட்டத்தைக் கைவிட்டு மற்றொரு திட்டத்தை மேற்கொள் வதும் அரசர் என்ற நிலையில் அவரிடத்தில் காணப்பட்ட முக்கியக் குறைபாடுகளாகும். உண்மையில், நிர்வாகத்தின் சுவையற்ற விவரங்கள் அவருக்கு அருவருப்பைத் தந்தன. அரசர் என்ற நிலை யில் ஹுமாயூன் பொறுப்பற்றவராயிருந்தார் என்பது வியப்புக் குரியதாயினும் உண்மையேயாகும். அரசபதவியைப்பற்றிய அவ ரது கருத்து ஷெர்ஷாவின் கருத்துக்கு முற்றிலும் மாறுபட் டிருந்தது. ஷெர்ஷாவின் கருத்தின்படி தமது குடிமக்களின் நலனை நாடுவது அரசனின் தலையாய கடமையாகும். ஹுமாயூனால் தமது அதிகாரிகளுக்கிடையிலும் படைவீரர்களுக்கிடையிலும் ஒழுங்கை நிலைநாட்ட முடியவில்லை. தமது தகப்பனாரான பாபர் மிக எளிதாகப் பெற முடிந்த கீழ்ப்படிதலை ஹுமாயூன் அரசர் என்ற நிலையில் எதிர்பார்க்க முடியவில்லை. அதுபோன்ற கீழ்ப்படிதலின்றி எந்த அரசாங்கமும் வெற்றிகரமாக நடைபெற முடியாது. சோம்பலும் இடைவேளைகளில் சிற்றின்பங்களிலும் மடிமைகளிலும் மூழ்கிக் கிடத்தலும் அவருடைய தலையாய குறைகளாகும். முடிவுக்கு வரா நிலையும், சமனற்ற நிலையும், பொருத்தமுள்ள போக்கின்மையும் அவருடைய அடுத்த முக்கியக் குறையாகும். முரண்பட்ட போக்கு களுக்கிடையில் அவருடைய மனம் நெடுங்காலமாக ஊசலாடும். சௌசாவில் அவருடைய உயிரைக் காப்பாற்றிய நைஸாம் (Nizam) என்னும் பெயருடைய தண்ணீர் தூக்குபவரை ஒரு நாளைக்கு அரியணையில் அமர்த்திவைக்கும் அளவுக்கு அவர் நடந்துகொண்டார். அவர் கஞ்சா குடிப்பதும் சிற்றின்பங்களில் மூழ்கியிருப்பதும் அவர் இயற்கையாகவே பெற்றிருந்த பெரு வாரியான திறமைகளை அழித்தன. அவருடைய சகோதரர் களையும் உறவினர்களையும் அவர் மீண்டும் மீண்டும் மன்னித்து விடுவார். அவர்களிடம் அவர் காட்டிய அளவுக்குமீறிய வண்மை யும் இளகிய மனப்பான்மையும் ஒழுங்கான அரசாங்கத்தை நடத்து வதற்குத் தடையிட்டன.

ஹுமாயூன் என்ற சொல்லுக்கு பாக்கியசாலி என்று பொருள், அப் பெயரை அவர் பெற்றிருந்தாலும், அவர் உண்மையில் மிக்க துர்பாக்கிய அரசராவார். எல்லாரிடத்திலும் அவர் பண்பும், வண்மையும், நல்லெண்ணமும் படைத்திருந்தபோதிலும், அரசர் என்ற நிலையில் அவர் தோல்வியுற்றார். இருந்தபோதிலும், தமது வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் டெல்லியின் கிரீடத்தை அவர் மீண்டும் கைப்பற்றியது பாக்கியவசமாகும். அவ்விதம் அவர் செய்திராவிடின் நமது நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கிய இடம் பெற்றிருக்க முடியாது. அக்பர்போன்ற ஒரு மகனை அவர் பெற்றது

மேலும் பாக்கியவசமாகும். இந்தியத் துணைக்கண்டத்தில் பல பகுதிகளை அவர் கைப்பற்றி உலகத்திலேயே மிகச் சிறப்பாக விளங்கிய ஒரு நிர்வாகத்தை நிறுவியதனால், ஹுமாயூனின் பெயரும் முகலாய வமிசத்தின் பெயரும் நீடித்து வாழும்படி செய்தன.

மேலும் படிப்பதற்கான நூல்கள்

(1) 'Memoirs of Babur' (பாபரின் வாழ்க்கைக் குறிப்புகள்), திருமதி எஸ். பெவரிட்ஜ் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

(2) 'Humayun Nama' by Gulbadan Begam (ஹுமாயூன் நாமா—குல்பதன் பேகம்), ஆங்கிலத்தில் ஏ. எஸ். பெவரிட்ஜ் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

(3) 'Tazkirat-ul-Waqayat' by Jauhar (தஸ்கிராத்துல் வாகியாத், ஜௌஹர்) சி. எஸ். ஸ்டிவர்ட் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது.

(4) Elliot and Dawson—Vol. V.

(5) 'History of India under Babur and Humayun'—Vol. II, by Erskine.

(6) 'Humayun Badsha' (Vols. I & II) by S. K. Banerjee (ஹுமாயூன் பாத்ஷா—எஸ். கே. பானர்ஜி, பகுதிகள் I & II).

(7) 'Cambridge History of India' Vol. IV—Chapter II.

(8) 'Humayun in Persia' by Sukumar Ray (பாரசீகத்தில் ஹுமாயூன்—சுகுமார் ரே).

(9) 'Humayun and his Times' by Ishwari Prasad (ஹுமாயூனும் அவர் காலமும்—ஈஸ்வரி பிரசாத்).

4. ஷெர் ஷா சூர்

பதினைந்து ஆண்டு இடைக்காலம் ஒன்று ஹுமாயூனின் ஆட்சிக் காலத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கிறது. அவ்விடைக் காலத்தில் சூர் வம்சாவளியை மாபெரும் ஆப்கானிய மன்னரான ஷெர்ஷா நிறுவினர். அவ் வமிசம் தனது ஆதிக்கத்தை வட இந்தியாவின் பல பகுதிகளில் நிலைநாட்டியது. இரண்டு காரணங்களுக்காக அவ்விடைக்காலம் முக்கியத்துவம் பெறுகிறது. முதலாவதாக, ஆப்கானிய வமிசம் ஒன்று டெல்லியின் சிம்மாசனத்தில் அமர்ந்து, அம் மத்திய நகரிலிருந்து வட இந்தியாவை ஆட்சிபுரிந்தது அதுவே கடைசி முறையாகும். இரண்டாவதாக, அவ் வம்சாவளி பழமை வாய்ந்த நிர்வாக முறையை உயிர்ப்பித்துச் சீர்திருத்தியதுமன்றி, நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும், வளத்தையும் நிலைநாட்டியது. ஹுமாயூனின் வாரிசுகளுக்கு இது ஒரு விலைமிக்க மரபுரிமைப் பொருளாகும்.

ஹுமாயூனின் பெரும் பகைவரான ஷெர்ஷா மிகத் தாழ்நிலையிலிருந்துவந்தவராவார். முதலில் ஃபரீத் (Farid) என்று வழங்கப்பட்ட இவர் இப்ராஹிம் சூர் என்பவருடைய பேரனுவார். இப்ராஹிம் சூர், கோமால் (Gomal) நதிக்கரையிலுள்ள லாகூருக்கு அருகில் ரோ (Roh) மலைப்பகுதிவாசியாவார். இப்ராஹிம் குதிரை வியாபாரம் செய்துவந்தார். ஆனால், அவரது வியாபாரத்தில் வெற்றி காணவில்லையாதலால், பகலோல லோடியின் ஆட்சிக் காலத்தின் துவக்கத்தில் வேலை நாடிக்கொண்டு நம் நாட்டிற்கு வந்தார். இப்ராஹிம் சூரும் அவருடைய மகனுன ஹசனும் பஞ்சாபின் ஹோஷியர்பூர் (Hoshiarpur) மாவட்டத்தைச் சார்ந்த ஹரியனு (Hariana), பகலா (Bakhala) (Bhakra—பகரா) ஆகியவற்றின் ஜாகீர்தார்களான மகபத்கான் சூர் (Mahabat Khan Sur), தாவூத்கான் சாஹுகைல் (Daud Khan Sahukhail) என்பவர்களின்கீழ்ப் பணியாற்றப் புகுந்தனர். தந்தையும் மகனும் ஹோஷியார்பூருக்கு இரண்டு மைல் தென்கிழக்கிலுள்ள பஞ்வாரா என்ற இடத்தில் குடியேறினர்.

இங்குதான் 1472ஆம் ஆண்டில் ஹசன்கானின் மனைவி ஒருத்திக்கு ஃபரீத் பிறந்தார்.* ஃபரீதின் பிறப்புக்குச் சிறிது காலத்திற்குப் பிறகு இப்ராஹிமும் ஹசனும் முறையே ஹிஸ்ஸாரின் ஜமால் கான் சரன் கானி (Jamal Khan Sarangkhani of Hisar), கானே ஆலமான உமர் கான் சர்வானி (Umar Khan Sarwani, the Khan-i-Alam) ஆகியவர்களின் பணித்துறையில் புகுந்தனர். பிறகு ஹசன் ஜமால்கானிடம் பதவி வகித்துவந்தார். சிக்கந்தர் லோடி ஜமால்கானை ஜான்புரிக்கு மாற்றியபொழுது, சாச்சாரம் (Sasaram), கவாஸ்பூர் (Khawaspur), டாண்டா (Tanda) ஆகிய பர்கானுக்களின் ஜாகீர்களை பீஹாருக்குத் தமது புதிய தலைவருடன் வந்து சேர்ந்த ஹசனுக்கு அவர் அளித்தார். சாச்சாரத்தில் சோன் (Son) நதிக்கரையில்தான் ஃபரீத் அவரது இளம்பிராயத்தைக் கழித்தார்.

ஹசன் ஒரு திறம் படைத்த வீரராவார். ஆனாலும், தமது குடும்ப விஷயங்களைக் கவனிப்பதில் அவர் தோல்வியுற்றார். அவர் நான்கு பெண்களை மணம் புரிந்திருந்தார். அவருக்கு எட்டு மகன்மார் இருந்தனர். ஃபரீதும் நைஸாமும் அவருடைய முதல் மனைவியின் மகன்மாராவர்; சுலைமானும் அகமதும் அவருடைய மிக இளமை வாய்ந்த மனைவியின் மகன்மாராவர். இளமை வாய்ந்த இம் மனைவி ஒரு காமக்கிழத்தியாவாள். ஹசன் அவளுடைய செல்வாக்குக்குட்பட்டிருந்தார்; மற்ற மனைவிகளையும் புறக்கணித்து அவள்மீது தனி விருப்பம் கொண்டிருந்தார். ஆகையால், ஃபரீன் இளம்பிராயம் மகிழ்ச்சியற்றதாக இருந்திருக்கவேண்டும். அவருடைய தந்தை அவர்மீது அக்கறை செலுத்தவில்லை; அவருடைய மாற்றாந்தாய் அவர்மீது பொறாமை கொண்டிருந்தாள். 1494-ல் 22ஆவது வயதில் சாச்சாரத்தை விட்டு விலகி மற்றெங்காவது வாழ்க்கை நடத்த அவர் முடிவு செய்தார். அக் காலத்தில் ஜானபுரி முஸ்லீம் நாகரிகம், கல்வி ஆகியவற்றின் முக்கிய மையமாக இருந்தது. இந்தியாவின் ஷீராஸ் (India of Shiraz) என்று விளங்கிவந்தது. இவ் அறிவு பீடத்திற்கு ஃபரீத் வந்து சேர்ந்தார்; அங்கே அராபிய், பாரசீக மொழிகளையும் இலக்கியங்களையும் கற்றறிந்துகொள்வதில் ஈடுபட்டார். அராபிய இலக்கணத்தையும், சிறப்பு வாய்ந்த பாரசீக நூல்களான குலிஸ்தான் (Gulistan), போஸ்தான் (the Bostan), சிக்கந்தர் நாமா (Sikandarnama) ஆகியவற்றை அவர் கற்றார். அவர் ஓர்

* பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆசிரியர்களான பார்டெண்டு ஹரீஷ் சந்திரா (Bhartendu Harish Chandra), சையத் அகமத்கான் (Sayyid Ahmad Khan) போன்றவர்களுக்கு இத் தேதி தெரிந்திருந்தது. ஆனால், டாக்டர் கானுங்கோ அது 1486 ஆம் ஆண்டாக இருந்தது என்று குறிப்பிடுகிறார்.

அசாதாரண திறமை படைத்த மாணவராதலால், பலருடைய, குறிப்பாக ஜலால்கானுடைய கவனத்தை ஈர்த்தார். ஜலால்கான் ஃபரீதின் தகப்பனரின் புரவலராவார். தகப்பனுக்கும் தந்தைக்குமிடையில் சமரசம் ஏற்படுத்தி, ஹசனின் ஜாகீருக்கு மேலாளராக ஃபரீதை நியமிக்கும்படி வற்புத்தினர்.

தகப்பனின் ஜாகிருக்கு மேலாளராக ஹசன் பணியாற்றுதல்

ஜானபுரியிலிருந்து திரும்பியதும், தமது தந்தையின் ஜாகீரைத் திறமையுடனும் முன்விழிப்புடனும் நிர்வகிப்பதில் இருபத்தோர் ஆண்டுகளாக (1497-1518) ஃபரீத் ஈடுபட்டிருந்தார். இக் காலம் நிருவாகத்தில் ஃபரீதின் பயிற்சிக் காலமாகும். அவர் கிளர்ந்தெழுந்த ஜமீன்தார்களை அடக்கி, சிவில், இராணுவ அதிகாரிகளைச் சரிவரக் கட்டுக்குட்படுத்தி, மக்களுக்கிடையில் அமைதி நிறுவினர். நிலத்தை அளந்து வகைப்படுத்தி, அதனின் விளைச்சலைப்பற்றி அறிந்துகொள்ளுதலின் அடிப்படையில் ஒரு நல்ல வருமான திட்டத்தை நிலைநாட்டியது இவரது இக் காலத்திய முதன்மைச் சாதனையாகும். விவசாயிகளின் நலங்களில் அவர் தனிப்பட்ட அக்கறை செலுத்தினர்; இரக்கமின்றி நடந்துகொள்ளும் வருமான அதிகாரிகளை அவர் தண்டித்தார். எல்லாருக்கும் சரிவர நீதி வழங்குவது அவரது நோக்கமாகும்; இதில் முரட்டு ஆப்கானிய வீரர்களுக்கு எவ்விதச் சலுகையும் அவர் காட்டவில்லை. இதுபோல நடந்துகொண்டு, வட இந்தியாவின் வருங்கால மாபெரும் அரசராவதற்குத் தாம் பயிற்சி பெற்றுக் கொண்டிருப்பதாக அவர் ஒரு சிறிதேனும் உணர்ந்திருக்க முடியாது.

ஆனாலும், ஃபரீதின் வெற்றிகரமான நிர்வாகம் அவருடைய மாற்றாந்தாயின் பொறாமையைத் தூண்டுவித்தது; 1518-ல் அவர் தமது தந்தையின் வீட்டிலிருந்து வெளியேற நேரிட்டது. அவர் சுல்தான் இப்ராஹீம் லோடியின் அரசவையை அடைந்து, தமது தந்தையின் ஜாகீரைத் தமக்கு அளிக்குமாறு வேண்டிக் கொண்டார். தமது தந்தையைப்பற்றி முறையிட்ட ஓர் இளைஞனைப் பற்றி நல்ல கருத்துக் கொண்டிராத டெல்லி சுல்தான் அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. இந் நிகழ்ச்சிக்குப் பிறகு ஹசன் இறந்துவிட்டார். ஆகையினுல், ஃபரீதின் வேண்டுகோளுக்கு இணங்க இப்ராஹிமுக்கு எவ்விதத் தடையுமில்லை. சாசரம், கவாஸ்பூர், தாண்டா ஆகியவற்றின் ஜாகீரை இப்ராஹிம் ஃபரீதுக்கு அளித்தார். பேரவா நிறைந்த இளைஞர் அரச ஆணையுடன் தென் பீஹாருக்குத் திரும்பினர்; சுமார் 1520 அல்லது 1521-ல் சாசரத்தில் அவர் குடியேறினர்.

தென் பீஹாரைச் சார்ந்த சுல்தான் முகம்மதுவின்கீழ்ப் பணியாற்று தல் : ஓர் இன்னல் மிக்க காலம்

இப்ராஹிம் ஃபரீதுக்கு அவருடைய தந்தையின் ஜாகீரை அளித்ததனுல் வாரிசுரிமைப் பிரச்சினை முடிவடையவில்லை. ஃபரீத் நெடுங்காலமாக அந்த ஜாகீரைப் பெற்றிருக்க முடியவில்லை. அவருடைய மாற்றுந்தாய் மகனுன சுலைமான் (Sulaiman) பீஹாரிலுள்ள ஷாஹாபாத் மாவட்டத்திலுள்ள சௌந்தைச் (Chaund) (தற்கால செய்ன்பூர்—Chainpur) சார்ந்த முகம்மது கான் சூர் என்பவரின் உதவியை இப்பொழுது நாடினுர். ஹசனின் பிந்திய வாழ்நாளில் சுலைமான்தான் அந்த ஜாகீருக்குப் பொறுப்பேற்றிருந்தார். முகம்மதுகான் ஹசனுடன் நல்லுறவு கொண்டிருக்கவில்லை. சகோதரர்களுக்கிடையில் தோன்றிய சச்சரவைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள நினைத்து ஃபரீதுக்கும் சுலைமானுக்குமிடையில் ஜாகீரைத் துண்டாட யோசனை கூறினுர். இப்ராஹிம் லோடியால் அது ஃபரீதுக்கும் கொடுக்கப்பட்டிருந்ததனுல், ஃபரீத் அதைப் பங்கிட்டுக்கொள்ள மறுத்துவிட்டார். முன்னேக்காளியான இவர் தென் பீஹாரின் அரசரான பஹார்கான் லோஹானி என்பவரின்கீழ்ப் பணியேற்று, தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆற்றல் வாய்ந்த ஆதரவாளரையும் பெற்றுர் (1522). அவரது பணிகளால் திருப்தியடைந்த பஹார்கான், வேட்டையாடும்பொழுது தனித்தே ஒரு புலியைக் கொன்றதற்காக ஃபரீதுக்கு ஷேர்கான் என்ற பட்டத்தை அளித்தார். அதன் பிறகு வெகு விரைவில் தமது தலைவரின் இள மகனுன ஜலால் கானின் ஆசிரியராக அவர் உயர்த்தப்பட்டார். சிறிது காலம் கழிந்து, தென் பீஹாரின் கவர்னராக அவர் உயர்த்தப்பட்டார்.

ஷேர்கானின் துரிதமான எழுச்சி தென் பீஹாரைச் சார்ந்த லோஹானி, இதர பட்டானிய பிரபுக்களின் பொருமையைக் கிண்டிவிட்டது. ஷேர்கான் தமது ஜாகீரின் விவகாரங்களைக் கவனிக்கும் பொருட்டுத் தமது அரசவையைவிட்டு வெளிச்சென்றிருக்கும் பொழுது, அவருடைய பகைவர்களில் ஒருவர் பஹார்கானின் காதுகளில் துர்போதனை செய்தார். அது ஒரு நெருக்கடியான காலமாக, அதுவும் குறிப்பாக ஆப்கானியர்களுக்கு அவ்வாறு இருந்தது. ஏனெனில், ஆப்கானியர்களின் அரசனுன இப்ராஹிம் லோடி அப்பொழுதுதான் பானிப்பட்டுப்போரில் தோல்வியுற்றுக் கொல்லப்பட்டதுமன்றி, இந்துஸ்தானத்தின் இறைமை பாபரின் தலைமை கொண்ட முகலாயர்கள் வசப்பட்டிருந்தது. சுல்தான் முகம்மது ஷா என்ற பட்டப் பெயருடன் தம்மைச் சுதந்திர அரசராக நிலைநாட்டிக்கொண்டிருந்த பஹார்கான், ஆட்களைத் திரட்டிக்கொண்டு

பொறுமையுடன் காத்திருந்து நடப்பதைப் பார்க்கும் விழிப்பான கொள்கையைப் பின்பற்றினர். டெல்லியில் ஆப்கானியர்களின் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்ட முயலும் இப்ராஹிம் சகோதர ரான முகம்மது லோடியுடன் சேர்ந்துகொள்ள ஷேர்கான் திட்ட மிட்டுக்கொண்டிருக்கிருர் என்று முகம்மது ஷாவிடம் ஷேர்கானின் பகைவர்கள் முறையிட்டனர். இது முகம்மது ஷாவின் நலனுக் கெதிராக இருந்தது. ஏனென்ருல், அப்பொழுது மகமூத் லோடியை அவர் அரசராக ஏற்றுக்கொள்ள நேரிடும். ஆகை யினல், ஷேர்கானுக்கும் சுலைமானுக்குமிடையில் ஏற்பட்ட சச்சர வைத் தீர்க்க செளந்தைச் சார்ந்த முகமதுகான் சூரை சுல்தான் முகம்மது மத்தியஸ்தராக நியமித்தார். ஷேர்கான் ஜாகீரைத் துண்டிக்க மறுத்துத் தந்தை வழிச்சென்று முழுவதையும் தம்மிடமே வைத்துக்கொள்ள வற்புறுத்தினர். சுலைமானின் சார்பாக முகம்மது ஷேர்கான் சூர் பர்கானுக்களை வன்முறையாகக் கைப்பற்றி, ஷேர்கானை அவருடைய இருப்பிடத்திலிருந்து விரட்டியடித்தார். ஷேர்கான் மீண்டும் நாடோடியாகி வேலை தேடித் திரிந்தார். பாபரின் உதவியை நாடிப் பொருமை மிக்க முகம்மது கான் சூரின் கைகளிலிருந்து தமது ஜாகீரை மீண்டும் பெறுவது அவருடைய ஒரே ஓர் அவாவாக இருந்தது. பாபர் அப்பொழுது வட இந்தியாவில் தமது பேரரசை நிலைநாட்டியிருந்தார். அந் நோக்கத் துடன் ஷேர்கான் கரா (Kara), மணிக்பூர் (Manikpur) ஆகிய வற்றின் முகலாய கவர்னரான ஜுனைத் பர்லாஸ் (Junaid Barlas) என்பவருடன் தொடர்பு கொண்டு, அவருடைய உதவியால் 1527 ஏப்ரலில் முகலாயர்களிடம் பணியேற்ருர். பீஹாரின் ஆப்கானியர்களின்மீது பாபர் படையெடுத்தபொழுது ஷேர்கான் சிறந்த பணியாற்றினர்; 1528 மார்ச்சில் அவரது ஜாகீர் மீண்டும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. முகம்மதுகான் சூர் என்ற தம் முன்னுள் பகைவரிடம் செளந்தை ஒப்படைத்து, அவரது நன்றி பெறுமளவுக்கு ஷேர்கான் திறநயனுடனும் நேர்மையுடனும் நடந்து கொண்டார். முகலாயர்கள் பீஹாரின்மீது படையெடுத்தபொழுது செளந்தைக் கைப்பற்றியிருந்தனர்.

பீஹாரின் துணை கவர்னர்

குறுகியகாலம்வரை முகலாயர்களுடன் தங்கியிருந்தபொழுது, ஷேர்கான் அவர்களது நிர்வாகத்திலும் இராணுவ அமைப்பிலும் சில முனைப்பான குறைபாடுகளைக் கண்டார்; ஆப்கானியர்கள் இழந்த தமது இராச்சியத்தை மீண்டும் பெறமுடியும் என்பதை யும் உணர்ந்தார். முகலாயரல்லாதார் யாவரையும் எள்ளி நகை யாடிய முகலாயர்களின் வீண் தற்பெருமையும் அவரது கவனத்

தைக் கவர்ந்தது. 1528ஆம் ஆண்டின் இறுதியில் அவர் முகலாயர்களின் பணித்துறையிலிருந்து விலகி பீஹாருக்குத் திரும்பினர். அவர் அவ்விதம் செய்தது சில தற்கால ஆசிரியர்கள் கூறுவதுபோல பாபருக்கெதிராக ஆப்கானியர்களை ஒன்றுபடுத்துவதற்காக அன்று; முகலாயர்களுடன் ஒத்து இணங்கிப்போக முடியவில்லையாதலால்தான் அவர் அங்ஙனம் செய்தார். மறுபடியும் அவர் தென் பீஹாரின் சுல்தான் முகம்மதுவின் அரசவைக்குச் சென்ருர்; அவருடைய மகனை ஜலால்கானுக்கு ஆசிரியராகவும் பாதுகாவலராகவும் அவர் மீண்டும் நியமிக்கப் பட்டார். இதற்குப்பின் வெகு சீக்கிரத்தில் சுல்தான் முகம்மது உயிர் நீத்தார் (1528); பருவமெய்தாத இளைஞரான ஜலால்கானைப் பின்விட்டுச் சென்ருர். அவருடைய விதவையான தூது பீபி (Dudu Bibi) புதிய சுல்தானுக்காக ஆட்சி புரிந்தாள். ஷேர்கானைத் தனக்குத் துணையாக அல்லது வக்கீலாக (vakil) அவள் நியமித்தாள். துணை கவர்னர் என்ற நிலையில் ஷேர்கான் நிர்வாகத்தைச் சீரமைத்து, இராணுவத்தைச் சீர்படுத்தி, தமது இளைய அரசனுக்குப் பற்றுமிக்க பணியாற்றி, தமது நிலையை வலுப்படுத்திக்கொண்டார். அதே சமயத்தில் அவர் தமது நலங்களையும் மறந்துவிடவில்லை. அனுபவமும் பற்றும் மிக்க ஆப்கானியர்கள்—பெரும்பாலும் சூர் இனத்தைச் சேர்ந்தவர்களின் கூட்டத்தைத் தம்முடன் சேர்த்துக்கொண்டார். அவருக்காக அவர்கள் எத் தியாகமும் செய்யத் தயாராக இருந்தனர்.

எனினும், ஓர் ஆண்டு ஷேர்கானின் நல்வினை தடைப் பட்டது (1529). பீஹார் மாகாணத்தின் முக்கிய ஆப்கானியப் பிரபுக்கள் சிலருடைய அழைப்பின்மேல் இப்ராஹிம் லோடியின் இளைய சகோதரரான மகமூத் லோடி, அம் மாகாணத்துக்கு வந்தடைந்தார். 1527 மார்ச்சு மாதத்தில் ராணு சங்கராம்சிங்கின் பக்கத்திலிருந்து அவர் போர் புரிந்தார். ராணுவின் தோல்விக்குப் பின் அவர் மீவாருக்குச் சென்றுவிட்டார்; அப்பொழுதும் இந்துஸ்தானத்தின் இறைமைக்குக் கொண்டாடிய போலி உரிமைகளை அவர் விட்டுவிடவில்லை. அவர் அவ்விடத்தை வந்தடைந்ததும், ஆப்கானியத் தலைவர்கள் கூடிக் கலந்து முகலாயர்களுக்கெதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கையைப்பற்றித் திட்டமிட்டனர். அநேகமாக எல்லா ஆப்கானியர்களும் மகமூத் லோடியின்கீழ்த் திரண்டனர். தமது பொதுப் பகைவரான பாபருக்கெதிராக ஆப்கானியர்கள் வெற்றிகொண்ட பிறகு, தெற்கு பீஹார் மாகாணத்தை இளைய சுல்தானுன ஜலால்கானுக்கு அளிப்பதாக வாக்குறுதி அளித்து அம் மாகாண அரசாங்கத்தை அவர் கைப்பற்றிக் கொண்டார்.

இருந்தபோதிலும், மகமூத் லோடியின் திறமை இன்மையையும், அவருடைய தோழர்களுக்கிடையில் இருந்த பொறுமையையும், பிணக்கையும்பற்றி ஷேர்கான் அறிந்திருந்தார். மகமூதின் தலைமை கொண்ட ஆப்கானியச் சார்பு நலத்தில் அவர் எவ்வித ஊக்கமும் காட்டாது, திட்டமிடப்பட்ட படையெடுப்புக்கான ஆயத்தங்களைச் செய்யப்போவதாகக் கூறிக்கொண்டு தமது ஜாகீருக்குப் போய்ச் சேர்ந்தார். உண்மையில், அவர் அப்பொழுதாவது பாபருடன் பகைமை கொண்டாட விரும்பவில்லை; அவருடைய உண்மை உணர்ச்சிகளை வெளிப்படுத்தாது அடக்கிக்கொள்ள அவர் பெரும்பாடு பட்டார். 'இத் தேசியப் படையெடுப்பில்' எல்லாருடைய ஒத்துழைப்பையும் நாடிய மகமூத் லோடி-ஆப்கானியர்களின் சார்பு நலத்தை ஷேர்கான் பற்றியிருக்க வற்புறுத்தினர். ஷேர்கான் தம்மைப் பின்பற்றுவோருடன் ஆப்கானியப் படையில் சேர வற்புறுத்துவதற்காக மகமூத் சாசாரம் வழியாகத் தம் படையுடன் முன்னேற முடிவு செய்தார். ஆரம்பத்தில் ஷேர்கான் தயங்கினர்; சரிவர யோசனை செய்த பிறகு, மகமூதுக்கு அரச வரவேற்பளித்துத் தம் படைப்பகுதி ஒன்றோடு அவருடன் சேர்ந்துகொண்டார். போரின் ஆரம்ப கட்டங்களில் ஆப்கானியர்கள் வெற்றி கண்டனர். அவர்கள் காஸிபூருக்குச் (Ghazipur) சென்று வாரணசியைக் கைப்பற்றினர். ஆனல், முகலாயர்களின் படை வந்து சேர்ந்ததும், அவர்கள் பீதியுற்று அப் படையெடுப்பைக் கைவிட்டார்கள்; இருதரப்பும் நெருங்கி மோதிக் கைகலப்புற்ற சண்டை ஒன்றிலும் மகமூகத் ஈடுபடாது ஓடிவிட்டார். ஷேர்கான் உட்படப் பல முக்கிய ஆப்கானியப் பிரபுக்கள் பாபருக்கு அடிபணிந்தனர். மகமூத் லோடி தோன்றியவுடன், வங்காளத்தில் தஞ்சம் புகுந்த இளைய சுல்தானுன ஜலால்கான் பீஹாருக்குத் திரும்பி 1529, மே மாதம் 16ஆம் நாள் பாபர் முன்னிலையில் நின்றுர். ஆண்டுதோறும் பாபருக்குக் கப்பம் செலுத்த இணங்கியதன் அடிப்படையில் அவரது இராச்சியத்தின் பெரும்பாலான பகுதி அவருக்கு மீண்டும் அளிக்கப்பட்டது. ஷேர்கானும் அவரது ஜாகீரைப் பெற்று முகலாயரைச் சார்ந்து பிழைப்பவரானுர்.

ஜலால்கானின் தாயாரான தூது பீபீ ஷேர்கானை மீண்டும் அழைத்து, அவரைத் தன் மகனின் காப்பாளராக மீண்டும் நியமித்தாள். அதுவுமன்றி, முன்செய்ததுபோல ஜலால்கானின் மீட்சிக்குப் பிறகும், பாபர் ஆக்ராவுக்குத் திரும்பிய பிறகும் அவரை பீஹாரின் கவர்னராகவும் நியமித்தாள். டெல்லி, ஆக்ரா ஆகிய இரண்டு ஆற்றல்மிக்க இராச்சியங்களுக்கிடையிலிருந்ததனுல், தெற்கு பீஹார் அவ்விரு இராச்சியங்களுக்குமிடையி

லிருந்து சச்சரவுகளில் இழுக்கப்பட்டு அவற்றின் ஆக்கிரமிப்புக்கு இரையாகும் பேராபத்துக்குட்பட்டிருந்தது. மேலும், மகமூத் லோடிக்கும் பாபருக்குமிடையில் உண்டான போருக்குக் களமாகி யிருந்ததனுல், அதனுடைய நிர்வாகமும் பொருளாதாரமும் சீர் குலைந்திருந்தன. தெற்கு பீஹாரை அதனின் முந்திய வளம்பெற்ற நிலைமைக்குக் கொண்டுவர ஷேர்கானைப்போன்ற ஓர் அனுபவ முதிர்ந்த நிர்வாகியினுல்தான் முடியும் என்று தூது பீபி உண்மை யாக நம்பினுர். அவரது நியமனத்துக்குப்பின் ஷேர்கான் அம் மாகாணத்தைச் சீரமைத்து, அதன் நிர்வாகத்தையும் சீர் படுத்துவதில் முழு மனத்துடன் ஈடுபட்டார். சற்றுப் பிறகு தூது பீபி உயிர் துறந்தாள். ஜலால்கான் பருவமெய்தாது பெயரளவில் அரசனுக இருக்கையில், ஷேர்கான் தெற்கு பீஹார் அரசாங்கத்தின் உண்மைத் தலைவரானுர். இந்தச் சூழ்நிலைகளில், படையின்மீது தமது பிடியை வலுப்படுத்துவதற்கும், அது தமது சார்பு நலத்திற் காகப் பாடுபடச் செய்வதற்கும் ஷேர்கானுக்கு வாய்ப்புக் கிடைத் தது. அவரது நம்பிக்கைக்குட்பட்ட பின்பற்றுவோரைப் பல முக்கிய சிவில், இராணுவ நிர்வாகப் பதவிகளில் அவர் அமர்த்தினுர். ஒவ்வொரு வகையிலும் தமது அதிகாரத்தையும் புகழையும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டார்.

வங்காளத்தைச் சார்ந்த நுஸ்ரத் ஷாவுடன் (Nusrat Shah of Bengal, 1518-33) தனது தொடர்புகளை மாற்றி அமைத்துக் கொள்ளுதல் தெற்கு பீஹாரை எதிர்நோக்கி நின்ற பிரச்சினைகளுள் மிக முக்கியமான பிரச்சினையாகும். நுஸ்ரத் ஷா அண்டையி லிருந்த இராச்சியத்தின் செலவில் தமது இராச்சியத்தைப் பரப்ப விரும்பினுர். வங்காளத்திலிருந்து வரும் ஆபத்தைப் புறக்கணிக்க ஒரு நண்பரைப் பெறவேண்டியிருக்கிறது என்பதை ஷேர்கான் உணர்ந்தார். ஆகையால், நுஸ்ரத் ஷாவின் மைத்துனரும், ஹாஜிபூரின் (Hajipur) அவரது கவர்னருமான மக்தூமெ ஆலம் (Makhdum-i-Alam) என்பவருடன் ஷேர்கான் நல்லுறவை வளர்த் தார். மக்தூம் நுஸ்ரத் ஷாவான தமது தலைவரிடம் நல்லுறவு கொண்டிருக்கவில்லை. இது நுஸ்ரத் ஷாவின் பகைமையைத் தூண்டுவித்தது ; அவர் தமது மைத்துனரைத் தாக்கி அவரைக் கொன்றுர். அதன் பிறகு, மக்தூமெ ஆலம் சேமித்துவைத்திருந்த பெருஞ்செல்வத்தை ஷேர்கான் பறித்துக்கொண்டார். அண்மை யில் மக்தூமின்மீது பெற்ற வெற்றியால் இறுமாப்புக்கொண்ட நுஸ்ரத் ஷா, தெற்கு பீஹாரின்மீது படையெடுத்தார் ; ஆனுல், 1529-ல் ஷேர்கானுல் அவர் மிகக் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டார். ஆற்றல் மிக்க அண்டைய அரசர் ஒருவரின்மீது பெற்ற வெற்றி ஷேர்கானின் மதிப்பையும் புகழையும் அதிகரித்தது. ஆனுல்,

அதே சமயத்தில், லோஹானிப் பிரபுக்களின் பொறுமையையும் தூண்டுவித்தது. அவர்களுடைய தலைவனின் பணியாளாகவிருந்த ஒருவனின் ஆதிக்கத்தை அவர்களால் பொறுக்க முடியவில்லை. ஜலால்கானிடத்தில் அவர்கள் ஷேர்கானுக்கெதிராகக் கண்டதை யெல்லாம் கூறி மனத்தைக் கெடுத்தனர். அதற்குப் பிறகு, ஷேர்கானைக் கொல்ல அவர்கள் சதி செய்தனர்; ஆனால், ஷேர்கான் மிக்க விழிப்புடன் இருந்ததால் சதி முறிந்தது. தமக் கெதிராக ஒரு பெரிய கட்சி இருப்பதைக் கண்ட ஷேர்கான் லோஹானியர்களுடன் தமது அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொள்ள நினைத்தார். ஆனால், அவருடைய திட்டம் நிராகரிக்கப்பட்டது. அதற்கு மாறாக, ஷேர்கானின் கையிலிருந்து அதிகாரத்தைப் பறிக்க அவர்களுக்கு உதவியாக லோஹானியர்கள் வங்காளத்தைச் சார்ந்த நுஸ்ரத் ஷாவை அழைத்தனர். இதையும் செய்யமுடிய வில்லையாதலால், லோஹானியர்கள் தமது பருவமெய்தா சுல்தானான ஜலால்கானுடன் நுஸ்ரத் ஷாவினிடம் ஓடி வங்கா ளத்தில் அடைக்கலம் புகுந்தனர்.

சிறுவனாக இருந்த சுல்தானை யாவரும் கைவிட்டதனால், ஷேர்கான் தெற்கு பீஹாரின் உண்மை அரசரானார்; அவருடைய செயல்களை அடக்குவதற்குப் பெயரளவிலாவது இருந்த தலைவர் எவரும் இல்லை. ஆனாலும் ஷேர்கான் அரசபதவியை மேற் கொள்ளாது ஹஸரதே ஆலா (Hazrat-i Ala) என்ற சற்றுக் குறைந்த பட்டத்தை மேற்கொண்டார். சூனார் அரணின் முன்னாள் கவர்னரான தாஜ்கான் என்பவரின் விதவையான லாட்மலிகாவை ஷேர்கான் மணம்புரிந்துகொண்டு, அதன் விளைவாக சூனாரைப் பெற்று, தமது இராணுவ நிலையையும் நிதி நிலையையும் அவர் வலுப்படுத்திக்கொண்டார். இத் திருமணத்தால் ஷேர்கான் இரு வகைகளிலும் பயன்பெற்றார். வெல்ல முடியாததான ஓர் அரணைப் பெற்றதுமின்றி அங்கே புதைந்து கிடந்த ஏராளமான பொக்கிஷத் தையும் அவர் பெற்றார். இச் சாதனைகள் அவரது ஆதிக்கப் பசியைத் தூண்டுவித்தன; அவரது பேரவாவையும் வானோங்கி வளரச் செய்தன. இப்பொழுது அவர் தம்மை ஒரு சுதந்திர அரசராக்கிக்கொண்டு தமது ஆக்கிரமிப்புத் திட்டங்களை உருவாக்குவதற்கான கனவுகளைக் கண்டுகொண்டிருந்தார்.

ஹுமாயூனுடன் முந்திய போட்டி

இந்த வெற்றிகளை ஷேர்கான் பெற்றிருந்தாலும், அவர் அதிகாரத் துக்கு வந்தது இலகுவானதாக இருக்கவில்லை. வெகு சீக்கிரத்தில் அவருக்கு ஒரு துர்வினை ஏற்பட்டது. அதனால் அவருடைய உயர் திட்டங்களெல்லாம் தற்காலிகமாக ஒதுக்கப்பட்டிருந்தன. அவ

ருடையதலையார்ந்த லோஹானிப் பிரபுக்கள் இப்பொழுது வங்காளத்தில் அடைக்கலம் புகுந்திருந்தாலும், பெயரளவின்றி மற்ற எல்லா விதங்களிலும் அவர் தெற்கு பீஹாரின் அரசராக இருந்தாலும், இந்திய ஆப்கானியர்களை ஒன்றுபடுத்தி அவர்களுடைய பொருள், ஆன்மநிலைகளை அபிவிருத்தி செய்யத் தம்மால் இயன்றதையெல்லாம் செய்துகொண்டிருந்தாலும், தமது இனத்தினரிடையிலே ஒரு பகைமைக் குழுவை அவர் எதிர்நோக்கவேண்டியிருந்தது. ஷேர்கான் மிகத்தாழ்மையான நிலையிலிருந்து ஓர் இராச்சியத்தின் உயர் நிலையடைந்த அரசனின் நிலைக்கு வந்தவராவார். சில முக்கிய ஆப்கானியப் பிரபுக்களால் இதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் அவரை ஒரு திடீரென முன்னுக்கு வந்தவர் என்றே கருதினர்கள். இம் மனநிறைவற்ற அதிகாரிகள் 1530-ல் மகமூத் லோடியை வரவழைத்தார்கள். மகமூத் லோடி காக்ராப் போரில் தோல்வியுற்றதற்குப்பின் ஓர் அகதியாக நாட்களைக் கழித்துவந்தார். அவர்களுடைய அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டு பீஹாருக்கு வந்து சேர்ந்தார். அக்காலம் ஆப்கானியர் மீண்டும் முகலாயர்களை விரட்டியடித்து இந்துஸ்தானத்தில் தமது இறைமையை மீண்டும் பெற மிக உகந்ததாக இருந்தது. முகலாய அரியணை யேறவேண்டிய இளவரசரான ஹுமாயூன் ஆக்ராவில் கடுநோய்வாய்ப்பட்டிருந்தார். அவரது உயிர் பாபரின் தியாகத்தால் காப்பாற்றப் பட்டபோதிலும், முகலாயப் பேரரசுக்கு அடிகோலிட்டவர் 1530, டிசம்பர் மாத இறுதியில் இவ்வுலகைவிட்டு மறைந்துவிட்டார். தமது பகைவர்களின் இன்னல்களைத் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொள்ள இந்திய ஆப்கானியர்கள் காத்திருந்தனர். மகம்மது லோடி வந்திறங்கியதும், ஷேர்கான் செயலில் இந்த லோடி போலி உரிமையாளரைவிடக் கீழ்ப்பட்ட பங்குபெற விரும்பவில்லை. பின்னவர் அவரைத் தம் வசமாக்க விரும்பி, முகலாயர்களின்மீது வெற்றிபெற்று ஏதாகிலும் ஓர் இராச்சியத்திற்கு அரசரானவுடன் தெற்கு பீஹார் முழுவதையும் ஷேர்கானுக்குக் கொடுத்துவிடுவதாக எழுதி வாக்குறுதியளித்தார். ஷேர்கானை அவரது ஜாகீரில் மகமூத் போய்ப் பார்த்துத் தம்முடன் ஒத்துழைக்கும்படியும், ஒன்றுசேர்ந்து முகலாயர்களைத் தாக்கும்படியும் வற்புறுத்தினர். ஷேர்கான் விருப்பமின்றி இறுதியில் அத் திட்டத்திற்கு இணங்கினர்; ஆப்கானியக் கூட்டுறவு அமைப்பின் ஓர் உறுப்பினருமானர்.

பல மாதங்களாக ஏற்பாடுகள் செய்தபின் படையெடுக்கப் பட்டது. மக்மூதின் தலைமைகொண்ட ஆப்கானியர்கள் வாரணசியைக் கைப்பற்றி ஜான்புரிக்கு முன்னேறினர்கள். முகல் கவர்னரான

ஜுனைத் பர்லாஸ் (Junaid Barlas) பதவியைக் கைவிட்டு ஆக்ராவுக்குப் பின்வாங்கினார். துணிச்சலுற்ற ஆப்கானியர்கள் இப்பொழுது லக்னோ (Lucknow) நோக்கி முன்னேறி அதைக் கைப்பற்றினார்கள். ஹுமாயூன் இப்பொழுது கலஞ்சாரை முற்றுகையிடுவதில் முனைந்திருந்தார். அவரது படையடைந்த தோல்விகளைப்பற்றி அவர் கேள்விப்பட்டதும், அவ்விடத்தின் ராஜாவுடன் அவசர உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டு, ஆப்கானியர்களின் முன்னேற்றத்தைத் தடுத்துக் கிழக்கு நோக்கிச் சென்றார். தான்ருவா (Daunrua) என்ற இடத்திலும் இருபடைகளும் மோதின. அவுத்திலுள்ள தற்போதைய பாராபங்கி (Barabanki) மாவட்டத்தைச் சார்ந்த நவாப்கஞ் வட்டத்தில் (tahsil) தான்ருவா அமைந்துள்ளது. அவ்விடத்தில் 1532, ஆகஸ்டில் மிகக் கடுமையான போர் ஒன்று நடந்தது. இப் போரில் ஆப்கானியர்கள் மிகத் தீவிரமாக முறியடிக்கப்பட்டனர். அவர்களுடைய முதல்வரான மகமூத் லோடி ஒரிஸ்ஸாவுக்கு ஓடிவிட்டார்; அங்கே அவர் தமது எஞ்சிய வாழ்நாட்களைக் கழித்து 1542-ல் உயிர் நீத்தார். இந்த ஆப்கானியப் படையெடுப்பில் ஷேர்கான் மனமில்லா ஒத்துழைப்பாளராக இருந்தார். கிளர்ச்சி தோல்வியுற்றதற்குப் பிறகு, அவர் தெற்கு பீஹாரை மீட்டு மீண்டும் அதன் அரசரானார்.

தான்ருவாவில் மகமூத் லோடியின்மீது தாம் மிக இலகுவாகப் பெற்ற வெற்றிக்குப் பிறகு ஹுமாயூன் உடனே ஆக்ராவிற்குத் திரும்பவில்லை. சூனார்கர் அரணை அவர் முற்றுகையிட்டார். லாட்மலிகாவுடன் புரிந்துகொண்ட திருமணத்தின் விளைவாக ஷேர்கான் அவ்வரணை 1530-ல் பெற்றிருந்தார். அதில் ஹுமாயூன் தமது நம்பத்தக்க படைவீரர்களை நிரப்பி வைத்தார். முகலாயப்படைகள் அரணின் சுற்றுப்புறம் வந்தடைந்தவுடன், ஷேர்கான் அதைத் தமது இரண்டாம் மகனை ஜலால் கானிடம் ஒப்படைத்து, பீஹாரின் உட்புறத்துக்குத் தாம் பின்வாங்கிக்கொண்டார். சூனார்கரின் முகலாய முற்றுகை நான்கு மாதங்கள் நீடித்தது (1532, செப்டம்பரிலிருந்து டிசம்பர்வரை). ஹுமாயூன் ஜலால்கானை அடக்குவது மிக இலகுவான செயலன்று. முகலாயப் படைகளை எதிர்க்கச் சூழ்நிலைகள் ஷேர்கானுக்கு உதவின. முற்றுகையிட்டதற்குச் சற்றுப் பிறகு, முகலாயர்களுடன் போரிட ஆயத்தமாகிக்கொண்டிருந்த, குஜராத்தைச் சார்ந்த பகதூர்ஷாவின் பகைமை நடமாட்டங்களைப்பற்றிய பீதி தரும் செய்தி ஹுமாயூனுக்கு எட்டியது. இந்தச் சூழ்நிலைகளில், ஹுமாயூன் கலஞ்சார் ராஜாவுடன் தாம் செய்துகொண்டது போன்ற ஓர் அவசர உடன்படிக்கையைச் செய்துகொள்ள முடிவு செய்தார். ஷேர்கான் தமது மூன்றும் மகனை குதுப்கானின்

தலைமைகொண்ட 500 படைவீரர்களை முகலாயப் பணிக்காக அளித்தால், அவருடைய பொறுப்பில் சூனார் அரணை வைப்பதற்கு ஹுமாயூன் இணங்கினார். இந்த நிபந்தனைகளை இருதரத்தாரும் ஏற்றுக்கொண்டனர். ஆகையால், ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. பகதூர்ஷாவுடன் தமது பகைமையைத் தீர்த்துக்கொள்ள 1533, ஜனவரியில் ஹுமாயூன் ஆக்ரா திரும்பினார்.

வங்காளத்துடன் போர் (1533-1537)

ஹுமாயூன் ஆக்ராவிற்குப் புறப்பட்டதற்குப் பிறகு சூனாரின் சுற்றுப்புறத்திலிருந்து ஷேர்கான் தெற்கு பீஹாருக்குத் திரும்பினார். சூனார் முற்றுகையின்பொழுது வங்காள அரசர் பீஹாரிடம் இடைவிடாமல் பகைமை பாராட்டினார். ஷேர்கான் இப்பொழுது திருப்பி அடிக்க முடிவு செய்தார்; அந் நோக்கத்துடன் வங்காளத்தின்மீது படையெடுப்புக்கான ஏற்பாடுகள் எடுக்க ஆரம்பித்தார். அவர் தமது படையை வலுப்படுத்திக்கொண்டார். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், குறிப்பாக வடமேற்கிலிருந்தும் ரோவி(Roh) லிருந்தும் ஆப்கானியர்களைத் திரட்டி, அவர்களுக்கு அவர் வேலை கொடுத்து, அவர் எந்த ஊதியத்தைக் கேட்டாலும் கொடுத்தார். அவரது ஏற்பாடுகள் முற்றுப்பெற்றதும், வங்காளத்தின் புதிய அரசரான கியாஸுத்தின் மகமூத் (Ghiyas-ud-din Mahmud) என்பவரைத் தாக்க அவர் 1533-ல் முன்னேறினார். வழிநெடுக மண் காப்பரண்களைக் கட்டித் தாம் திடீரென்று கைப்பற்றப்படுவதிலிருந்து அவர் தம்மைக் காத்துக்கொண்டார். குதுப்கானின் மகனான இப்ராஹிம்கான் வங்காளப் படைக்குத் தலைமை தாங்கினார். அவர் அக் காலத்திய மிகச் சிறப்பு வாய்ந்த தளபதியாவார். சுராஜ்கர் என்ற இடத்தில் இரு படைகளும் கை கலந்தன; 1534-ல் மிகக் கடுமையான போர் நிகழ்ந்தது. வங்காளப் படையை மிகச் சாதுர்யமாக ஷேர்கான் ஒரு மறைவிடத்திற்குக் கொண்டு சென்று, அங்கே அதை மிகக் கடுமையாகத் தோற்கடித்தார். வங்காளப் படை பெருஞ்சேதமுற்றது; ஆயிரக்கணக்கான படைவீரர்கள் படுகொலைக்குள்ளாயினர். சுராஜ்கர் போரின் விளைவு ஷேர்கான் எதிர்பார்த்தபடியே இருந்தது. 'பொக்கிஷங்களும், யானைகளும், வங்காளப் படையின் பீரங்கிகள் பலவும் ஷேர்கானின் கையில் சிக்கின. இவ்விதமாக ஷேர்கான் போர் ஆயுதங்களைப் பெற்றதுமன்றி, பீஹார் இராச்சியத்துக்கும் மேலும் பல இதர இராச்சியங்களுக்கும் தலைவரானார்.' உண்மையில் அவருடைய வாழ்க்கையில் சுராஜ்கர் போர் ஒரு திருப்பமாகும். உண்மையில் சுராஜ்கர் போர் அவருடைய மனத்தில் புதியவும் பெரியவுமான

பேரவாக்களைத் தூண்டியது. செழுமையான ஒரு வருங்காலத்தை அடைவதற்கான வாய்ப்புகளை அளித்தது.

சுராஜ்கர் வெற்றி மேலும் கைப்பற்றுதல்களைச் செய்வதற்கான பேரவாவை ஷேர்கானிடம் உண்டாக்கிற்று. அவரது வெற்றியைப் பின்தொடர்ந்து அவர் மீண்டும் வங்காளத்தின்மீது படையெடுத்தார்; அதே சமயத்தில் குஜராத்தைச் சார்ந்த பகதூர்ஷாவுக்கெதிராக ஹுமாயூன் தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தார். கியாஸுத்தீனை ஷேர்கான் மீண்டும் மீண்டும் தோற்கடித்தார். தெலியாகர்ஹி கணவாய்க்கு மேற்கிலுள்ள அவரது இராச்சியத்தைக் கைப்பற்றினார். ஷேர்கானின் கடுமையான தாக்குதலால் அழுத்தப்பட்டதனாலும் துன்புறுத்தப்பட்டதனாலும் வங்காள அரசர் சின்சுராவிலிருந்து (Chinsura) போர்ச்சுகீசியரின் உதவியை நாடும்படி வற்புறுத்தப்பட்டார். ஒன்று சேர்க்கப்பட்ட வங்காள-போர்ச்சுகீசியப் படைகள் தெலியாகர்ஹி கணவாயையும் சிக்ரிகலி (Sikrigali) கணவாயையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை விரைந்தெடுத்தன. ஆனால், ஷேர்கான் கூட்டாளிகளைவிட சாதுர்யமிக்கவராக இருந்தார். கணவாய்களின் வழியாகச் செல்லாமல் மிகச் சாதுர்யமாக அவர்களைச் சுற்றிச்சென்று, வங்காளத்தின் தலைநகரான கௌரை (Gaur) அடைந்து, 1536-ல் அதை அச்சுறுத்தினார். கியாஸுத்தின் மகமூதின் போர்ச்சுகீசியக் கூட்டாளிகள் எவ்வித உதவியையும் அளிக்க முடியவில்லை. வேறு வழியின்றி அவர் அமைதிக்கான பேச்சுவார்த்தைகளை நடத்தி, 13 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கத்தை ஷேர்கானிடம் ஒப்படைத்து, அவரது தாக்குதல்களிலிருந்து தற்காலிகமாக விடுதலை பெற்றார்.

அமைதி மகமூதுக்கு ஒரு தற்காலிக ஓய்வையே கொடுத்தது. ஏனெனில், ஷேர்கான் வங்காளம் முழுவதையும் கைப்பற்ற விரும்பினார். அவர் ஏற்கெனவே வங்காளப்படையை இருமுறை—சுராஜ்கரிலும் கௌரிலும்—முறியடித்திருந்ததனால், வங்காளத்தைக் கைப்பற்றுதல் மிகக் கஷ்டமான வேலையன்று என்பதை அவர் உணர்ந்திருந்தார். மேலும், மகமூதுக்கும் போர்ச்சுகீசியர்களுக்குமிடையில் நடந்துகொண்டிருந்த பேச்சுவார்த்தைகளின் விவரங்களை அவர் உணர்ந்திருந்தார்; அவர்களுக்கிடையில் உறுதியான உடன்படிக்கை ஒன்று ஏற்படுவதைத் தடுக்க அவர் ஆவலாக இருந்தார். உடன்படிக்கை ஏற்பட்ட ஓர் ஆண்டுக்குள்ளாக வங்காளத்தின்மீது புதிய தாக்குதல் ஒன்றை நடத்த அவர் ஆயத்தமாகிக்கொண்டிருந்தார் (1537), ஒரு காரணமும் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டது. சம்மதித்த ஆண்டு கப்பத்தைத்

தர மகமூத் தவறிவிட்டார்; பகைமைக் கொள்கையையும் அவர் கைவிடவில்லை. ஷேர்கானுக்கு அவர் நிகரல்லர்; கௌர் அரணில் அவர் அடைக்கலம் புகுமாறு வற்புறுத்தப்பட்டார். அங்கிருந்து அவர் தமது ஆபத்து நேரத்தில் ஹுமாயூனின் உதவியை நாடினர். தாம் வெற்றி பெற வேண்டுமானால் மிக விரைவாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதை ஷேர்ஷா அறிந்திருந்தார். வங்காள அரசருக்கு ஹுமாயூனிடமிருந்து உதவி வந்து சேருவதற்கு முன், கௌரை முற்றுகையிட்டு வங்காளத்தைக் கைப்பற்றுவதற்காக ஷேர்கான் தமது மகனான ஜலால்கானையும் அவருடைய பற்றுமிக்க திறமைவாய்ந்த தளபதியான கவாஸ்கானையும் அனுப்பி வைத்தார். அதே சமயத்தில், மகமூதின் இராச்சியப் பகுதிக்கு வெளியிலிருந்த சிட்டகாங் (Chittagong) போன்ற மாவட்டங்களைக் கைப்பற்று வதற்காகத் தமது படையின் ஒரு பகுதியையும் அவர் அனுப்பி வைத்தார். வங்காளத்தின் வீழ்ச்சிக் காலம் நெருங்கிக்கொண் டிருந்தது.

ஷேர்கானுக்கெதிராக ஹுமாயூன் முன்னேறுதல்: சூனர்கரின் விழ்ச்சி, 1537-38

வங்காளத்தின்மீது ஷேர்கான் கொண்ட வெற்றியும் அவரது அதிகார முன்னேற்றமும் ஹுமாயூனை விழிப்படைய வைத்தது. ஜான்புரிக்குச் சென்று அங்கிருக்கும் நிலையை அறிந்து அதைப் பற்றிய தகவலைத் தமக்கு விரைவில் அனுப்புமாறு ஹுமாயூன் ஹிந்து பேக்குக்கு ஆணை பிறப்பித்தார். ஷேர்கானுடன் தொடர்பு கொண்டிருந்த இம் முகலாய உயர் குடிமகனர், கீழ் எல்லை அமைதி யாக இருக்கிறதென்றும், ஆப்கானியத் தலைவரிடமிருந்து எவ்வித ஆபத்தும் வராதென்றும் தெரியப்படுத்தினர். சிறிது காலத்துக்குப் பின் மகமூதினிடமிருந்து உதவிக்கான வேண்டுகோளை ஹுமாயூன் பெற்றார்; இன்னும் சற்றுத் தாமதித்து, வங்காளம் முழுவதும் ஷேர்கானின் கைவசப்பட்டதென்னும் பீதி விளைக்கும் செய்தி எட்டியது. ஆகையால், ஆக்ராவில் ஓராண்டு வீணாக்கிய (1536 ஆகஸ்டு—1537 ஜூலை) முகலாயப் பேரரசர் சூனருக்குப் புறப்பட ஏற்பாடுகள் செய்தார். ஆக்ராவின் அரசாங்கப் பொறுப்பை மீர் முகம்மது பக்ஷி (Mir Muhammad Bakshi) என்பவ ரிடமும், டெல்லி அரசாங்கத்தை மீர் ஃபகீர் அலி (Mir Fakir Ali) என்பவரிடமும் ஹுமாயூன் ஒப்படைத்துவிட்டு, யாத்கார் நசீர் மீர்ஸாவைக் கல்பியிலும், நூருத்தீனை காஞ்ஜௌஜிலும், ஹிந்து பேக்கை ஜான்புரியிலும் நியமித்து, 1537, ஜூலை 27ஆம் நாள் ஆக்ராவிலிருந்து புறப்பட்டார். நவம்பரில் அவர் சூனரை வந் தடைந்ததும் அரணைத்தாக்கும்படி ஆணை பிறப்பித்தார். ஷேர்கான்,

தமது மகனை குதுப்கானிடமும் சகோதரரான காஸிகான் சூரிடமும் (Ghazi Khan Sur) அவ்வரணை ஒப்படைத்திருந்தார். அவ் வரணை மிக இலகுவாகக் கைப்பற்ற முடியவில்லை. முற்றுகை ஆறு மாதங்களாக நீடித்தது (1537 அக்டோபர், 1538 மார்ச்சு). இருந்தபோதிலும், ரூமிகான் (Rumi Khan) ஒரு சூழ்ச்சியைக் கையாண்டு அதைக் கைப்பற்றினர். ரூமிகானைத் தளபதியாக நியமித்ததற்குப் பிறகு பேரரசர் வாரணுசியை நோக்கி முன்னேறினர். அப்பொழுது, கௌருக்குச் சென்று வங்காளத்தைச் சார்ந்த மகமூதுக்கு உதவியளிப்பதா அல்லது மகமூத்கானின் இராச்சியத்தினது இதய பாகத்திலேயே எழுச்சிபெற்றுக்கொண்டிருந்த ஷேர்கானின் ஆதிக்கத்தை அடக்கத் தெற்கு பீஹாரின்மீது படையெடுப்பதா என்று ஹுமாயூனின் மனம் ஊசலாடிக்கொண்டிருந்தது. சூனரைக் கைப்பற்றியதனுல் அவருக்கு எவ்விதப் பலனும் ஏற்படவில்லை. ஆனலும், அதன் சுவர்களின் எதிரில் அவர் விலைமிக்க ஆறுமாத காலத்தை வீணுக்கினர். எவ்வித நிலப்பாதைகளின்மீதும் சூனர் ஆதிக்கம் பெற்றிருக்கவில்லை. ஆப்கானியப் படையைக் கண்காணிப்பதற்காக அவ்விடத்தைத் தமது படையின் ஒரு பகுதியின் கையில் அவர் விட்டுவைத்திருக்கலாம். இவ் இடைவெளியில், மூங்கிருக்கும் (Mungir) கௌருக்குமிடையிலுள்ள வங்காள இராச்சியப் பகுதியை அவர் கைப்பற்றி (1537, ஜுலையிலிருந்து அக்டோபர்வரை), மகமூதின் தலைநகரையும் முற்றுகையிட்டார்.

வாரணுசியில் முகாமிட்டிருக்கும்பொழுது, ஹுமாயூன் ஷேர் கானுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினர், பீஹாரை ஜலால்கானின் பொறுப்பிலும், கௌரின் முற்றுகையைக் கவாஸ் கானின் பொறுப்பிலும் ஷேர்கான் விட்டுவிட்டுத் திரும்பியிருந்தார். ஷேர்கானின் இராச்சியப் பகுதியின் வெகு அருகில் இருப்பதற்காக ஹுமாயூன் சோன் நதியின் கரையிலிருந்த மானெரை இப்பொழுது தாக்கினர். பீஹாரிலும், வங்காளத்திலும் இருந்த தமது இராச்சியத்தைச் சரணடைவித்து ரோடாஸ்கர் (Rohtasgarh) அல்லது சுனர்கர் அல்லது ஜான்புரி எங்காவது ஒரு சிறிய ஜாகீரைப் பெற்றுக்கொள்ளுமாறு ஷேர்ஷாவை ஹுமாயூன் கோரினர். இந்த நிபந்தனைகளை ஷேர்கான் இயல்பாகவே ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். ஹுமாயூன் இப்பொழுது பீஹார் சரணடையவேண்டும் என்று விரும்பினர். ஆனலும், ஷேர்கான் வங்காளத்தை நீடித்து வைத்திருக்கவேண்டுமென்றும், தமக்கு அவர் பத்துலட்ச ரூபாயை ஆண்டுக் கப்பமாகச் செலுத்தவேண்டுமென்றும் கோரினர். இந்த நிபந்தனைகளுக்கு ஷேர்கான் இணங்கிக் கொண்டார். மதிப்புக்குரிய மேலங்கியையும் ஒரு குதிரையையும்

ஹுமாயூன் ஷேர்கானுக்கு அனுப்பிவைத்தார். பிரச்சினைக்கு மன நிறைவான ஒரு முடிவு ஏற்பட்டுவிடும்போலிருந்தது.

ரோடாஸ்கரை ஷேர்கான் கைப்பற்றுதல்

ஹுமாயூனுடன் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்குமுன், பேரரசின் திட்டங்களை அறிந்திருந்த ஷேர்கான், ஒரு சூழ்ச்சியைப் பயன்படுத்தி உறுதிவாய்ந்த ரோடாஸ்கர் அரணைக் கைப்பற்றினார். இவ்வரண் குன்றுகளாலும் காடுகளாலும் சூழ்ந்த விசாலமான நிலப் பரப்பில் சோன் நதியின் மேல்கரையில் உள்ளது; புகழ்மிக்க ஹரிஷ் சந்திரரின் (Harish Chandra) மகனை ரோஹிதாஷ்வா (Rohitashwa) என்பவரால் இது கட்டப்பட்டதுபோலும். இது ஓர் இந்து ராஜாவின் உடைமையாக இருந்தது. அவ் இந்து ராஜாவின் அமைச்சரான சுராமன் (Churaman) என்பவருடன் ஷேர்கான் நல்லுறவு கொண்டிருந்தார். தமது குடும்பத்திற்கும் பொக்கிஷங்களுக்கும் இவ் வரணைப் பாதுகாப்பு அரணாக அவர் பயன்படுத்த விரும்பினார். இதை அவர் கைப்பற்றியதைப்பற்றி இரு கருத்துகள் உள்ளன. அவர் தமது பெண்களுக்கு அடைக் கலம் தருமாறு மன்னரைக் கெஞ்சிக் கேட்க மன்னர் அதற்கு இணங்கினார் என்றும், பெண்கள் தோற்றத்தில் பல போர்வீரர் களைத் திரை மூடப்பட்ட பல்லக்குகளில் அமர்த்தி அரணுக்குள் கடத்திச் சென்றார் என்றும் சொல்லப்படுகிறது. அரணுக்குள் நுழைந்ததும் அவர்கள் தங்கள் முகமூடிகளைக் களைந்தெறிந்து, அரணைக் கைப்பற்றி மன்னரின் ஆட்களை விரட்டியடித்தனர். இக் கூற்றைத் தற்கால ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதைப்பற்றிய மற்றொரு கூற்று சிறிது நம்பிக்கைக்குரியதாகும். அதன்படி, ஷேர்கான் மன்னரின் அமைச்சருக்கு லஞ்சம் கொடுத்து, அரணில் பாதுகாப்பு அளிக்கும் வாக்குறுதியைப்பெற்றுக் கொண்டார். அமைச்சர் வாக்குக் கொடுத்தமை தகாதென மன்னர் எண்ணினாலும், கொடுத்த வாக்குறுதியை மீறுதல் அழகன்று எனச் சுராமன் கூறக்கேட்டு, அதை நிறைவேற்றும்படி அவர் வற்புறுத்தப் பட்டார். அரணுக்குள் நுழைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ஆப் கானியர்கள் அரசரின் படைவீரர்களை விரட்டியடித்து அரணைக் கைப் பற்றினார்கள் (1538). நாட்டின் உறுதியான அரண்களுள் ஒன்றான ரோடாஸ்கர் ஷேர்கானின் குடும்பத்தினருக்குப் பாதுகாப்பு அரணாயிருந்ததுமன்றி, சிக்கனமிக்க இந்து அரசர்கள் பல தலைமுறைகளாகச் சேமித்துவைத்திருந்த ஏராளமான செல்வத்தை யும் அவருக்கு அளித்தது. ஷேர்கான் அவருடைய பெண்களையும் மக்களையும் அவ்விடத்தில் இருக்கவைத்துவிட்டதனால், ஹுமாயூ னுடன் போரிடத் தயாரான சூழ்நிலையில் இருந்தார்.

கௌர் ஆப்கானியர் கைவசப்படுதல்

ஷேர்கானுடன் அமைதி ஏற்படுத்திக்கொள்வதா அல்லது வங்காளத்தின்மீது திட்டமிட்டபடி படையெடுப்பதா என்று ஹுமாயூன் தயக்கம் காட்டிக்கொண்டிருக்கும்பொழுது, கௌரைக் கைப்பற்றுவதற்காக ஷேர்கானால் பின்விட்டுச் செல்லப்பட்ட ஜலால்கானும் கவாஸ்கானும் வங்காளத்தின் தலைநகரை முற்றுகை யிடுவதில் தீவிரமாக முனைந்திருந்தார்கள். அரணைச் சிதறடிக்க அவர்கள் முயன்றனர். ஒருவேளை சுல்தான் மகமூதுக்கு உதவி யளிக்க ஹுமாயூன் விரைவார் என்பதனால், கௌரைக் கைப்பற்றி வங்காளப் படையெடுப்பை விரைவில் முடிக்கும்படி தமது மகனுக்கு ஷேர்கான் உத்தரவிட்டார். இப்பொழுது கவாஸ்கான் தமது முயற்சிகளை இரட்டித்தார். அவர் சுற்றுப்புற நிலப்பகுதியைச் சூறையாடி, பொருள்களைச் சேராவண்ணம் தடுத்து, படையை மிக்க வறுமைக்குள்ளாக்கினார். மகமூத் மிகத் தீவிரமாகத் தாக்கப் பட்டதனால் தலைநகரைக் காலி செய்து வட பீஹாருக்கு ஓடினார். ஆப்கானியர்கள் அவரைப் பின்தொடர்ந்து, இருதரப்பும் நெருங்கி மோதிக் கைகலப்புற்ற சண்டையில் அவரை முறியடித்தனர். அச் சண்டையில் அவர் மிகக் கடுமையாகக் காயமுற்றார்; ஆனால், அவர் தப்பித்துக்கொண்டு மன அமைதியற்ற நிலையில் ஹாஜீபூருக் குப் பின்வாங்கினார். இப்பொழுது இரு ஆப்கானியத் தளபதி களும் கௌரைக் கைப்பற்றி வங்காளத்தில் ஷேர்கானின் ஆட்சியை நிலைநாட்டினார்கள். இச் செய்தி ஷேர்கானுக்குத் திருப்தியளித்தது; வங்காளத்து மேற்கு எல்லையை ஹுமாயூன் அடைவதற்குமுன் ரோடாஸ்கர் என்ற தமது புதிய புகலிடத்திற்குத் தலைமுறை தலைமுறையாக சுல்தானியர்கள் சேமித்துவைத்த செல்வத்தை மாற்றுமாறு ஷேர்கான் தம் மகனுக்கு உத்தரவிட்டார்.

ஹுமாயூனுடன் பிளவு; வங்காளத்தை முகலாயர்கள் கைப்பற்றுதல்

வங்காளத்தைச் சார்ந்த மகமூதினிடமிருந்து உதவி தருமாறு ஹுமாயூனுக்கு வேண்டுகோள்கள் வந்துகொண்டிருந்தன; சற்றுப் பிறகு, மானெரில் இருந்த முகலாய முகாமுக்கு மகமூதே நேரில் வந்து பேரரசின் பாதுகாப்பை நாடினார். ஷேர்கானுடன் உடன் படிக்கை செய்திருந்த ஹுமாயூன் இச் சமயத்தில் மனம் மாறினார்; உடன்படிக்கையை ஊர்ஜிதம் செய்யும் எண்ணத்தை அவர் கைவிட்டு, வங்காளத்தைக் கைப்பற்றுவதற்காக அம் மாகாணத்தை நோக்கிச் செல்ல முடிவு செய்தார். ஹுமாயூன் உடன்படிக்கை செய்துகொள்ளத் தவறியது நம்பிக்கைத் துரோகம் செய்ததாகும் என்று நியாயமுறவே ஷேர்கான் கருதினார். இந்தியாவிலுள்ள ஆப்கானியர்களின் இருப்பிடத்தையே ஒப்படைப்பதாகவும்,

முகலாயர்களின் பணியாட்களாகிப் பேரரசருக்குக் கப்பம் செலுத்துவதாகவும் தாம் கூறியும் தம்முடன் உடன்படிக்கை செய்துகொள்ளாது ஆப்கானிய இனத்தை அறவே ஒழிப்பதற்கு ஹுமாயூன் உறுதி கொண்டிருக்கிருர் என்று அறிவித்து, ஷேர்கான் ஆப்கானியப் படைவீரர்களின் உணர்ச்சியையும் வெறுப்பையும் தூண்டினர். ஆப்கானிய இனத்தைப் பாதுகாக்க அவருக்கு உதவுவதாகவும் இறுதிவரை போரிடுவதற்கு ஆயத்தமாக இருப்ப தாகவும் அவருடைய ஆட்கள் அவருக்கு உறுதி தந்தனர்.

ஹுமாயூன் இப்பொழுது தமது பயணத்தை மீண்டும் தொடங் கினர். கல்கோனில் (Khalgaon—கொல்கோன்—Colgaon) மகமூது இறந்துவிட்டபோதிலும், கௌரைக் கைப்பற்றுவதற்காக ஹுமாயூன் முன்னேறிக்கொண்டிருந்தார். ஷேர்கான், வங்காளப் பொக்கிஷத்தைக் கௌரிலிருந்து ரோடாஸ்கருக்கு மாற்றுவதற் கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, தமது படைகளுடன் தெலியாகர்ஹிக்குச் சென்று அக் கணவாயை முகலாயர்களிட மிருந்து காப்பாற்றி, கௌரின் செல்வங்களை ஆப்கானியர்கள் கொண்டுசெல்லும்படி செய்யவேண்டுமெனத் தமது மகனை ஜலால் கானுக்கு உத்தரவிட்டார். தற்கால சாஹெப்காங்குக்கு (Saheb-gang—கிழக்கிந்திய ரயில்வே லூப் லைனில் உள்ளது) ஏழு மைல் கிழக்கிலிருந்த தெலியாகர்ஹி இடைக்காலத்தில் ‘வங்காளத்தின் திறவுகோலாக’ இருந்தது. ஜலால்கான் அவ்விடத்தைப் பாது காத்ததோடு நிற்காமல் முபாரக்கானின் தலைமைகொண்ட முகலாயர்களின் முன்னணிப் படையையும் தாக்கினர். இக் கணவாயில் முகலாயர்களை வெற்றிகரமாகத் தடுத்ததனுல் ஹுமா யூன் ஒரு மாத காலம்வரை தாமதிக்கப்பட்டார்; இடைவேளையில் ஷேர்கான் கௌரிலிருந்து ரோடாஸுக்குப் பொக்கிஷங்களை மாற்றி விட்டார். இக் காரியத்தைச் செய்துமுடித்தவுடன் தெலியாகர்ஹி லிருந்து ஜலால்கான் திரும்பி அழைக்கப்பட்டார்; அவ்விடத்தி லிருந்து அவர் மிக அமைதியாகச் சென்றதனுல், அக் கணவாயை அவர் விட்டுச் சென்றதை முகலாயர்கள் அடுத்த நாள்தான் அறிந் தனர். இப்பொழுது ஹுமாயூன் கௌருக்குச் சென்ருர்; முகலாயப் படை முழுவதும் எவ்விதத் தாக்குதலுக்குமுட்படாது வங்காளத்தை நோக்கிச் செல்ல ஷேர்கான் மிகச் சாதுர்ய மாக அனுமதித்தார். கௌருக்குள் ஹுமாயூன் நுழைந்தவுடன், ஆப்கானியத் தலைவர் தொடர்பு வசதிகளைத் துண்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்தார். வாரணுசி, ஜான்புரி, கல்பி, கானேஜ் ஆகிய இடங்களிலிருந்த முகலாய அதிகாரிகளை விரட்டி யடிப்பதற்காக ஆப்கானியர் கூட்டங்களை அவர் அனுப்பி வைத்தார். ஆப்கானியர்கள் திர்ஹுட்டைக் (Tirhut) கைப்பற்றி,

வாரணுசியின் கவர்னரான மீர் ஃபஸ்லி என்பவரைத் தாக்கிக் கொன்று அவ்விடத்தைக் கைப்பற்றினர். பிறகு அவர்கள் ஜான்புரியைக் கைப்பற்றினர்கள் ; அவ்விடத்திலிருந்து காணேஜ் நோக்கி முன்னேறினர். ஹிண்டால் ஏற்கெனவே அவரிடத்தை விட்டுவிட்டு ஆக்ராவுக்கு ஓடிவிட்டார் ; அங்கே தம்மை அரசராக்கிக்கொண்டார். ஹுமாயூனின் மதிப்பிணைப் பெற்றிருந்த ஷேக் பகலோல் (Shaik Bahlol) என்பவரை ஹிண்டால் கொன்றதுமன்றி, முக்கியப் பிரபுக்களுடனும் ஆளும் முகலாயக் குடும்பத்தினரோடும் பகைமைகொண்டார். தெலியாகர்ஹிதொட்டு காணேஜ்வரையிலும் பரவியிருந்த நாடு முழுவதும் ஷேர்கானின் கைவசப்பட்டது. முக்கியமான இடங்களில் ஷேர்கான் தமது ஆட்களை அமர்த்தி, ஒழுங்கை நிலைநாட்டவும் வருவாயை வசூலிப்பதற்குமான ஏற்பாடுகளையும் செய்துவைத்தார்.

இக் காலம் முழுவதும் ஹுமாயூன் கௌரில் சோம்பலிலும் சிற்றின்பங்களிலும் மூழ்கியிருந்தார். காணேஜிலிருந்து தெலியகர்ஹிவரை பரவியிருந்த நாட்டை ஆப்கானியர்கள் கைப்பற்றியதன் விளைவாகத் தமது தொடர்பு வசதிகள் சின்னுபின்னமாக்கப்பட்டன என்றும், டெல்லி, ஆக்ரா ஆகியவற்றுடன் அவருடைய தொடர்பு முற்றிலும் அறுபட்டது என்றும் அவருக்குளட்டிய செய்தி, எட்டு மாதமாகச் செயலற்றிருந்த அவரை அவரது தூக்கத்திலிருந்து தட்டி எழுப்பியது. ஜஹாங்கீர் கூலி பேக்கை 5,000 ஆட்களுடன்வங்காளத்தைத் தாக்குமாறு விட்டுவிட்டு, ஹுமாயூன் ஆக்ராவுக்கு விரைவாகப் பின்வாங்கினர்.

சௌசாப் போர், 1539, ஜூன் 26

முன்னணிப் படைக்கு அஸ்கரி தலைமை தாங்க, மற்றெரு படைப் பகுதியுடன் ஹுமாயூன் சில மைல்களுக்குப் பின்னுல் நடந்து வந்துகொண்டிருந்தார். மூங்கீர் என்ற இடத்தில் சகோதரர்கள் ஒன்றுசேர்ந்து, கங்கையின் தென்கரைப் பக்கம் கடந்து, நாட்டு நெடுஞ்சாலை வழியாகச் சென்றனர். அச் சாலை ஷேர்கானின் ஆட்சிப் பகுதியின் வழியாக அமைக்கப்பட்டிருந்தது. முகலாயப் படையின் நடமாட்டங்களைப்பற்றி விழிப்பான ஆப்கானிய ஒற்றர்கள் ஷேர்கானுக்கு ஒழுங்காக அறிவித்துவந்தனர். இறுதியில் ஷேர்கான் பேரரசருடன் வெளிப்படையாகப் போரிட முடிவு செய்தார். பேரரசர் நாட்டு நெடுஞ்சாலை வழியாக மேலும் போக முடியவில்லை. பிஹியாவுக்கு (Bihiya) (போஜ்பூர் மாவட்டத்திலுள்ளது) அருகில் வடக்குக் கரைப்புறத்தில் அவர் நதியைக் கடக்கவேண்டியிருந்தது. அவரது தவறுகளும் இடை

யூறுக்ளும் சுவரின்மேல் உட்கார்ந்திருத்தல் கொள்கையை விட்டு விட்டுப்போருக்கு ஆயத்தமாவதற்கான வாய்ப்பினை ஷேர்கானுக்கு அளித்தன. அவர் முகலாயப் படைகளைச் சுற்றிவந்து எல்லா வகையிலும் அதைத் துன்புறுத்திப் பல சண்டைகள் புரியும்படி வற்புறுத்தினர். ஹுமாயூன் இவ்விதமாகத் துன்புறுத்தப்பட்டு, கர்மனுசா நதிக்குச் சற்று தூரத்திலும், பக்சாருக்கு (Baksar) 10 மைல் தென்மேற்கிலும் உள்ள சௌசாவை அடைந்தார். கர்மனுசா நதி பீஹாருக்கும் தற்கால உத்தரப்பிரதேசத்துக்குமிடையில் உள்ள எல்லையாகும் ; மீண்டும் கங்கையை அதன் தெற்குக் கரையில் அவர் கடந்தார். அண்டைப்புறத்தில் ஷேர்கான் நேரில் தோன்றி, நதியைக் கடந்துகொண்டிருந்த ஹுமாயூனை எவ்விதத் தயக்கமுமின்றி நதியின் தென்புறத்திற்கு வருமாறு செய்வதற்காகச் சற்று தூரத்திற்குத் தம்மைப் பின்வாங்கிக்கொண்டார். ஹுமாயூனின் ஆட்கள் நன்னிலையில் இருக்க ஆப்கானியப் படைவீரர்கள் பல நாட்களாக விரைந்து நடமாட்டம் செய்துகொண்டிருந்ததனால் களைப்புற்றிருந்த சமயம்தான் ஹுமாயூன் தாக்குதல் நடத்தியிருக்க வேண்டிய தக்க சமயமாகும். ஆனால், தாமதம் செய்தது ஷேர் கான் தமது முகாமை வலுப்படுத்திக்கொள்வதற்கும், அவருடைய ஆட்களுக்குத் தேவையான ஓய்வை அளிப்பதற்கும் போதிய அவகாசம் தந்தது. அதுவுமன்றி, பீஹாரிலிருந்து ஏராளமான ஆப்கானியப் படைவீரர்கள் அவருடைய கொடியின்கீழ் திரண்டனர். மேற்குறிப்பிட்ட காரணங்களை முன்னிட்டு ஷேர்கானும் வலிந்து தாக்குதல் நடத்தவில்லை. ஆகையினால், பகைவர் ஒருவரை ஒருவர் நோக்கிக்கொண்டு மூன்று மாதமாக நின்றுகொண்டிருந்தனர். மழைக்காலம் தொடங்கியதும் முகலாயர்கள் சாதகமற்ற நிலையில் போரிட நேரிடும் என்ற காரணத்தை முன்னிட்டு ஷேர்ஷா உண்மைப் போரைத் தாமதித்தார்.

இவ்விடைவேளையில் ஹுமாயூன் போரைத் தவிர்த்து, அமைதி முறைகளைக் கையாண்டு, ஷேர்ஷாவுடன் தமது பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முயன்றார். ஹுமாயூனை ஷேர்கான் மேலதிகாரியாக ஏற்றுக்கொண்டு, அவருடைய பெயரைக் குத்பாவில் சேர்த்து, அவருடைய பெயரில் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டால் வங்காளம், பீஹார் மாகாணங்களை ஷேர்கானே வைத்துக்கொள்ளலாம் என்று அறிவிப்பதற்கு அவருடைய முகாமுக்கு ஹுமாயூன் ஒரு தூதரை அனுப்பினர். மற்ற இராச்சியப் பகுதியையும் ஒப்படைக்கவேண்டும் என்று ஹுமாயூன் கோரினர். ஷேர்கான் இதை ஏற்றுக்கொண்டதாக பாவனைசெய்து, வங்காளமும் பீஹாரும் தவிர சூனரும் தம்மிடத்திலேயே வைத்துக்கொள்ளத் தாம் அனுமதிக்கப்படவேண்டும் என்றும் யோசனை கூறினர்.

இதற்கு ஹுமாயூன் இணங்கவில்லை. ஆகையால், பேச்சு வார்த்தைகள் முறிந்தன. பேரரசர் தமது பலவீனத்தை உணர்ந்து சௌசாப் போர்த்தறுவாயில் சமரசத்துக்கு வர மற்றொரு முறையும் முயன்றார்; ஷேர்கான் தமது பகைமையைக் கைவிடவேண்டி வற்புறுத்த அவரிடம் திருத்தொண்டரான முல்லா மீர் முகமது பர்கரியை ஹுமாயூன் அனுப்பிவைத்தார். ஷேர்கானும் அவ்விதமே செய்து, திருத்தொண்டர் என்று புகழ்பெற்றவரான ஷேக் கலீல் (Shaikh Khalil) என்பவரைத் தமது சார்பில் பேச்சுவார்த்தை தொடங்க அனுப்பிவைத்தார். ஆப்கானிய முகவரைக் கண்டு வியந்த ஹுமாயூன், தமது சார்பிலும் பேச்சுவார்த்தைகள் நடத்தும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். ஹுமாயூனுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் சாராம்சத்தை ஷேக் கலீல் ஷேர்கானுக்குக் கூறியபொழுது, ஆப்கானியத் தலைவர், ஆப்கானியர்கள் தமது உயிருக்காகப் போரிடுவதா அல்லது முகலாயர்களுடன் அமைதி ஏற்படுத்திக்கொள்வதா என்பதைப்பற்றி அவருடைய சொந்தக் கருத்து என்ன என்று வினவினார். அவர்கள் போரிட வேண்டும் என்று ஷேக் கலீல் பதிலளித்தார். இதைத்தான் ஷேர்கான் உண்மையில் விரும்பினார். இவ் வார்த்தைகளை ஷேக் கலீல் கூறியவுடனே, அமைதிக்கான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தன என்று ஷேர்கான் அறிவித்தார்.

மழைக்காலம் தொடங்கியவுடன் ஷேர்கான் போருக்காகத் தயாரானார். கங்கைக்கும் கர்மனசா நதிக்குமிடையில் உள்ள தாழ்வான இடத்தில் அமைக்கப்பட்ட முகலாயர்களின் முகாமில் வெள்ளம் நுழைந்ததால் படைவீரர்களிடையில் குழப்பம் ஏற்பட்டது. 1539, ஜூன் 25ஆம் நாள் ஷேர்கான் தமது படைகளைத் திரட்டிக்கொண்டு, பீஹாரிலுள்ள சாஹாபாத் (Shahabad) மாவட்டத்தில் வசித்துவந்த ஆதிகுடிகளின் தலைவரான மஹாரத சீரோ என்பவரைத் தாக்கப்போவதாகக் கூறிக்கொண்டார். இச் செய்தி முகலாயர்களை விழிப்பு இழக்கச் செய்தது. உண்மையில் ஷேர்கான் சீரோ நாட்டை நோக்கிச் சென்று நடுப்பகலுக்குப்பிறகு திரும்பி, தமது முகாம்களில் தூங்கிக்கொண்டிருந்த முகலாயர்களின் மீது திடீர்த் தாக்குதல் நடத்தினார். ஆப்கானியப் படை முறையே ஷேர்கான், அவருடைய மகன் ஜலால்கான், அவருடைய மிகப் பெரிய தளபதியான கவாஸ்கான் ஆகியவர்கள் தலைமை தாங்க மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அப்படை முகலாயர்களை பல திக்குகளிலிருந்தும் தாக்கியது. பேரரசரின் ஆதரவாளர்களிடம் பெருந்துயர் ஏற்பட்டது. அக் குழப்பம் ஹுமாயூனை எழுப்பியது. அவர் உடனே குதிரைமீதேறித் தமது ஆட்களைத் திரட்ட முயன்றார். ஆனால், அவருடைய படைவீரர்கள் பலர் ஏற்கெனவே கலைந்து

விட்டுத் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள ஓடிவிட்டனர். ஹுமாயூன் தமது கூடாரத்தை அடைய முடியவில்லை. ஆனால், அபாயமில்லாத ஓர் இடத்திற்கு அவருடைய ஆட்கள் அவரைக் கொண்டுசென்றனர். ஷேர்கான் போரில் வெற்றிபெற்று முகலாயர்களை விரட்டியடித்தார். யானைமீது ஏறிக் கங்கையைக் கடக்க ஹுமாயூனால் முடியவில்லை. தண்ணீர் கொண்டுசெல்பவரான நைஸாம் என்பவருடைய தோல்பையின் உதவியைக்கொண்டு ஹுமாயூன் அக்கரைக்குச் செல்லவேண்டியிருந்தது. சிறப்புவாய்ந்த ஆடை ஆபரணங்கள் உட்பட ஹுமாயூனின் முகாம் முழுவதும் ஷேர்கானின் கைவசப்பட்டது. ஹுமாயூனின் முதன்மை அரசியான பேகா பேகம் உட்பட முகலாய அந்தப்புரத்தின் பெண்கள் பலர் முகாமிலேயே விட்டுச் செல்லப்பட்டனர். முகலாயப் படை சின்னபின்னமாக்கப்படும் அளவுக்கு ஆப்கானிய வெற்றி முற்றுப்பெற்றிருந்தது. பகைவரை எங்கும் காணமுடியவில்லை. ஒருசிலரே பின்தொடர ஹுமாயூன் ஆக்ராவுக்கு ஓடினார்.

சௌஸா வெற்றி பெருஞ் சிறப்பு வாய்ந்ததாகும்; மிக முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தியது. ஷேர்கானின் வாழ்க்கைக் குறிக்கோளில் ஒரு தீவிர மாறுதலைக் கொண்டுவந்தது அதன் முதல் விளைவாகும். அவருடைய 'பேராசையின் எல்லை மிக விசாலமானது'. சௌஸா போருக்கு ஓர் ஆண்டு முன்னால் வங்காளத்தில் துன்புறுத்தப்படாமல் விட்டுவைக்கப்பட்டிருந்தால், முகலாய அடியாளாக இருப்பதை அவர் திருப்தியுடன் ஏற்றுக் கொண்டிருப்பார் என்று டாக்டர் கானுங்கே தகுதியுறவே கூறுகிறார். 'இந்த ஒரு தாக்குதலால் அவர் வங்காளத்தையும் பீஹாரையும் தவிர ஜான்புரியையும் சுதந்திர முறையில் பெற்றார்; பேரரசருடன் சரிசமநிலையில் இருப்பதற்குத் தகுதியுறவே உரிமை கொண்டாடினார்.' இந்தியாவிலிருந்து முகலாயர்களை விரட்டி அடித்து டெல்லியின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பது அவரது பேரவாவாக இருந்தது. சௌசா வெற்றிக்குச் சற்றுப் பிறகு அவர் கங்கையைக் கடந்து கானோஜ்வரை இருந்த நாட்டைக் கைப்பற்றினார். தமது புதிய உடைமைகளை உறுதிப்படுத்தவும், ஐக்கியப்பட்ட இராச்சியமாக அவற்றை அமைக்கவும் அவர் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருந்தார்.

வங்காளம், பீகார் ஆகியவற்றின் அரசராக ஷேர்கான் பணியாற்றுதல், 1539-1540

சௌசா வெற்றி ஷேர்கானை பீஹார், வங்காளம் ஆகியவற்றின் உண்மை அரசராக்கியது. கௌரில் ஹுமாயூன்

விட்டுச் சென்ற முகலாயப் படையை விரட்டியடிப்பதுதான் அவர் இப்பொழுது செய்யவேண்டிய வேலையாக இருந்தது. ஆனாலும், ஏராளமான படைகள் இருந்தபோதிலும் ஷேர்ஷா ஒரு தனிப்பட்ட மனிதரேயாவார்; சட்டபூர்மாக எந்தவிதமான அந்தஸ்தையும் அவர் பெற்றிருக்கவில்லை. ஆகையால், அவருடைய குடிமக்களிடமிருந்து தடையின்றிப் பற்றுதலையும் கீழ்ப்படிதலையும் பெறுவதற்காக முடிசூட்டு விழா என்ற ஒரு சடங்கை அவர் மேற்கொள்ளவேண்டியிருந்தது. அச் செயல்தான் நாட்டிலிருந்த மற்ற அரசர்களோடு அவரைச் சமப்படுத்தும். அவருக்குத் திறமையும் வெற்றியும் இருந்தும் இருமுறை அவர் புறக்கணிக்கப் பட்டார் என்பதை ஷேர்ஷா மறந்துவிடவில்லை. தகுதியற்ற மகமூத் லோடி பகலோல் லோடியின் வழித்தோன்றல் என்பதனால், தமது சகோதரரான இப்ராஹிம் லோடியின் தோல்விக்கும் மரணத்திற்கும் பிறகு சுல்தான் என்ற ஆரவாரப் பட்டத்தை மேற்சொன்ன அவருடைய கொடியின்கீழ்ப் பெருவாரியான ஆப்கானியப் பிரமுகர்கள் திரண்டனர் என்பதையும் அவர் மறந்துவிடவில்லை. ஆகையால், பெயரளவில் மட்டுமன்றி உண்மையாகவே அரசனாவதற்கு அவர் முடிவு செய்துவிட்டார். ஆனாலும், அவருடைய ஆப்கானியத் தோழர்களுடைய ஜனநாயக மனப்பான்மையை உணர்ந்திருந்த அவர், தமது திட்டத்தை நிறைவேற்றுவதில் மிக விழிப்புடன் நடந்துகொள்ளவேண்டியிருந்தது. ஆப்கானியர்களுடைய மாபெரு வெற்றிக்குப்பிறகு ஆப்கானியப் பிரமுகர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் வெற்றிக் கடிதங்களை ஃபதேநாமா (Fatehnamah) வெளியிடுவதற்கான யோசனை ஒன்று கூறப்பட்டது. அதுபோன்ற கடிதங்கள் அரசனின் பெயரில்தான் வெளியிட முடியும் என்று ஷேர்கான் மிகச் சாதுரியமாகக் குறிப்பிட்டார். அதன்மேல், அவரது உட்கருத்தை அறிந்து கொண்ட மஸ்நாதி ஆலி ஈசாகான் (Masnad-i-Ali Isa Khan) ஷேர்கான் அரச பட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்று யோசனை கூறினர். ஆஜம் ஹுமாயூன் சர்வானியும்(Azam Humayun Sarwani) பீபன் லோடியும் (Biban Lodi) அந்த யோசனையை ஆதரித்தனர். கூடியிருந்த மற்றப் பிரபுக்களும் கரகோஷம் செய்து அதை ஆமோதித்தனர். மேலும், தாமதமின்றி முடிசூட்டு விழாவை முடித்துவிடவேண்டும் என்று ஆப்கானியப் படைவீரர்கள் வற்புறுத்தினர். அதன்படி, ஷேர்கான் 'நற்சகுனத்தை நிர்ணயிக்கும்படி சோதிடர்களுக்கு ஆணையிட்டார்.' முடிசூட்டு விழா வெகு எளிதானதாக இருந்தது. ஷேர்கான் சிம்மாசனத்தின்மீது அமர்ந்தார். அரசகுடை அவர்மீது பிடிக்கப்பட்டது. அவர் ஷேர்ஷா என்ற பட்டப்பெயரைப் புனைந்துகொண்டு, அவரது பெயரைக்கொண்டு நாணயங்களை அச்சிட்டு, குத்பாவிலும் அவருடைய பெயரைச்

சேர்த்துக்கொண்டார். முடிசூட்டு விழாவிற்குப் பிறகு- வெற்றிக் கடிதங்கள் எழுதப்பட்டு அவரது இராச்சியத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

முடிசூட்டு விழா முடிந்தவுடன், கௌரிலிருந்த முகலாயப் படையை விரட்டியடிப்பதற்கு ஷேர்ஷா ஒரு படையை அனுப்பி வைத்தார். முடிசூட்டு விழா கௌரில் நடந்திருக்கக்கூடும். ஜஹாங்கீர் கூலிபேக்கான் முறியடிக்கப்பட்டு அவருடைய தோழர்களுடன் கொல்லப்பட்டார். வங்காளம் முழுவதும் இப்பொழுது கைப்பற்றப்பட்டது. அதற்குப்பிறகு, சௌசாப் போருக்கு முன்பே ஓரளவு அடிப்படுத்திக் கைப்பற்றப்பட்ட காஞேஜ், கல்பி ஆகிய இடங்கள்வரை இருந்த ஆட்சிப் பகுதியில் படையை நிலை நாட்டினர். புதிய அரசர் அமைதியை நிலைநாட்டுவதற்கும், நீதி வழங்குவதற்கும், வரிகளை வசூல் செய்வதற்கும் அதிகாரிகளை நியமித்துத் தமது கைப்பற்றுதல்களை உறுதிப்படுத்திக் கொண்டார்.

புதியநாட்டை வலிவுபடுத்திக்கொண்டிருக்கும் அதேசமயத்தில் ஹுமாயூனைப் பின்தொடர ஷேர்ஷா நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருந்தார். சௌசாவில் ஹுமாயூனின் அந்தப்புரத்துப் பெண்கள் சிலர் ஷேர்ஷாவின் கையில் சிக்கினர் என்பது நினைவிருக்கலாம். அவர்களின் போதுமான பாதுகாப்புக்கும் வசதிக்கும் ஷேர்ஷா ஏற்பாடுகள் செய்துவைத்தார். தமது முடிசூட்டு விழாவுக்குப் பிறகு அப் பெண்டுகளைத் தக்க பாதுகாப்புடன் ஹுமாயூனிடம் அவர் அனுப்பிவைத்தார். ஹுமாயூனைப் பின் தொடர்தல் மனமின்றிச் செய்யப்பட்டது. நாடோடியாக ஓடிக் கொண்டிருந்த பேரரசரை ஷேர்ஷா நிறுத்தவேண்டுமென்று உண்மையில் விரும்பியிருந்தால், ஹுமாயூன் பத்திரமாக ஆக்ராவை அடைந்திருக்க முடியாது. ஆனல், ஷேர்ஷா மாளவத்துக்கும் குஜராத்துக்கும் தூதுக்குழு அனுப்பி, ஹுமாயூனுக்கு எவ்வித அடைக்கலமும் தரக்கூடாது என்று அம் மாகாணத்தின் அரசர்களை வேண்டிக்கொண்டதுமன்றி, நாடோடி அரசனைத் தாக்கினல் அவர்களுக்குத் தாம் உதவி அளிப்பதாகவும் ஷேர்ஷா கூறினர். அண்மையில் நிகழ்ந்த குழப்பத்திலிருந்து குஜராத்து விடுதலை பெருததனல், அதனிடமிருந்து எவ்விதமான பதிலும் வரவில்லை. ஆனல், காதர் ஷா (Qadir Shah) என்ற பட்டப் பெயரைப் புனைந்துகொண்டு, தம்மை அரசனுக அமர்த்திக்கொண்ட மாண்டுவைச் சார்ந்த மல்லுகான்(Mallu Khan of Mandu)சாதகமான பதில் அனுப்பிவைத்தார்.

பில்கிராம் போர், 1540, மே 17ஆம் நாள்

பல இன்னல்களை சௌசாவிலிருந்து ஓடும்பொழுது அனுபவித்த ஹுமாயூன் அதற்கிடையில் ஆக்ரா அடைந்தார். அங்கே அவருடைய சகோதரர்களுடன் அவர் கலந்து ஆலோசித்தார். வழக்கம் போல அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படவில்லை. பல இடையூறுகள் இருந்தபோதிலும், ஷேர்ஷாவை எதிர்க்க ஹுமாயூன் ஒரு புதிய படையைத் திரட்டினார். ஷேர்ஷா அப்பொழுது ஆக்ராவுக்கு விரைந்துகொண்டிருந்தார். காதர்கானைத் தம்முடன் ஒத்துழைக்க வற்புறுத்துவதற்கும், மாண்டுவிலிருந்து ஹுமாயூனின் படையைத் திருப்புவதற்கும் ஷேர்ஷா தமது மகனை குதுப்கானை மாண்டுவுக்கு அனுப்பிவைத்தார். அவரது நடமாட்டத்தைப்பற்றி ஹுமாயூன் அறிந்துகொண்டு குதுப்கானுக்கு எதிராகச் சென்று, அவர் காதர் ஷாவுடன் சேர்ந்துகொள்வதற்குமுன் அவரை முந்துவதற்காக அஸ்கரியையும் ஹிண்டாலையும் அனுப்பினார். குதுப்கானுடன் சேர காதர் ஷா எவ்வித முயற்சியும் செய்யவில்லை. குதுப்கான் முகலாயப் படையால் கல்பிக்கு அருகில் தாக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். அஸ்கரியும் ஹிண்டாலும் ஹுமாயூனுடன் சேர்ந்துகொண்டனர். ஏற்கெனவே கானோஜில் வந்து நதியின் கிழக்குக் கரையில் முகாம் அமைத்துக்கொண்டிருந்த ஷேர்கானைத் தாக்குவதற்காக ஹுமாயூன் அவ்விடம் நோக்கி முன்னேறினார். முகலாயப் படை மொத்தத்தில் இரண்டு இலட்சம் ஆட்களைக் கொண்டிருந்தது. ஆனால், அதில் உண்மையாகப் போரிடுபவர்களின் எண்ணிக்கை 40,000-க்கு மேற்பட்டிருக்கவில்லை. மீர்ஸா ஹைதரின் கணக்கின்படி ஷேர்ஷாவின் படை 15,000ஆக இருந்தது. எண்ணிக்கையில் ஹுமாயூனின் படையைவிட ஆப்கானியரின் படை குறைந்திருக்க முடியாது என்பதற்குக் காரணம் உள்ளது. பகைவர்களும் தமது முகாம்களை ஒருவருக்கெதிரில் ஒருவராக அமைத்துக்கொண்டு வலிந்து தாக்குதலை நடத்தாமல் ஒரு மாதகாலம் கழித்தனர். ஆனாலும், முதல் மழைத்துளிகள் வீழ்ந்தவுடன் ஷேர்ஷா தமது பகைவர்களின்மீது திடீர்த் தாக்குதல் நடத்துவதற்கான திட்டத்தை முற்றுப் பெறச்செய்து, முகலாயப் பாசறையைச் சேற்றில் சிக்கவைத்தார். திட்டம் வெற்றி பெற்றது; சிறந்த மற்றோர் இடத்திற்குத் தமது முகாமை முகலாயர்கள் மாற்றிக்கொண்டிருக்கும்பொழுது, 1540, மே மாதம் 17ஆம் நாள் ஷேர்கான் அவர்களைத் தாக்கி, அவர்கள் தமது கனமான பீரங்கிகளைப் பயன்படுத்தாவண்ணம் வெற்றிகரமாகத் தடுத்தார். அப் பீரங்கிகள் பின்னாலேயே விடப்பட்டன. முகலாயர்களின் படைகளைத் திரட்டுவதற்காக மீர்ஸா ஹைதர் முயன்றும், ஹுமாயூன் வெகு இலகுவாகத் தோற்கடிக்கப்பட்டார்.


ஆக்ராவுக்கு விரைந்தோடினர். (விவரங்களை மூன்றும் அத்தியாயத்தில் பார்க்க.)

இந்துஸ்தானத்தின் அரசராக ஷேர்ஷா பணியாற்றுதல் (1540—1545)

ஹுமாயூனைப் பின்தொடர்தல்

இப் பெரு வெற்றியைப் பெற்றபிறகு ஷேர்ஷா நதியைக் கடந்து கானோஜைக் கைப்பறினர். அங்கிருந்து அவர் பர்மஸீத் கூர் (Barmazid Ghur) என்பவரை ஹுமாயூனைப் பின்தொடர்ந்து நாட்டிலிருந்து விரட்டியடிக்கப் பெரும்படையுடன் அனுப்பிவைத்தார். அவருடன் போரில் ஈடுபடக்கூடாது என்றும் உத்தர விட்டார். குவாலியரைக் கைப்பற்றுவதற்காக மற்ருெரு படை அனுப்பப்பட்டது; அதே சமயத்தில், கங்கைக்குக் கிழக்குப்புறத் தில் உள்ள ஆட்சிப் பகுதியையும் சாம்பாலையும் கைப்பற்றும்படி சில படைகளுக்கு உத்தரவளிக்கப்பட்டது. பர்மஸீத் ஹுமாயூனை ஆக்ராவரை பின்தொடர்ந்தார். ஆக்ராவுக்குள் நுழைந்ததும் அவர் பல முகலாயர்களை வெட்டி வீழ்த்தினர். வெல்லப்பட்ட நாட்டை வலுப்படுத்தியதற்குப் பிறகு ஷேர்ஷா, ஹுமாயூன் ஓட்டம் பிடித்த சில நாட்களுக்குப் பிறகு ஆக்ரா வந்தடைந்தார். பர்மஸீத்தின் கொடூர நடத்தைக்காக ஷேர்கான் அவரைக் கண்டித்து, அவரையும் கவாஸ்கானையும் முன்னாள் பேரரசரைப் பின்தொடருவதற்காக அனுப்பினர். ஹுமாயூன் லாகூரை அடைந்ததும், அவரைப் பின்தொடர்ந்து வந்த ஆப்கானியர்கள் சுல்தான்பூர் லோடி என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தனர் (1540, ஜூலை). மழைக்காலம் ஆரம்பித்துவிட்டதனல் மூன்று மாத காலம்வரை கவாஸ்கான் சுல்தான்பூரில் தங்கவேண்டி நேரிட்டது. அதற்கிடையில் ஷேர்ஷா டெல்லிக்குள் நுழைந்து, நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக நடவடிக்கைகளை எடுத்தார். நாடோடி முகலாயப் பேரரசரின் நடமாட்டங்களைத் தெரிந்து கொள்வதற்காக அவர் அங்கிருந்து பஞ்சாபின் எல்லை நோக்கி முன்னேறினர்.

லாகூரில் ஹுமாயூன் திட்டவட்டமாக மூன்று மாதகால ஓய்வு பெற்ருர்; ஆனாலும், அவருடைய சகோதரர்களை மீண்டும் ஒன்று படுத்துவதிலும், ஆப்கானியர்களுக்கெதிராகப் பலமாக நிற்பதற்கான திட்டத்தை வரைவதிலும் அவர் தேர்ச்சி பெறவில்லை. ஹுமாயூனை பஞ்சாபில் நிரந்தரமாகக் காலடி ஆதாரம்பெற அனுமதித்தால், தாம் இறுதியில் காபூலையும் காந்தாரத்தையும்கூட இழக்க நேரும் என்று கம்ரன் நினைத்தார். ஆகையினல், பஞ்சாபை ஷேர்ஷா


INDIA IN 1545 A.D.
Sher Shah Sur
TRANS-OXIANA
FARGHANA
AFGHANISTAN
KASHMIR
CHINA
TIBET
PERSIA
GUJARAT
KHANDESH
BARAR
GONDWANA
ORISSA
AHMADNAGAR
BIJAPUR
GOLKUNDA
VIJAYANAGAR EMPIRE
EAST BANGAL
BURMA
CEYLON
ANDAMANS
ARABIAN SEA
BAY OF BANGAL
Bukhara
Samarqand
Tashkent
Andijan
Balkh
Qunduz
Herat
Kabul
Ghazni
Kandahar
Peshawar
Attock
Srinagar
Rohtas
Khushab
Bhera
Sialkot
Lahore
Kangara
Multan
Pakpattan
Sarhind
Ambala
Samana
Panipat
Kalat
Bhakkar
Bikaner
Hisar
Delhi
Narnaul
Jhajjhar
Mathura
Koil
Sambhal
Badaun
Agra
Bilgram
Kanauj
Jaisalmer
Nagaur
Jodhpur
Merta
Ajmer
Ranthambhor
Sehwan
Amarkot
Siwana
Thatta
Abu
Udaipur
Chittor
Anhilwara
Cambay
Champaner
Mandu
Ujjain
Bhilsa
Raisina
Gwalior
Kalpi
Chanderi
Kalinjar
Rewa
Chunar
Banaras
Ghazipur
Hajipur
Sasaram
Rohtasgarh
Khalgaon
Rajmahal
Tanda
Gaur
Teliagarhi
Chinsura
Gauhati
Dacca
Sonargaon
Chatgaon
Surat
Sirpur
Gwaligarh
Illichpur
Daultabad
Ahmadnagar
Kalyan
Bidar
Golkunda
Gulbarga
Bijapur
Raichur
Cuttack
Puri
Rajamundry
Vijayanagar
Kanchi
Tanjore
Madura
Boundary of the Empire
Independent Kingdoms.
0 50 100 150 200 250 300
Miles
Copyright DHARMA BHANU

விடம் ஒப்படைத்தல் நலமாகும் என்று அவர் தவருகக் கருதி, அவருடன் பேச்சுவார்த்தைகளையும் தொடர்ந்தார். இதனுல் 1540, அக்டோபர் மாதத்தின் மூன்ரும் வாரத்தில் சுல்தான்பூருக் கருகில் ஆப்கானியர்கள் நதியைக் கடந்தவுடன், ஹுமாயூன் லாகூரைக் கைவிடவேண்டி நேர்ந்தது. முகலாயர்கள் பெருங் குழப்பத்தில் லாகூரை விட்டு ஓடினர். ஜீலம் நதிக்கரை யில் குசாப் (Khusab) என்ற நகரில் ஹுமாயூனுக்கும் கம்ரனுக்கு மிடையில் இனிய தோற்றமற்ற சண்டை நிகழ்ந்தது. கம்ரன் தமது சகோதரரை ஆப்கானிஸ்தானத்தின் வழியாகச் செல்ல அனுமதிக்கவில்லை. ஹுமாயூன் அவ்விடத்திலிருந்து சிந்துவுக்குச் செல்லும் சாலை வழியாகச் சென்ருர். அதே சமயத்தில் கம்ரன் பஞ்சாபைக் கைவிட்டுக் காபூலுக்குப் புறப்பட்டார். ஹுமாயூன் இந்துஸ்தானத்தின் எல்லையைக் கடந்தவுடன், கவாஸ்கான் அவரைப் பின்தொடர்வதைக் கைவிட்டு, ஜீலம் நதியின் மேற்குக் கரையில் தங்கினுர். சர்ஹிண்டில் தமது பாசறையிலிருந்து தமது ஆட்களின் செயல்களை மேற்பார்வையிட்டுக்கொண்டிருந்த ஷேர்ஷா, அதற்குள் லாகூர் வந்தடைந்து, நீண்ட காலம்வரை அங்கே தங்காது சீனுப் நோக்கிச் சென்று குசாப்பை அடைந்தார். பிறகு, கவாஸ்கானின்கீழ் ஒரு படையும் குதுப்கானின்கீழ் மற்ருெரு படையுமாகப் படையின் இரு பகுதிகள் முகலாயர்களைப் பின்தொடர உத்தரவிடப்பட்டன; அவர்களைப் போரில் ஈடுபடுத்தாது இராச்சி யத்தின் எல்லைகளுக்கப்பால் விரட்டியடிக்கும்படி அவர்களுக்கு உத்தரவிடப்பட்டது. உச்சுக்கு (Uch) மேற்கில் பஞ்சானுத் நதி வரை கவாஸ்கான் பின்துரத்திச் சென்று, அங்கிருந்து அவர் திரும்பி குசாப்பில் ஷேர்ஷாவுடன் மீண்டும் சேர்ந்துகொண்டார்.

கக்கார் நாட்டைக் கைப்பற்றுதல் (Conquest of the Gakkhar Country)

சில மாதம்வரை ஷேர்ஷா குசாப்பில் முகாமிட்டு, சீனுப்புக்கும் சிந்துவுக்குமிடையிலிருந்த நாட்டில் வசித்துவந்த சிலரையும், இஸ்மாயில்கான் (Ismail Khan), ஃபதேகான் (Fateh Khan), காஸி கான் (Ghazi Khan) போன்ற பலோச் (Baloch) குறுநில மன்னர்களை யும் அடிபணியவைத்தார். பிறகு, கக்கார் நாட்டைக் கீழ்ப்படுத்து வதற்காக அவர் படையெடுத்தார். கக்கார் நாடு ஒரு மலைப் பிரதேசமாகும்; ஜீலம் நதி, சிந்து நதி ஆகியவற்றின் மேற்பாகங் களுக்கிடையிலுள்ளது. அது போர்த்துறை முக்கியத்துவம் வாய்ந்த ஓரிடமாக அமைந்திருந்ததனுல், டெல்லியின் அரசரிடத்தில் அது இருப்பது மிக அத்தியாவசியமானதாகும். மலைப்பிரதேசத்தை ஷேர்ஷா சுற்றிவந்து கக்கார் தலைவர்களை வலிந்து தாக்கினுர், அவர்களது இராச்சியத்தை அவர் சூறையாடினுர்; ஆனுலும்,

அதை அறவே கீழ்ப்படுத்த முடியவில்லை. சில தலைவர்கள், குறிப்பாக ராய் சாரங் கக்கார் (Rai Sarang Gakkhar) என்பவர் ஷேர்ஷாவின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்; நீடித்து அவரிடத்தில் பகைமை பாராட்டினர். ஆகையினால், ஷேர்கான் தமது வட எல்லையைப் பாதுகாப்பதற்கும் கக்கார்களை அடக்குவதற்கும் அங்கே ஓர் அரணைக் கட்ட முடிவு செய்தார். ஜீலம் நகருக்குப் பத்து மைல் வடக்கில் குன்றுகளுக்கிடையில் போர்த்துறை முக்கியத்துவம்வாய்ந்த ஓரிடத்தை அவர் தேர்ந்தெடுத்து, அங்கே ஒரு மாபெரும் அரணைக் கட்டி, அதற்கு பீஹாரில் தமது சிறப்புமிக்க அரணையொத்து 'ரோட்டாஸ்' என்ற பெயர் வழங்கினார். அனுபவமுதிர்ந்த ஆப்கானியப் படைவீரர்கள் ஐம்பதினாயிரம் பேரைத் தமது திறமைமிக்க தளபதிகளான ஹைபத்கான் நியாஸி (Haibat Khan Niyazi), கவாஸ்கான் ஆகியவர்களின் தலைமையின் கீழ் அவர் நிறுவினார். காச்சி சக் (Kachi Chakk) என்பவரை ஆதரித்து மீர்ஸா ஹைதரைக் காஷ்மீரத்திலிருந்து விலக்குவதற்கு அவர் முயன்றார். இச் சமயத்தில் வங்காளத்தின் கவர்னர் கிளர்ந்தெழுந்ததாக அவருக்குத் தகவல் எட்டியது. ஆகையினால், கக்கார்களை அடிபணியவைக்கும் செயலை அவருடைய ஆட்பேர்களின் பொறுப்பில் விட்டுவிட்டு, கிளர்ந்தெழுந்த கிஸர்கானைத் தண்டிப்பதற்காக வங்காளத்துக்கு விரைந்தார் (1541, மார்ச்சு மாதம்).

வங்காளத்தில் புதிய நிர்வாகம்

ஓர் ஆண்டுக்கு மேற்பட்டு ஷேர்ஷா வெளியில் இருந்ததனால், வங்காளத்து கவர்னரான கிஸர்கான் தமது சுதந்திரத்துக்கான கனவுகளைக் கண்டுகொண்டிருந்தார். வங்காளத்து முன்னாள் அரச குடும்பத்தை ஆதரிப்பவர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவர் கௌரின் மறைந்துபோன சுல்தான் மகமூதின் மகளை மணம் புரிந்துகொண்டார்; ஒரு சுதந்திர அரசரைப் போலவே நடந்துகொண்டார். இச் செய்திகள் ஷேர்ஷாவைத் துன்புறுத்தின. கிஸர்கானைத் தண்டிப்பதற்காக அவர் கௌருக்கு விரைந்தார். அவர் அக் கவர்னரைப் பதவியிலிருந்து விலக்கிச் சிறைப்படுத்தினார். வருங்காலத்தில் கிளர்ச்சி எதுவும் எழாவண்ணம் இராணுவ மாகாண ஆட்சியை ஒழிக்க அவர் முடிவு செய்துவிட்டதனால், வங்காளத்து நிர்வாகத்தை அவர் மாற்றி அமைத்தார். அவர் அம் மாகாணத்தைப் பல சர்க்கார்களாகப் (Sarkars) பிரித்து, ஒவ்வொரு சர்க்காரையும் 'ஷிக்தார்' என அழைக்கப்பட்ட அதிகாரியின் பொறுப்பில் அமைத்தார்; ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்ட அவ்வதிகாரியிடம் ஒரு சிறு படையையும் அமைத்

தார். அவ்வதிகாரிகளெல்லாம் அரசனாலேயே நியமிக்கப்பட்டனர்; அவருக்கே அவர்கள் பொறுப்பாளியாவர். அவ் அதிகாரிகளின் பணியை மேற்பார்வையிடவும், அவர்களுக்கிடையில் ஏற்படும் சச்சரவுகளைத் தவிர்க்கவும் காஸி ஃபஸீலத் (Qazi Fazilat) என வழங்கப்பட்ட சிவிலியன் அதிகாரியை அவர் மாகாணத் தலைவராக நியமித்தார். அவர்கீழ் ஓர் ஆற்றல்மிக்க படை எதுவும் அவர் பெற்றிருக்கவில்லை. எல்லா மாகாணங்களும் சரிவர நிர்வகிக்கப் படுகின்றனவா என்பதையும், அரசருக்கு வரவேண்டிய வருமானம் சரிவர மத்தியக் கருவூலத்தில் செலுத்தப்படுகின்றனவா என்பதையும், மாகாண அதிகாரிகள் சதிகளில் ஈடுபட்டு அரசருக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதற்காகத் திட்டமிடுகிறார்களா என்பதையும் கவனிப்பது அவருடைய பொறுப்பாகும். இதுபோன்ற முறைகள் 'மாகாண நிர்வாகத்தின் இராணுவத் தன்மையை முற்றிலும் மாற்றி, அதற்குப் பதிலாக முற்றிலும் புதிதான ஒரு நிர்வாக இயந்திரத்தை நிறுவின. அவ்வியந்திரத்தின் தத்துவம் புதிதாகவே இருந்தது; மிகச் சிறப்பாகவும் அது பணியாற்றியது.'

மாளவத்தைக் கைப்பற்றுதல், 1542

வங்காளத்திலிருந்து ஷேர்ஷா ஆக்ராவுக்குத் திரும்பினார். 1542-ல் அவர் மாளவத்தின்மீது படையெடுத்தார். அது தம்மிடத்தில் இருப்பது அவரது இராச்சியத்தின் பாதுகாப்புக்கும் ஒற்றுமைக்கும் இன்றியமையாததாகும். 1537-ல் மல்லுகான் மாண்டு, உஜ்ஜெய்ன் (Ujjain), சாரங்கபூர் ஆகியவற்றைக் கைப்பற்றி, காதர் ஷா என்ற பட்டப்பெயரைப் புனைந்துகொண்டு, தம்மைச் சுதந்திர அரசராக ஆக்கிக்கொண்டார். ஷேர்ஷாவுடன் சரிசமமான நிலை உரிமையைக் கொண்டாடியதனால் அவர் ஆப்கானியருக்குக் கோபமூட்டினார். ஷேர்ஷாவின் மகனான குதுப் கானுக்கு முகலாயர்களுக்கெதிராக உதவியளிப்பதாக வாக்குறுதி தந்ததை அவர் காப்பாற்றிக்கொள்ளவில்லை. குதுப்கான், அஸ்கரி, ஹிண்டால் ஆகியவர்களால் சூழப்பட்டு 1540-ல் கொல்லப்பட்டார். இக் காரணங்களுக்காக மாளவத்தின்மீது படையெடுப்பு நடத்துவது அவசியம் என்று ஷேர்ஷா கருதினார். நெடுங்காலமாக அவரது படையால் முற்றுகையிடப்பட்டும் குவாலியர் அடிபணியவில்லை குவாலியரை அடைந்ததும் அவ் அரணின் கவர்னர் அவருக்குக் கீழ்ப்படிந்தார். பிறகு சாரங்கபூருக்கு முன்னேறினார். மாபெரும் படையெடுப்பாளரைக் கண்டு காதர்ஷா பயந்து, உஜ்ஜெய்னை விட்டு விலகி, ஷேர்ஷாவுக்காக சாரங்கபூரில் காத்துக்கொண்டிருந்தார். ஆப்கானிய மன்னர் அவரை மிக்க மரியாதையுடன் வரவேற்றார். இருவரும் மாளவத்தின் அப்போதைய தலைநகரான

உஜ்ஜெய்னுக்குள் நுழைந்தனர். ஷேர்ஷா அவ்விடத்தைக் கைப் பற்றிக் காதர்ஷாவை வங்காளத்திலுள்ள லக்னௌதியின் (Lakhanuti) கவர்னராக மாற்றினார். (மற்றோர் ஆசிரியரின்படி அது கல்பி யாகும்.) ஷேர்ஷாவின் உட்கருத்துகளுக்குக் காதர் கான் பயந்து கொண்டு ஓர் இரவில் தமது குடும்பத்துடன் குஜராத்தைச் சார்ந்த மூன்றும் மகமூதினிடம் (Mahmud III of Gujarat) அடைக்கலம் புகுந்தார். மாளவத்தின் பெரும்பான்மையான பகுதி ஷேர்ஷா வின் இராச்சியங்களுடன் இணைக்கப்பட்டது. ஷுஜாத் கானின் (Shujaat Khan) பொறுப்பில் வைக்கப்பட்டது, சற்றுக் காலத்துக்குப் பிறகு காதர் ஷா, ஷுஜாத் கானைத் தாக்கினார்; ஆனால், இறுதியில் தோற்கடிக்கப்பட்டார்.

ஆக்ராவிலிருந்து உஜ்ஜெய்னுக்கு வருங்கால், ஷேர்ஷா ரான்தம்போர் (Ranthambhor) வழியாகச் சென்று, அவ்வரணைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அதன் தளபதியை வற்புறுத்திப் பெற்றார். அவர் ஆக்ராவில் ஓர் ஆண்டுவரை தங்கியிருந்தார். அக் காலத்தில் தமது இராச்சியத்தின் நிர்வாகத்தை ஒழுங்கு படுத்துவதில் அவர் ஈடுபட்டிருந்தார்.

ரெய்சின் படையெடுப்பு, 1543

மத்திய இந்தியாவிலுள்ள ரெய்சின் சிற்றரச நாடு ஹுமாயூ னின் ஆட்சிக் காலத்தின் பிந்திய நாட்களில் முக்கியத்துவம் பெற்றது. அதன் அரசரான புரான்மல் என்பவர் ராய் சில்ஹாடி என்ற சௌஹானிய இராஜபுத்திரருடைய மகனாவார். புரான் மல் (Puran Mal) சந்தேரியைக் கைப்பற்றி, பெருவாரியான நிலத்தைப் பெற்றிருந்த பல முஸ்லிம் குடும்பங்களை அடிபணியும்படி செய்தார். புரான் மல் 1542-ல் ஷேர்ஷாவை நேரில் கண்டார்; அவரிட மிருந்து பல விலையுயர்ந்த பரிசுகளைப் பெற்றார். ஆனாலும், ஆப் கானிய மன்னர் செழுமைமிக்க ரெய்சின் சிற்றரச நாட்டைப் பெற ஆவல் கொண்டிருந்தார். மேலும், பழமைவாய்ந்த பல பிரபுத்துவ முஸ்லீம் குடும்பங்களை அடிபணியவைக்கும் கொள்கையைப் புரான் மல் கையாளுகிறார் என்ற செய்திகள் ஷேர்ஷாவுக்கு எட்டின. இக் குடும்பங்களில் சில வறுமைக்குள்ளாக்கப்பட்டன; அவர் களுடைய பெண்கள் அடிமைகளாக்கப்பட்டு நடனத்தைத் தொழி லாக மேற்கொள்ளும்படி வற்புறுத்தப்பட்டனர். ஆகையால், அவர் புரான் மல்லைத் தண்டிக்க முடிவு செய்தார். அவருடைய நடத்தை ஷேர்ஷாவின் கருத்தில் இஸ்லாமுக்கு எதிராகக் குற்றம் புரிந்த தாகும். 1543-ல் அவர் ஆக்ராவைவிட்டு மாண்டுவுக்குச் சென்றார்; அங்கிருந்து ரெய்சினுக்குச் சென்றார், ரெய்சின்

முற்றுகையிடப்பட்டது. புரான் மல் போருக்குத் தயாராயிருந்தார் போலும். முற்றுகை நீண்ட காலம்வரை நடந்தது. முக்கியத் தேவைப் பொருள்களுக்குத் தடையிட்டுப் படையைப் பட்டினிக்குள்ளாக்குவதைத் தவிர ஷேர்ஷாவுக்கு வேறு எந்த வழியும் புலனுகவில்லை. அப்பொழுதும் வீரமிக்க இராசபுத்திரர்கள் சரணடையவில்லை. ஆனால், இராசபுத்திரத் தலைவர், அவருடைய உடன் தோழர்கள் அனைவரின் உயிருக்கும் சொத்துக்கும் தீங்கிழைக்கக் கூடாது என்று குர்ரானின்மீது ஷேர்ஷா புனித சத்தியம் செய்த பிறகு, புரான் மல் சரணடைந்தார். ஷேர்ஷாவுக்கு அருகிலிருந்த முகாம் ஒன்றில் அவர்கள் வைக்கப்பட்டனர். ஷேர்ஷா தமது வாக்கைக் காப்பாற்ற விரும்பினுர் என்று கூறப்படுகிறது; ஆனால், புரான் மல்லினுல் துன்புறுத்தப்பட்ட சந்தேரி முஸ்லிம் விதவைகளின் வேண்டுகோளின்படி ஷேர்ஷா மனத்தை மாற்றிக் கொண்டார். இருந்தபோதிலும், குர்ரானின்மேல் எடுத்த ஆணையிலிருந்து எவ்விதத்தில் தம்மை விடுவித்துக்கொள்வது என்று அவருக்குப் புரியவில்லை. எனினும், மதவெறிபிடித்த காசிகள் அவருக்கு உதவ முன்வந்தனர். எடுக்கப்படக்கூடாத ஒரு சத்தியம் ஒருவரைக் கட்டுப்படுத்தாது என்று அவர்கள் கூறினர். இறைமையியலின் அடிப்படையில் அமைந்த இவ்வறிக்கை ஷேர்ஷாவின் உள்ளார்ந்த விருப்பத்தையே யொத்திருந்தது. புரான் மல்லைத் தாக்க அவர் முடிவு செய்துவிட்டார். அவருடைய யானைகள் தயாராக நிறுத்திவைக்கப்பட்டன. இராசபுத்திர முகாமைச் சுற்றி இரவில் ஆப்கானியப் படைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. பொழுது விடிந்ததும், தம்மீது தாக்குதல் நடக்கப்போகிறது என்பதைக் கண்டுகொண்டார். அதன்மேல், அவர் தமது பெண்களையெல்லாம் தம் கையினுலேயே கொன்று, அவரது ஆட்கள் தங்களது குடும்பங்களின் பாதுகாப்புக்காகக் கவலைப்படாவண்ணம் அவர்களைக் கொன்றுவிட்டு, எவ்வித அச்சமுமின்றி ஆப்கானியர்களுடன் போரிடும்படி அவர்களுக்கு ஆணையிட்டார். இந்தப் பயங்கரச் செயலில் அவர்கள் ஈடுபட்டிருந்த பொழுது ஆப்கானியர்கள் அவர்கள்மீது பாய்ந்தனர். புரான் மல்லும் அவரது வீரமிக்க படையினரும் மிக்க ஆற்றலுடன் போரிட்டனர். முஸ்லிம் வரலாற்றுசிரியரின் கூற்றின்படி, 'அவர்கள் பன்றிகளை முடுக்கினுல் பாய்வதுபோலச்' சண்டையிட்டனர். ஆனால், அவர்கள் எண்ணிக்கை குறைந்தவர்களாக இருந்தனர். ஒவ்வோர் ஆணும் கொல்லப்பட்டான். எஞ்சியிருந்த சில இராசபுத்திரப் பெண்களும் குழந்தைகளும் அடிமைகளாக்கப்பட்டனர். புரான் மல்லுடன் ஷேர் ஷா மிக வஞ்சகமாக நடந்துகொண்டது அவருடைய மனத்தில் ஓர் ஆழ்ந்த கறையாக இருந்தது.

ஒன்றில் சிக்கிக்கொண்டு என்ன செய்வதென்று அறியாமல் விழித்துக்கொண்டிருந்தார். தாம் அழைத்த நாடோடி மன்னரைப் பிடித்துக் கொடுக்க இராசபுத்திர வீர தருமமும் விருந்தோம்பும் பண்பும் அவருக்குத் தடையிட்டன. அதற்கு மாருக, வட இந்தியா முற்றிலும் இறைமைக்கான தமது உறுதியான உரிமையை நிலைநாட்ட அதிகாரத்தையும் வலிமையையும் அதிகப்படுத்திக்கொண்டிருந்த ஷேர்ஷா, இராசபுத்திரத் தலைவர்கள் தமக்கு அடிபணிந்து கப்பம் செலுத்தவேண்டும் என்று மிக்க ஆவல்கொண்டிருந்தார். அதுவுமன்றி, மால்தேவருடைய இராசபுத்திரப் பகைவர்கள் மார்வாரின்மீது படையெடுக்குமாறு ஷேர்ஷாவைத் தூண்டிக்கொண்டிருந்தனர். இந்த இக்கட்டான சூழ்நிலைகளில் ஷேர்ஷாவுக்கும் எரிச்சல் மூட்டாவண்ணம் நடுநிலைமையை எய்தினர். ஜோத்புரிக்கு அறுபது மைல் இப்பால் இருந்த பலோடிக்கு (Phalodi) ஹுமாயூன் வந்து சேர்ந்தபொழுது, மால்தேவர் அவருக்குச் சில பழங்களைத் தந்தார்; ஆனால், உறுதியான இராணுவ உதவி எதுவும் கொடுப்பதாக வாக்குறுதியளிக்கவில்லை. மால்தேவரின் உட்கருத்துகளையும், தம்மிடம் அவரது மனப்போக்கினையும் கண்டுவர ஹுமாயூன் தமது நம்பிக்கைக்குட்பட்ட இரண்டு முகவர்களை அனுப்பினர். ஜோத்புரியிலிருக்கும்பொழுது அம் முகவர்களில் ஒருவர். ஷம்சுத்தீன் அட்காகான் (Shams-ud-din Atka Khan) ராதர் தலைநகரில் ஷேர்ஷாவின் தூதர் ஒருவரைக் கண்டு, ராதர் மன்னர் ஏதோ வஞ்சம் புரிவதற்காகத் திட்டமிட்டிருக்கிருர் என்று அவர்மீது சந்தேகம் கொண்டார். இதை அந்த முகவர்கள் ஊர்ஜிதம் செய்தனர். ஆகையால், ஹுமாயூன் 1542, ஆகஸ்டு மாதத்தில் சிந்துவுக்குப் பின்வாங்க நேர்ந்தது. வழியிலெல்லாம் ராதர் வீரர்கள் அவரைத் துன்புறுத்திக்கொண்டிருந்தனர்.

மால்தேவரின் சந்தேகங்கொள்ளுதற்குரிய நடத்தை ஷேர்ஷாவுக்குத் திருப்தியளிக்கவில்லை; முழு நட்பையும் கீழ்ப்படிதலையும் அவர் விரும்பினர். எல்லாவற்றுக்கும் மேலாக, மால்தேவர் முன்னுள் மன்னரான ஹுமாயூனைக் கைப்பற்றித் தம்மிடத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் விரும்பினர். இரண்டாவதாக, மால்தேவரைப் போன்ற ஓர் ஆற்றல்மிக்க அரசர் இருப்பதே ஷேர்ஷாவுக்கு ஒரு நிரந்தரமான குற்றமாகத் தோன்றியது. மால்தேவருடைய இராச்சியம் முன்னுளில் டெல்லி சுல்தானியத்தின் பகுதிகளாக இருந்த நாகோர் (Nagaur), ஆஜ்மீர் ஆகியவற்றையுமன்றி டெல்லியிலிருந்து 30 மைல் தூரத்திலிருந்த ஜஜ்ஜாரையும் உட்கொண்டிருந்தது. மார்வர் இராச்சியம் தமது தற்காப்புக்குத் தீங்கு விளைவிக்கும்போலிருந்தது. ஆகையால், ஷேர்ஷாவுக்கும் மால்தேவ

ருக்குமிடையில் போர்மூள்வது தவிர்க்க முடியாததாக இருந்தது. மார்வாரை நோக்கி ஹுமாயூன் முன்னேறிக்கொண்டிருக்கும் சமயத்தில் மால்தேவருடன் தமது பகையைத் தீர்த்துக்கொள்வதற்குத் தயாராக இருந்திராத ஷேர்ஷா, மால்தேவரை அச்சுறுத்தும் கொள்கையைப் பின்பற்றினர். ஆகையால், தமது படைகளைத் திரட்டி மார்வாரின் எல்லையில் நிறுத்திவைக்க அவர் 1542 ஆகஸ்டில் உத்தரவிட்டார். ஷேர்ஷாவின் நடமாட்டத்தினுல் தான் மார்வாரிலிருந்து அனுப்பிவைக்கும்படி மால்தேவர் கட்டாயப் படுத்தப்பட்டார். எனினும், 1543ஆம் ஆண்டின் இறுதியில் ஷேர்ஷா ரெய்சின் படையெடுப்பிலிருந்து விடுதலை பெற்றிருந்த பொழுது, மார்வாரைக் கைப்பற்றி 80,000 குதிரைப் படைக்குத் தலைமை தாங்கி மால்தேவருக்கெதிராக முன்னேற அவர் முடிவு செய்தார். போர்க்களத்திற்கு அவர் அதுவரை கொண்டுசென்ற படைகளிலெல்லாம் அப் படைதான் மிகப் பெரிதானதும் சிறப்பு வாய்ந்ததுமாகும். அவர் ஆக்ராவிலிருந்து புறப்பட்டு தித்வானுவுக்குச் (Didwana) சென்று, அங்கிருந்து ஆஜ்மீருக்கு அருகில் இருந்த மால்தேவர் அவரைத் தடுப்பதற்காகத் திரும்புவதற்குமுன், மால்தேவரின் தலைநகரை அடைய ஜோத்புரிக்குச் சென்றார். மால்தேவரின் ஆட்சிப் பகுதிக்குள் அவர் நுழைந்ததும், முகாமைச் சுற்றி ஒவ்வொரு மட்டத்திலும் மணல் நிரப்பிய பைகளைக் குவிக்கும் முன் எச்சரிக்கைக் கொள்கையை அவர் மேற்கொண்டார். ஜோத்புரிக்கு 70 மைல் வடகிழக்கிலும், ஆஜ்மீருக்கு 42 மைல் மேற்கிலும் இருந்த மெர்டாவை அவர் அடைந்தபொழுது, மால்தேவர் பயந்துவிட்டார்; 40,000 குதிரைப் படைக்கு அவர் தலைமை தாங்கித் தமது தலைநகரைக் காக்கவும், திறந்தவெளியில் நடக்கும் போரில் பகைவரைச் சந்திக்கவும் விரைந்தார்.* ஜெயதரனுக்கு (Jaitaran) அருகிலுள்ள சுமெல் என்னும் கிராமத்தில் ஒரு மாத காலமாக இரு படையினரும் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டிருந்தனர். ஷேர்ஷா தமது படைகளுக்குத் தேவையான பொருள்களையும், குதிரைகளுக்கு வேண்டிய கொள்ளையும் மிகக் கஷ்டமாகப் பெறவேண்டியிருந்ததால், ஷேர்ஷா பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. முந்து செயல் துணிவு மால்தேவரிடத்தில்மட்டுமே இருந்ததால், ஷேர்ஷா என்ன செய்வதென்றறியாமல் விழித்துக்கொண்டிருந்தார். ஆகையால், இந்த நெருக்கடியான நிலையிலிருந்த தம்மை விடுவித்துக்கொள்ள ஷேர்ஷா ஒரு சூழ்ச்சியை யோசித்தார். மால்தேவரின் பிரபுக்கள் ராதர் அரசரைச் சிறைப்பிடித்து ஷேர்

* மேற்குறிப்பிட்ட தகவல் சிதமாவைச் சார்ந்த மகராஜ்குமார் டாக்டர் ரகுபீர் சிங் (Maharajkumar Dr. Raghubir Sing of Sitamau) என்பவரால் அன்புடன் அளிக்கப்பட்டதாகும்.

கானின் கையில் ஒப்படைப்பதாக உறுதியளித்துக் கடிதங்கள் எழுதியதாக ஷேர்கான் தாமே அக்கடிதங்களை எழுதி, அவற்றைக் கரித்தாவைகளில் (Kharita—பட்டு நூலால் செய்யப்பட்ட பைகள்) வைத்து மூடி, எதிர்பாரா முறையில் மால்தேவரின் முகாமுக்கருகில் அவை விழந்துவிட்டனபோல் தெரியும்படி போட்டார். மால்தேவரின் வக்கீல் (vakil) அக் கரித்தாவை எடுத்து அக் கடிதங்களைத் தமது தலைவரிடம் கொடுத்தார். வருத்ததில் மூழ்கிய மால்தேவர், தமது அதிகாரிகள் வஞ்சகம் புரிவார்கள் என்று சந்தேகங்கொண்டு, நடக்கவிருக்கும் போரை உடனே கைவிட முடிவு செய்தார். தமது தலைவர் போர் செய்யப்போவதில்லை என்று உறுதிகொண்டிருக்கிருர் என்றும், தம்மையெல்லாம் சந்தேகிக்கிருர் என்றும் இராசபுத்திரத் தலைவர்கள் தெரிந்துகொண்டதும், ஜெயட்டா (Jayata), கும்பா (Kumpa) மற்றும் சிலர் ஆகிய அனைவரும் முக்கிய ராதர் படையிலிருந்து பிரிந்து 12,000 ஆட்களுடன் ஆப்கானியர்களைத் தாக்கினர். இவ்விதம் செய்து வஞ்சகக் குற்றத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள அவர்கள் முயன்றனர். அவர்கள் அனைத்தையும் வாரிச் சென்று கிட்டத்தட்ட ஷேர்ஷாவின் முகாமின் மையத்தையே அடைந்துவிட்டனர்; ஆனாலும், எண்ணிக்கையில் அதிகமாக இருந்த பகைவர்களால் முறியடிக்கப்பட்டனர்; ஒவ்வோர் ஆளும் வெட்டி வீழ்த்தப்பட்டான். மால்தேவர் இப்பொழுதுதான் உண்மையைப்புரிந்து கொண்டார். ஆனாலும், காலம் தவறிவிட்டது. அவரது படை கலைந்து விட்டது. இருந்தபோதிலும், இராசபுத்திரர்கள் கையில் பெருஞ் சேதமடைந்த ஷேர்ஷாவின் மனத்தில் ராதர்களுடைய வீரம் ஒரு பிடி பாஜ்ராவுக்காகத் (bajra) (தினைவகை-millet) தமது இந்துஸ்தானத்துப் பேரரசையே அநேகமாக இழந்திருக்கக்கூடும் என்று சொல்லும் அளவுக்கு ஆழமாகப் பதிந்திருந்தது. மால்தேவர் ஜோத்புரிக்கும், அங்கிருந்து குஜராத்தின் எல்லையிலிருந்த சிவானவுக்கும் (Siwana) பின்வாங்கியதும், ஆப்கானிய அரசர் மால்தேவரின் ஆஜ்மீர்தொட்டு ஆபு மலைவரை (Mount Abu) பரவியிருந்த ஆட்சிப்பகுதியைக் கைப்பற்றினர். கவாஸ்கானையும் இஸர்கான் நியாஸியையும் மார்வாரில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக விட்டுவிட்டு, மீவாரின் தலைநகரான சித்தூருக்கு ஷேர்ஷா முன்னேறினர்.

ஆனல், மார்வார் நீண்ட காலமாக ஷேர்ஷாவின் கையில் இருக்கவில்லை. அவர் இறந்த பிறகு இரண்டு மாதங்களுக்குள் மால்தேவர் சிவானவிலிருந்து திரும்பி, ஜோத்புரியிலிருந்த ஆப்கானிய் கவர்னரை விரட்டியடித்து, தமது இழந்த ஆட்சிப் பகுதியை மீண்டும் கைப்பற்றினர் (1545, ஜூலை).

மீவாரைப் பெறுவதில் எவ்விதமான இடையூறும் இல்லை. ஒரு காலத்தில் இராசபுதனத்தில் தலையாய இடத்தைப் பெற்றிருந்த அச் சிசோதியநாடு, ராணு சங்காவின் மறைவுக்குப்பின் தனது முக்கியத்தை இழந்துவிட்டது. இச் சமயத்தில் அதனுடைய வரலாற்றிலேயே மிக நெருக்கடியான கட்டத்தைக் கடந்து கொண்டிருந்தது. திடீரென்று பதவிக்கு வந்தவரான பன்பீர் என்பவர் விக்ரமஜித்தைக் கொன்று, குழந்தையாக இருந்த உதய சிங்கைக் கொல்லத் திட்டமிட்டுக்கொண்டிருந்தார். உதயசிங் வருங்காலத்திய பிரதாப்பின் (Pratap) தந்தையாவார். 1542-ல் உதயசிங் என்ற இளம் அரசர் அரியணையேறியதிலிருந்து தோன்றிக்கொண்டிருந்த உள்நாட்டுப் பிணக்குகளிலிருந்து மேவார் மீட்சிபெறவில்லை. அரசவையாளர்கள் எதிர்க்க முடியாது உதய சிங்கின் சார்பாக அரணின் சாவியை ஷேர்ஷாவிடம் ஒப்படைத்தனர். ஷேர்ஷா கவாஸ்கானின் சகோதரரான ஷம்ஸ்கான் என்பவரின் பொறுப்பில் சித்தூரை விட்டு ஜஹாஜ்பூரைக் கைப்பற்றினர். அடுத்து, அவர் ரான்தம்போரைக் கைப்பற்றி, அவருடைய மகனை ஆதில்கான் என்பவரை அதன் கவர்னராக நியமித்தார் இவ்விதமாக ஜெய்சால்மர், பிகானிர் தவிர இராஜபுதனத்தின் மற்ற எல்லாப் பகுதிகளும் ஷேர்ஷாவின் இறைமையின்கீழ் வந்தன. ஷேர்ஷா இராசபுத்திரத் தலைவர்களிடமே அவர்களுடைய இராச்சியங்கள் இருக்கும்படி செய்தார்; அவர்களை முற்றிலும் அடக்கி விடவில்லை. இராசபுத்திரர்களிடம் அவர் கொண்டிருந்த கொள்கை பற்றி டாக்டர் கானுங்கோ மிகச் சிறப்பாகப் பின்வருமாறு வருணித்துள்ளார்: ‘குறுநில மன்னர்களை வேரோடு களைந்தெறியவோ அல்லது அவர்களை முற்றிலும் அடிபணியவைக்கவோ ஷேர்ஷா இந்துஸ்தானத்தின் மற்றப் பகுதிகளில் செய்ததுபோல இராசபுதனத்தில் செய்யவில்லை. அவ்விதம் செய்தல் பயனற்றது மன்றிப் பேராபத்துமானது என்பதை அவர் உணர்ந்தார். பேரரசுக்கெதிராகப் பொதுக் கிளர்ச்சி எதுவும் செய்யாவண்ணம் அவர்களை அரசியலிலும் நிலவியல் சார்ந்த நிலையிலும் ஒருவரோடு ஒருவர் சேராது தனித்திருக்கும்படி செய்வதைத்தவிர அவர்களை முற்றிலும் அடிபணியவைக்க அவர் விரும்பவில்லை. சுருங்கச் சொல்லின், அது வடமேற்கு எல்லைப் பகுதியில் இருந்த குலமரபுக் குழுவினரின் இராச்சியப் பகுதிகளை பிரிட்டிஷார்கள் (British)கைப் பற்றியது போலிருந்தது. அவர்கள் அவ்விதம் செய்தது இந்தியப் பேரரசின் தற்காப்புக்கேயன்றி லாபம் பெறுவதற்கன்று.’ ஆகையால், போர்த்துறை முக்கியத்துவம் பெற்ற இடங்களில் படைகளை நிறுத்திவைத்து, இராசபுதனத்தையும் பேரரசின் மற்றப் பகுதிகளையும் இணைக்கும் போக்குவரத்து வசதிகளை மிகக் கடுமையாகக் கட்டுப்படுத்தி யிருந்தார். ஆஜ்மீர், ஜோத்புரி, ஆபூ மலை,

சித்தூர் ஆகிய அரண்களையெல்லாம் அவர் வலுப்படுத்தினர்; அவைகளெல்லாம் ஆப்கானியப் படையின் கைவசப்பட்டிருந்தன.

பண்டேல்கண்டைக் கைப்பற்றுதல்; ஷேர்ஷாவின் மரணம், 1545, மே மாதம்

இராசபுதனத்தில் வெற்றிகரமாக நடத்திய படையெடுப்பு முற்றுப் பெற்றதும் ஷேர்ஷா கலஞ்சாரின்மீது படையெடுத்தார். ரீவாவைச் சார்ந்த ராஜா பீர்பான் பகேலா (Raja Birbhan Baghela of Rewa) அரசவைக்கு வரும்படி ஆணையிடப்பட்டார்; ஆனால் அவர் கலஞ்சாரைச் சார்ந்த ராஜாகிராத்சிங்கிடம் அடைக்கலம் புகுந்தார். நாடோடியைச் சரணடைவிக்குமாறு ஷேர்ஷா கோரியதற்கு கிராத்சிங் மறுத்துவிட்டார். ஆகையால், ஆப்கானிய அரசர் அவர் மீது கோபமுற்றார். அவரைத் தண்டிப்பதற்காக ஷேர்ஷா கலஞ்சர் (Kalinjar) நோக்கி முன்னேறி அவ்வரணை முற்றுகையிட்டார் (1544, நவம்பர்). எல்லாவித முயற்சிகளும் செய்து வலிமையான அவ்வரணைக் கைப்பற்ற முடியவில்லை. முற்றுகை சுமார் ஓர் ஆண்டு வரை நீடித்தது. இறுதியில், அரணின் சுவர்களைச் சிதறடிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை ஷேர்ஷா உணர்ந்தார். ஆகையினால், சுரங்கங்களைத் தோண்டிப் பீரங்கித் தொகுதி ஒன்றைஅமைக்க ஓர் உயர் கோபுரத்தைக் கட்டுமாறு உத்தரவிடப்பட்டது. அதே சமயத்தில், தாக்குபவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக மூடப்பட்ட முடக்குகளும் (சபத்-Sabat) அமைக்கப்பட்டன. இவைகளெல்லாம் தயாராக இருந்தன. கோபுரம் மிக உயரமாகக் கட்டப்பட்டிருந்ததனால், அதன் உச்சியிலிருந்து அரணின் உட்புறத்தை வெகு எளிதாகப் பார்க்க முடிந்தது. 1545 மே மாதம் 25ஆம் நாள் அரணைத் தாக்க ஷேர்ஷா உத்தரவிட்டார்; தாக்குவதற்கு அவரே முந்தினர். அவர் கோபுரத்தின் மேல் ஏறி ராக்கெட்டுகளை அரணுக்குள் போடுவதற்குக் கொண்டுவருமாறு தமது ஆட்களுக்கு உத்தரவிட்டார். நகரின் வாயிலுக்கெதிரில் ஒரு ராக்கெட் வெடிக்கப்பட்டதும், அது எதிர்த்துத் தாக்கி ஷேர்ஷா நின்றுகொண்டிருந்த இடத்துக்கருகில் கிடந்த வெடிமருந்து குவியலில் விழுந்தது. மிகப் பெரிய வெடிப்பொலி ஒன்று ஏற்பட்டது; ஷேர்ஷா மிகக் கடுமையாகக் காயமுற்றார். அவரது முகாமுக்கு அவரை உடனே எடுத்துச் சென்றனர்; ஆனாலும், தாக்குதலை நீடித்து நடத்துமாறு அவர் தமது ஆட்களுக்கு உத்தரவிட்டார். தாக்குதல் வெற்றிபெற்றது; கலஞ்சார் அரண் சூரிய மறைவின்போது சிதறடிக்கப்பட்டுக் கைப்பற்றப்பட்டது. அரண் கைப்பற்றப்பட்டதென்றும், படை படுகொலை

செய்யப்பட்டது என்றும் ஷெர்ஷாவுக்குத் தகவல் எட்டியதும் 'அவருடைய முகத்தில் மகிழ்ச்சிக் குறியும் மனநிறைவுக் குறியும் தென்பட்டன'. இதற்குச் சற்றுப் பிறகு அவர் உயிர்நீத்தார் (1545, மே மாதம் 22ஆம் நாள்).

நிர்வாகம்

ஷெர்ஷா ஒரு சீர்திருத்தவாதி, புதியதைக் கண்டுபிடித்தவர் அல்லர்

ஷெர்ஷாவின் நிர்வாகம்பற்றி அண்மையில் கருத்து வேறுபாடுகள் உள. முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன், இடைக்கால இந்தியாவின் வரலாற்றறிஞர்கள் ஷெர்ஷாவை முக்கியமாக ஒரு போர்வீரர் என்றும், அதற்கடுத்து சாதாரண திறமையே படைத்த ஒரு நிர்வாகி என்றும் கருதினார்கள். 1854ஆம் ஆண்டிலேயே எர்ஸ்கின் (Erskine) தமது 'History of India under the First Two Sovereigns of the House of Timur,' Vol. II என்ற சிறப்பு மிக்க நூலில் ஷெர்ஷா ஒரு வெற்றிகர இராணுவத் துணிகர வீரர் என்பதை விடச் சட்டம் இயற்றுபவரும் தமது மக்களின் பாதுகாவலருமாவார் என்று கூறியிருந்தபோதிலும், வரலாற்றறிஞர்கள் டாக்டர் கானுங்கோவின் நூல் வெளிவரும்வரை தமது கருத்துகளை மாற்றிக் கொள்ளவில்லை. டாக்டர் கே. ஆர். கானுங்கோ (Dr. K. R. Qanungo) தமது தனி நூல் ஒன்றில் அவ் ஆப்கானிய அரசரைப் பற்றிய முந்திய கருத்துகளைச் சிதறடித்து, அக்பரைவிட ஷெர்ஷா மிகப் பெரிய ஆக்கும் திறம்படைத்த மேதை என்றும், நாட்டை உருவாக்குபவர் என்றும் குறிப்பிடுகிறார். நடக்கும் நூற்றாண்டின் கடந்த முப்பது ஆண்டுகளாக ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. சில அறிஞர்கள், குறிப்பாக டாக்டர் ஆர். பி. திரிபாதி (Dr. R. P. Tripathi), டாக்டர் சாரன் (Dr. P. Saran) ஆகியவர்கள் ஷெர்ஷாவின் நிறுவனங்களை மிக உன்னிப்பாக ஆராய்ந்ததற்குப் பிறகு அவருடைய சாதனைகள் மிகைப்படுத்தப் பட்டுள்ளன என்றும், அவர் உண்மையில் ஒரு சீர்திருத்தவாதியே அன்றி, புதியதைக் கண்டுபிடித்தவர் அல்லர் என்றும் கருதுகின்றனர். ஆனாலும், இப்பொழுது கருத்து மாறுபடுகிறது. அதன்படி, ஷெர்ஷா உண்மையில் இடைக்கால இந்தியாவின் மிகப்பெரிய நிர்வாகிகளுள் ஒருவராக இருப்பினும், அவர் புதிய நிறுவனம் எதையும் நிலைநாட்டவில்லை; பழைய நிறுவனங்களை அவர் புத்துணர்ச்சியளித்துப் பரிபாலித்தார்; இந்தச் செயலில் அவர் பெரு வெற்றி கண்டதனால், அவர் இடைக்கால இந்தியாவின் நிறுவனத்தை முற்றிலும் மாற்றி அமைத்து, அது மக்களுக்குப் பயனளிக்கும்படி செய்தார். அவர் புதிய மந்திரி சபை எதையும்

நிறுவவில்லை. அவரது நிர்வாகப் பிரிவினைகளும் கிளைப் பிரிவினைகளும் பழங்காலத்திலிருந்து பெறப்பட்டவையாகும். அதேபோல்தான் அவருடைய அதிகாரிகளின் பட்டங்களும் பெறப்பட்டவையாகும். அலாவுதீன் கில்ஜியினுடைய இராணுவச் சீர்திருத்தங்களையே அவர் மேற்கொண்டிருந்தார்; அவரது வருமான முறையும் புதியதாகவும் இல்லை; அவரால் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இல்லை. ஆனாலும், இப் பழைய நிறுவனங்களுக்கு அவர் புத்துயிர் அளித்துப் பெருவாரியான மக்களின் நலனுக்குப் பயன்படுத்தப்படும் கருவிகளாக அவற்றை மாற்றினர்.

அவரது பேரரசின் பரப்பளவு

ஷெர்ஷா டெல்லியைக் கைப்பற்றுவதற்குமுன் வங்காள, பீஹார் மாகாணங்களை அவர் தம் வசமாக்கிக்கொண்டார். ஹுமாயூனின்மீது அவர் இறுதியாகப் பெற்ற வெற்றிக்குப்பின் சில ஆண்டுகளுக்குள் அவருடைய பேரரசு அஸ்ஸாம் (Assam), காஷ்மீரம், குஜராத் ஆகியவற்றைத் தவிர அநேகமாக வட இந்தியா முழுவதையும் உட்கொண்டிருந்தது. கிழக்கில் சோனர்கோன் (Sonargaon) (இப்பொழுது கிழக்கு வங்காளத்திலுள்ளது) தொட்டு வடமேற்கில் கக்கார் இராச்சியம்வரை அது பரவியிருந்தது. வடக்கில் இமயமலையும், தெற்கில் விந்திய மலைகளும் (Vindhyas) அதற்கு எல்லைகளாக அமைந்திருந்தன. பேரரசு சிந்து நதிவரையிருந்த பஞ்சாபின் பெரும்பகுதியையும், முல்தானையும் சிந்துவையும் உட்கொண்டிருந்தது. தெற்கில் இராசபுதனம் (ஜெய்சார்மல் அன்றி), மாளவம், பண்டல்கண்டு ஆகியவையும் பேரரசில் அடங்கியிருந்தன. பிகானீரைச் சார்ந்த கல்யாண்மல் அவரது இறைமையை அங்கீகரித்துவிட்டார். மால்தேவர் 1544ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அடைந்த தோல்விக்குப் பிறகு அவரிடமிருந்து கல்யாண்மல் தமது நாட்டை மீண்டும் பெற்றுக்கொண்டார். ஆனாலும் ஷெர்ஷா குஜராத்தைக் கைப்பற்ற எவ்வித முயற்சியும் எடுக்கவில்லையாதலால், குஜராத் அவரது பேரரசில் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

மத்திய நிர்வாகம்

டெல்லி சுல்தானியத்தைச் சார்ந்த எல்லா ஆட்சியாளர்களைப் போலவே ஷெர்ஷாவும் ஒரு சர்வாதிகாரியாவார்; எல்லையற்ற அதிகாரத்தைப் பெற்றிருந்தார். ஆனால், அவர் தமது முன்னவர்களைப்போலல்லாமல், நலநோக்குச் சர்வாதிகாரியாவார்; தமது அதிகாரத்தை மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தினர். இருந்தபோதிலும், கொள்கைத் தீர்மானம் முழுவதும், சிவில்

இராணுவ அதிகாரங்களும் அவரிடத்திலேயே பொதிந்திருந்தன. நாள்தோறும் நடத்தவேண்டிய நிர்வாகத்தின் பொறுப்பு அவருடைய அமைச்சர்களின் பொறுப்பில் இருந்தது; ஒரு கொள்கையைத் துவக்கிவைக்கவோ அல்லது விவகாரங்களை நடத்தும் முறையிலோ அல்லது நிர்வாக அமைப்பிலோ பெரு மாறுதல் எதையும் கொண்டுவர அவர்களுக்கு அதிகாரம் கிடையாது. இவ்வளவு பெரிய பேரரசின் நலனை அமைச்சர்களின் உதவியின்றி ஒரே ஒருவர் கவனிப்பது இயலாததாகும். ஆகையினால், ஷெர்ஷா சுல்தானியர்களின் காலத்தையொட்டி நான்கு அமைச்சர்களை அமர்த்தினார். அவர்கள் (1) திவானி விசாரத் (Diwan-i-Wizarat), (2) திவானி ஆரிஸ் (Diwan-i-Ariz), (3) திவானிரஸாலாத் (Diwan-i-Rasalat), (4) திவானி இன்ஷா (Diwan-i-Insha) எனப்பட்டனர். இவர்களைத்தவிர சில கீழதிகாரிகளும் இருந்தனர். அவர்களுள் இருவர் (தலைமை காஸியும் செய்தித்துறையின் தலைவரும்) மிக உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருந்தனர்; சில ஆசிரியர்கள் அவர்களை மந்திரிகள் என்றே கருதுகின்றனர். இங்ஙனமாக, ஷெர்ஷாவின் கீழிருந்த மத்திய அரசாங்கத்தின் அமைப்பு, அடிமை அரசர்களென்று அழைக்கப்பட்ட அரசர்கள் காலந்தொட்டு, துக்ளக்குகளின் காலமுடிவுவரை ஆண்ட முந்திய டெல்லி சுல்தானியர்களின் அமைப்பைப்போலவே இருந்தது.

திவானி விஸாரத் துறையின் தலைவரை வஸீர் என்று அழைக்கலாம். அவர் வருமான, நிதி அமைச்சராவார். ஆகையினால், பேரரசின் வரவு செலவு அவர் பொறுப்பிலிருந்தது. அதுவுமன்றி, மற்ற அமைச்சர்கள்மீது அவர் பொது மேற்பார்வை அதிகாரத்தைப் பிரயோகித்தார். வருமானத்துறையின் விவரங்களைப்பற்றி ஷெர்ஷாவுக்கு மிக நெருங்கிய பழக்கமிருந்ததனால் அத் துறையின் விவகாரங்களில் அவர் ஒரு நலநோக்குக் கருத்தைச் செலுத்தி வந்தார். அக்பர் காலத்திய வரலாற்றறிஞர்களின் கூற்றின்படி ஷெர்ஷா தமது இராச்சியத்தின் வருமான, செலவுபற்றிய விவரங்களின் சுருக்கத்தை நாள்தோறும் ஆராய்ந்து, நிதியின் நிலையைப் பற்றியும் பர்காணுக்களிலிருந்து வரவேண்டிய பாக்கியைப்பற்றியும் விசாரித்தார்.

ஆரிஸி மமாலிக் (Ariz-i-Mamalik) என்ற அதிகாரி, திவானி ஆரிஸ் துறைக்குத் தலைமை தாங்கினார். தற்கால மொழியில் அவரை இராணுவ அமைச்சர் என்று அழைக்கவேண்டும். அவர் படையின் முதன்மைத் தளபதியல்லர்; ஆட்களைத் தேர்ந்தெடுத்தல், அமைப்பு, ஒழுங்கு ஆகியவற்றின் பொறுப்பு அவரிடத்தில்தான் இருந்தது. படைவீரர்கள், அதிகாரிகள் அனைவருக்கும்

சம்பளங்கள் கொடுப்பதையும் போர்க்களத்தில் படையின் நிலையையும் அவர் கவனிக்கவேண்டியிருந்தது. ஆனால், ஷெர்ஷாவே நேரில் இராணுவத் துறையில் அக்கறை செலுத்தி வந்தாராதலால் திவானி ஆரிஸி செயல்முறையில் அவர் அடிக்கடி தலையிட்டார். புதிய படைவீரர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது அவரே நேரில் இருந்தார் என்றும், அவரே தனிப்பட்ட வீரர்களின் சம்பளத்தையும் நிர்ணயித்தார் என்றும், அவர்களது நலனைக் கவனித்து வந்தார் என்றும் அக்காலத்திய வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து நாம் அறிகிறோம்.

திவானி ரஸாலாத் அல்லது திவானி முஹ்தஸிப் (Diwan-i-Muhtasib) என்பது மூன்றும் துறையாகும். இத் துறையின் பொறுப்பை ஏந்தியிருந்த அமைச்சரை வெளிநாட்டு அமைச்சர் என வழங்கலாம். அவருடைய கடமையாவது வெளிநாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த தூதர்களுடனும் வெளிநாடுகளிலிருந்து வந்த தூதர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருத்தலாகும். தூதரகக் கடிதப் போக்குவரத்துப் பொறுப்பும் அவரிடத்தில்தான் இருந்திருக்கவேண்டும். சில சமயங்களில் தர்ம, அறக்கொடை இலாகாவும் அவர் பொறுப்பில் அமைக்கப்பட்டிருந்தது.

திவானி இன்ஷா (Diwan-i-Insha) என்பது நான்காம் துறையாகும். இவ் இலாகாவின் பொறுப்பை ஏற்றிருந்த அமைச்சர் அரச விளம்பரங்களையும் கடிதங்களையும் வரைவு செய்யவேண்டியிருந்தது. கவர்னர்களுடனும் மற்றத் தல நிர்வாக அதிகாரிகளுடனும் போக்குவரத்து வைத்துக்கொள்ளுதலும் அவரது கடமையாகும். அரசாங்கப் பதிவுகளுக்கும் அவர்தாம் பொறுப்பாளியாவார்.

திவானி கஸா (Diwan-i-Qaza), திவானி பரீத் (Diwan-i-Barid) ஆகியவை மற்ற இலாகாக்களாகும். சில சமயங்களில் அவை தனிப்பட்ட இலாகாக்களாகவே கருதப்பட்டன. முதன்மை காஸி முதல் குறிப்பிட்ட இலாகாவின் தலைவராவார். நீதி பரிபாலனத்தை மேற்பார்வையிடுவதும், வழக்குகளை முதலிலேயோ அல்லது மாகாண காஸிகளிடமிருந்து அப்பீலிலேயோ தீர்ப்பதும் அவரது பொறுப்புகளாகும். பரீதி மமாலிக் (Barid-i-Mamalik) என்ற அதிகாரி துப்பறியும் இலாகாவின் தலைவராவார்; ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சியும் அரசனுக்குத் தெரிவிப்பது அவருடைய கடமையாகும். அவரின்கீழ் செய்தி எழுதுபவர்கள் பலரும் ஒற்றர்களும் இருந்தனர். இவர்கள் நகரங்களிலும் அங்காடிகளிலும்

ஒவ்வொரு முக்கியப் பேட்டையிலும் அமர்த்தப்பட்டனர். அரச கடிதங்களைக் கொண்டுபோக அவர் செய்தி கொண்டுசெல்பவர்களை முக்கியமான இடங்களில் அமர்த்தி வைத்தார்.

மற்ருேர் உயர் அதிகாரி அரசரது இல்லம், அதனையொட்டி யிருந்த பலவகை நிறுவனங்கள் ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றிருந்தார். அவரை அரண்மனைச் சிறப்பு அலுவலர் (Lord High Steward) என வழங்கலாம். அவரது கடமையாவது அரசரது இல்லத் துறையை நிர்வகித்து, அதனையொட்டி இருந்த கணக்கற்ற சேவகர்களைக் கண்காணிப்பதாகும். அவர் அரசருக்கு மிக அருகில் இருந்ததனுல் இவருக்கு மிக்க மதிப்பு இருந்தது.

மாகாண நிர்வாகம்

ஷெர்ஷாவின் ஆட்சிக் காலத்தில் பேரரசின் நிர்வாகப் பிரிவினைகளைப்பற்றி இரண்டு கருத்துகள் உள்ளன. சர்க்காரை (Sarkar) விட உயர்நிலைபெற்ற பிரிவினை வெறெதையும் ஷெர்ஷா அமைக்கவில்லையென்றும், மாகாணங்களும் மாகாண கவர்னர்களும் அக்பரால் நிறுவப்பட்டவை என்றும் டாக்டர் கானுங்கோ கருதுகிருர். ஆனுல், டாக்டர் சாரன் இக் கருத்தை ஏற்றுக் கொள்ளாது, ஷெர்ஷா பெரிய இராணுவ கவர்னர் பதவிகளை அமைத்திருந்தார் என்றும் இந்தியாவில் அக்பரின் ஆட்சிக் காலத்திற்கு முன்பே மாகாணங்கள் இருந்தன என்றும் கருதுகிருர். இவ் இரு கருத்துகளும் முற்றிலும் உண்மையானவை அல்ல. சுல்தானியர்களின் காலம் முழுவதிலும் ஷெர்ஷா, அவரது மகன் இஸ்லாம்ஷா ஆகியவர்களின் காலத்திலும் மாகாணங்களையொத்திருந்த நிர்வாகப் பிரிவினைகள் இருந்தன; ஆனுல், அவைகள் பரப்பளவிலோ, வருமானத்திலோ ஒருவகைப்பட்டவையாக இருக்கவில்லை. அவைகள் மாகாணங்கள் அல்லது சுபாக்கள் என்று வழங்கப்படவில்லை. அவைகள் இக்தாஸ் (igtas) என்று வழங்கப்பட்டு வந்தன; அவைகள் முக்கியத் தலைவர்களின் பொறுப்பில் இருந்தன. இதைத்தவிர எண்ணற்ற, சுதந்திர இந்து இராச்சியங்களும் இருந்தன. அவை டெல்லி சுல்தானியத்தின் அடியாட்களாக இருந்தன. அதுபோன்ற இராச்சியங்களும் இக்தாஸ்களும் ஒருதரப்பட்ட அரசியல் அந்தஸ்தை அடைந்திருக்கவில்லை; ஒரே வகைப்பட்ட நிர்வாக முறையின்கீழும் இருக்கவில்லை. டெல்லியின் முந்திய சுல்தானியர்களின் ஆட்சிக் காலத்தில் மாகாணங்களின்மீது மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் பெயரளவுக்கே இருந்துவந்தது. ஆனுல், ஷெர்ஷாவின் காலத்தில் அது மிக அதிகமாகவும் கடுமையாகவும் இருந்தது. ஷெர்ஷாவின் காலத்தில் லாகூர், பஞ்சாப், மாளவம், ஆஜ்மீர் போன்ற இராணுவ மாகாண

ஆட்சிப் பகுதிகள் இருந்தன என்பதை நாம் காணக்கூடும். இம் மாகாணங்களின் பொறுப்பை ஏற்றிருந்தவர்கள் பெரிய படைகளின் தளபதிகளாவர். அதே சமயத்தில், ஷெர்ஷா வங்காளத்தில் புது வகையான நிருவாகம் ஒன்றை நிறுவினார். வங்காளத்தை அவர் பல சர்க்கார்களாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவினையையும் ஓர் ஆப்கானிய அதிகாரியின் பொறுப்பில் விட்டார். முழு மாகாணத்தின்மீதும் ஒரு சிவிலியன் அதிகாரியை அமர்த்தினார்; அவர்கீழ் ஒரு சிறு படையும் அமைக்கப்பட்டது. அவரது முக்கியக் கடமையாவது சர்க்கார் அதிகாரிகளினுடைய பணியை மேற்பார்வையிட்டு, அவர்களுக்கிடையில் உண்டான சச்சரவுகளைத் தீர்க்கவேண்டியதாகும். கிளர்ச்சிகளைத் தடுக்க இங்ஙனம் செய்யப்பட்டது. மற்ற எல்லா மாகாணங்களிலும் கவர்னர்கள் இருந்தனர். பல வகையாக வழங்கப்பட்டுவந்த இன்னும் சில அதிகாரிகளும் இருந்தனர். இதைத்தவிர மற்ற எந்த வகையான ஒருமைப்பாட்டையும் அவர்களது நிர்வாக அமைப்பிலோ, முறையிலோ காணுவதற்கில்லை. உண்மையில், பல மாகாணங்களிலும் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கையோ, பெயர்களோ நிர்ணயிக்க முடியவில்லை; கவர்னர் தமது சகாக்களை நியமிப்பதற்கு அதிகாரம் பெற்றிருந்தாரா அல்லது அவர்களை ஷெர்ஷாவே நியமித்தாரா என்பதை நாம் அறிந்துகொள்வதற்கில்லை. சுருங்கச் சொல்லின், ஷெர்ஷாவின்கீழ் மாகாண நிர்வாகம் அக்பரின் காலத்திலிருந்ததுபோலவோ அல்லது அவருடையதேயான சர்க்கார்கள் அல்லது பர்கானுக்களில் இருந்ததுபோலவோ ஒழுங்குற அமைக்கப்படவில்லை.

சர்க்கார்கள் (மாவட்டங்கள்)

ஒவ்வொரு மாகாணமும் பல சர்க்கார்களாகப் (மாவட்டங்களாக) பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு சர்க்காரிலும் இரண்டு முதன்மை அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் முதன்மை ஷிக்தார் (ஷிக்தாரி-ஷிக்தாரென்-Shiqdar-i-Shiqdaran), முதன்மை முன்சீஃப் (முன்சீஃபி முன்சிஃபன்—Munsif-i-Munsifan) எனப்பட்டனர். முன்னவர் மிக்க முக்கியத்துவம் பெற்ற ஒரு பிரமுகராவார்; மதிப்புக்குரிய ஒரு படையும் தம் கீழ்க் கொண்டிருந்தார். மாவட்டத்தில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுதலும் கிளர்ந்தெழும் ஜமீன்தார்களின்மீது படையெடுப்புகளை நடத்துதலும் அவரது கடமைகளாகும். அவர் தமது மாவட்டத்திலுள்ள பர்கானுக்களின் ஷிக்தார்களின் பணியை மேற்பார்வையிடவேண்டி இருந்தது. தலைமை முன்சீஃப் பெரும்பாலும் ஒரு நீதிபதியாவார். அவர் சிவில் வழக்குகளில் தீர்ப்பு வழங்கவேண்டியிருந்தது. அதே சமயத்தில், பர்கானுக்

களிலுள்ள அமீன்களின் பணியையும் அவர் பார்வையிட்டார் போலும். இவ் இரு அதிகாரிகளும் மிகப் பெரிய அலுவலகங்களை அமைத்துக்கொண்டிருந்தனர். அவற்றில் ஏராளமான எழுத்தாளர் களும் கணக்காளர்களும் அவரது கடமைகளை நிறைவேற்றுவதில் அவருக்கு உதவியாக இருந்தனர்.

பர்காணுக்கள்

ஒவ்வொரு சர்க்காரும் பல பர்காணுக்களை உட்கொண் டிருந்தது. அவை நிர்வாகத்தின் மிகச் சிறிய பிரிவினைகளாகும். ஒவ்வொரு பர்காணுவிலும் ஒரு ஷிக்தாரையும், ஓர் அமீன் அல்லது முன்சீஃப்பையும், ஒரு ஃபோடதாரையும் (பொருளாளர்), இரண்டு கர்கூன்களையும்(Karkuns) (எழுத்தாளர்கள்)ஷெர்ஷா நியமித்தார். இவர்களைத்தவிர, ஒரு கானுங்கோவும் (Qanungo) நியமிக்கப் பட்டார். இவர் ஓர் அரை அரசாங்க அதிகாரியாவார்; அவர் பர்காணுக்களின் வருமான விவரங்களைப்பற்றிய அறிவுக் களஞ்சிய மாவார். ஷிக்தார் (Shiqdar) எனப்படுபவர் ஓர் இராணுவ அதிகாரியாவார். அமைதியை நிலைநாட்டுவது அவரது பொறுப் பாகும். அவர் அமீனுக்கு உதவியாக இருக்கும்படி எதிர்பார்க்கப் பட்டார்; கிளர்ச்சி நடத்தும் மக்களைத் தண்டிப்பதும் அவர் பொறுப் பாகும். நில அளவை செய்து நில வருமானத்தை நிர்யிணப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அமீனின் கடமையாகும். ஃபோடதார் என்ற அதிகாரி, பர்காணுவின் பொருளாளர் ஆவார். கர்கூன்கள், ஒருவர் பாரசீக மொழியிலும் மற்றவர் ஹிந்தியிலும் கணக்குகளை எழுதினர்.

ஷேர்ஷா புத்தி கூர்மையுடன் தன்னுட்சி உரிமையுடைய கிராமச் சமுதாயங்களை அங்கீகரித்ததுமன்றி பட்வாரி (Patwari), சௌகிதார் என்ற கிராம அதிகாரிகளின்மூலம் அவற்றுடன் தொடர்பு வைத்திருந்தார். ஒவ்வொரு முக்கிய கிராமமும் ஒரு பொதுநல ஆட்சியாக அமைந்திருந்தது. கிராமத்தைச் சார்ந்த முதியோர்களை உட்கொண்டிருந்த பஞ்சாயத்து ஒன்று பாதுகாவலுக்கும், ஆரம்பக் கல்விக்கும், சுகாதாரம், நீர்ப்பாய்ச்சல், மேலும் பல விவரங்கள் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தது. வழக்கு களையும் அப் பஞ்சாயத்துத் தீர்த்து வைத்தது.

படை

ஒரு சிவிலியனுகவே ஷெர்ஷா வாழ்க்கை தொடங்கினுலும், திறமை வாய்ந்த இராணுவ நிறுவனத்தின் முக்கியத்துவத்தை அவர் உணர்ந்திருந்தார். மற்ற ஆப்கானிய அரசர்களைப்போலவே இவரும் ஆப்கானிஸ்தானத்திலிருந்தும் நாட்டின் எல்லாப் பகுதி களிலிருந்தும் வரவழைத்து, அவரது அந்தஸ்துக்கும் தகுதிக்கும்

ஏற்றபடி அவர்களுக்குப் பதவிகளை அளித்தார். ஆகையினுல்அவரது படையில் ஆப்கானியர்களே பெரும்பாலும் இருந்தனர். எனினும், இந்துக்கள் உட்பட மற்ற இனங்களைச் சேர்ந்தவர்களும் அதில் இருந்தனர். நிலமானியப் படை திறமையற்றிருக்கும் என்று அவர் உணர்ந்து, அல்லாவுதீனின் கொள்கையைப் பின்பற்றினுர். அதன்படி நிரந்தரப் படையொன்று நிறுவப்படவேண்டும். ஒரு சில ருக்கு ஜாகீர்களும், மற்றும் சிலருக்குக் கருவூலத்திலிருக்கும் ரொக்க மும் சம்பளமாகக் கொடுக்கப்பட்டன; ஆனுல், ஷெர்ஷாவினுலே தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டவர்கள்தாம் எந்நிலையிலும் அதன் அதிகாரிகளாகப் பணியாற்றவேண்டும், தலைமை தாங்க வேண்டும். ஷெர்ஷா படையில் தனிப்பட்ட அக்கறை காட்டினுர் என்றும், படைவீரர்களைத் தேர்ந்தெடுத்துப் புதிதாக நியமிக்கப்பட்ட தனிப்பட்ட வீரர்களைத் தாமே நேரில் மிக விழிப்புடன் கவனித்து ஒவ் வொரு வீரருடைய சம்பளத்தையும் நிர்ணயித்தார் என்றும் வர லாற்றுக் குறிப்புகள் அறிவிக்கின்றன. அதுபோன்ற முறையைத் தலைநகரில் தேர்ந்தெடுக்கப்பட்ட படைவீரர்கள் பொறுத்தவரை அவர் செய்திருக்க வேண்டும். மாகாணத் தலைநகரங்களில் அவரது அதிகாரிகள் தம்மைக் கேட்காமலேயே வீரர்களைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்பட்டிருக்கவேண்டும். அரசாங்கக் குதிரைகளை விற்று விடுவதையும், கணக்கு எடுக்கும்பொழுது அவற்றுக்குப் பதிலாக உபயோகமற்ற குதிரைகளைக் காட்டுவதையும் தடைசெய்வதற்கு அலாவுதின் கையாண்ட கொள்கையை ஷெர்ஷாவும் பின் பற்றினுர். இராணுவத்தின் பார்வையின்பொழுதோ அல்லது போரின் சமயமோ பதிலாள்களை அனுப்பும் பழக்கத்தை ஒழிப்பதற் காக ஒவ்வொரு வீரருடைய வருணிப்புப் பட்டியலைக் குறித்து வைக்கும் பழக்கத்தையும் அவர் புகுத்தினுர். இந்தச் சீர்திருத்தங் களின் விளைவாக லஞ்ச ஊழல் பெருமளவும் தவிர்க்கப்பட்டது. படையும் ஓர் ஆற்றல் மிக்க கருவியாக அமைந்திருந்தது; ஒவ்வொரு படை வீரருக்கும் அவரது மேலதிகாரிக்கும் இடையில் இருந்த தொடர்பு, ‘தனிப்பட்ட பற்றுதலாக இல்லாது அதிகார பூர்வமான இணைப்பாக மாறி இருந்தது’. படைவீரர்களின் திறமை, ஆற்றி இருந்த பணி ஆகியவற்றின் அடிப்படையில்தான் அவர் களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது; தனிப்பட்ட அதிகாரிகள் விருப்பத்துக்கு அவ் உயர்வு விட்டுவைக்கப்படவில்லை. எனினும், அவ் அதிகாரியின் சிபாரிசுக்குச் சுல்தான் தக்க மதிப்பு அளித்தார். ஷெர்ஷா ஜாகீர் முறையை ஒழித்தார் என்றும், அதிகாரிகள், படை வீரர்கள் ஆகியவர்களின் சம்பளத்தை ரொக்கமாகவே கொடுத் த்தார் என்றும் தவருகக் கருதப்படுகிறது. படைவீரர்களுக்குப் பொதுவாக ஊதியம் ரொக்கமாகக் கொடுக்கப்பட்டபோதிலும், அதி காரிகளும் பிரபுக்களும் முன்போலவே ஜாகீர்களைப் பெற்றிருந்தனர்.

இருந்தபோதிலும், ஷெர்ஷா ஒரு முக்கியச் சீர்திருத்தத்தை நுழைத்தார்; அதாவது, தமது படைவீரர்கள் ஒவ்வொருவருக்கும் தலைமை தாங்கும் அதிகாரிகளின்மூலமாகவோ, பிரபுக்களின்மூலமாகவோ, அன்றித் தனித்தனியாகச் சம்பளம் கொடுக்கப்பட்டதாகும்.

ஷெர்ஷாவின் படையில் குதிரைவீரர்களே அதிகமாக இருந்தனர்; எனினும், அவர் காலாட்படையையும் பெற்றிருந்தார். அவர்களுக்குத் துப்பாக்கிகள் அளிக்கப்பட்டிருந்தன. அவருடைய துப்பாக்கிப்படை, பலதரப்பட்டதும் பலதிறப்பட்டதுமான பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் கொண்டிருந்தது. அவருடைய துப்பாக்கிப்படை அதனது திறனுக்குச் சிறப்பைப் பெற்றிருந்தது. அவருடை தலைநகரில் 1,50,000 குதிரை வீரர்களும், துப்பாக்கிகள் தாங்கிய 25,000 காலாட்படையினரும், 300 யானைகளும் பணிக்காக எப்பொழுதும் ஆயத்தமாக இருந்தனர். இதைத்தவிர, அவரது இராச்சியத்தின் முக்கிய இடங்களிலெல்லாம் படைக்குழுக்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. அவரது படையின் மொத்த எண்ணிக்கை சரியாக நிர்ணயிக்க முடியவில்லை. ஆனாலும் மாகாணப் படைகளின் எண்ணிக்கை, தலைநகரில் நிறுத்தப்பட்டிருந்த படையின் எண் ணிக்கைக்குச் சமமாக இருந்திருக்கவேண்டும் என்று யூகிக்கலாம். அந் நாட்களிலும் ஒழுங்கான பயிற்சி எதுவும் அளிக்கப்படவில்லை. இராணுவத்துக்குரிய ஒழுங்கு முறையும் கிடையாது. ஆனால், ஷெர்ஷா தமது படையைப் பல பிரிவினைகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவினையையும் அனுபவமிக்க தளபதியின்கீழ் அமைத்தார். ஷெர்ஷா தமது படைவீரர்களின் அமைப்பிலும் முறையிலும், ஆயுதங்களிலும், ஒழுங்கிலும் தனிப்பட்ட அக்கறை காட்டியதனாலும், தம்முடன் தமது படைவீரர் நெருங்கிய தொடர்பு கொள்ளும்படி அனுமதித்ததனாலும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் ஓர் ஆண்டுக்குள் சிறந்த வீரர்களானார்கள். போக்குவரத்து ஏற்பாடுகளும் படைவீரர்களுக்கான உணவு ஏற்பாடுகளும் வீரர்களிடமும் தளபதிகளிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. நம் காலத்திலிருக்கும் ஏற்பாடுகளைப்போல ஏற்பாடு எதையும் இடைக்காலத்தில் காணமுடியவில்லை. பஞ்சராக்கள் (Banjaras) அல்லது சுற்றுலாவும் தானிய வியாபாரிகள் தேவைப் பொருள்களைக் கொடுத்தனர். மத்தியகாலப் படைகளுடன் வியாபாரிகளும் சென்றதனால் மற்ற எல்லாவகைத் தேவைப் பொருள்களும் வெகு எளிதாகக் கிடைத்தன.

நிதி

பேரரசின் வருமானம் பல ஆதாரங்களிலிருந்து பெறப்பட்டது. அதை இரண்டு முக்கியப் பிரிவினைகளாகப் பிரிக்கலாம்: (1) மத்திய

வருமானம்; (2) தல வருமானம். தல வருமானம் அப்வாப்கள் (Abwabs) என வழங்கப்பட்ட தீர்வைகள் பலவற்றிலிருந்து பெறப்பட்டதாகும். பலவகையான தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்ற பொருள்களின்மீதும், மக்கள் நுகர்கின்ற பொருள்களின் மீதும், பல்வேறுபட்ட தொழில்களின்மீதும் இத்தகைய வரிகள் விதிக்கப்பட்டன. இவற்றில் பெரும்பான்மையானவை போக்கு வரவுச் சாதனங்களின்மீதும் விதிக்கப்பட்டவையாகும். மத்திய வருவாயின் மூலங்களாவன: வாரிசுகளில்லாச் சொத்து, வாணிகம், தங்கசாலை, பரிசுகள், வழிவழிச் சொத்து, உப்பு, சுங்கங்கள், ஜெஸ்ஸியா (Jizya—Poll tax-தலை வரி), கம்ஸ் (Khams), நிலவரி ஆகியவையாகும். கச்சாப் பொருள்கள், செய்து முடிக்கப்பட்ட பொருள்கள் ஆகியவற்றை இடம்விட்டு இடம் கொண்டுசெல்லுதலின்மீது அரசாங்கம் தீர்வை விதித்தது. அரச நாணயச் சாலையும் வருவாயைத் தந்தது. உரிமை கோரப்படாத சொத்து, வாரிசுகளின்றி இறந்துவிட்டவர்களுடைய சொத்து ஆகியவை யெல்லாம் அரசாங்கத்துக்கு வந்துசேர்ந்தன. எல்லாச் சிற்றரசர்களும், பிரபுக்களும், அதிகாரிகளும், சுற்றுப்பயணிகளும் அரசருக்குப் பரிசுகள் வழங்குமாறு வற்புறுத்தப்பட்டனர். இதுவும் அரசாங்கத்துக்கு மிக்க இலாபத்தைத் தந்தது. உப்பின்மீது விதித்த தீர்வையும் ஏராளமான நிதியைத் தந்தது. இந்துக்களின்மீது பெறப்பட்ட ஜெஸ்ஸியா (Jizya) அல்லது தலை வரி (Poll tax) ஏராளமான வருவாயைக் கொடுத்தது. கம்ஸ் அல்லது போரின்பொழுது கொள்ளையடிக்கப்பட்ட பொருளில் ஐந்தில் ஒரு பங்கு அரசனின் கருவூலத்திற்குச் சென்றது. அதுவும் அரசாங்கத்துக்கு ஏராளமான வருவாயைக் கொடுத்தது. எனினும், நிலத்தின்மீது விதிக்கப்பட்ட தீர்வைதான் அரசாங்க வருவாயின் முக்கிய மூலமாகும். அதற்கு நிலவரி என்று பெயர் வழங்கப்பட்டுவந்தது.

ஷெர்ஷாவின் நிலவரி நிர்வாக முறை சுல்தானியர்களின் காலத்திலிருந்த முறையைக் காட்டிலும் முன்னேற்றம் பெற்றதாகும். அதுதான் அவரது புகழுக்கு முதன்மைக் காரணமாகும். பீஹாரிலிருந்த தமது தந்தையின் ஜாகீரின் வருமான திட்டத்தின் செயல் முறையை அவர் நன்கு அறிந்திருந்தார். அவர் அரியணையேறியதும், சாசாரத்திலும் கவாஸ்பூரி தாண்டாவிலும் மிக்க விவரங்களுடன் செயற்படுத்திய முறையை அவர் நுழைத்தார். ஒரேதரப்பட்ட முறையின்படி நிலம் அளக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் இருந்த சாகுபடி நிலத்தையும் அளந்தனர். சாகுபடி நிலங்களெல்லாம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டன— சிறப்பு நிலம், நடுத்தர நிலம், மோசமான நிலம். ஒவ்வொருவகை நிலத்தின் விளைச்சலும் நிர்ணயிக்கப்பட்டது. அவற்றை யெல்லாம்

கூட்டி மூன்ருல் வகுத்து, ஒரு பீகா (Bigha) நிலத்தின் சராசரி விளைச்சலைக் கண்டுபிடித்தனர். விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு அரசாங்கத்தின் பங்காக நிர்ணயிக்கப்பட்டது. அரசாங்க வருமானம் ரொக்கமாகவும் கொடுக்கலாம்; அல்லது பண்டங்களாகவும் கொடுக்கலாம். ஆனுல், முதலாவதுதான் பெரும்பாலும் விரும்பப்பட்டது. நடப்பில் இருந்த தானியங்களின் விலையின் அடிப்படையில் அரசாங்கத்தின் பங்கு ரொக்கமாக மாற்றிக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு தலத்துக்கும் ஒரு தனிப்பட்ட பட்டியலும், ஒவ்வொரு வகைப்பட்ட தானியத்துக்கும் ஒரு தனிப்பட்ட பட்டியலும் இருந்ததுபோலும். நில விளைச்சலின் சராசரியின் ஒருவகைப்பட்ட பட்டியல் தயாரித்தல் இயலாததாகும்; ஏனெனில், ஒவ்வொரு தலத்திலும் நிலத்தின் தரமும் அதனது விளைச்சலும் மாறுபட்டிருந்தன. அதேபோல, அரசாங்கத்தின் பங்கை ரொக்கமாக மாற்றுவதற்கு ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வொரு வகையான விலை இருந்திருக்கவேண்டும். அரசாங்கம் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு பட்டா (Patta—title deed—உரிமைச் சாசனம்) அளித்தது. அதில் அரசாங்கத்தின் கோரிக்கை, அதாவது, அவ்விவசாயி அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய வரி குறிக்கப்பட்டிருந்தது. குறிக்கப்பட்டுள்ள வரித் தொகையைக் கொடுப்பதாகத் தமது ஒப்புதலைத் தெரிவிக்க ஒவ்வொரு குடியானவனும் கபூலியத் (Qabuliat—deed of agreement—ஒப்பு சாசனம்) ஒன்றில் கையொப்பம் இடவேண்டியிருந்தது. ஒவ்வொரு குடியானவனிடத்திலும் இருந்த நிலத்தின் விவரங்களும் பரப்பளவுகளும் அவ்விரு பத்திரங்களிலும் குறிக்கப்பட்டிருந்தன. ஷெர்ஷா தமது இராச்சியத்தில் ஒருதரப்பட்ட மதிப்பீட்டு முறையை நிலைநாட்டினுர் என்று கூறுவது அளவுக்கு மீறி எதிர்பார்ப்பதாகும். அவர் முல்தானுக்கு விலக்குக் காட்டினுர் என்பது குறிப்புகளிலிருந்து நமக்குப் புலனுகிறது, அங்கே அவர் நிலத்தை அளப்பதை வற்புறுத்தினுர். அதேபோல, அவர் இராசபுதனத்தில் நிலத்தை அளக்கும் முறையைக் கையாண்டிருக்க முடியாது. ஆகையினுல், முன்னிருந்ததுபோலவே மூன்றுவகைப்பட்ட மதிப்பீட்டு முறைகளையும் அவர் கையாண்டார் என்பது நம்பத்தக்கதாகும். அவையாவன: (1) கல்லா பக்ஷி (Ghalla bakhshi) அல்லது படாய் (Batai); (2) நஸ்க் (Nasq) அல்லது முக்தாய் (Muktai) அல்லது கன்குத் (Kankut); (3) நக்தி (Naqdi) அல்லது ஸப்தி (Zabti) அல்லது ஜமாய் (Jamai) ; படாய் என்பதற்கு விளைச்சலைக் குடியானவனுடன் பங்கிட்டுக்கொள்ளுதல் என்பது பொருளாகும். அரசாங்கத்தின் பங்கை நிர்ணயிப்பதற்காகக் கையாளப்பட்ட இதுபோன்ற முறை எல்லாக் காலங்களிலும் நாகரிக முதிர்ச்சியற்றதும் மக்கள் பாராட்டுக்குரியதுமாகும். படாய் மூன்றுவகைப்பட்ட

தாகும் ; கேத் படாய் (Khet-batai), லங்க் படாய் (Lank-batai), ராசி படாய் (Rasi-batai). அறுவடைக்கு முன்னுலோ அல்லது அறுவடை முடிந்தவுடனேயோ நிலச் சொந்தக்காரரின் பங்கை நிலத்தைப் பிரித்தே நிச்சயிப்பது முதலாவதன் பொருளாகும். இரண்டாவதன்படி (லங்க் படாய்) குடியானவன் அறுவடை செய்து, தானியத்தை வைக்கும் இடத்திற்குக் கொண்டு வந்து, உமியிலிருந்து தானியத்தை எடுப்பதற்கு முன்னுல், குடியானவனுக்கும் நிலச் சொந்தக்காரனுக்குமிடையில் பங்கிட்டுக் கொள்ளப்படும். தானியங்களை உமியிலிருந்து எடுத்த பிறகு பங்கிட்டுக்கொள்வது ராஸி படாயாகும். நஸ்க் அல்லது கன்குத் என்பதற்கு நில விளைச்சலை ஏற்றத்தாழ்வாக மதிப்பிடுதல் என்று பொருளாகும். அது எளிதில் கையாள முடியாத ஒரு மதிப்பீட்டு முறையாகும். அது குடியானவர்களுக்கு உகந்த முறையன்று. நக்தி அல்லது ஜமாய் அல்லது ஸப்தி என்பது தனிப்பட்ட குடியானவனுக்கும் அரசாங்கம் அல்லது ஜமீந்தாருக்குமிடையில் ஏற்படும் ஒப்பந்தமாகும். இவ் வொப்பந்தம் ஆண்டுதோறும் ஒரு பிகா நிலத்தின் வாடகையைத் தானியங்களையோ, மொத்த விளைச்சலையோ பொருட்படுத்தாது மூன்று ஆண்டுகளுக்கோ அல்லது அதற்கு மேற்பட்டோ நிச்சயிப்பதாகும். வாடகையின் வீதம் நிலத்தின் செழுமை நிலையையும் அமைந்திருந்த இடத்தையும் பொறுத்திருந்தது. குடியானவர் ஒரு பயிருக்கு மேற்பட்டும் விளைவிக்கலாம் ; மழை பெய்யாததனுலோ, மழை அதிகமாகப் பெய்ததனுலோ, அல்லது மற்ற எந்த இயற்கைத் துயராலோ விளைச்சல் சரிவரச் செய்ய முடியவில்லையென்ருல், குடியானவன் தீர்வையைத் தள்ளிக்கொடுத்தலை எதிர்பார்க்க முடியாது. ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட காலத்தில் சராசரி விளைச்சலைவிட அதிகமான விளைச்சல் கிடைத்தாலும் தீர்வை அதிகரிக்கப்படமாட்டாது. இந்த மூன்று வகைகளிலும், குடியானவர்கள் நக்தி அல்லது ஜமாய் முறையையே அதிகமாக விரும்பினுர்கள் ; கன்குத் மிகக் குறைவாகவே விரும்பப்பட்டது. உண்மையான நில வருமானம் (விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு) அல்லாமல், நிலவரியை வசூலிப்பவர்களும் நிலத்தை அளவிடுபவர்களும் அவர்களது செயலில் ஈடுபட்டிருக்கும்பொழுது, அவர்களைப் பேணுவதற்கும் அவர்களுக்கு ஊதியமளிப்பதற்கும் குடியானவர்கள் தீர்வை செலுத்தவேண்டியிருந்தது. இந்தக் கூடுதல் பொறுப்பு, ஜரிபனு (Jaribana) (அளவிடுவோரின் கட்டணம்), மஹாசிலானு (Mahasilana) (வரி வசூலிப்பவர்களின் கட்டணம்) என வழங்கப்பட்டது. ஒருவேளை அது குடியானவன் ஒவ்வொருவனும் செலுத்தவேண்டிய நில வருமானத்தில் $2\frac{1}{2}$ சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதம்வரை இருந்ததுபோலும், இத் தீர்வைகளுமின்றி ஒவ்வொரு குடியான

வனும் அவன் செலுத்தவேண்டிய முழு வருமான வரியில் $2\frac{1}{2}$ சதவிகிதம் கூடுதலான தீர்வையாகக் கொடுக்கும்படி எதிர் பார்க்கப்பட்டது. இது ஒரு காப்புறுதியைப் போன்ற நிதியாகும். அது பண்டமாகவே வசூலிக்கப்பட்டது.

குடியானவர்களின் நலனில் ஷெர்ஷா மிக்க கருத்துச் செலுத்தி ஞர். ஃபிரோஸ் துக்ளக்கைத் (Firoz Tughluq) தவிர, மற்ற எந்த இடைக்கால இந்திய அரசரும் இப் பட்டானிய அரசர் செய்தது போல இலட்சக்கணக்கான மக்களின் நலனைப் பாதுகாக்க முயல வில்லை. குடியானவர்களுக்குக் காட்டும் சலுகைகளினுல் அரசாங் கம் பெருமித இலாபத்தைப் பெறுகிறது என்று அவர் நம்பினுர். நிலத்தை மதிப்பிடும்பொழுது இளகிய மனத்துடன் நடந்துகொள் ளும்படியும், ஆனுல், வரி வசூலிக்கும்பொழுது மிகக் கண்டிப்பாக இருக்கும்படியும் ஷெர்ஷா அவருடைய அதிகாரிகளுக்கு உத்தர விட்டிருந்தார். குடியானவர்களைக் கொடுமைப்படுத்தியவர்களை அவர் தண்டிக்கத் தவறியதில்லை. படைவீரர்கள் அணிவகுத்துச் செல்லும்பொழுது பயிர்கள் மிதிக்கப்பட்டோ அல்லது மற்ற எந்த வகையிலாவது சேதமுற்ருலோ, அதற்கு நஷ்ட ஈடு அளிக்கப் பட்டது.

அம் முறையின் முக்கியக் குறையாவது—மூன்று வகைப்பட்ட நிலங்களின் சராசரி விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கை வரியாக வசூலித்ததால், மூன்ருவது வகை நிலத்திலிருந்து அதிகமாகவும், முதல்வகை நிலத்திலிருந்து குறைவாகவும் வசூலிக்கப்பட்டது. இருந்தபோதிலும், மூர்லாண்ட் சொல்லுவதுபோல, பயிர்களின் விளைச்சலில் மாறுதல்கள் கொண்டுவருவதனுல் சமமற்ற நிலை ஒரு வேளை சரியாகிவிடக்கூடும். இரண்டாவதாக, விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கையும், அளவிடுபவர்களின் கட்டணத்தையும், வரி வசூலிப் பவர்களின் கட்டணத்தையும் $2\frac{1}{2}$ சதவிகிதமாகக் கூடுதல் வரியை யும்அரசாங்கம் கோருவது அதிகமாகும். மூன்ருவதாக, நிலத்தீர்வை ஒவ்வோர் ஆண்டுக்கும் செய்யப்பட்டதனுல், குடியானவர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் வசதிக்கேடு ஏற்படுத்தியிருக்கும். நான்காவதாக, வருமான இலாகாவில் லஞ்ச ஊழல் முற்றிலும் மூழ்கடிக்கப்பட்டது என்று எதிர்பார்ப்பது இயலாததாகும். மற்றத் துறைகளைவிட இந்தத் துறையில் பணியாளர்கள் மிக்க இலாபம் பெற்றனர். ஷெர்ஷா தமது அதிகாரிகளை ஒவ்வோர் அல்லது இரண்டு ஆண்டிலும் மாற்றி, ‘அமீர்தாரி முறையின் இலாபங்களையும் நலன்களையும் பலர் பங்கிட்டுக்கொள்வதற்காக’ வாய்ப்பு அளித்தார். ஐந்தாவதாக, ஜாகீர் முறை நீடித்து நிலைத் திருந்தது ; ஜாகீர்தார்கள் தமது ஆட்களின்மூலமாகத் தமது

ஜாகீர்களைக் கவனிக்க அனுமதிக்கப்படவில்லை என்பது நம்பத் தகாதது போலும். இராச்சியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஜாகீர்கள் இருந்தமையால், ஜாகீர்களிலிருந்து குடியானவர்கள் இயல்பாகவே கஷ்டப்பட்டிருக்க வேண்டும்.

ஆனாலும், மொத்தத்தில், விவசாயிகள் மிகக் கஷ்டப்பட்டிருக்க மாட்டார்கள். ஏனெனில், அவர்களுடைய நலனை ஷெர்ஷாவே நேரில் கவனித்து வந்ததோடு, எவ்விதத்திலும் அவர்களைக் கொடுமைப்படுத்தியவர்களையெல்லாம் அவர் கடுமையாகத் தண்டித்தார். நடுத்தரத் தலைவர்களை அவர் முற்றிலும் ஒழித்துவிடாவிடினும், அவர்களுடைய அதிகாரத்தை அவர் செயல்முறையில் நீக்கிவிட்டார். உண்மையில், தனிப்பட்ட குடியானவனுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் நேரிடையான தொடர்பை அவர் ஏற்படுத்தினர். அவரது வருமான முறை ஜமீந்தாரி முறையன்றி ரயத்வாரி முறையேயாகும்.

அரச இல்லம், சிவில், இராணுவ நிறுவனங்கள் ஆகியவை முக்கியச் செலவு இனங்களாகும். கட்டடங்களைக் கட்டுவதிலும், சாலைகள், சராய்கள், இதர பொதுநலப் பணிகள் ஆகியவற்றைக் கட்டுவதிலும் வருமானத்தின் பெரும்பகுதி செலவிடப்பட்டது. ஷெர்ஷா தமது ஆட்சிக் காலம் முழுவதும் இராணுவப் படையெடுப்புகளிலேயே கழித்ததனல், தமது போர்களுக்காக அவர் ஏராளமான பணத்தைச் செலவிட்டிருக்கவேண்டும். அறக்கொடை நிறுவனங்களின்மீதும் அரச வருவாயின் பெரும்பகுதி செலவிடப்பட்டது. 'தரும சமயலறைகள்'மட்டும் நாம் வேறோர் இடத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல், கருவூலத்திலிருந்து ஓர் ஆண்டுக்கு 18,25,000 ரூபாய் செலவழித்தன.

நாணயம்

நாணயத்துறையில் சீர்திருத்தம் கொண்டுவந்தது ஷெர்ஷாவின் அடுத்த மிகப் பெரிய சாதனையாகும். அரியணையேறிய பொழுது நாணயப் பற்றுக்குறை, நடப்பில் இருந்த நாணயங்களின் தாழ்ந்த நிலை, பலவகை உலோகங்களால் செய்யப்பட்ட நாணயங்களுக்கிடையில் குறிப்பிட்ட ஒரு வீதத் தொடர்பு இல்லாமை ஆகியவற்றின் விளைவாக நாணய முறை சிதறுண்டிருந்ததை ஷெர்ஷா அறிந்துகொண்டார். அப்பொழுது மற்ருேர் இடையூறும் இருந்தது. அதாவது, முந்திய அரசர்களின் காலத்திய, உண்மையில் எல்லாக் காலத்திய நாணயங்களும் செலாவணியாகப் பயன்படுத்தப்பட்டுவந்தன. ஏராளமான புதிய வெள்ளி நாணயங்களை அச்சிடுவதற்காக ஷெர்ஷா நடவடிக்கைகள் எடுத்தார். இவை

பின்னாட்களில் டாம் (dam) என வழங்கப்பட்டுவந்தன. வெள்ளி ரூபாயும் செப்பு டாம்களும் அவர்களது பாதி, கால், அரைக்கால், பதினாறில் ஒன்று ஆகிய நாணயங்களையும் கொண்டிருந்தன. அடுத்து, அவர் பழைய நாணயங்களையும் கலப்பு உலோக நாணயங்களையும் ஒழித்தார். செப்புக் காசுகளுக்கும் வெள்ளி நாணயங்களுக்குமிடையில் வீதத் தொடர்பையும் அவர் நிர்ணயித்தார். அவரது வெள்ளி ரூபாய் 180 குன்றிமணி எடை பெற்றிருந்தது. அக் குன்றிமணிகளில் 175 குன்றிமணிகள் சுத்த வெள்ளியாகவே இருந்தன. இந்த ரூபாய் அதனின் முத்திரையில்லாமல் முகலாயர்களின் காலம் முழுவதும் பயன்படுத்தப்பட்டன; கிழக்கு இந்தியக் கம்பெனியாரும் அதை 1835ஆம் ஆண்டுவரை பயன்படுத்தி வந்தனர். வி. ஏ. ஸ்மித் (V. A. Smith), 'இது தற்போதைய பிரிட்டிஷ் நாணயத்தின் அடிப்படையாகும் (1947ஆம் ஆண்டு வரை)' என்று நியாயமுறவே கூறுகிறார். அந்த நாணயங்களின் மேல் ஷெர்ஷாவின் பெயரும், பட்டமும், நாணயம் அச்சடிக்கப்பட்ட இடமும் அராபிய எழுத்தில் பொறித்துவைக்கப்பட்டிருந்தன. சில நாணயங்களில் அவருடைய பெயர் தேவநாகரி (Devanagari) கைப்படியெழுத்திலும், சில நாணயங்களில் முதல் நான்கு கலிபாக்களின் பெயர்களும் கூடுதலாகப் பொறிக்கப்பட்டிருந்தன. 166·4 குன்றிமணிகள், 167 குன்றிமணிகள், 168·5 குன்றிமணிகள் போன்ற பல்வகைப்பட்ட எடையுள்ள சுத்த தங்க நாணயங்களிலும் அச்சிடப்பட்டன. டாமுக்கும் (dam) ரூபாய்க்குமிடையிலிருந்த வீதத் தொடர்பு அறுபத்து நான்கு ஒன்றாக இருந்தது. பல்வகைப்பட்ட தங்க நாணயங்களுக்கும் வெள்ளி நாணயங்களுக்குமிடையில் இருந்த வீதத்தொடர்பு நிரந்தரமான அடிப்படையில் அமைந்திருந்தது. இந்த நாணயச் சீர்திருத்தங்கள் மிக்க பலனை விளைவித்தன; பொதுமக்களும் வர்த்தகக் குழுவினரும் அனுபவித்துவந்த பல இன்னல்களையும் இச் சீர்திருத்தங்கள் விலக்கின. தற்காலத்திய நாணயத்துறை அறிவு வல்லுநர்கள் இவற்றைப் பாராட்டியுள்ளனர். உதாரணமாக, எட்வர்ட் தாமஸ் (Edward Thomas) என்பவர் பின்வருமாறு கூறுகிறார்: 'ஷெர்ஷாவின் ஆட்சிக் காலம் நாணயச்சாலை சீர்திருத்தங்களுக்காகவும், முன்னாள் அரசர்களுடைய நாணயங்களின் சீர்கேட்டைத் தடுத்தற்காகவும், பின்னால் வந்த முகலாயர்கள் தாங்கள் கொண்டு வந்ததாக உரிமை பாராட்டிய சீர்திருத்தங்களை நுழைத்ததற்காகவும் இந்திய நாணயங்களின் வரலாற்றில் ஒரு திருப்பமாகும்.'

வாணிபம்

ஒவ்வொரு மாகாணத்தின் எல்லையிலும், ஒவ்வொரு மாவட்டத்தின் எல்லையிலும், உண்மையில் சொல்லப்போனால், ஒவ்வொரு

தோணித் துறையிலும், ஒவ்வொரு முக்கிய சாலையிலும் வசூலிக்கப் பட்ட தீர்வைகளை ஷெர்ஷா தவிர்த்து, வாணிபத்திற்கு ஊக்கமளித் தார். விற்கப்படவேண்டிய பொருள்களை இடம்விட்டு இடம் மாற்றும்பொழுது இரண்டு வகைத் தீர்வைகளையே வசூலிக்கவேண் டும் என்று அவர் உத்தரவிட்டார். ஒரு தீர்வை அவரது இராச் சியத்தில் வங்காளத்திலுள்ள சோனார்கோனிலோ (Sonargaon) அல்லது பஞ்சாபிலுள்ள ரோடாஸ்காரிலோ (Rohtasgarh) அல்லது வேறு ஏதாவது எல்லையிலோ விற்கப்படுவதற்கான பொருள்கள் நுழையும்பொழுது வசூலிக்கப்பட்டதாகும்; மற்றொன்று விற்பனை யாகும் இடத்தில் வசூலிக்கப்பட்டது. எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது என்பது நமக்குத் தெரியவில்லை. ஒருவேளை விதிக்கப்பட்ட தீர்வை பொருள்களின் விலையில் $2\frac{1}{2}$ சதவிகிதமாக இருக்கக்கூடும். எல்லா உள்நாட்டுச் சுங்கங்களும் ஒழிக்கப்பட்டன. இச் சீர்திருத்தம் வாணிபத்திற்கு ஊக்கமளித்து வியாபாரத்தைச் செம்மையாக வளரச் செய்தது.

நீதி

நீதி வழங்கும் இடைக்கால அரசர் என்று ஷேர்ஷா புகழ் பெற்றிருந்தார். அவருடைய புகழ் தமது குடிமக்களின் நலனில் தனிப்பட்ட அக்கறை காட்டியதன் அடிப்படையிலுமன்றி, திறமை படைத்த நீதி வழங்கு முறையின் அடிப்படையிலும் அமைந் திருந்தது. காலந் தொட்டு வரும் வழக்கத்தின்படி முதன்முதலாக விசாரிக்கப்படும் வழக்குகளையும் அப்பீலில் வரும் வழக்குகளையும் அவரே விசாரித்தார். அவரது நீதிமன்றம் ஒவ்வொரு புதனும் கூடியது. அவருக்கு அடுத்து இராச்சியத்தின் முதன்மை காஸி இருந்தார். அவர் நீதித் துறையின் தலைவராவார்; அதன் நிருவாகத்தின் பொறுப்பை அவர் ஏற்றிருந்தார். முதன்மை காஸியின் நீதிமன்றம் அப்பீல் நீதிமன்றமாக இருந்தபோதிலும், முதன்முதலாக விசாரிக்கப்படும் வழக்குகளிலும் அது தீர்ப்பளித்தது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவேளை எல்லா முக்கிய நகரங் களுக்கும் ஒரு காஸி இருந்தார். மாவட்டத்தின் சிவில் நீதி வழங்கும் பொறுப்பை முதன்மை முன்சீப் (Munsif) ஏற்றிருந்தார்; அதே போன்ற பொறுப்பை பர்கானுக்களில் அமீன்கள் ஏற்றிருந்தனர். ஒருவேளை காஸிகள் குற்ற வழக்குகளையும் அமீன்கள் சிவில் வழக்குகளையும் விசாரித்திருக்கக்கூடும். மீர் ஆதில் (Mir Adil) என்ற மற்றொரு நீதித்துறை அதிகாரியும் இருந்தார்.

உன்னதமான நீதித்தத்துவங்கள் ஷெர்ஷாவுக்கு ஊக்க மளித்தன. ஏழைகளுக்கும் பலமற்றவர்களுக்கும் உதவி செய்வ திலும் அவர்களைக் கொடுமைகளிலிருந்தும் அநீதியிலிருந்தும் காப்பாற்றுவதில் ஷெர்ஷா மிக்க அக்கறை செலுத்தினார்.

கீழ்த்தர மக்கள், ஏழைகள் ஆகியவர்களின் வழக்குகளைவிட அரசாங்க அதிகாரிகளின் வழக்குகளிலோ, பிரமுகர்களின் வழக்குகளிலோதாம் கடுமையாக நடந்துகொள்ளும் கொள்கையை அவர் எப்பொழுதும் பின்பற்றினர். மேலும், நீதி வழங்கு முறையில் தமது மிக நெருங்கிய உறவினர்களுக்கும் அவர் சலுகைகள் காட்டியதில்லை. ஒரு பொற்கொல்லனின் மனைவி அவனது மனையில் குளித்துக்கொண்டிருக்கும்பொழுது அவள்மீது வெற்றிலை எறிந்த ஷெர்ஷாவின் மைத்துனருக்கு விதிக்கப்பட்ட தக்க தண்டனை ஒன்றைப்பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. அவ் வரசன் தமது யானையின்மீது வீட்டு வழியாகப் போய்க்கொண்டிருக்கும்பொழுது இந் நிகழ்ச்சி நடந்தது. அவரது பிரபுக்களின் முறையீட்டையும் ஷெர்ஷா பொருட்படுத்தாது அந்தத் தண்டனையை விதித்தார். ஷெர்ஷாவின் விழிப்பானதும் ஒருசார்பற்றதுமான நீதியைப்பற்றிய நிகழ்ச்சிகள் பல குறிப்பேடுகளில் காணலாம். மாளவத்தின் கவர்னரான ஷுஜாத்கான் 2,000 படைவீரர்களின் ஜாகீரை நியாயமின்றிப் பறித்துக்கொண்டார். அதற்கிடையில் ஷுஜாத்கான் ஜாகீர்களைத் திருப்பிக்கொடுத்துத் தமது தவற்றைத் தவிர்த்த போதிலும், அக் குற்றத்தைப்பற்றிய செய்தியை ஷெர்ஷா கேட்டவுடன் ஷுஜாத்கானுக்குத் தக்க தண்டனை அளிக்கும்படி உத்தரவிட்டார். ஷெர்ஷா தமது குடிமக்களின் நலனில் மிக்க கருத்துச் செலுத்தினர் என்பதைப்பற்றியும், அவரது படைவீரர்கள் அணிவகுத்துச் செல்லும்பொழுது அவர்களது பயிர்களுக்குச் சேதம் விளைவித்தால் அதற்கு ஷெர்ஷா நஷ்ட ஈடு கொடுத்தார் என்பதைப்பற்றியும் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். ஒரு நியாயமான அரசர் என்று ஷெர்ஷா பெற்ற புகழ் அவர் மறைவிற்குப் பிறகும், அவருடைய வமிசத்தின் மறைவிற்குப் பிறகும் நெடுங்காலம்வரை நிலைத்திருந்தது. 'தபகாதி நாஸ்ரி' (Tabaqat-i-Nasiri) என்ற நூலை எழுதிய ஆசிரியரான நைஸாமுத்தின் அகமது (Nizamudhin Ahamad), 'ஷெர்ஷாவின் ஆட்சிக் காலத்தில் ஒரு வியாபாரி அவரது பொருள் கொள்ளையடிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சமின்றிப் பாலைவனத்திலும் செல்லலாம், தூங்கலாம்' என்று 16ஆம் நூற்றாண்டின் இறுதிக் கால்பாகத்தில் எழுதியுள்ளார். அக் கொள்ளைக்காரர்களும் திருடர்களும் அவ் வியாபாரிகளின் பண்டப் பொருள்களைக் காவல் புரியும் அளவுக்கு ஷெர்ஷாவைப்பற்றிய அச்சமும் நீதி வழங்குவதில் அவர் கொண்டிருந்த விருப்பமும் இருந்தன.

பாதுகாவலர் (Police)

ஷெர்ஷாவின் காலத்தில் தனிப்பட்ட பாதுகாப்புத்துறை எதுவும் கிடையாது. இருவகையான கடமைகளை நிறைவேற்றும்படி

படைவீரர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டது. அதாவது, நாட்டை அந்நியப் படையெடுப்புகளிலிருந்து காப்பதும், மக்களுக்கிடையில் அமைதி நிறுவுவதும் ஆகும். சர்க்காரில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது முதன்மை ஷிக்தாரின் பொறுப்பாகும். உண்மையில் கூறப்போனால், அவர் தமது அதிகார எல்லைக்குள் அமைதியின் காவலராவார். பர்கானுவில் இருந்த ஷிக்தாரும் அதேபோன்ற பணியை ஆற்றினர். அவர்களது அதிகார எல்லையிலுள்ள திருடர்கள்மீதும், கொள்ளைக்காரர்கள்மீதும், ஒழுக்கங்கெட்ட மற்றவர்கள்மீதும் விழிப்பான கவனத்தைச் செலுத்தும்படியும் அவர்களைத் தண்டிக்கும்படியும் அவ்வதிரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. கிராமங்களைப் பொறுத்தவரை ஷெர்ஷா, தலப்பொறுப்புக் கொள்கையினைப் புகுத்தி, கிராமத் தலைவர் தமது கிராமத்தில் நிகழ்ந்த குற்றங்களையெல்லாம் கண்டுபிடிக்கும் பொறுப்பை ஏற்கும்படி வற்புறுத்தினர். குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கக் கிராமத் தலைவனுக்குக் காலஅளவு விதிக்கப்பட்டிருந்தது; அதற்குள் அவர் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியவில்லையெனில், கொள்ளையடிக்கப்பட்டதனாலோ திருடப்பட்டதனாலோ இழக்கப்பட்ட பொருளுக்கு அவர் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். அவ்விதம் செய்ய அவர் தவறியதனால் அவர் கொல்லப்பட்டார். ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களின் எல்லைகளில் குற்றம் நடந்திருந்தால், அக் கிராமங்களின் தலைவர்கள் அக் குற்றவாளியைக் கண்டு பிடிக்கவோ அல்லது நஷ்டஈடு தரவோ வேண்டியிருந்தது. இம் முறை கிராமவாசிகளின் மனயியல், இடைக்காலக் குடிமக்களின் நிலைமை ஆகியவைபற்றிய அறிவின் அடிப்படையில் அமைந்திருந்தது. பொதுவாக, கிராமத் தலைவர் தமது கிராமத்திலுள்ள ஒழுக்கங்கெட்டவர்களைப்பற்றி அறிந்திருந்தார். எக் குற்றமும் அவருக்கு மிக எளிதில் தெரிந்துவிடும். எனினும், குற்றவாளியைக் கண்டுபிடிக்காவிடின் மரணதண்டனை விதிக்கப்படும் என்பது நமது கண்ணோட்டத்தில் மிகக் கடுமையாக இருக்கிறது. இருந்தபோதிலும், அம் முறை இடைக்காலத்துக்கு மிக்க உகந்ததாகும் என்று டாக்டர் கானுங்கோ கூறுவதனால் அது நியாயமானதே என்று அவர் கருதுகிறார்.

இடைக்கால வரலாற்றறிஞர்கள் ஷெர்ஷாவின் போலீஸ் நிர்வாகத்தை வானளாவப் புகழ்ந்துள்ளனர். அப்பாஸ் சர்வானி (Abbas Sarwani) என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்: 'சுற்றுப் பயணிகளும் வழிப்போக்கர்களும் ஷெர்ஷாவின் ஆட்சிக்காலத்தில் விழிப்பாக இருக்கவோ, பாலைவனத்தின் நடுவில் தங்குவதற்குப் பயப்படவோ வேண்டியதில்லை. இரவில் ஒவ்வோர் இடத்திலும் அவர்கள் முகாமிட்டனர்; அல்லது பாலைவனத்தில் எங்கும் எவ்வித

அச்சமுமின்றி அவர்கள் குடியிருந்தனர். அவர்களுடைய சொத்தையும் பொருள்களையும் தரையில் வைத்துவிட்டுத் தமது கோவேறு கழுதைகளையும் மேயவிட்டுவிட்டுத் தமது சொந்த வீடுகளில் தூங்குவதுபோல எவ்விதக் கவலையுமின்றி அவர்கள் தூங்கினார்கள். சுற்றுப்பயணிகளுக்கு ஏதாவது தீங்கு விளைந்துவிட்டால் ஜமீன்தார்களை எங்கே சிறையிலடைத்துவிடுவார்களோ என்று பயந்துகொண்டு அவர்கள் சுற்றுப்பயணிகளுக்குக் காவல் புரிந்தனர். ஷெர்ஷாவின் ஆட்சியின்பொழுது, முதுமை தளர்ச்சியுற்ற மூதாட்டி ஒருத்தி கூடை நிறையப் பொன் அணிகளைச் சுமந்துகொண்டு பயணம் செய்யலாம்; எந்தத் திருடனோ, கொள்ளைக்காரனோ அவளை நெருங்க முடியாது. ஏனெனில், ஷெர்ஷா விதித்த தண்டனைக்கு அவர்கள் பயந்துகொண்டிருந்தனர்.'—எல்லியட் (Elliot), பகுதி V, பக்கங்கள் 432-433.

நகரங்களின் பாதுகாவல் ஏற்பாடுகளைப்பற்றி வெகு சிறிதே நமக்குத் தெரிந்துள்ளது. அமைதியை நிலைநாட்டுவதற்கும் கீழ்ப்படியாதவர்களை அடக்குவதற்கும் ஒவ்வொரு முக்கிய நகரிலும் முகலாயக்காலத்திய கொத்தவாலை (Kotwal) ஒத்திருந்த ஓர் அதிகாரி இருந்திருக்கவேண்டும். தலைநகரத்தில் தக்க போலீஸ் நிருவாகம் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அதைப் பற்றிய குறிப்பான விவரங்கள் நமக்கு எட்டவில்லை.

சாலைகளும் சத்திரங்களும்

சாலைகள் அமைப்பதில் ஷெர்ஷா ஒரு வல்லுநர். தொன்மை மிக்க இந்து அரசர்களின் பாதையிலேயே ஷெர்ஷாவும் நடந்து சென்று, தமது இராச்சியத்தின் பல்வேறு பகுதிகளையும் தலைநகருடன் இணைக்கப் பல சாலைகளை அமைத்தார். அச் சாலைகளுள் நான்கு மிகச் சிறப்பு வாய்ந்தவை. கிழக்கு வங்காளத்திலுள்ள சோனார்கோனிலிருந்து ஆக்ரா, டெல்லி, லாகூர் வழியாக சிந்துவுக்குச் செல்லும் ஒரு பாதை 1,500 கோஸ் நீளமாக இருந்தது. அது சராகி ஆஸம் (Sarak-i-Azam) என வழங்கப்பட்டுவந்தது. அது தற்போதைய நாட்டு நெடுஞ்சாலை எனக் கொள்ளலாம். இரண்டாவது சாலை ஆக்ராவிலிருந்து புர்ஹான்பூருக்கும் (Burhanpur), மூன்றாவது சாலை ஜோத்புரியிலிருந்து சித்தூருக்கும், நான்காவது சாலை லாகூரிலிருந்து முல்தானுக்கும் சென்றன. எல்லாச் சாலைகளும் சரிவரத் திட்டமிடப்பட்டு, அவைகள் சென்றுகொண்டிருந்த நாட்டின் முக்கிய நகரங்களோடு இணைக்கப்பட்டிருந்தன. சாலைகளின் இருபுறங்களிலும் ஷெர்ஷா பழவகை மரங்களை நட்டுவைத்தார். சாலைகள் நெடுக 1,700 காரவான் சத்திரங்களை (Caravan Sarais) ஷெர்ஷா கட்டினார்.

இந்துக்களும் முஸ்லிம்களும் தனித்தனியாக வசிப்பதற்கு இல்லங்கள் கட்டிவைக்கப்பட்டன. அஞ்சல் அல்லது செய்தித்துறைச் சேவகர்களின் குதிரைகளை நிறுத்திவைப்பதற்காகத் தனி வசதிகள் செய்துவைக்கப்பட்டன. ஒவ்வொரு சராயிலும் ஒரு கிணறும் மசூதியும் இருந்தன. மசூதிக்கு ஓர் இமாமும் (Imam) மௌஸ் ஸினும் (Muazzin) இருந்தனர். அமைதி காப்பதற்கும் குற்றங்கள் புரிவதைத் தடுப்பதற்கும் ஒவ்வொரு சராயிலும் ஒரு போலீஸ் அதிகாரி (ஷிக்தார்) நிறுத்தப்பட்டிருந்தார். சராய்கள் பயணி களுக்குப் பயனுள்ளனவாக இருந்ததுமன்றி அவைகள் குறிப்பாகப் பணியாட்களுக்கும் தபால்துறை சிப்பந்திகளுக்கும் ஓய்வு விடுதிக ளாகவும் பயன்பட்டுவந்தன. அவர்களுக்கு உணவுப் பொருளும் கொடுக்கப்பட்டது. இவ் வகுப்பினர் இந்துக்களாகவும் முஸ்லிம்க ளாகவும் இருந்ததனுல், அவரவர்களுடைய உணவுக்காகத் தனித்தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு சராயின் பேணுதலுக்காக சராயின் சுற்றுப்புறங்களிலுள்ள நிலம் அறக் கொடையாக அளிக்கப்பட்டிருந்தது. டாக்டர் கானுங்கோவின் கருத்தில், ‘இச் சராய்கள் பேரரசின் உண்மை உயிர்நாடிகளாகும்.’ ‘சாலைகளும் சராய்களும் ஷெர்ஷாவின் நிர்வாகத்திற்கு இன்றியமை யாதவையாகும். அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்படுதல், காரியங் களைத் துரிதமாகச் செய்து முடித்தல், படைவீரர்கள் எக் காலமும் அணிவகுத்துச் செல்லுதல், திரும்பிவருதல் ஆகியவை அந் நிர்வா கத்தின் சிறப்பு அம்சங்களாகும்’ என்று அவ்வாசிரியர் மேலும் கூறுகிருர். சாலைகளும் சராய்களும் படைகளை ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்குக் கொண்டுபோக உதவியதுமன்றி, அஞ்சல் துறையின் தபால் நிலையங்களாகவும் (dak chaukis), இராச்சியத் தின் பல தொலைவான பாகங்களிலிருந்து செய்தி கொண்டுவரும் கருவிகளாகவும் பணியாற்றின. இம் முறை இந் நாட்டிற்குப் புதிய தன்று; ஆனுலும், ஷெர்ஷா அதை மீண்டும் அபிவிருத்தி செய்தார்.

ஒற்றர்கள் துறை

அல்லாவுத்தீன் கில்ஜியினது தபால் நிலைய முறையையும் ஒற்றர்கள் முறையையும் ஷெர்ஷா புதுப்பித்தார். தரோகா-இ-தாக் (Darogha-i-Dak Chauki) என்ற ஓர் அதிகாரியை அத் துறையின் தலைவராக அவர் நியமித்தார். ஏராளமான செய்தி எழுத்தாளர்களும் செய்தி கொண்டுபோவோர்களும் அவருக்குக்கீழ் பணியாற்றினர் ; பேரரசின் ஒவ்வொரு பகுதியிலும் நிகழும் முக்கிய நிகழ்ச்சிகளையெல்லாம் திரட்டியளிப்பது அவர்களது பொறுப்பாகும். ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, அரசருக்குரிய அஞ்சல்களை சராய்களில் நிறுவப்பட்டிருந்த சேவகர்கள் கொண்டுசென்றனர்.

ஒற்றர் துறையின்மூலமாக ஷெர்ஷா இராச்சியத்தின் ஒவ்வொரு பகுதியுடனும் தொடர்பு கொண்டிருந்தார். பொருள்களின் விலைகளைப்பற்றிய அன்றாடக் குறிப்புகளும் அரசனுக்கு எட்டின. செய்தி கொண்டுசெல்பவர்களும் ஒற்றர்களும் எல்லா முக்கிய நகரங்களிலும் அங்காடிகளிலும் நிறுத்திவைக்கப்பட்டனர். எந்தச் செய்தி அரசனுக்கு எட்டவேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்களோ, அதை அரசவைக்கு அனுப்பிவைக்குமாறு அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இத் துறை மிகத் திறமையுடன் பணியாற்றியதால், மாகாணங்களில் நியமிக்கப்பட்டிருந்த படைவீரர்களின் மனநிறைவற்ற நிலை, ஜமீந்தார்கள், சிற்றரசர்கள் ஆகியவர்கள் கிளர்ந்தெழுவதற்காகக் கொண்டிருந்த எண்ணங்கள் ஆகியவற்றைப்பற்றிய செய்திகள் அப் பகுதிகளில் வெளிவருவதற்கு முன்பே ஷெர்ஷா பெற முடிந்தது. உதாரணமாக, ஷுஜாத் கான் அநியாயமாக 2,000 வீரர்களின் ஜாகீர்களைப் பறித்துக் கொண்டதனால் அவ் வீரர்கள் அதிருப்தி கொண்டிருந்ததைப்பற்றிய தகவல் ஷுஜாத்கானுக்கு எட்டுவதற்கு முன்பே ஷெர்ஷாவுக்கு எட்டிவிட்டது. ஷெர்ஷாவின் நிர்வாகத்தின் வெற்றி பெரும்பாலும் அவரது ஒற்றர் முறையின் அடிப்படையில் அமைந்திருந்தது.

சமயக் கொள்கை

ஷெர்ஷாவின் சமயக் கொள்கையைப்பற்றித் தற்கால ஆசிரியர்கள் பல்வகையான கருத்துகளைக் கொண்டுள்ளனர். இந்துக்களுடன் அவர் அறிவு படைத்த ஒரு பொறுமைக் கொள்கையைப் பின்பற்றினார் என்று டாக்டர் கானுங்கோ ஷெர்ஷாவுக்குப் பெருமையளிக்கிறார். இந்து சமயத்தினை ஷெர்ஷா வெறுத்துக் கொண்டே அனுமதித்ததன்றி மரியாதையுடன் நடந்துகொள்வதான மனப்போக்கினையும் கொண்டிருந்தார் என்று டாக்டர் கானுங்கோ கருதுகிறார். அதற்கு மாறாகப் பேராசிரியர் ஸ்ரீராம் ஷர்மா (Prof. Sri Ram Sharma), ஷெர்ஷா அவருடைய சமயக் கருத்துகளிலும் நடத்தையிலும் டெல்லி சுல்தானியத்தைச் சார்ந்த துருக்கிய, ஆப்கானிய அரசர்களைவிடச் சிறந்தவரல்லர் என்று கருதுகிறார். அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையில் ஷெர்ஷா ஒரு வைதீக சுன்னி முசல்மானுவார் என்று மேல்குறிப்பிட்ட இரு ஆசிரியர்களும் உட்பட யாவரும் கருதுகின்றனர். அவர் அன்றாடம் ஐந்து முறை தொழுகைகள் நடத்தினார்; ரம்ஜான் (Ramzan) மாதத்தில் நோன்பு நோற்பதிலும் தமது சமயம் வற்புறுத்திய பல்வகைச் சடங்குகளைப் பின்பற்றுவதிலும் அவர் தவறியதில்லை. மேலும், அவர் இந்நாட்டில் இஸ்லாமின் கண்ணியத்தையும் சிறப்பையும் காத்தவராவார். இராசபுத்திர வீரர்களுக்கெதிராகப் புனிதப்

போர் தொடுத்துத் தமது முஸ்லிம் தோழர்களின் சமய உணர்ச்சிகளைப் பல வேளைகளில் அவர் வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளார். புரான்மல்லுக்கெதிராக அவர் தொடுத்த போர், அந்த இராசபுத்திரஅரசர் இஸ்லாமுக்கு இழைத்த கொடுமைகளுக்காக அன்னாரைத் தண்டிக்க நடத்திய போராகும். 'புனிதப் போர்' (Jihad) என்று அதிகாரபூர்வமாக அதற்குப் பெயர் வழங்கப்பட்டது. ஜோத்புரியைச் சார்ந்த மால்தேவருக்கெதிராக அவர் நடத்திய படையெடுப்பு, அரசியல் காரணங்களுக்காகவும் இராணுவ காரணங்களுக்காகவுமே எனினும், சமய உணர்ச்சி என்னும் முலம் பூசப்பட்டிருந்தது; அவரது வெற்றிக்குப் பிறகு ஷெர்ஷா ஜோத்புரியிலிருந்த அரணின் கோயில்களை இடித்து, அவ்விடங்களில் மசூதிகளைக் கட்டினர். அதேபோலக் கலிஞ்சார் முற்றுகையின்பொழுதும் சமயப் பொறையின்மையை அவர் வெளிப்படுத்தினர். ஷெர்ஷா சமயத்துறையில் ஒரு சார்பற்றவர் என்றே இந்து சமயத்தினிடம் மரியாதையுடன் நடந்துகொள்ளும் மனப்பான்மையைக் கொண்டிருந்தார் என்றே கூறுவது சரியன்று. அதே சமயத்தில், இந்துக்களைத் தாழ்மையானவர்களென்றும், அவர்களது மதம் ஏற்க அருகதையற்றதென்றும், அதுபொறவியலாதது என்றும் கருதிவந்த முகலாயருக்கு முந்திய சுல்தானியர் வகையை ஷெர்ஷா சேர்ந்தவரன்று. ஷெர்ஷாவைப்போல இவ்வாறு விதிவிலக்கானவர்கள் குறிப்பிடத்தக்க ஒருசிலரேயாவர். ஷெர்ஷாவின் சொந்த உணர்ச்சிகளும் கருத்துகளும் ஒருபுறமிருக்க, பொதுவாக அவர் ஒரு சமயப் பொறையுடைய அரசராவார். சமயத்திற்காகத் துன்புறுத்தும் கொள்கையைப் பின்பற்றுவது நல்லதன்று என்றும் அவர் கருதினர். அவர் இந்துக்களைத் தொல்லைப்படுத்தாது, அவர்கள் தம் மதத்தை எவ்வித இடையூறும் தடையுமின்றிப் பின்பற்ற அனுமதித்தார். கூடியவரையில் அவர் மதத்தையும் அரசியலையும் கலக்கவில்லை. ஓர் இந்து அரசனின்மீது நடத்திய ஒரு படையெடுப்பின்போது அவர் காட்டிய சமயவெறி நிகழ்ச்சிகளை விலக்கிவிட்டால், அவருடைய ஆட்சிக் காலம் முழுவதிலும் சில உருவங்களை உடைத்தல், கோயில்களை இடித்தல், இந்துக்களுக்கு எதிராகத் திட்டமிட்ட பிரசாரம் செய்தல் போன்ற நிகழ்ச்சிகள் எதுவும் நிகழவில்லை. இராணுவத்தின் வருமானத் துறையில் இந்துக்களை நியமித்ததை அவருடைய சமயப்பொறைக் கொள்கைக்குச் சான்ருக எடுத்துக்கொள்ள முடியாவிடினும் (அரசியல் நிருவாகத் தேவைகளுக்காக இத் துறைகளில் சிந்துவில் எட்டாம் நூற்ருண்டில் அராபியர்களின் ஆட்சி நிலைநாட்டப்பட்டதிலிருந்து இந்துக்கள் நியமிக்கப்பட்டுவந்தனர்) ஷெர்ஷாவின் காலாட்படையின் பெரும்பகுதி இந்துக்களையே கொண்டிருந்தது. வருமானத் துறை, ஒற்றர் துறை ஆகியவைகளில் நியமிக்கப்

பட்டிருந்த கீழ்த்தர அதிகாரிகளில் பலர் இந்துக்களாகவே இருந்திருக்கவேண்டும். ஆகையால், சாதாரணச் சூழ்நிலைகளில் தமது குடிமக்கள் பெரும்பாலோரின் சமயத்தினிடம் ஷெர்ஷா பொறுமையுடன் நடந்துகொண்டார் என்றே கூறவேண்டும்.

கட்டடங்கள்

கட்டடங்கள் கட்டுவதில் ஷெர்ஷா மிக்க விருப்பம் கொண்டிருந்தார். வடமேற்கு எல்லையில் தமது பாதுகாப்பை வலுப்படுத்த விரும்பிய அவர், ஜீலம் நதிக்கரையில் சிறப்பு மிக்க ஓர் அரணைக்கட்டி, அதற்கு ரோடாஸ்கர் என்று பெயர் வழங்கினர். ஒவ்வொரு சர்க்காரிலும் ஓர் அரணைக் கட்டி, மண் சராய்களைச் செங்கற் கட்டடங்களாக மாற்றி, அவற்றை நெடுஞ்சாலைகளின் பாதுகாப்பிற்காக வரிசை வீடுகளாகப் பயன்படுத்த ஷெர்ஷா விரும்பினர் என்று கானுங்கோ கூறுகிருர். ஆனல், அவரது ஆட்சி ஒரு குறுகிய ஆட்சியாக இருந்ததால், இச் செயலை அவர் சாதிக்க முடியவில்லை. டெல்லியிலுள்ள புராணகில்லா (Purana Qila) ஷெர்ஷாவால் கட்டப்பட்டதென்று கருதப்படுகிறது. அதனுடைய அடைப்புக்குள் அவர் ஒரு பெரிய மசூதியைக் கட்டினர். அம் மசூதி இந்திய-இஸ்லாமியக் கட்டடக் கலைக்கு ஒரு சிறந்த மேற்கோளாகும் என்று கருதப்படுகின்றது. ஃபர்குசனின் (Fergusson) கூற்றின்படி, 'அது ஷெர்ஷாவின் கட்டடங்களுள் மிகச் சிறந்ததாகும்.' பீஹாரிலுள்ள சாசரத்தில் இருக்கும் அவரது சொந்தக் கல்லறை ஷெர்ஷாவின் கட்டடக் கலையின் மிகச் சிறந்த மேற்கோளாகும். 'குறுகிய காலமே ஆட்சி புரிந்ததும் நிலையற்றதுமான சூர் வமிசம், தன்னுடைய உயிருக்காக மிகக் கடுமையாகப் போரிடவேண்டியிருந்ததனல், கட்டடக்கலையில் கருத்துச் செலுத்தியிருக்கக்கூடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஷெர்ஷா அவ் வமிசத்தின் மிகச் சிறந்த அங்கத்தினராவார். ஆனலும், சூர் வமிசம் பல சிறந்த கட்டடங்களைக் கட்டியுள்ளது. சாசாரத்தில் ஓர் ஏரிக்கிடையில் ஓர் உயர்ந்த பீடத்தில் கட்டப்பட்டிருக்கும் ஷெர்ஷாவின் கல்லறை, இந்தியாவின் மிக அழகாகவும் சிறப்பாகவும் கட்டப்பட்டிருக்கும் கட்டடங்களில் ஒன்ருகும். வடக்கு மாகாணங்களில் மேன்மைக்கும் கம்பீரத்துக்கும் முந்திய கட்டடங்களில் அதற்கு நிகரில்லை. கன்னிங்ஹாம் (Cunningham) தாஜ்மகாலையும்விட (Tajmahal) கிட்டத்தட்ட அதன்மீது விருப்பம் செலுத்தினர். அந்தக் கலைப்பாணி துக்ளக் கட்டடங்களின் துறவறத் தன்மைக்கும் ஷாஜஹான் சிறப்புப் படைப்பின் பெண்டிருக்குரிய வனப்புக்கும் இடைப்பட்ட பாணியாகும்' என்று வி. ஏ. ஸ்மித் கூறுகிருர் (History of Fine Arts in India

and Ceylon, பக்கங்கள் 405-406). ஹாவெல்லின் (Havel) கூற்றின் படி, இக் கல்லறை ஷெர்ஷாவின் ஆளுமை, குணவியல்பு ஆகியவற்றின் உருவப்படமாகும். அக் கட்டடத்தின் சற்றுக் கரடுமுரடாக இருக்கும் வெளிப்புறம் ஷெர்ஷாவின் குணவியல்பினது கடுகடுப்பான வெளிப்புறத்தைப் புலப்படுத்தினுலும், அதன் அழகான உட்புறம் 'கனிவு வழிந்தோடும் இதயத்தைக் காட்டுகிறது' என்று கானுங்கோ மேலும் கூறுகிருர். ஷெர்ஷாவின் கட்டடங்களை அவற்றின் சிறப்பு வாய்ந்த பாணிக்காகவும், சிறந்த முறையில் உருவாக்கப்பட்டதற்காகவும், கலை நிறைந்த அலங்காரங்களுக்காகவும் பெர்சி பிரௌன் (Percy Brown) வானளாவப் புகழ்கிருர். சூர்வகைக் கட்டடக் கலை சைய்யிதுகள், லோடிகள் ஆகியவர்களின் கட்டடக் கலைக்குப் பெருவாரியாக மேம்பட்டதாகும் என்றும், முகலாயர்களின் கம்பீரமும் வன்மையும் படைத்த கட்டடக் கலையின் அடிப்படையாகும் என்றும் அவர் கருதுகிருர்.

ஷெர்ஷாவின் குணவியல்பும் அவரைப்பற்றிய மதிப்பீடும் : அவரது அன்றாட நடைமுறையொழுங்கு

டெல்லி அரசவையுடன் தமது முந்திய நாட்களில் பெருமளவு தொடர்பு எதுவும் பெற்றிராதவர் வட இந்தியாவின் முஸ்லிம் சுல்தான்களில் ஷெர்ஷா ஒருவரே ஆவார். அவர் தம் தந்தையின் ஜாகீரினது சிவில் மேற்பார்வையாளராக வாழ்க்கை தொடங்கினுர்; தமது திறமைகளின் விளைவாக இந்துஸ்தானத்தின் பேரரசராளுர். அவரது காலத்துக்கு முன்பும் பின்பும், இந்துஸ்தானத்தின் எவ்வரசனும் இப் பட்டாணியனைப்போலத் தம் அரியணையில் வீற்றிருந்தபொழுது நிர்வாகத்தின் எல்லாக் கிளைகளையும்பற்றிய மிக ஆழ்ந்த அறிவு பெற்றிருக்கவில்லை. முதிர்ச்சிபெற்ற அறுபத்தெட்டாம் வயதில் ஷெர்ஷா அரசராளுர். தமது வாழ்க்கையின் அந்திப் பொழுதில் இறைவன் தமக்கு இறைமை அளித்தான். என்று ஷெர்ஷா கூறினுர் என்று சொல்லப்பட்டாலும், அவரது பேரவாவை வயது தணித்துவிடவில்லை; இருபத்தைந்து வயதினரான ஓர் இளைஞன் பின்பற்றுவதற்குத் தகுதியுற்ற அறிவாற்றலையும் உடலாற்றலையும் ஷெர்ஷா வெளிப்படுத்தினுர். இராச்சியத்தின் விவகாரங்களுக்காக அவர் ஒவ்வொரு நாளும் பதினுறு மணிக்கும் மேற்பட்ட காலத்தைச் செலவழித்தார் என்று எல்லா வரலாற்றறிஞர்களும் ஒருமித்துச் சான்று கூறுகின்றனர். அவருக்கு முன்பிருந்த அசோகர், சந்திரகுப்த மௌரியர் ஆகியவர்களைப் போலவும், அவருக்குப் பிறகு வந்த அக்பரைப் போலவும் 'எப்பொழுதும் சுறுசுறுப்பாகச் செயலில் ஈடுபட்டிருத்தல் பெரியோர்களுக்கு இன்றியமையாத்தாகும்' என்ற பொன்மொழியில் அவரும் நம்பிக்கை

வைத்திருந்தார். இரவில் மூன்றில் இரு பாகம் கழிந்துவிட்டதும் எழுந்துகொள்வது ஷெர்ஷாவின் பழக்கமாகும் என்று அப்பாஸ் சர்வானியும் ரிஸாக்-உல்லா முஸ்தாகியும் (Rizaq-Ullah Mushtaqi) கூறுகின்றனர். மேனி கழுவுதலுக்கும் தொழுகைக்கும் பிறகு அரசாங்கத்தின் விவகாரங்களைக் கவனிப்பதில் அவர் ஈடுபட்டு விடுவார். முதன்முதலாகப் பல்வேறு இலாகாக்களின் செயலா ளர்கள் வந்து, அவரவர்களுடைய இலாகாக்களில் நடந்த நிகழ்ச்சி களைப்பற்றி அறிவிப்பர். 'நாட்டின் விவகாரங்களைப்பற்றியோ, அரசாங்க நிறுவனங்களின் நிலைமையைப்பற்றியோ வாசிக்கப்படும் அறிக்கைகளை அவர் நான்கு மணிநேரம் கேட்பார். அவர் இட்ட ஆணைகள் எழுதப்பட்டு வெளியிடப்பட்டு நிறைவேற்றப்பட்டன; அதைப்பற்றி மேலும் விவாதம் தேவையில்லை. இங்ஙனம் அவர் காலைப்பொழுது (ஃபஜர்-fajar) தொடங்கும்வரை சுறுசுறுப்பாக வேலையில் முனைந்திருந்தார்' (Waqayat-i-Mushtaqi in Elliot, பாகம் IV, பக்கம் 550). காலைத் தொழுகைக்குப் பிறகு அவர் படையைக் கூர்ந்து மேற்பார்வை செய்வதற்காக வெளியே வந்து விடுவார். படைவீரர்கள் பட்டியல் அவர் முன்னிலையிலேயே வைக் கப்பட்டது. படைக்குப் புதிய போர்வீரர்கள் நியமனம் செய்யப் பட்டனர். அவர்களுடைய அங்க அடையாளங்கள் எடுக்கப் பட்டு அவர்களுக்குத் தரப்பட்ட குதிரைகளுக்கு அதிகாரச் சின்னங்கள் கொடுக்கப்பட்டன. பிறகு அவர் காலையுண்டி அருந் தினர். அது முடிந்ததும், அவர் அரசவையைக் கூட்டினர். அங்கே நடுப்பகல்வரை விவகாரங்களைக் கவனித்துவந்தார். பிரபுக்களையும் சிற்றரசர்களையும், வெளிநாட்டு அவைகளிலிருந்து வந்த தூதர் களையும் வரவேற்பதே அவரது கவனத்தை ஈர்த்தது. பல்வேறு பர்காஞக்களிலிருந்து வருவாயை அவர் பரிசீலனை செய்து, வருவாய் செலவு கணக்குகளைக் கவனித்தார். பிறகு அவர் நடுப் பகல் தொழுகையை முடித்துவிட்டு ஓய்வு எடுத்துக்கொள்வார். அவரது சொந்தக் கவனத்தை ஈர்க்கும் முக்கிய விவகாரம் ஏதா கிலும் இருப்பின், அதையும் அவர் கவனிப்பார். இல்லையெனில், அவர் தமது மாலைவேளையைக் குர்ரான் வாசிப்பதிலும், கற்றறிந்தவர் களின் கூட்டத்திலும் செலவழித்தார். இதுதான் அவரது வாழ்க் கையின் அன்றாட நடைமுறையொழுங்காகும். ஷெர்ஷா தலை நகரில் இருப்பினும் இராணுவப் படையெடுப்பில் முனைந்திருப்பினும், அவர் இவ்வொழுங்கிலிருந்து சற்றும் தவறியதில்லை.

மனிதர் என்ற நிலையில் அவரை ஆராய்தல்

ஷெர்ஷா பணக்காரக் குடும்பத்தில் பிறக்காததனுலும் வாழ்க் கையில் பல இன்னல்களுக்குட்படவேண்டியிருந்ததனுலும், உயர்

குடியாளராகப் பிறந்தவருக்குரிய கவர்ச்சியையும் பண்பையும் அவர் பெற்றிருக்கவில்லை. மேலும், ஹசன் அலிகான் (Hasan Ali Khan) எழுதிய 'தாரிகி தௌலதி ஷெர்ஷாஹி' (Tarikh-i-Daulat-i-Sher Shahi) என்ற முதல்தர சமகாலத்திய பாரசீக ஆதாரத்திலிருந்து, ஷெர்ஷா தமது இள வயதில் நேரத்தை வீணுக்குபவராக இருந்தார் என்றும், ஒழுக்கங்கெட்ட இளைஞருடைய நடைமுறைப் பழக்கங்களையே அவரும் பெற்றிருந்தார் என்றும் தெரியவருகிறது. பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் பிள்ளை என்று அவரை வருணிக்க முடியாது. ஏனெனில், தமது மாற்றாந்தாயுடன் மிக்க பற்றுக் கொண்டவராக இருந்த அவருடைய தந்தையுடன் அவருக்குப் பல சச்சரவுகள் இருந்தன. அவர் தம் தாயிடம் கொண்டிருந்த போக்கைப்பற்றி வெகு சிறிதே தெரிந்துள்ளது. தங்களுடைய பாதுகாவலரும் குடும்பத் தலைவருமாயிருப்பவர் காட்டிய கொடுமைக்கு இவ்விருவருமே பொதுவில் ஆளாகி வேதனையுற்றதனால், இவர்களுக்குள் ஒருவர்மேல் ஒருவருக்குப் பற்றுத் தோன்றலாயிற்று என்று கொள்ளலாம். அவர் தமது மனைவிகளிடத்தில் பற்றுக்கொண்டில்லைபோலும். அவரைப்போலவே பல மணங்கள் புரிந்துகொண்டிருந்த முகலாய அரசர்கள் பலர் அவ்விதப் பற்றுதலுக்காகப் புகழ்பெற்றிருந்தனர். தமது குழந்தைகள்மீது இவர் தனிப்பட்ட அன்பு செலுத்தினர் என்பதற்கும் சான்று கிடையாது. மனிதர்களுடனும் விவகாரங்களுடனும் இவர் பயனெறிமுறைக் கோட்பாட்டுடன் நடந்துகொண்டதனால், எவர்மீதும் இவர் அளவு மீறிய பற்றுதலைக் கொண்டில்லைபோலும்.

சிறப்பாகக் கல்விப் பயிற்சி பெற்றிருந்தாலும், அராபிய-பாரசீக மொழிகளில் சிறப்பாக அறிவு படைத்திருந்தாலும், வரலாற்றை விரும்பினாலும், ஷெர்ஷாவை எப் பொருளிலும் ஒரு கற்றறிஞர் என்று கொள்ளமுடியாது. இலக்கியம், வரலாறு ஆகியவற்றை அறிதல் அவருக்கு ஒரு முடிவாக இல்லை. செயல்முறையில் பயனுள்ளதாக இருப்பதனால்தான் அவர் அவற்றை போஷித்தார். ஒவ்வொரு வைதீக முகம்மதியனும் குர்ராணை அவசியம் படிக்க வேண்டியிருந்ததனால், அவர் அதை நாள்தோறும் படித்தார். டெல்லியைச் சார்ந்த மற்றத் துருக்கிய ஆப்கானிய-சுல்தான்கள் கற்றறிந்தவர்களுக்கு எவ்வளவு ஊக்கமூட்டினர்களோ, அதேபோல இவரும் ஊக்கமூட்டினர்; ஆனாலும், இவரது அரசவையிலிருந்த எந்தக் கற்றறிஞரும் வரலாறு, அரசியல், பொருளாதாரம், அல்லது அநுபூதிநெறி ஆகியவைபற்றிச் சிறப்புமிக்க நூல் எதையும் எழுதவில்லை; விஞ்ஞான நூல்களைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அறிவு வளர்ப்பதற்கும் சிறந்த நூல்களைக் கொணர்வதற்கும் எவ்வளவிற்கு அவரது புரவலர்தன்மை பயனளித்தது என்பதைப்

பொருட்படுத்தாமல் தற்கால அறிஞர்கள் அவரைக் கல்வியின் புரவலர் என்று புகழ்ந்துள்ளனர்.* ஆனாலும், கட்டடங்கள் கட்டுவதில் அவர் பெரு விருப்பங் கொண்டிருந்தார். அவருடைய கட்டடக் கலைப் பாணி அவருக்கு முந்தியவர்களைவிடச் சிறப்பு வாய்ந்ததாகும்.

படைவீரர் என்ற நிலையில் அவரை ஆராய்தல்

ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல ஷெர்ஷா படைவீரர் தொழிலை மேற்கொண்டிருக்கவில்லை. ஆனாலும் அவர் ஓர் இராணுவ தளபதியின் மகனானதாலும், அக்காலத்தில் தற்காப்புக்காக ஒவ்வொருவரும் வலிந்து தாக்குவதற்கும் தற்காப்புக்குமுரிய ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு அறிந்திருக்கவேண்டியிருந்ததனாலும், இளமையில் ஷெர்ஷா இராணுவப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். அவரது தந்தையின் ஜாகீரில் கிளர்ந்தெழுந்த ஜமீன்தார்களுக்கெதிராக அவர் நடத்திய படையெடுப்புகள் அனுபவம் பெற்ற படைவீரரும் தளபதியும் ஆற்றவேண்டிய பணியை அவர் உணர்ந்திருந்தார் என்பதைக் காட்டுகின்றன. ஒரு படைவீரர் என்ற நிலையில் அமைதியையும், வீரத்தையும், ஆற்றலையும், அசாதாரணப் பொறுமையையும், சுறுசுறுப்பையும் அவர் படைத்திருந்தார். ஒரு தளபதி என்ற நிலையில் அவர் ஒவ்வொரு படையெடுப்பிலும் முதிர்ச்சிபெற்ற திறமையையும் சாதுர்யத்தையும் தவறாமல் வெளிப்படுத்தினார். படையெடுப்பின்பொழுது ஒவ்வோர் இடத்திலும் அவர் தங்கியபொழுது திடீர்தாக்குதல்களிலிருந்து காத்துக் கொள்வதற்காக முன் எச்சரிக்கையாகக் காப்புகளை நிறுவி அகழிகளையும் வெட்டினார். அவர் தமது பகைவரின்மீது எக்காலமும் முன்தாக்குதல் நடத்தியதில்லை. அவரது பகைவனை விழிப்பற்றிருக்கும்படி செய்தல், அவனை மறைவான ஓரிடத்திற்குக் கொண்டு வந்து திடீரென்று தாக்குதல், பிறகு அவனை ஒரே சமயத்தில் பல திக்குகளிலிருந்தும் தாக்குதல் ஆகியவைகளெல்லாம் அவர் கையாண்ட சூழ்ச்சிகளாகும். சுறுசுறுப்பாக நடமாட்டம் செய்தல், போர் முக்கியத்துவம்பெற்ற நலன் ஒன்றைப் பகைவனைவிடத் தாமே பெறுவதற்கு முயலுதல் ஆகியவை அவரது படையெடுப்புகளின் முக்கிய அம்சங்களாகும். இராசபுத்திரர்களைப்போலன்றி இவர் ஒரே போரில் தமக்குரிய எல்லாவற்றையும் இழப்பு நேர்விற்கு உள்ளாக்கவில்லை. ஒரே ஒரு போரில் அதாவது ஜோத்புரியைச் சார்ந்த மால்தேவருடன்தான் அவர் அங்ஙனம் செய்தார்.

* அவரது காலத்தில் திகழ்ந்த குறிப்பிடத்தக்க ஆசிரியருள் ஒருவரான மாலிக் முகம்மது ஜெய்சி என்பவர் அரசருக்குத் தெரிந்திருக்கவில்லை; ஷெர்ஷாவும் அவருக்கு எவ்வித உதவியும் தரவில்லை.

அங்கேயும்கூட ஒரு சாதுர்யமான சூழ்ச்சியைக் கையாண்டு தம்மை விடுவித்துக்கொண்டார். எல்லாத் துருக்கியர் ஆப்கானியர்களைப்போல இவரும் வெற்றிபெறுவதற்காகப் போரிட்டார்; அக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகத் தாம் ஒழுங்கான அல்லது ஒழுங்கற்ற முறை எதையேனும் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும் அவர் நம்பினர். ஒவ்வொரு நாளும் அவர் தமது படைவீரர்களுடன் போரின் கடினங்களையும், வாழ்க்கையின் இன்பங்களையும் துன்பங்களையும் நுகர்ந்தார். அவர்களுடைய கூட்டத்திலிருந்து அவர் விலகிவிடாது அவர்களுடன் மிக நெருங்கிப் பழகினர். சௌசாப் போரின் தறுவாயில் ஹுமாயூனின் தூதர்கள் அவரிடத்திற்கு விஜயம் செய்தபொழுது ஷெர்ஷா தமது சட்டைக் கைகளைச் சுருட்டிக்கொண்டு அகழி ஒன்றைத் தமது படைவீரர்களுடன் தோண்டிக்கொண்டிருப்பதைக் கண்டனர். ஒரு தலைவருக்குரிய தனிப்பட்ட காந்த சக்தியை அவர் பெற்றிருந்தார்; அவருடைய ஆட்கள் அரசப் பற்றுடன் அவரிடம் பணியாற்றினர்.

ஒரு நிர்வாகி என்ற நிலையில் ஷெர்ஷாவை ஆராய்தல்

ஷெர்ஷா மிக உயர்ந்த ஆக்கும் திறம்படைத்த மேதையாவார். அக்பரைப்போல இவரும் நிர்வாகத்தின் விசாலமுற்ற மூலத் தத்துவங்களையும் நுட்பமான விவரங்களையும் புரிந்துகொள்வதற்கான திறமையைப் பெற்றிருந்தார். நாட்டின் பழைமைவாய்ந்ததும் தேர்ச்சி பெற்றதுமான நிறுவனங்களைப் புதிப்பித்து, வெற்றிகரமாக அவற்றை நிர்வகித்து, அவற்றின் குறைகளை நிவர்த்தி செய்து, புதிய கூறுகளைச் சேர்த்த மதிப்பு அவருக்குரியதாகும். அவர் நிர்வாகத்தை மாற்றி அமைத்தது, அவரது வருமானத் திட்டம், நாணய–வாணிப சீர்திருத்தங்கள் ஆகியவையெல்லாம் அவர் மத்திய காலத்தின் மாபெரு நிர்வாகிகளுள் ஒருவர் என்ற பெருமதிப்பினை அவருக்கு அளிக்கின்றன. அவரது மிகச் சிறப்பான அம்சமாவது அவர் தம்முடைய நிர்வாகத்தைச் செலுத்திய தன்மையாகும். இதன் விளைவாவது, பழைமைவாய்ந்த நிறுவனங்கள் செயல்முறையில் மாற்றம் பெற்றுக் குடிமக்களின் பரந்த நலன்களை வளர்க்க உதவியதாகும். ஷெர்ஷா ஒரு வெற்றிகரமான அரசியல் மேதையாவார். முகலாயர்களின் நிர்வாக அமைப்பின் குறைகளை அவர் மிகச் சாதுர்யமாக அறிந்துகொண்டதுமன்றி அவற்றைத் தமக்குச் சாதகமாகவும் பயன்படுத்திக் கொண்டார். நாட்டில் அதிகாரத்தின் முக்கிய கூறுகள் என்ன என்பதை அவர் புரிந்துகொண்டு அக் கூறுகள் அனைத்தின் ஆதரவைத் தமது சொந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்குத் திரட்டினர். ஆப்கானியர்களைப்பொறுத்தவரை, அவர்

களுடைய இனப் பொருமைகளை வெற்றிகரமாக ஒடுக்கி அவர்களது கிளர்ச்சியாரவாரத்தையும் அவர் அடக்கினுர். பொதுவான கருத்துப்பாங்கையும் பேரவாவையும் அவர்களுக்கு அளித்து, இன நலனுக்கும் குடும்ப நலனுக்கும் முன்பு தேசிய நலனை வைக்குமாறு அவர் வற்புறுத்தினுர். ஆப்கானியர்களின் தன்னலத்தையே கருதும் மனப்பான்மை அவருடைய ஆட்சிக் காலத்தில் வரம்புக் குட்படுத்தப்பட்டிருந்தது. இக் கடினமான செயலில் ஷெர்ஷா வைப்போல மற்ற எந்த ஆப்கானிய அரசனும் வெற்றி காணவில்லை. அரசர் என்ற நிலையில் அவர் மக்களின் நலனை நாடினுர்; குடியான வர்களின் நலனைப் பாதுகாக்கப் பெரும்பாடுபட்டார். எவ்வகையான கொடுமைப்படுத்தலும் குடியானவர்களின் உரிமைகளைப் பறித்துக் கொள்ளுதலும் அனுமதிக்கப்படவில்லை. குடியானவர்களின் பயிர் களுக்குத் தீங்கு இழைக்கப்பட்டால் அவர்களுக்கு நஷ்டஈடும் கொடுக்கப்பட்டது. அவரது சமயக் கருத்துகளிலும் பழக்கங் களிலும் அவர் ஒரு வைதீகப் பற்றுடையவராக இருப்பினும், இந்து அரசர்களுக்கு எதிராகச் செய்த தமது போர்களில் முஸ்லிம் படை வீரர்களின் மதவெறியைப் பயன்படுத்திக்கொண்டபோதிலும், இந்துக்களுடன் அவர் கொண்டிருந்த நடத்தையில் அவர் சமயப் பொறையின்மையை வெளிக்காட்டவில்லை. மதத்தை அரசிய லுடனே நிர்வாகத்துடனே கலக்கக்கூடாத அளவுக்கு அவருக்குப் போதிய அரசியல் மேதைமை இருந்தது. இந்துக்களைப் புறக்கணிக்க முடியாது என்பதை அவர் முன்னேக்குடன் உணர்ந்திருந்தார். ஆகையினுல், அவர் அவர்களது ஒத்துழைப்பைச் சிவில் நிர்வாகத் திலும் இராணுவ நிர்வாகத்திலும் நாடினுர்.

அரசர் என்ற நிலையில் ஷெர்ஷாவின் குணவியல்பின் மிக முக்கிய மான அமிசமாவது அவர் நீதி வழங்குவதை விரும்பியதாகும். 'நீதி வழங்குதல் சமயச் சடங்குகளில் மிக முக்கியச் சடங்காகும். பிற மதத்தவர்களின் அரண்களும் இறைவனை வழிபடுபவர்களின் அரசர்களும் அதை ஏற்றுக்கொண்டுள்ளனர்' என்று அவர் கூறுவதுண்டு. கொடுமைப்படுத்தப்பட்டவர்களைப்பற்றியும் நீதி நாடுபவர்களைப்பற்றியும் சரியான உண்மையைக் கண்டுபிடிப்பது அவரது கடமை என்று அவர் கருதினுர். அவர் எப்பொழுதும் சரிசம நிலையான நீதியை வழங்கினுர். கொடுமைப்படுத்துபவர்கள் அவரது பிரபுக்களாக இருப்பினும், அவருடைய நெருங்கிய உறவினர்களாக இருப்பினும் அவர்களுக்கு அவர் தளர்ச்சி காட்ட வில்லை. அவருடைய மைத்துனன் ஒருவன் ஆக்ராவில் பொற் கொல்லன் ஒருவனின் மனைவியுடன் ஒழுங்கீனமாக நடந்துகொண்ட நிகழ்ச்சியும் ஷெர்ஷா அவனுக்கு விதித்த தண்டனையும்பற்றி மற்ருேர் இடத்தில் குறிப்பிட்டிருக்கிருேம். அது அப்படியே

உண்மையாகவும் இருந்திருக்காது; ஆனாலும், அவருடைய உறவினர்களைத் தண்டிக்கவேண்டியிருப்பினும் ஷெர்ஷா நீதி வழங்குவதை விரும்பினார் என்ற மரபினை அது வெளிப்படுத்துகிறது.

ஏழைகளுக்கும் முடமாயுள்ளவர்களுக்கும் உதவும் பரந்த கொள்கையைப் பின்பற்றிய பழம் இந்தியாவின் அரசர்கள் பலரின் பாதையிலேயே ஷெர்ஷா சென்றார். ஏராளமான தொகை தர்மமாகக் கொடுக்கப்பட்டது. இராச்சியத்திலிருந்த ஏழை மக்களின் பெயர்கள் ஒரு பதிவேட்டில் குறிக்கப்பட்டிருந்தது; அவர்களுக்கு உயிர்வாழ்வதற்கான தேவைப்பொருள்கள் கொடுக்கப்பட்டன. 'தர்ம சமயலறை' ஒன்றைத் தலைநகரில் ஷெர்ஷா நிலை நாட்டினார்; அதற்காக நாள்தோறும் 500 தோலா பொன் செலவழிக்கப்பட்டது. எவர் அரசவைக்கு வரினும் அவருக்கு உணவளிக்கப்பட்டது. இத் தர்மத்திற்கே கருவூலத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 18,25,000 ரூபாய் செலவிடப்பட்டது. நிழல்தரும் பழ மரங்கள் வைக்கப்பட்ட சாலைகளைப்பற்றியும் சுற்றுப்பயணிகளின் வசதிக்காக இருந்த சராய்களைப்பற்றியும் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். இதுபோன்ற மனிதப்பண்புடைய நடவடிக்கைகள், பெருக்கமுற்றிருந்த லட்சக்கணக்கான மக்களுக்கு உதவுவதற்கும், அரசப்படைகளின் போக்குவரத்துக்காகவும், அரச அஞ்சல் விரைவில் கொண்டுவருவதற்கும் போவதற்கும் எடுக்கப்பட்டன.

ஷெர்ஷாவின் வெற்றி மிகவும் சிறப்புவாய்ந்ததாக இருந்ததால் ஆசிரியர்கள் பலர் அவரது குணவியல்பின் மறுபுறத்தைக் காணத் தவறிவிட்டனர். அவர் ஒரு சாதுர்யமான அரசியல்வாதி என்பதும் தமது குறிக்கோளை நிறைவேற்ற வஞ்சக முறைகளையும் துரோகச் செயல்களையும் அவர் அடிக்கடி கையாண்டார் என்பதும் பொதுவாக உணரப்படுவதில்லை. நேர்மையற்ற முறைகளை அனுசரித்து அவர் சூனார் அரணைக் கைப்பற்றினார். மிக உறுதியாக அளித்த வாக்கையும் அவர் மீறி ரோடாஸ்கர் அரணை அதன் அரசரிடமிருந்து கைப்பற்றினார். அவருக்குப் பின்னால் வந்த அவுரங்கசீப்பைப்போல அவரும் தந்திரங்களை அடிக்கடி கையாண்டார். பொய்க் கடிதங்களை எழுதி மால்தேவர் என்ற தமது பகைவரின் பிரபுக்களுக்கிடையில் சச்சரவுகளை விதைத்து அவர் மால்தேவரைத் தோற்கடித்தார். அவருடைய எழுச்சிக்குக் காரணம் அவருடைய இயல்பான திறமைகளுமன்றி அவரது முழு நிறைவு நிலையும் பழியஞ்சாமையுமாகும்.

வரலாற்றில் அவருக்குரிய இடம்

நிர்வாகத் திறமையிலும் உறுதியான குணத்திலும் உண்மைச் சாதனங்களிலும் ஷெர்ஷா இடைக்கால இந்தியாவின் ஒரு மிகச் சிறப்பு வாய்ந்த அரசராவார். இடைக்கால இந்தியாவின் மாபெரும் சர்வாதிகாரியான அலாவுதீன் கில்ஜியுடன் இவர் நிகராக நிற்கப் போட்டியிடுகிருர். அலாவுதீன் கில்ஜி வீரர் என்ற நிலையிலும், நிர்வாகி என்ற நிலையிலும், படைத்திறமையிலும் ஐயமின்றி ஷெர்ஷாவுக்கும் மிகச் சிறந்தவராவார். ஆனுல், அரசியல் ஆக்கும் திறனில் ஆப்கானியனுக்குத் தாழ்ந்தவரேயாவார். ஷெர்ஷாவின் நிருவாகச் செயலாற்றல் அலாவுதீனின் செயலாற்றலைவிட மிக நிலைத்ததாகவும் பயனுள்ளதாகவும் இருந்தது. அவரது நிறுவனங்கள் பொது நலனுக்குப் பயனுள்ளதாக இருந்ததுமன்றி நாட்டு வரலாற்றில் ஒரு நிரந்தரமான இடத்தையும் அவற்றை ஏற்படுத்தியவருக்கு அளித்துள்ளன. அரசர் என்ற நிலையிலும் மனிதர் என்ற நிலையிலும் அவரைவிட மேம்பட்டிருந்த அக்பருடன் அவரை ஒப்பிடுவது சரியன்று. 'போட்டியிட்டுக்கொண்டிருந்த சமயங்களைப் பின்பற்றுவோரை ஒன்ருக இணைத்து இந்திய தேசம் ஒன்றை முதல் முதலாக நிறுவினவர் என்று அக்பர் கொண்டாடும் உரிமைக்கு ஷெர்ஷா நியாயமுறவே போட்டியிடலாம்' என்று கூறுவது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. அவர் ஓர் இந்திய தேசத்தை நிறுவ விரும்பினுர் என்பதற்குச் சான்று கிடையாது. உண்மையில், ஒரு தேசம் என்ன என்பதைப்பற்றிய தெளிவான எண்ணம் அவருக்குக் கிடையாது. 'ஜெஸ்ஸியா வரியை ரத்து செய்யும் முயற்சியும், இறைச்சிக்காகப் பசுக்களைக் கொல்லாமல் இருத்தலும் அப்பொழுதிருந்த சூழ்நிலையில் பொருந்தாமல் இருந்தன. அப்பொழுது சுல்தான் சிக்கந்தரின் ஆட்சியில் இருந்த நிலையே நீடித்தது' என்று கூறுகின்ற விவாதம் பொருளற்றதாகும். இதற்கு முன்னர் இருந்த நூற்றுண்டிலே ஜெய்னுலாப்தீன் (Zain-ul-Abdin—1420-1470) காஷ்மீரத்தில் இம் முயற்சியை வெற்றிகரமாக நடைமுறைக்குக் கொண்டுவந்தார். இவருக்கு முன்னர் ஆட்சி செய்த இவரது தந்தையின் ஆட்சியில் சமயப் பொறை இல்லை. இவரை மற்ருெரு சிக்கந்தர் அல்லது வழக்கமாக விக்கிரகங்களை உடைப்பவர் என்று வழங்கினர். ஜெய்னுலாப்தீனை காஷ்மீரின் அக்பர் என்ற பெயரால் நன்றியுள்ள மக்கள் பின்பு அழைத்தனர். உண்மை என்னவென்ருல், ஷெர்ஷா இந்திய தேசத்தை நிர்மாணிக்கின்ற அளவில் எதையும் காணவில்லை. அக்பர் பட்டத்திற்கு வருகின்றபொழுது இருந்த இந்து முஸ்லிம்கள் உறவைக்காட்டிலும் அவர் இறக்கின்றபொழுது நன்ருக இருந்தது என்று கூறுவது

அக்பருடைய நினைவுக்கு நியாயம் செலுத்தத்தவறியவர்களாகிறோம். அப்படிக் கூறுவது அவருடைய கொள்கை முதலில் நியாயமற்ற தாகவோ அல்லது அறிவற்றதாகவோ இருந்ததெனக் கூறுவது போலாகும். உண்மையில் இந்திய தேசிய வளர்ச்சி ஏற்பட்ட சிறந்த நாட்களில் சத்தியம் மற்றும் அஹிம்சா என்ற உண்மைகள் இருந்தபொழுதே இருவருக்குமிடையில் இருந்த நல்லுறவுகளைக் காட்டிலும் நாட்டில் ஆங்கிலேய ஆதிக்கத்தின்பொழுது இருந்த அமைதியற்ற நாட்களிலும்கூட இந்து முஸ்லிம்களின் ஒற்றுமை சிறப்பாகத்தான் இருந்தது. இங்ஙனமான முரண்பட்ட ஒரு நிகழ்ச்சிக்கு விருப்பு வெறுப்பற்ற ஒரு வரலாற்று மாணவன் மகாத்மா காந்தியைக் (Mahatma Ghandi) குறைகூற மாட்டான். இரண்டு நிகழ்ச்சிகளுமே தவருகும். இவ்விரண்டு நிகழ்ச்சி களிலும் முஸ்லிம் சமுதாயத்தின் ஆக்கிரமிப்பு இயல்பினும் தம் நாட்டோடு இணைந்திராத பிற நாடுகளின்மீதுள்ள பற்றிலும் குறை காணலாம். தனது பழைய இறைமையை நீடித்து வைத்துக் கொள்ளும் வரையிலும் அல்லது புதிய இறைமை ஒன்றை நிலை நாட்டும் வரையிலும் அச் சமுதாயம் மற்றச் சமுதாயங்களோடு இணைந்திருப்பதில் நம்பிக்கை பெற்றிருக்கவில்லை. ஷெர்ஷாவை ஊக்குவித்தது அவரது அறிவுபடைத்த தன்னலமேயன்றித் தற்கால ஆசிரியர் ஒருவர்* தவருக வற்புறுத்துவதுபோல அவருடைய தேசியப் பற்றன்று. அக்பரைத் தவிர மற்ற எந்த இந்திய முஸ்லிம் அரசரும் இந் நாட்டின்மீது தேசப்பற்றுக் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. மேலும், இந்தியா ஷெர்ஷாவின் தாய்நாடன்று. மற்ற ஆப்கானிய அரசர்களைப்போல அவரும் ஆப்கானிஸ்தானத்தி லிருந்து ஆப்கானியரை வரவழைத்து இந்நாட்டில் தமது நிலையை வலுப்படுத்திக்கொள்வதற்காகவும் ஒரு கடமைக்காகவும் அவர் களுக்கு நிலங்களை வழங்கினுர்.

ஷெர்ஷாவின் தளர்ச்சியுரு உழைப்பு, கடமையின்மீது பற்று, எண்ணற்ற சீர்திருத்தங்கள், நீதி வழங்குவதில் விருப்பம் ஆகியவையெல்லாம் இந்திய வரலாற்றில் ஷெர்ஷாவுக்கு மதிப் பிடத்தையளித்துள்ளன. மாண்புமிக்க அக்பரைத் தவிர மற்ற எந்த இடைக்கால இந்திய அரசரும் மக்களின் நலனுக்காக இவர் உழைத்ததுபோல உழைக்கவில்லை. மனிதர்களின் தலைவர் என்ற நிலையிலோ நிறுவனங்களை நிறுவியவர் என்ற நிலையிலோ அல்லது ஒரு நிர்வாகி அல்லது அரசியல் மேதை என்ற நிலையிலோ அவரை மதிப்பிடுவதென்ருல் அவரது முன்னோர்களைவிட அவர் மிகச் சிறப்பு வாய்ந்தவராவார். ஆப்கானிய ஆசிரியர்களும் சமீபகால

* S. R. Sharma, vide, his Crescent in India.

வரலாற்றாசிரியர்கள் சிலரும் அவரைப் புகழ்ந்துள்ளபோதிலும், அவருடைய நிருவாகம் முழு நிறைவு பெற்றதாக இருக்கவில்லை; ஆகையினால் குறைகூறலுக்கு அப்பாற்பட்டதன்று; இருந்த போதிலும், மன்னனுக்கு அளிக்கக்கூடிய நலத்திற்குச் சமமான நலத்தையே, ஏன், அதைக்காட்டிலும் மிகையான நலத்தையும் கூட மக்களுக்கு அளிக்கும்படி அது அமைந்திருந்தது. 'இந்தியாவின் முஸ்லிம் அரசர்களில் இவர் மிகப் பெரியவர்' என்ற சர் உல்ஸ்லி ஹேக் (Sir Woolseley Haig) என்பவரின் கருத்தை இந் நூலாசிரியர் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆனாலும், இந்திய வரலாற்றில் அவர் மிக்க உயர்நிலையை அடைந்துள்ளார். அவ்விடம் அக்பருக்கு அடுத்திருக்கிறது. 'வரலாற்றில் உயர் இடம் பெறுவதற்கு ஷெர்ஷாவைவிட அக்பர் தகுதியுள்ளவர்' என்று டாக்டர் கானுங்கோ உண்மையாகவே குறிப்பிடுகிறார்.

இஸ்லாம் ஷா (Islam Shah), 1545—1553

முந்திய வாழ்க்கை

இஸ்லாம்கானின் முந்திய பெயர் ஜலால்கான் (Jalal Khan) என்பதாகும். அவர் ஷெர்ஷாவின் இளைய மகனாவார். அவர் அரியணையேறிய சமயத்தில் ஓரளவு கற்றறிந்தவராகவும் பாரசீக மொழியில் ஒரு கவிஞருமானதால் அவருடைய இள வயதில் ஓரளவு சிறப்பான கல்விப் பயிற்சி அவர் பெற்றிருக்கவேண்டுமென்று யூகிக்கலாம். ஆனாலும், அவர் பெரும்பாலும் ஒரு வீரராவார்; இந்துஸ்தானத்தின் அரசராகப் பதவியேற்பதற்கு முன்பு பலமுறை அவரது இராணுவத் திறமைக்கு அவர் சான்று காட்டியுள்ளார். அவர் 1531-ல் சூனார்கரைத் தற்காப்புச் செய்தது ஹுமாயூனின் மனத்தில் மிக ஆழமாகப் பதிந்திருந்ததனால், ஒப்பந்தம் செய்துகொள்ளும்பொழுது முகலாயப் பேரரசரிடம் ஷெர்ஷா ஒப்படைத்த ஆப்கானியப் படையின் பொறுப்பை ஜலால்கானே மேற்கொள்ள வேண்டும் என்று ஹுமாயூன் வற்புறுத்தினார். 1537-ல் நடந்த கௌர் முற்றுகையில் அவர் பெரும் பங்கு பெற்றார்; பிறகு வங்காளத்தின் வாயிலாக இருந்த தெலியார்காரின் பாதுகாப்புப் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்விடத்தில் அவர் தலைமையின்கீழ் ஆப்கானியர்கள் முகலாயப் படையை முதன்முதலாகத் தோற்கடித்தனர். 1539, 1540 ஆண்டுகளில் சௌஸா, கானோஜ் போர்களிலும் அவரது தந்தையின் முக்கியப் பகுதி ஒன்று அவர் பொறுப்பில் வைக்கப்பட்டது. அவ்விரு போர்களிலும் பெரு வீரத்தையும் இராணுவத் திறனையும் அவர் வெளிப்படுத்தினார். ரெய்சின், ஜோத்புரி அரசர்களுக்

கெதிராக நடத்திய படையெடுப்புகளில் அவர் தமது தந்தையுடன் ஒத்துழைத்தார். கலஞ்சார் முற்றுகையில் ஷெர்ஷா ஈடுபட்டிருக்கும்பொழுது ரீவாவை (Rewa) அடிபணியவைக்க ஜலால் அனுப்பப்பட்டார்; ஆனால், ஷெர்ஷாவின் அகால மரணத்தின் விளைவாக இச் செயலைச் சாதிக்க முடியவில்லை.

இஸ்லாம் ஷா அரியணையேறுவதற்கு முன்பு அவருடைய நிர்வாகச் சாதனைகளைப்பற்றி மதிப்பிடப் போதிய சான்று கிடையாது. ஷெர்ஷாவின் பல்வகைப்பட்ட சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதற்கும், நாட்டில் அமைதி ஏற்படுத்துவதற்கும் ஷெர்ஷா அவரைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்பதுமட்டும் உண்மையாகும். ஆகையினால், 1545ஆம் ஆண்டுக்கு முன்பே இஸ்லாம் ஷா நிறைய நிருவாக அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

அரியணையேறுதலும் ஆதில்கானுடன் போட்டியிடுதலும்

ஷெர்ஷா 1545, மே மாதம் 22ஆம் நாள் அன்று கலஞ்சாரில் தீக்கிரையானபொழுது அவருடைய மூத்த மகனை ஆதில்கான் ரான்தம்போரிலும், ஜலால்கான், கலஞ்சாருக்கு 85 மைல் தென் கிழக்கிலிருக்கும் ரீவாவிலும் இருந்தனர். மறைவுற்ற அரசர், ஆதில்லைத் தமக்குப்பின் அரசராக வரவேண்டியவராக நியமித்திருந்தபோதிலும் அவருடைய பிரபுக்கள் ஜலால்கானையே விரும்பி நாடினர். ஜலால்கான் செயலூக்கமுள்ளவரும் ஆயுதங்களைத் திறமையுடன் பயன்படுத்துவதில் வல்லுனருமாவார். அவருடைய மூத்த சகோதரர் கடினமற்ற வாழ்க்கையை விரும்புபவரும் சிற்றின்பங்களில் மூழ்கியவருமாவார். அதுவுமன்றி, ஜலால் வெகு அருகில் இருந்தார்; அரியணையை நீண்ட காலமாகக் காலியாக வைப்பது பேராபத்தாகும் என்றும் அப்பொழுது கருதப்பட்டது. ஆகையால், ஈசாகான் ஹஜீபின் (Isa Khan Hajib) தலைமை கொண்ட பிரபுக்கள் ஜலால்கானிடம் ஒரு தூதரை அனுப்பி, அவரை உடனே வந்து அரசராகத் தமது தந்தையின் இடத்தைப் பெறுமாறு அழைத்தனர். ஜலால் 1545, மே மாதம் 27ஆம் நாள் கலஞ்சார் அடைந்தார்; அந்நாளிலேயே முடிசூட்டப்பெற்றார். இஸ்லாம் ஷா என்ற பட்டப்பெயரை அவர் புனைந்துகொண்டார்.

கலஞ்சாரைச் சார்ந்த சந்தேள அரசரான கிராத் சிங்கையும் அவருடைய எழுபது முக்கிய உடனுட்களையும் இஸ்லாம் ஷா தமது ஆட்சியின் துவக்கத்திலேயே கொன்றார். படையின் ஆதரவைப் பெறுவதற்காக அவர் படைவீரர்களுக்கு இரண்டு மாதச் சம்

பளத்தை ரொக்கமாகக் கொடுத்தார். அதில் ஒரு மாதச் சம்பளம் பரிசாக வழங்கப்பட்டது. பிறகு, தாம் இளவரசராக இருந்த பொழுது வைத்திருந்த சொந்தப் படையில் 6,000 வீரர்களுக்கு அவர் பதவி உயர்வளித்தார். சாதாரண வீரர்கள் அதிகாரிகளாகவும், அதிகாரிகள் அமீர்களாகவும் உயர்த்தப்பட்டனர். இவ்வறிவுக் கேடான செயல் பழைய பிரபுக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது. அதிருப்தி கொண்ட பிரபுக்களுள் சிலர் மறைவாக ஆதில் கானுடன் சேர்ந்துகொண்டனர். சந்தேகங்கொண்ட அரசர் தமது சகோதரரை ஆக்ராவுக்கு வரும்படி எழுதி அனுப்பினார். அரியணையேறியதற்குப் பிறகு, அவரே அந்நகருக்கு நேரில் சென்று இராச்சியத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அவ்விராச்சியம் அவருக்கே உரியதாகும். குதுப்கான் நாயெப் (Qutub Khan Naib), ஈசாகான் நியாஸி (Isa Khan Niyazi), கவாஸ்கான் (Khawaz Khan) ஜலால்கான் ஜுல்வானி (Jalal Khan Julwani) போன்ற பிரபல பிரபுக்கள் அவருடைய உயிருக்குப் பிணையாய் நின்ற பிறகு, ஆதில்கான் ரான்தம்போருக்குப் புறப்பட்டார். ஆனால், இஸ்லாம் ஷா ஆக்ராவில் இருக்கும்பொழுது ஆதில்கானைக் கொல்லச் சதி செய்தது வெற்றிபெறவில்லை. ஆகையினால், ஆதில் ஒரு சிறு மாகாணத்தின் கவர்னர் பதவியை ஏற்றுக்கொள்வது நலமென்று கருதி, பெயானாவுக்குப் பின்வாங்கினார். அவ்விடத்தை அரசர் அவருக்கு அளித்திருந்தார். வெளித்தோற்றத்திற்கு ஒற்றுமை ஏற்பட்டிருந்தபோதிலும், இரு சகோதரர்களுக்குமிடையில் இருந்த சச்சரவு நீடித்திருந்தது. ஆதில்கானைக் கொல்ல இஸ்லாம்ஷா பெயானாவுக்கு ஒரு கொலையாளனை அனுப்பினார். ஆதிலின் உயிருக்குப் பிணையாக நின்ற நான்கு பிரபுக்களும், அரசர் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாகக் கருதி, மறைமுகமாக அவருடைய மூத்த சகோதரருடன் சேர்ந்துகொண்டனர். ஆதில் கிளர்ந்தெழுந்தார்; கவாஸ்கான் அவருடன் வர, அவர் ஆக்ராவைத் தாக்க முன்னேறினார்; ஆனால், நகருக்கு வெளியில் நடந்த ஒரு போரில் அவர் தோல்வியுற்று, பண்ணாவுக்கு (Panna) ஓடிவிட்டார். அவருக்குப்பின் அவரைப்பற்றி யாரும் கேள்விப்படவில்லை. அவரை ஆதரித்தவர்களான கவாஸ்கானும் ஈசாகானும் மீவாட்டுக்குப் (Mewat) (ஆல்வார்—Alwar) பின்வாங்கினர். கிளர்ந்தெழுந்த பிரபுக்களைப் பின்தொடர இஸ்லாம்ஷா படை ஒன்றை அனுப்பினார். ஆனால், மீவாட்டிலுள்ள ஃபிரோஸ்பூரில் நடந்த சண்டையில் அப்படை முறியடிக்கப்பட்டது. ஆகையினால், அரசர் மற்றொரு படையை அனுப்பிவைத்தார். அப் படை கவாஸ்கானையும் ஈசாகானையும் கௌமான் குன்றுகளுக்கு விரட்டியடித்து அங்கிருந்த அரசனிடம் அடைக்கலம் புகுமாறு வற்புறுத்தியது.

பழைய பிரபுக்களை அடக்குதல்

இஸ்லாம்ஷா பெரும்பாலான பிரபுக்களின்மேல் சந்தேகங் கொண்டிருந்தார். சூனருக்குப் போகும் வழியில் அவர் ஜலால் கான் ஜுல்வானியையும் அவருடைய சகோதரரான குதாதாத் கானையும் (Khudadad Khan) கொலை செய்தார். ஆதிலின் ஆதர வாளரான குதுப்கானும் பீதிகொண்டு லாகூருக்கு ஓடி, அம் மாகா ணத்தின் கவர்னரான ஹைபத்கான் நியாஸியிடம் அடைக்கலம் புகுந்தார். ஆனல், ஹைபத்கான் அவரை அரசனிடம் ஒப்படைத்து விட்டார். குதுப்கானும் மற்றும் பல பிரபுக்களும் குவாலியர் அர ணுக்குக் கைதிகளாக அனுப்பிவைக்கப்பட்டனர். அங்கே அவர்கள் வெடி மருந்திஞல் சிதறடிக்கப்பட்டனர். இது மற்றப் பிரபுக் களுக்குப் பீதியளித்தது.

(i) நியாஸி கிளர்ச்சி (Niyazi Rebellion)

ஆதில்கான் நடத்திய கிளர்ச்சியில் பங்கெடுத்துக்கொண்ட வர்களின்மீது எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கைகள் பழைய பிரபுக்களை அச்சுறுத்தியதுமன்றி, ஷெர்ஷாவின் காலத்தில் வெற்றி கரமாக அடக்கப்பட்டிருந்த இனப் பொருமைகளையும் உயிர்ப் பித்தன. நியாஸிகள் குறிப்பாக மன நிறைவற்றிருந்தனர். சைய் யத்கான் நியாஸி (Said Khan Niyazi) பீதியுற்று ஓடி, அவரது சகோதரரும் லாகூரின் கவர்னருமான ஹைபத்கான் நியாஸியுடன் சேர்ந்துகொண்டு இவரை இஸ்லாம் ஷாவுக்கு எதிராகக் கிளர்ந் தெழும்படி தூண்டினர். கவாஸ்கானும் கிளர்ச்சியாளர்களுடன் சேர்ந்துகொண்டார். நிலைமை அச்சுறுத்துவதாக இருந்ததனல், கிளர்ச்சியை அடக்க இஸ்லாம்ஷா நேரில் சென்ருர். கிளர்ச்சி யாளர்கள் அரசனை அம்பாலாவில் (Ambala) சந்தித்தனர் (1547). நியாஸிகளுடன் சேர்ந்துகொண்டிருந்த கவாஸ்கான், போர்த் தறு வாயில் பின்வாங்கிக்கொண்டார். ஏனெனில், அரசனுக வேண்டு மென்று பேரவா பிடித்திருந்த ஹைபத்கான், கவாஸ்கான் ஆதில் கானின் ஆதரவாளராக இருக்கும்பொழுதே 'போரின் பரிசு கிரீட மாகும்' என்று அறிவித்தார். போரில் நியாஸிகள் தோற்கடிக்கப் பட்டனர். ஜீலம்வரை இஸ்லாம்ஷா அவர்களைப் பின்தொடர்ந்து சென்ருர். அங்கே ஒரு படையை விட்டுவிட்டு, அவர் ஆக்ராவுக் குத் திரும்பினர். இப் படை கிளர்ச்சியாளர்களைச் சிந்து நதிக்கரையி லிருந்த தன்காட் (Dungot—Dhankot) என்ற இடத்தில் தோற் கடித்து, கக்கார்களிடம் நியாஸிகள் தஞ்சம்புகுமாறு வற்புறுத்தியது. ஹைபத்கான், தமது இழந்த நிலையை மீண்டும் பெறுவதற்கான பேரவாவை விட்டுவிடாது சிந்து நதிப் பகுதியில் தோன்றினர்; ஆனல், அவர் மீண்டும் தோற்கடிக்கப்பட்டார். அவருடைய

தாயும் பெண்களும் சிறைப்பிடிக்கப்பட்டனர். இரண்டு ஆண்டுகளாக இஸ்லாம்ஷா அவர்களை அவமதித்தும் இகழ்ந்தும் பிறகு கொன்றுவிட்டார். கக்கார்களிடம் தஞ்சம் புகுந்த நியாஸிகள் அழிக்கப்பட்டனர்; ஆனால், இரண்டு ஆண்டுகளாகப் போர் செய்த பிறகுதான் அவர்கள் அழிக்கப்பட்டனர். ஹைபத்கான் நல்வசமாகக் காஷ்மீரத்துக்குத் தப்பி ஓடிவிட்டார். அப்பொழுது காஷ்மீரத்தின் அரசராக இருந்த மீர்ஸா ஹைதருக்கும் சக் (Chakk) இனத்துக்குமிடையில் ஏற்பட்ட ஒரு சச்சரவில் ஹைபத்கான் குறுக்கிட்டார். மீர்ஸா ஹைதரின்மீது வெற்றிகொண்ட பிறகு சக்குகள் ஹைபத்கானைத் தாக்கினர். நியாஸிகள் மிகத் துணிகரமாகப் போரிட்டனர்; ஆனால், எல்லாரும் கொலையுண்டனர்.

நியாஸிகளுக்கு அடைக்கலம் தந்த கக்கார்களுடன் இஸ்லாம் ஷா போரிட நேர்ந்தது. கக்கார் தலைவரான சுல்தான் ஆதம் (Sultan Adam) ஹுமாயூனின் நண்பராவார். இஸ்லாம் ஷாவுக்கெதிராக அவரும், ஹுமாயூனும், கம்ரானும், மீர்ஸா ஹைதரும் கூட்டுறவு ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை இருந்தது. அது போன்ற ஒரு நெருக்கடி நிகழாவண்ணம் இஸ்லாம் ஷா தற்காப்புக்காக அரண்களைச் சங்கிலிபோலக் கட்டி அவற்றுக்கு மன்காட் (Mankot) என்று பெயர் வழங்கினார் (அது சீனப்பின் கிழக்குக் கரையிலும் சையால்காட்டுக்கு 90 மைல் வட கிழக்கிலும் உள்ளது). கக்கார்களை முற்றிலும் அடக்க முடியவில்லையாயினும் நியாஸிகளை ஒழித்துத் திருப்தி கொண்டார். அவருடைய எதிரிகள் அவருக்கெதிராக ஒன்றுகிக்கூட முடியவில்லை. கவலை விட்டு நீங்கியதும் அவர் மற்றப் பிரச்சினைகளுக்கு முடிவு காணுவதில் தமது கவனத்தைத் திருப்பினார்.

(ii) ஷுஜாத்கான் கிளர்ந்தெழுதல் (Rebellion of Shujat Khan)

ஷெர்ஷாவின் காலத்திலிருந்தே உயர்தர பிரபுவும் மாளவத்தின் கவர்னருமாக இருந்துவந்த ஷுஜாத்கான் அரசனின் சந்தேகிக்கும் கொள்கையினாலும் கொடுங்கோலாட்சியினாலும் அதிருப்தி கொண்டிருந்தார். பேரவா நிறைந்த மற்ற எல்லா மனிதர்களைப்போலவே இவரும் தமது சுதந்திரத்தை வற்புறுத்த நினைத்தார். ஆனால், அம்பாலாவில் நியாஸிகளின்மீது அரசர் கொண்ட வெற்றிக்குப் பிறகு தமது அரசப் பற்றை மீண்டும் துவக்கிக்கொண்டு, குவாலியரில் இஸ்லாம் ஷாவைச் சந்தித்தார். அங்கிருக்கும்பொழுது அவரைக் கொல்ல உஸ்மான் (Usman) என்பவர் முயன்றார்; ஆனால், அவர் வெறும் காயமுற்றார். இச் சதிக்கு அரசரும் உடந்தையாக இருந்திருப்பார் என்று இவர் சந்தேகங்கொண்டு அனுமதியின்றித் தமது மாகாணத்தை விட்டுச்சென்றார். இஸ்லாம்

ஷா மாளவத்தின்மீது படையெடுத்தார்; ஆனால், ஷுஜாத்கான் போர் நடத்தாமலே பின்வாங்கிக்கொண்டார். அவர் பன்ஸ்வாரா வுக்கு (Banswara) ஓடி, இறுதியில் துங்கார்பூரில் தஞ்சம் புகுந் தார். ஆனால், பஞ்சாபில் நியாஸி கிளர்ச்சி முடிவு பெறவில்லை யாதலால் ஷுஜாத்தை சமாதானப்படுத்துவது நலம் என்று இஸ்லாம் ஷா கருதினார். ஷுஜாத்கானின் மகனும் அரசனின் ஆப்த நண்பருமான தௌலத்கான் உஜாலியாவின் (Daulat Khan Ujalia) வேண்டுகோளின்மேல் அரசர் அவரை மன்னித்து அவரது மாகாணத்தின் பெரும்பகுதியை மீண்டும் அவ்ரிடம் ஒப்படைத் தார். மாளவ மாவட்டம் மாத்திரம் அவருக்குக் கொடுக்கப்பட வில்லை. அது மற்றோர் அதிகாரிக்குக் கொடுக்கப்பட்டது.

(iii) கவாஸ்கானின் இறப்பு

கவாஸ்கான் என்பவர் ஷெர்ஷாவின் காலத்திய மற்றொரு மாபெரும் பிரபு ஆவார். அவர் சந்தேகமின்றி சூர் வமிசத்தின் மிகச் சிறப்பான வீரரும் உறுதியான ஆதரவாளருமாவார். அவர் ஆதில்கானை ஆதரித்தார் என்பதையும், அம்பாலாப் போரில் ஹைபத்கான் நியாஸியுடன் சேர மறுத்துவிட்டார் என்பதையும் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். அந் நிகழ்ச்சிக்குப் பிறகு கவாஸ் கான் கௌமான் அரசரிடம் தஞ்சம் புகுந்தார். இஸ்லாம் ஷா அவரை ஒப்படைக்குமாறு அவ்வரசரைக் கேட்டார். ஆனால், அவ் வேண்டுகோளுக்கு அவர் இணங்காததனால், இஸ்லாம்கான் தாமே கவாஸ்கானுடன் பேச்சுவார்த்தைகள் தொடங்கினார். அவரது குற்றங்களை மன்னித்துவிடுவதாக அவர் வாக்குறுதி யளித்து, அவரைத் தமது அரசவைக்கு வரும்படி வற்புறுத்தினார். கவாஸ் கான் அதற்கு இணங்கினார். ஆனால், சாம்பாலிலிருந்து (Sambhal) ஆறு மைல் தூரத்திலுள்ள சிர்சி (Sirsi) என்ற இடத்தை அடைந் ததும், அவர் தமது முகாமில் இரவில் சாம்பாலின் கவர்னரான தாஜ்கான் கர்ராணி (Taj Khan Karrani) என்பவரால் அரசனின் தூண்டுதலின்மேல் கொலையுண்டார் (1546).

இறுதி நாட்களும் இறப்பும்

இஸ்லாம் ஷா தமது அரசவையில் இருந்த மாபெரும் பிரபுக் களை அடக்குவதிலும் கொல்லுவதிலும்மட்டும் திருப்தி கொள்ள வில்லை. அவரது தந்தை காலத்திய ஆற்றல் மிக்க மாகாண கவர் னர்களையும் அவர் அடக்க விரும்பினார். ஷுஜாத்கானை அவர் எப்படி அடிபணியவைத்தார் என்பது ஏற்கெனவே குறிப்பிடப்பட் டுள்ளது. காஸி ஃபஸீலத் (Qazi Fazilat) என்பவரை அவர் வங் காள கவர்னர் பதவியிலிருந்து விலக்கி, அவ்விடத்தில் முகமுத்

கானை (Mahmud Khan) நியமித்தார். மற்ற மாகாணங்களிலும் தமது தந்தையால் நியமிக்கப்பட்ட கவர்னர்களை அவர் விலக்கித் தாமே தேர்ந்தெடுத்த ஆட்களை நியமித்தார். கிழக்கு வங்காளத்தை அவர் தமது ஆட்சியின்கீழ் கொண்டுவந்தார். ஹுமாயூன் தமது நன்றிகெட்ட சகோதரரான கம்ரானை ஒழித்துவிட்டு, இந்துஸ்தானத்தை மீண்டும் கைப்பற்ற முயன்று, முன்னேற்பாடாகக் காஷ்மீரத்தைக் கைப்பற்ற 1553-ல் புறப்பட்டார். அப்பொழுது டெல்லியில் இஸ்லாம் ஷா நோய்வாய்ப்பட்டிருந்தார். சிந்து நதியை ஹுமாயூன் கடந்துவிட்டார் என்று அவர் கேள்விப்பட்டதும், உடனே அட்டைப் பூச்சிகளைத் தொண்டையிலிருந்து எடுத்துவிட்டுச் சுகநலமற்றிருந்தாலும், படையெடுப்பாளரை எதிர்க்க முன்னேறினார். தமது பழைய பகைவரின் மகன் காட்டிய சுறுசுறுப்பினால் கலக்கமுற்ற ஹுமாயூன் காபூலுக்குத் திரும்பினார். இப்பொழுது ஆப்கானிய இராச்சியத்திற்கு எவ்வித ஆபத்தும் கிடையாதுபோலும். இஸ்லாம் ஷா குவாலியரிலிருந்த தமது விருப்பத்திற்குரிய இல்லத்திற்குத் திரும்பினார். இங்கே அதிருப்தி கொண்ட பிரபுக்கள் இவரைக் கொல்ல முயன்றனர். ஆனால், சதித்திட்டம் வெகு விரைவில் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. சதியாளர்களெல்லாம் கொல்லப்பட்டனர். இது அவரைக் கொல்ல இரண்டாம் முறை செய்த சதியாகும். முதலாவது முறை ஆட்சிக் காலத்தின் முந்திய ஆண்டுகளில் செய்யப்பட்டது. தமது ஆட்சிக் காலத்தின் பிற்பாகத்தில் இஸ்லாம் ஷா சிற்றின்பங்களில் மூழ்கிக் கிடந்தார். ஆனாலும், அதற்குச் சற்றுப் பிறகு அவருடைய மறைவிடத்தில் தோன்றிய வலிமிக்க கட்டி ஒன்றால் அவர் பாதிக்கப்பட்டார். சிகிச்சை பலனற்றுப்போய்விட்டது. 1553, அக்டோபர் 30ஆம் நாள் அவர் உயிர்நீத்தார்.

நிர்வாகம்

தமது தந்தையிடமிருந்து பெற்ற ஆட்சிப் பகுதியுடன் இஸ்லாம் ஷா கிழக்கு வங்காளத்தையும் சேர்த்துக்கொண்டார். மேலும், அவர் காஷ்மீரத்தைத் தமது இறைமையை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தினார். ஆகையினால், சூர் இராச்சியம் அவர் இறப்பின்பொழுது, 1556-ல், வடமேற்கில் சிந்துவிலிருந்து கிழக்கில் அஸ்ஸாம் குன்றுகள்வரையிலும், வடக்கில் இமயமலை தொட்டு தெற்கில் விந்தியமலை வரையிலும் பரவியிருந்தது. பிகானீர், ஜெய்சால்மெர், ஜோத்புரி இராச்சியங்களும், குஜராத்து, கத்தியவார் மாகாணங்களும் பேரரசில் அடங்கியில்லை.

இஸ்லாம் ஷா ஒரு சிறந்த நிர்வாகியாவார். உயர் பதவிகளைக் கைப்பற்றி, சிம்மாசனத்தையும் மங்கும்படி செய்திருந்த பிரபுக்

களின் அதிகாரத்தை ஒழிக்க அவர் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டார். அரசப் பதவியைப்பற்றிய அவரது கருத்து அவருடைய தந்தையின் கருத்துடன் மாறுபட்டிருந்தது. தமது ஆப்கானியத் தோழர்களுக்கிடையில் இராச்சியத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும் ஆப்கானியப் பழக்கத்தில் அவருக்கு நம்பிக்கை கிடையாது. அவரது குறிக்கோள் முகலாயர்களின் தெய்வீக அரசு கருத்தினைச் சார்ந்ததாகும்; 'சகாக்களில் முதல்வர்' என்ற ஆப்கானியக் கருத்தைச் சார்ந்ததன்று. ஏனெனில், அவருடைய மிக உயர் பிரபுக்களிடமிருந்தும் மறுக்கமுடியாத கீழ்ப்படிதலை அவர் எதிர் பார்த்தார். எந்த உயர் குடிமகனும் யானையைச் சொந்தமாக வைத்திருக்கக்கூடாது என்று அவர் அரச ஆணை ஒன்றைப் பிறப்பித்தார். மற்றோர் அரச ஆணையின்படி, அப் பிரபுக்களிடமிருந்து நடன மாதர்கள் பறிக்கப்பட்டனர். அரசரின் சிறப்பு உரிமையாக இருந்த செந்நிறக் கூடாரங்களை அவர்கள் பயன்படுத்தக்கூடாது என்றும் ஆணையிடப்பட்டது. இந்த நடவடிக்கைகளெல்லாம் உயர்குடி மக்களின் மதிப்பையும் போலி உரிமைகளையும் பெரும்பாலும் குறைத்தன. எண்பது தாள்களில் எழுதப்பட்டிருந்த உத்தரவுகளின் தொகுதி ஒன்றினைஅவர் ஒவ்வொரு மாவட்டத்திலும் பர்கானுவிலும் வெளியிட்டார். நிர்வாகத்திற்குரிய பல சட்டங்களை அவர் நிறைவேற்றினர்; அவரது அதிகாரிகளுக்கு வழித்துணையாக இருப்பதற்கு விவரங்கள் நிறைந்த உத்தரவுகள் பலவற்றை அவர் வெளியிட்டார். ஒவ்வோர் இலாகாவைப்பற்றியும் அரசாங்கச் செயலின் ஒவ்வொரு பகுதியைப்பற்றியும் அவர் சட்டங்களை நிறைவேற்றினர். அவருடைய அதிகாரிகளும் குடிமக்களும் தத்தம்முடைய கடமைகளையும் உரிமைகளையும் உணர்ந்திருக்கவேண்டும் என்று அவர் விரும்பினர். இதற்குச் சான்றுகப் பின்வரும் பதௌனியின் கூற்று அமைந்துள்ளது: 'எல்லா உத்தரவுகளும், சட்டத்திற்கு (Law—ஷரியத்—Shariat) ஒப்ப இருந்தனவோ இல்லையோ, பத்திரங்களில் எழுதப்பட்டிருந்தன. ஆகையினுல், அவற்றைப்பற்றி காஸியிடமிருந்தோ முப்தியிடமிருந்தோ விளக்கம்பெறத் தேவையில்லை. அவ்விதம் செய்தலும் தவருகும்.'

அவர் தமது தந்தையின் நிர்வாகக் கொள்கையை நிலைத்து நிற்கும்படி செய்ததோடு, ஒருசில விவரங்களில் சில முன்னேற்றங்களையும் புகுத்தினர். அவருடைய இராச்சியத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வெள்ளியன்று அரசவை கூட்டப்பட்டது. மாவட்டத்தைச் சேர்ந்த தலைவர்களும் அதிகாரிகளும் மாட மேற்கட்டில் கூடி, அங்கே சிம்மாசனத்தை யொத்திருந்த ஓர் உயர் மேடைக்கு எதிரில் வைக்கப்பட்டிருந்த இஸ்லாம் ஷாவின்

பாத அணிகள், அம்புக்கூடு ஆகியவற்றுக்கு வணக்கம் தெரிவித்தனர். இஸ்லாம் ஷாவின் ஆணைகளை அவரது செயலாளர் உரக்கப் படித்தார். சட்டத்தின் மாண்பமைதிக்கெதிராக எவரும் நடந்துகொள்ளமுடியாது. வரலாற்றறிஞரான பதௌனி (Badayuni) சிறுவனாக இருந்தபொழுது, பெயானாவுக்கு அருகிலுள்ள பஜ்வாரா (Bajwara) என்ற இடத்தில் நடைபெற்ற அரசவையை நேரில் கண்டார்; அதுபோன்ற அரசவைகள் (darbars) இஸ்லாம் ஷாவின் ஆட்சிக் காலம் முழுவதும் கூட்டப்பட்டன என்று அவர் குறிப்பிடுகிறார் (பதௌனி, பகுதி I, பக்கங்கள் 384—385).

அவர் தமது தந்தையின் இராணுவச் சீர்திருத்தங்கள் நீடித்திருக்கும்படி செய்தார். அதே சமயத்தில், தரமுறை ஒன்றை நிறுவி, படைத்துறையில் மேலும் ஒழுங்கை ஏற்படுத்தினார். அம் முறை அக்பரது மன்சப்தாரி திட்டத்தின் (Mansabdari system) அடிப்படையாக அமைந்தது. மிகச் சிறிய தொகுதி 50 படைவீரர்களைப் பெற்றிருந்தது; அதற்கும் உயர்ந்த தொகுதி 200 படைவீரர்களையும், மூன்றாவது 250 படைவீரர்களையும், நான்காவது 500 படைவீரர்களையும் பெற்றிருந்தன. 5,000, 10,000, 20,000 வீரர்களைக்கொண்ட பெரிய பகுதிகளும் இருந்தன (பதௌனி, பகுதி I, பக்கம் 385).

ஷெர்ஷா தமது சாலைகளில் நான்கு மைல் தூரத்துக்கு ஒரு சராய் கட்டிவைத்திருந்தார். இஸ்லாம் ஷா தமது தந்தையின் ஒவ்வோர் இரண்டு சராய்களுக்கிடையிலும் ஒரு சராயைக் கட்டி வைத்தார். இவற்றில், தபால் துறையைச் சார்ந்த இந்து முஸ்லிம் சிப்பந்திகளுக்குச் சமயல் செய்ததும் செய்யாததுமான உணவுப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன; ஒருவேளை சுற்றுப்பயணிகளுக்கும் அவ்வித ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடும். ஒவ்வொரு கோஸ் (Kos) தூர அளவில் ஒரு சராயைக் கட்டுவது வரி கொடுப்பவர்களின் பணத்தை வீணாக்குவதாகும். உல்ஸ்லி ஹைக் கூறுவதுபோல, இச் சராய்களில் தருமம் வழங்கும்படியான மூடப்பழக்கத்தை ஒருவேளை அவரது வீண் தற்பெருமை, அல்லது அவருடைய தந்தையின் புகழ்மீது கொண்ட பொறாமை தூண்டியிருக்கும்.

குணவியல்பு

இஸ்லாம் ஷா ஒரு திறமை வாய்ந்த வீரராவார். ஆனாலும் அவர் தம்முடைய கீழாட்களுடன் மிகவும் கொடூரமாகவும் வஞ்சகமாகவும் நடந்துகொண்டார். பிரபுக்களைத் தரைமட்டமாக்குவதான அவரது கொள்கை அசாதாரணமானதெனினும், தந்திரமற்ற முறையில் அது பின்பற்றப்பட்டது. ஆப்கானியப் பிரபுக்களுக்

கிடையில் அது அதிருப்தி விளைவித்தது என்பதிலும், தணிந்திருந்த அவர்களது பொருமையைத் தூண்டுவித்தது என்பதிலும், அவர்களிடையே சச்சரவுகளையும் கொந்தளிப்பையும் எழுப்பிவிட்டது என்பதிலும் எவ்வித ஐயப்பாடும் கிடையாது. அவரது சந்தேகம், கொடுமை, பழிவாங்கும் இயல்பு, குறுகிய மனப்பான்மை ஆகியவையெல்லாம் கிளர்ச்சியைத் தூண்டுவித்தன. அக் கிளர்ச்சிகளெல்லாம் அவர் ஆட்சிக் காலம் முழுவதும் நீடித்திருந்தன. இருந்தபோதிலும், நல்வசமாக அவர் ஒரு வெற்றிகரத் தளபதிக்குரிய குணவியல்புகளைப் பெற்றிருந்தார். அக் குணவியல்புகளின் உதவியால் அவர் தமது பிரபுக்களை அடக்கி, அவர்கள்மீது தமது விருப்பத்தை நிலைநாட்ட முடிந்தது.

எனினும், அவர் ஒரு சிறந்த வெற்றிகரப் படைவீரருக்கும் சற்று மேம்பட்டவராவார். நிர்வாகத்துக்குரிய சட்டங்களை அக்காலத்திய சமயத்துறைத் தப்பெண்ணங்களையும் பொருட்படுத்தாது அவர் பிரகடனப்படுத்தினார் என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆகையினால், அவரை டெல்லி சுல்தானியர்களுக்குள் ஒரு சட்டம் இயற்றுபவர் என்று கூறலாம். தலங்களில் வெள்ளியன்று நடந்த அரசவைக் கூட்டங்களின்மூலம் சட்டங்கள் குடிமக்களுக்கு அறிவிக்கப்பட்டு, அவை மிகக் கடுமையாக நிறைவேற்றப்பட்டன. நிகழ்ச்சி ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய அமீரான ஷா முகம்மது ஃபர்மூலி (Shah Muhammad Farmuli) ஒரு நாள் நகைச்சுவைப் பாணியில் இஸ்லாம் ஷாவிடம் பின்வருமாறு கூறினர்: 'மாட்சிமை தங்கியவரே, சென்ற இரவு நான் ஒரு கனவு கண்டேன். அதில் மூன்று பைகள் சுவர்க்கத்திலிருந்து இறங்குவதை நான் கண்டேன்; ஒன்றில் தூசும், மற்ருென்றில் தங்கமும், மூன்ருவதில் காகிதமும் நிறைந்திருந்தன. மண், வீரர்களின் தலைமேல் விழுந்தது; தங்கம் இந்து தப்தாரிகள் (daftaris—clerks—எழுத்தர்கள்) வீடுகளுக்குச் சென்றது; காகிதம் மட்டும் அரச கருவூலத்தில் தங்கிவிட்டது (பதௌனி, பகுதி I, பக்கம் 387). இக் கனவு எதைக் குறிக்கிறது என்பதை இஸ்லாம் ஷா உணர்ந்துகொண்டு, தாம் குவாலியரிலிருந்து திரும்பியதும் வீரர்களின் கணக்குகளை ஆராய்ந்து, அவர்களுக்குத் தங்கத்தில் ஊதியம் கொடுப்பதாக வாக்குறுதி தந்தார். இக் கதை தூண்டும் குறிப்பினை உட்கொண்டதாகும்; படைவீரர்களின் நிலை மிகக் கடினமாக இருந்தது என்பதைக் காட்டுகிறது. ஓர் ஆற்றல் மிக்க அரசனின் ஆட்சியில் அவர்களின் வாழ்க்கை அவ்விதமாகத்தான் இருக்கும். இந்து எழுத்தர்களின் வளமான நிலையின்மீது ஆப்கானியர்கள் பொருமை கொண்டிருந்தனரென்பதையும், இஸ்லாம் ஷாவின் அரசாங்கம் அதிகார இனத்திற்குரிய தத்துவங்களின் அடிப்படை

யில் நடத்தப்பட்டதென்பதையும், அவ்வித அரசாங்கத்துக்கு ஏராளமான கடிதப் போக்குவரத்துத் தேவையாக இருந்ததென் பதையும் அது சுட்டிக் காட்டுகிறது.

இஸ்லாம் ஷா ஒரு பண்பு மிக்க அரசராவார். அவர் சிறப் பாகக் கற்றறிந்தவர். பாரசீக மொழியில் செய்யுள்களை இயற்றி யுள்ளார். கற்றறிந்தவர்களுடன் கூடி இருத்தலை அவர் விரும்பி ஞர். கட்டடக் கலையையும் அவர் விரும்பினுர். ஒருசில அழகு வாய்ந்த கட்டடங்களையும் அவர் கட்டினுர். சிற்சில வேளைகளில் அறநெறி விவாதங்களிலும் அவர் கலந்துகொண்டார். அவரது தனிப்பட்ட வாழ்க்கையில் அவர் ஒரு வைதீகராக இருப்பினும், அவர் ஒரு மதவெறியர் அல்லர்.

பேராசிரியர் எஸ். பி. ரா‌யின் கருத்தின்படி, அவரின்கீழ் அரசப் பதவி தன் நிலமானிய இயல்பை இழந்து, நவீனத்தன்மை யுடையதாயிற்று. இருந்தபோதிலும், அவரது ஆர்வத்துக்கும் நிர்வாகத் திறமைக்கும் மாருக, அவர் சிற்சில வேளைகளில் கொடியவராகவும் வஞ்சம் தீர்த்துக்கொள்பவராகவும் நடந்து கொண்டு, தமது ஆப்கானியப் பிரபுக்களின் இன, மரபு இயல்பான தப்பெண்ணங்களையும் தூண்டுவித்தார். ஆகையினுல், அவ ருடைய வமிசத்தின் சீர்குலைவுக்கு அவர் வழிகாட்டியாஞர்.

இஸ்லாம் ஷாவுக்குப் பிறகு வந்தவர்கள் 1553–1555-ல் இந்தியாவின் நிலைமை

ஃபிரோஸ் ஷா (Firoz Shah), 1553

இஸ்லாம் ஷாவுக்குப் பிறகு பன்னிரண்டு வயது சிறுவனுன அவரது மகனுர் ஃபிரோஸ் பதவியேற்ருர். அவர் அரியணையேறிய மூன்று நாட்களுக்குப் பிறகு தம்முடைய தாய்மாமனும் நைஸாம் கான் என்பவரின் மகனுமான முபாரிஸ்கானுல் கொல்லப்பட்டார். நைஸாம்கான் என்பவர் ஷெர்ஷாவின் தம்பியாவார். முபாரிஸின் பேரவாவை இஸ்லாம் ஷா உணர்ந்திருந்தார்; அவருடைய மகனின் வழியிலிருந்து அவரை விலக்கவும் விரும்பினுர்; ஆனுல், அவருடைய மனைவியான பீபி பாயால் (Bibi Bai) அவ்விதம் செய்வதிலிருந்து தடுக்கப்பட்டார். முபாரிஸ் சிம்மாசனத்தைக் கைப்பற்றி, முகம்மது ஆதில் ஷா என்ற பட்டப் பெயரைப் புனைந்து கொண்டார். பொதுமக்கள் அவரை ஆதில் என்றழைத்தனர்.

முகம்மது ஆதில் ஷா, 1553-1557 (Muhammad Adil Shah)

செல்வத்தைத் தாராளமாகச் செலவழித்துப் பிரபுக்களைப் புதிய மன்னர் சாந்தப்படுத்த முயன்ருர். கவாஸ்கானின் சகோதரரான

ஷம்ஷீர்கானை அவர் தமது வசீராக நியமித்தார். ஆனால், அவர் தமது நன்னம்பிக்கையைக் குறிப்பாக ஹேமுவின்மீது செலுத்தி வந்தார். ஹேமு, ரீவாரியில் தெருத்தெருவாகச் சுற்றி, உப்பு விற்பவராக வாழ்க்கையைத் தொடங்கிப் பிறகு இஸ்லாம் ஷாவால் அந்தரங்கப் பதவியில் நியமிக்கப்பட்டிருந்தார். முகம்மது ஆதில் ஷா தகுதியற்ற அரசராவார். அவருக்கு ஒன்றுமே தெரியவில்லை. அவர் திறமையற்றுமிருந்தார்; மிக இழிவான கூட்டத்தையே நாடினார். அவர் குடிப்பழக்கத்தை மட்டுமீறி மேற்கொண்டிருந்ததனால், விவகாரங்களைக் கவனிக்க அவருக்குப் போதிய அவகாசம் கிடைக்கவில்லை. விவகாரங்களைச் சரிவரப் பொருட்படுத்தாதனால், பேரவா மிக்க பிரபுக்கள் கிளர்ச்சி செய்வதற்கு வாய்ப்புப் பெற்றனர். கவாஸ்கானைக் கொன்ற தாஜ்கான் கர்ரானி (Taj Khan Karrani) முதன்முதலாகக் கிளர்ந்தெழுந்தார். தற்கால ஹர்தோ மாவட்டத்திலுள்ள சிப்ரமௌவில் கிளர்ச்சியாளர் முறியடிக்கப்பட்டபோதிலும், அவர் தப்பி ஓடி பீஹாரில் கொந்தளிப்பை ஏற்படுத்தினார். இப்ராஹிம்கான் அவருக்குப் பிறகு கிளர்ந்தெழுந்தார். அவர் காஸிகான் சூரின் (Ghazi Khan Sur) மகனும் அரசனின் மைத்துனனும் ஆவார். ஆனாலும், அரசனின் சகோதரி தமது சகோதரர் ஆதிலின் கெட்ட எண்ணங்களை உணர்ந்துகொண்டு, தமது கணவரைச் சூனார் அரணிலிருந்து தப்பி ஓடிவிட உதவினாள். அவர் பெயானாவுக்கு ஓடினார். அவருக்கெதிராக அனுப்பப்பட்டிருந்த படை ஒன்றையும் அவர் தோற்கடித்தார். அவர் வெற்றியினால் புதிய ஊக்கங் கொண்டு, இப்ராஹிம் டெல்லியின்மீது படையெடுத்து, அதைக் கைப்பற்றினார். அங்கே அவர் அரசப்பட்டத்தை மேற்கொண்டார். டெல்லியை மீண்டும் கைப்பற்ற ஆதில் முயன்றார்; ஆனால், அதில் தோல்வியுற்றார். இப்ராஹிம் ஆக்ராவையும் கைப்பற்றிக்கொண்டார்.

லாகூரின் கவர்னரும் அரசரின் மற்றொரு மைத்துனருமான (ஆதில்கானின் சகோதரியின் கணவர்) அகமதுகான் சூர் கிளர்ந்தெழுந்தவர்களுள் மூன்றும் பிரபுவாவார். சிகந்தர் ஷா என்ற பட்டப் பெயரை அவர் புனைந்துகொண்டார். நான்காவது முக்கியக் கிளர்ச்சியாளர் வங்காளத்து கவர்னரான முகம்மதுகான் சூர் என்பவராவார். ஷம்ஸுத்தீன் முகம்மது ஷா காஸி என்ற பட்டப் பெயரை அவர் புனைந்துகொண்டார். இவ்விதமாக வட இந்தியா நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது; அவையாவன: சிகந்தரைத் தலைமையில் கொண்ட பஞ்சாப், இப்ராஹிம் ஷாவின் தலைமையின் கீழிருந்த டெல்லி, ஆக்ரா ஆகியவை; ஆதில் ஷாவின் தலைமையின் கீழிருந்த ஆக்ராதொட்டு பீஹார்வரையான நாடு; முகம்மது

ஷாவின்கீழ் வங்காளம். இந் நான்கு அரசர்களில் ஒவ்வொருவரும் மற்றவர்கள்மீது தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றனர். அவர்களுக்கிடையிலிருந்த இடைவிடாச் சண்டையினால் நாட்டில் குழப்பம் நிலவியிருந்தது. பெயானாவைச் சார்ந்த காஸிகான் சூர், ஆல்வாரைச் சார்ந்த ஹாஜிகான், சாம்பல்லைச் சார்ந்த யஹ்யா துரான் (Yahya Turan) போன்ற சிற்றரசர்கள் தமக் கென்று சுதந்திர நாடுகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்பினர்.

லாகூரைச் சார்ந்த சிக்கந்தர் ஷா டெல்லியைக் கைப்பற்ற விரும்பி, இப்ராஹிமுக்கெதிராக 80,000 வீரர்களுடன் போர்க்களத் தில் இறங்கினார். ஆக்ராவிற்கு 20 மைல் வடக்கிலுள்ள ஃபரா (Farah) என்ற இடத்தில் ஒரு போர் நடந்தது. அதில் இப்ராஹிம் தோற்கடிக்கப்பட்டார்(1555). அவர் எடாவாவுக்கு ஓடிவிட்டார்; சிக்கந்தர் டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றினார்.

ஆப்கானியர்களுக்கிடையில் தோன்றிய பிணக்கை ஹுமாயூன் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, 1554, நவம்பரில் இந்துஸ்தானத்தை மீண்டும் கைப்பற்றப் புறப்பட்டார். தாதார் கான் காஷி (Tatar Khan Kashi) அப்பொழுது சிக்கந்தரின் சார்பில் ஜீலம் நதிக்கரையிலிருந்து ரோடாஸ்கர் அரணைத் தம் கையில் வைத்திருந்தார். ஹுமாயூன் சிந்து நதியைக் கடந்துவிட்டார் என்பதைக் கேள்விப்பட்டவுடன், அவ்வரணை தாதார்கான் காலி செய்துவிட்டார். லாகூரை 1555, ஃபிப்ரவரி 24ஆம் நாள் அன்று எவ்விதமான எதிர்ப்புமின்றி ஹுமாயூன் கைப்பற்றி னார். முகலாயர்கள் பஞ்சாபின்மீது படையெடுத்துக்கொண் டிருக்கும்பொழுது சிக்கந்தரும் இப்ராஹிமும் ஒருவரோடொருவர் ஆக்ராவுக்கருகில் சண்டையிட்டுக்கொண்டிருந்ததனால்தான், அவர் களால் படையெடுப்பாளனைத் திறம்பட எதிர்க்க முடியவில்லை. பஞ்சாபைக் கைப்பற்றியதற்குப் பிறகு முகலாயர்கள் டெல்லியின் திக்கில் முன்னேறிக்கொண்டிருந்தபொழுது, சிக்கந்தர் தமக்கு நேரவிருக்கும் அபாயத்தை உணர்ந்து, விழித்துக்கொண்டு, பகைவர் களைத் தாக்குவதற்குப் படை ஒன்றை அனுப்பிவைத்தார். அப் படை திபால்பூரில் தோற்கடிக்கப்பட்டது. மற்றோர் ஆப்கானியப் படையும் மச்சிவாரா (Machhiwara) என்ற இடத்தில் தோற்கடிக் கப்பட்டது. ஆகையினால், சிக்கந்தர் நேரில் செல்லவேண்டி நேர்ந்தது; ஆனால், அவரும் சர்ஹிண்டில் 1555, ஜூன் 22ஆம் நாள் அன்று தோற்கடிக்கப்பட்டார். பஞ்சாபின் மலைப்பகுதி களுக்கு அவர் ஓடிவிட்டார். முகலாயர்கள் டெல்லியைக் கைப் பற்றினர்.

அண்டையில் ஏற்பட்ட தோல்வி அவருடைய பேரவாவைத் தணிக்கவில்லை. வடமேற்கு இந்துஸ்தானத்தில் நிகழ்ந்துகொண்டிருந்த மிக முக்கியமான நிகழ்ச்சிகளையும் அவர் பொருட்படுத்தாது, ஆதில் ஷாவுடன் மீண்டும் போர் தொடங்கினார். ஆதில் ஷா ஹேமுவை அனுப்பிவைத்தார். கல்பி (Kalpi) என்ற இடத்தில் இப்ராஹிமை அவர் தோற்கடித்து, அவரை பெயானாவுக்குத் திரும்ப விரட்டியடித்தார். எனினும், இப்ராஹிம், ஹேமுவை கான்வாவுக்கருகில் சந்தித்தார்; ஆனால், மீண்டும் தோல்வியுற்றார். அவரை இப்பொழுது ஹேமு, பெயானா அரணில் முற்றுகையிட்டார். அவருடைய தலைவரான ஆதில் அவரைத் திரும்ப அழைக்கும்வரை அவர் முற்றுகையை நீடித்தார். ஆதிலை அப்பொழுது வங்காளத்தைச் சார்ந்த முகம்மது ஷா அச்சுறுத்திக்கொண்டிருந்தார். வங்காளத்து அரசர் ஜான்புரிவரை பரவியிருந்த நாட்டைக் கைப்பற்றி, டெல்லியைக் கைப்பற்றுவதற்கும் தம்மை இந்துஸ்தானத்தின் அரசராக ஆக்கிக்கொள்வதற்கும் கல்பிக்கு விரைந்து சென்றார். கல்பியில் ஆதில் ஷாவுடன் ஹேமு சேர்ந்துகொண்டு, வங்காளத்தின் முகம்மது ஷாவைக் கல்பிக்கு 20 மைல் தூரத்திலிருந்த சப்பார் கட்டா (Chapparghatta) என்ற இடத்தில் திடீரென்று தாக்கித் தோற்கடித்தார். முகம்மது ஷா ஓடிவிட்டார். ஆதில் வங்காளத்தைக் கைப்பற்றி ஷாபாஸ்கான் என்பவரை அதன் கவர்னராக நியமித்தார். பிறகு அவர் சூனருக்குத் திரும்பி, அதைத் தமது இருப்பிடமாக்கிக்கொண்டார்.

இச் சமயத்தில் வட இந்தியாவின் நிலை மிக மோசமாக இருந்தது. இடைவிடாப் போரின் விளைவாக, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவத் துணிகர வீரர்கள் தோன்றினர். அவர்களது வன்முறையும் கொள்ளைச் செயல்களும் குடியானவர்களைக் கொடுமைப்படுத்தியதனால், விவசாயம் அநேகமாக அழிந்தேவிட்டது. பஞ்சம் ஒன்று தோன்றியது. டெல்லி, ஆக்ராவின் சுற்றுப்புறங்களில் அது குறிப்பாக மிகவும் கடுமைவாய்ந்ததாக இருந்தது. சண்டையிட்டுக்கொண்டிருந்த மானிட வர்க்கத்தின்மீது இயற்கையும் கோபமுற்றிருந்ததுபோலும்! அவ்வாண்டில் மழையே சரிவரப் பெய்யவில்லை. ஆகையினால், தானியங்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது. ஜவார் (Jowar) ஒரு ரூபாய்க்கு ஒரு சேராக விற்கப்பட்டது; சில வேளைகளில் அது முற்றிலும் கிடைக்கவே இல்லை. காட்டு இலைகளையும் பூண்டுகளையும் மக்கள் புசிக்கவேண்டியிருந்தது. கொள்ளை நோய் ஒன்றும் பரவி மக்களைப் பெருந்துயருக்குள்ளாக்கியது. நாட்டில் பலர் செத்தனர். துரதிட்டமாக, ஆக்ராவின் பழைய அரணில் ஏற்பட்ட வெடிமருந்து வெடிப்பினால் நகரமே குலுக்கியாட்டப்பட்டது. ஏராளமான மக்கள் மடிந்தனர்.

ஹுமாயூன் டெல்லியில் இருந்த தமது தந்தையின் சிம்மாசனத்தை மீண்டும் கைப்பற்றும் தறுவாயில் இந்தியாவின் நிலை இதுபோன்று தான் இருந்தது.

மேலும் படிப்பதற்கான நூல்கள்

மூலாதாரங்கள் (பாரசீக மொழியில் காணப்படுவன)

(1) Tarikh-i-Sher Shahi—மற்றொரு பெயர்—Tuhfa-i-Akbar Shahi, by Abba Sarwani.

(2) Makhzan-i-Afghani Niamat-Ullah.

(3) Tarikh-i-Daudi by Abdullah.

(4) Waqayat-Mushtaqi by Razq-Ullah Mushtaqi.

(5) Tarikh-Salatin-i-Afghana by Ahmad Yadgar.

(6) Memoirs of Babur—திருமதி ஏ. எஸ். பெவரிட்ஜ் என்பவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

(7) Tarikh-i-Rashidi—by Mirza Haider Daughlat—என். எலியாஸ், இ. டி. ராஸ் என்பவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

(8) Humayun-nama by Gulbadan Begam—பெவரிட்ஜின் மொழிபெயர்ப்பு.

(9) Tazkirat-ul Waqayat by Jauhar—ஸ்டிவார்ட் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

(10) Tabqat-i-Akbari by Nizam-ud-din Ahmad—பி. டி (B. De) என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

(11) Muntakhab-ul-Tawarikh by Abdul Qadir Badayuni, Vol. I (Persian text Bibliotheca Indica, Calcutta).

(12) Akbarnama by Abul Fazl—எச். பெவரிட்ஜால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

(13) Ain-i-Akbari by Abul Fazl—பிலாச்மன் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு பில்லட் என்பவரால் திருத்தி எழுதப் பட்டது.

(14) Tarikh-i- Farishta—by Hindu Beg Farishta—Lt. Col. Briggs என்பவர் மொழிபெயர்த்துள்ளார்.

(15) Tarikh-i-Daulat-i-Sher Shahi by Hasan Ali Khan. Published in part in the Journal of Medieval Indian History, Aligarh.

தற்கால நூல்கள்

(1) A History of India under Babur and Humayun, Vol. I & II by W. Erskine (1854).

(2) Sher Shah by Dr. K. R. Qanungo (1920).

(3) The Date and Place of Sher Shah's Birth (vide Journal of Bihar and Orissa, R. Society, 1934) by Dr. P. Saran.

(4) Humayun Padshah, Vols. I and II by Dr. S. K. Banerji.

(5) The Provincial Administration of the Mughuls by Dr. P. Saran.

(6) Cambridge History of India, Vol. IV, Ch. III.

(7) The Administration of the Sultanate of Delhi by Dr. I. H. Qureshi.

(8) Some Aspects of Muslim Administration by Dr. R. P. Tripathi.

(9) The Successors of Sher Shah by Prof. N. B. Roy.

(10) Sher Shah and His Successors by A. L. Srivastava.

5. மாண்புமிக்க அக்பர்

(1542-1605)

பிறப்பும் இளம்பிராயமும்

அமர்காட்டைச் சார்ந்த ராணு வீர்சாலின் வீட்டில் (சிந்தின் தார், பர்கார் மாவட்டம்) 1542, அக்டோபர் 15ஆம் நாள்* அன்று அக்பர் பிறந்தார். அவருடைய பெற்றோர்களான ஹுமாயூனும் ஹமீதாபானு பேகமும் ஜோத்புரியின் சுற்றுப்புறத்திலிருந்து திரும்பி ஓடிக்கொண்டிருக்கும்பொழுது அவ்விடத்தின் இராஜபுத்திரத் தலைவரிடம் அடைக்கலம் புகுந்தனர். அத் தலைவர் ஹுமாயூனுக்கு ஆள், பொருள் உதவியைத் தாராளமாக அளித்துத் தட்டா, பக்கார் ஆகியவற்றின்மீது படையெடுக்கும்படி செய்தார். 1542, அக்டோபர் மாதத்தின் இரண்டாம் வாரத்தில் ஹுமாயூன் படையெடுப்பு நடத்துவதற்குப் புறப்பட்டார். சென்றுகொண்டிருக்கையில், அவருக்கு ஒரு மகன் பிறந்தான் என்ற நற்செய்தியைத் தார்தி பேக்கான் கொண்டுவந்தார். அப்பொழுது வறுமை நிலையில் சிக்கியிருந்த ஹுமாயூன் தகுதியான வகையில் தமது தோழர்களுக்குப் பரிசு வழங்கும் நிலையில் ஒரு பீங்கான் தட்டைக் கொண்டுவருமாறு உத்தரவிட்டு, ஒரு கஸ்தூரிக் காயை அதன்மீது வைத்து உடைத்து, அத் துண்டுகளையெல்லாம் அவருடைய தோழர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்துப் பின்வருமாறு கூறினார்: ‘இதைத்தான் எனக்கு ஒரு மகன் பிறந்திருக்கும்பொழுது உங்களுக்கு நான் பரிசாக வழங்க முடிகிறது. இக் குழந்தையின் புகழ் ஒரு நாள் இக் கஸ்தூரியின் மணம் இக் கூடாரத்தில் பரவி நிலைத்திருப்பது போல உலகெங்கும் பரவியிருக்கும் என நான் நம்புகிறேன்.’

* வி.ஏ. ஸ்மித் நவம்பர் 23ஆம் நாள் என்று குறிப்பிடுகிறார். அது தவறாகும். ஆதாரங்களுக்காகவும், ஸ்மித்தின் முடிவுகளை மறுப்பதற்கான காரணங்களுக்காகவும் ஆக்ரா கல்லூரியின் வரலாற்று அரசியல் துறையின் அறிக்கையின் இரண்டாம் பகுதியில் (Agra College Journal of History and Political Science, Vol. II (1955), ‘அக்பரின் பிறப்புத் தேதி’ என்பதைப்பற்றி நான் எழுதியுள்ள அக் கட்டுரையில் காண்க.

அக்பரின் இளமைப் பருவம் இன்னல்களில் கழிந்தது. தட்டாவுக்கும் பக்காருக்குமெதிராக நடந்துகொண்டிருந்த படையெடுப்பில் அவருடைய தந்தை முன்னேற முடியவில்லை. அவரைத் தாராளமாக ஆதரித்தவரான ராணு வீர்சாலுடன் அவருடைய ஆட்கள் மூடத்தனமாகச் சண்டையிட்டுக்கொண்டனர். அவர்களுக்கிடையில் உண்டான மன வருத்தத்தின் விளைவாக, ஹமீதா பானு பேகமும் அக்பரும் அமர்காட்டுக்கு 75 மைல் தூரத்திலிருந்த ஜூன் நகருக்கு (Jun) டிசம்பர் 8ஆம் நாள் அன்று கொண்டுவரப் பட்டனர். அங்கே அப்பொழுது ஹுமாயூன் முகாமிட்டிருந்தார். சிந்துவைக் கைப்பற்றுவதற்காக ஆறு மாதகாலமாக வீண் முயற்சி செய்த பிறகு ஹுமாயூன் பாரசீக நாட்டின் அரசரின் (ஷா தமஸ்ப்—Shah Tahmasp) உதவியை நாட, அந் நாட்டிற்குப் போக முடிவு செய்துவிட்டார். ஹுமாயூனின் கும்பல் குவெட்டாவுக்குத் (Quetta) தெற்கிலுள்ள முஸ்தானை (Mustan—Mustang—முஸ்தாங்) அடைந்ததும், அவர்களைத் தாக்க அஸ்கரி வருகிறார் என்ற செய்தி எட்டியது. ஹுமாயூன் எதிர்க்கும் நிலையில் இல்லாததனால், ஹமீதா பானு பேகத்தையும் தன் குதிரைமேல் அமர்த்திக்கொண்டு, அப்பொழுது ஒரு வயது குழந்தையான அக்பரைப் பின் விட்டுவிட்டு, காந்தாரத்தின் திக்கில் ஓட்டம் பிடித்தார். அஸ்கரி குழந்தையைத் தம்முடன் காந்தாரத்துக்கு எடுத்துச் சென்றார். அங்கே அவருடைய மனையாள் அக் குழந்தையைச் சிறப்பாக வளர்த்து வந்தாள். துணிகரப் பயணத்திற்குப் பிறகு, ஹுமாயூன் பாரசீகத்தை அடைந்தார்; ஷாவின் உதவியைப் பெற்று காந்தாரத்தைத் தாக்கி, தமது சகோதரரான அஸ்கரியின் கைகளிலிருந்து அதை 1545 செப்டம்பரில் அவர் கைப்பற்றினார். நவம்பர் 15ஆம் தேதியன்று அவர் காபூலைக் கம்ரானிடமிருந்து கைப்பற்றி, 1544-45ஆம் ஆண்டின் பனிக்காலத்தில் காந்தாரத்திலிருந்து காபூலுக்குக் கொண்டுவரப்பட்டிருந்த தமது மகன் அக்பரைக் கொண்டுவருமாறு உத்தரவிட்டார். அப்பொழுது அக்பருக்கு மூன்று வயதாகியிருந்தது; அபுல் ஃபாஸலின் (Abul Fazl) கூற்றின்படி, அக் குழந்தை அப்பொழுதும் தனது தாயை அறிந்துகொண்டு அவளுடைய மடியில் தாவியது. 1545, மார்ச்சு மாதத்தில், அவரது சுன்னத்து விழா அன்றுதான் முதன்முதலாக வெளிப்படையாகத் தோற்றமளித்தார். அவர் பிறக்கும்பொழுது அவருக்கு வழங்கப்பட்ட பெயரான பத்ருத்தினை (Badruddin) விலக்கிவிட்டு, இப்பொழுது அவருக்கு ஜலாலுத்தீன் முகம்மது அக்பர் என்ற பெயர் வழங்கப்பட்டது என்று ஸ்மித் கூறுவது தவறாகும்.

இளவரசர்களுக்கு வழக்கமாக இருப்பதுபோல அக்பருக்குப் பல தாதிகள் இருந்தனர்; அவர்களில் சிலர் அவருக்குப்

பாலூட்டி வளர்த்தனர்; மற்றும் சிலர் அவரைக் கவனித்துவந்தனர். அவரது தாதிகளில் மிக முக்கியமானவள் ஜீஜா அனுகா என்பவள். அவளுடைய கணவன் ஷம்ஷுத்தீன் என்பவன் 1540-ல் கானேஜ் போருக்குப்பின் ஹுமாயூனை மூழ்குவதிலிருந்துகாத்தனன். பிறகு அவனுக்கு அத்கா கான் (Athka Khan) என்ற பட்டப் பெயர் அறிவிக்கப்பட்டது. மாஹம் அனுகா முதன்மைத் தாதியாவாள். அவளுடைய மகன்தான் வமிசப் பெயர் எடுத்த ஆதம் கானுவான் (Adham Khan).

ஹுமாயூன் தமது சகோதரர்களின் பகைமை நடத்தையினுல் பல இன்னல்களுக்குட்பட்டார்; காபூலைப் பல தடவை கைப்பற்றிப் பல தடவையும் அதை இழந்தார். ஒரு படையெடுப்பின்பொழுது கம்ரன் அக்பரை நகரின் அரண்சுவரில் தொங்கவிட்டு, அவரை ஹுமாயூனின் பீரங்கிகளிடமிருந்து வரும்பேரிடருக்குள்ளாக்கினுர். அவரது தந்தையின் வாழ்க்கைச் சுழல்களின்பொழுது அக் குழந்தை நிலையற்ற வாழ்க்கையை வாழவேண்டி நேரிட்டது.

1547, நவம்பரில், அக்பர் ஐந்து வயதடைந்திருந்தபோது, அவருடைய கல்விக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒருவர்பின் ஒருவராகப் பல ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்; ஆனுல், அவர்கள் அனைவரும் அவருக்கு எழுதவோ படிக்கவோ கற்றுக்கொடுப்பதில் வெற்றிபெறவில்லை. படிப்புக்கு மட்டம்போடும் இம் மாணவர் படிப்பைவிட விளையாட்டுகளிலும், ஒட்டகங்கள், குதிரைகள், நாய்கள், புருக்கள் ஆகிய விலங்குகளிலும் அதிக விருப்பம் காட்டினுர். அவரது இளவயதிலிருந்தே அவர் அசாதாரண நினைவுச் சக்தியைப் பெற்றிருந்தார்; ஆனுலும், பாடங்களைக் கற்றுக் கொள்ளமாட்டார். குதிரைச் சவாரி செய்வதிலும், வாள் வீசுவதிலும், மற்ற இராணுவப் பயிற்சிகளிலும் அவர் வல்லவரானுர். சிறந்த அறிவாளியான ஹுமாயூன் அக்பரைக் கடிந்துகொண்டார்; படிப்பில் காலத்தைச் செலவழிக்கும்படி அவருக்கு அறிவுரை கூறினுர். ஆனுல், தந்தை கடிந்துகொண்டதெல்லாம் வீணுயிற்று.

ஹிண்டால் 1551, நவம்பரில் மறைந்ததும் காஸ்னியின் பொறுப்பு அக்பரிடம் ஒப்படைக்கப்பட்டது. மறைந்து போனவருடைய மகளான ருகியா பேகத்துடன் (Ruqaiya Begum) அவருடைய திருமணமும் நிச்சயம் செய்யப்பட்டது. அக்பர் காஸ்னியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, பெயரளவில் 1554, நவம்பர் மாதம்வரை அதன் கவர்னராக இருந்தார். அச் சமயத்தில் ஹுமாயூன் இந்துஸ்தானத்தை மீண்டும் கைப்பற்றப் படையெடுத்தார்.


இந்தியாவின்மீது ஹுமாயூன் படையெடுப்பதற்காகப் புறப்பட்டதற்குச் சற்றுப் பிறகு அவர் மூனிம்கானை (Munim Khan) அக்பரின் பாதுகாப்பாளராக நியமித்தார். ஷெர்ஷாவின் மைத்துனரும் டெல்லி சிம்மாசனத்திற்கு உரிமை கொண்டாடியவர்களுள் ஒருவருமான சிக்கந்தர்ஷா சூர் சர்ஹிண்டில் 1555, ஜனவரி 22ஆம் நாள் அன்று தோல்வியுற்றதற்குப் பிறகு, அவ் வெற்றிக்கு அக்பர் தான் காரணம் என்று அரசாங்கப் பதிவேடுகளில் குறிக்கப்பட்டது. பட்டத்துக்கு வரவேண்டிய இளவரசர் என்றும் அவரைப்பற்றி அறிவிக்கப்பட்டது. அவருடைய தகப்பனர் டெல்லியை மீண்டும் கைப்பற்றியபிறகு, சில மாதங்களுக்குள் அவர் லாகூரின் கவர்னராக நியமிக்கப்பட்டார். சிறப்பு வாய்ந்த துருக்கியத் தளபதியான பைராம்கான் (Bairam Khan) மூனிம்கானுக்குப் பதிலாக அவருடைய பாதுகாப்பாளரானர். அப்பொழுது அக்பருக்கு வயது பதின் மூன்ருகும்.

அரியணையேறுதல் (1556, ஃபிப்ரவரி 14 ஆம் நாள்)

டெல்லியிலுள்ள ஷேர்மண்டலில் அமைந்திருந்த நூலகத்தின் படிக்கட்டிலிருந்து ஹுமாயூன் விழுந்ததனல், 1556, ஜனவரி 27ஆம் நாள் அன்று உயிர் நீத்தார். அவருடைய மரணத்தைப் பற்றிய செய்தி மறைத்துவைக்கப்பட்டிருந்தது. எதிர்ப்பின்றி அக்பர் முடிசூட்டிக்கொள்ளுவதற்காக ஓர் ஆளை ஹுமாயூனைப் போல வேடந் தரித்து அமர்த்திவைத்திருந்தனர். பஞ்சாபில், குர்தாஸ்பூருக்கு 15 மைல் வடக்கிலுள்ள கலானுரில் அக்பருக்கு ஹுமாயூனின் மரணச் செய்தி எட்டியது. அப்பொழுது அக்பர் சிக்கந்தர் சூருக்கு எதிராகத் தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தார். சிக்கந்தர், மான்கோட் அரணில் அடைக்கலம் புகுந்திருந்தார். அக்பரின் பாதுகாப்பாளரான பைராம்கான் அத் தறுவாய்க்காக நிறுவப்பட்ட செங்கல் மேடை ஒன்றில் அக்பரை வீற்றிருக்கச் செய்து, அவரை 1556, பிப்ரவரி 14ஆம் நாள் பேரரசராகப் பிரகடனஞ் செய்தார். அவர் அரியணையேறிவிட்டார் என்று ஏற்கெனவே 1556, ஃபிப்ரவரி 14ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. அந் நாளில்தான் ஹுமாயூனின் மரணச் செய்தி யாவருக்கும் அறிவிக்கப்பட்டது.

1556-ல் இந்தியாவின் நிலைமை

1556-ல் அக்பர் அரியணையேறியபொழுது, பஞ்சாபின் ஒரு சிறு பகுதிக்கே அக்பர் பெயரளவில் அரசராக இருந்தார். அவரது தகப்பனின் மறைவுக்குச் சற்றுப் பிறகு ஹேமு டெல்லியையும் பஞ்சாபையும் கைப்பற்றியிருந்தார்; பஞ்சாபிலும்கூட அக்பரின்


INDIA IN 1556 A.D.
ACCESSION OF AKBAR
CHINA
TRANS-OXIANA
FARGHANA
Tashkent
Andijan
Bukhara
Samarkand
Hissar
Balkh
Qundus
Sar-i-pul
BADAKHSHAN
HAZARA
Herat
AFGHANISTAN
Kabul
Ghazni
Kalat
PERSIA
BAJAUR
SWAT
BALTISTAN
KASHMIR
Srinagar
Peshawar
Attock
Rohtas
Khushab
Bhera
Sialkot
Kalnaur
Lahore
Dipalpur
Sarhind
Ambala
Multan
Samana
Panipat
Hisar
Delhi
Sambhal
Koil
Agra
Badaun
Bahraich
Lucknow
Bhakkar
RAJASTHAN
Sehwan
Jaisalmer
Merta
Ajmer
Ranthambhor
Mandrail
Gwalior
Amarkot
Thatta
Chittor
Gogunda
Paton
MALWA
Chanderi
Raisin
Jabalpur
Ratanpur
GUJRAT
Ahmadabad
Champaner
Cambay
Asirgarh
KHANDESH
Diu
Gwaligarh
BARAR
GONDWANA
Jaunpur
Ghunar
Ghausa
Sasaram
Rohtas
Hajipur
Munghir
Khalgaon
Taliagarhi
Rajmahal
Gaur
KAMRUPA
BANGAL
Sonargaon
Chatgaon
Cuttack
ORISSA
Puri
AHMADNAGAR
Ahmadnagar
GOLKUNDA
BIDAR
Bidar
Gulburga
Golkunda
BIJAPUR
Bijapur
Raichur
Goa
Rajamundry
Vijaynagar
VIJAYANAGAR EMPIRE
Kanchi
Tanjore
Madura
CEYLON
ANDAMAN IS.
ARABIAN SEA
BAY OF BANGAL
Boundary of the Empire
Independent Kingdoms
100 0 100 200 300 Miles

உரிமையைச் சிக்கந்தர் சூர் எதிர்த்தார். அவருடைய மாற்றாந்தாய் மகனான மீர்ஸா ஹகீமின் தலைமையின்கீழ் காபூல் ஆட்சிப் பகுதி செயல்முறையில் சுதந்திரம் பெற்றிருந்தது. அக்பரின் இந்துஸ் தானத்தின் இறைமை உரிமையை முகம்மது ஆதில் ஷாவும் இப்ராஹிம் சூரும் எதிர்த்தனர். எஞ்சிய மாகாணங்கள் அனைத்தும் அவையவைகளுடைய தல அரசர்களின்கீழ் முற்றிலும் சுதந்திர நாடுகளாயின. நாட்டின் பொருளாதார நிலை இன்னும் மோச மாக இருந்தது. எங்கும் பரவிய பஞ்சம் ஒன்று மிகக் கடுமையாகத் தாக்கிச் செழிப்பான நிலத்தைப் பாழாக்கியது. இஸ்லாம் ஷாவின் வாரிசுகளுக்கிடையில் தோன்றிய அழிவுதரும் போர்களினாலும் நாடு மிக்க துயருற்றது. டெல்லி, ஆக்ரா மாவட்டங்களில் பஞ்சம் குறிப்பாக மிகக் கடுமையாக இருந்தது. அவ்விடங்களில் எல்லாம் ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடி மடிந்தனர். 'தலை நகரம் சூறையாடப்பட்டது; ஒருசில வீடுகளே எஞ்சி நின்றன. கொள்ளைநோய் ஒன்று தோன்றி இந்துஸ்தானத்தின் முக்கிய நகரங் களில் பரவிக்கொண்டிருந்தது. எண்ணற்றவர்கள் மடிந்தனர்; மக்கள் மனித இறைச்சியைச் சாப்பிட நேரிட்டது. தனியாகப் போகும் ஆட்களைப் பிடித்துக் கொன்று தின்பதற்காகக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.'

அக்பரின் மிக நெருக்கடியான நிலைமை

மூன்று சூர் போட்டியாளர்களைத் தவிர, அவருடைய மிகப் பெரிய பகைவர் ஹேமு என்பவர். அவர் இந்தி யாவிலிருந்து முகலாயர்களை விரட்டியடிக்கவேண்டுமென்று உறுதி கொண்டிருந்த முகம்மது ஆதில் ஷாவின் இந்து பிரதம மந்திரி யாவார். தமது பிரபுக்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த அதிருப்தி யையும் அக்பர் அடக்கவேண்டியிருந்தது; அவர்களில் மிக முக்கிய மானவர் அபுல் மாலி என்பவராவார். இவ் அரைப் பைத்திய மனிதனை ஹுமாயூன் சலுகைகள் கொடுத்துக் கெடுத்துவிட்டார். ஃபிப்ரவரி 17ஆம் நாள் நடந்த முடிசூட்டு விழாவில் கலந்து கொள்ள அவர் மறுத்துவிட்டார். அவர் மிகவும் அத்துமீறி நடந்து கொண்டதனால், பைராம்கான் அவரை லாகூரின் அரணுக்குள் சிறைப்படுத்தவேண்டி நேரிட்டது. படையின் பற்றுதலும் சந்தேகப்படும்படியாக இருந்தது. அதற்குக் காரணம் புதிய அரசரின் நெருக்கடியான நிலைமையாகும்.

பதின்மூன்று வயதிற்குச் சற்றே மேற்பட்டிருந்தாலும், அக்பர் அசாதாரணத் திறமையும் மதிக்கூர்மையும் படைத்த, பிஞ்சில் முதிர்ந்த சிறுவராவார். வீரத்துடன் நிலைமையைச் சமாளிப்பது

என்று அவர் முடிவுசெய்துவிட்டார்; அவருடைய பாதுகாப்பாள ரான பைராம்கான் தளராப் பற்றுடன் அவரை ஆதரித்தார்.

அக்பரின் முதன்மைப் பகைவரான ஹேமுவின் வெற்றி

சூனுரைத் தமது தலைநகராகக்கொண்ட ஆதில்ஷா, முகலாயர் களை இந்தியாவிலிருந்து விரட்டியோட்ட ஹேமுவை அனுப்பி வைத்தார். ரிவாரிவாசியான ஹேமு ஒரு துசார் பர்காவா (Dhusar Bhargava)* ஆவார். முன்னுட்களில் அவர் தமது நகரின் தெருக்களில் உப்பு விற்றுவந்தார். அவர் முதல் முதலாக இராச்சியப் பணித்துறையில் அங்காடியில் எடைபோடுபவராக நியமிக்கப்பட்டார். ஆனுல், புத்திகூர்மையையும் தந்திரத்தையும் அவர் பெற்றிருந்ததனுல், இஸ்லாம் ஷா அவரைப் பதவியில் உயர்த்தி, அவரது அரசவையில் அந்தரங்க பதவியில் நியமித் திருந்தார். ஆதில் ஷா அரசரானபொழுது ஹேமுவை அவர் ஒரு முக்கிய பதவிக்கு உயர்த்தினுர். அவருடைய அசாதாரணமான இராணுவ நிர்வாகத் திறமையைப் பயன்படுத்த ஆதில்ஷா இங்ஙனமாக ஒரு வாய்ப்பைப் பெற்ருர். மிகத் தாழ்ந்த நிலையி லிருந்துவந்தபோதிலும் மிகக் குள்ளமாக இருந்தபோதிலும், ஒரு வீரனுக்குரிய துணிச்சலையும் பொறுமையையும் ஹேமு பெற்றிருந் தார். அவர் ஒரு சிறந்த தளபதியுமாவார். தமது தகைமை யையும் பற்றையும் அவர் உறுதியாக வெளிப்படுத்தியதனுல், பிரதம மந்திரியின் பதவிக்கு அவர் உயர்த்தப்பட்டார். நம் நாட்டின் இடைக்காலத்தில் டெல்லியின் முகம்மதிய அரசர்களின் முதல் அமைச்சராக நியமிக்கப்பட்ட இரண்டு ஹிந்துக்களுள் ஹேமு ஒருவராவார்; மற்றெருவர் தோடர்மல் என்பவர். இது மதிப்புக் குரியதாகும். ஆப்கானியர்களையும் துருக்கியர்களையும் கொண்ட படை ஒன்றுக்கு அவர் தலைமை தாங்கி அவர்களுடைய மதிப்பை யும் பற்றுதலையும் பெற்ருர். அவரது தலைவருக்காக அவர் செய்த இருபத்துநான்கு போர்களில் இருபத்திரண்டு போர்களை அவர் வென்ருர். ஆதிலின் பகைவரான இப்ராஹிம் சூரை அவர் பல முறை தோற்கடித்திருக்கிருர்; வங்காளத்தைச் சார்ந்த முகம்மது ஷாவையும் அங்ஙனமே தோற்கடித்திருக்கிருர். ஆக்ரா வைத் தாக்குவதற்காக அவர் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருந்தபொழுதுதான் ஹுமாயூன் இறந்தார். அந் நிகழ்ச் சியை அவர் பயன்படுத்திக்கொண்டு குவாலியரிலிருந்து ஆக்ரா சென்ருர். அவ்விடத்தின் கவர்னரான இஸ்கந்தர்கான் உஸ்பெக்

* சமகால வரலாற்றுக் குறிப்புகளில் அவர் பக்கல் (Baggal) அல்லது வைஷ் (Vaish) என்று அழைக்கப்பட்டுள்ளார். ஆனுல், அவர் உண்மையில் ஒரு பர்காவா ஆவார் (கௌர் உப கோத்திரத்தைச் சார்ந்த பிராமணர்).

(Iskandar Khan Uzbeg) பீதியுற்றுப் போரிடாமலேயே டெல்லிக்குப் பின்வாங்கினூர்; பின்வாங்குகையில் சுமார் 3,000 ஆட்களை அவர் இழக்க நேரிட்டது. ஹேமு ஆக்ராவை அதன் செல்வங்களுடனும் ஆயுதங்களுடனும் கைப்பற்றி, டெல்லி நோக்கி முன்னேறினூர். தலைநகரின் கவர்னரான தார்திபேக்கான் துக்லகாபாத்தில் (Tughlaqabad) உறுதியற்ற எதிர்ப்பை 1556, அக்டோபர் 7ஆம் நாள் அளித்தார்; ஆனாலும், தோற்கடிக்கப்பட்டார். துக்லகாபாத் குதுப்மீனூரிலிருந்து ஐந்து மைல் கிழக்கிலுள்ளது. சர்ஹிண்டை நோக்கி இஸ்கந்தர்கானுடன் அவர் ஓடினூர். சாம்பாலின் கவர்னரான அலிகூலிகான் ஷெய்பானியும் தமது பொறுப்பை விட்டுவிட்டு நடோடிகளுடன் சேர்ந்துகொண்டார்.

குவாலியர்தொட்டு சட்லெஜ்வரை பரவியிருந்த தேசம் ஹேமுவின் ஆட்சிக்குட்பட்டது. துணிகரமாக அவர் தம்மை ஒரு சுதந்திர அரசராக ஆக்கிக்கொண்டு, மஹாராஜா விக்ரமாதித்யர் (Maharaja Vikramaditya) என்ற பட்டப் பெயருடன் டெல்லியின் அரணில் முடிசூட்டிக்கொண்டார். இங்ஙனமாக இவர் நமது நாட்டின் இடைக்கால வரலாற்றில் டெல்லி சிம்மாசனத்திற்கு வந்த ஒரே ஓர் இந்து ஆவார். தற்கால ஐரோப்பிய ஆசிரியர்கள் இடைக்கால வரலாற்ருசிரியர்களுடன் கலந்துகொண்டு இவரைக் குறைகூறுகின்றனர். (இடைக்கால வரலாற்ருசிரியர்கள் அந்நிய ஆட்சியிலிருந்து தனது நாட்டை விடுதலை செய்ய முயலும் ஓர் இந்துவின்மீது கொண்டிருந்த தப்பெண்ணங்களைப்பற்றி யாவரும் அறிந்ததே.) ஒருசார்பற்ற வரலாற்று மாணவன் எவனும் ஒரு தலைவனுக்குரிய குணங்களை ஹேமு பெற்றிருந்ததையும், அவரது வெற்றி துர்வசமாகச் சிறிது காலமே நீடித்திருந்தபோதிலும் தமது தலைநகரிலிருந்து அந்நிய ஆட்சியை விரட்டியடிப்பதற்கான வாய்ப்பினை உடனடியாக அவர் பெற்றதையும் காணத் தவறமாட்டான். ஹுமாயூன், ஷெர்ஷாவின் பின்னேர்போன்ற அந்நியர்கள் அனைவரும் இந்தியாவின் இறைமைக்கு உரிமை கொண்டாடும்பொழுது, உண்மையில் இந் நாட்டின் குடிமகனுன ஹேமுவும் அதற்குச் சமமான—ஏன்—அதற்கும் உயர்ந்த உரிமைகளைத் தமது முன்னேர்களின் நாட்டின்மீது கொண்டாட முடியும். முகலாயர்களை இந்தியாவிலிருந்து அவர் விரட்டியடித்திருந்திருப்பாராயின் வரலாற்ருசிரியர்கள் அவரைப்பற்றி வேறு கருத்தைக் கொண்டிருப்பர். அக்பர் 1556-ல் டெல்லியின் சிம்மாசனத்தின்மீது கொண்டாடிய உரிமைகள் ஹேமுவின் உரிமைகளைவிட உயர்ந்தவை என்று வாதாடுவதற்கு, பின்னர் அக்பர் நல்லதொரு தேசிய அரசரானதை ஆதரவாகக் காட்ட இயலாது. தமது மைத்துனரின் கழுத்தை நெறித்துக் கொன்று அவரது அரியணையைக் கைப்

பற்றிய ஆதிலுக்கு ஹேமு துரோகம் புரிந்தார் என்று அவர்மீது குற்றம் சாட்டுவது பொருத்தமற்றதாகும். அந்நிய ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்வதும் வன்முறையைப் பயன்படுத்துவதும் ஒழுங்கானதாயினும், ஹேமு ஆதிலின் ஆட்சியை ஏற்க மறுக்க மட்டுமே செய்தார். டெல்லியில் 350 ஆண்டுகளாக நிலைத்திருந்த அந்நிய ஆதிக்கத்திற்குப் பிறகு ஒரு தேசிய ஆட்சியை நிலைநாட்ட ஹேமு துணிகரமாகச் செய்த முயற்சிக்காக அவருக்கு எப் புகழும் மிகையாகாது.

பாணிப்பட்டுப் போர், 1556, நவம்பர் 5ஆம் நாள்

டெல்லி, ஆக்ரா ஆகியவை வீழ்ச்சியுற்ற செய்தி முகலாயர்களுக்குப் பீதியை விளைவித்தது. அவர்களுடைய எண்ணிக்கை 20,000-த்திற்கு மேற்பட்டிருக்கவில்லை. அதே சமயத்தில் ஹேமுவின் படை ஓர் இலட்ச வீரர்களைப் பெற்றிருந்ததாகக் கூறப்பட்டது; அண்மையில் பெற்ற வெற்றிகளால் அது பூரித்துமிருந்தது. ஆகையினுல், ஜலந்தரில் (Jalandar) முகாமிட்டிருந்த முகலாயர்களின் அரசர் உடனே காபூலுக்குப் போய்விட வேண்டும் என்று அவர்கள் அவருக்கு யோசனை கூறினர். ஆனுல், டெல்லியையும் ஆக்ராவையும் மீட்கவேண்டும் என்று பைராம்கான் கூறினுர்; அக்பரும் தமது பாதுகாப்பாளருடன் மனப்பூர்வமாக இணங்கினுர். சிக்கந்தர் சூரை அடக்குவதற்காக கிஸர்காஜா கானை லாகூரில் விட்டுவிட்டு ஹேமுவுக்கெதிராக அக்டோபர் 13ஆம் நாள் அக்பர் ஜலந்தரின்மீது படையெடுத்தார். ஆக்ரா, டெல்லி, சாம்பல் ஆகியவற்றின் நாடோடி கவர்னர்கள் சர்ஹிண்டில் அக்பருடன் கலந்துகொண்டு காபூலுக்குப் பின்வாங்கிவிடுமாறு அவருக்கு அறிவுறுத்தினர். பைராம்கான், தார்திபேக்கானை அக்பரின் அனுமதியின்பேரில் கொன்று அக் கவர்னர்களை வாயடங்கச் செய்தார். சமகாலத்திய சில வரலாற்ருசிரியர்கள் மறைந்து போனவரின்மீது பைராம் பொருமை கொண்டிருந்தார் என்று குற்றம் கூறினுலும், படைக்கு மீண்டும் நம்பிக்கை ஊட்டி அமைதிக் குலைவை ஒழிப்பதற்கு அச் செயலைச் செய்யவேண்டியிருந்தது. விளைவு நிறைவானதாக இருந்தது. எவ்வித நிகழ்ச்சியுமின்றிப் படை டெல்லியை நோக்கி முன்னேறியது.

டெல்லியிலும் ஆக்ராவிலும் தாம் கைப்பற்றிய செல்வத்தைத் தமது நிலையை உறுதிப்படுத்துவதற்கும், ஆப்கானிய அதிகாரிகளையும் வீரர்களையும் தம்வசப்படுத்துவதற்கும் ஹேமு பயன்படுத்திஞர்; முகலாயர்களின் முன்னேற்றத்துக்குத் தடையிட அவர் நடவடிக்கைகள் எடுத்தார். அலிகூலிகான் ஷெய்பானியின் தலைமையில் விரைவாக முன்னேறிக்கொண்டிருந்த அக்

ருடைய படையைத் தாக்க ஹேமு தமது படையின் முன்னணித் தொகுதி ஒன்றை ஒரு பீரங்கிப் படையுடன் அனுப்பிவைத்தார். அலிகூலி யுக்தி ஒன்றை வெற்றிகரமாகக் கையாண்டு, ஹேமுவின் முன்னணியை முறியடித்து, அவரது பீரங்கிப் படையையும் கைப்பற்றினார். கிட்டத்தட்ட ஒரு வாரத்துக்குள் இரண்டு முக்கியப் படைகளும் வரலாற்றில் புகழ்பெற்ற பானிப்பட்டு மைதானத்தில் 1556, நவம்பர் 5ஆம் நாள் சந்தித்தன. பைராம்கான் பத்தாயிரம் வீரர்களைப் பெற்றிருந்த முகலாயப்படைக்குப் பின்னால் வெகு தூரத்திலிருந்து தலைமை தாங்கிக்கொண்டு, அலிகூலிகானை (பின்னாளில் கான் ஸமனாக நியமிக்கப்பட்டவர்) மத்தியப் பகுதியினை ஏற்குமாறு நிறுத்தி வைத்து, சிக்கந்தர்கான் உஸ்பெக்கை வலப்புடைப் படை அணியின் பொறுப்பையும் அப்துல்லாகான் உஸ்பெக்கை இடப் புடைப் படை அணியின் பொறுப்பையும் ஏற்குமாறு செய்தார்; அதே சமயத்தில் இளைஞரான அக்பர் படைக்கு வெகுதூரம் பின்னால் நிறுத்திவைக்கப் பட்டார். ஹேமுவின் உண்மையில் போரிடும் வீரர்களின் எண்ணிக்கை 30,000 இராசபுதன, ஆப்கானிய குதிரைகளாகவும், 500 போர் யானைகளாகவும் இருந்தன. இவைகளெல்லாம் இரும்புக் கவசங்களை அணிந்திருந்தன. அவற்றின்மீது துப்பாக்கி வீரர்களும் வில் வீரர்களும் வீற்றிருந்தனர். ஆனால், அவரிடத்தில் பீரங்கிகள் இல்லை. அவர் மையப்பகுதியில் இருந்துகொண்டு, தமது வலப் புடைப் படை அணியை ஷாதிகான் கக்கரிடத்திலும் (Shadhi Khan Kakkar), இடப் புடைப் படை அணியைத் தமது சகோதரியின் மகனான ராமய்யாவிடத்திலும் (Ramayya) ஒப்படைத்திருந்தார். முதலில் நடந்த சண்டை ஒன்றில் தமது துப்பாக்கிப் படையை ஹேமு இழந்துவிட்டபோதிலும், அவர் முகலாயர்களை மிகத் துணிச்சலுடன் தாக்கி, அவர்களது வலது இடப்புடைப் படை அணிகளைச் சிதறடித்தார். பிறகு அவர் அவர்களது மையப்பகுதியைத் தாக்கி, அதன் மேல்: 500 யானைகளைப் பாயும்படி செய்தார். முகலாயர்கள் மிக வீரத்துடன் போரிட்டனர்; ஆனால், இறுதியில் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. ஹேமு வெற்றியைப் பெற்றுவிட்டாற்போல் இருந்தது. ஆனாலும், முகலாயர்களின் மையப்படையைத் தோற்கடிக்க முடியவில்லை; ஏனெனில், அதற்குள் தோற்கடிக்கப்பட்ட அவர்களது புடைப்படை அணிகளைச் சார்ந்த வீரர்கள், தம்மைத் திரட்டிக்கொண்டு ஹேமுவின் புடைப்படை அணிகளை நோக்கி முன்னேறிக்கொண்டு அவர்களைத் தாக்க ஆரம்பித்தனர். மேலும், அதற்கு முன்னால் ஓர் ஆழமான அகழி இருந்தது. அது ஹேமுவின் முன்னேற்றத்திற்குத் தடையிட்டது. அலிகூலிகான் அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தமது குதிரைப்படை ஒன்றுடன் திரும்பிவந்து பின்னாலிருந்து ஹேமுவின் மத்தியப் படையைத் தாக்கினார். ஹேமு மிகத் துணிச்சலுடன் எதிர்த்

தாக்குதல் நடத்தினர். கடுமையான போர் நீடித்தது. இச் சமயத்தில் எங்கிருந்தோ ஓர் அம்பு ஹேமுவின் கண்ணில் குத்தியது ; இதனால் அவர் மயக்கமுற்றார். அவருடைய படை தன் தலைவர் இறந்துவிட்டார் என்று கருதி, பீதியுற்று எல்லாத் திக்கு களிலும் ஓட்டம் பிடித்தது. ஹேமுவின் யானைப்பாகன் மூர்ச்சையற் றிருந்த தனது தலைவனை ஆபத்தில்லாத ஓர் இடத்திற்குக் கொண்டுபோக முயன்றான். ஆனால், ஷா குலி மஹ்ராம் (Shah Quli Mahram) என்பவரைத் தலைவராகக் கொண்டிருந்த முகலாயப் படை அவனை முந்திச் சென்று கைப்பற்றி அக்பரிடம் ஒப்படைத்தது. பிற சமயத்தினனான ஹேமுவைத் தமது கையாலேயே வெட்டி வீழ்த்தி காஸி (Ghazi) என்ற பட்டப்பெயரைச் சம்பாதித்துக்கொள்ளு மாறு பைராம்கான் தமது அரச இளங்கணரைக் கோரினர். அரசன் அவ் வேண்டுகோளுக்கு இணங்கினர் என்றும், ஹேமுவின் தலையை வெட்டி வீழ்த்தினர் என்றும் அக்காலத்திய ஆசிரியரான ஆரிஃப் கந்தாரி (Arif Qandhari) என்பவர் கூறுகிறார். இறந்து கொண்டிருந்த ஒரு மனிதனைக் கொல்ல அவர் மறுத்துவிட்டார் என்று அபுல்பாஸல் கூறுவது உண்மையில் தவருகும்.

இரண்டாம் பானிப்பட்டு யுத்தம் மிக முக்கியமான விளைவுகளை உண்டாக்கியது. முகலாயர்களின் வெற்றி முடிவானதாகும்; ஹேமு வீழ்ச்சியுற்றவுடன் அவர் திடீரென்று பெற்ற இராணுவ அதி காரமும் உடனே வீழ்ச்சியுற்றது. அவருடைய தந்தையும் மனைவி யும் டெல்லியிலிருந்து மீவாட்டுக்கு ஓடிவிட்டனர். போரின் அரசியல் விளைவுகள் மேலும் முக்கியமானவையாக இருந்தன. இந்துஸ்தானத்தின் இறைமைக்கு ஆப்கானியர்கள் கொண்டாடிய போலி உரிமைகள் மறைந்தன. வெற்றியாளர்கள் டெல்லியை நவம்பர் 6ஆம் நாள் கைப்பற்றினர். எனினும், ஏராள மான பொக்கிஷத்தின் ஒரு பகுதியை ஹேமுவின் விதவை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டாள். ஆக்ராவும் தாமதமின்றிக் கைப்பற்றப்பட்டது. ஹேமுவின் விதவையைக் கைப்பற்றுவதற் கான முயற்சி தோல்வியுற்றது. அவருடைய வயது முதிர்ந்த தந்தை கைப்பற்றப்பட்டு இஸ்லாமை ஏற்றுக்கொள்ள மறுத்த தனல் கொல்லப்பட்டார். சிக்கந்தர் சூருக்கெதிராக எடுத்த படையெடுப்பு முற்றுப்பெறுவதற்காக நடவடிக்கைகள் உடனடி யாக எடுக்கப்பட்டன. சிக்கந்தர் சூர் 1557 மே மாதத் தில் சரணடையவும் வற்புறுத்தப்பட்டார். பீஹாரில் அவருக்கு நிலம் தரப்பட்டது. சற்றுப் பிறகு அங்கிருந்தும் அவரை அக்பர் விரட்டிவிட்டார். ஒரு நாடோடியாக அவர் வங்காளத்தில் உயிர் நீத்தார் (1558-1559). டெல்லி சிம்மாசனத்துக்கு உரிமை கொண்டாடிய அடுத்த உரிமையாளர் 1557-ல் வங்காளத்து

கவர்னருக்கு எதிராக முங்கிரில் நடந்த போர் ஒன்றில் கொல்லப்பட்டார். மூன்றும் சூர் போலி உரிமையாளரான இப்ராஹிம் ஒரிஸ்ஸாவில் அடைக்கலம் நாடவேண்டியிருந்தது. இவ்விதமாகப் பானிப்பட்டு வெற்றிக்குப் பிறகு இரண்டு ஆண்டுக்குள் இந்துஸ்தானின் இறைமைக்காக அக்பருடன் போட்டியிடுவதற்கு எந்த சூர் போட்டியாளரும் இருக்கவில்லை.

பைராம்கானின் ஆட்பேராட்சி (Regency of Bairam Khan), 1556-1560

ஹேமுவைத் தோற்கடித்ததும் அக்பரின் சூர் பகைவர்களை ஒழித்ததும் பைராம்கானின் ஆட்பேராட்சியின்பொழுது அவர் நிறைவேற்றிய பெருஞ் சாதனைகளாகும். பானிப்பட்டுப் போருக்குப் பிறகு கைவசமாகிய ஆட்சிப் பகுதியின் தற்காலிக நிர்வாகத்தை நிறுவுவது அவர் தீர்க்கவேண்டிய அடுத்த பிரச்சினையாகும். அமைதியை நிலைநாட்டுவதற்கும் வருமானத்தை வசூலிக்கவும் கரடுமுரடான ஒருவகை அரசாங்கம் நிலைநாட்டப்பட்டது. சிக்கந்தர் சூருக்கெதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும்பொழுது அக்பருடைய தாயும் குடும்பப் பெண்களும் காபூலிலிருந்து வந்திறங்கி மான்காட்டில் அவருடன் மீண்டும் கலந்துகொண்டனர். பைராம்கானைத் தமது ஒன்றுவிட்ட சகோதரியான சலீமா பேகமை (Salima Begum) (ஹுமாயூனின் சகோதரி குர்லுக் என்பவளின் மகள்) மணம்புரிய அனுமதித்து அக்பர் ஜலந்தரில் தமது பாதுகாப்பாளருக்கு வெளிப்படையாக மரியாதை செலுத்தினர். 1558 அக்டோபரில் பைராம்கான் ஆக்ராவுக்குத் திரும்பியபொழுது அவர் அக்பரின் கல்விக்காக ஏற்பாடு செய்து, மீர் அப்துல் லதீஃப் (Mir Abdul Latif) என்பவரை அவருடைய ஆசிரியராக நியமித்தார். மீர் அப்துல் லதீஃப் ஒரு சிறப்பு மிக்க அறிஞராவார்; சமயத்துறையில் அவருடைய பரந்த நோக்கங்களுக்காக அவருடைய தாய்நாடான பாரசீகத்தில் சுன்னியென்றும் இந்தியாவில் ஷியா என்றும் அவர் கருதப்பட்டார். ஆனாலும், 'பெருமையின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டான' இவராலும் அக்பரைக் கல்வி கற்க வற்புறுத்த முடியவில்லை. வேட்டையாடுவதிலும், யானைச் சண்டைகளிலும், அதுபோன்ற விளையாட்டுகளிலும் அவர் தமது காலத்தை நீடித்துச் செலவழித்தார். நிர்வாகப் பொறுப்பு பைராம்கானின் கையிலேயே இருந்தது. அவர் தமது கடமைகளை மிக மனநிறைவுடன் செய்து முடித்துக்கொண்டிருந்தார்.

புதிதாகக் கைப்பற்றப்பட்ட ஆட்சிப்பகுதியை உறுதிப்படுத்தியதோடு குவாலியருக்கும் ஜான்புரிக்கும் பைராம்கான்

படைகளை அனுப்பினர். தமது முன்னோரின் தலைநகரை மீண்டும் பெற முயன்றுகொண்டிருந்த ராஜாராம் ஷா (Rajaram Shah) விரட்டியடிக்கப்பட்டார்; குவாலியர் அரண் 1557-ல் கைப்பற்றப் பட்டது. இப்பொழுது கான்ஸமன் என்ற பட்டப்பெயரினைப் பெற்றிருந்த அலி கூலிகான் சாம்பாலை மீண்டும் கைப்பற்றி அந் நகருக்கும் லக்னோவுக்குமிடையிலிருந்த நாட்டையும் கைப் பற்றினர். இராசபுதனத்திலிருந்த ஆஜ்மீரும் கைப்பற்றப்பட்டது. ஆனல், ரான்தம்போரின்மீதும் சூனர்கரின்மீதும் நடத்திய படையெடுப்புகள் வெற்றிபெறவில்லை. மாளவத்தைக் கைப்பற்று வதற்காகத் திட்டமிடப்பட்ட மற்றொரு படையெடுப்பை, பைராம் கானுக்கும் அக்பருக்குமிடையில் இருந்த தொடர்பு மிகச் சோர்வடைந்திருந்ததனல் பின்வாங்க நேர்ந்தது.

பைராம்கானின் விழ்ச்சி, 1560

இந்துஸ்தானத்தில் முகலாயர்களின் ஆட்சியை மீண்டும் உறுதி யாக நிலைநாட்டுவதற்குக் காரணமாக இருந்த பைராம்கானது ஆட்பேராட்சி நான்கு வருடகாலமாக நிலைத்திருந்தது. 1560ஆம் ஆண்டின் துவக்கத்தில் பாதுகாப்பாளர் பதவியிலிருந்து விலக்கப் பட்டு மெக்காவுக்கு யாத்திரை போகுமாறு அக்பரால் உத்தரவிடப் பட்டிருந்தார். அதுபோல யாத்திரையை மேற்கொள்ளுவது நாட்டைவிட்டுக் கடத்தப்படுவதாகக் கருதப்பட்டது. பைராம் கானைப் போன்ற வெல்ல முடியாத ஆளுமையாளரின் வீழ்ச்சி அக்கால ஆசிரியர்களின் கவனத்தை இயல்பாகவே தட்டி எழுப்பி யது. அந் நிகழ்ச்சியைப்பற்றி அவர்கள் விவரமான வருணிப்பை அளித்துள்ளனர். பைராம்கான் ஒரு பற்றுதல் மிக்க, தேர்ச்சி பெற்ற நிர்வாகியும், பாதுகாப்பாளருமாயினும் முகலாய அரசவை யின் உறுப்பினர்கள் அவரை விரும்பவில்லை. முதல் முதலாக அவர் ஒரு ஷியா ஆவார்; அரசரும், அவருடைய குடும்பத்தின ரும், பிரபுக்களும் சுன்னிகளாவர். இரண்டாவதாக, அவர் நாட்டின் நலனில் கருத்து மிக்கவராயினும், 'அவர் முறையற்றும், அகங்காரத்துடனும், பொறாமையுடனும் நடந்துகொண்டார்; போட்டியாளராகக்கூடியவர்களைத் தமது இளம் தலைவரின் அருகில் வர அவர் அனுமதிக்கவில்லை'. மூன்றாவதாக, அக்பர் வயதடைந்து, நாட்டின் விவகாரங்களில் கருத்தைச் செலுத்தத் துவங்கியதும் பைராம்கானின் செல்வாக்கு இயல்பாகவே குறைய ஆரம்பித்தது; நிலைமையைச் சமாளிப்பதில் பாதுகாப்பாளர் பொறுமை இழக்க ஆரம்பித்தார்; அவர் சாதுர்யமாகவும் நடந்து கொள்ளவில்லை. அவருடைய குறைகளை மிகைப்படுத்துவதற்கும் அவரது எண்ணங்களுக்குத் தவருன பொருள் காணுவதற்கும்

அவருடைய பகைவர்கள் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தினர். நான்காவதாக மனிதப் பருவத்தை அடைந்துகொண்டிருந்த அக்பர் தமது புண்படுத்தும்படியான நிலையை வெறுத்து, பைராம் கானின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற விரும்பினர். அவருடைய சொந்தச் செலவிற்கும் பணம் கொடுக்கப்படவில்லை. பைராம்கானின் குடும்பத்தினரும் அவரை நம்பியிருந்தோரும் பெற்றிருந்த சலுகைகள் அக்பரின் குடும்பத்தினர் பெற்றிருக்க வில்லை. ஐந்தாவதாக, இளைய பேரரசருடன் உடனடியாக ஒட்டியிருந்த அவருடைய மாற்றுந்தாய், மாஹம் அனகா, அவளுடைய மகன் ஆதம்கான், அவளுடைய மருமகன் ஷிஹாபுத்தின் போன்றவர்கள் பைராம்கானைத் தங்களது வழியில் குறுக்கிடும் முட்டுக்கட்டை எனக் கருதினர்கள்; அவரைப்பற்றிப் பேரரசரிடம் கண்டதையெல்லாம் கூறிவைத்தனர். அவர்கள் அனைவரும் தங்களது புரவலரின் வளர்ச்சியுறும் பேரரசின் வளத்தில் பங்கு பெற்று அதிகாரத்தைப் பயன்படுத்தவும் பேரவாக் கொண்டிருந்தனர். இக் காரணங்களின் விளைவாகப் பாதுகாப்பாளருக்கும் அரச இளங்கணருக்குமிடையிலிருந்த உறவு தணிய ஆரம்பித்து நாளடைவில் அதில் பிளவும் ஏற்பட்டது. தார்திபேக்கை பைராம்கான் கொன்றது அரசவையில் பலருக்கு வெறுப்பூட்டியது. அவ்வரசவை வைதீக சுன்னி அரசவையானதனுல் ஷேக் கதாய் (Shaik Gadai) என்ற ஒரு ஷியா சதரி சதுர் (Sadr-i-Sadur) என்ற ஒரு முக்கிய பதவியில் நியமித்ததனுல் அதன் உணர்ச்சிகள் புண்படுத்தப்பட்டன எனக் கருதியது. ஒரு நாள் அக்பர் உல்லாசமாக வேட்டையாடிக்கொண்டிருக்கும்பொழுது விலங்குகளில் ஒன்று பைராம்கானின் கூடாரத்தின் கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடியது. பைராம்கான் அதை அவமதிப்பாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று பேரரசர் கூறியும் பைராம் யானைப்பாகனைத் தண்டித்தார். மற்ருெரு நாள் பைராம்கான் யமுனையில் படகோட்டிக்கொண்டிருக்கும்பொழுது அரச யானை ஒன்று அவரது தெப்பத்தைத் தாக்கியது. அதற்குரிய யானைப்பாகனை அக்பர் பாதுகாப்பாளரிடம் அனுப்பிவைத்தார். பாதுகாப்பாளர் அவனுக்கு மிகக் கடுமையான தண்டனையை விதித்தார். அக்பரின் ஆசிரியரும் ஒரு காலத்தில் பைராம் கானின் ஆதரவிலிருந்தவருமான முல்லா பீர்முகமது (Mullah Pir Muhammad) என்பவரை பைராம்கான் பதவியிலிருந்து விலக்கியது அக்பருக்கு வெறுப்பூட்டியது. இதுபோன்ற பல சிறிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்து பைராம்கானுக்கும் அவரது முதல்வருக்குமிடையே ஏற்பட்டிருந்த பிளவை மேலும் அதிகரித்தது. மன்னர் பேராட்சியாளரைப் பதவியிலிருந்து விலக்குமாறு அந்தப்புரத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த கட்சி அக்பரை வற்புறுத்தியது. அவருக்

கெதிராகச் சதித்திட்டமிடப்பட்டது. 1560ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஒருநாள் பைராம்கான் ஆக்ராவிலிருக்கும்பொழுதும், பேரரசர் அந் நகரின் சுற்றுப்புறத்தில் வேட்டையாடச் சென்றிருந்த பொழுதும் அவரது தாயின் உடல் நலமில்லாமைபற்றிய செய்தி அவருக்கு எட்டியது. பேரரசர் பைராம்கானுக்குத் தகவல் சொல்லி அனுப்பித் தாம் தமது தாயைப் பார்க்க டெல்லி சென்றார். அப்பொழுது மாஹம் அனகாவும் மற்றப் பெண்களும் அரண்மனையில் அவரைச் சூழ்ந்துகொண்டு அவரிடம் பைராம்கானுக்கெதிராகக் குறை கூறினர்; துரோகம் புரிவதற்கான கெட்ட எண்ணங்களை அவர் கொண்டுள்ளார் என்றும் கூறினர். இக் கட்சி டெல்லி, லாகூர், காபூல் ஆகியவற்றின் கவர்னர்கள் அனைவரையும் தம் வசமாக்கிக்கொண்டு தலைநகரின் அரணைவலுப்படுத்திக்கொண்டது. அவர்கள் கூறியதெல்லாம் பேரரசர்பால் ஆழ்ந்து பதிந்துள்ளது என்பதைச் சதியாளர்கள் உணர்ந்துகொண்டதும் அந்தப்புரக் கட்சியின் தலைவியான மாஹம் அனகா சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, பைராம்கானின் கோபத்துக்குத் தான் பயந்துகொண்டிருப்பதாக பாவனை செய்துகொண்டு மெக்காவுக்குச் செல்ல அனுமதி கேட்டாள். தந்திரம் வெற்றிபெற்றது. பைராம்கானைப் பதவியிலிருந்து விலக்க அக்பர் முடிவு செய்துவிட்டார்; அவருடைய ஆசிரியரான அப்துல் லதீஃப் (Abdul Latif) என்பவரிடம் எழுதப்பட்ட செய்தி ஒன்றைக் கொடுத்தனுப்பினார். அச் செய்தியாவது 'நீங்கள் நேர்மையாகவும் பற்றுதலுடனும் நடந்து கொள்ளுகிறீர்கள் என்று எனக்கு உறுதியாகக் கூறப்பட்டதனால் அரசாங்கத்தின் விவகாரங்கள் அனைத்தையும் நான் உங்கள் பொறுப்பில் விட்டுவிட்டிருந்தேன். அரசாங்கப் பொறுப்பை நானே ஏற்றுக்கொள்ள முடிவு செய்துவிட்டேன். ஆகையினால், நீங்கள் மெக்காவுக்கு யாத்திரை செல்வது விரும்பத்தக்கதாகும். அதை நீங்கள் பல நாட்களாக விரும்புகிறீர்கள். இந்துஸ்தானத்தின் பர்கானுக்களில் ஒன்று உங்களுடைய ஜீவனத்திற்காக அளிக்கப்படும். அதன் வருமானம் உங்களுடைய செயலாளர்களின் மூலமாக உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.'

இந்த யோசனைக்கு மாறாக அவருடைய நண்பர் அறிவுரை கூறியும் பைராம்கான் ஆட்சிபுரியும் முகலாயக் குடும்பத்திற்கு நெடு நாட்களாக ஆற்றிவரும் சிறப்புப் பணியின்மீது மாசுபடுவதைத் தடுக்க விரும்பி, சிறிது தாமதத்திற்குப்பிறகு அரச ஆணைக்குக் கீழ்ப்படிந்து, தமது பதவியின் சின்னங்களை அக்பரிடம் சரணடைவித்தார். ஆனால், லாகூரிலும், சர்ஹிண்டிலும் விட்டுவந்த தமக்குச் சொந்தமான செல்வத்தை மீண்டும் பெற பைராம்கான் சாவகாச

மாகப் பஞ்சாபுக்குப் போய்க்கொண்டிருக்கும்பொழுது மன்னர் பேராட்சியாளரின் ஆதரவில் முன்னுளிலிருந்த நன்றிகெட்டவனுன முல்லா பீர் முகம்மது என்பவனை அரசவைக்கட்சி பைராம்கானை இராச்சியத்திலிருந்து வெளியேறும்படி செய்வதற்காக ஒரு படையுடன் அனுப்பி வைத்தது; இது முன்னுள் மன்னர் பேராட்சியாளருக்குக் கோபமூட்டியது; அவர் தமது குடும்பத்தைப் பாடிண்டாவில் (Bhatinda) விட்டுவிட்டு ஜலந்தர் புறம் திரும்பி வன்முறை எதிர்ப்பைத் தர அரைமனத்துடன் முடிவுசெய்தார். ஆனால், பியாஸ் நதிக் கரையிலுள்ள தில்வாராவில் அவர் முறியடிக்கப்பட்டு மூனிம்கானுல் அக்பரிடம் கொண்டுவரப்பட்டார். அப்பொழுது தான் மூனிம்கானுக்குப் பாதுகாப்பாளருக்குரிய கான்கானு (Khan Khana) என்ற பட்டம் அளிக்கப்பட்டிருந்தது. அக்பர் தமது முன்னுள் பாதுகாப்பாளரை மன்னித்து மூன்றுவித வழிகளைக் காட்டினுர். முதலாவதாக, கல்பி, சந்தேரி ஆகிய மாவட்டங்களின் கவர்னராக நியமிக்கப்படுதல்; இரண்டாவதாக, அரசவையில் அவருடைய அந்தரங்கக் காரியதரிசியாகப் பதவியேற்றல்; மூன்ருவதாக மெக்காவுக்குச் செல்லுதல். உயர் கருத்தினைக் கொண்ட பைராம்கான் அதுவரைஅடைந்திருந்த பதவியைவிடக் கீழ்த்தரப் பதவி ஒன்றை ஏற்க விரும்பாது மெக்காவுக்குச் செல்ல முடிவு செய்தார். இராசபுதனத்தின் வழியாக அவர் பாடனுக்குச் (Patan) (அன்ஹில்வாரா—Anhilwara) சென்றுகொண்டிருக்கும்பொழுது அவர் ஆப்கானியக் கூட்டம் ஒன்ருல் தாக்குண்டு, முபாரக்கான் (Mubarak Khan) என்பவரால் கொல்லப்பட்டார். முபாரக்கானின் தந்தை 1555-ல் மச்சிவாராப் போரில் கொல்லப்பட்டார். மிக வறுமை நிலையில் பைராமின் குடும்பம் அகமதாபாத்துக்குக் (Ahmadabad) கொண்டுவரப்பட்டது. அவர்களைத் தக்க காவலுடன் அரசவைக்குக் கொண்டுவரச்செய்து அக்பர் அவர்களை மிக்க மரியாதையுடன் வரவேற்ருர். பைராமின் விதவையான சலீமா பேகமை அக்பர் மணம் புரிந்துகொண்டு, அவருடைய சிறு பிள்ளையான அப்துல் ரஹீமை (Abdul Rahim) தம் பாதுகாப்பிலேயே வளர்த்துவந்தார். அக் குழந்தை மிக உயர்ந்த பதவியை அடைந்தது; 1584, தமது தந்தையின் கான்கானு என்ற பட்டப்பெயர் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. பைராம் கானும், திறம்படைத்த ஒவ்வொரு மனிதனைப்போலவே, தம்மை இன்றியமையாதவன் எனக் கருதிவந்தார்; முன்போ பின்போ அவர் வீழ்ச்சியுறுவது இன்றியமையாததாயிற்று. அதிகாரத்தைக் கைப்பற்றிப் பாதுகாப்பாளரை ஒழிக்க விரும்பிய அரசவைக்கட்சியே மிக இழிவான முறையில் ஏற்பட்ட அவரது வீழ்ச்சிக்குப் பொறுப்பு ஏற்கவேண்டும். இருந்தபோதிலும், அவரது செயல்களை மிகத்

தாராளமான மனத்துடன் மன்னித்துவிட்டதற்கும், முகலாயர்களின் மீட்சிக்குப் பெரும்பாலும் காரணமாக இருந்த அவருடைய பணிகளைப் பாராட்டியதற்கும் அக்பர் மதிப்புக்குரியவராவார்.

முந்திய சீர்திருத்தங்கள்: போர்க்கைதிகளை அடிமைப்படுத்துவதை ஒழித்தல், 1562

அக்பர் இருபது வயதடைந்ததற்குச் சற்றுப் பிறகு அவரது முன்னோர்கள் காட்டியிராததும், அவரை இந்தியாவின் மிகப்பெரிய முஸ்லிம் அரசர் என்று புகழ் பெறும்படிச் செய்ததுமான விசால மனப்பான்மையை வெளிப்படுத்தினர். 1562ஆம் ஆண்டின் துவக்கத்தில் போர்க்கைதிகளை அடிமைப்படுத்தும் பழக்கத்தைத் தடையிடுவதற்கான கண்டிப்பான உத்தரவை அவர் பிறப்பித்தார். இடைக்காலத்தில் போர்க்கைதிகளை அடிமைகளாக்கி அவர்களைக் கட்டாயப்படுத்தி இஸ்லாமுக்கு மதமாற்றம் செய்வது சட்டமாக இருந்தது. மனிதத்தன்மையற்ற இப் பழக்கத்துக்கு இந்த ஆணை முற்றுப்புள்ளி யிட்டதுமன்றி இந்து சமயத்தைப் பின்பற்றுவோர் ஏராளமாக அந்நிய சமயத்திற்கு மதமாற்றம் செய்யப்படுவதிலிருந்து அம் மதத்தைக் காப்பாற்றியது.

ஆதம்கானின் இறப்பும், அந்தப்புரக் கட்சியிலிருந்து அக்பர் விடுதலை பெறுதலும், 1562, மே 16ஆம் நாள்

மாஹம் அனகா என்ற அவரது முதன்மைத் தாதியின் பிடியிலிருந்து விடுதலைபெற விரும்பி, அக்பர் மூனிம்கானுக்குப் பதிலாக மாற்றாந் தந்தையான ஷம்சுத்தீன் அத்காகான் (Shums-ud-din Atga Khan) என்பவரை 1561, நவம்பரில் தமது முதல் மந்திரியாக நியமித்தார். இவ்விதமாக நியமித்ததை மாஹம் அனகா, ஆதம்கான், மூனிம்கான், ஷிஹாபுத்தின் அகமதுகான், அந்தப்புரக் கட்சியின் செல்வாக்குமிக்க சில உறுப்பினர்கள் ஆகிய அனைவரும் விரும்பவில்லை. தமது முதன்மை நிலையை விடாது வைத்துக் கொள்ள நினைத்த ஆதம்கான் தம்மைப் பின்பற்றுவோர் சிலருடன் 1562, மே 16ஆம் நாள் அரண்மனைக்குள் புகுந்து ஆத்காகானைத் தமது பணிகளைச் செய்துகொண்டிருக்கையில் கொன்றார். பிறகு அவர் அச் சமயத்தில் அரச அறையில் தூங்கிக்கொண்டிருந்த அக்பரைக் கொல்வதற்கு அங்கு நுழைய முயன்றார். ஆனால், ஒரு பேடி அவரைத் தடுத்துக் கதவை அடைத்துக்கொண்டான். சப்தம் அக்பரை எழுப்பிவிட்டது. அவர் அந்தப்புரத்திலிருந்து மற்றொரு கதவின் வழியாக வெளிவந்து தமது அமைச்சரைக் கொன்றது எதற்கு என்று கோபத்துடன் ஆதம்கானை வினவினர். ஆதம்கான் பலவகை சாக்குப் போக்குகளைக் கூறியதுமன்றி

அக்பர் அப் பாதகனை நிராயுதபாணியாக்க முயன்றபொழுது அவருடைய கரத்தைப் பிடித்து, அவருடைய வாளையும் பிடிக்க முயன்ருன். அக்பர் கோபாவேசத்துடன் முட்டியால் ஆதம் கானின் முகத்தில் குத்தி, அவனைத் திணறும்படி செய்தார். அவருடைய ஆணையின்படி ஆதம் கைகளும் கால்களும் கட்டப்பட்டு இருமுறை அரண்மனையின் மேல் மாடியிலிருந்து கீழே தள்ளப்பட்டான். அவன் உடனே மடிந்தான். ஆதமின் கூட்டாளிகளான மூனிம்கானும், ஷிஹாபுத்தீனும், மற்ற வர்களும் நியாயமுறத் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள ஓடி மறைந்துவிட்டனர். நோய்வாய்ப்பட்டிருந்த மாஹம் அனுகா வுக்கு அக்பர் நடந்ததைத் தெரிவித்தார். 'மாட்சிமை தாங்கிய நீங்கள் சரியாக நடந்துகொண்டீர்கள்' என்று அவள் கூறினுள். அவனுடைய இறந்த நாற்பதாம் நாள் அவளும் இறந்தாள். இவ்விதமாக அக்பர் அந்தப்புரத்துக் கட்சியின் தீங்கான செல் வாக்கை ஒழித்தார். அவர் மூனிம்கானை மன்னித்து அவரைத் தமது முதன் மந்திரியாக அமைத்ததுமன்றி டெல்லியில் ஆதம் கானின் கல்லறையின்மேல் ஒரு சிறந்த மாடத்தையும் கட்டினுர்.

யாத்திரிகர்களின்மீது விதிக்கப்பட்ட வரியைத் தவிர்த்தல், 1563

அக்பர் தமது இருபதாம் வயதை அடைந்ததும் அவருக் குள்ளேயே சிறப்பு மிக்க ஆன்ம மாறுதல் ஒன்று ஏற்பட்டது. இதனுல் மக்களிடத்தில் அவர் கொண்டிருந்த போக்கில் ஒரு முழு மாற்றம் உண்டாயிற்று: 'எனது இருபதாம் வயது முடிந்ததும், எனக்குள்ளேயே ஓர் அருவருப்புத் தோன்றியது. எனது இறுதிப் பயனத்திற்காக ஆன்மாவுக்குரிய ஏற்பாடு எதையும் செய்யவில்லை யாதலால் என்னுடைய ஆன்மா பெரிய வருத்தத்தில் மூழ்கியது.' அதற்குள் இளைய அரசர் தமக்குத்தாமே தலைவராக இருக்கவும், மற்ற எக்கருத்தையும் மனத்தில் கொள்ளாமல் தமது வமிசத்துக்கும் நாட்டுக்கும் நலன் ஏற்படத் தமது கொள்கையைப் பதியவைக்கவும் முடிவு செய்துவிட்டார். போர்க் கைதிகளை அடிமைப்படுத்துதலை ஒழித்தல், இளைய பேரரசரின் மனத்தில் படிப்படியாக வளர்ந்து கொண்டு வந்த பரந்த கொள்கையின் முதல் அறிகுறியாகும். அக் கொள்கைக்கு அடுத்த சான்று 1563-ல் வெளியாகியது. யாத்திரிகர் களின் மீது விதிக்கப்பட்டு வந்த தீர்வை, அவ்வாண்டில் அவரது இராச்சியம் முழுவதிலும் தவிர்க்கப்பட்டது. அவ்வாண்டில் அவர் மதுராவில் முகாமிட்டிருந்தபொழுது இந்துக்களின் புண்ணிய ஸ்தலங்களுக்கு விஜயம் செய்பவர்களின்மீது அவரது அரசாங்கம் ஒரு வரியை விதித்தது என்பது அவரது கவனத்துக்குக் கொண்டு

வரப்பட்டது. இறைவனை வழிபடுகிறவர் ஒருவருடைய வழிபாட்டு முறை தவருகப் இருப்பினும், அவர்மீது வரி விதித்தல் இறைவனின் கட்டளைக்கு மாறுபட்டதாகும் என்று அவர் கருதினர்.

ஜெஸ்ஸியா வரியைத் தவிர்த்தல், 1564

அடுத்த ஆண்டின் துவக்கத்தில் (1564) அக்பர் தமது இராச்சியம் முழுவதிலும் வெறுப்பூட்டும் ஜெஸ்ஸிய வரியைத் தவிர்த்தார். அவ் வரியை முஸ்லிமல்லாத எல்லோருமே செலுத்த வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. இத் தீர்வை இந்துக்களுக்குப் பெரு முடக்காக இருந்தது; அவர்கள் ஒரு கீழ்த்தர மக்களாக நடத்தப்படுகின்றனர் என்பதை அவர்களுக்கு அது எக்காலமும் நினைப்பூட்டிக்கொண்டிருந்தது. தமது குடிமக்களுக்கிடையில் மனக் கசப்பு உண்டுபண்ணக்கூடிய எல்லா வேறுபாடுகளையும் போக்க முடிவு செய்திருந்த அக்பர், அச் சீர்திருத்தத்தினுல் தமது கருவூலத்திற்குப் பெரு நஷ்டத்தை இழைத்துக்கொண்டார். ஆனுலும், நாட்டின் பெரும்பாலான குடிமக்களின் நல் விருப்பத்தை அவர் பெற முடிந்தது.

காஜா முஅஸ்ஸாமின் இறப்பு, 1564 (Death of Khwaja Muazza)

அக்பர் 1564, மார்ச்சு மாதத்தில் தமது தாய் மாமனை காஜா முஅஸ்ஸாமின்மீது ஏற்ற தண்டனையை விதித்து, ஆண் பெண் உறவினர்களின் செல்வாக்கிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார். முஅஸ்ஸாம் ஓர் அரைப் பைத்தியக்காரன்; பல கொலைகளைப் புரிந்திருப்பவன்; மற்றப் பல குற்றங்களையும் புரிந்தவன்; அவனுடைய மனைவியையும் அவன் கொல்ல நினைத்தான். அச் செய்தியைப் பெற்றவுடன் அக்பர் ஆக்ராவின் அருகிலிருந்த காஜாவின் நாட்டுப்புற மாளிகைக்கு விரைந்து சென்ருர். காஜா அப் பெண்ணை ஏற்கெனவே கொன்றுவிட்டிருந்தார். அக்பர் தாமதித்துச் சென்றதனுல் அப் பெண்ணின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லையாயினும், அக் கொலைபாதகனை அவனுடைய கூட்டாளிகளுடன் யமுனையில் மூழ்கடிக்க அவர் உத்தரவிட்டார். ஆனுல், அவன் மூழ்கவில்லையாதலால் அவன் குவாலியர் அரணில் சிறையடைக்கப்பட்டான்; அங்கே அவன் சற்றுக் காலத்திற்குப் பிறகு இறந்தான். இந் நிகழ்ச்சிக்குப் பிறகு அவருடைய அரசவையின் எந்த உறுப்பினரும் தீய முறைகளை அனுசரித்து, அவரது கொள்கைகளை மாற்றத் துணியவில்லை. ஸ்மித் கூறுவதுபோல, அக்பர் அவருடைய தாயாருக்கு எல்லா மரியாதைகளையும் தொடர்ந்து செலுத்தி வந்தார்; ஆனுல், தமது கொள்கையின்மீது ஆதிக்கம் பெற அவளை அனுமதிக்கவில்லை. அக் கொள்கை

அவன் விரும்பாத தத்துவங்களின் அடிப்படையில் அமைந் திருந்தது.'

பேரரசக் கொள்கையின் துவக்கம், அக்பரின் படையெடுப்புகளும் நிலங்களைக் கைப்பற்றி இணைத்துக்கொள்ளுதலும்

பைராம்கான் பதவியிலிருந்து விலக்கப்பட்டதற்குப் பிறகு இரண்டு ஆண்டு காலமாக (1560-62) அக்பர் இன்னும் பூர்வாங்கமாகத் தமது தலைவராக இல்லாதபொழுதும், மாஹம் அனுகா உண்மையில் பிரதம மந்திரியாக நடந்துகொண்டிருக்கும்பொழுதும் நிர்வாகத்தில் இளைய பேரரசர் போதிய கருத்தைச் செலுத்தாது இராச்சியத்தின் விவகாரங்களைக் கவனிக்கும்பொருட்டு அந்தப்புரக் கட்சியை அனுமதித்தார். இருந்தாலும், இச் சமயத்தில்தான் வட இந்தியாவை வெல்லுவதற்கும் நாட்டின் உண்மைப் பேரரசராகத் தம்மை ஆக்கிக்கொள்வதற்கும் ஒரு பேரவாமிக்க திட்டத்தை யிட்டார். அவருடைய ஆட்சி காலத்தின் பிந்திய ஆண்டுகளில் அவர் மேற்கொண்டிருந்த பேரரசக் கொள்கையின் விதைகள் இப்பொழுதுதான் விதைக்கப்பட்டன. அபுல்பாஸலின் கருத்தின்படி, அக்பரின் படையெடுப்புக் கொள்கை, தல மன்னர்களின் தடையற்றதும் சுயநலம் நாடுவதுமான எதேச்சாதிகார ஆட்சியின்கீழ் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த குடிமக்களின் அமைதி, வளமை ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக என அமைந்திருந்தது. அக்பரின் முந்திய படையெடுப்புகள் பொறுத்தவரை இது உண்மையல்ல. அவருடைய ஆட்சி காலத்தின் முந்திய ஆண்டுகளில் நிலம், அதிகாரம், செல்வம் ஆகியவற்றின்மீது அவருக்கு இருந்த விருப்பமே அவரை ஊக்குவித்தது. அண்டைப்புற இராச்சியங்களை அடக்கி இணைப்பதற்கு அவர் முடிவு செய்தது அவருடைய இராச்சியத்தைப் பரப்புவதற்கேயாகும். அதை அவர் மறைத்து வைக்கவில்லை. 'ஓர் அரசன் இராச்சியங்களை வெல்லுவதில் கருத்தாக இருக்கவேண்டும்; இல்லையெனில் அவனுடைய சுற்றுப்புறத்திலிருப்பவர்கள் அவனுக்கெதிராக ஆயுதந் தாங்கிக்கிளர்ந்தெழுவர். படை, போருக்காக எப்பொழுதும் பயிற்சி பெறவேண்டும்; இல்லையெனில் பயிற்சியின்றி அது தன்னிச்சையாக வாழத்தொடங்கி விடும்' என்று அவர் கூறுவதுண்டு. அக்பர் வட இந்தியாவின் பெரும்பான்மையான பகுதிக்குத் தலைவராகிவிட்டதற்குப் பிறகுதான் அவருடைய கொள்கை தேசிய உணர்ச்சியாலும், மனிதத் தத்துவ உணர்ச்சிகளினாலும் மாற்றி அமைக்கப்பட்டது. அவருடைய ஆட்சி காலத்தின் பிற்பகுதியில் முழு நாட்டின் அரசியல் ஐக்கியத்தைக் கொண்டுவருவதற்கும் நிலத்து மக்களுக்குப் பாதுகாப்பும் மகிழ்ச்சியும் அளிப்பதற்குமான பழைமை வாய்ந்த இந்துக் குறிக்கோள் அவரை ஊக்குவித்தது.

மாளவத்தைக் கைப்பற்றுதல், 1561

பைராம் பதவிவிட்டு விலகிய பிறகு, முதன் முதலாகக் கைப்பற்றப்பட்ட மாகாணம் மாளவ மாகாணமாகும். அதன் ஆட்சியாளரான பஸ்பகதூர், ஷேர்ஷா, அவருடைய மகன் இஸ்லாம்ஷா ஆகியவர்களின் காலத்தில் அம் மாகாணத்தின் கவர்னராக இருந்த ஷுஜாத்கான் என்பவரின் மகனுவார். அவர் இசைக் கலையில் பற்றுதல் மிக்கவராக இருந்தார். நடனமாடும் மங்கையர், பாடகர் ஆகியவர்களின் கூட்டத்தை அவர் நாடினுர். அவர்களில் மிக்க பிரசித்திவாய்ந்தவள் ரூப்மதி என்பவளாவாள். அவளுடைய அழகுக்கும் கவிதைத் திறமைக்கும் அவள் புகழ் பெற்றவள். அம் மாகாணத்தின் நிர்வாகம் அதன் போக்கிலேயே விடப்பட்டிருந்ததனுல் இயல்பாகவே சக்தி குன்றி இருந்தது. மாஹம் அனுகாவின் மகனுன ஆதம்கான் அவருடைய தாயின் செல்வாக்கின் விளைவாக மாளவத்தின் தலைநகரான சாரங்க்பூரின்மீது படையெடுப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். படையெடுப்பாளன் சாரங்க்பூருக்கு 20 மைல் தூரத்தில் வரும்வரை பஸ்பகதூர் அவனைப் பொருட்படுத்தவில்லை. அவருடைய உயிருக்கு உடனடியாக ஏற்பட்ட ஆபத்து அவருடைய காதல், கலை, கனவுகளிலிருந்து அவரைத் தட்டி எழுப்பியது. ஒழுங்கு குலையப்பட்டுத் திருப்தியற்றிருந்த ஒரு படைக்கு அவர் தலைமை தாங்கி, அரண்மனையை விட்டகன்று, சாரங்பூருக்கு மூன்று மைல் தூரத்தில் மார்ச்சு 29ஆம் நாள் போரிட்டார். ரூப்மதி உட்பட பஸ்பகதூரின் குடும்பத்தினர், பொக்கிஷம், சொத்து ஆகிய அனைத்தும் வெற்றியாளரின் கையில் சிக்கின. ரூப்மதியைப் பெறுவதற்கு ஆதம்கான் மிக்க ஆவலாயிருந்தார். ஆனுல் அவள் தன்னுடைய கன்னிமையைக் காத்துக்கொள்வதற்காக விஷம் குடித்து இறந்தாள். அம் மாகாணத்தின் குடிமக்களுக்குச் சொல்லமுடியாத தீங்குகளை ஆதம்கானும் பீர்முகம்மதும் இழைத்தனர்.

யானைகள், பெண்கள் உட்படப் பல கொள்ளைப் பொருள்களையும் ஆதம்கான் தம்மிடத்திலேயே வைத்துக்கொண்டு, சாரங்க்பூரில் கைப்பற்றியவற்றில் ஒரு பகுதியையே பேரரசனுக்கு அனுப்பி வைத்தார். இச் செயலும் மாளவத்தில் அவர் இழைத்த பெருங் கொடுமைகளைப்பற்றிய தகவல்களும் அக்பருக்கு அளவுமீறிக் கோபமூட்டின. ஆதம்கானைத் தண்டிப்பதற்காக அவர் ஏப்ரல் 27ஆம் நாள் ஆக்ராவைவிட்டு மாளவத்தை அடைந்தார். பேரரசரை மே, 13ஆம் நாள் சாரங்க்பூரில் பார்த்து, ஆதம்கான் கலக்கமுற்ருர்; அவரை அடிபணிந்து வணங்கித் தம்மை மன்னிக்குமாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். மாஹம் அனுகா அவ்விடத்

திற்கு விரைந்து, அவளுடைய மகனுக்காகப் பரிந்து பேசிய பிறகு தான் அவர் மன்னிப்புப் பெற்றார்; பஸ்பகதூரின் அந்தப்புரத்தைச் சார்ந்த இரண்டு அழகிகள், எங்கே தமது மகன் அவர்களிடமும் மற்றவர்களிடமும் ஆதம்கான் இழிவாக நடந்துகொண்டதை வெளிப்படுத்திவிடுவார்களோ என்று பயந்து, மாஹம் அனகா அவ்விரு பெண்களையும் கொன்றுவிட்டுத் தன் மகன் குற்றங்களை மறைக்க முயன்றாள். பிறகு அக்பர் ஆதம்கானை மாளவத்தின் கவர்னராக விட்டுவிட்டு ஆக்ராவுக்குத் திரும்பினார்.

ஆக்ராவிலிருந்து மாளவத்துக்கும், மீண்டும் ஆக்ராவுக்கும் மேற்கொண்ட பயணம் மிக அவசரமான நிலையிலும் உஷ்ண காலத்திலும் செய்யப்பட்டதாகும். மாபெரு அலெக்ஸாண்டரைப் போல (Alexander) அக்பரும் குளிரையும் வெப்பத்தையும் பொருட்படுத்தாது ஆபத்துக்கிடையில் பெரு வீரத்தையும் துணிச்சலையும் வெளிப்படுத்தினார். ஆக்ராவுக்குத் திரும்புகையில் நார்வாருக்கு (Narwar) அருகில் அவர் ஒரு பெண் சிங்கத்தைத் தமது வாளின் ஒரே வீச்சில் வெட்டி வீழ்த்தினார். காட்டு யானைகளையும் மற்றப் பயங்கர விலங்குகளையும் அடக்குவதில் அவருக்குப் பெரு மகிழ்ச்சி.

ஜான்புரியில் கிளர்ச்சி; சூனுரைக் கைப்பற்றுதல், 1561

ஆதம்கான் மாளவத்தை அடிபணியும்படி செய்துகொண்டிருக்கும்பொழுது ஜான்புரி மாகாணத்தில் ஒரு தீவிரக் கிளர்ச்சி நிகழ்ந்தது. அம் மாகாணம் அக்பரது இராச்சியத்தின் கிழக்குப் பகுதியாக அமைந்திருந்தது. மறைந்துபோன முகம்மது ஆதில் ஷா சூரின் மகன் ஷேர்கான், 20,000, குதிரைகள், 50,000 காலாட் படைவீரர்கள், 500 யானைகள் அடங்கிய ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு ஜான்புரியின்மீது படையெடுத்தார். இது மக்களைக் குழப்பத்தில் மூழ்கடித்தது. அதன் கவர்னரான கான் ஸமன் (Khan Zaman—ஆலி கூலிகான்) கடும் எதிர்ப்பளித்தார்; அவருக்கு உதவியாகப் பேரரசப் படை ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது. கிளர்ச்சியாளரின் படை, எண்ணிக்கையில் அதிகமாக இருந்தபோதிலும், அது மிகக் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டு, விரட்டியடிக்கப்பட்டது. இவ்வெற்றிக்குப் பிறகு கான் ஸமன் கிளர்ச்சியாளரின்மேல் சிறிது இரக்கம் காட்டினார். ஆதம்கானைப் போலவே அவரும் ஆப்கானிய யானைகள், ஆயுதங்கள் அனைத்தின் பெரும்பகுதியைத் தமக்காகவே வைத்துக்கொண்டு, ஒருசில கொள்ளைப் பொருள்களையே ஆக்ராவுக்கு அனுப்பிவைத்தார். குற்றம் புரிந்த கவர்னரைத் தண்டிப்பது அவசியம் என்று அக்பர்

கருதினர். அக்பருக்கு இயல்பாகவே அமைந்திருந்த செயல் விரைவுடன் அவர் ஜூலை வெயிலில் ஜான்புரிக்கு விரைந்தார். கான் ஸமனும் அவருடைய சகோதரரான பகதூரும் பீதியுற்று, கராவில் பேரரசரை சந்தித்து, எல்லா யானைகளையும் அவரிடத்தில் ஒப்படைத்து, அவரை மன்னிக்குமாறு கெஞ்சி வேண்டிக்கொண்டார். இயல்பாக அமைந்திருந்த தாராள மனப்பான்மையுடன் அக்பர் கான் ஸமனின் கீழ்ப்படிதலை ஏற்றுக்கொண்டு, அவரை ஜான்புரியின் கவர்னராகத் திருப்பி அனுப்பிவிட்டார். அதே சமயத்தில், சூனர்காரை ஆப்கானியர்களின் கையிலிருந்து பறிக்க ஆதுல்கானை அனுப்பிவைத்தார். 1561, ஆகஸ்டில் சூனர் கைப்பற்றப்பட்டது. அது கிழக்கில் பேரரசின் எல்லைப் பாதுகாப்பு நிலையமாகியது.

ஜெய்பூர் கீழ்ப்படிதல், அதனுடன் உடன்படிக்கை செய்துகொள்ளுதல், 1562

1561, நவம்பரில் ஷம்சுத்தீன் ஆத்காகான் பிரதமமந்திரியாக நியமிக்கப்பட்டார். அவ்வாண்டின் முடிவில் ஆதம்கான் மாளவத்திலிருந்து வரவழைக்கப்பட்டு, பீர் முகம்மது அவருடைய பதவிக்கு உயர்த்தப்பட்டார். ஆதம்கானின் நிர்வாகம் மிகக் கொடுமையானதாக இருந்தது. 1562 ஜனவரியில் ஆஜ்மீரிலுள்ள ஷேக் மொய்னுத்தீன் சிஸ்தியின் (Shaik Muinuddin Chisti of Ajmer) கல்லறைக்கு அக்பர் முதல் முறையாக யாத்திரை சென்றார். வழியில் ஆம்பர் (ஜெய்பூர்) அரசரான பர்மலை (Bhar Mal) அவர் வரவேற்று, அவருடைய மகளை மணம்புரிந்து கொள்ளுவதற்கு இசைந்தார், பர்மால் அக்பரின் மேலாண்மையை அங்கீகரித்த முதல் இராசபுத்திர அரசராவார். திருமணம் சாம்பரில் ஜனவரியின் முடிவில் பேரரசர் ஆக்ராவுக்குத் திரும்பும் வழியில் தங்கியபொழுது நடைபெற்றது. அவ்விளவரசி ஜஹாங்கீரின் தாயாகி, அக்பரின் மீதும் அவருடைய கொள்கையின்மீதும் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தாள். முந்திய சுல்தான்கள் இந்துப்பெண்களை மணம்புரிந்து கொண்டதைப் போலல்லாமல் இத் திருமணம் சுயமாகவே செய்து கொள்ளப்பட்டதாகும். டெல்லி, ஜெய்பூர் ஆளும் வமிசங்களை அது இணைத்தது. பார்மல்லின் சுவீகார மகனான பக்வான்தாஸ் (Bhagvandas) என்பவரையும் பார்மல்லின் பேரனான மன்சிங்கையும் (Man Singh) அவரது பணித்துறையில் சேர்த்துக்கொண்டு அவர்களை உறவினர்களாக நடத்தி வந்தார்.

மெர்டாவைக் கைப்பற்றுதல் (Acquisition of Merta, 1562)

ஆஜ்மீரில் ஒரு நிலப் பகுதியைப் பெற்றிருந்த மிர்ஸா ஷரபுத்தீன் (Mirza Sharaf-ud-din) என்ற உயர் அதிகாரி ஒருவர் மார்வாரி

லுள்ள மெர்டா அரணை அடிபணியவைப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்டார். அது சித்தூரின் வருங்காலப் பாதுகாவலரும் மீவாரைச் சார்ந்த உதயசிங்கின் அடியாளுமான ஜெய்மாலின் பொறுப்பில் இருந்தது. குறுகியகால முற்றுகைக்குப் பிறகு அவ்வரண் சரண் அடைந்தது. அரணை, அதன் படைத் தளவாடத்துடனும் இதர ஆயுதங்களுடனும் சரணடைத்துவிட்டால், அதன் படையைப் பத்திரமாக வெளியனுப்புவதாக வாக்குறுதி யளிக்கப்பட்டது. எனினும், தேவதாஸ் (Deva Das) என்பவரின் கீழிருந்த சில இராசபுத்திரர்கள் எதிர்ப்பளித்து, இராணுவப் பொருட் சேமக்குவைகளை எரித்து முகலாயர்களைத் தாக்கினர். ஆனாலும், அவர்கள் வீரத்துடன் போர் புரிந்தபோதிலும், எண்ணிக்கையில் 200 ஆட்களாக இருந்த அவர்கள் முறியடிக்கப்பட்டு, அவர்களின் தலைவருடன் கொல்லப்பட்டனர். பிறகு மெர்டா மொகலாயர்களின் கைவசமாயிற்று.

மாளவத்தில் கிளர்ச்சி, 1562

புதிய கவர்னரான முல்லாபீர் முகம்மதுவின் கொடுங்கோலான நடத்தை மாளவத்தில் முகலாய ஆட்சியை மக்கள் வெறுக்கும்படி செய்தது. முல்லா பெருங் கொடுமைகளை உதவியற்றிருந்த மக்களின்மீது இழைத்தார்; எவ்வயதினரையும், எவ்வந்தஸ்தினரையும், எப்பாலினத்தைச் சேர்ந்தவரையும் அவர் விடவில்லை. 1560-ல் காண்டேஷுக்கு ஓடிவிட்ட பஸ்பகதூர் மாகாணத்தின் தெற்கு மாவட்டங்களைச் சூறையாடி, அவருடைய பாதுகாப்பாளரான இரண்டாம் முபராக்குடனும் (Muberak II) பீராரைச் சார்ந்த துஃபல்கானுடனும் (Tubalkhan of Berar) முல்லாவின் மீது தாக்குதலை நடத்தினர். படையெடுப்பாளனுக்கெதிராகச் செல்லும்படி பீர் முகம்மது வற்புறுத்தப்பட்டார். ஆனால், அவர் தோற்கடிக்கப்பட்டு, விரட்டியடிக்கப்பட்டார். அவர் நர்மதையைக் கடந்து சென்றுகொண்டிருந்தபொழுது ஓர் ஒட்டகம் அவரது குதிரையைக் கவிழ்த்தது. அதனால் அவர் மூழ்கினார். இவ்விதமாக பஸ் பகதூர் தமது இராச்சியத்தை மீண்டும் பெற முடிந்தது. ஆனால், அவருடைய வெற்றி வெகுநாட்கள் நீடித்திருக்கவில்லை. அப்துல்கான் உஸ்பெக்கின்கீழ் அக்பர் ஒரு படையை அனுப்பிவைத்தார். உஸ்பெக்கு பஸ்பகதூரை நாட்டிலிருந்து விரட்டியடித்து, மாளவத்தை மறுமுறை கைப்பற்றினார். ஒவ்வோர் அரண்மனைக்கும் துணிகரமாக ஓடிக்கொண்டு, அவலநிலையினாலும் வறுமையினாலும் கஷ்டப்பட்டுக்கொண்டு பஸ் பகதூர் தமது ஆட்சிகாலத்தின் 15ஆம் ஆண்டில் அக்பருக்குக் கீழ்ப் படிந்து விடுவது நலமாகும் எனக் கருதினார். அவர் 1,000 வீரர்களின் மன்சப்தாராக (Mansabdar) நியமிக்கப்பட்டார். பிறகு

2,000 வீரர்களைப் பெறுவதற்கான நிலைக்கு அவர் உயர்த்தப் பட்டார்.

கோண்ட்வானுவை வெல்லுதல், 1564

கர்ஹா-கடங்காவைச் (Garha-Katanga) சார்ந்த பத்து நூற்றுண்டுப் பழமை வாய்ந்த காண்ட் இராச்சியத்தை (Gond) அடிபணியவைக்க அக்பர் ஆளம்கானுக்கு உத்தரவிட்டார். அவ்விராச்சியம் கிழக்கில் ரதன்பூர் தொட்டுக் கிழக்கில் ரெய்சின் (Raisin) வரையும், வடக்கில் ரீவா தொட்டுத் தெற்கில் காகின் எல்லை வரையிலும் பரவி, தற்கால மத்திய பிரதேசத்தின் வட மாவட்டங்களும் அடங்கி இருந்தது. அதனை இராணி துர்காவதி ஆண்டுவந்தார். அவள் மகோபாவைச் (Mahoba) சார்ந்த சந்தேள இளவரசியும் தமது மகனுன வீர் நாராயணன் (Vir-Narayanan) அரசப்பேராட்சியாளருமாவான். இளைய அரசன் பருவமடைந்தபோதிலும், நிர்வாகத்தைத் தனது தாயே நடத்தி வருவதை அவன் அனுமதித்தான். துர்காவதி தைரிய மிக்கவளும் சாதுர்ய மிக்கவளுமான அரசியாவாள். 20,000 குதிரைகளும், 1,000 யானைகளும், எண்ணற்ற காலாட்படை வீரர்களும் அடங்கியிருந்த ஓர் ஆற்றல் மிக்க படையை அவர் பெற்றிருந்தார். அதன் உதவியைக்கொண்டு பஸ்பகதூர், மாளவத்தின் ஆப்கானியர்கள் அனைவரும் நடத்திய ஆக்கிரமிப்புத் தாக்குதல்களிலிருந்து வெற்றிகரமாகத் தனது இராச்சியத்தை அவள் பாதுகாத்தாள். அக்பரின் திட்டவட்டமான ஆக்கிரமிப்புக் கொள்கையின்படி எவ்விதமான காரணமுமின்றி கொண்ட்வானுவைத் தாக்க அக்பர் திட்டமிட்டார். ஆசப்கானின் தலைமையின் கீழிருந்த படையெடுப்பாளரின் படை 50,000 போர்வீரர்களை உட்கொண்டிருந்தது. மிகத் தாழ்வான படையுடன் அப் பெரும் படையை அரசி தாக்கி, கர்ஹாவுக்கு கிழக்கில் உள்ள நர்ஹி என்ற இடத்தில் இரண்டு நாட்களாக எதிர்த்தாள். வீர் நாராயணன் காயமுற்றுத் தம்முடைய தாயின் வேண்டுகோளுக்கிணங்கிப் பின் வாங்கினுர். இச் செயல் அவனுடைய சிறிய படையை மேலும் பலவீனப்படுத்தியது. அரசி உறுதியாக நின்றும், இரண்டு அம்புகளால் காயமுற்றுர். பிடிபடுவதிலிருந்தும், இகழப்படுவதிலிருந்தும் தன்னைக் காத்துக்கொள்ள, அவள் தன்னையே குத்திக்கொண்டு மடிந்தாள். படையெடுப்பாளன் இப்பொழுது சௌராகர் நோக்கி முன்னேறினுன். அங்கே வீர் நாராயணன் அவருடன் வீரத்துடன் போர் புரிந்தான்; ஆனுலும், அவன் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப் பட்டான். அவனுடைய பெண்கள் ஜன்ஹர் (Janhar) என்ற பயங்கரச் சடங்கை மேற்கொண்டனர். ஆசப்கான் பெருங் கொள்ளைப்பொருளைப் பெற்றுர். அதில் தங்கம், வெள்ளி, அணி

கலங்கள், ஆயிரம் யானைகள் அனையவும் அடங்கி இருந்தன. அவர் இருநூற்றுக்கு மேற்பட்ட யானைகளை அக்பரிடம் அனுப்பிவைத்து, மீதிப் பொருளைத் தாமே வைத்துக்கொண்டார். அவருடைய தவறுதலுக்காக அவனைத் தண்டிக்க அக்பர் அவ்வளவிற்கு சக்தி பெற்றிருக்கவில்லை.

மீவாரின் தலைநகரான சித்தூரைக் கைப்பற்ற அக்பர் 1567 செப்டம்பர் மாதத்தில் முடிவு செய்தார். மேவாரின் அரசனுன உதயசிங் (Udaya Singh) பேரரசனை ஒரு 'தூய்மையற்ற அந்நியன்' என்று கருதியதோடு, அவருக்குக் கீழ்ப்படிவதுமன்றித் தமது மகளையும் மணம் புரிந்து வைத்த ஆம்பரின் அரசன் பர்மாலைப்பற்றி மிக இழிவாகவும் நினைத்துவந்தார். மேலும், மாளவத்தின் முன்னுள் மன்னரான பஸ்பகதூருக்கு அவர் தஞ்சம் அளித்திருந்தார். மேவார் குஜராத்துக்கு செல்லும் வழியில் இருந்தது. அதை வெல்லுவது அவ்வளவு எளிதானதல்ல; பேரரசரின் பிடிப்பு சித்தூரின்மீது நிலைநாட்டப்படாவிடின் டெல்லிக்கும் ஆமதாபாத்துக்குமிடையிலிருந்த செய்திப் போக்குவரத்து பத்திரமாக இருக்காது. எத்தனித்த படையெடுப்பிற்கு அரசியல் காரணமே முக்கியமானதாகும். இராசபுதனத்தின் முதன்மை இராச்சியமாக இருந்த மீவாரை அடக்காது அக்பர் வடஇந்தியாவின் மேலாண்மைக்கான உரிமையை நிலைநாட்ட முடியாது. அவ்விராச்சியத்தின் அரசர் அந் நாட்டின் இராசபுத்திரர்களின் தலைவர் என்று யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டார். மீவாரை ஆட்சி புரிந்து வந்த உதயசிங், ஒரு தகுதியற்ற தகப்பனின் தகுதியற்ற மகன் என்று டாட் அவரைப்பற்றிக் குறை கூறினுலும், ஒரு வீரருக்குரிய குணவியல்புகளைச் சிறிதளவேனும் பெற்றிருந்தார்; தலைநகரின் பாதுகாவலுக்காகப் புகழத்தக்க ஏற்பாடுகளையும் அவர் செய்திருந்தார். இராட்சசனைப் போன்றிருந்த அவ் அரணின்முன் அக்டோபர் 23ஆம் நாள் அக்பர் தோன்றி, அதை முற்றுகையிட்டார். விசாலமான அதன் சுற்றளவின் பல பகுதிகளைத் தமது அதிகாரிகளிடம் அக்பர் ஒப்படைத்து, பல பீரங்கிப் படைகளைப் பல முனைகளில் நிறுத்திவைத்தார். முற்றுகைக்கான ஏற்பாடுகளைச் செய்துமுடிக்க சுமார் ஒரு மாதம் பிடித்தது. ஒவ்வொரு கட்சியும் அதன் குறிக்கோளை அடைய உறுதிகொண்டிருந்ததனுல் முற்றுகை நெடுங்காலம்வரை நீடித்தது; அக்பர் அரணைக் கைப்பற்ற விரும்பினுர்; சிசோதியர்கள் அவரைத் திருப்பி அடிக்க முயன்றனர். நாள் ஒன்றுக்குப் பேரரசின் தரப்பில் சுமார் 200 ஆட்கள் மடிந்தனர். ஆகையால் அக்பர் சுரங்கங்களை வெட்டவும் போகும் வழியில் சாபித்துகளைக் (மூடப்பட்ட பாதைகள்) கட்டவும் முடிவு செய்தார். டிசம்பர் 17ஆம் நாளன்று இரண்டு சுரங்க வெடிகள் வெடிக்கப்

பட்டன. ஆனாலும் படை உடனே பிளவுகளைச் சரிப்படுத்திக் கொண்டு, தாக்குதல் செய்பவர்களை விரட்டியடித்தது. அவர்களில் இருநூறு பேர் கொல்லப்பட்டனர். முற்றுகை விரைவில் முடிவடைவதாகத் தோன்றவில்லை. 1568, ஃபிப்ரவரி 23ஆம் நாள் எதிர்பாராவகையில் அக்பர் அரணின்மேலிருந்த ஒரு முக்கிய மனிதன்மீது சுட்டார். அம் மனிதன் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குரிய கட்டளைகளையிட்டுக்கொண்டு, சுவரில் உண்டான உடைப்பைப் பழுதுபார்க்கும் செயலுக்கு மேர்பார்வையிட்டுக் கொண்டிருந்தான். அவன்தான் ஜெய்மால் (Jaimal). அரணின் பாதுகாப்புப் பொறுப்பை பிரபுக்கள் அவனிடம் ஒப்படைத்திருந்தனர். அக்பரின் கடும் உறுதியை உணர்ந்திருந்த அவர்கள் முற்றுகை தொடங்கியதற்குச் சற்றுப் பிறகு தமது தலைவரான உதயசிங்கை ஆரவல்லி மலைகளில் ஒரு பத்திரமான இடத்திற்கு அனுப்பிவிட்டனர். ஜெய்மால் உயிருக்கு ஆபத்து ஏற்படும்படி காயமுற்றிருந்ததனால் சிசோதியர்கள் நம்பிக்கையை இழந்தனர்; அவர்களுடைய பெண்கள் இரவில் (ஜௌஹர்) உடன்கட்டையேறினர். ஈம விறகு குவியலிலிருந்து தோன்றிய தீக்கொழுந்துகள் ஜெய்மால் தான் தன்னுடைய குறிக்கு இரையானன் என்பதை அக்பருக்கு உறுதிப்படுத்தியது. அடுத்த நாள் காலையில் இராசபுத்திரர்கள் வலிந்து தாக்க முடிவு செய்தனர். ஒரு மரபின்படி, ஜெய்மால் உயிருக்கு ஆபத்து ஏற்படும்படி காயமுற்றிருந்தபோதிலும், வலிந்து தாக்குதல் நடத்துவோரின் தலைவராக குதிரையின்மீது வைக்கப்பட்டுக் கொண்டுபோகப்பட்டார். போர்க்களத்தில் அவர் வீழ்ச்சிக்குப்பின் படையின் பொறுப்பு இளைய சிசோதிய உயர் குடிமகனான கைல்வாவைச் (Kailwa) சார்ந்த ஃபதேசிங்கின் (Fateh Singh of Kailwa) கைக்கு வந்து சேர்ந்தது. பெரும்பாலோரால் ஃபதா (Fatah) என்று அழைக்கப்பட்ட அவர், மஞ்சள் அங்கியைத் தரித்துக்கொண்டு, தமது மனைவியும் தாயும் உடன்வரத் தாக்கும் கட்சிக்குத் தலைமை தாங்கினார். ஆனாலும் வீரம் படைத்த இராசபுத்திரர்கள் அதிக எண்ணிக்கையாளர்களால் வெல்லப்பட்டு, ஒவ்வொருவராகக் கொல்லப்பட்டனர்.

அடுத்த நாள் அக்பர் அரணுக்குள் நுழைந்து, யாவரையும் கொல்லும்படி ஆணையிட்டார். அதற்குக் காரணம் அவருக்கு மிகக் கடுமையான எதிர்ப்பை அளித்ததனால் அவருக்குக் கோபமூண்டது. 30,000 பேர் மடிந்தனர். தேவையற்ற இம் மிருகத்தனமான கொடுமை, அக்பரின் நினைவின்மேல் ஒரு கறையாகப் படிந்திருக்கிறது. ஜெய்மால் ஃபதேசிங் ஆகியவர்களின் வீரவாற்றலை நினைவுபடுத்துவதற்காக யானைகள் மேல் ஏற்றப்பட்ட அவர்களது உருவச் சிலைகளைச் செய்து, அவற்றை ஆக்ராவிலுள்ள அரண்மனை

வாயிலில் நிறுத்திவைத்து, அக்பர் தாம் புரிந்த குற்றத்தின் ஒரு பகுதியைக் கழுவாய் செய்துகொண்டார். ஃபிப்ரவரி 20ஆம் நாள் அவர் ஆசப்காஃன மேவாரின் கவர்னராக நியமித்தார். மேவாரின் பெரும்பகுதி ராணுவின் கைகளில் இருந்தது. பிறகு அவர் ஆக்ராவுக்குத் திரும்பினர்.

சித்தூரின் வீழ்ச்சிக்குப் பிறகு, பாட்னுவின் அரசரான சுலேமான் கர்ரணி அக்பரைத் தாம் பேரரசராக ஏற்றுக்கொண்டு, அவர் பெயரைக் குத்பாவில் சேர்த்து, அக்பரின் பெயரில் நாணயங்களை அச்சிடுவது என்ற அக்பரின் திட்டத்தை ஏற்றுக்கொண்டார் என்ற நற்செய்தி எட்டியது.

ரான்தம்போர் கைப்பற்றப்படுதல், 1568

ரான்தம்போரை அடிபணியவைக்க 1568, ஏப்ரல் மாதத்தில் அக்பர் ஒரு படையை அனுப்பினர். அதன் அரசனை ராஜா சுராஜன் ராய் (Raja Surajan Rai) புண்டியைச் (Bund) சார்ந்த ஹர இராசபுத்திரராவார்; மேவார் ராணுவின் அடியாள். ஆனுலும் கிளர்ந்தெழுந்த மீர்ஸாக்கான் மாளவத்தின்மீது படையெடுத்த தனுல், அப் படை அதன் சேரிடத்தை அடைவதற்கு முன்னமேயே திரும்பி அழைக்கப்பட்டது. 1569, ஃபிப்ரவரியில் அவ் அரணின் முற்றுகையை அக்பர் தமது சொந்த மேற்பார்வையில் தொடங்கினுர். சுரங்க வெடிகள் வைக்கப்பட்டன; மூடப்பட்ட பாதை ஒன்று (சாபித்) கட்டப்பட்டது. ரான் வாயிலுக்கெதிராக கனமான பீரங்கிகள் ஓர் உயர் இடத்திற்கு இழுத்துக்கொண்டு வரப்பட்டன; அங்கிருந்து அவை சுட்டுக்கொண்டே இருந்தன. முற்றுகை சுமார் ஒன்றரை மாதமாக நீடித்தது. இரு தரப்பிலும் அது உயிருக்குப் பெருத்த சேதத்தை விளைவித்தது. ஆனுலும், 1569 மார்ச்சு 18ஆம் நாள் அரண் ஒப்படைக்கப்பட்டது. ரான் தம்போர் வீழ்ச்சியுற்றதைப்பற்றி இரு கருத்துகள் உள்ளன. டாடின் கருத்தின்படி, சுராஜன்ராய் அளித்த எதிர்ப்பு மிகத் தீவிரமாக இருந்ததனுல் நீடித்த போரைத் தவிர்ப்பதும் ஹரத் தலைவனைச் சரணடையும்படி தூண்டுவதும் விரும்பத்தக்கதாகும் என்று கருதப்பட்டது. ஆகையினுல் ஆம்பரைச் சார்ந்த பக்வான்தாஸ் சுராஜன் ராயை விஜயம் செய்தார். அவருடைய தோழரைப்போல அக்பர் அவருடன் வந்தார். இராசபுத்திரர்கள் அக்பரை அடையாளம் கண்டுகொண்டனர். அக்பர், தாம் யார் என்பதை உடனே அறிவித்துவிட்டு, நேரிலேயே பேச்சுவார்த்தை தொடங்கிவிட்டார். கதையின் இக் கூற்றை வி. ஏ. ஸ்மித் ஏற்றுக்கொள்கிருர். கதையின் மற்றொரு கூற்று, பதௌனியால் அளிக்கப்பட்டதாகும். வுல்ஸ்லி ஹேக் அதை ஏற்றுக்கொள்கிருர். பதௌனியின் கூற்றின்படி,

சித்தூரைப்போன்ற ஒரு வெல்லமுடியாத அரண் நெடுநாட்களாகப் பேரரசின் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியவில்லை என்றும், சரிசம மற்ற போரை நீடிப்பதில் பலன் கிடையாது என்றும் சுராஜ்மராய் உண்மையிலேயே கருதி, தமது மக்களான தண்டா (Danda), போஜ் (bhoj) என்ற இருவரையும் அக்பரிடம் அனுப்பிவைத்து, அவரை வணங்கி, அவரிடம் மன்னிப்புக் கோருமாறு உத்தர விட்டார். சுராஜன்ராய் சித்தூர் அரசனின் அடியாளாகையினாலும், அவ் வரசனின் தலைநகரம் ஏற்கெனவே அக்பரின் கைவசப்பட்டிருந்ததனால் பதௌனியின் கூற்று உண்மையாக இருக்கும்போல் தெரிகிறது. உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு சுர்ஜன்ராய்க்கு அக்பர் கட்டளையிட்டார். அவ் உடன்படிக்கையின் நிபந்தனைகள் கடுமையற்றிருந்தன. பிறகு அவர் ஆக்ராவுக்குத் திரும்பினார்.

கலிஞ்சார் சரணடைதல், 1569

சித்தூர், ரான்தம்போர் அரண்களின் வீழ்ச்சி, பேரரசின் புகழை மேலும் அதிகப்படுத்தியது. வெல்ல முடியாதது என்று மக்கள் கருதும்படியாக வட இந்தியாவில் அவரது ஆதிக்கத்துக் குட்பட்டிராத அரண் கலிஞ்சார் அரணாகும். அது உத்தரப் பிரதேசத்திலுள்ள தற்கால பண்டா மாவட்டத்திலுள்ளது. அது ஷெர்ஷாவையும் எதிர்த்து நின்றது; அப்பொழுது அது ரிவாவைச் சேர்ந்த ராஜாராம் சந்தின் உடைமையாக இருந்தது. அவருக்கெதிராக மஜ்னுன்கான் கக்ஷால் (Majnun Khan Qaqshal) என்பவர் 1569 ஆகஸ்ட்டில் அனுப்பிவைக்கப்பட்டார். சித்தூர், ரானதம்போர் ஆகியவற்றை மேற்கொண்ட விதியைப்பற்றி அறிந்திருந்த ராமசந்த், ஒரு சிறிதேனும் எதிர்ப்பளிக்காது கீழ்ப்படிந்தார். அலகாபாத்துக்கருகில் ராஜாவுக்கு ஒரு ஜாகீர் அளிக்கப்பட்டது. கலிஞ்சார் மஜ்னூன் கானின் பொறுப்பில் வைக்கப்பட்டது.

மார்வார் அடிபணிதல், 1570

1570, நவம்பர் மாதத்தில் அக்பர் நாகௌருக்கு விஜயம் செய்தார். அங்கே ஆம்பரைச்சார்ந்த பக்வான்தாஸின் உதவியால் ஜோத்புரி, பிகானீர் ஆகியவற்றின் அரசர்கள் அக்பருக்குக் கீழ்ப் படிந்தனர். மால்தேவரின் மகனும் ஜோத்புரியின் அக்காலத்து அரசனுமான சந்திரசென் (Chandrasen) வந்து பேரரசருக்கு மரியாதை செலுத்தினர். பிகானீரைச் சார்ந்த ராய்கல்யாண் மல்லும் அவருடைய மகனுமான ராய்சிங்கும் அவருக்கு மரியாதை செலுத்தினர். ஜெய்சால்மரைச் சார்ந்த ரவால் ஹர் ராயும் (Rawal Her Rai of Jaisalmer) கீழ்ப்படிந்தார். பிகானீரின் ஆளும் குடும்பத்தைச்சார்ந்த இளவரசி ஒருத்தியையும் ஜெய்சால்மரைச்

சார்ந்த ஹர் ராயின் மகளையும் அக்பர் மணம் புரிந்துகொண்டார். இவ்விதமாக 1570ஆம் ஆண்டின் முடிவில் மேவார், அதனது கப்பம் செலுத்தும் இராச்சியங்களான துஸ்கார்பூர், பன்ஸ்வாரா (Banswara), பிரதாப்கர் (Pratapghar) ஆகியவையும் அக்பரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டன.

குஜராத் வெல்லப்படுதல், 1572-73

பேரரசர் தமது கவனத்தை குஜராத்தின்மீது செலுத்திஞர். அதை அவர் கைப்பற்றித் தமது இராச்சியத்துடன் இணைத்துக் கொள்ள விரும்பிஞர். அம் மாகாணம் சில காலம்வரை தமது தந்தை யின் கையில் இருந்தது. இந்தியா, துருக்கி(Turkey), சிரியா (Syria), பாரசீகம் (Persia), டிரான்சோக்ஸியாஞ (Transoxiana), இதர ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றுக்கிடையில் நடந்துவந்த வாணி பத்தின் கொட்டாரமாகும். இதஞல் அது வளம்பெற்றிருந்தது. மேலும், குஜராத் மெக்காவிற்குப் போகும் வழியில் இருந்தது. ஹஜ் யாத்திரிகர்கள் பாதுகாப்புடன் பயணம் செய்வதற்காக அப் பகுதியை அவரின் ஆட்சிக்குட்படுத்த அக்பர் விரும்பிஞர். இப்பொழுது அம் மாகாணத்தின் நிலைமை மிக மோசமாக இருந்தது. பெயரளவில் அதன் அரசராக இருந்த மூன்ரும் முஸஃப்பர்கான் (Muzaffar Khan III) சக்தியற்றிருந்தார். அவருடைய பேரவா மிக்க, சுயநலம் கருதும் பிரபுக்களுக்கிடையில் இறைமைக்காகக் கடும் போட்டி நடந்துகொண்டிருந்தது. அக்பரின் கிளர்ந்தெழும் உறவினர்களான மீர்ஸாக்கள் அங்கே தஞ்சம் புகுந்து, செழுமை யான அம் மாகாணத்தின் பல நகரங்களில் தம்மை நிலைநாட்டிக் கொண்டிருந்தனர். இக் காரணங்களை முன்னிட்டு, அம் மாகா ணத்தை அடக்குவது அவசியம் என்று அக்பர் கருதிஞர். நல்வசமாக உள்நாட்டுப் போர் ஒன்று அங்கே நடந்துகொண் டிருந்தது. இதிமத்கான் தலைமை தாங்கிய கட்சி, அக்பரைக் குறுக் கிடுமாறு வேண்டியது. இவ் வாய்ப்பைப்பெற்ற அக்பர், படையெடுப் பிற்கான ஏற்பாடுகளைச் செய்து, கான்கலனின் கீழ் (Khan Kalan) 10,000 குதிரை வீரர்களை ஆமதாபாத்துக்கு அனுப்பிவைத்தார்; 1572, செப்டம்பரில் படையெடுப்பை நடத்தத் தாமே நேரில் சென்ருர். அவருடைய படைக்குப் பொதுவாக எதிர்ப்பு ஒன்றும் இருக்கவில்லை. நவம்பர் மாதத்தில் அக்பர் ஆமதாபாத்தைக் கைப்பற்றிஞர். பெயரளவில் அரசஞக இருந்த மூன்ரும் முஸஃப்பர் கான் தானிய நிலம் ஒன்றில் மறைந்துகொண்டிருந்தார்; அவர் கைதியாகக் கொண்டுவரப்பட்டார். இதிமத்கான் உட்பட முக்கிய பிரபுக்கள் வந்து அக்பருக்கு மரியாதை செலுத்தினர். அக்பர் கான் ஆஸம் (மீர்ஸா அஸீஸ் கோகா) என்பவரை குஜராத்தின் கவர்ன

ராக நியமித்தார். ஆமதாபாத்திலிருந்து அக்பர் காம்பே யுக்குச் (Cambay) சென்றார். அங்கே, துருக்கி, சிரியா, பாரசீகம், டிரான்சோக்ஸியானு, போர்ச்சுகல் ஆகிய இடங்களிலிருந்து வந்திருந்த வர்த்தகர்களை அக்பர் வரவேற்றார். பிறகு அவர் சூரத்துக்குச் சென்று, மிகக் கடுமையாக நடந்த சார்நால் போரில் (Sarnal) 1572, டிசம்பரில் இப்ராஹிம் மீர்ஸாவைத் தோற்கடித்தார். பிறகு சூரத் முற்றுகையிடப்பெற்றது; 1573, ஃபிப்ரவரி மாதத்தில் அது அவர் கைவசப்பட்டது. இவ் வெற்றிகளுக்குப் பிறகு அவர் ஆக்ராவுக்குத் திரும்பினார்.

குஜராத்தில் கிளர்ச்சி, 1573

அக்பர் முதுகு திரும்பியதும் தௌலதாபாத்துக்கு ஓடிவிட்டிருந்த முகம்மது ஹுசைன் மீர்ஸா குஜராத்துக்குத் திரும்பினார். அம் மாகாணத்தின் திருப்தியற்ற பிரபுக்களுடன் அவர் கூட்டுறவு ஒன்று ஏற்படுத்திக்கொண்டு, கவர்னரான கான் ஆஸமை ஆமதாபாத்தில் முற்றுகையிட்டார். கான்ஸமன் கலகக்காரர்களுக்கெதிராகச் சக்தியற்றிருந்ததனுல், ஒரு சிறு படையுடன் அக்பர் ஃபதேபூரிலிருந்து 1573 ஆகஸ்ட், 23ஆம் நாள் புறப்பட்டு, செப்டெம்பர் 2ஆம் நாள் ஆமதாபாத் அடைந்தார். 450 மைலுக்கு மேற்பட்ட நீளமான அப் பயணத்தை அவர் மொத்தத்தில் பதினொரு நாட்களில் செய்து முடித்தார். பேரரசர் திடீரென்று தோன்றியிருப்பதை நம்பாத கலகக்காரர்கள் ஃபதே பூர் சிக்ரியிலிருந்து (Fatekhpoot Sikri) ஒரு படைக்குத் தலைமை தாங்கிக்கொண்டு காட்சியளிப்பதைக் கண்டு அசந்து விட்டனர். அவரது விழிப்பான அதிகாரிகளின் யோசனைக்கு மாருக, அக்பர் உடனடியாக சபர்மதி நதியைக் கடந்து பகைவனைத் தாக்கினார். நடந்த கைச்சண்டையில் அவருடைய குதிரை காயமுற்றது; அவரே பெரிய அபாயத்துக்குட்பட்டிருந்தார். எனினும், அவர் கிளர்ச்சியாளர்களைத் தோற்கடித்து, முகம்மது ஹுசைன் மீர்ஸாவை சிறையடைத்தார். கான்ஸமன் முற்றுகையிடப்படுவதைக் கவனித்துக் கொண்டிருந்த இக்தியருல்முல்க் (Ikthiyar-ul-Mulk) என்ற மற்றொரு முக்கியக் கிளர்ச்சியாளர் அரசரின் படையுடன் போரிட்டார்; ஆனுல், அவர் கொல்லப்பட்டார். கிளர்ச்சி இப்பொழுது சிதறுண்டது. தப்பி ஓடிய ஒரே ஒரு கிளர்ச்சியாளரான ஷா மீர்ஸா (Shah Mirza) நாடோடியாகத் திரிந்துகொண்டிருந்தார். இந்த மாபெரு வெற்றிக்குப் பிறகு பேரரசர் 1573, அக்டோபர் 5ஆம் நாள் ஃபதேபூர் சிக்ரிக்குத் திரும்பினார். 'வரலாற்றிலேயே மிக விரைவாக நடத்தப்பட்ட படையெடுப்பு' என்று அக்பரின் இரண்டாம் குஜராத்துப் படையெடுப்பைப்பற்றி வரலாற்

றறிஞர் ஸ்மித் கூறுகிறார். குஜராத்துப் படையெடுப்பு அக்பரின் மேற்கு எல்லையைக் கடலுக்கு நகர்த்தி, போர்ச்சுகீசியர்களுடன் தொடர்பு கொள்ளும்படி செய்தது. அவர்கள் அவருடன் உடன் படிக்கை செய்துகொண்டனர். பேரரசின் பாதுகாப்பிற்காகவும், வெளிநாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொள்ளுவதற்காகவும் பேரரசர் ஒரு கப்பற் படையைக் கட்ட நினைக்காதது வருந்தத் தக்கதாகும்.

பீஹார், வங்காளம் ஆகியவற்றைக் கைப்பற்றுதல், 1574–76

ஷெர்ஷாவினது ஆட்சி காலத்தின் இறுதியில் பீஹாரின் கவர்னராக இருந்துகொண்டு, சூர் வமிசம் வீழ்ச்சியுற்றதும் தமது சுதந்திரத்தை வற்புறுத்தியவரும், 1568ஆம் ஆண்டின் துவக் கத்தில் அக்பரைத் தமது மன்னராக ஏற்றுக்கொண்டவருமான சுலைமான் கர்ரணி (Sulaiman Karrani) 1572-ல் உயிர் நீத்தார். வங்காள, ஒரிஸ்ஸா மாகாணத்தை அவர் தமது ஆட்சியின்கீழ் கொண்டுவந்து, தலைநகரைத் தண்டாவுக்கு மாற்றினார். ஆனால், அவருடைய மகன் தாவுத் (Daud) என்பவர் தமது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்துகொண்டு, அப்பொழுது முகலாயப் பேரரசின் கிழக்கு எல்லைப் பாதுகாப்பு நிலையமாக இருந்த ஸமானியாவைத் (Zamania) (உத்தரப் பிரதேசத்திலுள்ள காஸிபூர் மாவட்டத்தி லுள்ளது) தாக்க அக்பரின் கோபத்துக்குள்ளானார். 1574-ல் அக்பர் துணிச்சல் மிக்க இளைஞரின்மீது படையெடுத்து, அவரை பீஹாரிலிருந்து விரட்டியடித்தார். அம் மாகாணம் இப்பொழுது பேரரசருடன் இணைக்கப்பட்டது. தாவூத் வங்காளத்திலிருந்து ஒரிஸ்ஸாவுக்கு ஓட்டம் பிடித்தார். வங்காளப் படையெடுப்பை அக்பர் மூனிம்கானின் பொறுப்பில் விட்டுவிட்டு, ஃபதே பூர் சிக்ரிக்குத் திரும்பினார். சுவர்னரேகா (Suwarna rekha) நதியின் கிழக்குக்கரைக்கு அருகிலிருந்த துகாரோ (Tukarao) என்ற இடத்தில் மூனிம்கான் தாவூதை 1575, மார்ச்சு மாதம் 3ஆம் நாள் தோற்கடித்து, தண்டாவைத் தமது அரசாங்க இருப்பிடமாகச் செய்துகொண்டார். ஆனால், அவர் தமது சாதக மான நிலையை மேலும் பயன்படுத்தாது, வங்காளத்தின் நாடோடி மன்னன் தமது ஆதிக்கத்தில் ஒரு பகுதியைப்பெற அனுமதித்தார். வங்காளத்தை மீண்டும் பெற, தாவூத் அக்டோபர் மாதத்தில் முயன்றார். ஆகையினால் புதிய ஒரு படையெடுப்புத் திரட்டபட்டது. இறுதியில் ராஜ்மஹாலுக்கருகில் நடந்த போரில் 1576, ஜூலை மாதத்தில் தாவூத் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். ஆனாலும், ஒரு சில தலத் தலைவர்கள், குறிப்பாக விக்ரம்பூரைச் சார்ந்த கேதர் ராய் (Kedar Rai of Vikrampur), பேகார்கஞ்சைச்

சார்ந்த கண்டார்ப் நாராயணன் (Kandarp Narayan of Behargaj), ஜெஸ்ஸுரைச் சார்ந்த பிரதாப் தித்யா (Pratapa-didya of Jesssore), கிழக்கு வங்காளத்தில் ஈசாகான் ஆகியவர்கள் மேலும் சில ஆண்டு கள்வரை நீடித்துத் தொல்லை கொடுத்துவந்தனர்.

மேவாரைக் கைப்பற்ற முயற்சி செய்தல்; ஹால்திகாட் போர், 1576, ஜூன் மாதம் 18ஆம் நாள்

மேவாரின் தலைநகரான சித்தூரும், அதன் கிழக்குப் பகுதியும் 1568, ஃபிப்ரவரியில் கைப்பற்றப்பட்டபோதிலும், அவ் இராச்சியத்தின் பெரும்பகுதி ராணு உதயசிங்கின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தது. அவருடைய ஆற்றல் மிக்க, வீரம் படைத்த மகன் பிரதாப் (Pratap) முகலாயர்களுக்கு முழு நிறைவான எதிர்ப்பை அளிப்பதற்கு முடிவு செய்திருந்தார். அவர் உதயபூருக்கு 19 மைல் வடமேற்கிலுள்ள கோகுண்டாவில் 1572, மார்ச்சு மாதம் 3ஆம் நாளன்று சோர்வுற்ற சூழ்நிலைகளில் அரசனுக முடிசூட்டப்பட்டவராவார். மிகச் சில மூலப்பொருள்களையே பெற்றிருந்தும், அவருடைய போர்வீரர்களில் சிலர் விட்டு விலகி இருந்தும், அவரது சகோதரரான சக்தி சிங் பகைமை பாராட்டிக்கொண்டிருந்தும், அவர் தளர்ச்சியுருமல் 'இவ் வையகத்திலேயே அளவின்றிச் செல்வ மிக்க அரசனின்' ஆக்கிரமிப்பை எதிர்க்க அவர் முடிவு செய்து விட்டார். அவர் புறத்தில், வீரம்படைத்த ராணுவின் கையிலிருந்து எஞ்சிய மேவார் பகுதியைப் பறிக்க, அக்பரும் மன உறுதி கொண்டிருந்தார். மிஞ்சியிருந்த மேவாரைக் கைப்பற்ற ஆம்பரைச்சார்ந்த மன்சிங்கின் (Man Singh of Amber) தலைமையின்கீழ் அவர் ஆற்றல் வாய்ந்த ஒரு படையை அனுப்பி வைத்தார். மன்சிங் மண்டல் கர்ரிலிருந்து (Mandal garh) (கிழக்கு மேவாரில் உள்ளது) மோஹியின் (Mohi) (ராஜசமுத்திர ஏரிக்குத் தெற்கிலுள்ளது) வழியாகக் கோகுண்டாவுக்குச் சென்று, ஹால்திகாட்டின் வடக்கு முனையில் சமவெளி ஒன்றில் முகாமிட்டார். ஹால்திகாட் எனப் படுவது அந் நகருக்கும் பனாஸ் (Banas) நதியின் தெற்குக் கரையிலுள்ள கம்னர் (Khamnar) கிராமத்துக்கும் இடையிலுள்ள ஆரவல்லி மலைத்தொடரின் பக்க மலையாகும். இங்கே பேரரசப் படை பிரதாப்பால் தாக்குண்டது; படையெடுப்பாளரின் முன்னேற்றத்துக்குத் தடையிட, பிரதாப் கோகுண்டாவிலிருந்து 1576 ஜூன் 18ஆம் நாள் புறப்பட்டார். மரபு வழியாக வரும் கூற்றின்படி ராணுவின் படை இருபதாயிரம் குதிரை வீரர்களையும் சிங்கின் படை எட்டாயிரம் குதிரைகளையும் கொண்டிருந்தது. ஆனால் உண்மையில் மீவாரின் படை மூவாயிரம் குதிரை வீரர்களுக்கு மேற்பட்டிருக்கவில்லை ; பில்லைச் (Bhil) சார்ந்த சில நூற்று

காலாட் படைகளும் அதில் இருந்தன. சிறந்த பத்தாயிரம் குதிரை வீரர்களுக்கு மான்சிங் தலைமை தாங்கினர். அவற்றில் 4,000 பேர் கச்வாஹா இராசபுத்திரர்கள்; ஆயிரம் பேர் மற்ற ஹிந்துக்க ளாவர். மீதியிருந்தவர்கள் பெரும்பாலும் மத்திய ஆசியத் துருக்கியர்கள்; உஸ்பெக்குகள், கஸ்ஸக்குகள் ஆக இருந்தனர். பர்ஹாவைச் சார்ந்த சய்யிதுகள், ஃபதேபூரைச் சார்ந்த ஷேக் ஸாதாஸ்களும் அதில் அடங்கியிருந்தனர். ஹரீம்கான் சூர் (Harim Khan Sur), தோதியாவைச் சார்ந்த பீம்சிங் (Bhim Singh of Dodia), ராம்தாஸ் ராதர் (Ram Das Rathor) (ஜெய்மாலின் மகன்) ஆகியவர்களும், மற்றுஞ் சிலரும் இருந்தனர். சிறிய மீவார் படை யின் முன்னணியில் (சுமார் 800 குதிரை வீரர்களைக்கொண்டிருந் தது) இருந்தனர். வலப் படைப்புடைப் பகுதி (500 குதிரைகள்) குவாலியரைச் சார்ந்த ராம்ஷா தன்வாரின் (Ram Shah Tanwar of Gwalior) தலைமையிலும், இடப் படைப்புடைப் பகுதி பிடா மனுவின் கீழும் இருந்தன. மையப்பகுதிக்கு ராணுவே தலைமை தாங்கினர். பூஞ்சாலைச் சார்ந்த பில்களும் (Bhils of Punja), மற்றப் படைக் கூட்டங்களும் பின்னுல் நின்றன. பர்ஹாவைச் சார்ந்த சய்யித் ஹாஷிம் (Sayyid Hashim of Barha) என்பவரின் தலைமையைக் கொண்டிருந்த சச்சரவிடுபவர்களின் வரிசை ஒன்று பேரரசின் படைக்கு முன்னுல் சென்றது. அதன் பிற்பகுதிக்கு ஜகன்னுத் கச்வாஹா, அலி ஆசப்கான் (ஒரு கஸ்வீனி காஜா) ஆகியவர்கள் தலைமை தாங்கினர். அது மதோசிங் கச்வாஹாவின் (Madho Singh Kachhwaha) தலைமையின் கீழிருந்த ஆற்றல் மிக்க இல்த்மிஷ் (Iltmish—முன்னணியாகச் செல்லும் சேமக் கையிருப்புப் படை) ஒன்றினுல் வலியுறுத்தப்பட்டது. வலப் படைப்புடைப் பகுதியில் பர்ஹாவைச் சார்ந்த சய்யிதுகளும் இருந்தனர். இடப் படைப்புடைப் பகுதியில் முல்லா காஸிகான் பதக்ஷி (Mullah Qazikhan Badak-shi) (பின்னுல் காஸிகான் என்ற பட்டப் பெயரைப் பெற்றவர்) சாம்பாரைச் சார்ந்த ராவ் லூன்கரன் (Rao Loon Karan of Sambhar) ஆகியவர்களின் தலைமை அமைந்திருந்தது; மத்தியப் பகுதிக்கு மான்ஸிங்கே தலைமை தாங்கினர். ஹல்திகாட்டிற்குப் பின்னுலிருந்து ராணு வெளிவந்து முகலாயப் படையை முன்னு லிருந்து தாக்கியது. அப்பொழுது முகலாயப் படை காடியின் வடக்கு வாயிலில் காலடிப் பாதைக்கு வடமேற்கிலிருந்த சமவெளி யில் தங்கியிருந்தது. தாக்குதல் மிகக் கடுமையாக இருந்ததனுல், முகலாயப் படையின் பின்பகுதியும் இடப் படைப்புடைப் பகுதியும் சிதறடிக்கப்பட்டன; அதன் வலப் படைப்புடைப் பகுதியும் மையப் பகுதியும் அழுத்தப்பெற்றன. ஆனுல், ராணுவின் படை எண்ணிக் கையில் வெகுசிறிதாகவே இருந்தது. அவருடைய முதல் வெற்றியை வலுப்படுத்த அவரிடம் சேம இருப்புப் படையோ பின்னணியோ

கிடையாது. ஆகையினால், பகைவனின் மத்தியப் பகுதியையும் வலப் படைப்புடைப் பகுதியையும் உடைப்பதற்கு முயலும்பொழுது, அவர்களின்மேல் அவரது போர் யானைகளை விட்டார். ஆனால், எதிர்ப்புறத்திலிருந்து வந்த அம்புகளையும் குண்டுகளையும் மரணத்துக்கும் அஞ்சாத சிசோதிய வீரர்களால் சமாளிக்க முடியவில்லை. கச்சாவா வீரர்களுக்கும் சிசோதிய வீரர்களுக்கும் நேருக்கு நேராக நடந்த சண்டையில், பல சிசோதிய வீரர்கள் பதௌனியை போன்ற வெறியாளர்கள் இராசபுத்திரர்களின்மீது வீசிய அம்புகளுக்கும் குண்டுகளுக்கும் இரையாயினர். ராணாவைத் தாக்குதலிலிருந்து காக்க சண்டை மிகக் கடுமையாக நடந்துகொண்டிருக்கும்பொழுது, அவருக்கெதிரில் தோன்றிய ராஜாராம் ஷா தன்வார் (Raja Ram Shah Tanwar) என்பவர் ஜகன்னாத் கச்சாவால் கொல்லப்பட்டார். பேரரசரின் சேம இருப்புப் படை இப்பொழுது போரிட முன்னுக்கு வந்தது. மான்சிங்கின் உதவிக்காக அக்பரே நேரில் வந்துள்ளார் என்ற வதந்தி ஒன்று பரவியது. பகைவர்களால் ராணா சூழப்பட்டுத் தனிமையாக்கப்படுவதாக இருந்தார். ஆனால், பீதா ஜலா (Bhida Jala) என்பவர் பிரதாபின் தலையிலிருந்த கிரீடத்தைப் பிடுங்கி, முன்னுக்கு விரைந்து தானே ராணா என்று கத்தினார். பகைவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர். ஆகையினால், பிரதாபின் மீதிருந்த அழுத்தம் குறைந்தது. இந்த நெருக்கடியான சமயத்தில் விசுவாச மிக்க சில வீரர்கள் ராணாவின் குதிரையின் கடிவாள வார்களைக் கைப்பற்றி, வரிசையின் பின்புறத்திற்குப் பத்திரமாகக் கொண்டுசென்றனர். தமது தலைவரைக் காக்க பீடா விசுவாசத்துடன் போரிட்டு வீழ்ச்சியுற்றார். அப்பொழுது ராணாவின் ஆட்கள் மனமுடைந்து போர்க்களத்திலிருந்து பின் வாங்கினர்; மடிந்தவர்கள் பலர் பின் விட்டுவிடப்பட்டனர். ஹல்திகாட் போர் முடிவடைந்தது. இருதரப்பிலும் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது. ராணா தமது படையில் கிட்டத்தட்ட பாதியை இழந்துவிட்டார். பேரரசப் படைகள் களைப்புற்றதனால் ராணாவின் படையைப் பின்தொடர இயலாது, பகைவர் எங்கே திடீர்த் தாக்குதல் செய்யப்போகிறார்களோ என்று பயந்துகொண்டு இரவைக் கழித்தார்கள். அவர்கள் எவ்வளவிற்கு வெற்றி கொண்டனர் என்று அடுத்த நாள் காலைவரை அவர்களால் நிர்ணயிக்க முடியவில்லை. ராணா கோகுண்டாவைக் காலி செய்துவிட்டார். மான்சிங் அதனைக் கைப்பற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்தார்.

அவர் சிறந்த முயற்சிகளை எடுத்தும், மான்சிங் ராணாவின் கையில் இன்னும் இருந்த மீவார் பகுதியை (கும்பல்கர், தெசூரி உட்பட வடமேற்குப் பகுதி) அடக்கமுடியவில்லை. தேவைப்

பொருள்கள் இல்லாததனுலும் குடிமக்களின் எதிர்ப்பினுலும், அவர் கோகுண்டாவை நீடித்து வைத்திருக்க முடியவில்லை. அவருடைய அச்சுறுத்தலோ வற்புறுத்தலோ பிரதாபைக் கீழ்ப்படியவைக்க முடியவில்லை. அஞ்சா நெஞ்சம் படைத்த சிசோதிய அரசர் ஒரு சமயத்தில் பட்டினி கிடக்கும் நிலைக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், தன்னுடைய மதிப்பைக் குறைத்துக்கொண்டு அக்பரின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். மான்சிங் தமது தோல்விக்காக அக்பரின் நல்லெண்ணத்தை இழக்க நேர்ந்தது; அவர் அரசவைக்குத் திரும்ப அழைக்கப்பெற்ருர். அக்பர் தமது பகைவரிடம் கொண்டிருந்த பெருமதிப்பு உணர்ச்சி களால் தூண்டப்பட்டு அவருக்கு இடையூறு செய்யாது எஞ்சிய வாழ்நாளைச் சுமுகமாகக் கழிக்குமாறு விட்டுவிட்டார் என்று தவ ருகக் கருதப்படுகிறது. ஆனுலும், உண்மையில் அக்பர் ராணுவை அடக்குவதற்கான முயற்சியை விட்டுகொடுக்கவில்லை. ஆனுலும், அவருடைய முயற்சிகளெல்லாம் தோல்வியுற்றன; தமது முன்னேரின் இராச்சியத்தின் பெரும்பாலான பகுதியைப் பிரதாப் மீண்டும் கைப்பற்றினுர். இருந்தபோதிலும், 1597, ஜனவரி 19ஆம் நாள் நிகழ்ந்த ராணுவின் மரணம், அக்பருக்கு மேவாரை அடக்குவதற்கான வாய்ப்பை அளித்தது. எனினும், அப்பொழுது பேரரசர் மற்றப் பகுதிகளிலும் கவனத்தைச் செலுத்திக்கொண் டிருந்ததனுல், அவ் வாய்ப்பை அவரால் பயன்படுத்த முடியவில்லை. பிரதாபின் மகனும் வாரிசுமான அமர்சிங்குக்கு (Amar Singh) எதிராக ஒன்றுக்கு மேற்பட்ட படையெடுப்புகளை அவர் நடத்தினு லும், மேவாரைக் கைப்பற்றி இணைத்துக்கொள்ள முடியவில்லை.

காபூலை அடிபணியவைத்தல், 1581

அக்பரது தடையற்ற சமயப் பொறைக் கொள்கையை எதிர்த்த வர்களும், அவருடைய நிர்வாக, நிதி, இராணுவ சீர்திருத்தங் களால் மிகத் தீவிரமாகப் பாதிக்கப்பட்டவர்களுமாக பீஹார், வங்காள முக்கிய முஸ்லிம் அதிகாரிகள் பலர் 1580-ல் கிளர்ந் தெழுந்து, அவரைப் பதவியிலிருந்து விலக்கி, அவருடைய மாற்ருந் தாய் மகனுன காபூலைச் சார்ந்த மீர்ஸா முகம்மது ஹகிம் என்பவரை சிம்மாசனத்துக்குக் கொண்டுவரச் சதிசெய்தனர். தனிப்பட்ட சமயச் சலுகைகளை வழக்கமாகப் பெற்றிருந்த அவர்களால், இஸ்லாமுக்குச் சரிசமமாகப் பல்வகைப்பட்ட மதங்களை வைக்கும் அக்பரது கொள்கையைப் பொறுக்கமுடியவில்லை; அவர்களுடைய மதத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் கருதினர். ஜான்புரியின் காஸியான முல்லா முகம்மது யாஸ்தி (Mulla Muhamad Yazdi) அக்பருக்கெதிராகக் கிளர்ந்தெழுவது சமயக் கடமை

யாகும் என்று அதிகாரபூர்வமான கட்டளை (ஃபத்வா-fatwa) பிரகடனஞ் செய்தார். வங்காளத்தில் முக்கியப் பதவிகளை மேற் கொண்டிருந்த கக்ஷால் துருக்கியர்கள் (Qaqshal Turks) பீஹாரி லிருந்த தங்களுடைய சமயத் தோழர்களைப் பின்பற்றினர். பீஹாரி லிருந்தவர்கள்தாம் முதலில் கிளர்ந்தெழுந்து மீர்ஸா ஹகீமின் பெயரில் குத்பாவைப் படித்தனர். கவர்னர் முஸஃபர்கானை அவர்கள் தாண்டாவில் முற்றுகையிட்டு, முஸஃபர்கானுக்கு உதவி யாக அனுப்பப்பட்ட பேரரசப் படை ஒன்றைத் தோற்கடித்தனர். இரண்டு மாகாணங்கள் முழுவதிலும் இப்பொழுது கிளர்ச்சி பரவியது. உண்மையான ஆபத்துக்கு மூலாதாரம் தமது சகோதரரே என்று அக்பர் சரியாகக் கருதிக் காபூலுக்குச் சென்று, அதைத் தாக்குவதற்கான தக்க இராணுவ நடவடிக்கைகளை எடுத் தார். அதே சமயத்தில், கிளர்ச்சியாளர்களை அடக்குவதற்கும், அவர்கள் மீர்ஸா ஹகீமுடன் சேராவண்ணம் தடுப்பதற்கும் பீஹாருக்கும் வங்காளத்துக்கும் போதிய படைகளை அவர் அனுப்பி வைத்தார். தமது மாற்றாந்தாய் மகனுடன் வஞ்சகமாகப் பேச்சு வார்த்தைத் தொடர்பு கொண்டிருந்து, அரசவையிலிருந்து வந்த துரோகிகளுக்கெதிராக உடனடியான நடவடிக்கைகளை அக்பர் எடுத்தார். சிலரை அவர் சிறையிலடைத்தார்; மற்றும் சிலரை, மன நிறைவற்றிருப்பவர்களுக்கு அச்சமூட்டுவதற்காக, அவர்களின் தலைவரான ஷா மன்சூருடன் அவர் கொன்றார். சிந்து நதியைக் கடந்து லாகூருக்கு முன்னேறிக்கொண்டிருந்த ஹகீம், தமக்கு அளிக்கப்பட்ட செய்திக்கு மாறாக, பஞ்சாபின் முஸ்லிம்கள் அவருக்கு உதவியளிக்க அவர்களது சிறு விரலையும் அசைக்கவில்லையென்பதை உணர்ந்து ஏமாற்றமுற்றார். 1581, மார்ச்சு 8ஆம் நாள் அன்று அக்பர் மச்சிவாராவை அடைவதற்கு முன்பே, ஹகீம் மீர்ஸா காபூலுக்கு விரைந்து பின்வாங்கிக்கொண் டிருந்தார். அக்பர் வெகு விரைவில் சிந்து நதியை அடைந்து காபூலைக் கைப்பற்றுவதற்காக மான்சிங்கின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார்; காலத்தை இழக்காது அவரே மான்சிங் கைப் பின்தொடர்ந்தார். ஹகீம் காபூலிலிருந்து குர்பந்துக்கு (Ghurband) ஓடினார். ஆகஸ்ட் 10ஆம் நாள் அன்று அக்பர் காபூலில் நுழைந்தார். அச்சமுற்ற ஹகீம் கீழ்ப்படிந்துவிடுவதாகச் செய்திகளை அனுப்பினார்; அவர் மன்னிக்கமாட்டார். ஆனால், அக்பர் அவருடைய மாற்றாந்தாய் மகளான (மீர்ஸாவின் சொந்த சகோதரி) பக்துன்னிஸா பேகம் (Bakht-un-nisa Begum) என்பவளைக் காபூலின் கவர்னராக நியமித்து, ஃபதேபூர்சிக்ரிக்குத் திரும்பினார். அவர் திரும்பியதற்குப் பிறகு ஹகீம் நிர்வாகத்தை உண்மையில் பொறுப்பேற்றார்; ஆனால், அவருடைய சகோதரி அதிகாரபூர்வமான கவர்னராக நீடித்துப் பதவியேற்றிருந்தார்.

1585, ஜூலை மாதத்தில் மீர்ஸா ஹகிம் உயிர்நீத்தார். அப்பொழுது காபூல் பேரரசின் மாகாணமாக இணைத்துக்கொள்ளப் பட்டது.

1560ஆம் ஆண்டில் அக்பர் பதவியேற்றதிலிருந்து அவருடைய வாழ்க்கையில் 1581ஆம் ஆண்டு மிக நெருக்கடியான ஆண்டு என்று கருதப்படுகிறது. பேரரசரின் நுண்ணிய திறமும், சாதுர்யமும், திறமையும் அவர் தமது பகைவர்களின்மீது வெற்றி கொண்டு போரிலிருந்து முன்னைவிட அதிகமான சக்தியைப் பெறும்படி செய்தன.

காஷ்மீரம் சேர்த்துக்கொள்ளப்படுதல், 1585

சூழ்ச்சித் திறநயத்தாலோ அல்லது தோல்வியுற்றால் வன்முறையாலோ காஷ்மீரத்தை அடிபணியவைக்க அக்பர் நெடுங்காலமாகத் தொடர்ந்து ஆவல் கொண்டிருந்தார். காஷ்மீரத்தின் சுல்தானை யூசுப்கான், 1581-ல் தமது மூன்றும் மகனையும் 1585-ல் மூத்த மகனையும் அக்பருக்கு மரியாதை செலுத்த அனுப்பிவைத்தாராயினும், தாமே நேரில் வருவதிலிருந்து தப்பித்துக்கொண்டே வந்தார். அவரைக் கீழ்ப்படியவைப்பதற்கும், காபூல் ஒரு மாகாணமாகப் பேரரசுடன் இணைப்பதற்காக ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அக்பர் ஃபதேபூர்சிக்ரியைவிட்டு, 1585ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் லாகூர் சென்றார். அவர் டிசம்பரின் துவக்கத்தில் ராவல் பிண்டி (Rawalpindi) அடைந்து பிறகு அட்டாக்கை (Attock) அடைந்தார். எல்லைப் பகுதியிலிருந்த யூக்ஸாய், மந்தர் (Mandar) இனங்கள் தொல்லை கொடுத்துவந்தார்களாதலால், அவர்களைத் தண்டிப்பதற்காக அக்பர், ஸெய்ன்கான் கோகல்தாஷ் (Zain Khan Kokaltash), ராஜா பீர்பால் (Raja Birbal), ஹகீம் அப்துல் ஃபதே (Hakim Abdul Fateh) ஆகியவர்களை அனுப்பிவைத்தார். ஆனால், நிகழ்ந்த போரில் பேரரசப் படைகள் முன்னேற்றம் பெறவில்லை; ராஜா பீர்பால் கொல்லப்பட்டார். அக்பர் மிக்க வருத்தமுற்று ஸெய்ன்கான், புல்ஃபதே ஆகியவர்களை அவர்களுடைய தோல்விக்காகவும், ராஜா பீர்பாலின் பூத உடலைப் பெறத் தவறியதற்கும் கண்டித்தார். அத் தோல்வியைப் பழிதீர்க்க அனுப்பப்பட்ட ராஜா தோடர்மல் குலமரபுக் குழுவினரை அடிபணிய வைத்தார். அவருடன் சேர்ந்துகொள்ளும்படியாக உத்தரவிடப்பட்டிருந்த மான்சிங், கைபர் கணவாயில் நடந்த போர் ஒன்றில் ஆப்கானியர்களைத் தோற்கடித்தார். அக் குழுவினர் முற்றிலும் கீழ்ப்படியவில்லையெனினும், அரசாங்கத்துக்கு மேலும் தொல்லைகள் கொடுக்கவில்லை.

குலமரபுக் குழுவினருக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின்பொழுதே அக்பர் காஷ்மீரத்தை அடிபணியவைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அப் பொறுப்பைக் காஸிம்கான், ராஜா பக்வான்தாஸ் ஆகியவர்களிடமும், மற்றும் சில தளபதிகளிடமும் ஒப்படைத்தார். பேரரசப் படை 1586ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஸ்ரீநகர் (Srinagar) நோக்கி முன்னேறியது. ஆனாலும், மழையாலும் பனியாலும் தடையுற்று, சுல்தான் யூசுப்கானுடன் உடன்படிக்கை செய்துகொள்வதற்கு இணங்கியது. சுல்தான் யூசுப்கான் பலவீனமாக இருப்பதாக உணர்ந்து, பேரரசத் தளபதிகளைச் சந்தித்து நிபந்தனைகளை நாடினார். யூசுப்கான் அக்பரைத் தமது மன்னராக ஏற்றுக்கொண்டு, குத்பாவை அவர் பெயரில் படிப்பதற்கும் நாணயங்களை அவர் பெயரில் அச்சிடுவதற்கும் இணங்கினார். காஷ்மீரத்தில் நாணயச்சாலை, குங்குமப்பூ சாகுபடி செய்தல், கம்பளிப் போர்வைகளைத் தயாரித்தல், வேட்டையாடுதலை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றின் பொறுப்பை ஏந்தப் பேரரச அதிகாரிகள் நியமனம் செய்யப்படுவதற்கும் அவர் இணங்கினார். அக்பர் இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை; சுல்தான் யூசுப்கானும் அவருடைய மகன் யாகுப்கானும் அவருக்கு மரியாதை செலுத்த வந்தபொழுது, சுல்தானைச் சிறையிலடைக்கும்படி அவர் உத்தரவிட்டார். ஆனால், யாகுப்கான் ஸ்ரீநகருக்கு ஓடி எதிர்ப்பளிக்கத் தயாராகிக்கொண்டிருந்தார். அதன்மேல் அக்பர் அவருக்கெதிராகப் படை ஒன்றை அனுப்பிவைத்தார்; அப் படை அவரைச் சரணடையும்படி செய்தது. இப்பொழுது காஷ்மீரம் பேரரசுடன் இணைத்துக்கொள்ளப்பட்டது; அது காபூல் மாகாணத்தின் ஒரு சர்க்காராயிற்று. சிறிது காலத்திற்குப்பின் யூசுப்கான் விடுதலை செய்யப்பட்டு, 500 வீரர்களைக் கொண்ட மன்சப்தாராக நியமனம் செய்யப்பெற்றார்.

சிந்துவைக் கைப்பற்றுதல் 1591

பக்கார் (Bhakkar) தீவு அரணை அக்பர் 1574ஆம் ஆண்டிலேயே கைப்பற்றியிருந்தார். இப்பொழுது அவர் சிந்து நதியின் முகத்துவாரத்திலிருந்த சிந்துவின் தெற்குப் பகுதியைப் பெற ஆவல் கொண்டார். அதுவன்றி வடமேற்கு இந்தியாவின்மேல் அவரது இறைமை முற்றுப்பெற்றதாகக் கருதமுடியாது. மேலும், அப்பொழுது பாரசீகத்தைச் சார்ந்த ஷா அப்பாஸின் உடைமையாக இருந்த காந்தாரத்திற்கெதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்காக அதைத் தளமாக்க விரும்பினார். பேரரசர் அப்துல் ரஹ்மானை இப்பொழுது அவருடைய தந்தையின் கான்கானன் என்ற பட்டப் பெயருடன் உயர்குடிமகனாக்கி, 1590-ல் முல்தானின் கவர்னராக

நியமித்து, தட்டா (Thatta) என்னும் சிற்றரச நாட்டை (கீழ்சிந்து) அதன் துருக்கிய அரசனுன மீர்ஸா ஜானி பேக் (Birza Jani Beg) என்பவரிடமிருந்து அதைக் கைப்பற்றும்படி உத்தரவிட்டார். ஜானி பேக் தமது நாட்டின் பாதுகாப்பிற்காக இரண்டு போர்களிட்டார்; ஆனல், அவர் தோற்கடிக்கப்பட்டு, தட்டாஷெவான் அரண்கள் உட்பட முழு ஆட்சிப் பகுதியையும் சரணடைவிக்குமாறு வற்புறுத்தப்பட்டார் (1591). அவர் பேரரசப் பணித்துறையில் நுழைந்தார். 3,000 வீரர்களைப் பெற்ற மன்சப்தாராகவும் தெய்வீக மார்க்கத்தின் (Din Ilahi) உறுப்பினராகவும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

ஒரிஸ்ஸாவைக் கைப்பற்றுதல், 1592

பீஹாரின் கவர்னரான ராஜா மான்சிங் 1590ஆம் ஆண்டில் ஒரிஸ்ஸாவின்மீது படையெடுத்து, குதுலுகான் லோஹானி (Qutulu Khan Lohani) என்பவரைத் தாக்கத் தயாராகிக்கொண்டிருந்தார். லோஹானி தம்மை அந்தத் தூர மாகாணத்தின் அரசராக்கிக் கொண்டார். மான்சிங்கைப் போரில் சந்திப்பதற்கு முன்னமேயே குதுலுகான் இறந்துவிட்டார். அவருடைய மகனுன நிஸார்கான் (Nisar Khan), சற்று வலுக்குறைவான எதிர்ப்பிற்குப் பிறகு அடிபணிந்தார்; அவர் கவர்னராக உறுதிப்படுத்தப்பட்டார். ஆனல், இரண்டு ஆண்டுகட்குப் பிறகு அவர் அவ்வொப்பந்தத்தை மறுத்துவிட்டு, புரி (Puri), ஜகன்னுதிலிருந்த (Jaganath) அரச நிலங்களைக் கைப்பற்றினர். ராஜா மான்சிங் கிளர்ச்சியாளரைத் தோற்கடித்து விரட்டியடித்தார். அம் மாகாணம் இப்பொழுது பேரரசுடன் இணைக்கப்பட்டது. அது வங்காள சுபாவின் ஒரு பகுதியாயிற்று.

பலூஜிஸ்தான் கைப்பற்றப்படுதல், 1595

பலூஜிஸ்தானைக் (Baluchistan) கைப்பற்ற மீர் மாஸூம் (Mir Masum) என்பவர் 1595, ஃபிப்ரவரி மாதத்தில் அனுப்பப்பட்டார். பலூஜிஸ்தான் வட இந்தியாவில் அக்பரின் அதிகாரத்தை இன்னும் ஏற்றுக்கொள்ளாதிருந்த ஒரே ஒரு சிற்றரச நாடாகும். திறம் படைத்த தளபதி குவெட்டாவுக்கு (Qvetta) வட கிழக்கிலிருந்த சிபி (Sibi) அரணைத் தாக்கினர்; தோற்கடிக்கப்பட்ட பாணி (Pani) ஆப்கானியர்களைக் கடற்கரைக்கருகிலிருந்த மக்ரன் (Makran) உட்பட பலூஜிஸ்தான் முழுவதையும் பேரரசப் படையினிடம் ஒப்படைக்குமாறு கட்டாயப்படுத்தினர்.

காந்தாரத்தைக் கைப்பற்றுதல், 1595

காந்தாரத்தின் பாரசீக கவர்னரான முஸஃபர் ஹுசைன் மீர்ஸா (Muzaffar Hussain Mirza) 1595, ஏப்ரலில் ஆற்றல்

மிக்க அரணை, அமைதியாகவே அக் காரியத்திற்காக அக்பரால் அனுப்பப்பட்டிருந்த ஷாபேக் என்ற ஓர் அதிகாரியின் கையில் ஒப்படைத்தார். ஹுசைன் மீர்ஸா தெஹ்ரானிலிருந்து (Tehran) அதிகாரிகளுடன் நட்புத் தொடர்பு கொண்டிருக்கவில்லை. முஸஃபர் ஹுசைன் மீர்ஸா அமோக மரியாதையுடன் வரவேற்கப்பட்டு, 5,000 குதிரைகளைக்கொண்ட மன்சப்தாரக நியமனம் பெற்றார். சாம்பலில் ஒரு ஜாகீரும் அவருக்கு அளிக்கப்பட்டது. காந்தாரம் கைப்பற்றப்பட்டதனால், அக்பரின் வட இந்தியப் படையெடுப்புகள் முற்றுப்பெற்றன. மீவாரில் ஒரு பகுதியை விலக்கிவிட்டால், வட இந்தியா முழுவதும் அவருடைய கைவசமாயிற்று.

காந்தேஷும் ஆமத்நகரின் ஒரு பகுதியும் கைப்பற்றப்படுதல், 1593-1601; அக்பரது தக்காணக் கொள்கை

வட இந்தியா முழுவதையும் தம்வசமாக்கி அதற்கு அரசியல், நிர்வாக ஒற்றுமை தருவதற்கு முன்னாலேயே, தக்காணத்தின் நான்கு சுல்தானியங்களைக் கைப்பற்ற அக்பர் நீடித்து ஆவல் கொண்டிருந்தார். பழைய பாமனி சுல்தானியம் நான்கு சுல்தானியங்களாகப் பிளவுபட்டிருந்தது. 1591, ஆகஸ்ட்டில் அவர் நான்கு தூதுக்குழுக்களை காந்தேஷ் (Khandesh), ஆமத்நகர் (Ahmad Nagar), பீஜப்பூர் (Bijapur), கோல்குண்டா (Golgunda) ஆகியவைகளுக்குத் தனித்தனியாக அனுப்பி, அவற்றின் அரசர்களைத் தமது மேலாண்மையை ஏற்றுக்கொண்டு தமக்குக் கப்பம் செலுத்துமாறு கோரினார். காந்தேஷின் அரசரான ராஜா அலிகான் (Raja Ali Khan) பேரரசரின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள இணங்கினார். அவருடைய ஆட்சிப்பகுதி அக்பருடைய பேரரசுக்கு நேர் தெற்கிலிருந்தது; ஆனால், மற்ற மூன்று இராச்சியங்களின் அரசர்களும் அக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள மிக்க வணக்கத்துடன் மறுத்துவிட்டனர். ஆகையினால், அக்பர் 1593-ல் ஆமத்நகரை வன்முறையைப் பயன்படுத்தி அடக்க கான்கானன் அப்துல் ரஹீமுக்கு உத்தரவிட்டார். படைப்பொறுப்பில் அவருடன் இணைக்கப்பட்டிருந்த பேரரசரின் இரண்டாம் மகனை மூராத் (Murad) உடன்வர, கான்கானன் ஆமத்நகரை முற்றுகையிட்டார். ஆமத்நகர் வீரம் படைத்த சாந்த் பீபீ (Chand Bibi) என்பவளால் மிகச் சிறந்த முறையில் காக்கப்பட்டது. அவள், மகனுக்குப் பதிலாக ஆட்சி செய்கின்ற அரசியும், ஆமத்நகரை ஆண்டுவந்த முஸஃபரின் அத்தையுமாவாள். பேரரசத் தளபதிகள் பிணக்குகளால் சிதறுண்டு, முற்றுகையைப் பின்வாங்கி, 1596-ல் உடன்படிக்கை செய்துகொண்டனர். அதன்படி, புர்ஹானுல் முல்கின் (Burhanul Mulk) பேரரசரான பகதூர்,

அக்பரின் மேலாண்மையின்கீழ் ஆமத்நகரின் சுல்தானுக அங்கீ கரிக்கப்பட்டார். பகதூர் அப்பொழுது ஒரு குழந்தையாக இருந் தார். புதிய சுல்தான் பேரரசுக்கு பீராரை அளித்தார்; விலை மதிப்பான பரிசுகளையும் அவர் ஆக்ராவுக்குக் கொடுத்தனுப்பினுர்.

உடன்படிக்கை சிறிது காலமே நீடித்திருந்தது. வெகு விரை வில் ஆமத்நகர் அரசாங்கம் உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறி பீராரை மீண்டும் பெற முயன்றது. 1597-ல் நடவடிக்கைகளை உயிர்ப்பிக்க கான்கானுன் வற்புறுத்தப்பட்டார். பேரரசரின் படைகள் முடிவற்ற வெற்றி ஒன்றைப் பெற்றனர். முராதுக்கும் கான்கானுவுக்குமிடையில் இருந்த பிணக்குகளின் விளைவாக முகலாயர்கள் பெருஞ் சேதமடைய நேரிட்டது. ஆகையால், இரு வரையும் திரும்ப அழைத்து அவர்களுக்குப் பதிலாக அபுல் ஃபாஸலை நியமிக்கப் பேரரசர் முடிவு செய்தார். தக்காணத்திற்குத் தாமே நேரில் செல்லப் பேரரசர் தயாரானுர். அவர் வருவதற்குள் 1599-ல் தௌலதாபாத் வீழ்ச்சியுற்றது. பிறகு ஆமத்நகர் முற்றுகை யிடப்பட்டு 1600 ஆக்ஸ்ட்டில் கைப்பற்றப்பட்டது. இளம் அரச ரான பகதூர் நைஸாம் ஷா (Bahadur Nijam Shah) சிறையிலடைக் கப்பட்டு குவாலியருக்கு அனுப்பப்பெற்ருர். ஆனுல், ஆமத்நகரின் பிரபுக்கள் மற்ருெரு பொம்மை அரசரை நியமித்து முகலாயர்க ளுக்குத் தொடர்ந்து எதிர்ப்புத் தந்துவந்தனர்.

ஆமத்நகர் வீழ்ச்சியுறுவதற்குமுன், காந்தேஷின் அரசரான மீரான் பகதூர் ஷா (Miran Bahadur Shah) முகலாய அதிகா ரத்தை மறுத்து, உறுதி வாய்ந்த ஆசிர்கர் (Asirgarh) அரணி லிருந்துகொண்டு தம்மைக் காத்துக்கொள்ளத் தயாரானுர். அவ ருடைய தகப்பனுர் ராஜா அலிகான், ஆமத்நகருடன் நடந்த போரில் முகலாயர்களின் தரப்பில் போரிட்டு மடிந்தார். அக்பர் பகதூர்ஷாவைத் தாக்க முடிவுசெய்துவிட்டார்.

1599ஆம் ஆண்டின் துவக்கத்தில் அவர் காந்தேஷுக்குள் நுழைந்து, அதன் தலைநகரான புர்ஹான்பூரைக் கைப்பற்றி, வெல்ல முடியாத ஆசிர்கர் அரணை முற்றுகையிட்டார். அவ்வரணில் பீரங்கிகளும், போருக்குரிய பொருள்களும், உணவுப் பொருள் களும் ஏராளமாகத் திரட்டி வைக்கப்பட்டிருந்தன. முற்றுகை வெகு நாட்களாக நீடித்தது. நடவடிக்கைகளை மேற்பார்வையிட வும் முற்றுகை நடத்துபவர்களை ஊக்குவிக்கவும் அபுல் ஃபாஸல் அனுப்பிவைக்கப்பட்டார். பேரரசப் படையினர் புற அரண் ஒன் றைக் கட்டினுர்கள். அது மீரான் பகதூரை அச்சுறுத்தியது. அவர் 1600, டிசம்பர் 21ஆம் நாள் அன்று அக்பருக்குக் கீழ்ப்படிந்தார்.

மேலும், சில நாட்கள்வரை படை தொடர்ந்து எதிர்ப்பு நடத்தியது; இறுதியில் 1601, ஜனவரி 6ஆம் நாள் அன்று அது அவ்வரணைச் சரணடைவித்தது. காந்தேஷ் இப்பொழுது பேரரசுடன் இணைக்கப் பட்டது. மீரான் பகதூர் குவாலியருக்குக் கைதியாக அனுப்பப் பெற்றார். ஓராண்டுக்கு 4,000 அஷ்ரஃபிகள் (Ashraffs—தங்க நாணயங்கள்), உயிர்பிழைப்புப்படியாக அவருக்குக் கொடுக்கப் பட்டன. அக்பர், மீரான் பகதூருடன் மிக வஞ்சகமாக நடந்து கொண்டார் என்று வின்ஸெண்ட் ஸ்மித் அவர்மீது குற்றம் சாட்டு கிறார். ஆனால், உல்ஸ்லி ஹெய்க் (Woolseley Heig) நியாய முறவே சுட்டிக்காட்டுவதுபோல, 'ஒருவரை ஒருவர் வெல்ல முயன்றதனால்' அக்பர் குற்றவாளி என்கிற அளவிற்கு மீரான் பகதூரும் குற்றவாளியாவார். ஆசிர்கரின் முற்றுகையின் பொழுது அக்பர் புரிந்த முதன்மைக் குற்றமாவது, அவ்வரணின் தளபதியின் மகனை முகாரப்பைக் (Muqarrab) காரணமின்றிக் கொன்றதாகும். இதுதான் அக்பரின் இறுதிப் படையெடுப்பாகும்.

கைப்பற்றுதல்களை உறுதிப்படுத்தல்

தாம் வென்ற பகுதிகளுக்கு ஒழுங்கான நிர்வாகத்தை அளித்தல் அக்பர் பின்பற்றிய கொள்கையாகும். ஒரு மாகாணமோ சிற்றரச நாடோ அடக்கப்பட்டதும், அங்கே அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும், வருமானத் திட்டத்தை நிறை வேற்றுவதற்காக சிவில் அதிகாரிகளை நியமிப்பதற்கும் அக்பர் நட வடிக்கைகள் எடுத்தார். வருமானத் திட்டம் நிலங்களை அளத்தல், வகைப்படுத்தல் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந் திருந்தது. புதிதாக வெல்லப்பட்ட பகுதிகளிலும் சமயப் பொறைக் கொள்கை கையாளப்பட்டது. சமுதாய, சமய, நிர்வாகச் சீர்திருத்தங்கள் நுழைக்கப்பட்டன. குடிமக்களின் சமூக, ஆன் மீக, பருப்பொருளான நலன்கள் கருத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டன. பின்னால் குறிப்பிட்டிருப்பதுபோல, அக்பர், ஷேர்ஷா உட்பட அவருடைய முன்னோர்களைப் போலல்லாமல் தமது பேரர சின் எல்லா மாகாணங்களுக்கும் ஒருவகைப்பட்ட நிர்வாக முறையை அளித்து, நாட்டில் தேசிய ஆர்வத்தை உருவாக்கு வதற்கு வழிவகுத்தார்.

கிளர்ச்சிகள்

அப்துல்லா கான் உஸ்பெக் கிளர்ந்தெழுதல், 1564

ஹுமாயூன் காலத்திலிருந்தே பணித்துறையிலிருந்த பெரும் பாலான முகலாய அதிகாரிகள், அக்பரின் மையக் கொள்கையால்

அதிருப்தியுற்றிருந்தனர். அவரவர்களுடைய ஆட்சிப் பகுதிகளில் அவர்கள் தன்னாட்சி விரும்பியதுமன்றித் தாம் விரும்பியதையெல் லாம் செய்வதற்கான உரிமையுடன் அரைச்சுதந்திர அந்தஸ்தை யும் விரும்பினார்கள். ஆமத்கான், பீர்முகம்மது, கான் ஸமன் ஆகிய வர்கள் அவர்களுடைய மாகாணங்களில் அரசர்களைப்போலவே நடந்துகொண்டனர். மாளவத்தின் கவர்னரான அப்துல்லாகான் டங்கே, அவர்களுடைய பாதையிலேயே சென்று கிளர்ச்சி நடத்த ஆயத்தமாகிக்கொண்டிருந்தார். அவரைத் தண்டிப்பதற்காக அக்பர் 1564, ஜூலை மாதத்தில் சென்றார். கனமழையால் இரண்டு வாரமாக அவர் சாம்பால் (Chambal) நதிக்கரையில் தங்கவேண்டியிருந்தது. அவர் வருவதை அறிந்துகொண்டு அப்துல்லா மாண்டுவிலிருந்து ஓடிவிட்டார்; ஆனாலும், அக்பர் அவரைப் பின்தொடர்ந்து தோற்கடித்தார். அப்துல்லாவின் பெண்களும் யானைகளும் அவர் கைவசமாயின. கரா பகதூர்கான் (Kara Bahadur Khan) மாளவத்தின் கவர்னராக நியமிக்கப் பட்டார். காந்தேஷைச் சார்ந்த இரண்டாம் முபாரக் ஷாவுடன் (Mubarak Shah II) அக்பர் நல்லுறவு நிலைநாட்டி, அவருடைய மகளையும் மணம் புரிந்துகொண்டு, கிளர்ச்சியாளரான அப்துல்லா வைத் துரத்தியடிக்கும்படி குஜராத்தின் அரசரை வற்புறுத்துவதில் வெற்றி கண்டு, அக்டோபரில் ஆக்ரா திரும்பினார்.

உஸ்பெக் கிளர்ச்சி, 1564-67

அக்பரின் அரசவையிலிருந்த பழைமை வாய்ந்த பிரபுக்களுள் உஸ்பெக்குகள் செல்வாக்குமிக்கவர்களும் கொடுமைவாய்ந்தவர் களுமாவர். ஜான்புரியின் கவர்னரான கான் ஸமன் (அலி கூலி கான்), அவருடைய சகோதரர் பகதூர், அவர்களுடைய மாமன் இப்ராஹிம்கான், அவுத்தின் கவர்னரான கான் ஆலம் (இஸ்கந்தர் கான்), மாளவத்திலிருந்து அண்மையில் விரட்டப்பட்ட அப்துல்லா ஆகியவர்கள் உஸ்பெக்குகளின் தலைவர்களாவர். அவர்கள் முக்கிய நிலப்பொறுப்புகளை ஏந்தி, ஆற்றல்மிக்க படைகளுக்குத் தலைமை தாங்கினர். கான் ஸமனும் கான் ஆலமும் பைராம் கானுக்குச் சிறப்பாக உதவி, வட இந்தியாவில் முகலாய ஆட்சியை மீண்டும் நிலைநாட்ட அரும்பணியாற்றினர். அவர்களது பணி களுக்குப் போதிய பரிசு வழங்கப்படவில்லையென்று அவர்கள் கருதி, இள மன்னனின்மீது குறை கண்டனர். மேலும், அக்பரது மையப்படுத்தும் கொள்கையையும், அவருடைய 'பாரசீக பாவனைகளையும்' அவர்கள் வெறுத்தனர்; தமது அரைச் சுதந்திர நிலையையும், தாம் விரும்பியதுபோல நடப்பதற் கான சுதந்திரத்தையும் விட்டுவிடாது தம்மிடத்திலேயே வைத்துக்

கொள்ள அவர்கள் விரும்பினர். ஒரே பரம்பரையில் வந்தவர்கள்; ஒரே குடும்பத் தொடர்புடையவர்கள்; அரசன்மீது ஒரே குறைபாடும் உடையவர்கள்; அதனால் அவர்களுடைய வாழ்வையும் தாழ்வையும் ஒரேவிதமாக அமைத்துக்கொண்டனர். அவர்கள் கிளர்ந்தெழுந்து அக்பருக்கெதிராக நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிட்டனர். இப்ராஹிமும் கான் ஆலமும் கானுஜைத் தாக்க வேண்டுமென்றும், அதே சமயத்தில் கான் ஸமனும் பகதூரும் மனிக்பூரைக் கைப்பற்றவேண்டுமென்றும் முடிவு செய்யப் பட்டது. கான் ஸமனும் அவருடைய சகோதரரும் பேரரசப் படைகளைத் தோற்கடித்து மனிக்பூரைக் கைப்பற்றினர். கான் ஆலமும் இப்ராஹிமும் 1565, மே மாதத்தில் மற்றொரு பேரரசப் படையை முறியடித்தனர். நிலைமை மிகவும் அச்சுறுத்துவதாக இருந்ததனால், அக்பர் நேரில் போர்க்களத்திற்கு வர நேர்ந்தது. லக்னோவுக்கருகில் கான் ஆலமை அவர் திடீரென்று தாக்கி விரட்டியடித்தார். மனிக்பூரை முற்றுகையிட்டுக்கொண்டிருந்த கான் மைனுடன் கான் ஆலம் சேர்ந்து கொண்டார். ஆனால், அக்பர் லக்னோவைக் கைப்பற்றிவிட்டார் என்று அவர்கள் கேள்வியுற்றதும், அவர்கள் முற்றுகையைக் கைவிட்டு, பாரைச்சின் (Baharaich) சேற்று நிலத்திற்கு ஓடிவிட்டனர். அங்கிருந்து அவர்கள் பீஹாரிலுள்ள ஹாஜீபூருக்குப் பின் வாங்கினர். அக் கிளர்ச்சி இரண்டு ஆண்டுகளாக நீடித்தது. அதற்குள் அக்பர் கிளர்ச்சிக்காரர்களை மன்னித்துவிடுவது நலம் என்று பலமுறை கருதினார். ஆனால், அவர்கள் நிலமானிய உயர்குடி ஆட்சியின் போலி உரிமைகளைக் கைவிட விரும்பாததால், அவர்களோடு அக்பர் மீண்டும் போர் நடத்தி இறுதியில் உஸ்பெக் குடும்பத்தையே ஒழிக்க நேர்ந்தது. ஜனவரியில் கான் ஸமன் கொல்லப்பட்டார்; உஸ்பெக்குகளின் கிளர்ச்சி முடிவு பெற்றது. தமது கையிலேயே அதிகாரத்தை மையப்படுத்துவதற்கும், பழைய பிரபுக்களை அதிகாரிகள் அந்தஸ்துக்கு இறக்குவதற்கும் அக்பர் இப்பொழுது எதிர்ப்பின்றியிருந்தார். அவ்வதிகாரிகளை அவர் தம் விருப்பப்படி நியமிக்கவும் விலக்கவும் முடிந்தது.

மீர்ஸா ஹகிம் இந்தியாவின்மீது படையெடுத்தல், 1566-67

அக்பரின் மாற்றாந்தாய் மகனும், காபூலின் கவர்னரும், உஸ்பெக் கிளர்ச்சியின் தலைவர்களுடன் தொடர்புகொண்டிருந்தவருமான மீர்ஸா முகம்மது ஹகீம் அக் கிளர்ச்சியினால் ஊக்குவிக்கப்பட்டு, அம் மாகாணத்திருந்த நிலப்பொறுப்புகளை ஏற்றிருந்தோர் தம்மை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கையில் பஞ்சாபின்மீது படையெடுத்தார். அவர் பெஹ்ராவின் வழியாக லாகூருக்குச் செல்ல,

அங்கே கான் கலன் (Khan Kalan) அவருக்கு எதிர்ப்பு அளித் தார். செய்தியைப் பெற்றதும், அக்பர் 1566, நவம்பர் 16ஆம் நாள் அன்று ஆக்ராவுக்குப் புறப்பட்டார். அவர் டெல்லியை அடைந்ததும் முகம்மது ஹகீம் அவசரமாகப் பின்வாங்கினர். ஆனாலும், அக்பர் தொடர்ந்து சென்று 1567, ஜனவரியின் இறுதி யில் லாகூர் அடைந்தார். நாடோடியைப் பின்தொடரப் படை ஒன்று அனுப்பப்பட்டது ; ஹகீம் சிந்து நதியின் அக் கரைக்குத் திரும்பிக் கடந்துசென்ற பிறகு அப் படை திரும்பியது.

மீர்ஸாக்களின் கிளர்ச்சி

அக்பர் லாகூரிலிருக்கும்பொழுது, சாம்பல், ஆஸம்பூர் (Azam-pur) மாவட்டங்களில் மீர்ஸாக்கள் கிளர்ச்சி நடத்துவதாக்ச் செய்தி அவருக்கு எட்டியது. கிளர்ச்சியாளர்களான இப்ராஹிம் ஹுசைன் மீர்ஸா, முகம்மது ஹுசைன் மீர்ஸா, மாஸூத் ஹுசைன் மீர்ஸா, அகில் ஹுசைன் மீர்ஸா ஆகியவர்களும் அவர் களுடைய இரு மைத்துனர்களான சிகந்தர் மீர்ஸா, மகமூத் மீர்ஸா (ஷா மீர்ஸா) ஆகியவர்களும் தைமூரின் இரண்டாம் மகனின் வழித்தோன்றல்களாவர் ; அக்பரின் உறவினர்கள். அரச குடும்பத் துடன் அவர் உறவுகொண்டிருந்ததனல், அவர்களின் பேணுதலுக் காக அவர் மேலும் பணம் பெறுவதற்குத் தகுதியற்றவர்களாவர் என்று அவர்கள் நம்பியிருந்தது ஒருவேளை அவர்கள் செய்த கிளர்ச் சிக்குக் காரணமாயிருந்திருக்கலாம். ஹுமாயூனின் காலத்திய முகம்மது ஸமன் மீர்ஸா, முகம்மது சுல்தான் மீர்ஸா ஆகியவர் களின் மேற்கோளைப் பின்பற்றி, அவர்கள் சுற்றுப்புறங்களிலிருந்த அரச நிலங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். மூனிம் கான் அவர் களைத் தோற்கடித்து மாளவத்திற்கு விரட்டியடித்தார். ஆனல், மறைந்துகொண்டிருந்து திடீர்த் தாக்குதல் செய்யும் முறையை அவர்கள் கையாண்டு இடம்விட்டு இடம் ஓடிக்கொண்டிருந்த தனல், 1573ஆம் ஆண்டுவரை அவர்களை முற்றிலும் முறியடிக்க முடியவில்லை. அதே சமயத்தில் உஸ்பெக்குகளும் கிளர்ந்தெழுந் தனர். அக்பரை எதிர்க்க முயற்சி செய்ய உஸ்பெக்குகள் மீர்ஸா வுக்கு அழைப்பு அனுப்பினர். ஆனல், நாம் ஏற்கெனவே குறிப் பிட்டிருப்பதுபோல, உஸ்பெக்குகள் தோற்கடிக்கப்பட்டனர். அவர்களின் தலைவர் கான் ஸமன் போரில் கொல்லப்பட்டார்; அவருடைய சகோதரர் பகதூர்கான் தூக்கிலிடப்பட்டார். அநேக மாக உஸ்பெக்குகளின் தொல்லை முடிவு பெற்ற அதே சமயத்தில் மீர்ஸாக்களின் கிளர்ச்சியும் முடிவடைந்தது. மீர்ஸாக்கள் வேட்டையாடப்பட்டு, மாளவத்திற்கும் அங்கிருந்த குஜராத்துக்கும் விரட்டியடிக்கப்பட்டனர். அம் மாகாணத்தின்மீது 1573-ல்

இரண்டாம் முறையாக அக்பர் படையெடுத்தபொழுது, அவர்கள் இறுதியில் தோற்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டனர். தமது தந்தையின் காலத்திலிருந்து தமது குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பிரபுக்களின் கடைசிக் கிளர்ச்சி 1580-ல் நிகழ்ந்தது. அக் கிளர்ச்சி எங்கும் பரவியதனால், அக்பரின் உயிருக்கும் சிம்மாசனத்துக்கும் பேராபத்து ஏற்பட்டது. நாம் குறிப்பிட்டதுபோல அது 1581-ல் வெற்றிகரமாக ஒடுக்கப்பட்டது. அவ்வாண்டிலிருந்து பேரரசர் பழைய பிரபுக்களின் எதிர்ப்பிலிருந்து விடுதலை பெற்றார்.

இராசபுத்திரக் கொள்கை

அக்பருடைய இராசபுத்திரக் கொள்கை திட்டமற்ற உணர்ச்சியாலோ அல்லது அவர்களுடைய வீரச் செயல்களாலோ, தாராள மனப்பான்மையினாலோ அல்லது தேச பக்தியினாலோ மட்டும் உருவாக்கப்பட்டதன்று. அவர் திட்டமிட்டே இக் கொள்கையை உருவாக்கினார். மேலான சுயநலம் காரணமாகவும், திறமை, நியாயம் ஆகிய இயல்புகளை ஏற்றுக்கொள்ளும் வகையிலும் அவர் இக் கொள்கையை வகுத்துக்கொண்டார். அவருடைய முஸ்லிம் அதிகாரிகளும், அவரைப் பின்பற்றியவர்களும், அந்நியக் கூலிப்படைகளும் அவர்களுடைய சுயநலத்திற்காகவே பாடுபடுவர் என்றும், அவர்களை அதனால் நம்ப முடியாது என்றும் அக்பர் சிறு வயதிலேயே அறிந்திருந்தார். அவர் அரியணையேறிய நாள்முதல் அவருடைய அரசவையிலும் படையிலும் பல தேசத்துரோகிகளை அடக்கவேண்டி நேர்ந்தது. ஷா அப்துல் மாலி முதல் ஷா மன்சூர்வரையிலும் அவருடைய அதிகாரத்தை எதிர்த்துப் பலர் கலகம் விளைவித்தனர். ஷா அப்துல் மாலி என்பவர் அக்பருடைய முடிசூட்டு விழாவுக்கு வர மறுத்தார் (16, பிப்ரவரி, 1566). ஷா மன்சூர் என்பவர் அக்பரால் பிரதம அமைச்சராக ஆக்கப்பட்டவர்; ஆனால், துரோகச் சிந்தனையுடன் மீர்ஸா முகம்மது ஹகீம் (1580) என்பவரை ஆதரித்தார். அவருக்கு எதிராகக் கலகம் விளைவித்தவர்கள் உலகத்தில் முன்னுக்கு வருவதற்கே அக்பர்தான் காரணமாக இருந்தவர். பைராம்கானும்கூட அவருடைய அரசை எதிர்த்தார் (1560). ஆனால், அவருடைய எதிர்ப்பு அரைகுறையாகவே இருந்தது. இருந்தபோதிலும், நீண்ட காலமாக விசுவாசத்துடன் உழைத்ததெல்லாம் வீணாகிவிட்டது. அடுத்தபடியாக, மாஹம் அனகா ஒழுங்கற்றவளாகவும் தன்னலமிக்கவளாகவும் இருந்தாள். அவளுடைய மகன் ஆதம்கான் அக்பருடைய ஆணைகளை ஏற்க மறுத்தார் (1561). தவிர, மாள்வா படையெடுப்பின்பொழுது அவர் நிறைய பணத்தைக் கைப்பற்றிக்

கொண்டார். மேலும், ஆத்காகான் என்ற பிரதம அமைச்சரைக் கொன்றுவிட்டார். அக்பர் இந் நிகழ்ச்சியைக் கண்டித்தபொழுது அக்பருடைய கையையே அவர் பிடித்து நிறுத்தினர் (1562). முதலாம் ஆசஃப்கான் (Asaf Khan I), அப்துல்லாகான் உஸ்பெக் அக்பரை எதிர்த்துக் கலகம் விளைவித்தனர். 1564-ல் இக் கலகங் களைத் தொடர்ந்து, பேரரசிலுள்ள மிகப் பெரிய பிரபுவான கான் ஸமன், தம்முடைய உஸ்பெக் உறவினருடன் சேர்ந்து (1565—67) அக்பருடைய பதவிக்கும் அவருடைய உயிருக்கும் அபாயத்தை விளைவித்தனர். அதற்குப் பிறகு அக்பருடைய உறவினர்களான மீர்ஸாக்கள் 1573 வரையிலும் கலகம் விளை வித்தனர். ஹுமாயூன், மீர்ஸாக்களிடத்தில் அல்லலுற்றதை இந் நிகழ்ச்சி நினைவுறுத்துகிறது. அக்பரை எதிர்த்து இவ்வளவு கலகங்களை விளைவித்தவர்களை நம்பியே ஓர் அந்நிய நாட்டில், அந்நிய மக்களிடையே இந்த முகலாய அதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால், முகலாய அதிகாரம் நீடிக்கவேண்டுமெனில் இவ்வரசினர் இந் நாட்டிலேயுள்ள மிக முக்கியமான அரசியல் சக்திகளின் ஆதரவைப் பெறவேண்டிய நிலை இருந்தது. அக்பர் சிறுவனாக இருந்தபொழுதே இதை நன்றாக உணர்ந்திருக்கிறார். முகலாயர்களுக்கு ஆப்கானிய எதிர்ப்புத் தீர்ந்தபாடில்லை. ஏனெனில், அவர்களுடைய உரிமையை முக லாயர் பறித்துக்கொண்டனர் என்ற நினைவு இருந்துகொண்டே யிருந்தது. ஆப்கானிய இனத்தவர் இன்னும் பீஹார், வங்காளம், ஒரிஸ்ஸா ஆகிய பகுதிகளில் ஆதிக்கம் செலுத்திவந்தனர். தவிர, எல்லாப்புறங்களிலும் காபூலிலும் அவர்களுடைய ஆதிக்கம் இருந்தது. காலஞ்சென்ற சுல்தான் முகமது ஆதில்ஷாவின் மகன் ஷேர்கான், தற்பொழுது உத்தரபிரதேசம் என்று அழைக்கப்படுகிற கிழக்குப் பகுதிகளில் முகலாய ஆட்சியைக் கவிழ்க்கத் திட்ட மிட்டார் (1561). சுலைமான் கர்ரணி என்பவர் இந்தியாவிலுள்ள ஆப்கானியர்களுக்குத் தலைவராக விரைவில் முன்னேற்றம் அடைந்துவந்தார். அக்பருடைய தந்தையும் அவருடைய பாட்டனாரும் கவனிக்கத் தவறியதை அக்பர் சரியாகத் தெரிந்து கொள்ளத் தவறவில்லை. அதாவது, இராசபுத்திரர்கள் வசம் நிறைய நிலப்பகுதிகள் இருந்தன. பெரிய படைகளுக்கு அவர்கள் தளபதிகளாக இருந்தனர். அவர்களுடைய வீரம் சிறப்புமிக்கது. அவர்கள் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். அத்தகைய இயல்புகளைக்கொண்ட அவர்களை நன்றாக நம்பலாம். அதனால் அவர்களை நண்பர்களாக்க அக்பர் யோசித்தார். அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறவும், மற்றும் தந்நலமிக்க முகலாய, உஸ்பெக், பாரசீக, ஆப்கானியப் பிரபுக்களுக்கும் அதிகாரிகளுக்கும் எதிர்ப்பாக இராசபுத்திரர்களைப் பயன்படுத்தவும் அவர் விரும்பினர்.

இந்தக் கொள்கையைப் பின்பற்றும் காரணமாக ஆம்பரைச் (ஜெய்ப்பூர்) சார்ந்த ராஜா பார்மல் என்பவருடைய இணங்குதலை ஏற்றுக்கொண்டார். கச்வாஹா அரச பரம்பரையுடன் ஜனவரி 1662-ல் திருமண உறவையும் வரவேற்றுர். அவர் பக்வான்தாஸ், மான்சிங் ஆகியோரை வேலைக்கு அமர்த்திஞர். தமது உயர் அந்தஸ்து முஸ்லிம் அதிகாரிகளைவிட விசுவாச மிக்கவர்களாகவும் பணியாற்றல் மிக்கவர்களாகவும் உள்ளனர் என்பதை அவர் விரைவில் உணர்ந்துகொண்டார். உண்மையில் அவர்களின் விசுவாசத்தையும் பற்றையும் அவர் சோதித்ததற்குப் பிறகுதான் தம்மை மன்னராக ஏற்றுக்கொள்வதற்காகவும், தம்முடைய மிக உயர்ந்த முஸ்லிம் அதிகாரிகளுக்கும் தளபதிகளுக்கும் சரிசம்மான நிலையில் இராசபுத்திரர்களைத் தமது பணியில் சேர்த்துக்கொள்வதற்காகவும் அவர் இராசபுதனத் தலைவர்களை வரவழைத்தார். தந்நாட்சி பெற்ற இராச்சியங்களில் அவர்களை விட்டுவிட்டு அவர்களை மரியாதையுடன் நடத்திஞல் அவர்கள் தமது திட்டத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்பதைக் கூர்மதியுடன் அவர் யூகித்துக்கொண்டார். அவர் நினைத்தது சரியே. ஒன்றுக்குப்பின் ஒன்ருக எல்லா இராசபுதன இராச்சியங்களும் அவருடன் கூட்டுறவு ஏற்படுத்திக் கொண்டன; அவர்களெல்லாம் மன்சப்தார்களாக நியமிக்கப் பெற்றனர். ஆனுல், இராணுவச் செயல்முறையும் சண்டையுமின்றி இவ் விளைவைச் சாதிக்கமுடியவில்லை. 1562-ல் மெர்டா வீழ்ச்சியுற்றது; 1568-ல் ரான்தம் போர் வீழ்ச்சியுற்றது. இராசபுதனத்திலும் மத்திய இந்தியாவிலும் இருந்த மற்ற இராச்சியங்களும் பின்தொடர்ந்தன. மீவார் மட்டும் ஏளன இழ்ச்சியுடன் அத் திட்டத்தை ஏற்க மறுத்தது. நீண்ட காலமாக முற்றுகை தொடர்ந்தது. அச் சமயத்தில் அதன் தலைநகரான சித்தூர் இழக்கப்பட்டது. அதற்குப் பின்பும் போர் நீடித்தபோதிலும், மீவார் அக்பருக்குக் கீழ்ப்படியவில்லை. ஆனுலும், சுதந்திர நாடுகளான துஸ்கர்பூர், பன்ஸ்வாரா, பிரதாப்கர் ஆகியவற்றை ஆண்டுவந்த மீவாரது அரச குடும்பத்தின் ஒன்றுபட்ட கிளைமரபினர் 1577-ல் அக்பருக்குக் கீழ்ப்படிந்தனர். அவர்களுடைய எதிர்ப்பையும், சில இராசபுத்திரர்கள் அளித்த கடும்போரையும் அக்பர் தாராள மனப்பான்மையுடன் மன்னித்துவிட்டு, எதிர்ப்பு அளிக்காமல் கீழ்ப்படிந்த மற்றச் சிலருக்குக் காட்டிய சலுகைகளை அவர்களுக்கும் காட்டி அவருடைய பணியில் சேர்த்துக்கொண்டார். தனிப்பட்ட நிலையில் அவர் சமய வெறியிலிருந்து விடுபட்டிருந்தபோதிலும், மற்ற டெல்லி சுல்தான்களைப்போலல்லாமல் அவர் இராசபுத்திரர்களைப் பிற மதத்தினர்கள் என்ரே, அரசியலில் தாழ்ந்தவர்கள் என்ரே கருதவில்லை. தவிர, அவர்களது இராச்சியங்களின்மீது அவர் படையெடுத்தபொழுது, அவர்களுடைய கோயில்களை அழிப்

பதையோ உருவச் சிலைகளை உடைப்பதையோ செய்யவில்லை. அதுபோன்ற குற்றங்களை அவருக்கு முன்னால் ஆண்டவர்கள் புரிந்தனர். இதன் விளைவாக, 350 ஆண்டுகளுக்கு மேற்பட்டுத் தனித்து நின்றவர்களும் டெல்லியின் துருக்கிய ஆப்கானிய சுல் தான்களுக்கெதிராக இடையறுமலும் மும்முரமாகவும் போரிட்டவர் களுமான இராசபுத்திரர்கள், முகலாய அரியணையை மிக உறுதியாக ஆதரிப்பவர்களும் நாட்டில் முகலாய ஆட்சியைப் பரப்புவதற்குக் கருவியாக இருப்பவர்களுமாக மாறியிருந்தனர். அக்பர் ஆட்சியின் இராணுவ, அரசியல், நிர்வாக, பொருளாதார, சமூக, நாகரிக, கலைச் சாதனைகளுக்கு அவர்கள் இடையூறின்றிப் பெரும் உதவி யளித்தனர். அவர்களுடைய ஒத்துழைப்பு முகலாய ஆட்சிக்குப் பாதுகாப்பும் நிரந்தர நிலையும் அளித்தது; தவிர, அதுவரை பெற் றிராத பொருளாதார வளமையையும் நாகரிக மறுமலர்ச்சியையும் நாட்டில் ஏற்படுத்தியது. முகலாய ஆட்சியின் விலைமதிப்பான செல்வமாகிய இந்து-முஸ்லிம் நாகரிக கூட்டிணைப்பையும் அது உண்டாக்கியது.

அக்பரின் சமயக் கொள்கை உருவாதல்

ஒப்புநோக்கின் தாராள மனப்பான்மையான சூழ்நிலைகளில் அக்பர் பிறந்து வளர்ந்தார். அவருடைய தந்தை ஒரு முகலாய ஸுன்னியாவார்; தாய் பாரசீக ஷியா. அவர் ஓர் இந்துத் தலை வரின் வீட்டில் பிறந்து அங்கு ஒரு மாதம்வரை வசித்துவந்தார். ஹுமாயூன் தமது சமயக் கருத்துகளில் வைதிகராக இருந்த போதிலும், வெளித்தோற்றத்திற்கு ஷியா மதத்தின் கொள்கைகளை அவர் ஏற்க நேர்ந்தது. அவருடைய விசுவாசமிக்க அதிகாரியும் தளபதியுமான பைராம்கான் ஓர் உறுதியான ஷியா ஆவார். பின்னால் அக்பரின் பாதுகாவலரும் பாதுகாப்பாளரும் ஆன பைராம்கான், அவருடைய குணத்தை உருவாக்கி அவருடைய கொள்கையையும் உருவாக்கினார். அக்பரின் சிறப்புமிக்க ஆசிரிய ரான அப்துல் லதீஃப் (Abdul Latif) போதித்த 'சுலேஹிகுல்' (Suleh-i-kul—உலகு அமைதி—universal peace) என்னும் தத்து வத்தை அக்பர் எக்காலமும் மறக்கவில்லை. அப்துல் லதீஃப் என்பவர் மிகத் தாராள மனப்பான்மையாளரானதால், ஷியா நாடான பாரசீ கத்தில் ஸுன்னி என்றும், ஸுன்னி சமயமே அதிகமாகப் பரவி யிருந்த வட இந்தியாவில் ஷியா என்றும் அழைக்கப்பட்டார். இங்ஙனமாகப் பண்பின் மரபுத்தொடர்பும் சூழ்நிலையும் கலந்து அக்பரின் சமயக் கருத்துகளைத் தாராள மனப்பான்மையின் திக்கில் திருப்பின. இயல்பாகவே அவர் சமயவெறி கொண்டவரல்லர். பைராம்கானின் வீழ்ச்சிக்குப் பிறகு அடுத்த சில ஆண்டுகளில்

கோட்பாட்டுக்கு முரண்பட்ட சில முக்கிய முஸ்லீம்களுக்கெதிராக நடவடிக்கைகள் எடுக்கும்படி வற்புறுத்தப்பட்டபோதிலும், அவர் எக் காலத்திலும் குறுகிய மத வெறியை வெளிப்படுத்தவில்லை. இருபது வயது அடைவதற்கு முன்னமேயே அவர் போர்க்கைதிகளை அடிமைகளாக்கி, அவர்களை முஸ்லிம்களாக மத மாற்றம் செய்யும் தீய பழக்கத்தை ஒழித்தார். உண்மைப் பொருளில் ஆழ்ந்த சமயப் பற்றுடையவரான இவர், பிறப்பு இறப்புபற்றிய பிரச்சினைகளைப் பற்றி அடிக்கடி ஆழ்ந்த சிந்தனைகளில் மூழ்கியிருப்பார். இருபது வயதடைந்தவுடன் சமயம், அரசியல் ஆகியவற்றை இணைக்கமுடியாததனால் விளைந்த வருத்தம் இவரைக் கவ்வியது. 'எனக்கு இருபதாண்டுகள் முடிந்ததும், எனக்குள்ளே ஒரு கசப்பு ஏற்படுவதை நான் அனுபவித்தேன். எனது இறுதிப் பயணத்திற்காகப் போதிய ஆன்ம சக்தி என்னிடம் இல்லாததனால், என்னுடைய ஆன்மா வருத்தத்தில் மூழ்கியது' என அக்பர் கூறுகிறார். அவரது பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் புண்ணியத் தலங்களுக்கு விஜயம் செய்யும் இந்து யாத்திரிகர்களின்மீது விதிக்கப்பட்ட வரியை 1563-ல் ரத்து செய்ததற்கு இவ்வான்மீக எழுச்சியே காரணமாகும். அடுத்த ஆண்டில் இன்னும் புரட்சிகரமான ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டது; அதாவது, முஸ்லிம்களல்லாதார்மீது விதிக்கப்பட்டுவந்த வெறுப்பூட்டும் ஜெஸ்ஸியா வரி அல்லது தல வரியைத் தவிர்த்தார். அவ் வரியை வசூலித்தல் சமயக் கடமையாகும் என்று முந்திய எல்லாத் துருக்கிய, ஆப்கானிய சுல்தான்களும், அவருடைய தந்தையும், பாட்டனும்கூடக் கருதினர். இச் செயல் அவருடைய சமயக் கொள்கையில் ஒரு முக்கியமான மாறுதலை விளைத்தபோதிலும், அக்பர் அவரது தனிப்பட்ட வாழ்க்கையில், பல ஆண்டுகளாக ஒரு நல்ல, எனினும், பொறுதியுடைய முஸ்லிமாவார். அக்பர் ஐந்து முறை தொழுதார் என்பதற்கும், சமயச் சடங்குகளைச் சரிவரப் பின்பற்றினார் என்பதற்கும், இறைவன் தமக்கு ஆட்சிப் பகுதியையும், செல்வத்தையும், அதிகாரத்தையும் கொடுத்ததற்கு நன்றி செலுத்தும் வழியில் அவர் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் இறைவனை நினைத்து வைதீக முஸ்லிம் முறையில் 'யாஹு! யாஹாதீ!' என்றெல்லாம் குரல் எழுப்பியது சான்றாகும். முஸ்லிம் சமயப் பற்றுஉடையவர்களின் கூட்டத்தை அவர் நாடினார். ஆஜ்மீரிலுள்ள ஷேய்க் மொய்னுத்தீன் ஷிஷ்தியின் கல்லறைக்கு ஒவ்வோர் ஆண்டும் அவர் யாத்திரை சென்றார். உண்மையைத் துழாவும் மனப்பான்மை பெற்றிருந்த இவர், தமது சமயத்தின் தத்துவங்களை அறிந்துகொள்ள விரும்பினார். இக் கருத்தை மனத்தில் கொண்டு, 1575ஆம் ஆண்டின் துவக்கத்தில், இவர் ஃபதேபூர் சிக்ரியில் ஒரு கட்டடத்தைக் கட்டினார். அதற்கு இபாதத் கானா (Ibadat

Khana—தொழுகை இல்லம்—House of Worship) என்று பெயர் வழங்கப்பட்டது. அதில் ஒவ்வொரு வியாழன் மாலையிலும் தொடர்ந்து சமய விவாதங்கள் நடைபெற்றன. ஆரம்பத்தில் விவாதங்கள் முஸ்லீம்களுக்கிடையே நடைபெற்றன. ஷேக்குகள், சய்யதுகள், உலேமாக்கள் (Ulemas), முஸ்லீம் பிரபுக்கள் ஆகிய வர்களே இக் கூட்டங்களுக்கு அழைக்கப்பெற்றனர். சுல்தான் பூரைச் சார்ந்தவரும் மக்துமுல் முல்க் (Makdum-ul-Mulk) என்று பட்டம் பெற்றவருமான முல்லா அப்துல்லா என்பவரையும், தலைமை சதரான ஷேக் அப்துன் நபியையும் (Shaik Abdun Nabi) தலைவர் களாகக் கொண்டிருந்த வைதீக ஸுன்னிக் கட்சி இவ் விவாதங் களில் தலையார்ந்த இடத்தைப் பெற்றது. ஆனால், அதனுள்ளேயே பிளவு ஏற்பட்டிருந்ததனால், அக்பரிடத்தில் அது தனது செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. மக்துமுல் முல்க்கும் அப்துல் நபியும் இஸ்லாமிய சமயத்தைப்பற்றிய முக்கியப் பிரச்சினைகளைப் பற்றித் தமக்குள்ளேயே சண்டையிட்டுக்கொண்டனர்; ஒருவரின் கருத்தை மற்றவர் பொறுத்துக்கொள்ளா நிலையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். கற்றறிந்தவர்கள் சிலர் மற்றவர்களைக் கேலி செய்தனர்; எல்லோரும் ஒருவரை ஒருவர் குறைகூறிக்கொண் டனர். 'ஓர் இரவில் திடீரென்று அக் காலத்திய உலேமாக்கள் பொங்கி எழுந்தனர்; பயங்கரக் குழப்பம் ஏற்பட்டது. பேரரசர் அவர் களுடைய நாகரிகமற்ற நடத்தையினால் கோபமுற்றார்' என்று பதௌனி கூறுகிறார். இதுபோன்ற நிகழ்ச்சிகள் அவ்வில்லத்தில் சாதாரணமாக நடந்தன. மஞ்சள், சிவப்பு ஆடைகளை அணிதலைச் சட்டபூர்வமாக்குவதான ஃபத்வா (fatwa—ஆணை) ஒன்றை ஹாஜி இப்ராஹிம் பிறப்பித்துள்ளார் என்று கேள்வியுற்ற தும், 'மீர் ஆதி, சய்யத் முகம்மது என்போர் பேரரசரின் முன்னிலையி லேயே அவரைச் சாபத்துக்குரிய ஈனன் என்று அழைத்து, அவரைத் திட்டி, அவரை அடிக்கத் தமது கோலையும் ஓங்கி னார்கள்.' பொறுப்பற்ற அவர்களது நடத்தையும் சச்சரவுகளும் இஸ்லாமின் அடிப்படைத் தத்துவங்களைச் சரிவர விளக்க இயலாத நிலையும், அவர்களது பேராசையும் தகாத நடத்தையும், இச் சண்டைகளுக்கப்பால்தான் உண்மையைக் காணமுடியும் என்று அக்பருக்கு உறுதிப்படுத்தின.

அக்பருடைய சமயக் கருத்துகள் உருவாவதன் இரண்டாம் கட்டம் இப்பொழுது தொடங்கியது. வைதீக இஸ்லாமில் அவ ருடைய நம்பிக்கை அசைவற்றதாகவே இருந்தது. விவாதங்களில் பங்குபெற இந்துக்கள், சமணர்கள் (Jains), ஸொராஸ்டிரியர்கள் (Zoroastrians), கிறிஸ்துவர்கள் (Christians) போன்ற பிற சமயத் தவர்களும் அனுமதிக்கப்பட்டனர். 1579, ஜூன் 22ஆம் நாள்

அன்று, ஃபதேபூர் சிக்கிரியிலுள்ள முதன்மை மசூதியிலிருந்த புனித பீடத்தின்மீது அவர் ஏறிக் குத்பாவைப் படித்தார். அதன் செய்யுள்கள் அரசகவியான ஃபைஸியால்(Faizi) இயற்றப்பட்டவையாம். ஃபைஸி, அபுல் ஃபாஸல் ஆகியோரின் தந்தையான ஷேக் முபாரக் (Shaik Mubarak) செப்டம்பரில், அரச ஆணையின்படி, ஒழுங்குமுறைக்குரிய பத்திரம் ஒன்றை (மகஜர்) பிறப்பித்தார். நாட்டில் இஸ்லாமைப்பற்றிய எல்லாப் பிரச்சினைகளுக்கும், அவை சமயப் பிரச்சினைகளாயினும் சிவில் பிரச்சினைகளாயினும், ஒரு தீர்ப்பளிப்பவருக்குரிய கட்டுப்பாடற்ற அதிகாரத்தை அப் பத்திரம் அக்பருக்கு அளித்தது. இப் பத்திரத்திற்கு மக்துமுல் முல்க், அப்துல் நபி உட்பட எல்லா முஸ்லிம் சமயத்துறை அறிஞர்களும் கையொப்பமிட்டனர். அப் பத்திரம் பின்வருமாறு அமைந்துள்ளது:

"இந்துஸ்தானம் இப்பொழுது பாதுகாப்பிற்கும் அமைதிக்கும் மையமாகவும், நீதி. கொடை ஆகியவை திகழும் நாடாகவும் ஆகி விட்டது. ஆகையினால், ஏராளமான உயர், தாழ் வகுப்புகளைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக விமோசனத்துக்கு வழிகாட்டிகளாக இருக்கும் நுண்ணறிவு படைத்த வழக்கறிஞர்களும், அறிவைப் பரப்பும் சுற்றுப் பயணிகளும், அராபிய, பாரசீக நாடுகளிலிருந்து இங்கு வந்திறங்கி இங்கேயே குடியேறியுள்ளனர். இப்பொழுது சட்டத்தின் பல்வகைப்பட்ட துறைகளையும் சட்டத்தின் தத்துவங்களையும்பற்றி அறிந்திருப்பவர்களும், விவேகம், இறைச்சான்று ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கும் ஆணைகளைப்பற்றிச் சிறப்பாக அறிந்திருப்பவர்களும், தெய்வ பக்திக்கும் நேர்மைக் கருத்துகளுக்கும் சிறப்புப் பெற்றவர்களுமான தலையார்ந்த உலேமாக்களாகிய நாம், முதலில் குர்ரானின் செய்யுளான, 'இறைவனுக்குக் கீழ்ப்படியுங்கள் ; நபிநாயகருக்கும், உங்களுக்குள் அதிகாரம்பெற்றவர்களுக்கும் கீழ்ப்படியுங்கள்' என்னும் வாக்கு; இரண்டாவதாக, 'மீட்புநாளில் இறைவனுக்கு மிக நெருங்கியவர் யாரோ அவரே நேர்மைத் தலைவர் ; யார் ஒருவர் அமீருக்குக் கீழ்ப்படிகிறரோ அவரே எனக்கும் கீழ்ப்படிபவர் ; யாரொருவர் அவருக்குக் கீழ்ப்படியவில்லையோ அவர் எனக்கெதிராகக் கிளர்ச்சி செய்பவராவார்' என்ற உண்மை மரபு ; மூன்ருவதாக, விவேகம், இறைச்சான்று ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் மற்றப் பல சான்றுகள்—ஆகியவற்றின் ஆழ்ந்த பொருள்களை அறிந்து கொண்டுள்ளோம். இறைவனின் முன்னிலையில் நீதி அரசனின் அந்தஸ்து முப்தஹூத்தின் அந்தஸ்தைவிட உயர்ந்ததாகும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

தவிர, இஸ்லாமின் அரசர், மானிட வர்க்கத்தின் அடைக்கலம், வழிபாடு செய்பவர்களின் தளபதி, வையகத்தில் இறை

வனின் நிழலாக இருப்பவரான அபுல்ஃபத் ஜலாலுத்தீன் முகம்மது அக்பர் பாதுஷாஹி-காஸி (அவருடைய இராச்சியத்தை இறைவன் நீடித்துவைப்பானாக) மிக நியாயமும் அறிவும் படைத்தவர்; இறைவனைப்பற்றி அறிந்தவர் என்றும் நாம் அறிவிக்கிறோம்.

ஆகையால், வருங்காலத்தில் சமயப் பிரச்சினைகள் எழுந்து அவைகளைப்பற்றி முஜ்தஹீத்துகள் கருத்து வேற்றுமை கொண்டாலும், பேரரசர் தம் ஆழ்ந்த அறிவையும், தெளிவான புத்தியையும் கொண்டு நாட்டின் நலனுக்காகவும் அமைதிக்காகவும், நிலைத்திருக்கும் மாறுபட்ட கருத்தில் ஒன்றை ஏற்றுக்கொண்டாலும், அதுபோன்ற ஓர் உத்தரவை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு நாம் இணங்குகிறோம்.

நாட்டின் நலனுக்காகப் பேரரசர் குர்ரானின் ஏதாவது ஒரு செய்யுளின் அடிப்படையில் புதிய ஓர் உத்தரவைப் பிறப்பித்தாரெனில், நாம் எல்லோரும் அதற்குக் கட்டுப்படவேண்டும்; அதற்கு எதிர்ப்பளித்தல் மறு உலகத்தில் நமக்கு அழிவையும், இவ்வுலகத்தில் சமய உரிமைகளின் இழப்பையும் தரும்.

இந்தப் பத்திரம் நேர்மையான கருத்துகளோடு இறைவனின் புகழுக்காகவும் இஸ்லாமின் பரவலுக்காகவும் எழுதப்பட்டுள்ளது. சமயத்தின் தலையார்ந்த உலேமாக்களும், தலைசிறந்த சமய வல்லுநர்களுமான நாங்கள் ஹி.பி. 987 ரஜ்ஜப்பில் (Rajjab ஆகஸ்டு, செப்டம்பர், 1599) கையொப்பமிட்டிருக்கிறோம்."

தவறுபடா ஆணை என்று (Infallibility Decree) தவறாக அழைக்கப்படும் மேற்குறித்த பத்திரம், முஸ்லீம் சட்ட வல்லுநர்கள் மாறுபட்ட கருத்துகளில் எதையாவது மேற்கொள்ளவும், குர்ரானின் செய்யுளை யொத்திருந்தால் விவாதத்திற்கு இடமற்ற பொருள்களைப்பற்றிய எந்தவகை நடத்தையிலும் கொள்கையிலும் ஏதாவது ஒன்றை ஏற்றுக்கொள்ளவும் உரிமை அளித்தது. இதுவரை உலேமாக்களின் சிறப்புரிமையாக இருந்து வந்ததை, குறிப்பாக முதன்மை சதரின் உரிமையை இவர் தாமே மேற்கொண்டார். இக் காலத்திலிருந்து தமது முஸ்லிம் குடிமக்களின்மீது சமய ஆதிக்கத்தையும் பெற்றார். தற்கால ஆசிரியர்களான ஸ்மித், உஸ்லிஹெய்க் போன்றவர்களின் கூற்றின்படி அக்பர் ஒரு போப்பும் மன்னருமானார் என்று கூறுவது சரியே.

தொழுகை இல்லத்தில் சமயவாதங்கள் நீடித்து நடைபெற்றுக் கொண்டிருந்தபோதிலும், பிற சமயங்களைச் சார்ந்த அறிஞர்களை

யும் சமயத் தலைவர்களையும் அக்பர் தனித்தனியே கூட்டினர். வைதீக ஸுன்னி சமயத்தில் பற்றிழந்ததற்குப் பிறகு, ஷியா அறிஞர்களின் கவனத்தைத் திருப்பினர். சிறப்பாகப் பேசும் வல்லமையைப் பெற்ற ஜிலானைச் (Gilan) சார்ந்த ஹகீம் அபுல் ஃபதே என்பவர் அக்பரின் மதிப்பில் உயர் இடம் பெற்றிருந்தார். முல்லா முகம்மது யாஸ்தி (Mullah Muhamad Yazdi) என்ற மற்றொரு ஷியா துறவி, அவருடைய ஆப்த நண்பராகிப் பேரரசரை ஒரு ஷியாவாக்க முயன்றார். ஆனால், ஷியா மதத்தில் அக்பருக்கு மனநிறைவு ஏற்படவில்லை; அவர் சூஃபிசத்திற்குத் (Sufism) திரும்பினர். 'சாஹிபி ஹல்' (Sahib-i-Hal) என்று பிரசித்திபெற்ற, பதக்ஷானைச் சார்ந்த ஷேக் ஃபைசினியும் மீர்ஸா சுலைமானும் இறைவனுடன் ஆன்மீகத்தொடர்பு கொள்ளுதல் போன்ற சூஃபி தத்துவங்களையும் கொள்கைகளையும் அக்பருக்கு அறிவூட்டினர். ஆனாலும், அக்பர் இயல்பாகவே ஓர் அறிவு கடந்த மெய்யுணர்வாளராயினும் ஒரு முறைக்கும் மேற்பட்டு 'தெய்வீகக் காட்சிகளைக்' கண்டவராயினும், தமது காரியத்திற்கு சூஃபிஸம் போதாததை அவர் உணர்ந்தார். ஆகையினால், பிற சமயங்களைக்கொண்டு மனநிறைவுபெற அவர் முயன்றார்; இந்து சந்நியாசிகளுடனும், கிறித்துவ பிரசாரகர்களுடனும், ஸொராஸ்டிரிய குருமார்களுடனும் அவர் தடையின்றிக் கலந்து வந்தார். உண்மையை அறிந்து கொள்வதற்காக அவர் பேரார்வம் கொண்டிருந்ததனால், தூங்கும் வேளையிலும் அவர் ஓய்வு எடுத்துக்கொள்ளாது புருஷோத்தம் (Purushotham), தேவி (Devi) என்ற பிராமண அறிஞர்களுடனும், பிற சமயத்தைச் சார்ந்த அறிஞர்களுடனும் தமது படுக்கை அறையின் மாடிமுகப்பில் இரவு முழுவதும் அவர் விவாதங்கள் நடத்தினர். இந்து சமயம், சமண மதம், பௌத்த சமயம், ஸொராஸ்டிரிய சமயம், கிறிஸ்துவ சமயம், ஆகிய ஒவ்வொரு சமயமும் விரிவடைந்துகொண்டிருந்த அவரது ஆன்மாவைத் திருப்திசெய்ய முடியவில்லை.

பகுத்தறிவுவாதியான அக்பர் விஞ்ஞான முறையைக் கையாண்டு உண்மையை அறிய முயன்றார். "இரவும் பகலுமாக மக்கள் வேறொன்றிலும் ஈடுபடாமல், விஞ்ஞானத்தின் ஆழ்ந்த கருத்துகள், திருவெளிப்பாட்டின் நயநுணுக்கங்கள், வரலாற்றின் அற்புதங்கள், இயற்கையின் விநோதங்கள் ஆகியவற்றைப்பற்றிய உண்மைகளை அறிந்துகொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். பேரரசர் பல்வகைப்பட்ட கட்டங்கள், பல்வேறு சமயப் பழக்கங்கள், மதப்பிரிவுகளுக்குரிய நம்பிக்கைகள் ஆகியவற்றை எல்லாம் கடந்து சென்றதுமன்றி, நூல்களில் காணக்கூடிய உண்மைகளைத் தேர்ந்தெடுக்கும் திறமையாலும் (இஸ்லாமிய தத்துவத்

திற்கு மாறுபட்ட) விசாரணை ஆர்வத்தாலும் திரட்டினர். வாழ்நாள் நெடுக அவர் நடத்திய ஆராய்ச்சியின் விளைவாவது, 'எல்லாச் சமயங்களிலும் நல்லறிவுடைய மனிதர்களும் மட்டமான சிந்தனையாளர்களும் இருக்கின்றனர். இவ்விதமான உண்மையை எங்கும் காணக்கூடுமாயின், ஏன் உண்மை, ஒப்புநோக்கின் புதியதாகவும் ஓர் ஆயிரம் ஆண்டும் நிலைத்திராத இஸ்லாம்போன்ற ஒரு சமயத்தில்மட்டும் இருக்கவேண்டும்.*

வெகு நாட்களுக்கு முன்பே அக்பரது அறிவாராய்ச்சிக் கோட்பாடு வைதிக இஸ்லாமில் அவருடைய நம்பிக்கையைக் குலைத்தது. இறுதித் தீர்ப்பு நாள், இறுதித் தீர்ப்பு நாளில் மாண்ட உயிர்களின் மீட்டெழுச்சி ஆகிய இஸ்லாமிய தத்துவங்களை அவர் மறுத்து, திருவெளிப்பாட்டையும் ஒதுக்கிவிட்டார். எப்படி ஒரு மனிதன் சுவர்க்கத்திற்குச் சென்று இறைவனுடன் நீண்ட பேச்சு நடத்தித் திரும்பிவரமுடியும் என்பதை அவர் நம்பவில்லை. மறுபிறப்புக் கோட்பாடு, சூரியத் தொழுகை போன்ற இந்து, பாரசீக (Parsee) நம்பிக்கைகளையும் பழக்கங்களையும் அவர் பின்பற்றினர். அக்பர் இஸ்லாமை எதிர்ப்பது இங்ஙனமாகத் தொடங்கியது. தற்கால ஆசிரியர்கள் பலர் அக்பர் ஒரு முஸ்லீமாக வாழ்ந்து முஸ்லீமாகவே இறந்தார் என்று கூறியுள்ளனர். இந்நூலாசிரியர் அக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இஸ்லாம், இந்து சமயத்தைப்போல் அன்று; ஒரு திட்டவட்டமான சமயமாகும். அம் மதத்தின் ஐந்து அடிப்படைத் தத்துவங்களில், அதாவது, கல்மா (Kalma) (கடவுள் ஒருமைப்பாடு, நபிநிலையை முகம்மது பெற்றிருத்தல்), நாள்தோறும் ஐந்து வேளை தொழுதல், ரம்தான் (Ramdan) மாதத்தில் நோன்பிருத்தல், ஸகாத் (Zakat)என்ற தருமத்தைச் செய்தல்,மெக்காவுக்கு யாத்திரை போதல் (ஹஜ்-Haj) ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டிராத ஒருவர் முஸ்லிம் ஆகமாட்டார். கர்மா தத்துவம் (Karma), மறுபிறப்புத் தத்துவம், ஒளியின் மூலகாரணம் என்று கருதப்படும் சூரியனின் தொழுகை, ஒவ்வொரு சமயமும் உண்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது என்ற உண்மை—ஆகியவற்றில் நம்பிக்கை வைத்தல், முஸ்லிம் சமயம்தான் உண்மையானது என்றும் முந்திய நபிகள் சொன்னதெல்லாம் புத்தம் புதியவரும் எல்லாரையும் விடச் சிறப்பானவருமான முகம்மது நபியால் ரத்து செய்யப்பட்டது என்றும் வற்புறுத்துவதான இஸ்லாமிய அடிப்படைக் கருத்துக்கு மாறுபட்டதாகும். முகம்மது ஒரு நபி யென்றுதான் அவர் கருதினரே தவிர, அவர் ஒரே ஒரு நபி என்று கருதவில்லை. தவிர, அக்பர் தாம் பிறந்து வளர்ந்த மதத்தில் தொடர்ந்து பற்று வைத்

* Ain, Vol. I, p. 179.

திருந்தார் என்பதற்குச் சம காலத்திய சான்று எதுவும் நம்மிடத்தில் கிடையாது. அதுபோன்ற ஒரு கருத்தைக் கொண்டிருந்த போடெல்லோவும் (Botelho) பெருச்சியும் (Peruschi) அக் காலத்திய ஆசிரியர்களல்லர்; இரண்டாம் ரக ஆசிரியர்களும்கூட அல்லர்; அவர்களுடைய முடிவுகள் ஜெஸுட் (Jesuit) குறிப்புகளின் அடிப்படையில் அமைந்திருந்தன. அக்பர் 1586-ல் அப்துல்லா கான் உஸ்பெக்குக்கு எழுதிய கடிதத்தில் தாம் (அக்பர்) ஒரு முஸ்லிம் என்று தம்மை அழைத்துக்கொண்டதை உண்மையெனக் கொள்ள வேண்டியதில்லை. அது ஒரு தூதரகக் கடிதமேயன்றி உண்மையான கூற்றன்று. அவர் பிறந்து, முந்திய பயிற்சியுற்ற இஸ்லாமிய நாகரிகக் கூறுகளை அறவே களைந்தெறிய முடியவில்லை. அவற்றில் பெரும்பான்மையானவைகளை அவர் இறுதிவரை பெற்றிருந்தார்.

தீன் இலாஹி (Din-i-Ilahi—தெய்வீக வழிபாடு)

மரபு, சான்று, வலிமை ஆகியவற்றில் அதிருப்திகொண்ட அக்பர், மெய்யறிவே சமயத்தின் அடிப்படையாகும் என்று வற்புறுத்தி, பேரரசில் இருந்த ஒவ்வொரு மதத்திற்கும் முழுச் சமய உரிமையை அளித்தார். குறுகிய மனப்பான்மை கொண்ட சமய வெறியாளர்கள், ஒருவர் மற்றொருவர்மீது அவதூறு பெய்வதைக் கண்டு அவர் மனம் வருந்தினார். அவருடைய பேரரசிலிருந்து சமய அமைதியற்ற நிலையை ஒழிப்பதற்காக அவர் பேரவாக் கொண்டு, அவருக்குத் தெரிந்திருந்த எல்லா மதங்களையும் ஒன்றாக இணைக்க முயன்றார். அதுபோன்ற கூட்டிணைப்பிற்கு அவர் 'தௌஹிதி இலாஹி' (Tawhid-i-Ilahi) அல்லது 'தெய்வீக ஒரு கடவுட் கோட்பாடு' (Divine Monotheism) எனப் பெயர் வழங்கினார். அது நாட்டிலுள்ள பல்வகை இனங்களை ஒன்றுபடுத்தும் சமூக-சமயக் குழு அல்லது சகோதரத்துவமாகும். அது எல்லாருடனும் பொறுமையுடன் இருத்தல் என்ற தத்துவத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது; பேரரசரால் கண்டறியப்பட்ட எல்லா மதங்களிலும் காணக்கூடிய நல்ல கருத்துகளை அது பெற்றிருந்தது. அது தெய்வீக ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்தது; சில முக்கிய இந்து, சமண, பாரசீக தத்துவங்கள் அதில் தலையார்ந்த இடத்தைப் பெற்றிருந்தன.

பதௌனி, ஜெஸுட் எழுத்தாளரான பார்டோலி (Bartoli) ஆகியவர்களின் கூற்றின்படி, அக்பர் காபூல் படையெடுப்பிலிருந்து திரும்பியதற்குப் பிறகு, 1582-ல் அவரது அரசவையினரையும் அதிகாரிகளையும் கூட்டி, தீன் இலாஹியை ஒழுங்குறப் பிரகடனஞ் செய்தார்; பல்வேறு சமயங்களுக்கிடையில் இருந்த பிணக்கைப் பற்றி அவர் குறிப்பிட்டு, அவர்களையெல்லாம், 'எல்லாம் ஒன்றும்,

ஒன்று எல்லாமுமாக ஆவதற்கு யாவற்றையும் ஒன்றுக இணைக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டினுர்; இதனுல் ஒரு சமயத்திலிருக்கும் நல்லதையெல்லாம் இழக்காது மற்றவைகளில் இருக்கும் மேலும் சிறப்பானதை ஏற்றுக்கொள்ளமுடியும் என்று அவர் வற்புறுத்திஞர். ராஜா பக்வான்தாஸைத் தவிர மற்ற யாவரும் இதற்கு இணங்கினர். அரசவையில் சிலர் அக் குழுவின் உறுப்பினர்களாஞர்கள்.' ஒருவர் உறுப்பினர் ஆக விரும்பினுல், அபுல்ஃபாஸல் அவரை அறிமுகப்படுத்துவார். அபுல் ஃபாஸல் அவ் வமைப்பின் குரு ஆவார். பிறகு அம் மனிதர் கையில் தலைப்பாகை யுடன், பேரரசரின் காலில் விழுவார். பேரரசர் அவரைப் பிடித்து நிறுத்தி, தலைப்பாகையை மீண்டும் அம் மனிதரின் தலையில் வைத்து, தம்முடைய உருவப்படத்தை (Shast) அவருக்குக் கொடுப்பார். அதில் இறைவனின் பெயரும், அல்லாஹு அக்பர் (Allahu Akbar) என்னும் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கும். அக் குழு தனிப்பட்ட வணக்க முறைகளை மேற்கொண்டிருந்தது; அவையாவன: அல்லாஹு அக்பர், ஜல்லெ ஜலாலிஹு (Jell-e-Jalal-e-Hu). உறுப் பினர்கள், இறந்துவிட்டவர் ஒருவரின் நினைவாக விருந்தளிக்காமல் அவர்களுடைய வாழ்நாளிலேயே விருந்து கொடுக்கவேண்டும். அவர்களுடைய பிறந்த நாட்களில் அவர்கள் விருந்தளிக்க வேண்டும்; அவர்கள் தருமம் செய்யவேண்டும். கூடியவரை இறைச்சி சாப்பிடக்கூடாது; இறைச்சிக் கடைக்காரர், மீனவர், பறவைகளைப் பிடிப்போர் ஆகியவர்களின் பாத்திரங்களை அவர்கள் பயன்படுத்தக்கூடாது. அவர்கள் வயது முதிர்ந்த பெண்களையும் இளம் பெண்களையும் மணம் புரியக்கூடாது. சொத்து, உயிர், கண்ணியம், சமயம் ஆகியவற்றையெல்லாம் பேரரசருக்குத் தியாகம் செய்யவேண்டுமென எதிர்பார்க்கப் பட்டது. இவை நான்கு தரப்பட்ட பற்றுறுதிகளாகும். இந் நான் கில் ஒன்றைத் தியாகம் செய்தவர் ஒரு தரத்தைப் பெற்றுர். இரண்டைத் தியாகம் செய்தவர்கள் இரண்டு பற்றுதல் தரத்தைப் பெற்றனர்; அதுபோலவே மற்றத் தரங்களும் பற்றுதலைப் பொறுத்து உயர்த்தப்பட்டன.

அக் குழு சில ஆயிரம் உறுப்பினர்களைப் பெற்றிருந்தது. ஆனுலும், பேரரசின் பிரமுகர்கள் அதில் உறுப்பினர்களாகவில்லை. பீர்பால் அதில் சேர்ந்துகொண்ட ஒரே ஓர் இந்துப் பிரமுகராவார். ஜஹாங்கீர், அக்பரின் முறையை அனுசரித்துச் சீடர்களைச் சேர்ப் பினும், அக்பருடைய இறப்புடன் தீன் இலாஹியும் மடிந்தது. ஸ்மித்தும் உல்ஸ்லி ஹெய்க்கும் அக்பர் தாமே ஒரு மதத்தைப் பிறப்பித்ததற்காக அவரைக் கண்டித்திருக்கின்றனர். முன் குறிப் பிட்ட வரலாற்றறிஞர், 'தெய்வீக மார்க்கம் அக்பரின் முட்டாள்

தனத்துக்கு—அவருடைய அறிவுடைமைக்கு அன்று—ஒரு மிகச் சிறந்த நினைவுச் சின்னமாகும்' என்ற அளவுக்கு அவரைக் கண்டிக்கிறார். அவ்விதமாக அவரைக் கண்டிப்பது நியாயமற்றதாகும். இந்து மதத்தையும் இஸ்லாமையும் இணைப்பதும், பேரரசில் நாகரிக, அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்துவதும் அக்பரின் உயர்ந்த அரசியல் நோக்கமாகும். இப் புதுமைச் செயலானது அவருடைய பரந்த பொறைக்கொள்கையின் விளைவாகும்; தவிர, அவருடைய தேசிய இலட்சியத்திற்கு ஒரு சிறப்புமிக்க சான்றுமாகும்.

வெறியாளரான பதௌனியும் ஆர்வமிக்க போர்ச்சுகீசிய மதப் பிரசாரகர்களும் அக்பரைக் கிறிஸ்துவ மதத்திற்கு மாற்றம் செய்ய நம்பித் தோல்வியுற்றதனால், அவர்கள் ஒரு பொறுமைமிக்க அரசனின்மீது குறை கண்டு, அவர்மீது முற்றிலுமாக அருவறுப்புக் கொண்டிருந்தது தவிர்க்கமுடியாததாயிற்று. அக்பர் தமது தீன் இலாஹியைப் பின்பற்றுவோரைச் சேகரிக்கக் கட்டாயப்படுத்தும் முறையையோ, வஞ்சகமான முறையையோ கையாளவில்லை. சமய வெறிபிடித்த பதௌனி, ஏமாற்றமுற்ற ஜெஸுட் பிரசாரகர்கள் ஆகியோரின் சான்றின் அடிப்படையில்மட்டும் அக்பர் இஸ்லாமைத் துன்புறுத்தினர் என்று கொள்ளுவதும் நியாயமன்று. உண்மையில் அக்பர் தமது குடிமக்களின் சமயத்துக்கும் இம்மைக்குமுரிய தலைவர் என்று தம்மைப்பற்றித் தாமே கருதிக்கொண்டார். அரசப்பதவியைப்பற்றி அவருடைய கருத்தாவது—அது ஒரு குடிமுதல்வராட்சி என்பதாகும். குடிமக்களின் தந்தை என்று அவர் தம்மைத் தாமே கருதிக்கொண்டார். ஆகையால், இந்திய மக்களின் சமய, இம்மைக்குரிய தலைவர் என்ற நிலையை அவர் இயல்பாகவே தமக்குத் தாமே ஏற்படுத்திக்கொண்டார்.

அக்பரும் கிறித்துவ சமயமும்

பல்வேறு சமயங்களின் ஒப்பீட்டு ஆராய்வில் ஆர்வமிக்க மாணவரான அக்பர், கிறித்துவ சமயத்தைப்பற்றி ஆழ்ந்து அறிந்துகொள்வதற்காக கோவாவிலிருந்த (Goa) போர்ச்சுகீசியப் பிரசாரகர்களுக்குச் சொல்லியனுப்பினர். அவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு மூன்று கிறித்துவக் குழுக்கள் பல்வேறு நாட்களில் அவருடைய அரசவைக்கு விஜயம் செய்தனர்; அவர்கள் நீண்டகாலம் வரை அவ்ருடனேயே தங்கியிருந்து, தங்களது மதத்தின் தத்துவங்களைப்பற்றியும் வழக்கங்களைப்பற்றியும் பேரரசருக்கு எடுத்துக் கூறினர். ரிடால்ஃபோ அகுவாவிவா (Ridolfo Aquaviva), அந்தோனியோ மான்ஸர்ரெட் (Antonio Monserrate), என்ரிகுயெஸ் (Enriquez) (மத மாற்றம் செய்யப்பெற்ற பாரசீகர்) ஆகியவர்கள்

அடங்கிய முதல் சமயத் தூதுக்குழு 1580, பிப்ரவரி 19ஆம் நாள் ஃபதேபூரை அடைந்து, ஏப்ரல் 1582 வரை அக்பருடன் தங்கி யிருந்தது. இரண்டாம் சமயத் தூதுக்குழுவில் எட்வர்ட் லெய்டன் (Edward Leioton), கிறிஸ்டபர் ட வாகா (Christopher de Vaga) ஆகியோர் அடங்கி யிருந்தனர். அக் குழு அரசவையில் 1591ஆம் ஆண்டிலிருந்து 1592ஆம் ஆண்டுவரை தங்கிற்று. ஜெரோம் ஸேவியர் (Jerome Xavier), இம்மானுவேல் பின்ஹெரோ (Emmanuel Pinheiro), பெனிடிக்ட் ட கோஸ் (Benedict de Goes) ஆகியவர்களைக் கொண்டிருந்த மூன்றும் சமயத் தூதுக்குழு லாகூரில் அக்பர் தமது அரசவையை நடத்துவதற்காகத் தங்கி யிருந்தபொழுது 1595, மே மாதத்தில் அடைந்தது. அதன் தலைவர், அக்பர் 1605–ல் இறக்கும்வரை அரசவையிலே தங்கி யிருந்தார். கூடியமட்டும் கிறித்துவ மதத்தைப்பற்றிக் குறைவற்ற அறிவைப் பெறுவதற்காகப் பேரரசர் அவாக்கொண்டிருந்ததனுல், அவர் ஓர் உகந்த மாணவரைப்போல் நடந்துகொண்டதுமன்றி இயேசு, மரியம், கிறித்துவின் சீடர்கள் ஆகியோரின் உருவச் சிலைகளையும் வணங்கினுர்; அவர் அடிக்கடி கோயிலுக்கும் வந்தார்; போர்ச்சுகீசியத் தந்தையர் (Portuguese Fathers) நடத்திய மற்றச் சடங்குகளிலும் அவர் கலந்துகொண்டார். ஆக்ரா விலும் லாகூரிலும் கோயில்களைக் கட்டுவதற்கும், அவர்களது வழிபாடுகளை வெளிப்படையாகச் செய்வதற்கும், அவர்க ளுடைய விழாக்களை நடத்துவதற்கும், இந்துக்களையும் முஸ்லிம் களையும் கிறித்தவர்களாக ஆக்கவும்கூட அவர்களை அவர் அனுமதித் தார். சமயப் பிரசாரகர்களை முதல் தர அரசாங்க விருந்தினர்களாக நடத்தி எல்லா வகையான அனுகூலங்களையும் வசதிகளையும் அவர் களுக்கு அளித்ததுமன்றி, அவர்களுடைய செலவையும் அக்பரே மேற்கொண்டார். அவருடைய மகன்மார் போர்ச்சுகீசிய மொழி யையும் கிறித்துவ சமயத்தையும்பற்றிப் பிரசாரகர்களிடமிருந்து அறிந்துகொள்ளவும் அவர் அனுமதித்தார். அவருடைய நடத்தை யும் கவனமும் அவர் வெகு விரைவில் ஒரு கிறித்துவராய்விடுவார் என்று பிரசாரகர்கள் நம்பும்படி அமைந்திருந்தன. அக்பர் இஸ் லாமை நாட்டிலிருந்து போக்கிவிட்டார்; மசூதிகளைக் குதிரைத் தொழுவங்களாக்கிவிட்டார்; மக்கள் முகமது, அகமது என்ற பெயர்களை வைத்துக்கொள்ளக்கூடாதெனத் தடையிட்டுள்ளார் என்றெல்லாம் அவர்கள் கோவாவிலும் லிஸ்பனிலும் (Lisbon) இருந்த தங்களது மேலதிகாரிகளுக்குத் தாம் கொண்ட வெற்றியைப் பற்றி மிகைப்படுத்தியனவும் தவருனவையுமான செய்திகளை அனுப்பி வைத்தனர். இருந்தபோதிலும், பேரரசர் எவ்வளவிற்கு இந்து சமயம், சமண மதம், ஸொராஸ்டிர மதம் ஆகியவற்றைத் தழுவ விரும்பினுரோ அவ்வளவிற்கே கிறித்துவ மதத்தையும் தழுவ விரும்

பினுர் என்பதை அவர்கள் வெகுவிரைவில் புரிந்துகொண்டனர். அந் நிலைக்குக் காரணங்கள் அவரது செருக்கு, நபிநிலைக்கு அவர் உரிமை கொண்டாடியது, தமது எண்ணற்ற மனைவிகளைக் கைவிட்டுக் கிறித்துவ சமயம் வற்புறுத்தியபடி ஒரே ஒரு மனைவியுடன் வாழ்வதற்குத் திறமையற்றிருந்த அவருடைய நிலை ஆகியவைகளாம் என்று ஏமாற்றமுற்ற பிரசாரகர்கள் தவருகக் கருதினர். வெறிகொண்ட போர்ச்சுகீசியர்களின் மூடத்தனமான வீண்பேச்சை உண்மையென்று தற்கால ஐரோப்பிய ஆசிரியர்கள் பலர் நம்புகின்றனர். அக்பர் ஆராய்ந்த மற்றச் சமயங்களைவிட கிறித்துவ மதத்தைப்பற்றி அவர் சிறந்த கருத்தைக் கொண்டிருந்தார் என்றும், அவருடைய அரசியல் இடையூறுகள் அம் மதத்தை அவர் தழுவா வண்ணம் தடுத்தன என்றும் ஸ்மித், உல்ஸ்லி ஹெய்க் என்பவர்கள் காரணமின்றிக் கூறுகின்றனர். இருந்தாலும் உண்மை என்னவெனில், ஒரு பகுத்தறிவுவாதியான அவர் திருவெளிப்பாடு, சான்று வலிமை ஆகியவற்றின் அடிப்படையில்மட்டும் அமைந்துள்ள ஒரு சமயத்தில் நம்பிக்கை கொள்ள முடியவில்லை.

அக்பரும் சமண மதமும்

கிறித்துவ சமயத்தையும்விட சமண சமயம் அக்பரின் சிந்தனை மீதும் நடத்தைமீதும் ஆழ்ந்த செல்வாக்கினைப் பெற்றிருந்தது. வெகு முந்தியே சமண அறிஞர்களுடன் அவர் தொடர்புகொண்டிருந்தார்போலும்! இதற்குக் காரணம், ஒருவேளை அப்பொழுது சமண மதத்தின் இருப்பிடமாக இருந்த இராசபுதனத்தில் ஆளுங் குடும்பங்களுடன் அவர் கூட்டுறவு ஏற்படுத்தியிருந்ததாகும். அவர் 1568-ல் போட்டியிடும் இரு குழுக்களைச் சார்ந்த இரண்டு அறிஞர்கள் சமய விவாதங்களை நடத்த ஏற்பாடு செய்தார். அவர் 1582-ல் அப்பொழுது உயிருடன் இருந்த மிகப்பெரிய சமண மதத் தலைவர்களுள் ஒருவரான தபகச்சாவைச் (Tapa-Gachha) சார்ந்த ஹீரவிஜய சூரி (Hiravijaya Suri) என்பவரை அவருடைய மதத்தின் தத்துவங்களைத் தமக்கு விளக்குவதற்காக குஜராத்திலிருந்து வரவழைத்தார். அவர் தக்க மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார்; அவரது ஆழ்ந்த அறிவாற்றலும் துறவுக் குணமும் அக்பரின் மனத்தில் ஆழ்ந்து பதிந்ததனுல், பேரரசர் செயல்முறையில் இறைச்சி உண்பதைக் கைவிட்டு, பல கைதிகளை விடுதலை செய்து, ஓர் ஆண்டில் பல நாட்களில் விலங்குகளையும் பறவைகளையும் உணவுக்காகக் கொல்லுவதைத் தடுத்தார். ஹீரவிஜய சூரி அரசவையில் இரண்டு ஆண்டு தங்கியிருந்தார். ஜகத்குரு (Jagath Guru) என்று அவருக்குப் பட்டப் பெயர் அளிக்கப்பட்டது. அக்பருடைய அரசவையில் இருந்த இரு உலகங்களின் மர்மங்களை

யும் உணர்ந்தவர்கள் என்று கருதப்பட்ட இருபத்தோர் உயர் தரக் கற்றறிஞர்களில் ஒருவர் என்று அபுல்ஃபாஸல் அவரைக் கருதினார். பிறகு மற்றப் பல சமண அறிஞர்கள் பேரரசரைச் சந்திக்க விஜயம் செய்தனர். அவர்களில் மிக முக்கியமானவர்கள்—சாந்தி சந்திரா (Santhi Chandra), விஜய சேனு சூரி (Vijaya Sena Suri), பானுசந்திர உபாத்தியாயா (Bhanu Chandra Upadhyaya), ஷர்ஷாசர் (Sharsa-Sar), ஜெயசோம உபாத்தியாயா (Jayasoma Upadh-yaya) ஆகியவர்களாவர். இதில் குறிப்பிடத்தக்க சமண ஆசிரியர்கள் சிலர் அரசவையில் நீடித்து வாழ்ந்துவந்தனர். கர்தார் கச்சா பள்ளியைச் சார்ந்த ஜின் சந்திர சூரி (Jin Chandra Suri of Khar-tar Gachha School) என்பவரின் பண்புகளையும் புனிதருக்குரிய உயர்நிலையையும்பற்றி அக்பர் கேள்விப்பட்டு, அவரை 1591-ல் தமது அரசவைக்கு அழைத்தார். மற்ற சமணத் துறவிகளைப்போல அவரும் காம்பேயிலிருந்து நடந்துவந்து 1591-ல் லாகூர் அடைந்தார். பேரரசர் மிக்க மரியாதையுடன் வரவேற்றார். ஹீரவிஜய சூரியைப் போலவே இவரும் விலைமதிப்பான பரிசுகளை ஏற்க மறுத்துவிட்டார். சமண மதத்தின் தத்துவங்களை அக்பருக்கு மிகத் தெளிவாக விளக்கியதனால், பேரரசர் மிகவும் மகிழ்ச்சியுற்று அவருக்கு யூகபிரதான் (Yuga Pradhan) என்ற பட்டப் பெயரை அளித்தார். ஜின் சந்திர சூரி லாகூரில் மழைக்காலத்தில் நான்கு மாதங்களைக் கழித்தார். 1592-ல் அக்பரைப் பின்தொடர்ந்து காஷ்மீரத்துக்குச் சென்றார். அவர் 1593-ல் லாகூரை விடுத்தார். அக்பரின் மீது அவர் கொண்டிருந்த செல்வாக்கு ஹீரவிஜயர் கொண்டிருந்த செல்வாக்கைப்போலவே ஆழ்ந்ததும் நீடித்ததுமாக இருந்தது.

சமண முனிவர்களின் (Munis) போதனைகள் அக்பரின் வாழ்க்கையில் ஒரு சிறப்பு மிக்க மாறுதலை விளைவித்தது. அவரது இளம் பிராயத்தில் மிக அதிகமாக விரும்பிய வேட்டையாடுதலை அவர் கைவிட்டார்; பெரும்பாலும் இறைச்சி உணவு அருந்துவதையும் விட்டுவிட்டார். உணவுக்காக விலங்குகளையும் பறவைகளையும் கொல்லுவதை அவர் தடைசெய்தார். அவ்விதம் கொல்லுதலை வருடத்தில் பாதிநாட்களில் அவர் முற்றிலுமே ரத்து செய்திருந்தார். கொல்லுதல் தடைசெய்யப்பட்ட நாட்களில் விலங்கினங்களைக் கொல்லுதலுக்கு அவர் மரண தண்டனையும் விதித்தார். பேரரசு ஆணைகளுக்குச் சரிவரக் கீழ்ப்படியுமாறு எல்லா கவர்னர்களுக்கும் தல அதிகாரிகளுக்கும் உத்தரவுகள் (Farmans) பிறப்பிக்கப்பட்டன.

அக்பரும் ஸொராஸ்டிரிய சமயமும்

சமண மதத்தைவிட ஸொராஸ்டிரிய சமயம் அக்பரை அதிகமாக ஊக்குவித்தது. அக் காலத்திய மிகப் புகழ்வாய்ந்த ஸொராஸ்

டிரிய குருமாரரான நவ்சாரியைச் சார்ந்த தஸ்தூர் மாயார்ஜி ராணு (Dastur Mahyarji Rana of Navsari) என்பவரை அக்பர் 1573ஆம் ஆண்டிலேயே சூரத்தில் சந்தித்தார். 1578–ல் அவரை அக்பர் தமது அரசவைக்கு அழைத்து, அவரிடமிருந்து பாரசீக சமயத்தின் தத்துவங்கள், பழக்கவழக்கங்கள் அனைத்தையும் அவர் கற்றுக் கொண்டார். தஸ்தூர்ஜியின் ஜீவனத்துக்காக 200 பைகா (bigha) நிலம் உதவித் தொகையாக அளிக்கப்பட்டது; அதைத்தன்னுடைய மகனுக்கு மரபுரிமையாக அளிப்பதற்கும் அவருக்கு உரிமையளிக்கப் பட்டது. அரசவையில் ஓர் ஆண்டுக்கு மேற்பட்டுத் தங்கியிருந்த தற்குப் பிறகு அவர் சூரத்துக்குத் திரும்பினர் (1579). பாரசீக சமயத்தின் பல வழக்கங்களை அக்பர் மேற்கொண்டார். பாரசீகச் சடங்குகளின்படி புனிதத் தீ ஒன்று மூட்டப்பட்டு, அரசவையில் அபுல் ஃபாஸலின் பொறுப்பில் எப்பொழுதும் கொழுந்துவிட்டுக் கொண்டிருந்தது. பேரரசர் சூரியன், ஒளி, தீ ஆகியவற்றை வணங்கினர். மாலையில் விளக்குகள் ஏற்றப்பட்டபொழுது, அரசவையில் இருந்த யாவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். சூரியனுக்குமுன் விழுந்து பேரரசர் அதை வணங்கினர். அவர் பாரசீக விழாக்களைக் கொண்டாடினர்; பழமை வாய்ந்த பாரசீக காலப் பஞ்சாங்கத்தையும் அவர் பின்பற்றினர்.

அக்பரும் இந்து சமயமும்

அக்பர் மிகத் தீவிரமாக ஆராய்ந்த மற்ற எந்த மதத்தையும் விட இந்து சமயம் அவரைப் பாதித்திருக்கும். ஆரம்பத்திலிருந்தே அக்பர் இந்து அறிஞர்களுடனும் முனிவர்களுடனும் தொடர்பு கொண்டிருந்ததனுலும், இந்துத் தத்துவங்களையும் பழக்கங்களையும் அறிந்திருந்ததனுலும் அவர்களுடைய தூதுக்குழுக்களை அழைக்கத் தேவை ஏற்படவில்லை. ஆனுலும், அம் மதத்தின் தத்துவங்களைப் பற்றியும் கொள்கைகளைப்பற்றியும் சுருதிகளிலும் (Shrutis) ஸ்மிருதிகளிலும் (Smriti) காணப்படுவதன்படி அவர் நேர்முக அறிவைப் பெற விரும்பியதால், அக்பர் இந்து அறிஞர்களுடன் தொடர்புகொண்டிருந்தார். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் புருஷோத்தமும் (Purushottam) தேவியுமாவர் (Devi). இந்துமதத்தின் மர்மங்களைப் பேரரசருக்கு விளக்குவதற்காக அவர்கள் இரவில் அரண்மனையின் அந்தரங்கப் பகுதிகளின் முகமாடிக்கு அழைத்து வரப்பெற்றனர். மறுபிறப்பு, கர்மா தத்துவம் போன்ற இந்துக் கொள்கைகளையும் பழக்கங்களையும் பேரரசர் பின்பற்றினர். இந்துவகை வாழ்க்கையை அவர் பின்பற்றியதோடு, ரக்ஷா பந்தன் (Raksha Bandan), தசரா (Dasara), தீபாவளி (Diwali), பசந்த் (Basant) போன்ற இந்து விழாக்களையும் அவர் கொண்டாடினர்.

சில வேளைகளில் அவர் இந்துக்களின் அறிகுறியான திலகத்தினையும் நெற்றியில் இட்டுக்கொண்டார். இந்துப் பழக்கங்களையொத்து அவர் தமது குடிமக்களுக்கு முகமாடி தரிசனையும் (Jharokha Darshan) அளித்ததோடு, பலவிதங்களிலும் இந்து அரசரைப்போலவே நடந்துகொண்டார். அவருடைய தாயாரின் இறப்பின்பொழுது அவர் மொட்டையடித்துக்கொண்டு இந்து முறைப்படியே துயர் கொண்டாடினுர். இந்துப் பண்டிதர்களும் இளவரசர்களும் பரந்த நோக்கங்கொண்டு அவரை இந்து சமயத்தில் ஏற்றுக் கொண்டு இந்து மதத்திலிருந்த உருவ வழிபாட்டையும் சாதி முறையையும் விலக்கி இருந்திருப்பார்களாயின், அக்பர் ஒருவேளை இந்து மதத்தைத் தழுவி யிருக்கக்கூடும். பதினாரும் நூற்ருண்டின் பிற்பகுதியில் நம்முடைய முன்னேர்கள் அக்பரையும்கூட இந்து சமயத்தில் ஏற்றுக்கொள்ள மறுத்தது வருந்தத்தக்கதாகும். இவ்விதமான தவருன கருத்து இருந்த போதிலும் இந்து பாமர மக்களும் அறிஞர்களும், சிற்றரசர்களும் கூடப் பேரரசரைத் தம்மில் ஒருவர் என்றே கருதினர்; பேரரசர் இந்து சமயத்தின்புறம் சாய்ந்திருக்கிருர் என்பதைக் காட்டுவதற் காக ஒரு கதையை அவர்கள் கற்பனை செய்தனர். இக் கதை மூர்தஸா ஹுசைன் பில்கிராமி (Murtaza Husain Bilgrami) எழுதிய 'ஹதியாக்-துல்-அகாலிம்' (Hadiaq-tull-Aqalim) என்ற நூலில் குறிக்கப்பட்டுள்ளது; அதைப்பற்றி இந்நூலாசிரியரும் அவருடைய தந்தையிடமிருந்து விவரமாகக் கேட்டிருக்கிருர். அக்பர் அவ ருடைய முந்திய ஜன்மத்தில் ஒரு இந்துத் துறவியாக இருந்தவர். அவருக்கு முகந்த் பிரமச்சாரி (Mukand Brahmachari) என்று பெயர் வழங்கி வந்தது. அவர் மீண்டும் ஆற்றல்மிக்க க்ஷத்திரிய அரசராகப் பிறந்து இந்தியாவிலிருந்து இஸ்லாமை ஒழிப்பதற்காக பிரயாகில் (Paryag) ஒரு தபஸ் (Tapas) மேற்கொண்டார். ஆனல், நல்வசமாக அந்தத் தபஸில் தவறு ஏற்பட்டதனுல் அவர் முஸ்லி மாகப் பிறந்துவிட்டார். இருந்தபோதிலும், பேறுகாலத்திற்கு முந்திய பெருஞ் செல்வத்தை மரபுரிமையாக அக்பர் பெற்றதனுல் அவர் இந்து அரசனுகவேண்டும் என்ற அவாக் கொண்டு இந்து அரசனைப் போலவே நடந்துகொண்டு இந்து சமயத்திற்கும் நாகரிகத்திற்கும் பணியாற்றினுர். காலையில் பேரரசரின் முகத்தைத் தரிசனம் காணுமல் பல இந்துக்கள் காலையுண்டியை அருந்துவ தில்லை. முகப் புகழ்ச்சி செய்யும் சில பண்டிதர்கள் மேலும் சென்று அக்பர் உலகத்திற்கே அரசர் என்றும் சமயத்தின் மூலத் தொடக்கம் என்றும் நிலைநாட்ட முயன்றனர். இந்துக் கருத்துகளை அக்பர் செமிக்கவைத்தும் இந்துவாக வாழ்க்கையைப் பின்பற்றியும் அப் புகழுக்கு அன்பளிப்பு செய்தார்.

அக்பர் ஒரு சமய வஞ்சனையாளர் அல்லர்

சமயத்துறையில் அக்பர் விளங்காப் போக்கினராயிருப்பினும் பல்வகைப்பட்ட சமயங்களைப் பின்பற்றுவோரும் ஏமாற்றமுற்ற சமயத் தூதுக்குழுவினரும் காட்டுவதுபோல அக்பர் ஒரு வஞ்சனை யாளர் அல்லர். அவர் உண்மையில் மனமார்ந்த உண்மையை நாடுபவராவார். அக்பர் தமது காலை வேளைகளை ஃபதேபூர் சிக்ரியில் இறைவனின் தியானத்தில் கழித்தார் என்றும், அவர் 1578ஆம் ஆண்டுவரை மனமார்ந்த முஸல்மானாகை இருந்தார் என்றும் பதௌனி கூறுவதை ஏற்கெனவே மேற்கோளாகக் குறிப் பிட்டுள்ளோம். பேரரசரின் பரந்த இதயம் குறுகிய மதங்கள் ஒன்றுக்கெதிராக மற்றொன்று வெறுப்பூட்டுவதைக் கண்டு துயருற்றது என்று அபுல்ஃபாஸல் குறிப்பிடுகிறார். 'சமயங்களுக்கும் உலகப் போக்குகளுக்கும் பொதுவாகச் சேருமிடம் எதுவும் கிடையாதா' என்று அவர் கேட்பார் (Ain-பகுதி I, பக்கம் 162). அக்பர் முஸ்லிமாக இருப்பதிலிருந்து தவிர்த்துக்கொண்டதற்குப் பிறகு, ஒரு நாளுக்கு நான்கு முறையாக.அல்லது சூரியோதயம், நண்பகல், சூரிய அஸ்தமிப்பு, நள்ளிரவு ஆகிய நான்கு வேளைகளி லும் தனிப்பட்ட தொழுகைகளைச் செய்து வந்தார். இத் தொழுகை களில் அவர் ஏராளமான காலத்தைக் கழித்தார். இத் தொழுகை களில், அவருடைய பிந்திய நாட்களில் பெரும்பாலும் சூரியன், தீ, ஒளி ஆகியவற்றை வணங்குவதே அடங்கியிருந்தது. தம் முடைய தந்தை ஒரு விநாடியும்கூட இறைவனை மறந்திருக்கவில்லை யென்று ஜஹாங்கீர் அவருடைய சுய சரிதையில் குறிப்பிட்டுள் ளார் (துஸுக்கி ஜஹாங்கீர்-Tuzuk-i-Jahangiri-பகுதி I, பக்கம் 27). ஒழுங்குற அமைந்த இச் சமயப் பயிற்சிகளையும் தவிர, அக்பரின் வாழ்க்கையே இறைவனுக்கும் மனிதனுக்குமிடையிலிருக்கும் தொடர்புகளை நாடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது; அவருடைய 'நற்செய்திகள்' அவர் கடவுள் நம்பிக்கை பெற்றவராவர் என்பதற்கும், அவருடைய உண்மைப் பற்றுதலுக்கும் சான்று கூறுகின்றன. 'இயற்கையில் பாழ்வெறுமையைக் காணமுடியாது என்பதைப்பற்றி விவாதிக்கவேண்டியதில்லை. இறைவன் பரம் பொருளாவான். படைத்தவனுக்கும் படைக்கப்பட்டவனுக்கும் இடையில் ஒரு பிணைப்பு உள்ளது. அதை மொழியின் மூலமாக வெளிப்படுத்த இயலாது' என அக்பர் குறிப்பிடுகின்றார்.

'தோற்றமன்றி இருக்கும் ஒரு பொருளைத் தூக்கத்திலோ விழித்துக்கொண்டிருக்கும்பொழுதோ காணுதல் இயலாது. ஆனால், அதைக் கற்பனையின் வாயிலாகக் கருத்தில் கொள்ளக்கூடும். உண்மையில் கடவுளின் காட்சியைக் காண்பதற்கு அவரைப்

புரிந்துகொள்ளுதல் என்ற பொருளாகும்' (Ain, பகுதி III பக்கம் 380). அதுபோன்ற மேற்கோள்கள் பலவற்றைக் கொடுக்கலாம்; ஆனாலும் அக்பர் சமயப்பற்றுடையவர் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு மேல் குறிப்பிட்ட மேற்கோள் போதுமானதாகும். பழங்காலத்திய மாபெரு இந்து அரசரும் ராஜ ரிஷி (Raj Rishi) என்ற பட்டத்தைச் சம்பாதித்துக்கொண்டவருமான ஜனகரைப் போல் (Janak) ஒருவர் உண்மையில் சமயப்பற்றுடையவராக இருக்கலாம்; அதே சமயத்தில் அவருடைய உலகப் பொறுப்புகளையும் அவர் வெற்றிகரமாக நிறைவேற்றலாம் என்ற உண்மையை அக்பர் கடைப்பிடித்தார். உலக விவகாரங்களில் மூழ்கி இருக்கும் பொழுதும் ஒருவன் இறைவன் நினைவாகவே இருக்கவேண்டுமென்று அவர் வழக்கமாகக் குறிப்பிடுவார். அதுபோன்ற மனப் போக்கு விரும்பத்தக்கதுமன்றிச் செய்யத் தக்கதுமாகும். தமது கருத்தை விளக்குவதற்காக அவர் இந்தியப் பெண்களின் மேற்கோளைக் கொடுக்கிறார். இப் பெண்கள் கூட்டம் கூட்டமாக ஆறுகளுக்கும் குளங்களுக்கும் நீர் கொண்டுவரச் செல்வர். அப்பொழுது அவர்கள் தமது தலைகளில் ஒன்று, இரண்டு அல்லது மூன்று பானைகளை அடுக்கிவைத்துக்கொண்டு, நகையாடிக் கொண்டும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டும் வருவார்கள். ஆனாலும் ஒரு துளி தண்ணீருங்கூட கீழே விழுவதில்லை.

இளவரசர் சலீமின் கிளர்ச்சி, 1599—1604

அக்பரின் இறுதி நாட்கள், அவருடைய மூத்த மகனும் ஒரு காலத்தில் செல்லப்பிள்ளை ஷேய்கோ பாபா (Shaikho Baba) என்றும், இளவரசர் சலீம் என்றும் விளங்கியவரின் தகாத நடத்தையினாலும் கிளர்ச்சியினாலும் மிக்க கவலைக்குள்ளாகின. அவ்விளவரசர் அவருடைய தந்தைக்குப் பிறகு பேரரசர் ஜஹாங்கீராகப் பதவியேற்றார். அவர் பல்வேறு தொழுகைகளின் விளைவாகப் பிறந்த குழந்தை, ஆம்பரைச் சார்ந்த பார்மல்லின் மகளான கச்வாக இளவரசிக்கு ஃபதேபூர் சிக்ரியிலிருந்த ஷேக் சலீம் ஷிஷ்தியின் ஆசிரமத்தில் 1569, ஆகஸ்ட் 30ஆம் நாள் அன்று அவர் பிறந்தார். மகிழ்ச்சியுற்ற அக்பர் அக் குழந்தை பிறக்கும் தறுவாயில் தாம் செய்த சூளுரையை நிறைவேற்றுவதற்காக ஆஜ்மீரிலுள்ள ஷேக் மொய்னுத்தீன் ஷிஷ்தியின் (Shaikh-Muin-uddin Chisti) கல்லறைக்கு நடந்து யாத்திரை சென்றார். ஆனாலும், அதே குழந்தை, எல்லா வகை கவனத்துடனும் அன்புடனும் வளர்க்கப்பட்டுவந்தும், பருவமுற்றதும் கிளர்ந்தெழுந்து, மாபெருந் தந்தையின் கையிலிருந்து அரியணையைப் பறிக்க முயன்றது. அக்பரின் விருப்பத்திற்கும் நம்பிக்கைக்கும் மாறாக

சலீம் ஒரு கர்வம் பிடித்த சுக வாழ்க்கையை விரும்பும் இளைஞராஞர். காந்தேஷைச் சார்ந்த மீரான் பகதூருக்கெதிராக அக்பர் படையெடுக்கத் தயாராகிக்கொண்டிருந்த சமயத்தில் சலீம் ஆஜ்மீரின் கவர்னராக நியமிக்கப்பட்டார்; மீவாரைச் சார்ந்த ராணா அமர்சிங்கை அடிபணிய வைக்கும் பொறுப்பும் அவர் அளிக்கப் பெற்ருர். ராணா அவரது வமிசத்தின் வீர மரபுக்கு ஏற்றபடி தமது முன்ஞோரின் இராச்சியத்தைப் பாதுகாக்க சம நிலேயற்ற போர் ஒன்றை மிக்க வீரத்துடன் நடத்திக்கொண்டிருந்தார். மீவாரின் மலேக் குன்றுகளிலும் காடுகளிலும் போரிடுவதை சலீம் வெறுத்து ஒதுக்கி ராணாவைத் தாக்கத் தவறிவிட்டார். அக்பர் கோபமுற்று, அவருடைய மூன்ரும் மகஞன டேனியலிடம் அதிக விருப்பம் காட்ட ஆரம்பித்தார். அவருடைய இரண்டாம் மகஞன முராத் அதிகக் குடிப் பழக்கத்தால் 1599, மே 12ஆம் நாள் இறந்தார். சலீமின் சோம்பலேயும் முட்டாள்தனத்தையும் வெறுத்த அபுல் ஃபாஸல் இளவரசனுக்கு எதிராகத் தமது செல்வாக்கைப் பயன்படுத்திஞன். இக் காரணங்களே முன்னிட்டு, சிம்மாசனத்திற்குக் காத்துச் சலிப்புற்ற சலீம் அதிருப்தியுற்றுக் கிளர்ச்சி நடத்த முடிவு செய்தார். அவர் ஆஜ்மீரில் இறந்த பிரபுவான ஷாபாஸ் கான் கம்புவின் (Shabaz Khan Kambu) ஏராளமான செல்வத்தைக் கைப்பற்றி, அலகாபாத்துக்குச் செல்ல, ஆக்ரா வழியாக விரைந்தார். கிளர்ச்சி செய்வதிலிருந்து அவரைத் தடுத்து, அவருக்கு அறிவுரை கூறுவதற்காக அவருடைய பாட்டியார் அவரைப் பார்க்க ஆக்ராவிலிருந்து வந்திருந்தார். அவளேத் தவிர்த்துக் கொண்டு, சலீம் யமுனேயை அவசரமாகக் கடந்து, அலகாபாத்திற்கு முன்னேறி, பீஹாரிலிருந்து வந்த 30 இலட்ச ரூபாய் தொகையைக் கொண்டிருந்த அரச பொக்கிஷத்தைக் கைப்பற்றிஞர். அலகாபாத், அவுத், பீஹார் மாகாணங்களில் அவர் தமது அதிகாரிகளே நியமித்து, ஒரு சுதந்திர அரசரைப்போலவே நடந்துகொண்டார். அப்பொழுது காந்தேஷில் ஆசிர்கர் முற்றுகையில் ஈடுபட்டிருந்த அக்பர், தமது மகன் கிளர்ச்சி செய்த தகவல் தமக்கு வந்துள்ளது என்று காட்டிக்கொள்ளாமலேயே, சரியாக நடந்துகொள்ளும்படி அவருக்கு எழுதிஞர். சலீம் சரியான பதிலே அனுப்பாது, முன்போலவே நடந்துகொண்டிருந்தார். அடுத்து, பேரரசர் சலீமுடன் படித்தவரான ஷரிஃப் என்பவரை இளவரசர் தீய எண்ணங்களேக் கைவிடும்படி அறிவுரை கூற அலகாபாத்துக்கு அனுப்பிஞர். ஆஞல், இளவரசர் அன்னுரைத் தம் வசமாக்கிக் கொண்டு, அவரைத் தமது அமைச்சராக அமர்த்திக்கொண்டார்.

ஆசிர்கர் வீழ்ச்சியுற்றதற்குப் பிறகு அக்பர் டேனியலே தக்காணத்தின் வைஸ்ராயாக நியமித்தார். காந்தேஷ், பீரார் சுபாக்

களும் தலைநகரம் தௌலதாபாத்துடன் ஆமத் நகரின் ஒரு பகுதியும் தக்காணத்தில் அடங்கி இருந்தன. ஆசிர்கரிலிருந்து ஆக்ராவுக்குத் திரும்பும் வழியில் சலீமுக்கெதிராக நடவடிக்கைகளை எடுக்க அக்பர் தாமே நேரில் சென்றார். ஆனால், சலீமின் கோரிக்கைகள் அளவுமீறி இருந்ததனால், அவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருந்தபோதிலும், அக்பரது மிதமாகக் கண்டிக்கும் கொள்கை தேர்ச்சியுற்றது. ஏனெனில், எடாவாவரை முன்னேறியிருந்தும், கிளர்ச்சி செய்யும் இளவரசர் அலகாபாத்துக்குத் திரும்பினார். ஆனாலும் வங்காளம், ஒரிஸ்ஸா மாகாணங்களின் கவர்னர் பதவியை சலீம் ஏற்க மறுத்துவிட்டார்; அவர் தம் பெயரிலேயே நாணயங்களை அச்சிட்டார் என்று கூறப்படுகிறது. இப்பொழுது அக்பர் தமது மிகச் சிறப்பு வாய்ந்தவரும் திறமைபடைத்தவருமான அபுல் ஃபாஸலை தக்காணத்திலிருந்து திருப்பி அழைத்து, சலீமுக்கெதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி அவரிடம் கலந்து ஆலோசித்தார். ஆனால், அபுல் ஃபாஸல் நார்வாரின் சுற்றுப்புறத்தை அணுகியதும், அவரை இளவரசர் ஓர்ச்சாவைச் சார்ந்த பீர்சிங் தேவர் என்ற புண்டேலாத் தலைவரைக் கொண்டு 1602, ஆகஸ்ட் 19ஆம் நாள் அன்று கொல்லவைத்தார். அக்பர் மிக்க துயரிலும் கோபத்திலும் மூழ்கி, பீர்சிங்கைப் பிடித்துக் கொல்லும்படி உத்தரவிட்டார். ஆனால், பண்டேலாத் தலைவர் தப்பித்துக்கொண்டு, ஜஹாங்கீரின் நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்து வந்தார். இப்பொழுது சலீமா பேகம் கிளர்ச்சி செய்யும் இளவரசனின் சார்பில் குறுக்கிட்டாள்; அவள் அலகாபாத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டாள். சலீமை ஆக்ராவுக்குச் சென்று, தமது தந்தைக்குக் கீழ்ப்படியும்படி வற்புறுத்துவதில் அவள் தேர்ச்சி பெற்றாள். இளவரசர் தமது பாட்டியால் அக்பரிடம் கொண்டுசெல்லப் பட்டார். இளவரசர் தமது தந்தையின் காலடிகளில் தமது நெற்றியை வைத்துக் கண்களில் நீர் பொழிய, தமது குற்றத்தை ஒப்புக் கொண்டு, அரசனிடம் மன்னிப்புக் கோரினார். பேரரசர் வேறு வழியின்றி இளவரசனை மன்னித்து, அவரை எடுத்து நிறுத்திவைத்து, அவரைத் தழுவிக்கொண்டு, அவர் வழங்கிய பரிசுகளையும் பெற்றார். அப் பரிசுகளில் 12,000 பொன் நாணயங்கள், 770 யானைகள் அடங்கியிருந்தன. இது ஃபிப்ரவரி, 1603-ல் நிகழ்ந்தது. அக்டோபரில் சலீம் மீவாருக்கெதிராகப் படையெடுக்கும்படி உத்தரவிடப்பட்டார். அவர் ஃபதேபூர் சிக்ரிவரை முன்னேறி, படையெடுப்புக்காகப் போதிய பீரங்கிப்படையைக் கொண்டு வருவதற்கு அலகாபாத்திற்குத் திரும்பி அனுமதி கேட்டார். இராசபுதனத்தில் படையெடுப்பு நடத்த சலீம் விருப்பங் கொள்ளவில்லை என்பதை அக்பர் உணர்ந்து, அவ் வேண்டுகோளுக்கு இணங்கினார். அலகாபாத்தில் இளவரசர் குடிப்பழக்கத்தில் மூழ்கி, வெறுப்பூட்டும் பல

கொடுமைகளைப் புரிந்தார். 1603-ல் அவருடைய முதல் மனைவியும் மான்சிங்கின் சகோதரியும், குஸ்ராவின் தாயுமானவள் அவரால் கொடுமைப்படுத்தப்பட்டதனால், அளவுமீறி கஞ்சாவை அருந்தியதின் காரணமாக உயிர் நீத்தாள். இந் நிகழ்ச்சி அவருக்கும் மான் சிங்குக்குமிடையில் மனஸ்தாபம் உண்டாக்கியது. அவருடைய துர்நடத்தையைப்பற்றி அக்பரிடம் கூறிய செய்தி - எழுத்தாளர் ஒருவனை சலீம் உயிருடன் தோலுரித்தார். ஒரு வேலைக்காரனை அவர் அடித்துக் கொன்ருர்; அவரது தந்தைக்குரிய மற்றொரு வேலையாளை அவர் விடுதலைசெய்தார். மிக்க கோபாவேசமுற்ற அக்பர் சலீமைத் தண்டிப்பதற்காக அலகாபாத்துக்குச் சென்ருர்; ஆனால், முதன்முறை அவருடைய கப்பல் நிலந்தட்டியதாலும், இரண்டாம் முறை கனத்த மழை பொழிந்ததனாலும், இறுதியாக அவருடைய தாய் கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்ததனாலும் அவர் திரும்ப நேரிட்டது. அவருடைய தாய் அவருடைய 77ஆம் வயதில் 1604, செப்டம்பர் 10ஆம் நாள் அன்று உயிர்நீத்தாள். அக்பரின் மூன்றும் மகனான டேனியல் (Daniyal) 1604ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் புர்ஹான்பூரில் அளவு மீறிய குடிப் பழக்கத்தினால் அகால மரணமடைந்தார்.

இவ்விரண்டு இழப்புகளும், ஐந்து மாதங்களுக்குள் ஒன்றன்பின் ஒன்ருக வந்தது, மாபெரும் பேரரசரின் உறுதியைக் குலைத்தது. சலீம் கடமை உணர்ச்சியைத் திரும்பப் பெறுவார் என்று பேரரசர் மனம் ஏங்கினர். பேரரசர் தமது மூன்றும் மகனையும் தாயையும் இழந்ததற்கு அவருக்கு வருத்தம் தெரிவித்துக்கொள்ளவும், தாயின் மரணத்தால் ஏற்படக்கூடிய அதிர்ச்சியால் பேரரசர் இறந்துவிட்டால் அவருக்கு அருகில் இருப்பதற்காகவும் இளவரசர் நவம்பர் 16ஆம் நாள் அன்று ஆக்ராவுக்கு விஜயம் செய்தார். பொது அவையில் இளவரசர் பேரரசருக்கு மரியாதை செலுத்தியபொழுது பேரரசர் தமது அருவருப்பைத் தெரிவித்துக்கொள்ளவில்லை; ஆனால், அவர் பின்னல் இளவரசரைச் சிறைப்பிடித்து, அரண்மனையின் உள் அறைக்குக் கொண்டுவரும்படி செய்தார். பிறகு அவருடைய குற்றங்களுக்காக அவரைக் கண்டித்து, முகத்தில் அறைந்து, குளியல் அறையில் பிரசித்திபெற்ற மருத்துவரான சாலிவாகன் ராஜாவின் (Raja of Salivahan) பொறுப்பில் சிறை அடைத்தார். ஒருவேளை பேரரசர், இளவரசர் மன நோய்வாய்ப்பட்டிருக்கிருர் என்றும், சிகிச்சை தேவையாயிருக்கும் என்றும் கருதியதனால் அவர் அவ்விளவரசனை அம் மருத்துவரின் பொறுப்பில் விட்டுவைத்தார் போலும். அவருடைய தலையார்ந்த தோழர்களும் கைது செய்யப் பட்டுச் சிறையடைக்கப்பட்டனர். பத்து நாள் காவலுக்குப் பிறகு— அக்காலத்தில் அவருக்கு மதுவும் கஞ்சாவும் கொடுக்கப்படவில்லை—

இளவரசர் விடுதலை செய்யப்பட்டுத் தமது இருப்பிடத்திற்காக உகந்த இல்லத்தையும் தரப்பெற்ருர். சலீம் கீழ்ப்படிந்து, தந்தையின் கருத்தின்படி நடந்துகொள்ளவில்லையெனில், பேரரசர் சலீமின் மகனுன குஸ்ரோவைத் தமது வாரிசாக நியமித்துத் தமது பிறப்புரிமையைப் பறித்துக்கொள்வார் என்று பயந்து, தந்தையின் மனப் போக்கின்படி நடந்துகொண்டார். அவ்வச்சம் ஆதாரமற்றதன்று; அவர் தம்மையே இழித்துக்கொண்டதனுல் மான்சிங், கான் அஸாம் மீர்ஸா அஸீஸ் கோகா (Khan Azam Mirzu Aziz Koka) போன்ற முக்கிய பிரபுக்கள் அப்பொழுது பதினேழு வயதடைந்திருந்தவரும், எல்லாராலும் விரும்பப்பட்டவரும் திறம் படைத்தவருமான குஸ்ரோவை வெளிப்படையாக ஆதரித்தனர். டேனியலின் இறப்புக்குப்பின் சிலகாலம்வரை காலியாக இருந்த மேற்கு மாகாணங்களின் கவர்னர் பதவியை மிகத் தாழ்மையுடன் சலீம் ஏற்றுக்கொண்டார். ஆனுல், தாம் தமது தந்தை இறக்கும்வரை ஆக்ராவிலேயே இருந்துகொண்டு, அவருடைய அதிகாரிகளைக்கொண்டு அரசாங்கத்தை நடத்தி வந்தார்.

அக்பரின் இறப்பு, 25-26 அக்டோபர், 625


சீதபேதியாலோ அல்லது ஒருவகைப்பட்ட பேதியாலோ அக்பர் அக்டோபர் 3, 1605-ல் நோய்வாய்ப்பட்டார். சலீமும் அவருடைய மகன் குஸ்ராவும் தமக்கிடையில் வெறுப்புத் தொடர்புகளைக் கொண்டிருந்ததனுல், பிரபுக்கள் இரு பிரிவுகளாகப் பிரிந்து, ஒரு பிரிவு சலீமை ஆதரிக்க, மற்ருெரு பிரிவு குஸ்ரோவை ஆதரிக்க, அவர்களுக்கிடையில் இருந்த உட்கிளர்ச்சிகளும் பேரரசரின் உடல் நிலையை மேலும் மோசமாக்கின. மான்சிங்கும் அஸிஸ் கோகாவும் சலீமைச் சிறையடைத்து, குஸ்ரோவுக்காக சிம்மாசனத்தைக் கைப்பற்ற விரும்பினர் என்று கூறப்படுகிறது. பேரரசரின் மருத்துவர் வியாதியைச் சரிவரக் கண்டுபிடிக்கவில்லையாதலால் எட்டு நாட்களாக எந்த மருந்தையும் அவருக்குக் கொடுக்கவில்லை. பிறகு அவர் வியாதியஸ்தரின் சீதபேதியை மருந்து ஒன்று கொடுத்து நிறுத்திஞர். இது சுரத்தையும் சூடுபிடிப்புக் கோளாறையும் விளைவித்தது. அக்டோபர் 21ஆம் நாள் அவருடைய நிலைமை மேலும் மோசமாயிற்று. அவர் சலீமைத் தமது வாரிசாக நியமித்தார். அந்நாள் சலீம் அவரைப் பார்க்க வந்தார். பேரரசர் பேச முடியவில்லையாதலால் பேரரசத் தலைப்பாகையை அணிந்துகொள்ளுமாறும், ஹுமாயூனின் வாளைச் செருகிக்கொள்ளுமாறும் அவர் இளவரசருக்குச் சைகை செய்தார். சீதபேதி அவரை மீண்டும் தாக்கியது. அக்பர் அக்டோபர் 25, 26, 1605 நள்ளிரவில் உயிர்நீத்தார். போடெல்ஹோவின் (Botelho) கருத்

துப்படி அவர் ஒரு முஸ்லிமாகவே இறந்தார். ஆனால், இதை உறுதிப்படுத்த எவ்வித ஆதாரமும் இல்லை. அக்பர் தமது வாழ்வின் இறுதி ஐந்து நாட்களாகப் பேச்சுவார்த்தையற்று இருந்தார்; தவறான கருத்துகளைக் கொண்டிருக்கும் ஆசிரியர்களால் 'குற்றங்கள்' எனக் கருதப்பட்டவைகளை அக்பர் அங்ஙனமாக ஏற்றுக்கொண்டு, அவற்றை மறுத்தார் என்பதற்குச் சான்று கிடையாது. அவரது ஈமச் சடங்குகள் முஸ்லிம் சடங்குகளின்படியே செய்யப்பட்டன. ஆக்ராவிலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள சிகந்தராவில் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

மைய அரசு

அரசுபற்றிய கொள்கை

அக்பரது சமயக் கொள்கையைப்போன்று, 'அரசு'பற்றிய அவரது கொள்கையும் படிப்படியாக வளர்ந்து முதிர்ந்த சித்தாந்தத்தின் விளைவு ஆகும். அவரது ஆட்சியின் தொடக்க காலத்தில், அவரது நிலைமையையும் கடமைகளையும்பற்றி அக்பர் கொண்டிருந்த கருத்து, வைதிக முஸ்லீம் அரசரொருவர் கொண்டிருக்கக்கூடிய கொள்கைகளின் அடிப்படையில்தான் அமைந்திருந்தது. அக்பர் இஸ்லாம் சமயத்தில் நம்பிக்கை கொண்ட மக்களின் தலைவராகவும் (அமிர்-உல்-குமின்), இஸ்லாம் சமயத்தின் காப்பாளராகவும், அதனைப் பரப்புகின்ற சமயத் தூதுவராகவும் தம்மைக் கருதினார். புனித குரானில் கூறப்பட்டபடி இறைவனின் திருவுள்ளத்தை நிறைவேற்றிவைக்கும் கடமையுள்ளவராகவும், இறைவன் ஒருவருக்கே பொறுப்புள்ளவராகவும் அரசன் இருக்கவேண்டுமென்பது அக்பரின் கொள்கை. பிற முஸ்லீம் அரசர்களைப்போல, பேரரசில் உள்ள அனைத்து முஸ்லீம் மக்களின் (மிலாத்) பொதுமக்கள் மனத்திற்குக் கட்டுப்பட்டவராகக் கொள்கையளவிலாவது அக்பர் இருந்தார்; முஸ்லீம் சகோதரத்வத்தின் பொதுமக்கள் மனம், உலிமா என்றழைக்கப்பட்ட முஸ்லீம் பண்டிதர்களால் கட்டுப்படுத்தப்பட்டும் வழி நடத்தப்பட்டும் வந்தது. பிற்காலத்தில் இவர்கள் அரசின் கொள்கைகளையும் உருவாக்குகின்ற உரிமைகளைக் கோரினர். இவர்களின் செல்வாக்கு மிகப் பெருமளவில் பரவியிருந்தது. தமது மனம்போல் நடந்து கொள்வதற்கு, உலிமாவின் செல்வாக்குத் தடையாக இருப்பதை அக்பர் உணர்ந்து, அதனை விலக்க முயன்றார். இதனால் அவர் உலிமாவினாலோ அல்லது மிலாதினாலோ கட்டுப்படுத்தப்படாத முறையில் தமது முஸ்லீம் குடிமக்களின் மிக்குயர் அதிகாரியாக இருக்க விரும்பினார். சமயத் தலைமை ஆணையை (மஹ்ஸார்) 1579ஆம் ஆண்டு



INDIA IN 1605 A.D.
Akbar the Great
CHINA
TIBET
TRANS-OXIANA
FARGHANA
AFGHANISTAN
PERSIA
ARABIAN SEA
BAY OF BANGAL
GONDWANA
AHMADNAGAR
BIDAR
BIJAPUR
GOLKUNDA
POLYGARS
CEYLON
ANDAMAN Is
Ghazdawan
Bukhara
Samarqand
Tashkent
Andijan
Kashgar
Balkh
Qunduz
Herat
Chitral
Kabul
Ghazni
Kandahar
Quetta
Attock
Srinagar
Lahore
Jalandar
Kangara
Machhiwara
Multan
Saharanpur
Panipat
Delhi
Sambhal
Badaun
Bikaner
Nagaur
Jaisalmer
Jodhpur
Agra
Kanauj
Khairabad
Lucknow
Ayodhya
Jaunpur
Hajipur
Munghir
Teliyagarhi
Tanda
Gaur
Gauhati
Sonargaon
Satgaon
Rajmahal
Sasaram
Rohtasgarh
Chunar
Rewa
Kalinjar
Jhansi
Gwalior
Bayana
Chittor
Ranthambhor
Amarkot
Thatta
Sehwan
Bhakkar
Anhilwara
Ahmadabad
Cambay
Baroda
Ujjain
Sarangpur
Bhilsa
Raisin
Garhamandal
Rotanpur
Mandu
Surat
Burhanpur
Asirgarh
Gwaligarh
Balapur
Daulatabad
Rajaura
Pathri
Nander
Ahmadnagar
Bidar
Golkunda
Rajamundry
Bijapur
Raichur
Goa
Kanchi
Tanjore
Diu
Boundary of the Empire.
Semi-independant Kingdoms.
Indepependent Kingdoms.
0 50 100 150 200 250 300
Miles
Copyright DHARMA BHANU

செப்டம்பர் திங்களில் வெளியிட்டு, நாம் ஏற்கெனவே கண்டது போல், மேற்கூறிய நோக்கத்தை நிறைவேற்றினர். சட்டத்திற்குப் பொருள் காண்கின்றபோது கருத்து வேறுபாடு உண்டானல், முடிவு செய்கின்ற அதிகாரத்தை உலிமா அக்பருக்கு வழங்கியது. இத்தகைய முடிவு நாட்டிற்குப் பயனுள்ளதென அரசன் கருதவேண்டும். புனித குரானிலிருந்து ஆதரவாக மேற்கோள் காட்டுவதாக இருந்தால், அரசர் குடிமகனின் நலத்தைக் கருதி எத்தகைய செயலாக்கத்திலும் ஈடுபடலாம் என்ற அதிகாரமும் அரசருக்குக் கொடுக்கப்பட்டது. நடைமுறையில் இத்தகையதோர் ஏற்பாடானது, சமயத்தைச் சார்ந்த அதிகாரத்தையும், அரசின் உலக அதிகாரத்தையும் ஒரே நபரில் இணைக்கின்ற ஓர் ஏற்பாடாக விளங்கியது. இந்த இரு அதிகாரங்களையும் பாகுபாடு செய்ததால்தான் அரசு நலிவுற்றதாக அக்பர் உணர்ந்தார். இதனை அடுத்த இயற்கையான வழி, முஸ்லீம்கள், முஸ்லீம்கள் அல்லாதார் ஆகிய சகல குடிமக்களின்மேலும் பாகுபாடற்ற அதிகாரம்கொண்ட தலைவராக அக்பரை ஆக்குவது என்று கருதப்பட்டது. இதனுல் முஸ்லீம்கள் அல்லாதாருக்கு முழு சமயப்பொறை காட்டவேண்டும் என்ற அடிப்படையிலும், முஸ்லீம்களுக்குச் சரிநிகராக முஸ்லீம்கள் அல்லாதாரும் நிர்வாகத்துறைகளில் பங்கு பெறலாம் என்ற அடிப்படையிலும், ஒரு பொதுவான குடியுரிமையை நிறுவுவது என்பதுதான் இந்த ஏற்பாட்டின் உட்கருத்து. இத்தகைய ஒரு கொள்கையினுல் அக்பர் சுன்னி வைதிக உலிமாக்களுடனும், நாட்டில் தனிச் சிறப்பான சலுகைகளை அனுபவித்துவந்த முஸ்லீம் பிரபுக்களுடனும் மோதவேண்டிய அவசியம் ஏற்படும். இந்த இரு வகுப்பாரும் ஒன்றுசேர்ந்துகொண்டு கிளர்ச்சிக் கொடியை உயர்த்தினர்கள். ஆனுல், அக்பர் இராசபுத்திரர்கள், பாரஸீகர்களுடைய ஆதரவைக் கொண்டும், சுன்னி மக்களில் பெரும்பான்மையானவர்களின் மறைமுகமான உடன்பாட்டின் துணைகொண்டும் இந்தப் போராட்டத்தில் வெற்றி கண்டார். இந்த நிகழ்ச்சி அக்பருக்கு இரண்டு காரியங்களை மெய்ப்பித்தது. முதலாவதாக, இறைமையைப்பற்றிய குறுகிய நோக்குடைய இஸ்லாமியக் கொள்கையைக் கைவிட்டுவிட வேண்டும். இரண்டாவதாக, முகலாயப் பேரரசில் வாழும் வேறுபட்ட சமயத்தார்கள், சமூகத்தார்களின் பொதுநலத்தையும், இன்றியமையாத சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட புதியவோர் இறைமைக் கொள்கையை உருவாக்கவேண்டும். இதன் விளைவுதான் தெய்வீக அரசுரிமை என்ற கொள்கையின் எழுச்சியாகும். இதனை அக்பரின் செயலாளராகிய அறிஞர் அபுல் ஃபாஸல் வெகு திறமையாக எடுத்து விளக்கினர். இதனுல் அரசர் சாதாரண மனிதனைவிடச் சற்று மேலானவர் என்பதை ஃபாஸல் மெய்ப்பிக்க விழைந்தார். அரசர் மண்ணுலகில் கடவுளின் பிரதி

நிதியாக இருப்பவர்; இறைவனின் நிழல் போன்றவர்; எந்த மனிதனுக்குமில்லாத அறிவும் ஞானமும் அரசருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

இறைமை கடவுள் தரும் கொடை; தனி மனிதனிடத்தில் பல்லாயிரச் சிறப்பான பண்புகள் சேர்ந்து நிறைவெய்தினுலன்றி, அவனுக்கு, இறைமை கொடுக்கப்படுவதில்லை; இனமும், பணமும், கும்பலைக் கூட்டக்கூடிய திறமும் இந்த மேலான பதவியை அடையப் போதுமானவை அல்ல' என்று அக்பர்நாமா, இரண்டாம் பாகம் 421ஆம் பக்கத்தில் அபுல் ஃபாஸல் குறிப்பிடுகிறுர். 'அரசர்களின் காட்சிகூட தெய்வ வழிபாட்டின் ஒரு பாகம். அரசர்கள் கடவுளின் நிழல் போன்றவர்கள் என்பது வழி வழியாகக் கொள்ளப் பட்ட உண்மையாகும். அரசர்களைக் காண்பது, தெய்வத்தை நினைவிற்குக் கொண்டுவருவதாகும்' என்று அக்பர் நம்பினுர். அரசன் மக்களின் காவலனுகவும், அவர்களின் நலத்தை நாடுகிறவனுகவும் இருக்கவேண்டும் என்று அக்பர் குறிப்பிட்டார். அவன் நீதி நிறைந்தவனுய், யாவரையும் சமமாகக் கருதுகிறவனுய், மக்களுக்கு நலம் செய்கின்றவனுய்த் திகழவேண்டும். குடிமக்களைத் தனது குழந்தைகளாகக் கருதி, அவர்களின் நலத்துக்காக அரசன் அல்லும் பகலும் உழைக்கவேண்டும். 'அரசர்கள் நீதி வழுவாதவர்களாய் இருப்பதையும், அவர்கள் செலுத்துகின்ற செம்மையான ஆட்சியையும் பொறுத்துத்தான் அரசர்கள் தெய்வத்தை வழிபடுவது என்பது அமைந்திருக்கிறது' என்று அக்பர் குறிப்பிடுகின்றுர். 'கொடுங்கோன்மை என்பது எவர் செய்தாலும், அதிலும் சிறப்பாக உலகத்தின் காவலனுகிய அரசன் செய்தாலும் சட்டவிரோதமானதாகும்.' அரசனுனவன் எல்லாச் சமயத்தாரிடமும் பொறையுடையவனுக இருக்கவேண்டும்; அவனது நாட்டில் எங்கும் நிறைந்த முழு அமைதியை நிலைநாட்ட வேண்டும். ஒரு மாதிரிப் படிவமான அரசரிடம் இருக்கவேண்டிய பண்புகளை எடுத்துரைத்த பின்னர், அபுல் ஃபாஸல் கீழ்க்கண்டவாறு கூறி முடிக்கின்றுர்: 'எங்கும் நிறைந்த அமைதியை (சமயப் பொறையை) ஏற்படுத்தாவிடில், அரசனிடம் எல்லாவிதப் பண்புகள் இருந்தாலும், அவன் அந்த உயரிய பதவிக்குத் தகுதிபெற்றவன் ஆகமாட்டான். மன்பதையில் சகல நிலைகளையும், சமயங்களின் எல்லாவிதப் பிரிவுகளையும், ஒரே கண்கொண்டு நோக்கி உதவி செய்யாமல், சிலருக்குத் தாயாகவும், சிலருக்குச் செவிலித் தாயாகவும் இருப்பானுகில், அவன் அரசன் என்ற உயர்ந்த கவுரவத்திற்குத் தகுதியுடையவன் ஆகான்' (அக்பர்நாமா 2ஆம் புத்தகம், பக்கம் 241). இந்தக் கருத்தைத்தான் அக்பர், பாரசீக மன்னராகிய ஷா அப்பாஸ் அவர்களுக்கு எழுதிய கடிதமொன்றில் வலி

யுறுத்துகிறார். "தெய்வீகத் திருவருள், எல்லாவித வடிவமான சமயங்களுக்கும் தன்னை வழங்கக்கூடியது. 'எல்லாருடனும் அமைதியில் வாழவேண்டும்' (சுலாத்–கி-குல்) என்ற இரம்மியமான மலர் வனத்திற்குத் தன்னையே அழைத்துச் செல்வதற்கு ஒவ்வொருவரும் மிக மேலான வகையில் முயலவேண்டும்."

இந்தத் தெய்வீக அரசுரிமைக் கொள்கையை மக்களில் பெரும்பான்மையானவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இந்துக்கள், பண்டைய இந்திய இறைமைக் கொள்கையை ஒத்திருந்த காரணத்தால், மேற்கூறிய தெய்வீக அரசுரிமைக் கொள்கையை ஒப்புக்கொண்டனர். மேலும், இதன்படி அவர்களுக்கு முஸ்லீம்களுக்கு இணையாக நீதியும் சமத்துவமும் உறுதியளிக்கப்பட்டன. பதோனி போன்ற ஒருசில சமய வெறியர்களைத் தவிர, பெரும்பாலும் முஸ்லீம்கள்கூட இக் கொள்கையை ஒப்புக்கொண்டனர். ஆனால், இக் கொள்கை இறைமைபற்றிய இஸ்லாமியக் கொள்கையினின்றும் அடிப்படையில் வேறுபட்டதாக இருந்தது. இதன் அடிப்படையாகக் குரான் சட்டத்தைக் கொள்ளாமல், 'இக் கொள்கை அரசர்களின் உள்ளுணர்வை வெளிக்காட்டுகின்ற தெய்வத் திருவுள்ளத்தை அடித்தளமாகக் கொண்டிருந்தது.' இந்தக் கொள்கை மக்களுக்கு நலம் பயக்கின்ற வல்லாட்சி முறையின்பாற்படும். இது குறிப்பிட்ட அந்தக் காலத்தின் நிலைமைகளுக்கும் சூழ்நிலைகளுக்கும் மிக்க பொருத்தமுடையதாக இருந்தது.

அரசர்—அவரது அதிகாரங்களும் கடமைகளும்

அக்பர் சகல அதிகாரங்களையும் கொண்ட சர்வ வல்லமையுள்ள அரசர். உண்மையில் அவர் ஓர் எதேச்சாதிகாரியாக இருந்தாலும், அவரது வல்லாட்சி அறிவு சார்ந்த வல்லாட்சி; மக்களின் நலம் நாடிய வல்லாட்சியாகும். அவர் நாட்டின் தலைவர்; படைகளின் தளபதி; அரசின் நிர்வாகத்திற்கு அவரே தலைவராக விளங்கியதோடு, அவரிடம் சட்டமியற்றும் உயர்வான அதிகாரமும் இருந்தது. மேலும், நீதியின் ஊற்றுமாக அவர் திகழ்ந்தார். அவர் தாமே வழக்குகளை விசாரித்து, அவைகளுக்குத் தீர்ப்புச் சொன்னார். அவர் மக்களின் தந்தையாகவும் காவலனாகவும் விளங்கினார். இவ்வாறு அரசரிடம் சகல அதிகாரங்களும் குவிக்கப்பட்டிருந்தபோதிலும், அக்பர், பண்டைக் காலத்து இந்து அரசர்களைப்போல், மக்களின் விருப்பங்களைத் தெரிந்துகொண்டதோடு, மக்களின் மனத்திற்கு எதிராக நடந்துகொள்வதைத் தவிர்த்து வந்தார். ஆனால், இவ்வாறு நடந்துகொள்வது அரசரது தனிப்பட்ட விருப்பத்தைச் சார்ந்த ஒரு காரியமாகும். அரசரது கடமைகள்

இவை என்பதைக் காட்ட, எழுதப்பட்ட எந்த அரசியலமைப்பும் இருக்கவில்லை. அவரது வரம்புகள் இவை என்று கூறவும், அவரது தன்னுட்சியின்மேல் தடைகளைக் கொண்டுவரவும் எழுதப்பட்ட எந்த அரசியல் அமைப்பும் இருக்கவில்லை. புரட்சி ஏற்படக்கூடும் என்ற அச்சமும், பொதுமக்கள் கிளர்ச்சியும், வழிவழியாக வந்த சட்டங்களும் முன்னிகழ்ச்சிகளும் தவிர, வேறெதுவும் அரசர் இப்படித்தான் நடக்கவேண்டும் என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது.

நாட்டிற்கும் அரசிற்கும் தலைவர் என்ற முறையில் தமது அபரிமிதமான கடமைகளை நிறைவேற்றுவதில் அக்பர் அரும்பாடு பட்டு உழைத்தார். அபுல் ஃபாஸலின் 'அக்பர் நாமா' என்ற நூலிலிருந்து அக்பரது அன்றாடக் கடமைகளைப்பற்றிய ஒரு கண்ணோட்டத்தைப் பெறுகிறோம். அக்பர் நாள்தோறும் மூன்று முறை அரசாங்க அலுவல்களைச் செய்வதற்காக அரசவையில் தோன்றினர் என்ற விவரம் அக்பர் நாமாவில் கூறப்பட்டுள்ளது. சூரியன் உதயமாகும்போது தம்மைத் தமது குடிமக்களுக்குக் காட்டும்படி அரசர் ஜரோக்கா தரிசனத்திற்காகத் தயாராக இருப்பார். இங்கே சாதாரண மக்கள்கூட அவரைக் கண்டு தமது குறைகளைத் தெரிவிப்பார்கள். அரசரும் அவற்றைக் கேட்டு, அரசியல் நடவடிக்கைகளைக் கவனிப்பார். இதனை அடுத்து, அரசர் ஒரு வெளியரங்கமான அரசவையைக் கூட்டி, நாலரை மணியளவிற்கு அரசாங்கக் காரியங்களில் ஈடுபடுவது வழக்கம். இங்கே பெரிய கூட்டங்கள் கூடும். சத்தமும் சந்தடியும் அதிகம் இருக்கும் (பதோனி இரண்டாம் தொகுதி பக்கங்கள் 325-26; அக்பர் நாமா, மூன்றும் தொகுதி, பக்கம் 237). எல்லா வகையான மக்களும், ஆண் பெண் இருசாராரும், தங்களின் விண்ணப்பங்களை அரசரிடம் நேரில் கொடுத்து, தமது குறைகளைத் தெரிவித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். அரசர் அவர்களின் குறைகளைக் கேட்டு, அந்த இடத்திலேயே வழக்குகளைத் தீர்த்துவைப்பார். இதைத் தவிர, மான்சப்தார்களின் படைகளைப் பார்வையிடுதல் போன்ற வேறு பல கடமைகளையும் அரசர் நிறைவேற்றுவார். இவ்வாறு நாலரை மணி நேரம் உழைத்த பின் அரசர் ஓய்வு கொள்வார். பிற்பகலில் மீண்டும் அரசர் அரசவையில் வந்திருந்து, 'திவானிதும்' என்ற மன்றத்தில் முழு ஆரவாரத்துடன் தர்பார் நடத்துவார். இங்கே அரசர் அன்றாடக் கடமைகளான, படைகளையும் தொழிற்சாலைகளையும் (கார்கானுக்கள்) பார்வையிடுதல், மான்சப்தாரிகளின் நியமனம், பதவி உயர்வு, ஜாகீர் வழங்குதல் முதலியவற்றைக் கவனிப்பார். இந்தப் பேட்டி ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் நடக்கும். மாலையிலும், பெரும்பாலும் இரவுகளிலும், அரசர் தமது

அமைச்சர்களையும், ஆலோசகர்களையும் தனிப்பேட்டி மண்டபத்தில் (திவானிக்காஸ்) சந்திப்பார். இங்கே வெளிநாட்டு விவகாரங்கள், அல்லது உள்நாட்டு நிர்வாகம் சம்பந்தப்பட்ட சிறப்பான நடவடிக்கைகளைக் கவனிப்பார். பின்னிரவு நேரங்களில் அரசர் தம் அமைச்சர்களுடன், போர், வெளிநாட்டு விவகாரம், அல்லது உள்நாட்டு நிர்வாகம் சம்பந்தமான முக்கிய நடவடிக்கைகள் போன்ற இரகசிய காரியங்களைப்பற்றி ஆலோசனைகள் நடத்துவார். இத்தகைய சந்திப்புகள் 'தௌலத்கானு' என்றழைக்கப்பட்ட ஓர் அறையில் நடக்கும். இது அரசரின் குளியல் அறைக்கு அண்மையில் இருந்ததால், இதனை ஜிஹாங்கீர் காலத்தில் 'கௌசல்கானு' என்று அழைத்தார்கள். 'அரசர் இரவு நேரங்களைத் தமது தனிப்பேட்டி மண்டபத்தில் பயனுள்ள வழியில் செலவிடுகிறுர்,' என்று அபுல் ஃபாஸல் எழுதுகிறுர். 'அதுகாலை பேச்சாற்றலுள்ள தத்துவ அறிஞர்களும், சுஃபி வகுப்பைச் சேர்ந்த சான்ருேர்களும் இக் கூட்டத்தில் அனுமதிக்கப்படுவார்கள். இத்தகைய கூட்டங்களில் வெறுப்பு விருப்பற்ற வரலாற்று அறிஞர்களும் இருப்பார்கள். பிற வேளைகளில் பேரரசையும் நிலவரியையும் பற்றிய பிரச்சினைகள் விவாதிக்கப்படும். இந்த வழக்குகளில் அரசரின் ஆணைகள் எவ்வாறேனும் நிறைவேற்றப்படவேண்டும்' என்று அபுல் ஃபாஸல் தொடர்ந்து கூறுகிறுர். [அக்பர் ஒரு நாளில் பதினுறு மணி நேரங்களை அரசின் விவகாரங்களுக்காகச் செலவிட்டார்]. ஆனுல், தமது பணிகளில் பெரும் பகுதியை அவர் அமைச்சர்களிடமும் பிற அதிகாரிகளிடமும் வெகு விவேகத்துடன் பகிர்ந்து கொண்டார். கொள்கைகளை உருவாக்குதல், ஆணைகளை அனுப்புதல், அவை தகுந்த முறையில் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைக் கவனித்தல் போன்ற கடமைகளை மட்டும் அரசர் தம் பொறுப்பில் வைத்திருந்தார். மேலும், நிர்வாகத்தின் ஒவ்வொரு துறையையும் மேற்பார்வையிடுதல், கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை அவர் வெகு திறமையாக நிறைவேற்றினுர். 'அரசனுக இருப்பவன் தனது குடிமக்கள் செய்யக்கூடிய பணிகளைத் தானே செய்ய முன்வரக்கூடாது. பிறருடைய தவறுகளைத் திருத்துவது அரசனின் கடமை. ஆனுல், அவனுடைய குறைகளைத் திருத்துவது யார்?' என்று அக்பர் குறிப்பிடுகிறுர்.

அமைச்சர்கள்

அக்பர் காலத்திய மைய அரசு, முழுவதும் உருவாக்கப்பட்டு நன்கு அமைக்கப்பட்டபோது, ஒவ்வோர் அமைச்சரின் பொறுப்பில் உள்ள நான்கு துறைகளாக இயங்கியது. அமைச்சர்கள் (1) பிரதமர் வக்கீல், (2) நிதி அமைச்சர் (திவான் அல்லது

வாஸீர்), (3) பிரதம கூலி வழங்குவோர் (மீர் பக்ஷி), (4) பிரதம ஸாதர் (ஸாதர்–உஸ்–ஸாதூர்) ஆவார். அக்பர் ஆட்சியின் தொடக்கத்தில் பிரதம அமைச்சரே பெரும்பாலும் பிற அமைச்சர்களை நியமித்து வந்தார். அமைச்சர்களின் எண்ணிக்கையும் வரையறை செய்யப்படவில்லை. அரசர் அதிகாரம் முழுவதையும் தாமே எடுத்துக்கொண்டு, தம்மாட்சியை நிறுவியபோது, அக்பர் பிரதமரிடமிருந்து இந்தத் தனிச் சிறப்பான உரிமையை எடுத்துவிட்டார். அவர் தம் விருப்பம்போல் அமைச்சர்களை நியமனம் செய்தும், பதவி நீக்கம் செய்தும் வந்தார். அவர்களின் பதவிக் காலத்தைப்பற்றியோ, பதவி உயர்வைப்பற்றியோ தெளிவான வரையறைகள் இருக்கவில்லை. பிரதம அமைச்சர்கூட அரசரின் விருப்பப்படியேதான் நியமிக்கப்பட்டார். அரசர் நினைத்தால் அவரைப் பதவி நீக்கமும் செய்யலாம். பிற அமைச்சர்கள் நிச்சயமாகப் பிரதமரின் கீழாட்களாக இருந்தனர். ஆனால், அமைச்சர்கள் யாவரும் சேர்ந்து அமைச்சரவை என்று ஓர் அமைப்பு ஏற்படுத்தவில்லை. அவரவர்களின் துறைகளுக்கு சம்பந்தப்பட்ட விவகாரங்களைப்பற்றி விளக்கம் சொல்வதற்கு அவர்கள் தனித்தனியே அழைக்கப்பட்டனர். சில சமயங்கள் பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களைப்பற்றி அரசர் தாமே, பிரதம அமைச்சருடன் கலந்து முடிவு செய்தார். அமைச்சர்கள் அல்லாத பெரிய அதிகாரிகளைக்கூட அரசர் ஆலோசனை அவைக்கு அழைப்பதுண்டு. எனவே, முகலாய அமைச்சர்கள் தற்காலம் வழக்கில் உள்ளபடி ஓர் அமைச்சரவையை ஏற்படுத்தவில்லை. அவர்களை அமைச்சர்கள் என்று அழைப்பதைவிட, செயலாளர்கள் என்று அழைப்பதே தகுதியுடையது. ஏனென்றால், கொள்கைகளை உருவாக்கும் பொறுப்பு அரசரின் கைகளில்தாம் இருந்ததேயன்றி அமைச்சர்களிடம் இருக்கவில்லை.

(அ) பிரதம அமைச்சர் (வக்கீல்)

அக்பர் காலத்திய பிரதம அமைச்சருக்கு வக்கீல் என்ற பட்டா வழங்கப்பட்டது. சில வேளைகளில் அவரை வக்கீலிமுத்லாக் என்று அழைத்தார்கள். முன்னர் அவர் மைய அரசின் எல்லாத் துறைகளுக்கும் உண்மையான அதிகாரப் பொறுப்புடையவராக இருந்தார். அவரது கீழாட்கள் என்று கருதப்பட்ட பிற அமைச்சர்களை நியமனம் செய்யவும் பதவி நீக்கவும் அவருக்கு அதிகாரம் இருந்தது. ஆனால், பைராம்கான் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின், பிரதமரிடமிருந்து இந்தத் தனி உரிமைகள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன. முதன் முதலில் நீதித்துறை அவரிடம் இருந்து எடுக்கப்பட்டது; அதனை

நிர்வகிக்க திவான் என்ற தனிப்பட்ட அமைச்சர் ஒருவர் நியமிக்கப் பட்டார். அடுத்தபடியாக, பிற துறைகளின்மேல் அவர் செலுத்தி வந்த முழுக் கட்டுப்பாடும் ஒழிக்கப்பட்டது. வக்கீலின் அதிகாரத் தையும் மதிப்பையும் மிஞ்சிப் போகின்ற வகையில், நாளடைவில் திவானின் அதிகாரம் முக்கியத்துவம் பெற்றது. ஷாஜஹான் ஆட்சி காலத்தின் திவான் பிரதம வாஸீராகவும், பிரதம அமைச்ச ராகவும் மாறினர். அதுகாலே வக்கீல் என்ற பதவியே இல்லாமல் போய்விட்டது. பல ஆண்டுகளாக அக்பர் வக்கீலே நியமித்துக் கொள்ளாமல் தாமே தமது பிரதம அமைச்சராகப் பணியாற்றி வந்தார். வக்கீல் பதவி மீட்கப்பட்டபோது, அதற்குரிய இலாகா கொடுக்கப்படவில்லே. எனவே, பெரிய பொறுப்புகள் இல்லாத ஓர் அலங்காரப் பதவியாக வக்கீல் பதவி ஆகிவிட்டது. அரசர் பிணியுற்றபோதோ, அல்லது அவர் தலைநகரில் இல்லாத காலங் களிலோ, அரசருக்கு அல்லது அவரது பிரதிநிதிக்கு ஆலோசகராக இருக்கும் கடமையொன்றுதான் வக்கீலுக்கு எஞ்சியது.

(ஆ) நிதியமைச்சர் (திவான் அல்லது வாஸீர்)

அக்பர் காலத்திய நிதியமைச்சரை திவான் அல்லது வாஸீர் என்று அழைத்தார்கள். முதல் நிதியமைச்சரான முஸாஃபர்கான் என்பவர், தனிச்சுதந்திரத்துடன் பணியாற்ற முயன்றதால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவரது இடத்தில் அரசர் ராஜா தோடர்மாலே நியமித்தார். முஸாபர்கான், தோடர்மால், ஷா மன்சூர் ஆகிய மூவரும் புகழ்பெற்ற நிதியமைச்சர்கள். இவர்கள் மூவரும் நிதித்துறை நிபுணர்களாகவும், மிகச் சிறந்த நிர்வாகிக ளாகவும் விளங்கினர்கள்.

நிதித்துறையின் தலைவர் என்ற முறையில், திவான் பேரரசின் வரவு செலவுகளுக்குப் பொறுப்பாயிருந்தார். நிலவரித் திட்டத்திற் கான விதிகளேயும் ஒழுங்குகளேயும் உருவாக்குவதும், பிற வகை யான நிலவரிகளே நிர்ணயிப்பதும், பணப் பட்டுவாடாவைத் தணிக்கை செய்து, கட்டுப்படுத்துவதும் திவானின் முக்கியக் கடமைகளாகும். எல்லாவிதமான அதிகாரப் பதிவேடுகளும் அவரது பரிசீலனைக்கும், அவரது மேற்பார்வையில் பாதுகாக்கப் படவும் அனுப்பப்பட்டு வந்தன. எல்லாவித முக்கிய நடவடிக்கை களேயும், பணப் பட்டுவாடாக்களேயும் சம்பந்தப்பட்ட பதிவுகளேத் தணிக்கை செய்யவேண்டியது அவருடைய பொறுப்பு. மாநில திவான்களின் நியமனத்திற்கு சிபாரிசு செய்வதும், அவர்களேக் கட்டுப்படுத்தி இயக்குவதும் அவருடைய கடமையாகும். நிலமான யங்கள், நிலக்கொடைகள் உட்பட்ட சகலவித நிலவரி ஏற்பாடு

களின் பத்திரங்களில் திவான் கட்டாயமாகத் தனது பதவி முத்திரையைப் பொறிக்கவேண்டும்.

திவானுக்கு விரிவான அதிகாரங்களும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவேகமாக நடக்கும் அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. அவரது பணி அதிகப் பொறுப்புள்ளதாகையால் உதவி செய்வதற்குப் பல துணை அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் திவானி கால்ஸா என்பவர். இவர் அரசருக்குச் சொந்தமான பாதுகாக்கப்பட்ட நிலங்களுக்குப் பொறுப்பானவர். திவானி ஜாகீர்கள் என்ற அதிகாரிகள் அரசருக்குப் படைப் பணி புரிகின்றவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலமான்யங்களையும், நிலக் கொடைகளாக வழங்கப்பட்ட நிலங்களையும் (ஸாயுர்கல்) பொறுப்பாகக் கவனித்து வந்தனர். மூன்றாவது அதிகாரியான சாகிப்-பி-தாவுஜி என்பவர் படைக் கணக்குகளைக் கவனித்துவந்தார். திவானி பாயுதாத் என்ற நான்காவது துணை அதிகாரி அரசவையுடன் சம்பந்தப்பட்ட தொழில் கூட்டங்களின் (கார்க்கனாஸ்) கணக்குகளைத் தணிக்கை செய்து வந்தார். முஸிரிபி-காஸாணா என்ற அதிகாரியின் பொறுப்பில் இருந்த கருவூலம் இறுதியில் திவானின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இந்த அதிகாரிகள் யாவருக்கும் கணக்கர்கள், எழுத்தர்கள், சேவகர்கள் போன்ற பலதரப்பட்ட பணியாளர்கள் கொடுக்கப்பட்டிருந்தார்கள். நிதித்துறையே, நிர்வாகத்தின் மிக முக்கியமான கிளை என்ற காரணத்தால் அக்பர் அதன் அமைப்பிலும் செயலாக்கத்திலும் சிறப்பாக ஆர்வம் காட்டியதோடு, வேளாவேளைகளில் நிதித் துறையின் பணிகளைப் பரிசீலனை செய்வதற்கு ஐந்து நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து இருந்தார்.

(இ) பிரதம கூலி வழங்குவோர்–மீர் பக்ஷி

'பக்ஷி' என்ற சொல்லானது வடமொழிச் சொல்லாகிய பிக்ஷு என்ற சொல்லின் அடியாகப் பிறந்திருக்கவேண்டும். மீர் பக்ஷி என்ற பதவி, டெல்லி சுல்தான்களின் ஆட்சி காலத்தில் சிறந்திருந்த திவானி–ஆரிஸ் என்ற பதவிக்கு இணையானது. மீர் பக்ஷியின் பதவி வரிசை பேரரசின் திவானுக்கு நேர் அடுத்தபடியானதாகும். அவரிடமிருந்த ஒரு பதிவேட்டில், மான்சப்தார்களின் பெயர்கள், தகுதிகள், சம்பளங்கள் போன்ற விவரங்களை அவர் பதிவு செய்யவேண்டும். எல்லாப் படை அதிகாரிகளின் சம்பளம் இவருடைய பணிமன்றத்தின்மூலமாகவே பட்டுவாடா செய்யப்பட்டன. எல்லாவிதமான மான்சப் வரிசைகளுக்கான நியமனங்களைப்பற்றிய ஆணைகள் யாவும் மீர் பக்ஷியின் பணி

மன்றத்தின்மூலமாகவே கொடுக்கப்பட்டன. படைத்துறையின் தலைவர் என்ற முறையில் அவர் ஒவ்வொரு மான்சப்தாருடனும் உறவு வைத்துக்கொள்ள வேண்டியதிருந்தது. அவர் அரசவை யின் தர்பார்களில் கலந்துகொண்டு, அரசரின் வலப்புறத்தில் நிற்க வேண்டுமென்ற வழக்கம் இருந்தது. படைத்துறையில் பணி யாற்றக்கூடியவர்களை அரசருக்கு முன்னல் கொண்டு நிறுத்து வதும், மான்சப்தார்களின் குதிரைகளையும் வீரர்களையும் கொண்டு வந்து அரசருக்குக் காட்டுவதும் அவரது கடமைகளாகும். அரச மாளிகையைக் காவல் புரியவேண்டிய மெய்காப்பாளர்களின் பட்டியலைத் தயார் செய்யவேண்டியது அவரது தலையாய பணி களில் ஒன்று. இந்த மெய்காவல்களைத் தினந்தோறும் மாற்றுவது வழக்கம். தகுதி உயர்ந்த மான்சப்தார்கள் யாவரும் முறைவைத்து இந்தக் கடமையை ஆற்றவேண்டும். மேலும், பல்வேறு மாநிலங் களில் செய்தி எழுத்தாளர்களையும் ஒற்றர்களையும் நியமித்து, அவர்களிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று, அவற்றை அரசர் முன் சமர்ப்பிப்பதும் மீர் பக்ஷியின் வேறு சில பணிகளாகும். அக்பருக்குப் பின்வந்த அரசர்கள் காலத்தில் இந்தப் பணியைக் கவனிக்க ஒரு சிறப்பான அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். மீர் பக்ஷி உண்மை யில் படைகளின் பிரதம தளபதி அல்லர். ஆனல், சில வேளை களில் அவர் படைகளை நடத்திச்சென்று, போர்ப்பணிகளில் ஈடுபடு மாறு ஆணையிடப்படுவார். அவரது துறைக்குப் பெரியதோர் பணி மன்றம் இருந்தது. மான்சப் மான்யங்கள், ஊதிய வுயர்வு பதிவுப் பத்திரங்கள், குதிரைகளுக்குச் சூடிடுதல், காவலர் பணிக்கான நிலக்கொடைகள், படை திரட்டல் போன்ற காரியங்களுக்கு அவர் தமது பதவி முத்திரையையும் கையெழுத்தையும் கொண்ட பதிவுப் பத்திரங்களை வெளியிடவேண்டும். மேலும், அவர் படையினைப் பல பிரிவுகளாகப் பிரித்து, அரசருக்குப் பணி புரியவேண்டிய உயர்ந்த அதிகாரிகளின் பட்டியலையும் தயார் செய்யவேண்டிய திருந்தது.

படைத்துறையின் பணிகள் அதிகரித்த காரணத்தால், மீர் பக்ஷிக்குத் துணை புரிய ஒன்றுக்கு மேற்பட்ட பக்ஷிகளை நியமிக்க வேண்டியதாயிற்று. அவர்கள் முதலாவது பக்ஷி, இரண்டாவது பக்ஷி என அழைக்கப்பட்டனர். மீர்பக்ஷி தமது பணியின் பொறுப்புகளை அவர்களுடன் பகிர்ந்துகொண்டார். அகாதிப் படைகளைக் கவனிக்கத் தனியாக ஒரு பக்ஷி இருந்தார். இதைத்தவிர, பக்ஷி-இ-ஹுஸுகர், பக்ஷி-இ-ஸாக்ரித்பெஷா என்றழைக்கப்பட்ட வேறு இருவகையான பக்ஷிகளும் இருந்தார்கள்.

(ஈ) பிரதமர் ஸாதர்

ஸாதர்–உஸ்–ஸாதூர் அல்லது பிரதம ஸாதர் என்பவர் மிக முக்கியமான அமைச்சராவார். அரசருக்குச் சமய காரியங்களில் ஆலோசனை கூறுவது, அரசரின் அறக்கொடைகளை வழங்குவது, பேரரசின் பிரதம நீதிபதியாகப் பணிபுரிவது ஆகிய முப்பெரும் பொறுப்புகளை அவர் வகித்து வந்தார். அக்பரின் ஆட்சித் தொடக்கத்தில், பிரதம ஸாதர் மேலே குறிப்பிட்ட முப்பெரும் பணிகளின் காரணமாகப் பெரும்பலமும் பெரு மதிப்பும் பெற்று விளங்கினர். ஷாராவைப் பொறுத்தவரையில், எழுகின்ற சர்ச்சையான விளக்கங்களுக்கு அதிகாரபூர்வமான முடிவுகளை வழங்கி, அவற்றைச் செயலாக்குவதுதான், அவர் சமயநெறி ஆலோசகர் என்ற முறையில் செய்யவேண்டிய பணி. புனித குரானில் கூறப் பட்டுள்ள விதிகளுக்குப் புறம்பாக அரசரும் அவருடைய அரசாங்கமும் வழி தவறிவிடாமல் காத்து, இஸ்லாம் சமயத்தின் கவுரவத்தைப் பாதுகாப்பது அவரது கடமையாகும். பிரதம ஸாதரின் மற்ருெரு தலையாய கடன் இஸ்லாமிய கல்வியை ஊக்குவிப்பதாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற அவர் எப்பொழுதும் கற்றறிந்த முஸ்லிம் பண்டிதர்களுடன் நெருங்கிய உறவு கொள்ளவேண்டியதாயிற்று. அவர்களுக்கு உதவிக் கொடைகளும் (வாஸாயஃப்) வாழ்க்கைப் பணமும், இலவசமாக நிலமான்யமும் (யொயுர்கல்) வழங்க வேண்டியது அவரது பொறுப்பு. அக்பர் ஆட்சியின் தொடக்க காலத்தில் இத்தகைய பணிகளில் அவருக்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. பிரதம காஸி என்ற முறையில் ஸாதர் அரசருக்கு அடுத்தபடியாகப் பேரரசின் இரண்டாவது நீதி அதிகாரியாக விளங்கினர். இவர் நீதிமன்றங்களைக் கூட்டி, அநேகமாக பிரதம காஸியின் நீதிமன்றங்களிலிருந்து வரும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புச் சொல்வார். இந்த முறையில் பிரதம இலாதர், மாநில, மாவட்ட, நகர காஸிகளின் பதவிகளுக்குத் தகுந்தவரை சிபாரிசு செய்வார். மற்ற அமைச்சர்களைப் போலவே, பிரதம ஸாதருக்கும் தனியான பணிமன்றமும், ஏராளமான கணக்கர்களும், எழுத்தர்களும், சேவகர்களும் இருந்தார்கள்.

அக்பர் தமது நிர்வாகத்தைத் திருத்தியமைத்து, அரசாங்கத்தைப்பற்றிய இஸ்லாமியக் கொள்கைகளைத் தள்ளிவிட்ட பின்னர், பிரதம ஸாதர் அரசரின் முக்கியச் சமயநெறி ஆலோசகராக இருக்கவில்லை. உண்மையில் பிந்திய காலங்களில் அக்பர் வைதீக உலிமாவைக் கலந்தாலோசிப்பதை விட்டுவிட்டார். புதிய சமய ஏற்பாட்டின்படி, பிரதம ஸாதர் இஸ்லாமிய சட்டத்தின் பாதுகாவலராகவோ, அல்லது இஸ்லாமிய மறை நூல்களைக்

கற்றுத் தேர்ந்தவராகவோ இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்ருயிற்று. அவரிடம் இப்பொழுது முற்றிலும் வேறுபட்ட தகுதிகள் விளங்கவேண்டும். 'நிலமானியங்களை வழங்குமுன், அவற்றைப் பெற்றுக்கொள்வோரின் தகுதிகளை விசாரிக்கவேண்டும். அவர்களின் மனுக்களை நீதியோடு கருதவேண்டியதிருப்பதனால், பிரதம ஸாதர் பதவிக்குச் சரியான தீர்ப்புகளைச் செய்யக்கூடிய ஓர் அனுபவசாலியை நியமிக்கவேண்டும். அவர் எல்லாக் கட்சிகளுடனும் இணக்கம் உள்ளவராகவும், சொல்லிலும் செயலிலும் எல்லா மக்களுடனும் அன்புள்ளவராகவும் இருக்கவேண்டும்' என்று அபுல் ஃபாஸல் குறிப்பிடுகிருர் (அயினி, முதல் தொகுதி, பக்கம் 268). அக்பரின் பிந்திய காலத்திய ஸாதர், முஸ்லிம் கல்வியையும் முஸ்லிம் உலிமாவைமட்டும் ஆதரிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படவில்லை; எல்லாச் சமயத்தாருக்கும் அரசரின் அறக்கொடைகளைப் பகிர்ந்து வழங்குவதே அவரின் கடமை.

கல்வி உதவிக் கொடைகளையும், சமயச் சார்பாக ஜாகீர்களையும் வழங்குவதைப் பொறுத்த பிரதம ஸாதரின் அதிகாரங்களை அக்பர் குறைத்துவிட்டார். ஸாதர் தகுதிவாய்ந்த அறிஞர்களையும், தெய்வபக்தி கொண்டவர்களையும், வறியவர்களையும் சிபாரிசு செய்யவேண்டும். ஆனால், பொதுவாக அரசரே உதவி பெறுகிறவர்களைத் தெரிந்துகொண்டார். அக்பர் அரசியலில் ஆர்வம் கொண்டு, நீதித்துறையில் பெரிய மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் செய்தார். நிலக்கொடைகளை வழங்குவதற்கு அவர் விரிவான விதிகளைக் கொண்டுவந்தார். நிலக்கொடைகளைப் பெறவும், உதவித் தொகைகளுக்குத் தகுதி பெறவும் அரசர் சில தகுதிகளைக் குறிப்பிட்டார். தகுதியுள்ளவர்கள் தமது கவனத்துக்குக் கொண்டு வருமாறு, அவர் பிற முக்கிய அரசவை உறுப்பினர்களுக்கு அதிகாரம் அளித்தார். இதனுல் நிலமானியத்திற்கான மனுக்கள் பிரதம ஸாதர்மூலமாகவே அரசருக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பது அவசியம் இல்லாமல்போய்விட்டது. அக்பர் ஆட்சிக் காலத் தொடக்கத்தில் இந்தத் துறையில் பெரு அளவில் ஊழல்கள் நடந்திருப்பதாகவும், தகுதியற்ற பல நபர்கள் நிலக்கொடைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் விசாரணையில் புலனுயிற்று. அத்தகைய நிலங்களைத் திருப்பிக் கொடுத்துவிடுமாறு அக்பர் ஆணையிட்டார். பிரதம ஸாதரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்காக, மாநிலங்களில் தனியான ஸாதர்கள் நியமிக்கப்பட்டனர். இந்தச் சீர்திருத்தங்களையெல்லாம் நிறைவேற்றியபின் நீதித்துறை மிகத் திறமையான முறையில் இயங்கியது.

இந்த நான்கு அமைச்சர்களையல்லாமல், மீர் ஸாமன் (மேற்பார்வையாளப் பிரபு) என்பவர் அதிக அதிகாரமும் செல்வாக்கும்

உடையவராக இருந்தார். இவர் ஜஹாங்கீர் காலத்திலும், பிற முகலாய மன்னர்கள் காலத்திலும் அமைச்சருக்குரிய தகுதி பெற்று விளங்கினூர். அபுல் ஃபாஸல் இந்த அதிகாரியைப்பற்றிப் பெயரளவில் மட்டுமே குறிப்பிடுகிருரேயன்றி, அமைச்சர்களை வர்ணித்ததுபோன்று இவருடைய கடமைகளையும் அதிகாரங்களையும் குறிப்பிடவில்லை. அக்பர் காலத்தில் மீர் ஸாமன் திவான் அல்லது பேரரசின் வாஸீர் என்பவரின்கீழ்ப் பணியாற்றினூர். அக்பரின் காலத்தில் மீர் ஸாமன் அமைச்சரெனக் குறிக்கப்படா விட்டாலும், மீர் ஸாமன் மிக முக்கியமான பெரியவராகக் கருதப்பட்டதோடு, அரசரின் உளவகம், சமையல் அறை, காவற் படையினர், தொழிற்கூடங்கள் முதலியவை உட்பட்ட மன்னரின் மாளிகையைப் பேணும் பொறுப்பைப் பெற்றிருந்தார். இந்த முறையில் அவருக்கு மிகுந்த அதிகாரமும் செல்வாக்கும் இருந்திருக்கவேண்டும்.

மாநில ஆட்சிமுறை

அக்பர் தமது பேரரசை நன்கு வகுக்கப்பட்ட மாநிலங்களாகப் பிரித்து, அவற்றில் ஒருமுகமான நிர்வாகத்தை நிறுவினூர். 1602ஆம் ஆண்டில் பேரரசில் பதினைந்து மாநிலங்கள் இருந்தன. அவைகளாவன; அலஹாபாத், ஆக்ரா, ஆவாத், ஆஜ்மீர், ஆமதாபாத், பீஹார், வங்காளம், டெல்லி, காபூல், லாகூர், முல்தான், மாளவம், பீரார், காண்டேஷ், ஆமதுநகர். காஷ்மீரமும் காந்தாரமும் மாவட்டங்களாக (சர்க்கார்கள்) இருந்தமையால், காபூல் மாலநிலத்தோடு இணைக்கப்பட்டிருந்தன. தாட்டா என்று அக் காலத்தில் வழங்கப்பட்ட சிந்து, மாவட்டம் என்ற குறையால் முல்தான் மாநிலத்தில் அடங்கியிருந்தது. ஒரிஸா, வங்காளத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இந்த மாநிலங்கள் யாவும் ஒரேமாதிரி யான அளவு நிலப்பரப்பும், ஒரே அளவான வருவாயும் உள்ளவை களாக இருக்கவில்லை.

தக்காணத்திலுள்ள மூன்று மாநிலங்களாவன: காண்டேஷ், பீரார், ஆமது நகர். இவை மூன்றும் ஒரே வைஸ்ராய் ஆளும் மண்டலமாகத் தொகுக்கப்பட்டு, இளவரசர் தானியாரின் பொறுப்பில் இருந்தது.

மாநிலங்களைத் தவிர, பேரரசில் பல சிற்றரசுகளும் இருந்தன. இவை யாவும் அக்பரின் மேலாண்மையை ஒப்புக்கொண்ட தலைவர்களின் உடமைகளாக இருந்தன. இத்தகைய இராச்சியங்கள் பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் இருந்தன. இவற்றின் அரசர்கள் பலதரப்பட்ட நிலையான அதிகாரங்களையும் தகுதிகளையும்

பெற்றிருந்தனர். இவர்கள் பேரரசின் பணியில் மன்சப்தார்களாகப் பதிவு பெற்றிருந்தார்கள். இந்த முறையில் அவர்கள் முக்கியமான நிகழ்ச்சிகளின்போது அரசவைக்கு வருகை தரவும், அழைக்கப்படும்போது போர்ப்பணி செய்யவும் கடமைப்பட்டிருந்தார்கள். இந்த இராச்சியங்களெல்லாம் அத்தனை சர்க்கார்கள் அல்லது மாவட்டங்களாகக் கருதப்பட்டன. அவற்றை அண்மி இருந்த பல மாநிலங்களோடு இவை இணைக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு சுபாவிலும், சிப்பா–ஸலார் என்று அழைக்கப்பட்ட ஓர் ஆளுநர் அல்லது கவர்னரும், ஒரு திவானும், ஒரு பக்ஷியும், ஒரு ஸாதரும், ஒரு காஸியும், ஒரு கொத்தவாலும், ஒரு மீர் பாஹ்ரும், ஒரு வாஹியா நாவிஸும் அதிகாரிகளாக இருந்தனர். இந்த மாநில அதிகாரி ஒவ்வொருவருக்கும் பல கணக்கர்களையும், எழுத்தர்களையும், பணியாட்களையும் கொண்ட ஒரு பணி மன்றம் இருந்தது.

சிப்பா–ஸலார் (கவர்னர்)

மாநிலத்தின் தலைவரான சிப்பா-ஸலார் ஓரளவு பெரியதொரு படைக்கும் பொறுப்பாக இருந்தார். இவரைப் பொதுவாக 'சுபேதார்' என்றும், அல்லது 'சுபா' என்றுமட்டும் அழைத்தனர். அரசரின் பிரதிநிதியான இவரை அரசரே நியமனம் செய்தார். இவர் தமது அதிகாரத்திற்குட்பட்ட மாநில மக்களின் நலத்திற்குப் பொறுப்புள்ளவர். அவர் மக்களுக்குச் சமநிலையான நீதியை வழங்க வேண்டும். அவர் குற்றவியல் (கிரிமினல்) வழக்குகளை விசாரித்தார். அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டிக் குற்றம் புரிவோரையும் கட்டுப்பாடுகளை மீறுகின்றவர்களையும் தண்டிக்கும் அதிகாரமும் பெற்றிருந்தார். காவலர் பணிக்கும், ஒற்றர் பணிக்கும் பிரமாணிக்கமும் நம்பிக்கைத் தகுதியும் உள்ளவர்களை அவர் நியமிக்கவேண்டும். அவர் உழவுத் தொழிலுக்கு ஆதரவு தந்து, நீர்ப்பாசன ஏற்பாடுகளையும், சாலைகளையும், சராய்களையும், பூங்காக்கள், மருத்துவ மனைகள், கிணறுகள், இன்னோரன்ன பொது நலப் பணிகளையும் செய்யவேண்டும். மக்கள் முழு சமயச் சுதந்திரம் அனுபவிக்கிறார்களா என்பதைப் பார்த்துக்கொள்ளவேண்டியது அவரது கடமை. அவரது பெயருக்கேற்றாற்போல், சிப்பா–ஸலார் ஒரு படையதிகாரியாகவும் இருந்ததால், வீரர்கள் கட்டுப்பாட்டுடன் இருந்து அவருக்குப் பணிவதையும் அவர் கவனிக்கவேண்டிய கடமை இருந்தது. அவரது சுபா எல்லைக்குள் இருந்த சிற்றரசு இராச்சியங்களிடமிருந்து திறைத் தண்டல் செய்யவேண்டியதும் அவருடைய பொறுப்புகளில் ஒன்றாகும்.

திவான் : மாநில திவான், சுபாவின் அடுத்த முக்கியமான அதிகாரியாவார். இவர் மைய அரசின் திவானுடைய சிபாரிசின் பேரில் நியமிக்கப்படுவார். அவருக்குக் கட்டுப்பட்டவரேயன்றி மாநில கவர்னருக்குக் கட்டுப்பட்டவரல்லர். இவர் மாநிலத்தின் நிதித்துறைக்குப் பொறுப்பானவர். நிலவரி தண்டல் செய்வது, வரவு செலவுக் கணக்கு வைத்துக்கொள்வது, மாநில அதிகாரிகளுக்குச் சம்பளப் பட்டுவாடா செய்வது, சிவில் நீதி வழங்குவது முதலியன அவருடைய கடமைகளாகும். உழவினைப் பெருக்கவும், கருவூலத்தின்மேல் கண்ணுங் கருத்துமாயிருக்கவும் அவருக்கு ஆணை இருந்தது. நிலவரித் தண்டல்காரர்களின் (அமில்) கணக்குகளைத் தணிக்கை செய்வதும், நிலவரி பாக்கி இல்லாமல் பார்த்துக்கொள்வதும் அவருடைய கடமைகளாகும். மைய அரசின் திவானுக்கு மாநிலத்தின் நிலைமையைப்பற்றி அடிக்கடி அறிக்கைகள் அனுப்பும் கடமையும் அவர் செய்துவந்தார்.

நடைமுறையில் திவானுக்கு அதே விதத் தகுதி இருந்ததென்றாலும், கவர்னரைப்போன்று அதே அதிகாரங்கள் இருக்கவில்லை. திவான் கவர்னருக்குக் கீழ்ப்பட்டவரல்லர். நிதி சம்பந்தப்பட்டவரையிலும் இருவரும் சமநிலையில் இருந்தனர். இவ்விதமாக ஒவ்வொரு மாநிலத்திலும் இணையான, ஒருவரையொருவர் சார்ந்த இரு அதிகாரிகள் இருந்தனர். இவர்கள் சிப்பா-ஸலாரும் திவானும் ஆவர். சிப்பா-ஸலார் படை, காவலர் நிர்வாகப் பணிகளின் தலைமையைத் தாங்கியவர். திவான் சிவில் துறைக்கும் நிலவரித் துறைக்கும் பொறுப்பாக இருந்தார். இவர்கள் இருவரும் ஒருவர்மேல் ஒருவர் தடையாக இருந்து விழிப்புடன் இருக்குமாறு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒருவர் மற்றவருடைய நடவடிக்கைகள்பற்றி அரசவைக்கு அறிக்கை கொடுக்கவேண்டும். இந்த ஏற்பாடு உயர்ந்த மாநில அதிகாரிகளைக் கட்டுப்படுத்தவும், அவர்கள் மக்களைத் துன்புறுத்துவதைத் தடைசெய்யவும் அவசியமாக இருந்தது. இந்த இரு அதிகாரிகளும் எதிரும் புதிருமாக இருந்தாலும், அவர்களின் வெற்றிக்கு அவர்களுக்குள் கூட்டுறவும் சேர்ந்து பணியாற்றலும் அவசியமான நிபந்தனையென இருக்குமாறு மாநில ஆட்சிமுறை அமைக்கப்பட்டிருந்தது. எனவே, சாதாரணக் காலங்களில் மாநில ஆட்சிமுறையில் நல்லிணக்கமும் கூட்டுறவும் விளங்கின.

ஸாதரும் காஸியும்

இந்த இரு பதவிகளும் பொதுவாக இணைக்கப்பட்டிருந்தன. இரு கடமைகளையும் ஆற்ற ஓர் அதிகாரியே நியமிக்கப்பட்டார்.

உதவித்தொகையையும் நிலக்கொடைகளையும் பெறத் தகுதியுள்ள நபர்களை மைய அரசின் ஸாதருக்குச் சிபாரிசு செய்யவேண்டியது மாநில ஸாதரின் கடமைகளில் ஒன்றாகும். காஸி என்பவர் மாநில நீதித்துறையின் தலைவராவார். அவர் வழக்குகளை விசாரித்து நீதி வழங்குவார். இந்த முறையில் அவர் மாவட்டங்களிலும் நகரங்களிலுமுள்ள காஸிகளின் பணியை மேற்பார்வையிடும் பொறுப்பும் பெற்றிருந்தார்.

மாநில பக்ஷி

மாநில பக்ஷி, மீர்பக்ஷியின் சிபாரிசின்மேல் நியமிக்கப்பட்டார். படை திரட்டல், படை அமைப்பு, கட்டுப்பாடு, திறமை முதலிய துறைகளில் சிப்பா-ஸலாரின் தலைமையில் இருந்த மாநிலப் படையை பக்ஷி கவனித்து வந்தார்.

வாக்யா நாவிஸ்

சில வேளைகளில் மாநில பக்ஷி, சுபாவின் வாக்யா நாவிஸ் என்ற முறையிலும் பணியாற்றவேண்டியிருந்தது. எனினும், பெரும் பாலும் இக் கடமைகளை நிறைவேற்றத் தனியான ஓர் அதிகாரி இருந்தார். இவர் மாநிலத்தின் முக்கியப் பகுதிகளில் செய்தி எழுது வோரையும், ஒற்றர்களையும், சிப்பா-ஸலார், திவான், காஸி, பௌஜ்தார், காவலர்துறைபோன்ற பணிமன்றங்களில் ஒற்றர்களை நிறுத்தும் கடமையையும் செய்யவேண்டியிருந்தது. ஒற்றர்கள் தினமும் அறிக்கைகளை வாக்யா நாவிஸிடம் செலுத்தவேண்டும். அவர் இந்த அறிக்கைகளைச் சுருக்கமாக எழுதி அரசவைக்கு அனுப்புவார். அகில பேரரசு நிர்வாகத்தின் வெற்றி, இரகசிய ஒற்றர்படையின் திறமையைச் சார்ந்திருந்ததால், இந்தத் துறைக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டது. சில சமயங்களில் மைய அரசினரே, செய்தி எழுதுவோரையும் ஒற்றர்களையும் நியமித்து, அவர்களை மாநிலங்களுக்கும் பர்கானுக்களுக்கும் அனுப்பிவைத் தனர். இவர்கள் மைய அரசினரின் ஆணைகளின்படி நடக்கக் கடமைப்பட்டிருந்தனர்.

கொத்தவால்

கொத்தவால் என்ற அதிகாரி உள்நாட்டுப் பாதுகாப்பு, சுகா தாரம், துப்புரவு, அமைதி முதலியவற்றை மாநிலத் தலைநகரைப் பொறுத்தவரையில் கவனித்துவந்தார். அவருக்கு விரிவான அதிகாரங்களும், பெரிய பணிமன்றமும், பல கீழாட்களும் இருந் தனர். மாநிலத்தின் சகல தாணுக்களுக்கும் பிரதம ஆட்சித் துறைத் தலைவர் கொத்தவால்தான்.

மீர்பார்

கடற்கரை நகரங்களில் துறைமுக வரி தண்டல், படகு வரிகள், சுங்கவரிகள் முதலியவற்றிற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி மீர்பார் என்று அழைக்கப்பட்டார்.

மாவட்ட ஆட்சிமுறை

பௌஜ்தார்: ஒவ்வொரு மாநிலம் அல்லது சுபா என்ற பிரிவு, பல சர்க்கார்கள் என்ற மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பௌஜ்தார், ஓர் அமல்-குஷார், ஒரு காஸி, ஒரு கொத்தவால், ஒரு பக்ஷி, ஒரு காஸான்தார் ஆகியோர் அதிகாரிகளாக விளங்கினர். மாவட்டத்தின் தலைவர் பௌஜ்தார். இவருடைய பெயர் குறிப்பிடுவதுபோன்று இவர் ஒரு படையதிகாரி. இவரது கடமைகள் மூன்றுகும். ஆட்சிக்குட்பட்ட பகுதியில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுவதும், கள்வர்கள், திருடர்கள் பயமின்றிச் சாலைகளைப் பாதுகாப்பதும், அரசரின் ஆணைகளைச் செயலாக்குவதும் மேற்கூறிய முப்பணிகளில் முதலாவது ஆகும். இரண்டாவதாகப் படையதிகாரி என்ற முறையில் அவர் ஒரு சிறுபடை அல்லது பிரதேச சைனியத்திற்குத் தலைமை தாங்கினர். மூன்ருவதாக, நிலவரி தண்டுவதில் அவர் மாவட்ட நிலவரித் தலைமை அதிகாரியான அமல் குஷாருக்கு உதவவேண்டியது. மாவட்ட நிர்வாகத்தின் திறமை பௌஜ்தாரின் தனிப்பட்ட நடத்தையையும் விழிப்பான கண்காணிப்பையும் பொறுத்து இருந்ததால், அவரையும் பிற வட்டார அதிகாரிகளையும் கவனிக்க அக்பர் சிறப்பான வழிகளைக் கையாண்டார். உயர்தர அதிகாரிகளை அனுப்பி, பௌஜ்தாரின் பணிகளை அடிக்கடி தணிக்கை செய்ததன்மூலம், மைய அரசு பௌஜ்தாருடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. செய்தி எழுதுவோரின், ஒற்றர்களின் அறிக்கைகள், மாவட்ட, பர்காஞ அதிகாரிகளின் நடவடிக்கைகளைப்பற்றி மைய அரசினர் அறிந்துகொள்ளும்படி செய்தன, அவர்கள் கடமையைப் புறக்கணித்தார்கள் அல்லது மக்களைத் துன்புறுத்தினர்கள் என்று கண்டதும், அதிகாரிகள்மீது உடனடியான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அமல்-குஷார்

மாவட்டத்தின் அடுத்த முக்கிய அதிகாரி அமல்-குஷார் என்றழைக்கப்பட்ட நிலவரி அதிகாரியாவார். இவருக்குக்கீழ்ப் பல பணியாளர்கள் வேலை செய்தனர். நிலவரி தண்டும் அதிகாரியாக இருந்ததோடு, இவர் திருடர்களையும் ஒழுங்கு மீறுவோர்களையும் தண்டித்து, உழவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பையும்

கொண்டிருந்தார். இவர் உழவர்களுக்குத் தக்காவிக் கடன்களை வழங்கவும், அவற்றைச் சிறிய தொகைகளாக மீண்டும் பெற்றுக் கொள்ளவும் அதிகாரம் பெற்றிருந்தார். மேலும், நிலவரித் தண்டலின்போது உழவர்களின் குறைகளைப் போக்குவதற்காக, ஒவ்வொரு பிகாவின்மேலும் அரைபிஸ்வா வரிச்சலுகையை உழவர்களுக்கு வழங்கவும் அவருக்கு உத்தரவு இருந்தது. இவர் மாவட்டக் கருவூல அதிகாரியின் வேலைகளை மேற்பார்வையிட்டு, அரசவைக்கு வரவு செலவுக் கணக்குகளை அனுப்பி, அரசாங்கக் கருவூலத்தில் மாவட்டத்தின் நிலவரிகளை ஒழுங்காகச் செலுத்தவும் கடமைப்பட்டிருந்தார்.

பிட்டிக்ஷி

அமல்-குஷாரின் பல துணையதிகாரிகளில் பிட்டிக்ஷி என்பவர் முக்கியமானவர். நிலவரி சம்பந்தமான காரியங்களில், இவரது தகுதி அமல்-குஷாருக்கு அடுத்த நிலையில் இருந்தது. பிட்டிக்ஷி என்றால் துருக்கி மொழியில் எழுத்தர் என்று பொருள். அதிகார பூர்வமாக அவர் எழுத்தர் என்று அழைக்கப்பட்டாலும், நிலத்தையும் அதன் விளைச்சலையும்பற்றித் தேவையான பத்திரங்களையும் பதிவேடுகளையும் தயாரிப்பதும் இவரது முக்கியப் பொறுப்பாகும். இந்தப் பதிவுகளின் அடிப்படையில்தான் அமல்-குஷார் நிலவரித் தொகையை நிர்ணயிப்பார். ஒவ்வொரு கிராமத்தின் சராசரி நிலவரியைப்பற்றிய அறிக்கைகளை கனுங்கோக்களிடமிருந்து பெறுவது பிட்டிக்ஷியின் கடமை. இந்த நிலவரி கடந்த பத்தாண்டு விளைச்சலின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டதாகும். அவரது மாவட்டத்தில் செயற்படும் விசித்திரமான நிலவரி முறைகளையும் பழக்கவழக்கங்களையும் பற்றிய அறிவு அவருக்கு இருக்கவேண்டும். ஒவ்வொரு கிராமத்தின் விளைச்சல் நிலங்களையும் தரிசு நிலங்களையும்பற்றி அவர் பதிவு செய்வதும், கிராமங்களின் எல்லைகளைக் குறிப்பதும், உழவர்களுடன் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தங்களைப்பற்றித் தமது பதிவு ஏட்டில் குறிப்பதும் அவருடைய முக்கியப் பணிகளாகும். 'முனிசிபு, மேற்பார்வையிடுவோர், நிலத்தை அளப்பவர், தாஞதார், உழவர்கள், கிராமத் தலைவர் ஆகியோரின் பெயர்களையும், அவற்றின் கீழ்ப் பயிர்செய்யப்படும் விளைச்சலின் வகையையும் பதிவு செய்வது அவருடைய கடமை.' அரசாங்கக் கருவூலத்தில் வரி செலுத்தும் உழவனுக்கு ரசீது வழங்குவதும், பட்வாரி, கிராமத் தலைவர் ஆகியோரின் பதிவேடுகளைப் பரிசீலனை செய்வதும், வரவு செலவுகளைப் பற்றி நாட்கணக்கு, மாதக்கணக்கு வைத்துக்கொள்வதும், அரச

அவைக்கு மாத வரவு செலவின் மொத்தக் கணக்கு அனுப்புவதும் பிட்டிக்ஷி செய்யவேண்டிய வேறு பணிகளாகும்.

கஜான்தார்—கருவூல அதிகாரி

ஒவ்வொரு மாவட்டத்திலும் கலக்டருக்குக் கீழ்ப்பட்ட அதிகாரி களில் அடுத்து முக்கியமானவர் கருவூலக் காவலராகிய கஜான்தார் என்பவர். நிலவரியை வாங்குவதும், அதனைப் பேணிக் காத்து மையக் கருவூலத்திற்கு அனுப்பிவைப்பதும் அவரது பணிகள். முன்னுள் ஆட்சிகளின் நாணயங்களை அவர் பொன் இருப்புக்காகப் பெற்றுக்கொள்ளவும், வரி செலுத்தும் உழவர்களைத் துன்புறுத்து தல் கூடாது என்றும் அவருக்கு உத்தரவு இருந்தது. பணத்தை பத்திரமாகக் கருவூலத்தில் செலுத்தி, கலக்டருக்கு ஒரு சாவியைக் கொடுத்துவிட்டு, மற்றதைத் தன்னுடன் வைத்துக்கொள்ள வேண்டும். எந்தப் பணத்தையும் பட்டுவாடா செய்யும் அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்படவில்லை. மாவட்டத்திலிருந்து நிலவரி எவ்வாறு மைய அரசினரின் கருவூலத்திற்கு அனுப்பப்பட வேண்டுமென்ற விரிவான உத்தரவுகளும், அதனை எவ்வாறு மிகக் கவனமாகப் பின்பற்றவேண்டுமென்பது பற்றியும் எழுதப்பட் டிருந்தன.

பர்கானு ஆட்சிமுறை

ஷிக்தார்

ஒவ்வொரு சர்க்காரும் பர்கானுக்கள் அல்லது மகல்கள் என்ற உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. பர்கானுதான் ஆட்சி முறைக்கும் நிதி நிர்வாகத்திற்கும் மிகச் சிறிய ஆட்சிப் பிரிவாகும். ஒவ்வொரு பர்கானுவிலும் நான்கு முக்கிய அதிகாரிகள் இருந்தனர்; அவர்கள் முறையே ஷிக்தார், அமில், ஃபொட்டேதார், கார்க் கடன் என்பவர்கள். இவர்களையன்றி ஷெர்ஷாவின் ஆட்சிக் காலத்தில் இருந்ததுபோன்று, முழு அரசாங்க அதிகாரிகள் அல் லாத கனுங்கோ, சௌதரிபோல் இரு அதிகாரிகளும் இருந்தனர். ஷெர்ஷாவின் காலத்தில் இருந்ததுபோலவே, ஷிக்தாரின் கடமை களும் பணிகளும் இருந்தனவென்று தெரிகிறது. ஷிக்தார் பர்கானு வின் ஆட்சித்துறைத் தலைவர். அதன் பொது நிர்வாகத்திற்கு அவரே பொறுப்பாளர். பர்கானுவில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுவதோடு அல்லாமல், உழவர்கள் பர்கானு கருவூலத்தில் பணம் செலுத்தும்போது அதனைப் பெற்றுக்கொள்ளவும், கருவூல அதிகாரிகளை மேற்பார்வையிடவும், கட்டுப்படுத்தவும் அதிகாரம் பெற்றிருந்தார். குற்றவியல் நீதியும் அவர் வழங்குவார். ஆனால்,

மாஜிஸ்டிரேட் என்ற முறையில் அவரது அதிகாரங்கள் வரம்புக்கு உட்பட்டவை. அவரது அதிகாரக் கொள்கைக்கு அப்பாற்பட்ட வழக்குகளைக் கொத்தவாலுக்குத் தாக்கல் செய்வது அவருடைய கடமையாகும்.

அமில்

அமில் அல்லது முனிசிப் என்று அழைக்கப்பட்ட அதிகாரி, சர்க்காரில் அமில்-குஷார் ஆற்றிவந்த அதேவிதமான கடமைகளைப் பர்கானுவில் செய்துவந்தார். நிலவரி விதிப்பதும் அதனைத் தண்டல் செய்வதும் அவரது முக்கியப் பணியாகும். கிராமத் தலைவர்களின் மூலமல்லாமல். தானே நேரடியாக உழவர்களுடன் தொடர்பு கொள்ளவேண்டுமென்பது அவருக்கு இடப்பட்ட ஆணையாகும். இதைத் தவிர, அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதிலும், குற்றவாளிகளைத் தண்டிப்பதிலும் அவர் ஷிக்தாருக்கு உறுதுணையாக இருந்தார். நிலவரித் தண்டலில் அவர் ஷிக்தாரின் துணையை நாடவேண்டுமென்பது உத்தரவு. ஒருவேளை அவர் சிவில் நீதியும் வழங்கிவந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

ஃபொட்டேதார்

இவர் பர்கானுவின் கருவூல அதிகாரியாவார். இவர் மாவட்டத்தின் கஜான்தாரைப்போன்று அதேவிதப் பணிகளை ஆற்றிவந்தார். கார்க்கடன்கள் என்பவர்கள் எழுத்தர்கள். இவர்கள் பயிர் செய்யப்படும் நிலம், விளையும் பயிர் வகைகள், தனி உழவன் செலுத்தும் வரி, தண்டப்படும் வரித்தொகை, பாக்கித் தொகை ஆகிய கணக்குகளை எழுதிவந்தனர். அக்பர் ஆட்சியின் பிந்திய காலத்தில் இத்தகைய கணக்குகள் யாவும் பாரஸீக மொழியில் எழுதப்பட்டிருக்கலாம்.

கனுங்கோ

கனுங்கோ என்ற அதிகாரி பர்கானுவின் பட்வாரிகளின் தலைவராவார். இவர் விளையும் பயிர்கள், நிலவரி நிர்ணயம், செலுத்தப்படும் வரித்தொகைப் பாக்கிகள் முதலியவைபற்றிய கணக்குகளைப் பதிவு செய்வார். பட்வாரி கிராமங்களின் கணக்குகளை எழுதியது போல, கனுங்கோ பர்கானு முழுவதற்கும் கணக்குகளை எழுத வேண்டும். பலவிதமான நிலவரித் திட்டங்கள், மண்வளத்தைப் பற்றிய நூதனமான விவரங்கள், நிலவரி நிர்ணயம், தண்டல் போன்றவைகளைப்பற்றிய சகல அறிவிற்கும் கனுங்கோவை ஒரு கருவூலமெனக் கருதலாம். 'உழவர்களின் தஞ்சம்' என்று அபுல் ஃபாஸல் இவரைக் குறிப்பிடுகிறார். பர்கானுவின் வருவாயிலிருந்து முன்னர் இவருக்கு நூற்றுக்கு ஒரு பங்கு என்ற விகிதத்தில் கழிவு

(கமிஷன்) கொடுக்கப்பட்டுவந்தது. அவரது சொந்தப் பராமரிப்புக்காக நிலமானியமும் வழங்கப்பட்டிருந்தது.

கடல் துறைகளும் எல்லைப்புறக் காவல் நிலையங்களும்

பர்கானுக்களைத் தவிர, சில குறிப்பிட்ட வட்டாரங்களில் வேறு பல அரசியல், ஆட்சித்துறை உட்பிரிவுகளும் இருந்தன. இவைகள் கடல் துறைகளும், எல்லைப்புறக் காவல் நிலையங்களும், எல்லையரண்களும், தாணுக்களுமாகும். முகலாயர்களிடம் கடற்படை இருக்கவில்லை; ஆனால், அவர்களுடைய மேற்கு எல்லையும் கிழக்கு எல்லையும் கடல்களை அடுத்திருந்ததனால், அவர்களிடம் பல கடல் துறைகள் இருந்தன. அக் காலத்தில் கடல் துறைகளின் வழியாக நடைபெற்ற பெரு வணிகத்தின் காரணமாகக் கடல் துறைகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. மேலும், மேற்குக் கரையிலுள்ள கடல் துறைகளில், அரேபியாவிற்குப் புனித ஹஜ் யாத்திரை செல்லும் பிரயாணிகள் வந்து தங்கி, கப்பல் ஏறினார்கள். எனவே, இவைகளை ஆட்சித்துறைப் பிரிவுகளாகக் கருதவேண்டியதாயிற்று. பொதுவாக இவைகள் ஒரு சுபாவின் உட்பிரிவுகளாக இணைக்கப்பட்டிருந்தபோதிலும், நடைமுறையில் இவற்றைக் கண்காணித்துக் கொள்ளும்படி அனுப்பப்படும் அதிகாரிகள் மைய அரசினரின் ஆணைகளின்படியே நடந்துவந்தனர். கடல் துறைமுகத்தின் பொறுப்பில் ஓர் அதிகாரி இருந்தார். சில சமயங்களில் ஓர் அதிகாரியின் பொறுப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட துறைமுகங்களையும் விட்டிருப்பார்கள். சூரத் அல்லது காம்பே போன்ற பெரிய துறைமுகங்களில் ஒரு பௌஜ்தார், ஒரு காஸி, ஒரு முத்தாஸிப், ஒரு தரோகா, ஒரு முஸ்தாடி, கருவூல அதிகாரி, கணக்கர், சில கார்க்கடன்கள் எனப் பல அதிகாரிகள் இருந்தார்கள். சூரத் ஒரு சர்க்காராகக் கருதப்பட்டுப் பல பர்கானுக்களைக் கொண்டதாக இருந்தது. அதனைப் பாதுகாக்க, பலம் பொருந்திய படையும் இருந்தது. இதுபோலவே, எல்லைப்புறக் காவல் நிலையங்களும் தனி ஆட்சிப் பிரிவுகளாகவே கருதப்பட்டுவந்தன. கடல் துறைகளும், எல்லைப்புறக் காவல் நிலையங்களும் அவற்றின் வழியாக நடத்தப்பட்ட வளமான வணிகத்தின் காரணமாகச் சிறப்புப்பெற்றிருந்தன. இந்த இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சுங்கச் சாவடியும், அதனை நிர்வகிக்க ஒரு மேற்பார்வையாளரும், பல எழுத்தர்கள், சேவகர்கள், சிப்பந்திகள், வணிகர்களிடமிருந்து வரிகளை வாங்கும் அதிகாரிகள் ஆகிய பலரைக்கொண்ட ஒரு பணி மன்றமும் இருந்தன.

நகர ஆட்சிமுறை

அக்பர் காலத்திய நகர ஆட்சி முறையைப்பற்றி 'அயினி அக்பரி' விளக்கமாகக் கூறுகிறது. ஓரளவு முக்கியத்துவம் பெற்ற

ஒவ்வொரு நகரத்திற்கும் கொத்தவால் என்ற அதிகாரி தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். தற்கால வழக்கில் நகராண்மைக் கடமைகள் என்று சொல்லப்படுகின்ற பணிகளையும் காவலர் பணியையும் இவர்கள் செய்யவேண்டும். சிறிய நகரங்களில் கொத்தவால் இல்லாமையால், இக் கடமைகளை அமல்–குஷார் என்ற மாவட்ட அதிகாரி கவனித்துக்கொள்வார். தம் பொறுப்பிலுள்ள நகராண்மை, காவல்துறைக் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற இவர் தகுதிவாய்ந்த அதிகாரிகளை நியமிப்பார் (அயினி 2ஆம் தொகுதி, பக். 47). கொத்தவாலை மைய அரசினர் நியமித்தனர். நகரத்தில் ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய அளவிற்குப் போதுமான சிறிய படையொன்றிற்கும் இவர் தலைவராக இருந்தார். இரவிலும் பகலிலும் காவல் புரியவேண்டிய நகரக் காவலர்களை இவர் நியமித்து, அவர்களை நகரின் முக்கியப் பகுதிகளில் காவல் புரிய இடங்களை ஒதுக்குவார். நகர வட்டாரத்தை வட்டங்களாகப் பிரித்து, அவற்றைக் கொத்தவால் நியமிக்கும் கீழ் அதிகாரிகளின் பொறுப்பில் விடும்படி கொத்தவால்களுக்கு உத்தரவு இருந்தது. இடைக்கால ஐரோப்பாவில் இருந்ததுபோல் வணிகச் சங்கங்களிலும், தொழில் வல்லுநர் குழுக்களிலும் நகரங்களின் தொழில் வல்லுநர்கள் உறுப்பினர்களாக இருந்தனர். கொத்தவால் வணிகச் சங்கங்களின் தலைவரை அங்கீகரித்தார் அல்லது சில சமயங்களில் அவரே ஒருவரைத் தலைவராக நியமித்தார். வணிக விவகாரங்களை நடத்திக்கொள்ளச் சில வேளைகளில் ஒரு தரகரும் இருந்தார். பழைய நகரங்களின் வீதிகளின் பெயர்கள் குறிப்பிடுவதுபோன்று, ஒரு வகையான தொழிலில் ஈடுபட்டுவந்தவர்கள், அந்தத் தொழிலுக்குரிய வீதியிலோ, தெருச்சந்தியிலோ தங்கினர். மக்களுடன் தொடர்புகொண்டு, ஒவ்வொரு குடும்பத்தைப்பற்றிய விவரங்களைத் தெரிந்திருக்கவேண்டியதும் கொத்தவாலின் கடமையாகும். ஒவ்வொரு வீட்டிலும் வந்து தங்கும் விருந்தினர்களின் வருகையையும் புறப்பாடுகளைப்பற்றியும் அவர் அறிந்திருக்கவேண்டும். 'கொத்தவால் ஒவ்வொரு குடும்பத்தைப்பற்றியும் மக்கள் நடமாடும் சாலைகளைப்பற்றியும் பதிவேடு ஒன்றை வைத்திருக்கவேண்டும்; மக்களைப் பரஸ்பர உதவியின் உறுதியினால் பிணைக்க வேண்டும். இன்பத்திலும் துன்பத்திலும் அவர்கள் சம பங்கு கொள்ளும் அளவிற்கு அவர்களின் பொதுநலத்தில் அவர் நாட்டம் கொள்ளவேண்டும்' (அயினி: இரண்டாம் தொகுதி, பக். 41). மேலும், கொத்தவால் நகரத்தின் துப்புரவைக் கண்காணித்து, பொதுவீதிகளிலுள்ள தடைகளையும் இடர்ப்பாடுகளையும் அகற்ற வேண்டும். சோம்பேறிகளையும் ஊர்சுற்றிகளையும் ஏதாவதொரு வேலையில் ஈடுபடுத்தவேண்டியது கொத்தவாலின் கடமையாகும்.

கொத்தவாலின் அதிகாரங்களையும் அலுவல்களையும்பற்றி நமக்கு விரிவான செய்திகள் கிடைத்துள்ளன. அவருடைய அதிகாரங்கள் விரிவானவை. அவருடைய பொறுப்புகளோ மிக அதிகமானவை. அவரது கடமைகளைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம் :

(1) நகரத்தின் காவற்பணி.

(2) சந்தைகளைக் கட்டுப்படுத்தல்.

(3) வாரிசு அற்ற சொத்துகளைக் கண்காணித்தல்.

(4) குற்றங்களைத் தடுத்தல்.

(5) அக்பரின் சமூகச் சீர்திருத்தங்களை அமல்செய்தல்.

(6) கசாப்புக் கடைகளையும் சுடுகாடுகளையும் நிர்வகித்தல்.

'கொத்தவால், ஒன்றில் திருடர்களைக் கண்டுபிடித்து, திருட்டுப் பொருள்களை மீட்கவேண்டும்; அல்லது அவரே இழப்பீடு செய்யவேண்டும்.' விலைகளைக் கட்டுப்பாடு செய்வது, சந்தைகளை மேற்பார்வையிடுவது, அளவைகளையும் அளவைக் கருவிகளையும் சரிபார்ப்பதுபோன்றவை அவரது பணிகள். வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு குடிமகனோ அல்லது வணிகனோ வாரிசு இன்றி இறந்துபோனால், கொத்தவால் அவனுடைய உடைமைகளைப் பற்றிய ஒரு பட்டியல் தயார் செய்து, அவனது உடைமைகளைப் பாதுகாக்கவும், அவற்றை உண்மையான வாரிசுகளிடம் சேர்ப்பிக்கவும் ஏற்பாடு செய்வதும் அவரது கடமைகள். மக்களுக்கு உயிரையும், உரிமையையும், சொத்தையும்பற்றிய உறுதி அளிப்பதும்,எந்தக் காரணத்தைக்கொண்டும் தனி மனிதனின் குடும்ப விவகாரங்களில் தலையிடாமல் இருக்கவேண்டும் என்பதும் கொத்தவால் செய்ய வேண்டியவை. நகருக்கு வெளியே நிறுவப்பட்டிருந்த கசாப்புக் கடைகளை மேற்பார்வையிடுவதும், வருடத்தின் குறிப்பிட்ட சில நாட்களில் எந்த மிருகங்களையும் கொல்லாமல் தடைசெய்வதும் அவரது பிற பொறுப்புகளாகும். 'கொத்தவால் அயல்நாட்டிலிருந்து வருவோரின் வசதிகளையும், வீட்டு இருக்கை ஏற்பாடுகளையும் கண்காணிக்கவேண்டும். இவர்கள் தனியான சராய்களில் தங்கினார்கள். அவர்களின் போக்கும் வரவும் மிக நுணுக்கமாகக் கவனிக்கப்பட்டுவந்தன.'

அக்பர் நகர ஆட்சிமுறையைப் பண்டைய இந்து முறைப்படி அமைத்திருந்தார். அரசரின் சமூக, மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு நகரமே விளைநிலமாக விளங்கியது. சதி, இஸ்லாம் மதத்திற்கு வலுவந்த முறையில் சமயமாற்றம் செய்தல், பன்னிரண்டு

ஆண்டுக்குக் குறைவான சிறுவர்களுக்கு சுன்னத் செய்தல், பாலியத் திருமணம், சிசுக்கொலே, விபசாரம் முதலியவற்றைத் தடை செய்வதற்கான அரசரின் ஆணைகளைச் செயலாக்குவது கொத்த வாலின் கடமையாகும். துர்நடத்தையுள்ள பெண்களைத் தனியாகப் பிரித்து, நகரத்திற்கு வெளியே வாழும்படி செய்தார்கள். இத்தகைய பெண்களின் பட்டியலைத் தயார்செய்து, அவர்களை நாடிச் செல்வோரைக் கவனிக்கவேண்டியதும் கொத்தவாலின் கடமையாகும்.

கொத்தவாலின் கடமைகள் மிக அதிகமாக இருந்ததால், காவல்துறை அதிகாரிகள், ஒற்றர், எழுத்தர், சேவகர்போன்ற பல துணை அதிகாரிகளை நியமனம் செய்துகொள்ள அவருக்கு உரிமை வழங்கப்பட்டிருந்தது. கொத்தவாலும் நகரக் காவல் துறையினரும் அணிந்திருந்த சீருடை செந்நிறமானது.

ஊராட்சி மன்றங்கள்

நமது இனம் அரசியல் அமைப்புக்காகச் செய்திருக்கக்கூடிய மிக முக்கியமான பணி, ஊராட்சித் துறையைச் சார்ந்ததாகும். பண்டை நாள்முதல் கிராமக் குடியரசுகள் என்று தக்க முறையில் அழைக்கப்பட்ட ஊராட்சி மன்றங்கள் இந்தியாவில் இருந்து வந்திருக்கின்றன. இவை யாவும் சகோதரத்துவ பாணியிலும், குடியாட்சிப் பண்புகொண்டும் இயங்கிவந்தன. இடைக்காலம் முழுவதும் ஊராட்சி மன்றங்கள் சுயாட்சி பெற்ற உறுப்புகளாகவே இருந்தன. டெல்லி சுல்தான்கள் இந்த மன்றங்களில் தலையிடுவதைப் பயனுள்ளதாகவும் செயலாக்கமுள்ளதாகவும் கருதவில்லை. எனவே, அவர்கள் இம் மன்றங்களை அவற்றின் போக்கில் தம் வழியில் இயங்குமாறு விட்டுவிட்டனர். முழு அரசு ஊழியர்கள் அல்லாத கிராமத் தலைவர்கள், பட்வாரிகள், சௌக்கிதார்கள்போன்றோரின் மூலம் ஷெர்ஷா, ஊராட்சி மன்றங்களுடன் தொடர்புகொண்டிருந்தார். அக்பர் இன்னும் ஒரு படி மேலே சென்றார். அவர் ஊராட்சி மன்றத்தைச் சட்டரீதியான நீதிமன்றம் என்று அங்கீகாரம் செய்து, அதன் தீர்ப்புகளை ஏற்றுக்கொண்டார். அவர் பட்வாரியையும் சௌக்கிதார்களையும் பர்கானு அரசுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்தார். அவர் கிராமத்தின் வாழ்க்கையிலும் ஆட்சி முறையிலும் தலையிடவில்லை யென்றாலும், ஊராட்சி மன்றத்தின் நடவடிக்கைகளுக்கு அதிகாரபூர்வமான அங்கீகாரத்தை வழங்கியதன்மூலம் அதன் மதிப்பை உயர்த்தினர்,

அக்பர் காலத்தில் ஊராட்சிச் சிறப்பைப்பற்றிய முழு விவரங்களையும், அக் காலத்திய வரலாற்று ஆசிரியர்கள் தரவில்லை. அபுல்

ஃபாஸல்கூட ஊராட்சியைப்பற்றி அதிகமாக ஒன்றும் கூறவில்லை. ஆனால், கிராமக் குடியரசுகள் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதிக்கு மேலும், சில சந்தர்ப்பங்களில் இன்றுவரையும்கூடத் திருப்திகரமாக இயங்கிவந்ததால், ஊராட்சியானது பண்டைக் காலத்திலும் இடைக்காலத்திலும் இருந்ததுமட்டுமன்றி, நம் மக்களின் நலத்திற்கும், உறுதிக்கும், ஆட்சிமுறைக்கும் பயனுள்ள நல்ல பணியாற்றிவந்திருக்கிறது என்பதைக் கொள்ளலாம். ஒவ்வோர் ஊரும் ஓர் ஊராட்சி மன்றமாகச் செயற்பட்டது. அங்கு வாழ்ந்த குடும்பங்களின் தலைவர்களைக்கொண்ட மன்றம் ஒன்று ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தது. இந்த மன்றமே ஊராட்சிக்கும், ஊரின் காவல், துப்புரவு, தொடக்கக் கல்வி, நீர்ப்பாசனம், மருத்துவ உதவி, பொதுப்பணிகள், மக்களின் ஆன்மீக, சமய நலம், நீதி வழங்குதல் ஆகிய சகல ஏற்பாடுகளுக்கும் பொறுப்புள்ளதாக இருந்தது. பொழுதுபோக்கவும், விளையாட்டுகளுக்கும், விழாக்களைக் கொண்டாடவும் இந்த மன்றம் ஏற்பாடுகள் செய்தது. வழக்குகளை விசாரிக்க ஒரு பஞ்சாயத்து இருந்தது. கி.பி. 10ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஒரு கல்வெட்டு சான்று பகர்வதுபோன்று ஊராட்சி மன்றமானது ஆறு சிறு குழுக்களாக அல்லது வாரியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்ததென்றும், அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாகக் கடமைகள் இருந்தனவென்றும் அறிகிறோம் (பிரிட்டிஷ் இந்தியாவில் ஊராட்சி, ஜான் மத்தாய், பக். 25-76). இந்தச் சிறு குழுக்கள் ஆவன:

(1) ஆண்டு வாரியம்
(2) தோட்ட வாரியம்
(3) ஏரி வாரியம்
(4) பொன் வாரியம்
(5) நீதி வாரியம்.

இந்த வாரியங்களின் உறுப்பினர்கள் ஒருவகையான தேர்தல் முறையின்மூலம் தெரிந்துகொள்ளப்பட்டனர். பெரும்பாலும் இவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதைத் தவிர, சாதிகளுக்குள் ஏற்படும் சிக்கல்களையும் குடும்ப விவகாரங்களையும் தீர்த்துவைக்க சாதிப் பஞ்சாயத்துகளும் இருந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் சில காவற்காரர்கள், ஒரு குரு, பள்ளி ஆசிரியர், சோதிடர், தச்சர், கொல்லர், குயவர், சலவைக்காரர், முடிதிருத்துவோர், வைத்தியர், பட்வாரி, கணக்கன் ஆகியோர் இருந்தனர். இவர்களெல்லாம் ஊரின் பணியாளர்களாகக் கருதப்பட்டனர். பரஸ்பர கூட்டுறவு என்ற அடிப்படையில் இவர்கள் ஊராட்சியை நடத்தினார்கள்.

ஊரானது தன்னிறைவு பெற்ற பொதுநல அரசாகத் திகழ்ந்தது. ஊர்மக்கள், வாழ்விலும் தாழ்விலும் ஒன்றுபட்டு நின்றனர். இத் தகைய ஊராட்சி மன்றங்களின் மூலந்தான் நமது சமூகமும் கலா சாரமும் வழிவழியாகப் பேணிக்காக்கப்பட்டு வந்திருக்கின்றன.

படை நிர்வாகம் - மான்சப்தாரி முறை

அக்பரின் ஆட்சித் தொடக்கத்தில் முகலாயப் படையில் மங்கோலியர், துருக்கியர், உஸ்பெக்குகள், பாரசீகர், ஆப்கானியர் போன்ற பல அந்நிய நாட்டவர்கள் இருந்தனர். இவர்களெல் லாரும் பாபர், ஹுமாயூன் ஆகியோரின் படைவீரர்களாகவும் ஆதரவாளர்களாகவும் அவர்களைப் பின்தொடர்ந்து இந்தியாவிற்கு வந்தவர்களாவர். படைத்தளபதிகளும், படைவீரர்களின் அதே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்களுக்கு சம்பளத் திற்குப் பதிலாகப் பெரிய நிலமானியங்கள் வழங்கப்பட்டிருந்தன. மக்கள் தலைவர் என்ற முறையில் ஹுமாயூன் திறமையற்றவராக இருந்த காரணத்தாலும், படைத்தலைவர்களின் பதவிகள் ஓரளவு சுதந்திரத்துடன் இருந்ததாலும், படை உயர்குடியாளர் பணிய மறுக்கின்ற சார்புகொள்ளத் தொடங்கினர். இதனால் முகலாயப் படை வன்மையற்ற ஒரு கருவியாகிக்கொண்டுவந்தது. படை அதிகாரிகள் வைத்திருக்கவேண்டுமென்ற அளவு படைவீரர்களைக் கூட அவர்கள் வைத்துக்கொள்ளவில்லை. அவர்கள் ஒழுங்கீனங் களிலும், நேர்மையற்ற செயல்களிலும் ஈடுபட்டு, அரசாங்கத்தை யும் படைவீரர்களையும் ஏமாற்றினார்கள். எத்தகைய சீர்திருத்த முயற்சிகளையும் அவர்கள் எதிர்த்ததோடு, அக்பர் அதிகாரத்தை ஒருமைப்படுத்துவதையும், படையை ஒருமுக அமைப்பாக மாற்று வதையும் எதிர்க்க முயன்று வந்தனர். ஆட்சித் தொடக்கத்தில் அக்பர், தமது முகலாய, உஸ்பெக் படை அதிகாரிகளிடமிருந்து பல கிளர்ச்சிகளை எதிர்க்கவேண்டியதிருந்தது. படையைக் கட்டுப் படுத்தவும் இயக்கவும் தேவையான முழு அதிகாரத்தையும் தம் கைகளில் வைத்துக்கொண்டாலன்றி, தம் ஆதிக்கத்தை உறுதி யாக நிலைநாட்ட முடியாது என்ற முடிவுக்கு அக்பர் வந்தார். இதனால் அரசர் பணியாத படையதிகாரிகளை அடக்கி, ஊழல்களை ஒழித்து, படையை ஒரு வன்மையான கட்டுப்பாடுள்ள படையாக ஆக்கக்கூடிய அளவிற்குப் படையினைத் திருத்தி அமைக்கவும் முடிவுசெய்தார். இதன் விளைவுதான் மான்சப்தாரி முறையாகும்.

மான்சப் என்ற சொல்லுக்குப் பதவி வரிசை அல்லது தகுதி என்பது பொருள். எனவே, மான்சப்தார்கள் என்பவர்கள் அரசப் பணியில் பதவி வரிசைகளைப் பெற்றவர்களாவர். இதன் மிகக்

குறைந்த தகுதி பத்தும், மிக உயர்ந்த தகுதி பத்தாயிரமும் ஆகும். அக்பர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் அவர் மிக உயர்ந்த வரிசையைப் பன்னீராயிரமாக உயர்த்தினர். (பதோனி: 2ஆம் தொகுதி, பக். 342). மான்சப்தாரிமுறை நிறுவப்பட்டபோது, 5,000 மான்சப் வரிசை அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்களுக்காக, அதாவது, பேரரசரின் புதல்வர்களுக்கும் பேரர்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனல், பின்னர் ராஜா மான்சிங், மிர்ஸா அஸிஸ்கோக்கா போன்ற உயர்தர அதிகாரிகள் 7,000 மான்சப் வரிசைக்கு உயர்த்தப்பட்டனர். பின்னர் 8,000 மான்சப் வரிசைகளும் அதற்கு மேற்பட்ட தகுதிகளும் அரச குடும்பத்தின் உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டன. தொடக்கத்தில் அக்பர் ஒவ்வொரு மான்சப்பைப் பொறுத்தவரையிலும், ஒவ்வொரு வகை அல்லது தரவரிசையைமட்டும் ஏற்படுத்திஞர். ஆனல், அவரது ஆட்சியின் இறுதியில், 5,000 மான்சப்பிலிருந்து இறங்கு வரிசையில் ஒவ்வொன்றிலும் மூன்று தர வரிசைகளை ஏற்படுத்திஞர். இப்போதுதான் ஸாவர் என்ற புதிய தர வரிசை நிறுவப்பட்டது. எனவே, அநேக மான்சப்தார்கள் இரட்டைத் தர வரிசை பெற்றிருந்தனர். அதாவது, ஸாட், ஸாவர் ஆகிய இரு வரிசைகளையும் தாங்கியிருந்தனர். மான்சப்தார்கள் தங்களின் வரிசைகளுக்கு ஈடான படைவீரர்களின் முழுத் தொகைகளையும் வைத்திருக்கவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. எடுத்துக்காட்டாக, 1,000 மான்சப்தார் ஒருவர் தமது தலைமையில் 1,000 வீரர்களை வைத்திருக்கவேண்டுமெனக் கட்டாயமில்லை. எனவே, 1,000 தர வரிசை மான்சப்தாரை, 1,000 படைவீரர்களின் தலைவர் என்று குறிப்பிடுவது தவருகும். இத் தவற்றை ப்ளோச்மான், இர்வின், வி. ஏ. ஸ்மித், இன்னும் பல வரலாற்று ஆசிரியர்களும் செய்திருக்கிருர்கள். மான்சப்தார்கள் தங்களின் பணியில் குறிப்பிட்ட ஓர் அளவு வீரர்கள் வைத்திருக்கவேண்டுமென்பது உண்மைதான்; ஆனல், அந்த எண்ணிக்கை அவர்களின் தரவரிசையில் ஒரு பகுதிதான். மான்சப்புகள், மைய அரசின் அதிகாரிகளுடைய தகுதிகளையும் சம்பளங்களையும் நிர்ணயிப்பதற்கு ஒரு வசதியான வழியாக இருந்தன. உயர்தர வரிசையைச் சேர்ந்த மான்சப்தார் ஒருவர், அதற்கு இணையான பெரியதொரு பதவியில் இருக்கவேண்டுமென்பது கட்டாயமில்லை. ராஜா மான்சிங் 7,000 மான்சப் தரவரிசை பெற்றிருந்தபோதிலும், அவர் என்றும் அரசவையில் ஓர் அமைச்சராக இருக்கவில்லை. மான்சிங் பெற்றிருந்த தரவரிசைக்குக் கீழான மான்சப்புகளைச் சில அமைச்சர்கள் பெற்றிருந்தனர். அரசின் உயர்தர அதிகாரிகள் சிலர் பெற்றிருந்த தரவரிசைகளைவிடச் சிறிய மான்சப் ஒன்றை அபுல் பாஸல் பெற்றிருந்தார். ஆனல், அவர் தம்மைவிடத் தரவரிசையிலும் சம்பளத்திலும்

உயர்ந்திருந்தவர்களைவிட உயர்ந்த பதவியை வகித்தார். மேலும், மான்சப்தார் ஒருவர் முறையான ஒரு பதவியையோ, அல்லது பொறுப்பையோ வகிக்கவேண்டுமென்ற அவசியமும் இல்லை. சில மான்சப்தார்கள், அரசரின் ஆணைகளுக்காகக் காத்திருப்பது, வேளா வேளைகளில் அவர்களுக்கு இடப்படும் பணிகளைத் தாங்கிச் செய்வதையும் தவிர, மற்ற எந்தவிதப் பொறுப்பும் ஏற்றுக்கொள்ள வில்லை. இவர்களின் பணிகளும் சீரியல் பணிகள் என்றோ, பேரியல் பணிகள் என்றோ பிரிக்கப்படவும் இல்லை. எந்த மான்சப்தாரும் தம்முடைய சேவையில் மேலே குறிப்பிட்ட இருவகையான பணிகளில், எதுவொன்றை ஆற்றவும் அழைக்கப் படலாம். மைய அரசின் அதிகாரிகள் யாவரும், காஸிகளையும், ஸாதர்களையும் தவிர மான்சப்தாரி முறையின் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தார்கள். அவர்களின் தரவரிசைக்குத் தகுதியான சில படைவீரர்களை அவர்கள் வைத்திருக்கவேண்டு மென்ற கடமையும் இருந்தது. முழுச் சுதந்திரம் இல்லாத இராச் சியங்களின் தலைவர்களாக இருந்த சிற்றரசர்களும், மான்சப்தார் களாகப் பதிவுபெற்று, பிற மான்சப்தார்களைப்போன்று, தமது தலைமையில் முறையான படைவீரர்களை வைத்திருக்கவேண்டும் என்றும், குறிக்கப்பட்ட காலங்களை, அவற்றைத் திரட்டவும், அரசரின் பார்வைக்குக் கொண்டுவரவும் கடமையுடையவர்களாக இருந்தனர். மான்சப்தார்களின் பதவி நியமனம், பதவி உயர்வு, பதவி நீக்கம்பற்றிய திட்டவட்டமான விதிகள் இருக்கவில்லை. அரசரின் நன்மதிப்பைப் பெற்றிருக்கும்வரையில்தான் இவர்களின் நியமனம், பதவி உயர்வு, பதவி நீக்கம் ஆகியவை யாவும் நிகழ்ந் தன. அரசர் விரும்பினால் மான்சப்தார்களை இழிவுபடுத்தி, பதவி நீக்கம் செய்யவும் முடியுமாம். வழக்கமான நடைமுறை என்ன வென்றால், ஒரு மான்சப்தார் படை திரட்டும் பணியில் நல்ல முறையாகச் செயலாற்றி, கட்டுப்பாடும் ஒழுங்கும் உள்ள வீரர் களைக் கொண்ட படைகளை அவருக்குக் குறிக்கப்பட்ட அளவுக்குக் கொண்டு வருவாரானால், அவருக்கு அடுத்த மான்சப் தரவரிசை வழங்கப்பட்டது. சில வேளைகளில் மிகச்சிறப்பான திறமையுள்ள ஒரு மான்சப்தார், தனது பிரமாணிக்கமான, பற்றுறுதியான பணியிலும், பேரரசரின் நன்மதிப்பைப் பெற்றால், அவருக்கு வழக்கத் திற்கு விரோதமான மிக மேலான பதவி உயர்வு வழங்கப்பட்டது. மிக உயர்ந்த மான்சப் தர வரிசையைப் பெறுவதற்கு மான்சப்தார் கள், பல்வேறு படிமுறையான மான்சப்களின் வழியாகத்தான் பெற வேண்டும் என்ற அவசியம் இல்லை. மான்சப்தார்களுக்கு உயர்ந்த சம்பளம் பணமாகக் கொடுக்கப்பட்டது. சில சமயங்களில் குறிக் கப்பட்ட சில மான்சப்புகளின் சம்பளத்திற்கு இணையான வருவாயைத் தரக்கூடிய நில மான்யங்களும் மான்சப்தார்களுக்கு

வழங்கப்பட்டது. அக்பர் நில மான்யங்களுக்குப் பதில் சம்பளத்தைப் பணமாகக் கொடுப்பதையே விரும்பினர். மான்சப்தார் ஒருவருக்கு நிலமான்யம் வழங்கப்படும்போதுங்கூட, அவர் நீண்டநாளாக நிலத்தை அனுபவிக்க முடியாது; அவரது மான்யம் மாநிலத்திலிருந்து மாநிலத்திற்கு மாற்றப்பட்டது. மான்சப்தாரி முறை நிறுவப்பட்ட பின்னர், மான்யம் செய்யப்பட்ட நிலத்தின் வரி நிர்ணயமும், வரித்தண்டலும், நிலவரித்துறை அதிகாரிகளால் செய்யப்பட்டது. மான்யம் பெற்ற மான்சப்தார்களின் வகையாட்களுக்கு, நிர்ணயிக்கப்பட்ட நிலவரியை அதிகரிக்கவோ, நிர்ணயிக்கப்பட்ட வரிக்கு அதிகமான தொகையை உழவர்களிடம் இருந்து பெறவோ அதிகாரம் இல்லை. மான்சப்தார்களுக்குப் பன்னிரண்டு மாதங்களும் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று இர்வின், ஸ்மித், மூர்லண்ட் போன்ற வரலாற்று ஆசிரியர்கள் யூகிக்கிருர்கள். இவர்களுக்கு ஏழு முதல் ஒன்பது மாதங்கள், அல்லதுசில சமயங்களில் நான்கு மாதங்களுக்கு மட்டுமே சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்பது அவர்களுடைய கருத்தாகும். இதற்கு அக்காலத்து வரலாற்று ஆசிரியர்கள் சான்று பகரவில்லை. அவர்கள் மான்சப்தார்களுக்கு ஆண்டு முழுவதற்கும் சம்பளம் கொடுக்கப்பட்டதென்று தெளிவாகக் குறிப்பிடுகிருர்கள். சம்பந்தப்பட்ட மான்சப்தாரின் சம்பளத்திலிருந்து, அரசாங்கம் மான்சப்தாருக்குக் கொடுக்கப்பட்ட தளவாடங்களின் செலவுக்கும், கடன்களுக்குமான தொகையையும், மான்சப்தாரின் படைவீரரின் தளவாடங்களுக்காகும் செலவிற்காக ஒவ்வொரு படைவீரரின் சம்பளத்திலிருந்து ஐந்து சதவீதம்கழித்துக்கொண்டதாலும், மேற்கூறிய ஐயப்பாடு ஏற்பட்டிருக்கக்கூடும்.

மான்சப்தார்கள் தங்களின் சொந்தப்படைகளைத் தெரிந்தெடுப்பதற்கு உரிமை உண்டு. அவர்கள் பெரும்பாலும் தங்களின் சொந்த இனத்தை அல்லது குலத்தைச் சேர்ந்த வீரர்களையே படைகளில் சேர்த்துக்கொண்டனர். மான்சப்தார்களின் பெரும்பான்மையினர் அந்நிய துருக்கியர்களும், பாரசீகரும், ஆப்கானியரும், இந்திய நாட்டு ராஜபுத்திரர்களும் ஆவர். சில அராபியர்களும், பிற அந்நிய நாட்டவர்களும் மான்சப்தார்களாக இருந்தனர். உயர்ந்த தரவரிசைகளைப் பெற்றிருந்த இந்திய முஸ்லீம்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. மான்சப்தார்கள் தங்களின் சொந்தக் குதிரைகளையும், போர்த் தளவாடங்களையும் வாங்கிக்கொள்ளவேண்டும்; சில வேளைகளில் இவற்றை அரசினரும் கொடுத்துதவினர்கள். படையில் சேர்ந்து, முதல் வருகைப் பதிவின்போது, படைவீரர்களையும், குதிரைகளையும்பற்றி விளக்கமான பட்டியல் பதிவாகி, குதிரைகளுக்குச் சூடும் போடப்படும்.

ஒவ்வொரு குதிரைக்கும் இரண்டு அடையாளங்கள் போடப்படும். வலத் தொடையில் அரசினரின் அடையாளமும், இடத் தொடையில் குறிப்பிட்ட மான்சப்தாரின் அடையாளமும் பொறிக்கப்படும். ஒவ்வொரு மான்சப்தாரும் அடிக்கடி படைக்கணக்குக் கொடுக்க வேண்டும். இது ஆண்டிற்கு ஒரு முறையோ, மூன்று ஆண்டு களுக்கு ஒரு முறையோ நடக்கும். அதுகாலை மான்சப்தார்கள் படைகளைப் பரிசீலனைக்காகக் கொண்டு காட்டவேண்டும். ஒவ்வொரு மான்சப்தாருக்கும் நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் கொடுக் கப்பட்டது. அதிலிருந்து அவர் தமது மான்சப்பின் செலவுகளை யும், படைவீரர்களின் சம்பளத்தையும் கொடுக்கவேண்டும். மான்சப்பிற்கான சகல செலவுகளையும் கழித்தபின்னரும், அவ ருடைய சம்பளம் கவர்ச்சியாக இருந்தது என்பதை, மூர்லண்ட் தருகின்ற கீழ்க்கண்ட பட்டியலிலிருந்து கண்டுகொள்ளலாம்:

தரவரிசை	மாதச் சம்பளம்—ரூபாய்க் கணக்கில்			தகுந்த படையின் நிர்வாகச் செலவு
	முதல் வகுப்பு	2ஆம் வகுப்பு	3ஆம் வகுப்பு	
5,000	30,000	29,000	28,000	10,600
3,000	17,000	16,800	16,700	6,700
1,000	8,200	8,100	8,000	3,000
500	2,500	2,300	2,100	1,170
50	250	240	230	185
10	100	82½	75	44

ஸாட்டும் ஸாவரும்

ஸாட், ஸாவர் என்ற வகைகளைப்பற்றி அறிஞர்களிடையே பல்வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. பிளோச்மான் என்பவர் கருத்துப்படி, ஸாட் என்பது ஒரு மான்சப்தார் வைத்திருக்க வேண்டிய படைவீரர்களின் எண்ணிக்கையைக் குறித்தது. ஸாவர் என்பது அவரிடம் இருக்கவேண்டிய சரியான குதிரைவீரர் களின் எண்ணிக்கையாகும். இதற்கு மாறாக இர்வின் என்பவர் ஸாட் என்பது குதிரை வீரர்களின் எண்ணிக்கை என்றும், ஸாவர் என்பது ஒரு கவுரவம் எனவும், ஸாட்டைப்போன்று அது குறிக்கும் சரியான எண்ணிக்கைக்குப் பதிலாக இருக்கிறதென்றும் கூறுகிறார்.

டாக்டர் டி. ஆர். டிரிபாத்தி என்பவரின் கருத்துப்படி ஸாவர் தரவரிசை ஒரு மேலதிகமான கவுரவம் எனவும், அது குறித்த அளவு குதிரை வீரர்களை மான்சப்தார் வைத்திருக்கவேண்டிய கடமை இல்லை எனவும் கொள்ளப்படுகிறது. ஆனால், ஸாவர், தரவரிசைக்காக அவருக்கு அதிகப்படியான செலவுப் படி கொடுக்கப் பட்டது. ஸாட் தரவரிசை, மான்சப்தார் குறிப்பிட்ட அளவு யானைகளையும், குதிரைகளையும், சுமை தாங்கும் விலங்குகளையும், வண்டிகளையும் வைத்திருக்கக் கடமையுண்டென்றும், ஆனால், குதிரை வீரர்களையோ, குதிரைப்படையையோ வைத்திருக்க அவசியமில்லை என்றும், ஆனால், ஸாவர் என்பது ஒரு மான்சப்தார் வைத்திருக்கவேண்டிய சரியான குதிரைப்படையின் எண்ணிக்கை யைக் குறிக்கிறதென்றும், அப்துல் அஸிஸ் என்பவர் கருத்துத் தெரிவிக்கிறார். பிளோச்மான் கொடுக்கின்ற விளக்கமே, ஸாவர் தரவரிசையை நிறுவிய பின்னர் நிலவிய உண்மை நிலைமைக்கு ஓரளவு பொருத்தமாகத் தெரிகிறது. மான்சப்தாரிமுறை நிறுவப் பட்டுப் பல ஆண்டுகளின் பின்னர், பல தரத்தைச் சேர்ந்த மான்சப் தார்கள், அவர்களின் தரவரிசைகளுக்குக் குறிக்கப்பட்ட குதிரை வீரர்கள், படைக்கணக்கின்போது கொண்டுவரத் தவறினார்கள் என்பது தெரிகிறது. மேலும், ஒவ்வொரு தரவரிசையிலும், குதிரைகள், குதிரை வீரர்கள், யானைகள், ஒட்டகங்கள், எருதுகள் முதலிய யாவற்றையும் ஒன்றாகத் திரட்டியது குழப்பத்தை விளை வித்தது. ஒருவேளை இந்தக் குழப்பத்தைத் தவிர்க்கவும், ஒவ்வொரு தரவரிசைக்கும் குறிக்கப்பட்ட அளவு குதிரை வீரர் களின் முழுத்தொகையை மான்சப்தார்கள் கொண்டு வருவதை வற்புறுத்தவும், அக்பர் ஸாவர் தரவரிசையை ஸாட் தரவரிசையி லிருந்து வேறுபட்ட தனி கவுரவமாக நிறுவி இருக்கலாம். அது முதல் ஸாட் தரவரிசையானது மான்சப்தார்கள் போகவேண்டிய குதிரைகள், யானைகள், சுமைதாங்கும் விலங்குகள், வண்டிகள் முதலியவற்றைக் குறித்தவையே யன்றிக் குதிரைவீரர்களையோ, குதிரைகளையோ குறிப்பிடவில்லை. தற்கால அறிஞர்கள் கருதுவது போன்று, ஸாட் தரவரிசை தனிப்பட்ட வரிசை ஆகாது. ஆனால், ஸாவர் தரவரிசையோ, அக்பர் காலத்தில் ஒரு மான்சப்தார் பேண வேண்டிய குதிரைவீரர்களின் சரியான எண்ணிக்கையைக் குறித்தது. அக்பரின் வழித்தோன்றல்கள் காலத்தில் இந்த விதி தளர்ந்து, குதிரை வீரர்களின் எண்ணிக்கை ஸாவர் தரவரிசைக் கும் கீழாக இறங்கிவிட்டது.

மூன்று தரவரிசைகள்

5,000 மான்சப்பும், அதற்குக் குறைந்த மான்சப்புகளும் மூன்று தரவரிசைகளாக இருந்தன. அதாவது, முதல், இரண்டு,

மூன்று என்ற தரவரிசைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன என்பது ஏற்கெனவே குறிப்பிடப்பட்டது. ஒரு மான்சப்தாரின் ஸாட் தரமும், ஸாவர் தரமும் ஒரே நிலையாக இருந்தால் அவர் முதல் தரவரிசையைச் சேர்ந்தவராவார். அதுபோல் அவருடைய ஸாவர் தரவரிசை ஸாட் தரவரிசையைவிடக் குறைவாக இருந்து, ஆனால், ஸாட்டின் பாதிக்குக் கீழ்க் குறையாமல் இருந்தால் அவர் அந்தத் தரத்தின் இரண்டாவது நிலையைச் சேர்ந்தவர். அவருடைய ஸாவர் வரிசை, ஸாட் வரிசைக்குப் பாதிக்கும் குறைவாக இருந்தாலோ, அல்லது அவருக்கு ஒரு ஸாவர் வரிசையுமே இல்லாதிருந்தாலோ, அவர் தரத்தின் மூன்றுவது நிலையைச் சேர்ந்தவராவார். எடுத்துக்காட்டாக, 5,000 ஸாட் மான்சப்தார் ஒருவருடைய ஸாவர் தரமும் 5,000 ஆக இருக்குமானால், அவர் அந்த 5,000 தரவரிசையின் முதல் நிலையைச் சேர்ந்தவர். அவருடைய ஸாட் வரிசை 5,000 ஆகவும், ஸாவர் வரிசை 2,500 ஆகவும் இருக்குமானால் அவர் அந்தத் தரவரிசையின் இரண்டாவது நிலையைச் சேர்ந்தவர். அவரது ஸாட்வரிசை 5,000 ஆகவும், ஸாவர் 2,500-க்குக் குறைவாகவும் இருந்தால் அவர் மூன்றுவது நிலையைச் சேர்ந்தவர். இந்த விதி எல்லா மான்சப்புகளுக்கும் பொதுவிதியாகும். மேலும், தூ அஸ்பா, ஷி அஸ்பா என்ற வரிசைகளை நிறுவியதால் இது இன்னும் அதிகமாகக் குழம்பிக் காணப்பட்டது. ஆனால், இந்தச் சேர்க்கைகள் அக்பரின் வழித் தோன்றல்களின் காலத்தில் நடந்ததால், நாம் அவற்றைப்பற்றி இங்கே தெரிந்துகொள்ள வேண்டியதில்லை.

சில மான்சப்தார்கள், நேரடியாகச் சம்பந்தப்பட்ட மான்சப்தார்களால் திரட்டப்படாமல், நேரடியாக அரசினரால் திரட்டப்பட்ட படைகளுக்குத் தலைமை தாங்கினர். இத்தகைய படைகள் தாக்கிலி அல்லது துணைப்படைகள் என்று அழைக்கப்பட்டன. இதில் தாக்கிலி குதிரைப்படையும், தாக்கிலி காலாட்படையும் இருந்தன. இதைத் தவிர 'அகடிஸ்' என்ற சான்றுளர் படையும் இருந்தது. இவை தனிப்பட்ட முறையில் திரட்டப்பட்டு, தனியான மான்சப்தார் அல்லது அதிகாரியின் கீழ் இருந்தன. இதற்குத் தனியான ஒரு திவானும் ஒரு பக்ஷியும் இருந்தனர், 'அகடிஸ்' படைகள் சிறந்த திறமையும் பிரமாணிக்கமும் கொண்ட படைகளாகும். இவர்களுக்கு உயர்ந்த சம்பளங்கள் கொடுக்கப்பட்டன. சில சமயங்களில் ஒவ்வோர் அகடிஸ் போர்வீரரும் மாதம் 500 ரூபாய் கூட சம்பளமாகப் பெற்று வந்தார்.

முகலாயப் படையில் காலாள், குதிரை வீரர்கள், பீரங்கி ஆயுதப்படை, யானைப்படை முதலிய பிரிவுகள் இருந்தன; ஆனால்,

கடற்படை இல்லை. குதிரைப்படையே மிக முக்கியக் கிளையாகக் கருதப்பட்டதோடு, படையின் மிகச் சிறந்த அமிசமாக இருந்தது. இது பெரும்பாலும் மான்சப்தார்கள், அகடிஸ் வீரர்களைக் கொண்டிருந்தது. காலாட்படை மிக முக்கியமானதாகக் கருதப்படவில்லை. அதில் துப்பாக்கி வீரர், வில்லாளிகள், மிவாட்டிஸ், வாள்வீரர், மல்லர்கள், கட்டியக்காரர், சுமை தூக்கிகள், அடிமைகள் (செலா) ஆகியோர் இருந்தனர். 'பண்டூக்கிகள்' என்றழைக்கப்பட்ட துப்பாக்கி வீரர்கள்தாம் காலாட்படையின் முக்கியக் கிளையினராகக் கருதப்பட்டனர். அக்பர் காலத்தில் துப்பாக்கி வீரர் மட்டும் மொத்தம் பன்னீராயிரம் இருந்ததாக நாம் அயினி அக்பரியிலிருந்து தெரிந்துகொள்கிறோம். மீவாட்டிஸ் என்ற பிரிவினர் சில ஆயிரம் பேர்களே இருந்தாலும் அவர்கள் புகழ்பெற்ற வீரர்களாகவும், சிறந்த துப்புத்துலக்கும் நிபுணர்களாகவும் கருதப்பட்டனர். அவர்களைப் பெரும்பாலும் கடிதம் அல்லது செய்தி கொண்டுசெல்லும் தூதுவர்களாகப் பயன்படுத்தினர்கள். ஓர் இலட்ச வாள்வீரர்கள் இருந்தார்களென்றும், அவர்களில் 1,000 பேர் அரசவையின் அவசர சேவைக்காக எப்போதும் தயாராக வைக்கப்பட்டிருந்தார்கள் என்றும் தெரிகிறது. இவர்கள் வீரத்திற்கும், திறமைக்கும், வாள்வித்தைக்கும் புகழ்பெற்றவர்கள். கட்டியக்காரர்களும் சுமைதூக்குவோருங்கூடப் போர்வீரர்கள் வகையினராகக் கருதப்பட்டனர். பல யானைகளாலும், ஆயிரக்கணக்கான எருதுகளினுலும் சுமக்கப்பட்ட பெரிய பீரங்கி ஆயுதங்கள் இருந்தபோதிலும், ஆயுதப்படையானது அதிகத் திறமையுள்ளதாக இருக்கவில்லை. அதில் பலவிதமான துப்பாக்கிகள் இருந்தன. படையின் இந்தப் பிரிவின் பொறுப்பில் மீர்அட்டிஸ் என்று ஓர் அதிகாரி இருந்தார். இதைத் தவிரப் பலவிதங்களில் பயன்படுத்தப்பட்ட போர் யானைகளும் இருந்தன. அவை போர்த்தளவாடங்களைச் சுமந்து சென்றன. போர்க்களத்தில் அவை பாதுகாக்கும் ஆயுதங்களையும், எதிர்த்துத் தாக்கும் ஆயுதங்களையும் தாங்கிச்செல்லும். அவைகள் எதிரி வீரர்களைப் பிடித்துத் தரையில் தள்ளி, தமது பாதங்களால் மிதித்துக் கொல்லும். அவற்றின் முதுகிலே சுமந்து செல்லும் பெரிய பீரங்கிகளில் மருந்துகளை ஏற்றி, நெருப்பு வைத்துச் சுடுவார்கள். அத்தகைய பீரங்கிகளுக்கு 'கஜநல்கள்' என்று பெயர். கஜநல் பீரங்கி தாங்கும் யானைமீது இரண்டு போர் வீரரும் இரண்டு பீரங்கிகளும் இருக்கும்.

அக்பருடைய நிலப்படை, அரசாங்கக் கருவூலத்தினுல் தளவாடங்கள் தரப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வந்ததென்றும், அதில் 25,000 வீரர்களுக்குமேல் இருக்கவில்லையென்றும் பிரோச்மான் என்பார் கருதுகிருர். பிற்கால ஆராய்ச்சியின் விளைவாக

இந்தக் கணக்கு மிகக் குறைவானது என்று கூறுகிருர்கள். ஜஹாங்கீரும், ஷாஜஹானும் வைத்திருந்த நிலப்படையின் எண் ணிக்கை மூன்று இலட்சத்திற்குக் குறைந்தது அல்ல என்பது நமக்குத் தெரியும். அக்பருடைய நிலப்படையின் எண்ணிக்கை முன் னூருயிரத்திற்குக் குறையாமல் இருந்திருக்கவேண்டும். இந்தக் கணக்கோடு, மான்சப்தார்களின் படைகளேயும் அரசரோடு நேரடித் தொடர்பு கொண்டிருந்த படைகளேயும் சேர்த்துக்கொள்ள வேண்டும். மிக அதிகமான வீரர்களேக் கொண்டிருந்த காலாட் படை வீரர்களின் கணக்கு இதில் சேரவில்லே.

அக்பர் தமது படை அமைப்பில் அதிகமான கவனத்தையும் ஆர்வத்தையும் காட்டினுர். அதன் அமைப்பு, படைக்கலத்தரிப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றைப்பற்றி அவர் நுணுக்கமான விதிகளேயும், ஒழுங்குகளேயும் வகுத்தார். குதிரைகளுக்குச் சூடுபோடுவதற்கு (டாக் மாஹலி) பல துணே எழுத்தர்களேக்கொண்ட ஓர் அதிகாரி யின்கீழ்த் தனியாக ஒரு துறையே இருந்தது. இந்த விதிகளெல்லாம் முறையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றனவாவென்றும், படையின் கட்டுப்பாடு சிதையாமல் இருக்கிறதாவென்றும் அறிய சிறப்பான கவனம் செலுத்தப்பட்டது. மனித குணவியல்புகளேக் கண்டு தெளிவதில் தவருத திறமை பெற்றிருந்த அக்பர், நல்ல வீரமும் திறமையும் உள்ளவர்களேயே மான்சப்தார்களாக நியமித்தார். தமது படைத்துறையில் குறையுள்ள இடங்களே அவர் சரியாகச் சுட்டிக்காட்டி, உடனடியாக அந்தக் குறைகளே நீக்கினுர். அவரது படை முறை மிகத் திறமையாகச் செயற்படுவதில் அவர் வெற்றி பெற்றதால்தான், அவரது ஆயுள்காலத்தில் போர்க்களங் களில் தோல்வியைக் காண முடியவில்லே.

ஆனுல், மான்சப்தாரி படை முறையானது இயல்பிலே வன்மை யற்றதாகும். அக்பர் ஆட்சியின் முதல்பாதியில் எவ்வாறு மான் சப்தார்கள் வீதிகளில் நின்றுகொண்டிருந்தவர்களேப் படைச் சீருடையில் கொண்டுவந்து வீரர்களெனக் காட்டி, அரசாங்கத்தை ஏமாற்றி வந்தார்கள் என்ற செய்திகளேயெல்லாம், சுவையுடன் அக்காலத்திய வரலாற்று ஆசிரியர்கள், சிறப்பாக பதோனி போன்ற வர்கள் படம்பிடித்துக் காட்டுகிருர்கள். படைவீரர்களும், படைத் துறையினுல் வழங்கப்படும் நல்ல குதிரைகளுக்குப் பதிலாகப் பயனற்ற குரைகளேக் காட்டி ஏமாற்றுவதும் சாதாரண நிகழ்ச்சியாக இருந்தது. இத்தகைய ஊழல்களேயெல்லாம் நீக்குவதற்கு அக்பருக்குப் பல ஆண்டுகள் பிடித்தன. 1581ஆம் ஆண்டிற்குப் பின்னர், படைக்கணக்கெடுப்பின்போது திருட்டுத்தனமாகப் போலி வீரர்களேயும் குதிரைகளேயும் காட்டுவது என்பதும், மான்சப்தார்

கள் வீரர்களின் சம்பளங்களைச் சூறையாடுவதும் அரிய நிகழ்ச்சிக ளாக இருந்தன. ஆனால், இவையெல்லாம் அக்பரிடம் இருந்த தலைவருக்குரிய அரிய திறத்தாலும், நிர்வாகச் சிறப்பாலும், இடை விடாத விழிப்பினாலும், கட்டுப்பாட்டு ஒழுங்கினாலும் கைகூடின என்பதை மறக்கக்கூடாது. ஒரு படைப் பகுதியிலிருந்து மற்றொரு படைப்பகுதிக்கு அதிகாரிகள் மாற்றப்படவில்லை. இரண்டாவதாக ஒரு மான்சப்தாரின் படைப்பிரிவுக்குள்ளேயே, படைகள் சிறு பகுதிகளாகப் பிரிக்கப்படவில்லை. எல்லா வீரர்களும் நேரடியாக அவரது தலைமையில் இருந்தனர். ஒவ்வொரு வீரனும் மான்சப் தாருடன் தனிப்பட்ட உறவு கொண்டிருந்தான். மேலும், மான்சப் தார் படையின் ஒவ்வோர் உறுப்பின் எண்ணிக்கையும் ஒழுங்கு படுத்தப்பட்டு, குறிப்பிட்ட அளவு என்று நிர்ணயிக்கப்படவில்லை. படை திரட்டுவதும், அதை நிர்வாகம் செய்வதுமாகிய கடமைகளை மான்சப்தார்களிடமே விட்டுவிடுகின்ற ஒரு படையமைப்பு முறை யில் ஊழல்கள் இருக்கத்தான் செய்யும். ஏனெனில், மான்சப்தார் களே படைத்தலைமை அதிகாரிகளாகவும் இருந்தனர். நான்காவ தாக, படைவீரர்களின் சம்பளத்தை மான்சப்தார்கள் மூலமாகப் பட்டுவாடா செய்வது என்பது கெடுதலான ஓர் ஏற்பாடாகை யால், தீயவழிகள் இதனைப் பயன்படுத்தக் காரணமாயிற்று. ஐந்தாவதாக, மான்சப்தாரி முறைக்கு இயல்பான ஒரு மையம் இல் லாததால் அம் முறையில் ஓர் இணைப்பு சக்தி இருக்கமுடியவில்லை. இத்தகைய ஒரு சக்தி தேசியப் படைக்கு மிக முக்கியமானதாகும். ஆறாவதாக, மான்சப்தார்களின் திறமைக்கு ஏற்றவாறு படைத் திறமையும் பிரிவுக்குப் பிரிவு வேறுபாடுடையதாக இருந்தது. மேலும், படைக்கலங்கள், பிற தளவாடங்கள், கட்டுப்பாடு ஆகிய வற்றில் ஒருமைப்பாடு இருக்கவில்லை. ஏழாவதாக, ஆடம்பரமும் வெளிப்பகட்டும் மான்சப்தார்களிடம் இயல்பானவைகளாகிவிட்ட தால், இவை படைத்துறைத் திறமைக்குத் தடைகளாக இருந்தன. அவசர நெருக்கடிகளில் அக்பர் சில சமயங்களில் ஆடம்பரத்தையும் பகட்டுகளையும் விலக்கினார் என்றாலும், சாதாரண காலங்களில் முகலாயப் படையுடன் கணக்கற்ற ஏவலர்கள், ஆடல் மகளிர், யானைகள், ஒட்டகங்கள், இசைக்குழுவினர், பணிமன்றங்கள், தொழிற் கூடங்கள், அங்காடிகள் ஆகிய யாவும் எடுத்துச் செல் லப்படும். எட்டாவதாக, பீரங்கி ஆயுதப் படையானது மிகவும் திறமையற்றதாக இருந்தது. ரக்ளாக்களும், கஜநல்களும் பார் வைக்குப் பெரிய ஆயுதங்களாகத் தென்பட்டாலும், அஸிகார் போன்ற அரண்களைத் தாக்குவதற்கு அவைகள் அதிகப் பயன்பட வில்லை. இறுதியாக, பலவித நாட்டினங்களின் அதிகாரிகளையும் வீரர்களையும் கொண்டிருந்த அக்பரின் படையை ஒரு தேசியப்படை என்று கூறமுடியாது. அதன் மூன்றில் இரு பங்கினர் வெளிநாட்

டவர். அவர்களிடையே பொதுநல ஆர்வங்களும், பொதுவான நாட்டுப்பற்றும் இருந்து, அவர்களை ஒன்றாகப் பிணைக்கவில்லை. இத்தகைய இயல்பான குறைகளினால் அக்பர் காலத்திற்குப் பின்னர் முகலாயப்படை பெருமளவில் நலிவுற்றது.

மான்சப்தாரி முறையில் பல குறைபாடுகள் இருந்தபோதிலும், அம் முறையானது, இடைக் காலத்தில் விளங்கிய படைத் துறை அமைப்பில் ஏற்பட்ட ஒரு பெரிய முன்னேற்றம் என்று கூற வேண்டும். இந்த முறை குலங்களின் அடிப்படையில் எழுந்த தலைமைக்கும், படை மான்ய முறையில் படைகளைத் திரட்டும் முறைக்கும் இடையே ஏற்பட்ட ஒரு சமரச இணக்க முறை என்று சொல்லலாம். இந்த இரு முறைகளின் பயன்களை மான்சப்தாரி முறை கொண்டிருந்தது. மேலும், இந்த முறையானது நாட்டில் போராடக்கூடிய சகலவிதமான ஆற்றல்களையும் கண்டுபிடித்துப் பயன்படுத்திக்கொள்ள உதவியது. சில சிறப்பு வகையான படைத் துறைக் கடமைகளுக்குப் பலவிதமான படைப் பிரிவுகள் சிறப் பாகப் பொருந்தியிருந்தன. எடுத்துக்காட்டாக, சில இராசபுத்திர மான்சப்தார்களை, அவர்களும் சண்டை போட்டுக்கொண்டிருந்த வேறு சில மான்சப்தார்களுக்கு எதிராக அரசியல் சூழ்ச்சித் திறத் துடன் பயன்படுத்த முடிந்தது. இந்த முறையின்மூலம் மான்சப் தார்கள் பேரரசருக்கு நிலையான விசுவாசத்தைக் காட்டி வந்தார்கள். இதனால் தனிப்பட்டவர்களுக்குச் சிறப்பான தகுதிகள் பெறத் தூண்டுதல்கள் கிடைத்தன. தமது விசுவாசமான பணியி னாலும், தாம் செய்கின்ற தொண்டின் சிறப்பான தன்மையினாலுமே தமது உயர்வோ தாழ்வோ ஏற்படமுடியும் என்று ஒவ்வொரு மான்சப்தாரும் நன்றாக அறிந்திருந்தார். மான்சப்தார்களின் மூல மாக நாட்டு மக்களின் படைத் துறை, அரசியல் ஆகிய முக்கியப் பகுதிகளின் விசுவாசம் உறுதியளிக்கப்பட்டது.

நிதித் துறை

நவீன காலப் பணவியலில் இருப்பதுபோன்று, பொது வரவு செலவு முறை என்பது அக் காலத்தில் முக்கியத்துவம் பெறவில்லை யென்றாலும், அக்பருடைய நிதிக்கொள்கை மிகவும் முன்னேற்ற மடைந்திருந்ததோடு, அவரது காலத்திற்கு முற்போக்கு உள்ள தாக இருந்தது. அரசர் நிதிப் பிரச்சினையின் சகல சிக்கல்களையும் நன்றாக உணர்ந்திருந்தார். ராஜா தோடர்மால், முஸாபர்கான் போன்ற திறமையான நிதி நிபுணர்களும், பொது மக்களின் நலன் களையும், அரசாங்கத்தின் தேவைகளையும் நன்குணர்ந்திருந்த வேறு பலரும் அக்பருக்கு நல்ல முறையில் உறுதுணையாக இருந் தார்கள். இவர்களெல்லோரும் மக்கள் நலத்தையும், அரசின்

வீரர்களிடையே சிறிய துண்டுகளாகப் பிரிந்து கிடப்பதைக் கண்டார். அரசருக்காக கால்ஸா அல்லது அரசரின் நிலங்கள் அல்லது பாதுகாக்கப்பட்ட நிலங்கள் என்ற ஒரு சிறு பகுதி மட்டுமே விடப்பட்டிருந்தது. ஆட்சி முறையும் ஜாகீர்தார்களை திருப்தி செய்வதில் ஆர்வம் கொண்டிருந்ததால், வருமானக் கணக்குகள் மிகைப்படுத்திக் காட்டப்பட்டன. அதாவது, ஜாகீரிலிருந்து வரும் வருமானமும், அதன் விளைவாகப் பேரரசு முழுவதற்கும் பொதுவான வருமானமும், உண்மையில் இருந்ததைவிட அதிகத் தொகையுள்ளதாகக் காட்டப்பட்டது. கருவூலத்தில் பணமே இல்லையென்றுதான் கூறவேண்டும். ஒரு சமயம் அக்பருக்கு ஓர் அவசரத் தேவையை முன்னிட்டு, அவசியமாக இருந்த 15 ரூபாய் கூட கருவூலத்தில் இருக்கவில்லையாம். இந்த நிகழ்ச்சியே அக்பரை நிதித்துறையை உடனடியாகக் கவனிக்கும்படி தூண்டியது. அதனைத் தொடர்ந்து அவர், நிதித்துறையைச் சீர்திருத்துவதற்காகப் பல பரிசோதனைகளைச் செய்தார். இவற்றில் முதல் நடவடிக்கை 1563ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்படி ஆக்ரா, டெல்லி மாநிலங்களையும், லாகூரின் ஒரு பகுதியையும் உள்ளடக்கிய கால்ஸா நிலங்களின் பிரச்சினையைப் பரிசீலிக்கும்படி, ஏய்த்மத்கான் என்பவரை அக்பர் நியமித்தார். இந்த இரண்டரை சுபாக்களும் பல வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு வட்டாரமும் ஒரு கோடி தாம்கள் அல்லது $2\frac{1}{2}$ இலட்ச ரூபாய் வருமானம் தரக்கூடிய பகுதிகளாகும். நில வரியை நிர்ணயிக்கின்ற முறையில் இந்த நடவடிக்கையானது, அடிப்படையான மாறுதல் எதையும் செய்யவில்லை. ஹுமாயூன் காலத்திலிருந்து அவர் நாட்டின் எல்லா பர்காளுக்களிலும் நடைமுறையில் இருந்துவந்த ஷெர்ஷாவின் நிலவரி வீதங்கள் முன் போலவே அமலில் தொடர்ந்திருந்தன. இவை ஒவ்வொரு பயிர்களைப் பொறுத்த அளவில்தான் சிறிது வேறுபட்டிருந்தன. தல ரீதியாக நிலங்கள் அளக்கப்பட்டு, அரசரால் நிர்ணயிக்கப்பட்ட பல விதப் பயிர்களுடைய வரிகளின் அடிப்படையில், அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய நிலவரித் தொகை பணமாக மாற்றப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட விலைகளும் எல்லா பர்காளுக்களிலும் ஒரே மாதிரியாக இருந்தன. இந்த விலைகள் தலைநகரை அடுத்த பகுதிகளில் அல்லது அரசவையில் நடப்பில் இருந்தன. 1556-ல் இரண்டாவது சோதனை நடத்தப்பெற்றது. 1564-ல் தோடர்மாலுடன் அவருடைய துணை திவானாக நியமிக்கப்பட்ட முஸாபர்கான், பழைய நில வரி முறையில் இரண்டு அப்பட்டமான குறைகளைக் கண்டு பிடித்தார். அதாவது கற்பனையான நில வரிப் பட்டியலும், பேரரசு முழுவதற்கும் பொதுவான விலை வீதத்தின் அடிப்படையில் அரசாங்கத்தின் பங்கான நில வரியைப் பணமாக மாற்றுவதும்தான்

அந்தக் குறைகள். அவர் ஓரளவு வெற்றி கண்டார். ஆனால், அரசாங்கம் தனது அதிகாரிகளைக் கொண்டே நிலத்தை அளக்க எந்த ஏற்பாடும் செய்யாததாலும், கிராமங்களிலுள்ள பட்வாரிகளின் பதிவேடுகளைப் பயன்படுத்தத் தவறியதாலும், 1566-ல் முஸாபர்கான் தயார் செய்த நிலவரிப் பட்டியலுக்கும் (ஹால்-இ-ஹாஸில் அல்லது ஜமாபந்தி) உண்மையான வருமானத்திற்கும் வேறுபாடு இருந்தது எனினும், முஸாபர்கான் இரண்டாவது குறையை நீக்குவதில் வெற்றி கண்டார். அவரது முயற்சிகளின் விளைவாக அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய நிலத்தொகை இது முதலாக, நாடு முழுவதற்கும் பொதுவான விலைகளின் அடிப்படையில் இல்லாமல், பல்வேறு வட்டாரங்களில் நடப்பிலுள்ள விலைகளின் அடிப்படையில், பணமாக மாற்றப்பட்டது. ஆனால், இந்த நடவடிக்கை இம் முறையிலுள்ள ஒரு குறையைத்தான் நீக்கியது. எனவே, அக்பர் ஆட்சியின் பதின்மூன்றாவது ஆண்டில் (1569) மூன்றாவது சோதனை ஒன்று பரிசீலனை செய்யப்பட்டது. இப்பொழுது திவானாக இருந்த ஸிபாபுத்தீன் அகமது என்பவர், அரசர் நிலங்களைப் பொறுத்த வரையிலும், ஷெர்ஷாவின் நில வரி விகிதங்களை விட்டுவிட்டு, நிலங்களின் விளைச்சலின் அடிப்படையில் நோக்கம்போல, அரசாங்கத்தின் பங்கை நிர்ணயிப்பது என்ற வழக்கத்தைப் புகுத்தினார். பொதுவாக கான்குட் என்றும், சிறப்பாக நாஸ்க் என்றும் அழைக்கப்படும் இத் திட்டம், கூடடிக்காத பயிர்களையும் தானியங்களையும் கணக்கில் சேர்த்துக்கொள்ளாமல், ஒரு குறிப்பிட்ட வயலில் விளைகின்ற பயிர்களின் உத்தேசமான ஒரு மதிப்பீடு ஆகும். கதிர்கள் முற்றி, இன்னும் அறுவடை செய்யப்படாதபோது, அரசினரின் ஆட்கள் ஒவ்வொரு வயலையும் சுற்றிப் பார்ப்பார்கள். அவர்களுடன் கிராமத் தலைவரும், அந்த வட்டாரத்திலுள்ள சான்றோர்கள் சிலரும் வருவார்கள். இதில் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் வயலின் விளைச்சலைப்பற்றித் தன் சொந்த மதிப்பீட்டைப் போடுவார். இவ்வாறு தனித்தனியாகக் கொடுக்கப்படும் மதிப்பீடுகளின் சராசரிதான் அந்தக் குறிப்பிட்ட வயலின் மொத்த விளைச்சல் என்று எடுத்துக்கொள்ளப்படும், இதன் அடிப்படையில்தான் அரசினரின் பங்குத் தொகை நிர்ணயிக்கப்படும். அந்த வயலின் உழவர் இந்த மதிப்பீடு அதிகமாயிருக்கிறதென்று எதிர்ப்புத் தெரிவித்தால், பேச்சுவார்த்தைகள் தொடங்கி, சிறிது பேரம் பேசியபின்னர் ஒருவிதமாகச் சமரசம் ஏற்படும். 1569-ல் ஏற்படுத்தப்பட்ட நிலவரிமுறை வயல்வாரியானதா, அல்லது கிராமவாரியானதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

நான்காவது சோதனை அக்பர் ஆட்சியின் பதினைந்தாவது ஆண்டில் (1570-71) நடத்தப்பெற்றது. இதன்படி ஒவ்வொரு

பர்கானுவுக்கும் தனித்தனியாகப் புதிய நிலவரி விகித நிர்ணயங்கள் தயாரிக்கப்பட்டன. இவை நிலத்தின் உண்மையான விளைச்சலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டன. இத் திட்டத்தில் ஜாகீர் நிலங்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இந் நிலங்கள் இதுவரையிலும் இந்தப் பரிசோதனைக்கு அப்பாற்பட்டும், நிலவரித் துறைக்குக் கட்டுப்படாமலும் இருந்தன. நாஸ்க் நிலவரி முறை கைவிடப்பட்டு, நிலவரி நிர்ணய விகிதங்கள், நிலங்களின் அளவின் அடிப்படையிலும், அரசாங்க அதிகாரிகள் நிர்ணயிக்கும் நிலத்தை உண்மையான விளைச்சலின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டன. ராஜா தோடர்மால்தான் இத் திட்டத்தின் தந்தையாவார்.

இந்தப் பரிசோதனை ஓரளவு வெற்றியென்று சொல்லவேண்டும். ஏனெனில், இதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலவரி நிர்ணய விகிதங்கள் பத்தாண்டு காலத்திற்கு, 1580 வரை அமலில் இருந்து வந்தன. இந்தக் காலப்பகுதியின் இறுதிக் கட்டத்தில் அக்பர் இன்னொரு பெரிய சோதனையை நடத்தினார். நிலவரித் தொகைகளைப் பணமாக நிர்ணயித்த முறைதான் அது. பத்தாண்டுகளாகப் பலவகையான தானியங்களின் நிர்ணய விகிதம் மாறாமலேயே இருந்து வந்தபோதிலும், அரசாங்கத்தின் நிலவரிப் பங்கைப் பணமாக மாற்றுவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விலைகள் ஆண்டுக்கு ஆண்டு வேறுபட்டு வந்ததோடு, ஒவ்வோர் ஆண்டிலும் அரசரின் அங்கீகாரமும் அவற்றிற்குத் தேவைப்பட்டன. இதன் விளைவாக நிலவரி தண்டுவதில் காலதாமதம் ஏற்பட்டது. ஏனெனில், அரசர் ஒரே இடத்தில் தங்கியிருந்து, விலைகளின் பட்டியல் தனது பரிசீலனைக்கு வந்தவுடன், விலைகளை நிர்ணயிப்பது பற்றி ஆணைகளைக் கொடுக்க முடியவில்லை. இந்த இடர்ப்பாட்டைத் தவிர்ப்பதற்காக, 1580-ல் அக்பர் நிலவரி விகிதங்களின் பட்டியல்களை ஒழித்துவிட்டு வரியைப் பணமாகவே கொடுத்துவிடும்படி முடிவு செய்தார். நிலவரியைப் பணமாகச் செலுத்துவதற்கு நிர்ணய அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விலைகள், கடந்த பத்தாண்டுகளில் பல்வேறு வட்டாரங்களில் இருந்துவரும் விலைகளின் சராசரி ஆகும்.

1580-ல் 'அயினி தாஸலா' என்ற தனி ஆணையினால் அமலுக்குக் கொண்டுவரப்பட்ட நிலவரித் திட்டத்தில் சில குறிப்பிட்ட முறைகள் இருந்தன. முதலாவதாகப் பேரரசில் உள்ள நிலங்கள் யாவும் ஒரேமாதிரியான ஓர் அளவு முறையினால் அளக்கப்பட்டன. இது 41 விரலகலம் அல்லது 33 அங்குலம் நீளமுள்ள ஸிக்கந்தர் லோடியின் 'காஸ்' அல்லது கெஜக்கோல் என்பதன் அடிப்படையில் அமைந்திருந்தது. இந்த காஸ் கெஜக்கோலின்

அடிப்படையில் அமைந்த 'ஜாரிப்' என்ற ஷெர்ஷாவின் அளவு கோல் முறுக்கப்பட்ட கயிற்றினல் செய்யப்பட்டிருந்ததால் தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்றவாறு சுருங்கவோ விரியவோ செய்தது. இதனல் அக்பர் மூங்கிலால் செய்யப்பட்ட ஜாரிப்பைப் பயன்படுத்தினர். இதன் துண்டுகள் இரும்பு வளையங்களினல் இணைக்கப்பட்டிருந்தன. பிகா என்ற நிலத்தின் மூல அளவு 60 கெஜம் நீளம், 60 கெஜம் அகலம், அல்லது 3,600 சதுர கெஜம் பரப்புள்ள நிலப்பகுதியாகும். ஒவ்வொரு மாநிலத்திலும், பர்கானுவிலும், மாவட்டத்திலும், கிராமத்திலும் ஒவ்வோர் உழவனுக்கும் சொந்தமாயிருந்த சாகுபடியாகும் நிலத்தின் மொத்தப் பரப்பும், இறுதியாகப் பேரரசில் உள்ள மொத்த நிலப்பரப்பும் அளந்து கண்டறியப்பட்டது. இரண்டாவதாகப் பயிரிடப்படும் நிலங்கள் யாவும் நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டன. இந்தப் பகுப்பின் அடிப்படை நிலத்தின் வகையோ, அல்லது மண் வளமோ அல்ல. ஆனல், நிலம் தொடர்ந்து பயிர் செய்யப்படுகின்றதா, இல்லையா என்பதே. (1) 'பொலாஜ்' என்ற வகை நிலம் முதல் தரத்தைச் சேர்ந்தது. இது எப்பொழுதும் பயிர் செய்யப்படுவது. (2) 'பரௌட்டி' என்ற வகை அநேகமாக எப்பொழுதும் பயிர் செய்யப்பட்டாலும், ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு நிலவளத்தை மீண்டும் பெறுவதற்காகத் தரிசாக விடப்படும். (3) சச்சார் நிலவகை மூன்று அல்லது நான்காண்டுகளுக்குப் பயிர் செய்யாமல் விடப்படவேண்டும். (4) பஞ்சார் வகை ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்குத் தரிசாக விடப்படும். முதல் மூன்று வகையான நிலங்கள், ஒவ்வொன்றும், மூன்று தரங்களாக மேலும் பிரிக்கப்பட்டிருந்தன. இவை ஒவ்வொன்றின் சராசரி விளைச்சலும் ஒவ்வொரு தரமான நிலத்திற்கும் பொது அளவாகக் கருதப்பட்டது. மூன்ருவதாகக் கடந்த பத்தாண்டுகள் விளைச்சலின் அடிப்படையில், ஒவ்வொரு வகையான நிலத்தின் ஒரு பிகாவின் சராசரி விளைச்சல், ஒவ்வொரு வகையான பயிருக்கும் பர்கானுவாரியாகத் தனித் தனியாகக் கணக்கிடப்பட்டது. சராசரி விளைச்சலில் 1/3 பங்கை அரசாங்கம் தனது பங்குத் தொகையாக நிர்ணயித்தது. நான்காவதாக அரசாங்கத்தின் பங்கு தானியமாகவல்லாமல் பணமாகச் செலுத்தப்படவேண்டும். இதற்காக அக்பர் தமது பேரரசு முழுவதையும் தாஸ்தூர்களாகப் பிரித்தார். ஒவ்வொரு தாஸ்தூரிலுள்ள எல்லா இடங்களிலும் ஒவ்வொரு வகையான பயிருக்கும் ஒரே மாதிரியான விலை இருக்குமென்று கொள்ளப்பட்டது. ஒவ்வொரு வகையான பயிரைப் பொறுத்தவரையிலும், கடந்த பத்தாண்டுகளின் சராசரி விலையை, ஒவ்வொரு தாஸ்தூருக்கும் தனித்தனியாகக் கணக்கிட்டார்கள். இந்தச் சராசரியே பயிரின் நடப்பு விலையாகக் கொள்ளப்பட்டது. பலவகையான தானியங்களின் விலைக்கும் தனியான

பட்டியல்கள் இருந்தன. இத்தகைய விலை விகிதங்கள் தாஸ்தூருக்குத் தாஸ்தூர் வேறுபட்டன.

ஒவ்வோர் உழவனும் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய நில வரி மேற்கூறிய கணக்கின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. உழவர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய நிலவரித் தொகையை நிர்ணயிப்பதற்கு நிலத்தின் உண்மையான விளைச்சலையோ அல்லது தானியங்களின் நடப்பு விலைகளையோ கண்டறிய வேண்டுமென்பது அவசியமில்லை. வேண்டியதெல்லாம் சாகுபடியான நிலத்தின் வகையையும் நிலத்தின் பரப்பையும் கண்டறிவதும், ஒரு குறிப்பிட்ட பருவத்தில் உழவன் சாகுபடி செய்கின்ற பயிரின் வகையை என்னவென்று அறிவதுமாகும். நில வரித் தொகையை உழவனும் அரசாங்கமும் கணக்கிடுவார்கள். உழவன் வரியைச் செலுத்துவான். அரசாங்கம் அதனைப் பெற்றுக் கொள்ளும். விதைப்பு முடிந்ததிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் அரசாங்கம் அதன் நிலவரியைக் கணிக்கக்கூடிய நிலையில் இருக்கும். அயினி தாஸாலா முறை புகுத்தப்பட்ட பின்னர், பயிர்களின் விளைச்சல் அல்லது விலைகளைப்பற்றிய பதிவுகளை அரசாங்கம் வைத்துக்கொள்வது நிறுத்தப்பட்டது என்று எண்ணக் கூடாது. பர்காளுக்களிலும் கிராமங்களிலும் இருந்த அதிகாரிகள் முன்போலவே ஒவ்வோர் உழவனுக்கும் சொந்தமான நிலம், அதன் வகை, அதன் பரப்பு, அதில் விளையும் பயிர்கள், அவற்றைப் பற்றிய விவரங்களைத் தொடர்ந்து பதிவு செய்து வந்தார்கள். ஒவ்வொரு தாஸ்தூரிலும் உள்ள எல்லா வகையான தானியங்களின் நடப்பு விலைகளையும் அவர்கள் பதிவு செய்தார்கள். இந்தப் பதிவுகள் மிக அவசியமானவை. அவை வருங்கால நிலவரித் திட்டங்களுக்கு மிகவும் பயன்பட்டன.

அயினி தாஸாலா முறையைப்பற்றி வரலாற்று ஆசிரியர்களுக்குள்ளே கருத்து வேறுபாடுகள் உள்ளன. V. A. ஸ்மித் இதனைப் பத்தாண்டு நிலவரித் திட்டம் என்கிறார். அவரது கருத்துப்படி இம்முறை கடந்த பத்தாண்டுகளின் சராசரி விளைச்சலின் அடிப்படையில் அமைந்திருந்தது. அரசாங்கத்தின் பங்கை தானியத்திலிருந்து பணமாக மாற்றுவதற்கு அடிப்படையாக இருந்த கடந்த பத்தாண்டுகளின் சராசரி விலைகளைப்பற்றி ஸ்மித் ஒன்றும் கூறவில்லை. அதற்கு மாறாக, முகலாயர்கள் காலத்து நிதிப் பிரச்சினைகளைப்பற்றி ஆராய்வதில் இருபது ஆண்டுகளைச் செலவிட்ட W. H. மூர்லண்ட் என்பார், பத்தாண்டுகளின் பணத்தொகையின் சராசரியைப்பற்றி மட்டுமே குறிப்பிடுகிறாரேயொழிய, ஒவ்வொரு பயிரைப் பொறுத்தவரையிலும் ஒவ்வொரு வகையான நிலத்தின்

பத்தாண்டுக் காலச் சராசரி விளைச்சலைப்பற்றி ஒன்றும் குறிப்பிட வில்லை. பேராசிரியர் ஸ்ரீராம் சர்மா அவர்கள் அக்பரின் ஆட்சிக் காலம் முடியும் வரையிலும், அவரது நிலவரித் திட்டத்தின் அடிப் படை ஷெர்ஷாவால் நிர்ணயிக்கப்பட்ட வரி விகிதங்கள் என்று கருதுகிறார். டாக்டர் T. R. டிரிப்பாத்தி அவர்கள் விளைச்சல், விலைகள் என்ற இரண்டின் சராசரிகளைப்பற்றித் தெளிவாகக் குறிப் பிடவில்லை. இந்தத் திட்டத்தை நுணுக்கமாக ஆராய்ந்தால் கீழ்க் கண்ட முடிவிற்கு வரலாம். அதாவது, 1580ஆம் ஆண்டு அக்பரின் நிலவரித் திட்டம் அதற்கு முந்திய பத்தாண்டுக் கால விளைச்சலின் சராசரி என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. மேலும், முந்திய பத்தாண்டுக் கால விலைகளின் சராசரி என்ற அடிப்படையில் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய நிலவரி பணமாகச் செலுத் தப்படவேண்டுமென்று மாற்றப்பட்டது. மேலே குறிப்பிட்டது போல, விளைச்சலின் சராசரியைக் கண்டுபிடிப்பதற்காக ஒவ்வொரு பர்காணவும் ஒரு மூல அளவாகக் கொள்ளப்பட்டது. விலைகளின் சராசரியை நிர்ணயிக்க தாஸ்தூர் மூல அளவாகக் கொள்ளப்பட்டது. எனவே, இந்த நிலவரித் திட்டம் நிலையானது அல்ல என்பது உறுதி. இது ஆண்டுதோறும் செய்யப்பட்ட திட்டம் என்றும் கூறமுடியாது. ஏனெனில், காலதாமதத்திற்கும் ஊழல்களுக்கும் காரணமாயிருந்த ஷெர்ஷாவின் ஆண்டுவாரி நிலவரித் திட்டத்தை அக்பர் கைவிட்டுவிட்டதாக அபுல்பாஸல் கூறுகிறார். நிலத்தின் உண்மையான விளைச்சலின் அடிப்படையில் உழவன் செலுத்தவேண்டிய நிலவரி அடிக்கடி மாற்றப்பட்டதாகத் தெரிகிறது. இதைப்பற்றிய தெளிவான சான்றுகள் இல்லையென் றாலும், இத் திட்டம் ஒரு பத்தாண்டு நிலவரித் திட்டமாக இருந் திருக்கவேண்டும் என்பது தெரிகிறது. அயினி தாஸாலா முறை ஏற்படுத்தப்பட்டபின்னரும், ஒவ்வோர் உழவனும் பயிர் செய்து வந்த ஒவ்வொரு பயிரின் உண்மையான விளைச்சலைப்பற்றிய விவரங்களும், ஒவ்வொரு தாஸ்தூரிலும் இருந்த ஒவ்வொரு வகை யான பயிரின் விலையும் மிகக் கவனமாகப் பதிவு செய்யப்பட்டு வந்தன.

இத் திட்டம் முதலில் கால்ஸா நிலப் பகுதிகளில் மட்டுமே புகுத்தப்பட்டது. 1581-82-ல் இதன் நோக்கத்தில் ஜாகீர் நிலங் களும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இனிமேலாக ஜாகீர்தார்கள் தங்களின் விருப்பப்படி ஜாகீர்களை நிர்வாகம் செய்யமுடியாது. மேலும் எவ்வளவு பஞ்சார் நிலங்களை மீட்க முடியுமோ அவ்வள வையும் மீட்க ஒரு முயற்சி செய்யப்பட்டது. இத்தகைய நிலங்களைப் பயிர் செய்ய முன்வரும் உழவர்களுக்குக் கடன்கள் கொடுக்கப் பட்டன. இவ்வகையான நிலங்களுக்குப் பெயரளவில்தான் நிலவரி

விதிக்கவேண்டுமென்று நிலவரித் தண்டல் நாயகர்களுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. நிலவரியைப் படிப்படியாக உயர்த்தவேண்டு மென்றும், பஞ்சார் வகையான நிலம் 'பொலாஜ்' தகுதிபெற்ற பின்னர்தான் முழு நிலவரி நிர்ணயம் பண்ணவேண்டும் என்றும் ஆணைகள் இருந்தன. ஷெர்ஷாவைப்போல் அக்பரும் விளைச்சலில் $\frac{1}{3}$ பங்கை நிலவரியாகப் பெற்றார். இந்த வரி பணமாகப் பெறப் பட்டது என்றாலும், சில விதிவிலக்கான இடங்களில் தானிய மாகவும் பெறப்பட்டது. நடைமுறையில் நம்பிக்கையுள்ள அரசியல் வித்தகராகிய அக்பர் காலாபக்ஷி அல்லது பாடேய், நாஸ்க் அல்லது கான்குட், ஸப்தி அல்லது நாக்தி என்ற பல முறையான நிலவரி நிர்ணயங்களைப் பல்வேறு வட்டாரங்களுக்கு ஏற்ப அனு மதித்திருந்தார்.* அக்பரின் நிலவரி முறை உழவருடன் நேரடியாகச் செய்யப்பட்டதால், ஷெர்ஷாவின் திட்டத்தைப்போல, இது ரயத் வாரி நிலவரி முறையாகும். ஒவ்வோர் உழவனுக்கும் ஒரு பட்டா (உரிமைப் பத்திரம்) வழங்கப்பட்டது. அவன் 'குவாபுலியாத்' (ஒப்பந்தப் பத்திரம்) என்ற பத்திரத்திலும் கையெழுத்திட வேண்டும். இந்தப் பத்திரங்களில் ஓர் உழவனின் உடைமையான நிலப்பகுதிகள், அவற்றின் பரப்பளவு, அவன் செலுத்தவேண்டிய நிலவரி விகிதம் ஆகியவற்றைப்பற்றிய குறிப்புகள் எழுதப்பட் டிருந்தன. ஒரு பர்கானாவிலோ, கிராமத்திலோ எதிர்பாராத இயற்கை நாசம் ஏற்பட்டபோது அரசாங்கம் வரித் தள்ளுபடி செய்தது. மைய அரசினர் ஏற்பட்ட சேதத்தின் அளவுகளைச் சரிவர மதிப்பிட்டுப் பொருத்தமான அளவில் வரிச்சலுகைகள் கொடுத்தனர்.

நிலவரியைத் தண்டுகின்ற பொறுப்பு பர்கானாக்களிலும் மாவட்டங்களிலும் உள்ள அரசாங்க அதிகாரிகளிடம், குறிப்பாக, அமில்கள் அல்லது அமல்-குஷார்கள் என்ற அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நிலவரி தண்டல்காரர்களுக்கு கனுங் கோக்கள், பட்வாரிகள், கிராமத் தலைவர்கள் ஆகியோர் துணை புரிந்தனர். மேலும், பருவகாலப் பயிர்களின் புள்ளிவிவரங்களைச் சேகரிக்க ஒவ்வொரு பர்கானாவிலும் பல சர்வே அதிகாரிகளும், எழுத்தர்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். பின்னர்க் கூறப்பட்ட அதிகாரிகளுக்கு, அவர்கள் அதிகாரபூர்வமான பணியில் ஈடுபட் டிருக்கும்போது, நாள்படியும், உணவுப் பங்கீடும் கொடுக்கப்பட் டன. உணவுப் பங்கீட்டின் ஒரு பகுதியை ஒருவேளை உழவர்களே

* இத்தகைய நிலவரி நிர்ணயங்களைப்பற்றி அறிந்துகொள்ள இந்த நூலின் ஆசிரியர் எழுதிய "Sher Shah and His Successors" என்ற நூலில் 73-74 ஆம் பக்கங்களைக் காண்க.

ஏற்றிருக்கவேண்டும். கிராமப் பணியாளர்களில் ஒருவராகிய பட்வாரி, மேற்கூறப்பட்ட அதிகாரிகளுடன் ஒத்துழைக்கவேண்டும். அக்பர் காலத்தில் கனுங்கோக்கள் அரசாங்க அதிகாரிகளாக இருந்ததால் மாதம் ரூ. 20, ரூ. 30, அல்லது ரூ. 50 சம்பளம் பெற்றனர்கள். அமின்கள், ஷிக்தார்கள், அமில்கள், பிட்டிக்ஷிஸ் (கார்கடன்) நில சர்வே, நிலவரி நிர்ணயம், நிலவரி தண்டுதல் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முதலியவர் பயன் பெறுவதற்காக தாஸ்தூர்-உல்-அமல் அல்லது 'நடைமுறை வழக்கங்களின்' தொகுப்பு என ஒவ்வொரு பர்கானுவுக்கும் உரிய நூதனமான பழக்கவழக்கங்கள் எழுதப்பட்டன. இவற்றை கனுங்கோக்களும் பல்வேறு பர்கானுக்களுடன் சம்பந்தப்பட்ட பாரம்பரிய நிலவரி அதிகாரிகளும் தொகுத்தார்கள். தாஸ்தூர்-உல்-அமல்களாகிய தொகுப்புகளுடன் 'முழுமையான அறிவாக்கமான' அறிவுரைகளும் நிலவரித்துறை அதிகாரிகளின் நன்மைக்காகக் கொடுக்கப்பட்டன. இவற்றை வரலாற்றாசிரியராகிய ஸ்மித், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்திய மாவட்டக் கலெக்டர்களுக்காக எழுதப்பட்ட 'கலெக்டர்களுக்கு தாம்சனின் அறிவுரைகள்' என்பதனோடு ஒப்பிடுகிறார். நிலவரி தண்டுவோருக்குப் பெரும் அளவில் தன் விருப்புரிமைகள் கொடுக்கப்பட்டிருந்தன. அவர்கள் உழவர்களுடன் நட்புறவு கொள்ளுமாறும், தேவையான உழவர்களுக்கு தக்காவிக் கடன் கொடுக்கவும், அவற்றைப் படிப்படியாகத் திருப்பிப் பெற்றுக்கொள்ளவும் உத்தரவு பெற்றிருந்தார்கள். இயற்கை விபத்துகளால் அல்லது வேறு காரணங்களால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு வரித் தள்ளுபடி செய்து, அதன்மூலம் பயிர்த் தொழிலை ஊக்குவிக்கவும் அதிகாரம் பெற்றிருந்தார்கள். உண்மையாகச் சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்குமட்டுமே வரி வாங்கவும், கூடுமானவரையில் கிராமத் தலைவர்கள் போன்ற இடைத் தரகர்களைத் தவிர்த்து, உழவர்களிடமிருந்து நேரடியாக நிலவரியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நிலவரிப் பாக்கிகளைப் பெறவும் அவர்கள் முயலவேண்டும். ஆனால், அவர்கள் அதிகமாக வன்முறையைப் பயன்படுத்தக்கூடாது. எல்லாவகையாலும் உழவர்களின் நலன்களை உயர்த்தி, அவர்களுடைய உரிமைகளைக் காக்க வேண்டுமென்று சிறப்பான ஆணைகள் கொடுக்கப்பட்டிருந்தன. மக்களின் நிலை, பொதுப் பாதுகாப்பின் நிலை, விலைவாசிகளின் விகிதம், வாடகைகள், ஏழை மக்களின் நிலை, இன்னும் பிற காரியங்களைப்பற்றியும் நிலவரித் தண்டல்நாயகர்கள் அரசவைக்கு மாதாந்தர அறிக்கைகளை அனுப்பவேண்டும். இந்தத் திட்டத்தை வரலாற்றறிஞர் ஸ்மித் வெகுவாகப் புகழ்கிறார். 'சுருங்கச் சொன்னால், இந்தத் திட்டம் வியக்கத்தக்கதொன்றாகும்; இதன் கொள்கைகள் அறிவின் அடிப்படையில் அமைந்தவை; அதிகாரி

களுக்கு விரும்பத்தக்க அறிவுரைகள் யாவும் கொடுக்கப்பட்டன' என்று அவர் கூறுகிறார்.*

நிலவரித் திட்டத்தையும், அதன் அடிப்படையாக விளங்கிய கொள்கைகளையும். ஆங்கிலோ-இந்திய வரலாற்றாசிரியர்கள் வானுயரப் புகழ்ந்திருக்கிறார்கள். இவர்களெல்லாரும் பிரிட்டிஷ் ஆட்சியின்போது, இந்திய அரசாங்கத்தின் நிலவரித் துறையுடன் தொடர்புகொண்டிருந்தவர்கள். ஆனால், பர்கானாக்களிலும், மாவட்டங்களிலும் இருந்த நிலவரி அதிகாரிகள். அரசரின் ஆணைகளை நேர்மையாகச் செயல்படுத்தினார்களா என்பதைப்பற்றி மேற்கூறிய ஆசிரியர்கள் ஐயப்பாடு கொண்டுள்ளனர். 'சொல்லப்பட்டதற்கும், செய்யப்பட்டதற்கும் இடையே இருந்த பொருத்தத்தைப் பற்றி இதனைக் காணும் எவரும் பெரும் அளவில் ஐயம்கொள்ள முடியும்; இத்தகைய பொருத்தம் இருந்ததென்பதை ஆங்கிலோ-இந்திய வரலாற்றின் அத்தனை சான்றுகளாலும் மெய்ப்பிக்க முடியவில்லை. மேலும், அக்பர் காலத்தில் தணிக்கை செய்யும் வழக்கம் அவ்வளவு கடினமாகவும், துருவி ஆராயும் வகையிலும் அமையவில்லை' என்று V. A. ஸ்மித் குறிப்பிடுகின்றார் (அக்பர் தி கிரேட் மொகல், பக். 377). இரண்டாவதாக, மேற்கூறிய எழுத்தாளர்களின் கருத்துப்படி அக்பர் காலத்திய நிலவரி நிர்ணயம் அவ்வளவு கடுமையாக இருக்கவில்லை. சொல்லப்பட்டதற்கும், செய்யப்பட்டதற்கும் இடையே ஒருமைப்பாட்டை அமைப்பது அவ்வளவு எளிதல்ல என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். மேலும், நிலவரித் துறையில் பெரும் அளவில் லஞ்ச ஊழல்கள் மலிந்திருந்தன. இந்த விதிகளெல்லாம் ஒருவேளை பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இருந்ததைவிட அதிக நல்ல முறையில் அதிகாரிகளால் அமல் செய்யப்பட்டும், பொதுமக்களால் கடைப்பிடிக்கப்பட்டும் வந்திருக்கலாம். பொது வாழ்வின் அறநெறியான தரமும், சட்டத்திற்குப் பணியும் தன்மையும் நமது நாட்டு மக்களிடம் 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் இருப்பதைவிட 16ஆம் நூற்றாண்டில் மிக நல்ல முறையில் இருந்திருக்கவேண்டும். தங்களுடைய வாக்கு நாணயத்தைக் காப்பாற்றுவதை ஒரு சமயக் கடமையாக மக்கள் கருதினார்கள். வாங்கிய கடனைக்கூட, அதனைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்பதற்குச் சட்டரீதியான சான்றுகள் இல்லாத நிலையிலும், இரண்டாவது மூன்றாவது தலைமுறைகளுக்குப் பின்னும் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். '16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த நமது முன்னோர்களின் நேர்மையும், வழிவழியாக வந்த விதிகளையும், ஒழுங்குகளையும், எதிர்ப்

* 'Akbar the Great Mogul' என்ற நூலில் பக்கம் 376-377.

பின்றி மதித்துக் கீழ்ப்படிகின்ற வழக்கமும் சமகாலத்திய ஐரோப்பியர்களை வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றது. இந்திய நாட்டு வரலாற்றின் இடைக்காலத்தில் திருட்டுகளும், களவுகளும், பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்ததைவிட மிகக் குறைவு என்பது உண்மை. பிரிட்டிஷார் ஆட்சியில் மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்ட காவல்துறையும், ஒற்றர்கள் படையும் இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே, அக்பர் காலத்தில் நில வரித்துறை உள்ளிட்ட அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையும், இன்று அவை இருப்பதைவிட எந்த வகையிலும் திருப்தி குறைவாக இருக்கவில்லை என்று நியாயமாக முடிவு செய்யலாம். உண்மையில் சட்டத்தை மீறுவதும், லஞ்ச ஊழல்களில் ஈடுபடுவதும் பிரிட்டிஷார் புகுத்திய முறைகளினால் எழுந்தவை என்றும், அவர்களின் ஆட்சியில்தான் இத்தகைய தீய பழக்கங்கள் வங்காளத்திலிருந்து நாட்டின் பிற பகுதிகளுக்குப் பரவின என்றும் பொது மக்களின் மரபுகள் கருதுகின்றன. நிலவரி நிர்ணயத்தின் கடுமையைப்பொறுத்த அளவில், பண்டைய இந்தியாவில் இருந்ததைவிட, அக்பர் காலத்திய நிலவரி விகிதங்கள் அதிகம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இது அவ்வாறுதான் இருந்திருக்க முடியும். ஏனென்றால், பிரோஷ் துக்ளக்கைத் தவிர டெல்லி சுல்தான்கள் யாவரும் அதிகமான நிலவரி விதித்தார்கள். நிலவரித் திட்டத்திற்குப் புகழ்பெற்ற ஷெர்ஷாகூட விளைச்சலில் 1/3 பங்கை நிலவரியாக நிர்ணயித்ததோடு, ஜாரிபானு, மஹாஸிலானு, காப்புறுதி வரி ஆகியவற்றையும் மேலதிகமாக விதித்தார். ஆனால், அக்பர் உழவர்களின்மேல் ஜாரிபானு, மஹாஸிலானு, காப்புறுதி வரி முதலியவற்றை விதிக்கவில்லை. அக்பர் காலத்தில் நிலவரியானது பிரிட்டிஷார் காலத்தில் இருந்ததைவிட அதிகம் என்று ஐரோப்பிய எழுத்தாளர்கள் கருதுகிறார்கள். ஆனால், அக்பர் நிலக்கிழார்களை அங்கீகரிக்கவில்லை என்பதையும், நிலத்தின் விளைச்சல் அரசாங்கத்திற்கும், உழவனுக்கும் இடையே பிரித்துக்கொள்ளப்பட்டது என்பதையும் குறிப்பிடவேண்டும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் பல பகுதிகளில் நிலவிய ஜமீன்தாரி முறைப்படி, ஜமீன்தார்கள் விளைச்சலில் ½ பாகத்தை உழவர்களிடமிருந்து நிலவரியாக விதித்தார்கள். ஆனால், 16ஆம் நூற்றாண்டில் உழவன் 1/3 பாகத்தையே நிலவரியாகச் செலுத்தினான். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியில் எந்தப் பகுதியிலும் இருந்ததைவிட, அக்பர் காலத்தில் இந்திய உழவன் மிக நலமாக வாழ்ந்தான் என்ற கருத்தை மரபுச் செய்திகளும், பல சான்றுகளும் வலியுறுத்துகின்றன. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாளின் பின்னர் ஏற்பட்டுள்ள நமது உழவுச் சட்டதிட்டங்களின் விளைவாக இந்திய

உழவன் சிறந்த நிலையை அடைந்திருக்கிறான் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

நாணயச் செலவாணி

அக்பரின் ஆட்சித் தொடக்கத்தில் அவர், தமது முன்னோடிகள் பின்பற்றிவந்த நாணயச் செலாவணி முறையைத் தழுவி, அதில் சிற்சில மாற்றங்களைமட்டுமே செய்தார். எடுத்துக்காட்டாக, அவருடைய பெயர், விருதுகள், நாணயம் அச்சிடப்பட்ட இடம், ஆண்டுகள் முதலிய விவரங்கள் நாணயங்களில் பொறிக்கப்பட்டன. அக்பரது நாணயச் சாலைகள் சௌதரிகள் என்ற சிறிய அதிகாரிகளின் பொறுப்பில் இருந்தன. பல நாணயச் சாலைகளுக்கும் அதிக இணக்கம் இருக்கவில்லை. 1577-ல் அக்பர் நாணயச் செலவாணி சீர்திருத்தத்தைச் செய்தார். குவாஜா அப்துஸ் ஸாமாத் ஷிராஷி என்ற புகழ்பெற்ற ஓவியரும், கையெழுத்துக் கலைஞரும், டெல்லியிலுள்ள அரசாங்க நாணயச் சாலையின் மேலாளராக நியமிக்கப்பட்டார். மாநிலத் தலைநகரங்களில் இதுவரை சௌதரிகளின் பொறுப்பில் இருந்த நாணயச் சாலைகள் யாவும் அதிகப் பொறுப்புள்ள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இவர்கள் யாவரும் அப்துஸ் ஸாமாதின் மேற்பார்வையின்கீழ்ப் பணியாற்றவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. டெல்லி நாணயச் சாலையில் அப்துஸ் ஸாமாதின் கீழ் இயங்கிவந்த அதிகாரிகளில் ஒரு தரோகா (துணை மேலாளர்), ஒரு ஸராஃபி (பொன் மாற்றுக் கண்டுபிடிப்பவர்), ஓர் அமின் (துணை தரோகா), கருவூலத் தலைவர், முஸ்ரீஃப் (கணக்கர்) நிறை பார்ப்பவன், பொன் உருக்குவோன், தகடடிப்போன், பொன் வெள்ளி, செம்பு கொண்டு தரும் வணிகன் ஆகியோர் பணியாற்றினார்கள். லாகூர், ஜான்பூர், ஆமதாபாது, பாட்னா, தண்டா (வங்காளம்) ஆகிய இடங்களில் உள்ள மாநில நாணயச்சாலைகளிலும் இத்தனை அதிகாரிகளும் இருந்திருக்கவேண்டும்.

நாணயச் சாலைகள் பொன், வெள்ளி, செம்பாலாகிய நாணயங்களை வெளியிட்டன. ரூபாய் என்றழைக்கப்பட்ட வெள்ளி நாணயம் தற்கால ரூபாயைப்போல வட்ட வடிவமாகவும், $172\frac{1}{2}$ கிரேயின் எடையுள்ளதாகவும் இருந்தது. அக்பரும் ஜாலாலி என்ற சதுரவடிவமான ரூபாயை வெளியிட்டார். ஆனால், அது வட்ட ரூபாயைப்போல் அவ்வளவு சாதாரணப் புழக்கத்தில் இருக்கவில்லை. ரூபாய் நாணயத்திற்குக் கீழ் அரை, கால், அரைக்கால், மாகாணி, இருபதில் ஒரு பங்கு என்ற உட்பிரிவு சில்லறைகள் இருந்தன. தாம் அல்லது பைசா அல்லது ஃபுலுஸ் என்றழைக்கப்பட்ட நாணயம் செப்பு நாயணங்களில் முக்கியமானது. அது 323·5 கிரெயின் அல்லது அரிசி எடை அல்லது 21 கிராம் எடை

யுள்ளதாகும். தாமுக்கும் ரூபாய்க்கும் இடையேயுள்ள விகிதம் நாற்பதுக்கு ஒன்று ஆகும். மிகக் குறைந்த மதிப்புள்ள செப்பு நாணயம் ஜிட்டால் என்பது. இருபத்தைந்து ஜிட்டால்கள் சேர்ந்து ஒருபைசாவாகும். மிகப் பொதுவாகப் பயன்பட்ட பொன் நாணயம் இலாலி என்பது. இது மதிப்பில் பத்து ரூபாய்க்குச் சமமாகும். மிகப் பெரிய பொன் நாணயம் ஷஹான்ஷா என்பது. இது 101 தோலாவிற்கும் சிறிது அதிக எடையுள்ளது. இதனை மிகப் பெரிய வணிக நடவடிக்கைகளில் பயன்படுத்தி வந்தார்கள். பல்வேறு உலோகங்களினுல் செய்யப்பட்ட நாணயங்களும், உலோகங்களின் தூய்மை, சரியான எடை, கலைத்திறன் படைத்த உருவ அமைப்பு ஆகிய அம்சங்களுக்குப் புகழ் பெற்றிருந்தன. அவற்றின்மேல் அரசரின் பெயர், விருதுகள், அச்சிடப்பட்ட இடம், தேதிகள் ஆகிய விவரங்களைக்கொண்ட கையெழுத்து முத்திரைகள் பொறிக்கப்பட்டிருந்தன. ஒருசில நாணயங்களில்தான் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவை ஒருகால் நினைவுச் சின்னப் பதக்கங்களாகப் பயன்படுவதற்காக அச்சிடப்பட்டிருக்கலாம்.

நாணயச் செலாவணியை அறிவியல் ரீதியான அடிப்படைகளின் அமைத்த சிறப்பு அக்பரைச் சாரும். தற்கால நாணயக் கலை நிபுணர்கள் அக்பருடைய நாணங்களைப்பற்றி மிக உயர்வாகக் கருதுகிருர்கள். 'நாணய உலோகங்களின் தூய்மை, சரியான எடை, கலைத்திறன்படைத்த அமைப்பு ஆகியவற்றில் பல்வேறு வகைகளான அக்பரின் நாணயங்கள் பெருஞ் சிறப்பிற்குத் தகுதி வாய்ந்தவை' என்று ஸ்மித் குறிப்பிடுகிருர். எலிசபெத் ஆகியோர் காலத்து நாணயங்கள் அல்லது அக் கால ஐரோப்பாவின் மற்றைய மன்னர்களின் நாணயங்களோடு ஒப்பிட்டால், மொத்தத்தில் முகலாயரது நாணயங்கள் மிக உயர்ந்தவைகளாகும். எடையிலாவது, உலோகங்களின் தூய்மையிலாவது, அக்பரோ, அவரது வழித் தோன்றல்களோ நாணயங்களின் தரத்தைக் குறைப்பதற்கு ஒருபோதும் இடங் கொடுக்கவில்லை. அக்பரின் பல நாணயங்களிலுள்ள பொன் சிறப்பான தூய்மை வாய்ந்தது என்று கொள்ளப்படுகிறது (Akbar the Great Mogul, p. 157).

சட்டமும் நீதியும்

மக்கள் யாவரையும் இஸ்லாம் சமயத்தில் பற்றுள்ளோர்–பற்றில்லாதோர் என்று இருவகைகளாகப் பிரித்து அந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் இடைக்கால நீதிமுறை இயங்கி வந்தது. இது இஸ்லாம் சமயப் பற்றில்லாதவரை நாட்டின் குடிமக்களாக ஏற்றுக் கொள்வதில்லை. முஸ்லீம்கள் அல்லாதார் 'ஸிம்மிகள்' என்று கொள்ளப்பட்டனர். அதாவது, ஓர் ஒப்பந்தத்தின் கீழ் வாழ்கிற

வர்கள் என்பதால், அவர்கள்மீது சில கட்டுப்பாடுகளும் வசதிக் குறைவுகளும் திணிக்கப்பட்டன. எல்லாவிதமான வழக்குகளை விசாரித்து நீதி வழங்குவதில் அரசர் இஸ்லாமியச் சட்டத்தைப் பின்பற்றவேண்டும். வழக்கில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள் முஸ்லீம்களாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அச் சட்டமே இடம் பெறவேண்டும். ஆனால், இந்துக்கள் நாட்டில் பெரும் பான்மையினராக இருந்ததாலும், மிக உயர்ந்த முறையில் பக்குவம் பெற்ற ஒரு நீதிமுறை அவர்களுக்கென்று இருந்த காரணத்தாலும், இஸ்லாமியச் சட்டத்தை இந்துக்களின்மீது திணிப்பது நடைமுறை யில் சாத்தியப்படவில்லை. ஒரு சமரசம் செய்யப்பட்டது. இதன்படி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கிரிமினல் வழக்குகளைப் பொறுத்த வரையில் இஸ்லாமியச் சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்பட்ட போதிலும், இந்துக்களைப் பொறுத்தவரை சிவில் துறையையும், சமயச் சார்பான வழக்குகளில் இந்துச் சட்டத்தையும் பயன்படுத்தி வந்தார்கள். நடைமுறையில் சுயாட்சி பெற்று விளங்கிய கிராமங் களில், இந்திய மக்களில் 75 சதவீதத்திற்கு அதிகமானபேர் வாழ்ந்ததால், கிராமப் பகுதிகளில் நீதித்துறை சம்பந்தப்பட்ட அளவில் இடைக்காலத்திய சுல்தான்களினால் ஒன்றும் அதிகமாகச் செய்துவிட முடியவில்லை. நகரங்களில் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எத்தகைய காரணம்பற்றிய வழக்கு களையும் எடுத்துக்கொண்டனர்; ஆனால், இந்துக்களைப் பொறுத்த வரையில், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பொதுவான கிரிமினல் சட்டத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட வழக்குகள் மட்டுமே அரசவைக்குக் கொண்டுவரப்பட்டன. இஸ்லாமிய நீதி யான இறைமைபற்றிய கொள்கையை அக்பர் தள்ளிவிட்டாரென் றாலும், அவரது முன்னோர்களிடமிருந்து அவர் பெற்ற நீதி முறையில் அவர் அடிப்படையான எந்த மாற்றத்தையும் செய்ய வில்லை. எனினும், அக்பர் நீதி முறையில் சில சிறு மாறுதல்களைச் செய்து, அது திறமையாக இயங்கும் முறையில் அதனைத் திருத்தி அமைத்தார். அவர் புகுத்திய முக்கிய மாற்றங்களில் ஒன்று என்ன வென்றால், இஸ்லாமியச் சட்டத்தின் அதிகார எல்லையைச் சற்றுக் குறைத்து, நாட்டின் வழக்கில் இருக்கும் பொதுச் சட்டத்தைக் கூடுமானவரை எல்லாவித நோக்கங்களையும் உள்ளடக்கும் வகை யில் விரிவுபடுத்துவதாகும். எடுத்துக்காட்டாக, இஸ்லாம் மதத்தை மறுக்கின்றவர்களுக்கும், இந்துமதம் அல்லது கிறிஸ்தவ சமயத்தைத் தழுவி பிரசாரம் செய்கின்றவர்களுக்கும் அவர் மரணதண்டனை வழங்கவேண்டும் என்ற இஸ்லாமியச் சட்டத்தைப் பின்பற்றவில்லை. மூன்றாவதாக, இந்துக்களின் வழக்கு களை விசாரிக்க அவர் இந்து நீதிபதிகளை நியமித்தார் (பதோனி இரண்டாம் தொகுதி, பக். 376).

அரசரே பேரரசின் பிரதம நீதிபதியாவார். கீழ்நாடுகளில் வழி வழியாக வந்த வழக்கப்படி, அரசர் நீதிமன்றத்தைக் கூட்டித் தானே நேரில் வழக்குகளை விசாரித்து முடிவு செய்தார். பொதுவாக அரசரின் நீதிமன்றமே உயர்நீதி மன்றமாகும்; சில வேளைகளில் அரசரே தொடக்க நிலையில் இருந்த வழக்குகளையும் விசாரித்தார். அக்பர் நாள்தோறும் மக்களின் குறைகளைக் கேட்ப திலும், அவர்களின் வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதிலும் சிறிது நேரத்தைச் செலவிட்டார். பெரிய வழக்குகளை விசாரிக்கவும், தீர்ப்புச் சொல்லவும் அக்பர் வியாழக் கிழமைகளில் நீதிமன்றத்தைக் கூட்டுவார். இந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர் களும், உயர்தர நீதித்துறை அதிகாரிகளும், தங்களது நேர்மைக்கும் நாணயத்திற்கும் புகழ்பெற்ற சில பிரபுக்களும் அனுமதிக்கப்பட் டார்கள். மிகத் திறமையான குற்றங்களுக்கு மரணதண்டனை வழங்கும் அதிகாரம் மாநில கவர்னர்களுக்கு இருந்தாலும், பொது வாக அவர்கள் இத்தகைய வழக்குகளை அரசருக்கே அனுப்பிவிடு வார்கள். அரசர் சில கடுமையான வழக்குகளில் மரண தண்டனை வழங்குவார். மரணதண்டனையை நிறைவேற்று முன்னர் அரசரின் ஆணைகளை மும்முறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அரசருக்கு அடுத்த பெரிய நீதி அதிகாரி பிரதம காஸி ஆவார். இவர் பிரதம ஸாதராகவும் இருந்ததோடு அரசரால் நியமனம் பெற்று, அவரது ஆதரவு இருக்கும்வரை பதவியில் இருப்பார். இவருடைய சம்பளம் பணமாகக் கொடுக்கப்பட்டது. மேலும், இவருக்கு மாதா–தி–மாஷ் வாழ்க்கைப்பணம் என்றழைக்கப்பட்ட நிலமான்யமும் வழங்கப்பட்டது. தொடக்கத்தில் இஸ்லாமிய மறை நூலில் அவருக்கிருந்த புலமையும், அவருடைய குறுகிய சமய நோக்கங்களும்தாம் பிரதம காஸியின் முக்கியத் தகுதிகளாகக் கருதப்பட்டு வந்தன. ஆனால், அக்பர் எல்லா வகுப்பு மக்களிலும் பரிவுணர்ச்சியும், பரந்த சமய நோக்கங்களும் கொண்டவர்களையே இந்தப் பதவியில் நியமித்தார். பிரதம காஸி, மாநில, மாவட்ட, நகர காஸிகளை நியமித்தார், ஆனால், அரசர் அவற்றை அங்கீ கரிக்கவேண்டும். பர்கானுத் தலைநகரங்களிலும் காஸிகள் இருந் தார்கள். ஆனால், மக்களின் பஞ்சாயத்துகள் நீதி வழங்கிவந்த கிராமங்களில் காஸிகள் இருந்ததாகத் தெரியவில்லை. படைத் துறைக்கெனத் தனியாக ஒரு காஸி இருந்தார். இவர் படை சம்பந்தமான வழக்குகளை மட்டுமே விசாரித்துவந்தார். காஸிகளுக்குத் துணையாக முஃப்டிகள் இருந்தனர். இவர்களது முக்கியப் பணி சட்டத்திற்கு விளக்கம் சொல்லி ஃபாதுவாக்களை (Fatwa) அனுப்புவதாகும். ஃபாதுவாக்களை அனுப்ப காஸிக்கே

அதிகாரம் இருந்ததால், அவருக்கு முஃப்டிகளின் உதவி அவசியம் இருக்கவில்லை. முக்கிய நகரங்களில் முதாஸிபுகள் என்ற அறக் காவலர் இருந்தனர். அளவைகளைச் சரிபார்த்தல், சூதாட்டம், குடித்தல் முதலியவற்றைத் தடுத்தல், முஸ்லீம்கள் தமது அன்றாட ஐந்து முறை தொழுகையையும், ரம்சான் நோன்புகளையும் அனுசரிக் கிறார்களாவென்று கவனித்தல் ஆகியவை இவர்களுடைய கடமை களாகும். இவ்வாறு முதாஸிபுகளும் நீதித்துறை அதிகாரங்களை வழங்கிய சமூகச் சட்டங்களை அமல் செய்து வந்தார்கள். மாநிலங் களின் தலைமைப் பீடங்களில் மீர்அடில்கள் என்ற அதிகாரிகள் இருந்தனர். ஆனால், இவர்கள் பர்கானுக்களிலும். சிறு நகரங் களிலும் இருந்ததாகத் தெரியவில்லை. இவர்களின் பணிகள் காஸி களின் கடமைகளைப் போன்றவை.

வழக்குகளை விசாரிப்பதன்றி, காஸிகள் சிறைகளுக்குச் சென்று தணிக்கை செய்து, கைதிகளின் நிலமைகளைப் பார்வையிட வேண்டும். விடுதலைபெறத் தகுதியுள்ள கைதிகளை விடுவிக்க அவருக்கு அதிகாரமுண்டு. ஆனால், கைதிகளின் வழக்குகளைத் தீர விசாரித்துப் பரிசீலனை செய்யவேண்டும். மேலும், காஸிகள் தமது அதிகார எல்லையில் இருக்கும் வாக்ஃபுகளுக்குக் காப்பாளர் களும் ஆவர். வழக்குகளை விசாரிக்கும்போது, நீதிமன்ற எழுத்தர்களின் துணையால் சான்றுகளைப் பதிவு செய்யவேண்டு மென்றும், குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்து குற்றவாளிக்கு அதனைப் படித்துக் காட்டவேண்டுமென்றும் உத்தரவு இருந்தது. சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். குற்றவாளிக்குத் தன்னைத் தற்காத் துக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டது. குற்றவாளிகளின் உளநிலைகளையும், முகத்தோற்றங்களையும் ஆராயவேண்டுமென அக்பர் வற்புறுத்தினார். குறுக்குவிசாரணைகளின்மூலம் உண்மை யைக் கண்டறியவேண்டுமென்றும் நீதிபதிகளுக்கு உத்தரவு இருந்தது.

நீதிமன்றங்களின் அமைப்பும், அவை ஒன்றோடொன்று கொண்டிருந்த தொடர்புகளும் செப்பமற்று இருந்தன. அரசரின் தலைமையிலும், பிரதம காஸியின் தலைமையிலும் இருந்த நீதி மன்றங்கள் உள்ளிட்ட உயர்நீதிமன்றங்களில், கீழ் நீதிமன்றங் களிலிருந்து வரும் அப்பீல்களும், தொடக்க வழக்குகளும் விசாரிக் கப்பட்டன. பிரதம காஸியின் நீதிமன்றத்திற்குப் போகாமல், நகர நீதிமன்றத்திலுள்ள ஓர் அப்பீல் மாநில நீதிமன்றத்திற்கோ, அல்லது மாவட்ட நீதிமன்றத்திற்கோ போகக்கூடாது என்பது அவசியமில்லை. சில வேளைகளில் நகர நீதிமன்றத்திலிருந்து ஓர் அப்பீல் மாவட்ட நீதிமன்றத்திற்குக் கொண்டுபோகலாம்;

அல்லது சில வேளைகளில் மாநில நீதிமன்றத்திற்கு அல்லது பிற நீதிமன்றங்களுக்கும் போகலாம். முக்கிய காஸியின் நீதிமன்றத் திற்கும், அரசரின் நீதிமன்றத்திற்கும்கூடச் சில வேளைகளில் அப் பீல்களைக் கொண்டு செல்லலாம். ஒரே மாதிரியான வழக்குகள் பல அதிகாரிகளினுல் விசாரிக்கப்பட்டன. எந்த வகையான வழக்கு கள் கீழ் நீதிமன்றங்களினுல் விசாரிக்கப்படவேண்டும் என்று குறிப்பாகச் சொல்லப்படவில்லை. எடுத்துக்காட்டாக, ஒரேவித மான குற்றம் சம்பந்தப்பட்ட கிரிமினல் வழக்குகளை காஸியைத் தவிர மீர்அடிலும் மாநிலத்தின் கவர்னரும் விசாரிக்கலாம். சிவில் வழக்குகள் காஸிகள், மீர்அடில்கள், மாநில திவான்கள் ஆகியோர் விசாரித்துத் தீர்ப்புவழங்கினர். மூன்ருவதாக, நிர்வாகத் துறையும், நீதித்துறையும் தனித்தனியாகப் பிரிக்கப்படவில்லை. ஆட்சித்துறை அதிகாரிகளான கவர்னர்களுக்கும் திவான்களுக்கும் நீதி வழங்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. நான்காவதாக, சட்டமானது முறையாகத் தொகுக்கப்படவில்லை. வாரிசுரிமை, திருமணம், திருமண விலக்கு முதலியன சம்பந்தப்பட்ட இந்து, முஸ்லிம் தனிச் சட்டங்கள் இந்த இரு சமூகத்தார்களின் சட்ட நூல்களில் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனுல், நாட்டின் வழக்கி லிருந்த பொதுச்சட்டம் எழுதப்படவில்லை. அது நீதிபதியின் நோக்கம்போல் அமல் செய்யப்பட்டது. ஐந்தாவதாக, தற்காலத் தின் தரத்துடன் ஒப்பிட்டால் கிரிமினல் சட்டம் அதிகக் கடுமையாக இருந்ததாகவும், குற்றங்களுக்கும் அதற்காக வழங்கப்பட்ட தண்டனைகளுக்கும் பொருத்தம் இருந்ததாகவும் தெரியவில்லை.

கிரிமினல் வழக்குகளில் பயன்பட்ட இஸ்லாமியச் சட்டம் நான்கு வகையான தண்டனைகளை ஒப்புக்கொள்கிறது. (1) குஸாஸ் அதாவது, பதிலுக்குப் பதில் செய்வது. இது கொலை, காயப்படுத்துதல் முதலிய குற்றங்களுக்கு வழங்கப்பட்டது. (2) தியா அதாவது, இழப்பீடு கொடுத்தல், இதுவும் கொலை, காயப்படுத்துதல் போன்ற குற்றங்களுக்கு வழங்கப்பட்டது. (3) ஹாத் அல்லது விபசாரம் செய்வோரைத் தண்டிக்க முஸ்லீம் சட்டம் தெளிவில்லாமல் வகுத்த தண்டனை முறை. (4) தாஸீர்—நீதிபதி தனது நோக்கம்போல் வழங்கும் தண்டனை. இது ஹாத் என்ற வகையின் கீழ் வராத குற்றங்களைச் சார்ந்ததாகும்.

பலதரப்பட்ட கால அளவுகளுக்குச் சிறைவாசம், அடைத்து வைத்தல், அபராதம், சொத்துப் பறிமுதல், கசையடி, உறுப்பறுத் தல், நாடுகடத்தல், சிரம் வெட்டுதல் ஆகியவை பொதுவாக

வழங்கப்பட்ட தண்டனைகளாகும். பெரும்பாலும் மரண தண்டனை அரசரால் விதிக்கப்பட்டாலும், விபசாரம், நாட்டுத் துரோகம், கற்பழித்தல், கொலை ஆகிய குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்க மாநில கவர்னர்களுக்கும் அதிகாரம் இருந்தது. குற்ற வாளியை யானையின் காலடியில் எறிந்து மிதித்துக் கொல்வதும் வழக்கமாக இருந்தது.

சிறைகள்

இரண்டு வகையான சிறைகள் இருந்தன. ஒன்று உயர்தரக் கைதிகளுக்கும், மற்றது சாதாரணக் குற்றவாளிகளுக்கும் எனப் பிரிக்கப்பட்டிருந்தது. ராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டவர் களும், புரட்சிகளில் சம்பந்தப்பட்டவர்களுமாகிய முக்கிய பிரபுக் களும், இளவரசர்களும் நாட்டின் பல பகுதிகளில் இருந்த கோட்டைகளில் சிறைவைக்கப்பட்டிருந்தார்கள். இவற்றில் முக்கியமானவைகள் குவாலியர், ரதாம்பர், ரோதாஸ், பக்கார், பேயானு முதலியன. தலைநகரிலும், மாநில மாவட்ட, பர்கானுத் தலைநகர்களிலும் சிறைகள் இருந்தன. முறையான கைதிகளுடன், விசாரணையில் இருந்த குற்றவாளிகளும் சிறைகளில் அடைக்கப் பட்டார்கள். சிறைகளை நீதித்துறையின் உயர்தர அதிகாரிகள் அடிக்கடி தணிக்கை செய்தார்கள். அவர்கள் கைதிகளின் நிலைமைகளைப்பற்றி விசாரணை நடத்தி, அதிக காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்களை விடுதலை செய்தனர். சில வேளை களில் தலைநகரில் இருந்த சிறைக்கூடங்களை அரசரும், மாநிலச் சிறைகளை கவர்னர்களும் சென்று பார்வையிட்டனர். சிறைகளில் இருக்கை வசதிகள், துப்புரவு, சுகாதார நிலை, உணவு முதலிய வைகள் தற்காலத்தில் இருப்பதுபோன்று அவ்வளவு திருப்திதரும் முறையில் இருக்கவில்லை.

காவல்துறை

அக்பரின் போலீஸ் நல்ல முறையிலும், திறமையாகவும் அமைக்கப்பட்டிருந்தது. காவலர்கள் நகர, மாவட்ட, கிராமக் காவலர் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். பொது மக்களிடையே அமைதியையும், கண்ணியத்தையும் பாதுகாக்கும் பொறுப்புடன் கொத்தவால்கள் பேரரசின் பெருநகரங்களிலும், சிறுநகர்களிலும் நியமிக்கப்பட்டிருந்தனர். கொத்தவாலின் பொறுப்புகள் ஏற்கெனவே கூறப்பட்டுள்ளன. அவர் நகரக் காவலர் துறையின் தலைவராகவும், வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பிடும் மாஜிஸ்டிரேட்டுமாக இருந்தார். அவர் திருடர்கள், கள்ளர்கள்,

இன்னும் பல சிறு குற்றங்கள் செய்வோரையும் விசாரித்துத் தண்டிக்கவேண்டும். நகரத்தின் அமைதி குலையாமல் இருக்கிறதா என்பதைப் பார்த்துக்கொள்வதே அவருடைய முக்கியக் கடமை யாகும். மேலும், அவர். அளவைகளைப் பரிசீலனை செய்து, நாணயச் செலவாணியைக் கண்காணித்து, அக்பரின் சமூகச் சீர் திருத்தங்களையும் அமல் நடத்தவேண்டும். திருட்டுச் சொத்துகளைக் கண்டுபிடிக்காவிட்டால், கொத்தவால் அச் சொத்தின் மதிப்பிற்கு ஈடுசெய்ய வேண்டுமென்று தனிப்பட்ட முறையில் பொறுப்புடைய வராக இருந்தார். குற்றம் செய்வோர்களைச் சித்திரவதை செய்தல், உறுப்பறுத்தல், கசையடி போன்ற தண்டனைகளைக் கொடுக்கவும் அதிகாரம் பெற்றிருந்தார். ஆனால், மரணதண்டனை வழங்கு வதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை. சுருங்கக் கூறினால், கொத்த வாலுக்குப் பரவலான கடமைகள் இருந்தன. அவரது அதிகாரங் களும் விரிவாகவும், வல்லாட்சியாகவும் இருந்தன. மாவட்டத்தில் பௌஜ்தார் அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாத்து வந்தார். அவருக்கு பர்கானாவின் நிலவரி அதிகாரிகளும், அமில்களும் துணை புரிந்தார்கள். நகரத்தின் போலீஸ் (காவல்துறை) கடமைகளை ஆற்றுவதற்காக மாவட்டத் தலைநகரில் பௌஜ்தாருக்கு உதவியாக ஒரு கொத்தவால் இருந்தார். மாவட்டத்தின் நெடுஞ்சாலைகளில் திருடர் பயமின்றிக் காப்பதும், எல்லாவகையான ஒழுங்கீனங்களை அடக்குவதும் பௌஜ்தாரின் முக்கியக் கடமைகளாகும். கொத்த வாலைப்போன்று, திருடனைக் கண்டுபிடிக்காவிட்டால் அவரும் திருட்டுப்போன சொத்துகளுக்குப் பொறுப்புள்ளவர் ஆவார். குழப் பங்களை அடக்குவதில் தன் விருப்புப்போல் நடவடிக்கைகள் எடுக்க அவருக்கு அதிகாரங்கள் இருந்தன. சாதாரணக் காலங்களில் அவர் வெற்றிகரமாக அமைதியை நிலைநாட்டி வந்தார். ஒரு பர்கானாவில் ஒன்றுக்கு மேற்பட்ட தானா அல்லது காவல் நிலையங்கள் இருந்தன. கிராமங்களின் காவல்துறை ஆட்சியைப் பொறுத்தவரையில், அக்பர் பண்டைக்காலத் திட்டமான தலப்பொறுப்பு முறையைக் கடைப்பிடித்தார். குறிப்பிட்ட காலவரையறைக்குள் கிராமத் தலை வர் திருடர்களைப் பிடித்துக் கொடுக்கவேண்டும். அப்படிக் கண்டு பிடிக்கத் தவறினால், அவர் தனது பணத்திலிருந்து இழப்பீடு செய்ய வேண்டும். ஒன்றிற்கு அதிகமான கிராமங்களின் எல்லைகளில் திருட்டு நடந்தால், அங்குள்ள கிராமங்களின் தலைவர்கள் அதன் மீட்பிற்குப் பொறுப்புள்ளவர்களாவர். வழக்கமாக எல்லாவித மான குற்றங்களுக்கும் கிராமத்தாரே பொறுப்புள்ளவர்களாகக் கொள்ளப்பட்டார்கள். இழந்த சொத்திற்கு ஈடு செய்ய ஊரார் அனைவரும் வகைசெய்யவேண்டுமென்ற கடமையிருந்தது. சாதா ரணமாகக் காவலர்ப் பணிகளைச் செய்வதற்காக ஒவ்வொரு கிராமத் திலும் ஒரு சௌக்கிதார் இருந்தார்,

அக்பர் காலத்திய காவலர்துறை ஏற்பாடுகள் ஓரளவு திறமையாக இயங்கியதோடு, பொது அமைதியும், ஒழுங்கும் மிகச் சிறப்பான முறையில் பாதுகாக்கப்பட்டன. என்றாலும், திருட்டு, விபசாரம், வஞ்சித்தல், பொது அமைதியைக் குலைத்தல் போன்ற குற்றங்கள் நிகழவில்லையென்று எண்ணுவது தவறாகும். காடுகளிலும், குன்றுகளிலும் திருடுவதைத் தொழிலாகக் கொண்ட ஆறலைக் கள்வர்கள் இருந்தனர். வட்டாரத்துக் காவலர்கள் விழிப்பில்லை என்று கண்டால் இவர்கள் உள்நாட்டில் புகுந்து கொள்ளையடிப்பார்கள். 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாட்டின் நிலைமையைப்பற்றி அக்காலத்திய ஐரோப்பிய யாத்திரிகர்கள் தரும் விவரங்கள் சிறிது மிகைப்படுத்தப்பட்டிருந்தாலும், ஓரளவு உண்மை என்று சொல்லவேண்டும். ஆனால், மக்கள் சட்டத்திற்குப் பணிந்து நடந்ததாலும், பொதுமக்களிடம் மிகஉயர்வான அறநெறி உணர்வு இருந்ததாலும், குற்றச் சட்டம் மிகக் கடுமையாக இருந்த காரணத்தாலும், பொதுப் பாதுகாப்பு நமது காலத்தைவிட நல்ல முறையில் இருந்தது.

கல்வி

பதினாறும் நூற்றாண்டில் உலகத்தின் எந்த நாட்டு அரசாங்கமும், அதன் குடிமக்களுக்குக் கல்வியறிவு புகட்டுவதைத் தனது கடமையெனக் கருதவில்லை. இங்கிலாந்துகூட இந்தக் கடமையை 1870ஆம் ஆண்டில்தான் உணர்ந்தது. எனினும், அக்பர் அவரது காலத்திற்கு மிக முற்போக்கான திட்டங்களைக் கொண்டு வந்து, மக்களின் அறிவு வளர்ச்சியை முன்னேற்ற முயற்சிசெய்தார். பள்ளிக்கூடம் செல்லுகின்ற மக்களுக்காக நாடெங்கிலும் அக்பர் பல பள்ளிக்கூடங்களினதும், கல்லூரிகளினதும் பேரமைப்பை ஏற்படுத்தவில்லையென்றாலும், பொது வருமானத்தின் ஒரு பகுதியைக் கல்விக்காகச் செலவிடுவதற்காகக் குறிக்கவில்லை யெனினும், அவர் பல வழிகளில் கல்வியை ஊக்குவித்தார். அவரது பேரரசில் தொடக்கப் பள்ளிகளும், உயர்தரப் பள்ளிகளும், கல்லூரிகளும் இருந்தன. இவற்றில் சிலவற்றை அரசினரே நிறுவிக் கண்காணித்து வந்தனர். சில தனி நபர்களின் கொடை வளத்தால் நடத்தப்பெற்றன. ஒவ்வொரு மசூதியை அடுத்து மக்தாப் என்ற தொடக்கப் பள்ளிகள் இருந்தன. இங்கு வாசிக்கவும், எழுதவும், கணக்கும், புனித குரானும் கற்பிக்கப்பட்டன. இதைத் தவிர உயர்தரப் பள்ளிகள் அல்லது கல்லூரிகளுக்கு இணையான மதர்ஸாக்கள் என்ற கல்வி நிலையங்களும் இருந்தன. அக்பர் பாதபூர்சிக்ரி. ஆக்ரா, டெல்லி, இன்னும் பல இடங்களில் கல்லூரிகளை நிறுவி அவற்றிற்கு ஏராளமான அறக் கொடைகளும் அளித்தார். அவர்

முன்மாதிரியைப் பின்பற்றிப் பல பிரபுக்களும் கல்விப் பணி செய்தனர். அக்பர் ஆட்சியின் தொடக்கத்தில் மாகம் அனுகா அம்மையார் டெல்லியின் புராண கிலாவின் மேற்கு வாயிலின் அருகே ஒரு மதர்ஸாவை நிறுவினர். குவாஜா முயின் டெல்லியில் ஒருகல்லூரியை நிறுவினர், இத்தகைய கல்லூரிகள் முஸ்லிம் மக்கள் அதிகமாக இருந்த முக்கிய நகரங்கள் யாவற்றிலும் இருந்தன. இக் கல்லூரிகளில் இஸ்லாமிய மறைநூல், சட்டநூல், தத்துவம், அளவையியல், வானவியல் முதலிய பாடங்கள் புகழ்பெற்ற ஆசிரியர்களால் கற்றுக்கொடுக்கப்பட்டன. இவர்களில் சிலர் வெளிநாடுகளில் கற்றுத்தேறியவர்கள். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இந்துக்களுக்காக உயர்தரக் கல்வி நிலையங்களும், பள்ளிக்கூடங்களும் இருந்தன. துருக்கியப் படையெடுப்பாளர்களின் சிலையுடைக்கும் வெறிக் கொள்கையினுல் பல அழிவுகள் ஏற்பட்டபோதிலும், இந்துக் கல்வி நிலையங்கள் முற்றிலும் மறைந்துவிடவில்லை. அக்பர் காலத்தில் நமது பண்டையக் கல்வி குறிப்பிடத்தக்க வகையில் புத்துயிர் பெற்றது. ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு கோவிலிலும் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அங்கு எழுதப் படிக்கவும், கணக்கும், சமய நூல்களும் கற்பிக்கப்பட்டன.

உயர்தரக் கல்விக் கூடங்களில் இந்து மறை நூல், வடமொழி இலக்கணம், தத்துவ நூல், இலக்கியம், அளவையியல், வானவியல், உயர்கணிதம், பிற அறவியல்களும் கற்றுத்தரப்பட்டன. அக்பர் பாடத் திட்டத்தைத் திருத்தி யமைத்து, பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் கற்றுவரும், வயது வந்த மாணவர்களுக்காகச் சில பாடங்களைப் புகுத்த முயன்றர். இவை அறநெறி, சமூகவியல், கணிதத்தில் தனிச் சிறப்பான எண் குறிப்பு, வானவியல், முகக் குறிப்பறியும் இயல், வருவதுரைக்கும் கலை, வீட்டுப் பொருளாதாரம், பொது ஆட்சிமுறை, மருத்துவம், அளவையியல், தாபி, ரியாஸி, இலாஹி அறிவியல்கள், வரலாறு முதலியனவாகும். வடமொழி மாணவர்கள் இலக்கணம், மொழி நூல், அளவையியல், வேதாந்தம், பதஞ்சலி இலக்கணம் முதலியவற்றைக் கற்றர்கள். இவை யாவும் படிப்படியாகக் கற்பிக்கப்படவேண்டும். ஆசிரியரின் பணி மாணவர்களுக்குத் துணைபுரிவதுதான். மாணவர்கள் அறநெறிப் போதனைகளையும்,* மொழிகளையும் மனனம் செய்ய வேண்டும். மேலும், 'தற்காலத்திற்குத் தேவையானவைகளை யாரும் புறக்கணிக்கக்கூடாது' என்ற விதியும் இருந்தது. மேலே கூறப்பட்ட பாடங்கள் சிலவற்றில் சிறப்பான புலமை பெறும்படி கல்லூரிகளுக்கு உத்தரவு இருந்தது. மேற்கூறிய எல்லாப் பாடங்

அயினி அக்பரி (பிளோச்மான். முதல் தொகுப்பு, பக். 278-79)

களையும் எல்லாக் கல்லூரிகளும் கற்பிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படவில்லை. மதர்ஸாக்களில் இந்துக்களையும் சேர்த்துக்கொள்ளுதல் என்ற சீர்திருத்தமும் புகுத்தப்பட்டது. இடைக்கால இந்தியாவில் முதல் முறையாக இந்துக்களும், முஸல்மான்களும் பொதுவான பள்ளிக்கூடங்களில் கல்வி கற்றனர்கள். இருவரும் ஒரே மாதிரியான புத்தகங்களைப் படித்தார்கள். பொதுவான ஒரு தேசீய இனத்தை உண்டாக்கவேண்டும் என்ற அவாவினால் தூண்டப்பட்டு, அக்பர் எல்லா அரசாங்க அதிகாரிகளுக்கும் பாரசீக மொழியைக் கட்டாயமாக ஆக்கியதால், மேற்கூறிய சீர்திருத்தம் அவசியப்பட்டது.

அக்கால நிலைக்கும், மேற்கூறிய சீர்திருத்தத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லை; எனவே, உண்மையில்லை; அதனால் பயனுமில்லை என்று V. A. ஸ்மித் தவறாகக் கருதுகிறார். இந்த முறையின் விளைவாகச் சிறப்பாகப் பல பெருமக்கள் பல துறைகளிலும் தோன்றினார்கள். இவர்கள் அக்பர் ஆட்சியின் பிற்பகுதியிலும், ஜஹாங்கீர், ஷாஜஹான் காலங்களிலும் சிறந்து விளங்கி, ஆட்சி வெற்றிகளுக்கு உறுதுணை புரிந்து, எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் ஒளியுடன் மிளிரக்கூடிய அளவிற்கு மேன்மை பெற்றவர்கள். இந்தக் கல்வித் திட்டம் மிகப் பயனுள்ளதென்பதைக் காட்டுவதற்கு இது வொன்றே போதும். அக்பரின் அரசவை கல்விக்கும், கலைகளுக்கும் ஒரு நிலைக்களனாக விளங்கியது. பேரரசரும், அவரது அரசவையினரும், அதிகாரிகளும் கல்வியை ஆதரித்தார்கள். அக்பரின் காலம் உயர்தரமான கலாசார மறுமலர்ச்சிக் காலமாக இருந்தது. பல துறைகளில், குறிப்பாக வரலாற்று நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் கலையில் சிறப்பான இலக்கியத் தகுதியுள்ள நூல்கள் படைக்கப்பட்டன. அக்பர் காலத்திய இந்தியக் கவிதை நிகரற்றது. அவை எக்காலத்திற்கும் புகழ்பெற்று விளங்குகின்றன. நல்ல விதமான கல்வித்துறை அமைப்பும் சூழ்நிலையும் இல்லாவிட்டால் இத்தகைய சிறப்பான இலக்கியப் படைப்புகளைச் செய்திருக்கமுடியாது.

கல்வியையும் கலாசாரத்தையும் வளர்ப்பதில் அரசவை மிக முக்கியப் பங்கெடுத்துக்கொண்டது. அறிஞர்களும், கலைஞர்களும், பல துறைகளைப்பற்றிய முதல்தரமான அறிவாக்கமும், இலக்கியச் சுவையுமுள்ள நூல்களைப் படைக்குமாறு ஊக்குவிக்கப்பட்டார்கள். சமயம், தத்துவம், இலக்கியம், வாழ்க்கை வரலாறு, வரலாறு, கணிதம், வானவியல், மருத்துவம், இன்னும் பல பொருள்களைப் பற்றிய நூல்கள் பெரும் அளவில் வெளிவந்தன. கவிதையும் புறக்கணிக்கப்படவில்லை. கட்டடக்கலை, இசை, ஓவியம் போன்ற நுண் கலைகளும் ஊக்குவிக்கப்பட்டன. பொதுக் கலாசாரத்தைப்

படைக்கவேண்டுமென்ற பெருமை மிக்க ஆவலினல் தூண்டப் பட்டு, அக்பர் ஒரு மொழிபெயர்ப்புத் துறையையும் ஏற்படுத்தினர். வடமொழி, அராபிய மொழி, துருக்கிய மொழி முதலியவற்றில் உள்ள மிகச் சிறந்த நூல்கள் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப் பட்டதால் இந்துக்களும் முஸ்லீம்களும் தங்கள் மொழியிலும் பண் பாட்டிலும் உள்ள சிறந்த இயல்புகளை அறிந்துகொள்ள முடிந்தது. மேற் கூறிய நோக்கத்திற்காக நாட்டிலுள்ள பேரறிஞர்களின் பணிகளைப் பயன்படுத்திக்கொண்டார் அக்பர். மேற்கூறிய பணி யில் உள்நாட்டு ஆற்றல்களை வளர்க்க வெளிநாடுகளிலிருந்தும் பல புகழ் மிக்க அறிஞர்கள் அழைக்கப்பட்டார்கள். வேதங்கள், இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றைக் கொண்ட பல வட மொழி விரிவுரைகள் பாரசீகத்தில் எழுதப்பட்டன. இந்திய வரலாற்றை எழுதும் கல்விக்கூடம் ஒன்று எழவே, சிறந்த வரலாற்று ஆசிரியர்கள் பெருமளவில் லரலாற்று நூல்களைப் படைத்தார்கள். நூலகங்கள் ஏற்பட்டன. அரண்மனையின் நூலகம் உலகத்தில் உள்ள மிக அற்புதமான நூலகங்களில் ஒன்ருக விளங்கியது. அங்கே பல ஆயிரக்கணக்கான நூல்கள் இருந்தன. அதன் கையெழுத்துப் பிரதிகளை நல்ல முறையில் கட்டி, அழகாகப் படங் கள் போட்டு விளக்கி வைத்திருந்தார்கள். நூல்கள் அவற்றின் தலைப்பிற்கும் அவை எழுதப்பட்டிருந்த மொழிக்கும் ஏற்றவாறு பிரிக்கப்பட்டிருந்தன. வடமொழி, பாரசீக, கிரேக்க, காஷ்மீர, அராபிய நூல்கள் இருந்தன.

அப்பொழுது முக்கியத்துவம் பெற்றுக்கொண்டிருந்த இந்தி மொழி ஆதரிக்கப்பட்டது. அரசவை மொழியான பாரசீகமே பயிற்சி மொழியென அக்பர் திட்டமிட்ட கல்வி முறையில் இடம் வகித்தபோதிலும், அம்மொழி அரசாங்க ஊழியர்களுக்குக் கட்டாய மொழியாக இருந்தாலும், இந்துக்களால் நிறுவப்பட்டுப் பேணப் பட்டுவந்த தனி நிலையங்களும் கோவில்களில் இருந்த பள்ளிகளும் இந்திமொழி வழியாகப் பாடங்களைக் கற்றுக்கொடுத்து வந்தன. அரசர் எடுத்துக்கொண்ட கல்வி நடவடிக்கைகள் மக்களின் அறிவுத் துறையிலும் அறநெறியிலும் சிறந்த தரத்தை ஏற்படுத்தவேண்டு மென்று அக்பர் கொண்டிருந்த ஆவலைக் காட்டுகின்றன. அவரின் கல்வித் திட்டம் உயர்தர நடுத்தர மக்களுக்காக எடுத்துக்கொள் ளப்பட்டது என்பதையும் குறிப்பிடவேண்டும்.

சமயக் கொள்கை

அக்காலத்தில் இந்தியாவில் தெரிந்திருந்த பல்வேறு சமயங் களைப்பற்றி அறிவாக்கமான முறையில் ஆராயும் மனப்பக்குவம்

பெற்ற அக்பர் பரிசீலனை செய்தார் என்று முன்னோர் இயலில் கற்றறிந்தோம். அவரது ஆராய்ச்சியானது, எல்லாச் சமயங்களிலும் உண்மை இருக்கிறது என்ற முடிவுக்கு அவரை இட்டுச் சென்றது. எனவே, பிற சமயங்களுடன் ஒப்பிடும்போது ஓரளவு இளஞ்சமயமான இஸ்லாம் உண்மையின் தனி உரிமையைப் பாராட்டுவதும்; அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான சமயமாகத் தொடர்ந்து இருப்பதும் விரும்பத்தக்கன அல்ல என்று அவர் எண்ணினார். ஆகவே, இஸ்லாம், அரசின் சமயம் என்பதை ஒழித்துவிட்டு, அதன் இடத்தில் அக்பரே விரும்பித் தெரிந்துகொண்ட 'தீன் இலாஹி' என்ற சமயத்தை நிறுவினார். நவீன காலத்திய தியோஸோபிகல் என்ற கடவுள் உணர்வுக் கொள்கைக்கு ஒப்பிடப்படும் இந்தப் புதிய சமயம் ஒரு சர்வ சமய சமரச நெறி; அது ஒவ்வொரு சமயத்தின் நல்ல கொள்கைகளையும் சேர்த்துத் திரட்டியதாகும். அதன் அடிப்படை 'பகுத்தறிவேயன்றி' எந்த மனிதனின் 'மேலாண்மையோ, அதிகாரமோ அல்ல'. தனது சமயத்தைத் தன் குடிகளின் மேல் பலவந்தமாகத் திணிக்கக்கூடாது என்பது அக்பரின் கொள்கை. எனவே, புதிய சமயம் அரசவைக்குள்ளே நின்று, ஒரு சில ஆயிரம் ஆதரவாளர்களைக் கொண்டிருந்தது. தீன் இலாஹியை நிறுவிய பின்னரும், அக்பர் குடிமக்களுக்கு முழு சமயப் பொறையைக் காட்டுகின்ற கொள்கையை இன்னும் பின்பற்றினார். எல்லாச் சமயங்களிலும் உண்மை இருக்கிறதென்றும், ஓரே கடவுளே எங்கும் இருக்கிறாரென்றும், அவரை மாதா கோயிலிலும், இந்துக் கோவிலிலும், மசூதியிலும் வணங்கினாலும் ஒன்றுதான் என்றும் நம்பிய ஓர் அரசர், எல்லாச் சமயங்களையும் ஒரே முறையில் கருதி, ஒவ்வொரு சமயத்தைத் தழுவியவர்களுக்கும் முழு மனச் சுதந்திரமும், வழிபாட்டு உரிமையும் வழங்கியது இயல்பானதே. இந்தியாவில் இஸ்லாம் பரவிய காலந்தொட்டு இருந்து வந்த வழக்கத்திற்கு மாறாக, இந்துக்கள் பொது வழிபாடு செய்யவும், தங்களின் சமயத்தைப் பிரசாரம் செய்யவும் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். வல்லந்த முறையில் இஸ்லாத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டிருந்த இந்து ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், அவர்கள் விரும்பினால் தமது முன்னோர்களின் சமயத்தை மீண்டும் தழுவிக்கொள்ளலாம். கிறிஸ்தவர்கள், கோவில்களைக் கட்டவும், இந்துக்களையும் முஸ்லிம்களையும் கிறிஸ்தவ சமயத்திற்கு மனந்திருப்பவும் அனுமதிக்கப்பட்டார்கள். சமயத்தின் அடிப்படையில் யாருக்கும் எந்தவிதமான இடர்ப்பாடும் செய்யப்படவில்லை. மக்களின் சாதி, இனம், சமயக் கொள்கை ஆகிய வேறுபாடுகளைக் கருதாமல் அவர்களுக்கு அரசாங்கத்தில் வேலைகள் தரப்பட்டன. பல நூற்றாண்டுகளாக இஸ்லாமிய சமயம் அனுபவித்துவந்த் உன்னத நிலையிலிருந்து அதனை இறக்கிப் பிற சமயங்

களுடன் சமநிலைக்குக் கொண்டுவந்ததால்தான், அக்பரின் சமயச் சீர்திருத்தங்கள் புரட்சிகரமாகத் தோன்றின. இஸ்லாமியத்தின் முக்கிய ஆதரவாளர்கள், குறிப்பாக உலிமாக்கள், இதுவரையிலும் அரசாங்கத்தை வழிநடத்தி, அதன் சமயக் கொள்கைகளை உரு வாக்கிவந்ததாகத் தம்மைக் கருதியதால், இப்போது ஏற்பட்ட மாற் றங்களைக் கண்டு கலவரம் அடைந்தார்கள். அவர்கள் அக்பருக்கு எதிராகச் சமய நம்பிக்கையற்றவர், சமயத் துரோகி என்ற குற்றச் சாட்டுகளைக் கூறி, முஸ்லிம் மக்களை அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும்படியும் தூண்டிவிட்டார்கள். 1580ஆம் ஆண்டின் தொடக்கத்தில், கான்பூரின் காஸியான முல்லா முகம்மது யாஸ்தி என்பவர், அக்பர் இனி முஸ்லிம் அல்லர் என்று ஒரு பாதுவா அல்லது அறிக்கையை வெளியிட்டு, அவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தாலும் அது சட்டவிரோதமாகாதென்றும் கூறினர். இதே சமயத்தில்தான் ஜாகீர் நிலங்களை கால்ஸா நிலங்களாக மாற்றவும், அரசாங்க அதிகாரிகளின் படித்தொகைகளைக் குறைக்கவும் சில ஆட்சித்துறைச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். இத்தகைய சீர்திருத்தங்களால் விளைந்த மனக்குறை, பீகாரிலும் வங்காளத் திலுமுள்ள சில அரசாங்க அதிகாரிகளை, இழிவுபடுத்தப்பட்டதால் அதிருப்தியுற்றிருந்த முஸ்லீம் மறைவாணர்களுடன் சேர்ந்து கொண்டு, ஒரு பயங்கரமான புரட்சியை நடத்தத் தூண்டியது. அக்பருடைய் சமயக் கொள்கையின் உடனடியான அரசியல் விளைவு நன்மை பயக்காமல், நாட்டை ஓர் உள்நாட்டுப் போரில் ஆழ்த்தியது; ஆனால், இதனால் அரசர் பணிந்து, அரசியல் விவேக முள்ள சமயப் பொறையாகிய கொள்கையை விட்டுக்கொடுக்க வில்லை. அக்பர் புரட்சியை அடக்கி, அதில் முக்கியமானவர்களாக இருந்தவர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுத்தார். முழு சமயப் பொறை என்ற கொள்கை சோதனையில் வெற்றி கண்டு, அவரது ஆட்சிக்காலம் முழுவதும் நிலைபெற்றிருந்தது. அவுரங்கசீப் காலம்வரையிலும்கூட அது சில மாற்றங்களுடன் இயங்கி வந்தது எனக் கூறலாம்.

தற்கால வரலாற்று ஆசிரியர்களில் சிலர், குறிப்பாக ஸ்மித், ஊல்ஸ்லி ஹேய்க் என்போர் கருதுவது என்னவென்றால், அக்பர் மற்றச் சமயங்களுக்குச் சமயப் பொறை காட்டினாலும், இஸ்லாம் மதத்தை ஒறுத்தார் என்பது. இந்தக் கருத்து இயேசு சபைக் குருமார்களுடைய குறிப்புகளின் அடிப்படையிலும், வரலாற்று எழுத்தாளராகிய பதோனி என்பவராலும் எழுந்தது. இயேசு சபைக் குருக்கள் கோவாவிலும் லிஸ்பனிலும் இருந்த தங்க ளுடைய மேலதிகாரிகளுக்குத் தங்களுடைய தூதுப்பணி வெற்றியடைந்துள்ளது என்பதையும், அரசர் கிறிஸ்தவ

மதத்தை அநேகமாகத் தழுவிவிடுவார் என்பதையும் எடுத்துக்காட்ட, மிகைபடக் கூறப்பட்ட அறிக்கைகளை அனுப்பி வந்தார்கள். அக்பர் இஸ்லாமை விட்டுவிட்டதுமட்டுமன்றி, அதனை ஒறுக்கவும் செய்கிறார் என்று இந்த குருமார்கள் எதையும் நம்புகிற ஐரோப்பியக் கிறிஸ்தவர்களுக்கு அறிவித்தார்கள். பதோனி வெறியுணர்வுகொண்ட ஒரு முல்லா. பிற சமயங்களுக்குக் காட்டப்பட்ட நீதியும் பரிவும் அவருக்கு இஸ்லாமுக்குச் செய்யப்பட்ட அநீதியாகவும், துன்புறுத்தலாகவும் பட்டது. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், இஸ்லாம் அரசாங்கச் சமயம் என்ற நிலையிலிருந்து இறக்கப்பட்டதே, அதன் வைதிக வெறிகொண்ட ஆதரவாளர்களுக்குக் குற்றமாகத் தென்பட்டது. ஒவ்வொரு சமயமும் தனது கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்குக் கொடுக்கப்பட்ட விதிவிலக்கான உரிமைகள், மதம் மாற்றிக்கொண்டவர்கள் விரும்பினால் தங்களுடைய முன்னுளைய சமயத்திற்கு மீண்டும் வந்துவிடலாம் என்பதை இஸ்லாமியத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியாக அவர்கள் கண்டனக் குரல் எழுப்பினர். பதோனிதான் அக்பரின் சமய ஒறுத்தலின் நடவடிக்கைகளாகக் கருதியவற்றின் பட்டியல் ஒன்றைத் தருகிறார். அவையாவன :

1. பிரார்த்தனையின்போது பட்டாடைகளையும் அணிகலன்களையும் அணிந்துகொள்வது கட்டாயமாக்கப்பட்டது.
2. அக்பர் இஸ்லாமியப் பிரார்த்தனைகளைத் தடை செய்தார்.
3. பொதுப் பிரார்த்தனை மண்டபத்தில் வழிபாட்டிற்காக அழைக்கும் வழக்கத்தை நிறுத்தினார்.
4. முஸ்லீம் நோன்புகளைத் தடைசெய்தார்.
5. மெக்காவுக்குப் புனித யாத்திரை செல்வது தடுக்கப்பட்டது.
6. முஸ்லீம் திருவிழாக்கள் கைவிடப்பட்டன.
7. யாரும் தம் குழந்தைகளுக்கு முகமது அல்லது அகமது என்ற பெயர்களை இடுவது தடை செய்யப்பட்டது.
8. மசூதிகள் கொள்ளையிடப்பட்டுக் குதிரை லாயங்களாக மாற்றப்பட்டன.
9. தாடிகளை நீக்குவது அனுமதிக்கப்பட்டது.
10. காட்டுக் கரடி, பன்றிகள், புலிகளின் இறைச்சிகளை உண்ணுவது அனுமதிக்கப்பட்டது.
11. அராபி மொழியைப் படிப்பது ஆதரிக்கப்படவில்லை.

12. தடைசெய்யப்பட்ட நாட்களில் பசுக்களையும் பிற விலங்கு களையும் கொன்றவர்கள் தண்டனைக்குள்ளானார்கள்; சில வேளைகளில் மரண தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுகளைத் தீர ஆராய்ந்து பார்த்தால், அவற்றில் பல ஆதாரமற்றவை என்பது புலப்படும். அக்பர் இஸ்லாமியப் பிரார்த்தனைகளைத் தடை செய்திருந்தாரானால், பிரார்த்தனை சமயத்தில் பட்டாடைகளையும் அணிகலன்களையும் புனைந்துகொள்ளவேண்டுமென்ற ஆணை தேவையற்றது. பதோனியின் சொந்த நூலிலிருந்தும், இயேசு சபைக் குருமார்களின் குறிப்புகளிலிருந்தும், அக்பரின் ஆட்சிக் காலம் முழுவதும் முஸ்லீம்களைப் பொதுப் பிரார்த்தனைக்கு அழைப்பதும், தினமும் ஐந்துமுறை தொழுகை செய்வதும் தொடர்ந்து வழக்கத்தில் இருந்தன என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். ரம்ஸான் நோன்பு இருக்கக் கூடாது என்று பொதுமக்களுக்கு ஆணை கொடுக்கப்பட்டது என்பதைக் கற்பனை பண்ணினாலும் அறிவீனமாகத் தோன்றும். அது போலவே, மெக்காவுக்குப் புனித யாத்திரைகளும் முன்போலவே தொடர்ந்து நடந்துவந்தன. நாம் பல சான்றுகளிலிருந்தும், இயேசு சபைக் குருமார்களின் குறிப்புகளிலிருந்தும், 1585 வரைக்கும்கூடப் பல முஸ்லீம் ஆண்களும், பெண்களும் மெக்காவிற்குப் புனித யாத்திரை போய்வந்தனரென அறிகிறோம். முஸ்லீம் பண்டிகைகளைக் கொண்டாடுவதும், குழந்தைகளுக்கு முகமது, அகமது என்ற பெயர்களைச் சூட்டுவதும் அக்பர் ஆட்சி முழுவதும் சாதாரணமான நிகழ்ச்சிகள் என்பதை அக் காலத்துப் பல எழுத்தாளர்களின் குறிப்புகளிலிருந்து அறிய முடிகிறது. மசூதிகளைக் கொள்ளையிட்டு, குதிரை லாயங்களாக அக்பர் மாற்றினார் என்பதை நிறுவ, வன்மையான சான்று எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்துக் கோவில்களைப்போல் மசூதிகளில் விலையுயர்ந்த பொருள்கள் எவையும் இருப்பதில்லையாகையால், அவற்றைக் கொள்ளையிடுவதில் எந்தப் பயனும் விளையாது. ஒருவேளை, போர்க்காலங்களில் மசூதியைப் படையினரின் வசதிகளுக்காகப் பயன்படுத்தி இருக்கலாம். நூற்றுக்கணக்கான மசூதிகள் அழிக்கப்படாமல் இருந்து, வழிபாட்டு இடங்களாகப் பயன்பட்டுவந்தன என்பதை நாம் திட்டமாக அறிந்துகொள்ளமுடியுமாதலால், அவற்றைக் குதிரை லாயங்களாக மாற்றுவதற்குப் பொதுவான ஆணைகளை அக்பர் கொடுத்திருப்பார் என்பதை அவ்வளவு எளிதாக நம்பிவிட முடியாது. அக்பர் ஆட்சியின் பிந்திய காலத்தில் வரையப்பட்ட பல ஓவியங்களிலிருந்து, அக்பர் அரசவையில் இருந்த பிரபுக்களும் பெருமக்களும் தாடி வளர்த்துக்கொள்ளும் வழக்கத்தைக் கைவிடவில்லை என்பதை அறிய முடியும். அக்பர் தமது தாடியை நீக்கி

விட்டதையோ, அதனைப் பின்பற்றிப் பல முஸ்லீம் பிரபுக்களும் தாடிகளை நீக்கிவிட்டதையோ இஸ்லாம் சமயத்தைத் துன்புறுத்தும் ஒரு நடவடிக்கையாகக் கொள்ள முடியாது. இதுபோலவே கரடியின் இறைச்சியை உண்ணவேண்டுமென்று யாரும் வற்புறுத்தப் படவில்லை. ஒருவேளை கரடிக்கறி உண்டவர்கள் வெறுக்கப் படாமலும் தண்டிக்கப்படாமலும் விடப்பட்டிருக்கலாம். அக்பர் பாரசீக மொழி படிப்பதை வற்புறுத்தி, வடமொழியையும் இந்தியையும் ஆதரித்தார். அராபிய மொழி கற்பதைத் தடைசெய்து எந்த ஆணையும் கொடுக்கப்படவில்லை. பதோனியைப்போன்ற வெறியர்கள், அக்பர் வடமொழியை ஆதரித்ததால், அராபிய மொழி படிப்பதைத் தடை செய்தார் என்று எண்ணினர். எனவே, அக்பர் தமது முன்னோர்களின் சமயத்தைத் துன்புறுத்த எவ்வித நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளவில்லை என்பது தெளிவு. அவர் செய்தது என்னவென்றால், இஸ்லாமிய சமயத்தைப் பிற சமயங்களின் நிலைக்குக் கொண்டுவந்து முகமதுவைமட்டுமே ஒரே தீர்க்கதரிசி என்று கொள்ளாமல், அவரைத் தீர்க்கதரிசிகளில் ஒருவராகக் கருதினார்.

பொதுப் பணிகள்

முகலாயப் பொதுப் பணித்துறை, ஆட்சிமுறையை மிகத் திறமையாக நடத்தி, அக்பரின் ஆட்சியை மகோன்னத ஆட்சியாக விளங்கச் செய்தது. ஆனால், இதனை ஒரு தேசியப் பொதுப்பணித் துறை என்று கூறமுடியாது. இதில் பெரும்பாலும் துருக்கியர், மங்கோலியர், பாரசீகர், அராபியர், ஆப்கானியர் போன்ற அந்நியர்களும், இங்கொன்றும் அங்கொன்றுமாக இந்திய முகமதியர்களும் இந்துக்களும் இருந்தனர். ப்ளோச்மான் என்பவரின் கருத்துப்படி, அக்பரின் உயர்தர அதிகாரிகளில் எழுபது சதவீதத்தினர் அந்நியர்களாவர். இவர்கள் மைய ஆசியாவிலிருந்து அரசப் பணிக்காக வந்தவர்களும், இந்தியாவில் ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளாகத் தங்கியிருந்தவர்களுமாவர். இவர்களில் பெரும்பாலோர் பாபரையும் ஹுமாயூனையும் தொடர்ந்து இந்தியாவுக்கு வந்து அரச குடிகளுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டனர். அக்பர் உயர்தரப் பதவிகளில் இந்துக்களை அமர்த்தினார்; ஆனால், உயர்ந்த சிவில் படைத்துறைப் பகுதிகளில் இருந்த இந்துக்களின் எண்ணிக்கை பொதுவாக மிகக் குறைவானது. பதவி பெற்றிருந்த இந்திய முகமதியர்களின் எண்ணிக்கையும் எந்த வகையானும் அதிகம் என்று கூறமுடியாது. உயர்தரப் பதவி பெற்றிருந்த இந்துக்களில் இராசபுத்திரர்கள் முதலிடம் வகித்தார்கள். ‘இந்தியா இந்தியர்களுக்கே’ என்ற

அக்பரின் கொள்கை இருந்தபோதிலும், முகலாயப் பொதுப்பணித் துறை பலதரப்பட்ட மக்களைக்கொண்ட ஒரு நிறுவனமாக விளங்கியது. அக்பரின் ஆட்சி முடிவுவரைக்கும் பொதுப்பணித் துறையில் அந்நியர்கள் அதிகமாக இருந்தனர்.

பொதுப்பணித் துறையில் சேர்வதற்கு ஒருவரின் தகுதியையும் பொருத்தத்தையும் அடிப்படையாகக் கொண்டார்கள். பொதுப் பணித் துறையில் உறுப்பினர்கள் ஆவதற்கு இனம், சமயம், சாதி ஆகியவை தகுதிகளாகக் கருதப்படவில்லை. சில வேளைகளில் அரசியல் காரணங்களும் சிலரைப் பொதுப்பணியில் உயர்ந்த பதவிகளில் நியமிக்க அரசரைத் தூண்டியது. இவர்களும் தமது விசுவாசத்திலும் திறமையான பணியினிலும் தகுதி காட்டாவிடில் பதவி உயர்வுக்குக் கருதப்படவில்லை. பொதுத்துறைப் பணியில் இருந்த உறுப்பினர்களுக்கு மான்சப்தார்கள் பதவி வழங்கப்பட்டு, அவர்களுடைய தகுதி வரிசை, நிலை, ஊதியம் ஆகியவை அவரவர்களுக்கு உரிய மான்சப்புகளுக்கு ஏற்றபடி நிர்ணயிக்கப்பட்டன. அவரவர்களின் பணிகள் அங்கீகரிக்கப்படுவதன் அடிப்படையில் தான் பதவி உயர்வு கொடுக்கப்பட்டதேயன்றிப் பணிசெய்த கால வரிசையைப் பொறுத்தோ அல்லது சம்பள அடிப்படையிலோ அன்று. உயர்தர அதிகாரிகளையும் அமைச்சர்களையும் பதவியில் உயர்த்துவதையோ அல்லது பதவியிலிருந்து இறக்குவதையோ தம் விருப்பப்படி செய்கின்ற உரிமையை அரசர் தமது தனியுரிமையாக வைத்துக்கொண்டார். பிரதம அமைச்சர்கூட ஒரு கவர்னர் பதவிக்கோ அல்லது அதைவிடக் குறைந்த பதவி ஒன்றினுக்கோ இறக்கப்படலாம். பிரதமராகப் பணியாற்றி முடிந்த பின்னர் ராஜா தோடர்மால் கவர்னராக மாற்றப்பட்டார். இத்தகைய எடுத்துக்காட்டுகள் பல இருக்கின்றன. சிறிய பதவி ஒன்றில் இருக்கும் அதிகாரி ஒருவர் குறிப்பிட்ட ஒரு துறையில் ஒரு பெரிய பதவிக்கு உயர்த்தப்படும்போது பல கட்டங்களைக் கடந்துதான் அந்த உயர்வைப் பெறவேண்டுமென்பது கட்டாயமில்லை. எந்த நிலையிலும் உயர்பதவியில் தொடர்ந்து இருக்கவோ, அல்லது உயர் பதவி பெறவோ அங்கீகரிக்கப்பட்ட தொண்டும் மிக்க பற்றுக் கொண்ட விசுவாசமும் தேவையாகும்.

அரசாங்கப் பணியானது பணித்துறை ஆட்சிக் கொள்கைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது. அது தோற்றத்திலும் அமைப்பிலும் படைமயமாக இருந்தது. படைத்துறையைப் பற்றி விளக்குகின்றபோது, ஒவ்வோர் அதிகாரியும் மான்சப் பெற்றவர் அல்லது அதிகார வரிசையான தகுதி அல்லது ஊதியம் பெறுபவர் என்று கூறப்பட்டது. அவர் ஒரு படையையும் துணைப்படை

களையும் வைத்திருப்பதோடு, அவற்றை அரசாங்கத்தின் தேவைகளுக்கு அவசியம் ஏற்படும்போதும் கொடுத்து உதவவேண்டும். பணித்துறை உறுப்பினர்கள், மான்சப்தார்கள் என்று அழைக்கப்பட்டு, 33 தர வரிசைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். இந்த வரிசை 10 முதல் 10,000 வரை மான்சப்புகளைக் கொண்டதாகும். இவ்வாறு அரசின் பணித்துறையானது தெளிவான படை முறையில் அமைக்கப்பட்டிருந்தது. அதன் உறுப்பினர்கள் தங்களது ஆட்சித்துறை, நீதித்துறைக் கடமைகளுடன் படைத்துறைப் பணிகளையும் ஆற்றவேண்டியிருந்தது.

பதவிகளில் அதிகமான தனிச்செறிவு இருக்கவில்லை. அதிகாரிகளின் பணிகள், நீதித்துறை, நிலவரித்துறை, ஆட்சித்துறைப் பணிகள் என்று தெளிவாக வரையறை செய்யப்படவில்லை. சீரியல், போரியல் பணிகளுக்கு இடையேகூடத் தெளிவான பாகுபாடு இருக்கவில்லை. எந்த அதிகாரியும் எந்த நேரத்திலும் முற்றிலும் புதிய ஒரு வேலைக்கு மாற்றப்படலாம். எடுத்துக்காட்டாக, முற்றிலும் நிதித்துறை நிபுணராகிய ராஜா தோடர்மால் ஒரு தடவைக்கு அதிகமாகவே கவர்னராகவும் படைத்தலைவராகவும்கூடப் பணியாற்றும்படி அனுப்பப்பட்டிருக்கிறார். புகழ்பெற்ற அறிஞரும், வரலாற்றாசிரியருமாகிய அபுல் பாஸல் அரசியல் தூதுவராகவும், தக்கணத்தில் படைத்தலைவராகவும் அனுப்பப்பட்டிருக்கிறார். சபை விகடராகிய ராஜ பீர்பால், பதானியர்களுக்கு எதிராகப் படையெடுக்கும்படி அனுப்பப்பட்டார். தனியான மருத்துவ அல்லது கல்வித்துறைகள் இருக்கவில்லை. ஆனால், ஆசிரியர்களும் மருத்துவர்களும் அரசப் பணியாளர்களாக அமர்த்தப்பட்டனர்.

பொதுவாக அரசாங்க அதிகாரிகள் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர் : (1) அரசவையில் அரசருக்குப் பணிபுரிந்தவர்கள்; (2) தலைநகரிலோ அல்லது மாநிலங்களிலோ குறிப்பிட்ட பதவிகளை வகித்தவர்கள். இத்தகைய இருவகையான அதிகாரிகளின் பெயர்களும் தனித்தனியான பதிவேடுகளில் எழுதப்பட்டிருந்தன. அரசவையில் பணிபுரிந்த அதிகாரிகள், அரசர் கொடுக்கின்ற எந்த ஆணையையும் சிரமேற்கொண்டு செய்யத் தயாராக இருக்கவேண்டும். இவர்களுக்குச் சொந்தப் படைகள் உண்டு; அவற்றையும் அவர்கள் தயாராக வைத்திருக்கவேண்டும். மற்றொரு பதிவேட்டில் பெயர் எழுதப்பட்டிருந்த அதிகாரிகள் பல்வேறு பதவிகளை வகித்தார்கள். எடுத்துக்காட்டாக, மாநிலங்களிலும் மாவட்டங்களிலும் கவர்னர் பதவிகள், அல்லது அரசாங்கத் தலைமைப் பணிமன்றத்திலும், அரண்மனை ஆட்சித்துறையிலும் பதவிகள் முதலியன.

அதிகாரிகள் ஜாகீர்களை மானியங்களாகப் பெற்றோ, அல்லது அரசாங்கக் கருவூலத்திலிருந்து சம்பளம் பெற்றோ தமது ஊதியங்களைப் பெற்றனர். அக்பர் சம்பளம் கொடுக்கும் முறையை விரும்பினார்; ஆனால், ஜாகீர்கள்மூலம் ஊதியம் கொடுப்பது தொன்றுதொட்டு வந்த முறையாகையால், அவர் அதனையும் முற்றிலும் அழித்துவிடவில்லை. ஆனால், அக்பர் ஆட்சியின் இறுதியில், நிலமானியங்களைச் சம்பளமாகப் பெற்றுவந்த அதிகாரிகளின் தொகை மிகக் குறைவு. அதிகாரிகள் பெற்றுவந்த சம்பளங்களும் படித்தொகைகளும் மிக அதிகமாகும். முதல் தரத்தைச் சேர்ந்த 5,000 தகுதி மான்சப்தாருக்கு மாதம் 30,000 ரூபாயும், இரண்டாம் நிலை மான்சப்தாருக்கு மாதம் 29,000 ரூபாயும், அதே தரத்தைச் சேர்ந்த மூன்றுவது வகையான மான்சப்தாருக்கு மாதம் 28,000 ரூபாயும் சம்பளமாகக் கொடுக்கப்பட்டன. ஆனால், அதிகாரிகள் தங்களின் படையமைப்புகளுக்காகும் செலவைத் தமது சம்பளங்களிலிருந்தே கொடுக்கவேண்டும். படைச்செலவுகளைக் கழித்த பின்னர் 5,000 தகுதிபெற்ற மான்சப்தாரின் ஊதியம் ஏறக்குறைய மாதம் ரூ. 18,000மும், 1,000 தகுதி மான்சப்தாரினுடைய ஊதியம் மாதம் ரூ. 5,000மும், 500 தகுதி பெற்றவரின் ஊதியம் மாதம் ரூ. 1,000மும் ஆகும். அக்பரின் காலத்தில் பன்னிரண்டு மாதங்களுக்கும் சம்பளம் கொடுக்கப்பட்டது.

முகலாயப் பொதுப்பணித் துறையானது நல்ல முறையில் அமைக்கப்பட்டிருந்தாலும், அதில் சில குறைபாடுகள் இருந்தன. முதலில் பதவி உயர்வு, பதவி நியமனம், பதவி நீக்கம்பற்றிய திட்டவட்டமான விதிகள் இருக்கவில்லை. இரண்டாவதாக, பதவியின் கால உறுதி நிர்ணயிக்கப்படவில்லை. இதனால் உறுதிபெறச் சதிவேலைகளும் கடமைப் புறக்கணிப்பும் விளைந்தன. அரசர் தம் விருப்பப்படி யாரையும் பதவி நியமனம் செய்யவும் பதவி உயர்வு தரவும் முடியும். மனிதர்களின் குணமேன்மைகளைக் கண்டவுடனே முடிவு செய்யக்கூடிய வற்றாத பண்பைப் பெற்றிருந்த அக்பர் இயல்பாகவே சரியான அதிகாரிகளைத் தெரிந்ததோடு, தகுதி உள்ளவர்களுக்குமட்டுமே பதவி உயர்வும் கொடுத்தார். ஆனால், அக்பரைப்போன்று அத்தனை ஆற்றல் பெறாத அவரது வழித்தோன்றல்களின்கீழ்ப் பொதுப்பணித் துறை நலிவுற்றது. மூன்றுவதாக, குறிப்பிட்ட அளவு படைவீரர்களையும் துணைப்படைகளையும் வைத்துப் பேணுவதற்கு அதிகமான பணச்செலவாயிற்று. உயர்தர வரிசைகளைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள் வாழ்க்கையில் தங்களுக்குள்ள நிலையின் காரணமாகவும், ஆடம்பரமான வாழ்க்கைத்தரத்தை வழிவழியாகக் கைக்கொண்டதாலும், டம்பமாகச் செலவிடவேண்டியிருந்ததாலும், அவர்களிடம் சிக்கனப்

பழக்கம் ஏற்படவில்லை. சாதாரண அதிகாரிகள்கூட ஆடம்பரங்களிலும், விருந்துகளிலும், பரிசுகளிலும் அதிகமான பணத்தை வீணாக்கிவிட்டு, ஏழைமக்களைத் துன்பப்படுத்தவேண்டியதாயிற்று.

இத்தகைய குறைபாடுகள் இருந்தபோதிலும், அக்பர் காலத்திய அரசாங்கப் பொதுப்பணித் துறை நன்கு அமைக்கப்பட்டும், ஆற்றல் மிகுந்தும், விசுவாசத்திற்கும் திறமைக்கும் புகழ்பெற்றும் உலகத்தில் அன்று நிலவிய பணித்துறைகளில் சிறந்ததொன்றாக விளங்கியது. இத் துறை அக்பரின் அரசியல் கொள்கைகளை விவேகத்துடன் நிறைவேற்றி, அவரது ஆட்சியை வெற்றியும் மேன்மையும் பெற்று விளங்கச் செய்தது.

சமூகப் பொருளாதார நிலைமைகள்

நாடும் மக்களும்

அக்பர் காலத்திய இந்தியா இன்றைய இந்தியாவைப் பல அம்சங்களில் ஒத்திருந்தது. அன்று இருப்புப்பாதைகளும், தற்கால உத்தரப்பிரதேசத்தில் இருப்பதுபோல் கால்வாய்த் திட்டங்களும் இருக்கவில்லை. சுதந்திர இந்தியாவில் இன்று விளங்குவது போன்ற ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்களும், தொழிலாக்க, தொழில் நுணுக்க முன்னேற்றங்களும், இடைக்கால இந்தியாவில் இருந்திருக்குமென்று நினைக்கவும் முடியாது. அன்று வன்மையான கப்பிச் சாலைகள் இருக்கவில்லை. நாட்டின் பல பகுதிகளும் மிக முக்கியமான நகரங்களும் கச்சாச் சாலைகளினால் இணைக்கப்பட்டிருந்தன. இவற்றின் இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்களும், தங்கியிருந்து பாதுகாப்பாக இரவைக் கழிப்பதற்காக வணிகர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் நன்கு அமைக்கப்பட்ட சராய்கள் என்ற விடுதிகளும் இருந்தன. படகு போக்குவரத்துக்குப் பயன்படக் கூடிய சிந்து, கங்கை, யமுனை, கஹாரா ஆறுகளும் வங்காளத்தின் ஆறுகளும் படைகளையும் பண்டங்களையும் கொண்டு செல்வதற்காக அடிக்கடி நீர்வழிகளாகப் பயன்படுத்தப்பட்டன. அக்பர் காலத்தில் இன்றிருப்பதைவிடக் காடுகள் அதிகம் இருந்தன. கோரன்பூர், கோண்டா, லட்சுமிபுரம், கெரி, தற்கா உத்தரப் பிரதேசத்திலுள்ள பிஜ்ஜார், இன்னும் பீகார், மத்தியப் பிரதேசத்திலுள்ள சில பகுதிகள் ஆகிய இடங்களில் காடுகள் அதிகமாகும். காடுகள் அதிகம் இருந்த காரணத்தால், சில பகுதிகளில் கங்கைச் சமவெளியில்கூட வனவிலங்குகள் இருந்தன. கங்கை-யமுனை ஆறுகளுக்குத் தெற்கேயுள்ள பகுதிகளில் யானைகள் அதிகம் காணப்பட்டன. மாளவத்தின் சில பகுதிகளில் சிங்கங்களையும்

புலிகளையும் வேட்டையாடலாம். கங்கையாற்றுச் சமவெளிகளில் சிலவேளைகளில் காண்டாமிருகங்களையும் புலிகளையும் காணலாம். அக்பருக்கு ஆக்ராவின் அருகில் பரந்த வேட்டை நிலமொன்றிருந் தது. அங்குப் பலவகையான வனவிலங்குகள் வேட்டையாடப்பட் டன. பெருங் காடுகளும் தோட்டங்களும் இருந்தமையால், அதிக மழையும் அதிக உற்பத்தியும் இருந்தன. இவைகளைத் தவிர, நாட்டின் பொதுவான அம்சங்கள் தற்காலத்திய நிலைமைகளினின் றும் அதிக அளவில் வேறுபட்டிருக்கவில்லை. நெருக்கமாக அமைந்து, மக்கட் பெருக்கம் கொண்டிருந்த கிராமங்கள் நாடு முழு வதும் பரந்து கிடப்பதைக் காணலாம். தற்கால நகர்களான பம்பாய், கல்கத்தா, சென்னை, கான்பூர், கராச்சி போன்ற நகரங்கள் அன்று எழவில்லை. பண்டைக் காலத் தலைநகர்களான கனோசியும் விஜயநகரும் நலிவுற்றுவந்தன. அக்பர் காலத்தில் செழித்திருந்த நகரங்கள் ஃபதேபூர்சிக்ரி, ஆக்ரா, டெல்லி, அலகாபாத், பனாரஸ், லக்னோ, லாகூர், முல்தான், உஜ்ஜயினி, ஆமதாபாத், ஆஜ்மீர் பாட்னு, ராக்மஹால், டாக்கா என்பன. இந்த நகரங்களெல்லாம் வளமுற்றும் மக்கட் பெருக்கமுற்றும் இருந்தன. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், சிறப்பாகப் பெரிய நகரங்களின் அருகிலும் பெரிய தோட்டங்கள் இருந்தன. கிராமப்புறங்கள் மட்டுமல்ல; நகரங்கள் கூடத் தூரத்தில் இருந்து காணும்போது அழகாக இருந்தனவென்று மான்சரெட் என்பார் குறிப்பிடுகிருர்.

நாட்டில் மக்கட் பெருக்கம் அதிகமாக இருந்தது. பரந்த காடுகள் நாடு முழுவதும் இருந்தன. அங்கும் இங்கும் மக்கள் வசிக்காத வறண்ட பகுதிகளும் காணப்பட்டன. ஆனால், மக்கள் நெருக்கம் இன்று இருப்பதுபோன்று இருக்கவில்லை. மக்கள் தொகையும் ஒரே சீராக இருக்கவில்லை. இந்துக்கள் பெரும்பான்மையினராக இருந்தனர். அவர்களுக்குள் சாதிப் பிரிவுகள் இருந்தன. இந்துக்களில் உயர் வகுப்புகளை இராசபுத் திர, பிராமண, காயஸ்த, வைசிய சாதிகளில் காணலாம். இப் பிரிவுகளுக்குள் சேர்ந்து உண்ணும் வழக்கமோ, மண உறவுகளோ கிடையா. எனவே, நமது காலத்தைவிட அன்று சாதி முறை அதிகக் கடினமாக இருந்தது. பொதுவாக இராசபுத்திரர்கள் போர் மறவர்களாக விளங்கினர். அவர்களின் குலத்தலைவர்கள் அரசாங்கப் பணியில் மிக உயர்வான மான்சப்தார்களாக இருந் தனர். பிராமணர்கள் குருக்களாக அல்லது ஆசிரியர்களாக இருந் தார்கள். வைசியர்கள் வணிகக் குலத்தவர். காயஸ்தர்கள் என்ற பிரிவினர் எழுத்தர்கள், செயலாளர்கள், நிலவரி அதிகாரி களாகப் பணி புரிந்துவந்தனர். கீழ்வகுப்புகளைச் சேர்ந்த இராச புத்திரர்களில் சிலர் வழிப்பறி, திருட்டுத் தொழிலில் விருப்புக்

காட்டியதாகத் தெரிகிறது. முகமதியர்களுக்குள் இரண்டு தீவிர மான பிரிவுகள் இருந்தன. (1) அரேபியா, பாரசீகம் இன்னும் பல வெளிநாடுகளிலிருந்து அரசாங்கப் பணிக்காகவும் வாணிகம் செய்ய வும் வந்தவர்கள்; (2) சுதேச இந்து மக்களில் முகமதியர் களாக மதம் மாற்றப்பட்டவர்கள் அல்லது முதலில் மதம் மாற்றப்பட்டவர்களின் வழித்தோன்றல்கள். பின்கூறப்பட்ட வகுப் பினரின் எண்ணிக்கை ஓரளவு அதிகமாகவே இருந்தது. அரேபியா விலும் பாரசீகத்திலுமிருந்து வந்த வெளிநாட்டு முகமதியர்கள் கடல் துறைகளில் தமது பற்றிடங்களை அமைத்திருந்தார்கள். அரசாங்கப் பதவி தேடி வந்தவர்கள் பெரும்பாலும் வட இந்தியாவில் இருந்தனர். ஒரு சிறிய அளவினரே பீஜப்பூர், ஆமதுநகர், கோல்கொண்டா ஆகிய இராச்சியங்களின் அரசவைகளில் இருந் தனர். வெளிநாட்டு முஸ்லீம்கள் அக்பரின் அரசவையில் ஆதிக்கம் செலுத்தினர். அராபியர், பாரசீகர்கள், துருக்கியர், மங்கோலியர், உஸ்பெக்குகள் ஆகியோரைத் தவிரச் சில அபிசீனியர் களும் ஆர்மீனியர்களும் இருந்தார்கள். வெளிநாடுகளிலிருந்து நாடோடி வீரவாழ்வைத் தேடி வந்தவர்களையும், நாடுவிட்டு நாடு வந்தேறியவர்களையும் தடைசெய்ய எவ்வித வழியும் இல்லாத தால், ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமிருந்து பல நாட்டினங்களைச் சேர்ந்தவர்கள் இந்தியாவில் காணப்பட்டனர். சிறப்பாகப் போர்த்துகீசியர், ஆங்கிலேயர், சீனர்கள், ஜப்பானியர், துருக்கி யர், யூதர்கள் ஆகியோரைக் குறிப்பிடலாம். யூதர்களும் ஆர்மீனி யர்களைப் போல ஆற்றலும் வன்மையும் கொண்ட வணிகக் குலமாக விளங்கினர். சிற்றளவினராக இருந்த பார்சிக்காரரும் அக்பரின் அரசவையில் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். அவர்கள் இன்னும் வணிகத்தில் ஈடுபடாததால், உழவிலும் தச்சு வேலைகளிலும் சிறந்திருந்தனர். அவர்கள் நாவ இலாரியிலும், குஜராத்திலுள்ள பல மாவட்டங்களிலும் தங்கினர். கோவா விலும் மேற்குக் கடற்கரையிலுள்ள இன்னும் பல இடங்களிலும் ஆதிக்கம் பெற்றிருந்ததால், ஐரோப்பியர்களில் போர்த்துகீசியர் களே முக்கியம் பெற்றிருந்தார்கள். அவர்களுக்குச் சிந்து, கங்கை ஆறுகளின் கழிமுகங்களில் பண்டகசாலைகளும் இருந்தன.

நமது நகரங்கள்

அக்பரின் ஆட்சிக் காலத்தில் மக்களின் நிலைமைகளைப் பற்றியும், பொருளாதார நிறுவனங்களைப்பற்றியும் முற்றிலும் அறிந்துகொள்ளும் அளவிற்குத் தேவையான விவரங்கள் இருக்கின்றன. அயினி அக்பரி, சில பாரசீக நூல்கள், அக் காலத் திய ஐரோப்பியப் பிரயாணிகள், வணிகர்கள், எழுத்தாளர்கள்

முதலியவர்களின் குறிப்புகளும் நாட்டின் பொருளாதார நிலைமைகளைப்பற்றித் தெளிவாக விளக்குகின்றன. பேரரசில் பல பெரிய வளமான நகரங்கள் இருந்தன. இவற்றில் டெல்லி, ஆக்ரா, ஃபதேபூர்சிக்ரி, ஆஜ்மீர், லாகூர், முல்தான், உஜ்ஜயினி, பூரான்பூர், ஆமதாபாத், பனாரஸ், அலகாபாத், பாட்னா, ராஜ்மஹால், புர்துவான், ஹுக்ளி, டாக்கா, சாத்கான் ஆகியவை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. நமது நரங்களின் வளமும், செல்வ அளவும் ஐரோப்பிய யாத்திரிகர்களை வியப்பில் ஆழ்த்தின. 'ஃபதேபூரும் ஆக்ராவும் இருபெரு நகர்கள். இவற்றில் எதுவொன்றும் லண்டனைவிடப் பெரிதாகவும், அதிக மக்கள் பெருக்கம் உள்ளதாகவும் இருந்தது' என்று 1585-ல் ஃபிச் என்பார் எழுதுகிறார். 'ஃபதேபூருக்கும் ஆக்ராவுக்கும் இடையே 22 மைல்கள். வழி நெடுகிலும் உணவுப் பொருள்களும் பிறவும் குவிந்து கிடக்கும் சந்தைபோல் காட்சியளிக்கின்றன. அவை எவ்வளவு அபரிமிதமாக இருக்கின்றனவென்றால், ஒருவன் நகரில் இருப்பதுபோலவும், அங்கே எவ்வளவு மக்கள் மலிந்திருக்கின்றனரென்றால் ஒருவன் தன்னைச் சந்தையில் இருப்பதுபோலவும் உணரலாம்' என்று அவர் மேலும் கூறுகிறார். மான்சரெட் அடிகளார் லாகூரை உலகத்தின் பெரு நகரங்களில் ஒன்றாகக் குறிப்பிடுகிறார். ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் லாகூர் எந்த நகரத்திற்கும் தரம் குறைந்ததன்று என்று அவர் கூறுகிறார். ஜான்பூரும் அலகாபாத்தும் வளமான நகரங்கள். பனாரஸ் மிகப் பழமையான, மக்கட் பெருக்கம் மிக்க, வளமான நகரங்களில் ஒன்றாகும். காண்டேஷ் பிரதேசத்திலுள்ள பர்ஹான்பூர், செல்வம் மிக்க பெரு நகர். அபுல்ஃபாஸல் ஆமதாபாத் நகரைப் 'பெருவளம் மிக்க உன்னதமான நகர்' என்று வர்ணிக்கிறார். இரம்மியமான காலநிலையிலும், தேர்ந்தெடுத்த அதன் உற்பத்திப் பொருள்களைப் பகட்டாகக் காட்டுவதிலும் உலக நகரங்களில் எல்லாம் ஒப்பற்று விளங்குகிறது. பீகாரிலுள்ள பாட்னா அம் மாநிலத்தின் மிகப்பெரிய நகரமாகும். ராஜ்மஹால், புர்துவான், ஹுக்ளி, டாக்கா, சாட்கான் என்பன வங்காளத்திலுள்ள சிறந்த நகரங்கள். அக் காலத்திய ஐரோப்பியப் பிரயாணிகளின் சான்றுகளிலிருந்து, அக்பர் காலத்திய நகர மாந்தர் நன்னிலையில் இருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

போக்குவரவு வசதிகள்

நாட்டின் முக்கிய நகரங்களெல்லாம் கப்பிச் சாலைகளினால் இணைக்கப்பட்டிருந்தன. இவைகள் மழைகாலத்தைத் தவிர பிற நாட்களில் நல்ல நிலையில் வைக்கப்பட்டிருக்கும். சாலைகளின் இரு மருங்கிலும் வரிசை வரிசையாக மரங்கள் வைக்கப்பட்டிருந்தன.

வணிகர்களும் வழிப்போக்கர்களும் தங்குவதற்காக ஸராய்கள் கட்டப்பட்டிருந்தன. ஆண்டு முழுவதும் படகு போக்குவரவு செய்யக்கூடிய நமது ஆறுகள் பல பண்டங்களையும் பிராணி களையும் எடுத்துச் செல்வதற்குப் பயன்பட்டன. சில ஆறுகளின் மேல் முக்கிய இடங்களில் பாலங்கள் கட்டப்பட்டிருந்தன. அக்பர் ஆட்சியின் தொடக்கத்தில் முனிம்கான் என்பவர் கோமதி ஆற்றின் மேல் ஜான்பூர் என்ற இடத்தில் ஒரு பாலத்தைக் கட்டினர். இவ்வாறு போக்குவரத்திற்குக் குறையில்லாமல் இருந்தது. சாலை களும் ஆறுகளும் ஆண்டு முழுவதும் போக்குவரவிற்காகப் பயன் பட்டன. ஷெர்ஷா காலத்தில் இருந்ததுபோல அரசருடைய அஞ்சல்கள் ஹர்க்காரா என்ற அஞ்சல் தூதுவர்களால் எடுத்துச் செல்லப்பட்டன. இவர்கள் ஒவ்வொரு ஸராயிலும் இருந்தார்கள். நாளொன்றிற்கு எழுபதுமுதல் எண்பது மைல் வேகத்தில் செய்திகள் எடுத்துச்செல்லப்பட்டன.

விவசாயப் பொருள்களும் பிறவும்

மக்களில் பெரும்பாலோருக்கு விவசாயமே முக்கிய வாழ்க்கை வழியாக இருந்தது. உழவு, பெரும்பாலும் இன்று நடக்கும் முறையிலேயே நடந்துவந்தது. வழக்கமான பயிர்களான கோதுமை, பார்லி, பருப்புகள், பயிறு வகைகள், எண்ணெய் வித்துகள் தவிர , கரும்பு, அவுரி, கசகசா முதலியனவும் நாட்டின் பல பகுதிகளில் பயிரிடப்பட்டன. இன்று இருப்பதுபோலவே ஓர் இடத்தில் குறிப்பிட்ட ஒரு பயிரைச் செய்கின்ற பயிர்ச்செறிவு முறையும் அன்று இருந்தது. தற்கால உத்தரப் பிரதேசம், வங்காளம், பீகார் ஆகிய மாநிலங்களின் பல இடங்களில் கரும்புச் சாகுபடி நடந்தது. வட இந்தியாவின் பல பகுதிகளில், குறிப்பாக மைய இந்தியாவில் அவுரிச் செடி பயிர் செய்யப்பட்டது. பல இடங்களில் பருத்தியையும் பயிர் செய்தார்கள். உழவுக் கருவி களும் பிற சாதனங்களும் இன்று இருப்பதுபோலவே இருந்தன. செயற்கை முறையில் நீர்ப்பாசனம் செய்கின்ற ஏற்பாடுகள் அக்பர் காலத்தில் இல்லை. எனினும், விவசாயப் பொருள்களைப் பொறுத்தவரையில் நாடு தன்னிறைவு பெற்றிருந்தது. பற்றுக் குறை ஏற்படும் காலங்களில்கூட தானியங்கள் வெளிநாடு களிலிருந்து இறக்குமதி செய்யப்படவில்லை. விவசாயப் பொருள்கள் இல்லாத பிற பண்டங்களில் மீன் வகைகள், கனிப்பொருள்கள். உப்புகள், அபினி, மது வகைகள் ஆகியவை முக்கியமானவை, மீன்கள் ஏராளமாகப் பிடிக்கப்பட்டன. அவற்றின் விலை மிகக் குறைவாக இருந்தது. நாட்டின் பல பகுதிகளில் இரும்பு வெட்டி யெடுக்கப்பட்டுக் கருவிகள், தளவாடங்கள், போர் ஆயுதங்கள்

முதலியவை செய்வதற்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. இராஜஸ்தானத்திலிருந்த செப்புச் சுரங்கங்களில் அக்பரின் காலத்தில் ஏராளமான செப்புத்தாதுக்களை வெட்டியெடுத்தார்கள். சாம்பார் ஏரியிலும், பஞ்சாபின் மலைகளிலிருந்தும் உப்புக் கிடைத்தது. உப்பு இன்னும் பல இடங்களில் கடல் நீரிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டது. மாளவத்திலும் பீஹாரிலும் அபினி பரவலாகப் பயிர் செய்யப்பட்டது. அக்பரின் தடையுத்தரவுகள் இருந்த போதிலும், டாடி, மகுவா முதலியவற்றிலிருந்து மதுவைத் தயாரித்துவந்தனர். வெடியுப்பு, வெடிமருந்து செய்வதற்குத் தேவைப்பட்டதால், அதுவும் உற்பத்தி செய்யப்பட்டது.

தொழில்களும் கைத்தொழிலும்

பருத்தியைப் பயிர் செய்வதும், பருத்தி ஆடைகள் உற்பத்தி செய்வதும் மிக முக்கியமான தொழில்களாக இருந்தன. பருத்தித் தொழில் ஒவ்வொரு கிராமத்திலும் சிறந்திருந்தது. பஞ்சடிப்பவர்களும் நெசவாளர்களும் எங்கும் காணப்பட்டனர்; ஜான்பூர், பனாரஸ், பாட்னா, பர்ஹான்பூர், லக்னோ, கைராபாத், அக்பர்பூர், இன்னும் தற்கால உத்தரப் பிரதேசம், குஜராத், வங்காளம், ஒரிஸா முதலிய மாநிலங்களில் உள்ள பல இடங்களும் பருத்தித் தொழிலுக்குப் புகழ் பெற்ற முக்கிய மையங்களாக விளங்கின. உண்மையில் பருத்தித் தொழிலானது நாடறிந்த முக்கியத் தொழிலாகும். ஒரிஸாமுதல் வங்காளத்தின் கிழக்கு எல்லைவரையிலும் பரவியிருந்த பகுதி 'பெரியதொரு பருத்தி ஆலையென விளங்கியது'. டாக்கா மென்மையான பருத்தித் துணிகளுக்குப் புகழ்பெற்று விளங்கியது. அன்று நமது மக்களுக்கு நன்கு தெரிந்திருந்த மிக மென்மையான பருத்தித் துணியான மஸ்லீன் துணி, டாக்காவில் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டது. பருத்தித் தொழிலுடன் துணைத்தொழிலாகிய சாயத் தொழிலும் முன்னேற்றமடைந்திருந்தது. நம் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அழகான கெட்டிச் சாயங்களைக் கண்டு, யாத்ரிகர் எட்வர்ட் டெரி என்பார் வியப்படைந்தார். 'நல்ல வடிவமைந்த, வண்ணம் தீட்டிய பூக்களும் பல உருவங்களும் துணிகளில் எவ்வளவு கெட்டியாக அச்சிடப்பட்டிருக்கின்றனவென்றால், அவற்றை எந்த நீராலும் அகற்றமுடியாது' என்று டெரி குறிப்பிடுகிறார். பட்டு நெசவுத் தொழிலும் செழித்து வளர்ந்திருந்தது. அக்பர் இத் தொழிலைச் சிறந்த முறையில் ஆதரித்தார். ஆக்ரா, ஃபதேபூர்சிக்ரி, லாகூர் முதலிய நகரங்கள் பட்டுத் தொழிலில் சிறந்த மையங்களாக இருந்தன. குஜராத்திலும் வங்காளத்திலுமுள்ள முக்கியப் பல இடங்களில் பட்டுத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இதற்கு அடுத்தபடியாக சால்வைகள்,

கம்பளங்கள் நெசவுத் தொழில் சிறப்புற்றிருந்தது. இத் தொழிலுக்கு காஷ்மீர் முக்கிய இடமாக இருந்தது. லாகூரிலும், ஆக்ராவிலும், இன்னும் பல இடங்களிலும் சால்வைகளும் கம்பளங்களும் உற்பத்தி செய்யப்பட்டன. சில இடங்களில் உரோமப் பொருள்களும் செய்யப் பட்டன. உரோமக் கம்பளங்களும் பிற பொருள்களும் சிறப்பானவை. ஆனால், உரோம நெசவு, பருத்தி, பட்டுத் தொழில்களைப்போல் அவ்வளவு அதிகமாக நடக்கவில்லை. விவசாயத்திற்கு அடுத்த படியாக நெசவுத் தொழிலில்தான் மக்கள்தொகையில் மிகப் பெரும்பான்மையினர் ஈடுபட்டிருந்தார்கள். மரத்தால் கட்டில்கள், பேழைகள், பெட்டிகள், முக்காலிகள், அலமாரிகள் முதலியன செய்தலும், தோல்பொருள்கள், மட்பாண்டங்கள், காகிதம், செங் கற்கள் செய்தலும் வேறு முக்கியத் தொழில்களாகச் சிறப்புற்றிருந் தன. 'பல நூதனமான பெட்டிகள், பேழைகள், பேனா வைக்கும் தாங்கிகள், கம்பளங்கள் முதலியன சிறந்த முறையில் தயாரிக்கப் பட்டுச் சந்தைகளில் விற்கப்பட்டனவாக' டெரி என்பவர் கூறுகிறார். 'கலை வேலைப்பாடுகள் அமைந்த சாய்வு மேடைகள், எழுத உதவும் மேசைகள், தந்தப் பொருள்கள் முதலியனவும் உற்பத்தி செய்யப் பட்டன. படைக்கலங்கள், வாள்கள், அம்புகள், வில்கள், ஈட்டிகள், துப்பாக்கிகள், பீரங்கிகள் ஆகியனவும் படைக்கப்பட்டன. வெடி மருந்தாகப் பயன்படும் வெடியுப்பு உற்பத்தி செய்வதும் செழித்து விளங்கிய தொழிலாக இருந்தது. இத்தகைய தொழில்களுக்குப் பெரும்பாலும் செல்வமிக்க வணிகர்கள் பொருளுதவி செய்தார்கள். இப் பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்பவும் அவர்கள் ஏற்பாடு கள் செய்தனர். அரசாங்கம் பல்வேறு பொருள்களைப் பெரிய அளவில் உற்பத்தி செய்வதை ஊக்குவித்தது. அரண்மனையைச் சுற்றிப் பல தொழிற்கூடங்கள் இருந்தன; இவற்றில் பல நூற்றுக் கணக்கானவர்கள் வேலைசெய்தனர்.

அயல்நாட்டு வாணிபம்

அக்பருடைய ஆட்சிக் காலத்தில் ஐரோப்பாவிலும் ஆசியாவி லும் இருந்த பல அயல்நாடுகளுடன் தீவிரமாக வெளிநாட்டு வாணிபம் ஓரளவு பெருமளவில் நடைபெற்றுவந்தது. அக்பர் வெளிநாட்டுக் கடல் வாணிபத்தில் சிறப்பான ஆர்வம் காட்டிய தோடு, அக் காலத்தில் நாட்டின் பொருளாதார வளத்தை முன் னேற்றக் கூடுமான ஏற்பாடுகளையெல்லாம் செய்தார். பல வகையான பருத்தித் துணிகள், மிளகு, அவுரிச் செடி, அபினி, பல வகையான மருந்துப் பொருள்கள், இன்னும் பலதரப்பட்ட பண்டங் கள் ஆகியவை முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள் ஆகும். தங்கம், குதிரைகள், உலோகங்கள், பட்டு, தந்தம், பவளம், மரப்பிசின்

வகை, விலையுயர்ந்த கற்கள், பட்டுத் துணி, வெல்வெட் துணி, மணிப்பின்னல் துணிகள், நறுமணப் பொருள்கள், மருந்துகள், சீனப் பண்டங்கள் ஆகியவை முக்கிய வெளிநாட்டு இறக்கு மதிப் பொருள்களாகும். சீனப் பொருள்களில் சிறப்பாகப் பீங்கான் களும், ஆஃப்ரிக்காவிலிருந்து வந்த அடிமைகளும், ஐரோப்பிய மது வகைகளும்கூட இறக்குமதி செய்யப்பட்டன. சீனப் பீங்கானை அக்பரும் அவரது முஸ்லீம் அரசவையினரும் பெரிதும் ஆதரித்த தால், அப் பொருள்களுக்கு ஏராளமான தேவையிருந்தது. வெனிஸ் போன்ற வெளிநாடுகளிலிருந்து கண்ணாடிப் பாத்திரங்கள் இறக்கு மதியாயின. ஏற்றுமதிப் பொருள்களில் பருத்திச் சாமான்களைத்தான் முக்கியமானவைகளாகக் குறிப்பிடவேண்டும். நாட்டில் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதுடன், இந்தியாவிலிருந்து பலவகை யான பருத்தித் துணிகள் ஆஃப்ரிக்கா, அரேபியா, எகிப்து பர்மா, மலாக்கா, ஸ்டிரேய்ட்ஸ், இன்னும் பல ஆசிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இத்தாலி, ஃபிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய ஐரோப்பிய நாடுகளுக்கும் பருத்திப் பொருள்கள் அனுப்பப்பட்டன. குஜராத்திலுள்ள துறைமுகங்களான காம்பே, சூரத் புரோச் என்பனவும், இரத்தினகிரி மாவட்டத்திலுள்ள பஸ்ஸீன், சாவுல், டாரில் (நவீன பாபுல்) முதலியனவும், சிந்துவிலுள்ள லாகோரிபாந்தரும், மலபார் கடற்கரையிலுள்ள கோவா, பத்கல், கஸ்ஸக் கோட்டை, கொச்சி முதலியனவும், கிழக்குக் கடற்கரையிலுள்ள மசூலிப்பட்டினமும் நாகப் பட்டினமும் ஏற்றுமதிப் பொருள்களைக் கடல் வாணிபத்தின் மூலம் வெளிநாடுகளுக்கு அனுப்பிய முக்கியத் துறைமுகங்களாகும். சேத்தான்பூர், சாத்கான், சோனர்கான் முதலியன வங்காளத்தி லுள்ள மிக முக்கியமான துறைமுகங்களாகும். இந்த இருகடல் வழிகளைத் தவிர இரு முக்கிய நிலவழிகளும் வாணிபத்திற்காகப் பயன்பட்டன. இவை லாகூர்முதல் காபூர்வரையும் அதற்கு அப்பாலும், மூல்தான்முதல் காந்தஹார்வரையும் அதற்கு அப்பாலும் சென்றன. ஆனால், அதிகப் பாதுகாப்பும் அனுகூலங் களும் மிகுந்த கடல்வழிகள், நிலவழிகளைவிட அதிகமாகப் பயன் படுத்தப்பட்டன. அரசாங்கம் மிகக் குறைந்த சுங்கவரிகளையே விதித்தது. சூரத் துறைமுகத்தில் எல்லாவித இறக்குமதி ஏற்று மதிப் பண்டங்கள்மீதும் $3\frac{1}{2}$ சதவீத வரியும், தங்கம், வெள்ளிக்கு $2\frac{1}{2}$ சதவீத வரியும் விதிக்கப்பட்டன. விலையுயர்ந்த உலோகங்களை ஏற்றுமதி செய்யக்கூடாதென்று அரசாங்கம் கண்டிப்பான தடை விதித்திருந்தது. எந்த வணிகனும் தங்கத்தையோ, வெள்ளி யையோ ஏற்றுமதி செய்யக்கூடாது. அதற்கு மாறாக, ஆண்டு தோறும் பெருமளவில் தங்கமும், வெள்ளியும், பிற விலையுயர்ந்த

உலோகங்களும் இறக்குமதி செய்யப்பட்டன. எனவே, வாணிபக் கையிருப்பு நமக்குச் சாதகமாக இருந்ததில் வியப்பில்லை.

விலைவாசிகள்

அன்றாடத் தேவைப் பொருள்களான தானியங்கள், காய்கறிகள், பழங்கள், நெய், பால், வெண்ணெய், எண்ணெய், மீன் இறைச்சி, ஆடைகள், சாதாரணமாகப் பயன்படும் பிற பொருள்கள் யாவும் மிகவும் விலை மலிவாகக் கிடைத்தன. 'அபரிமிதமாக மலிந்து கிடக்கும் எல்லாவிதப் பண்டங்களும், நாடு முழுவதும் கிடைத்தன ; ரொட்டித் தட்டுப்பாடு இல்லாமல் கிடைத்தது' என்று டெரி கூறுகிறார், ஒரு ரூபாய்க்குப் பன்னிரண்டு மணங்கு கோதுமை சாதாரணமாகக் கிடைத்துவந்தது. பார்லி எட்டு மணங்கும், மிக உயர்ந்த தரமான அரிசி பத்து மணங்கும், பயறுகள் பதினெட்டு மணங்கும், கேழ்வரகு பதினாறு மணங்கும், உப்புப் பதினாறு மணங்கும் கிடைத்தன. ஒன்றரை ரூபாய் அல்லது அதற்குக் குறைவாகவும் ஒரு செம்மறி ஆடு வாங்க முடியும். ரூபாய்க்குப் பதினேழு சேர் இறைச்சியும் ரூபாய்க்கு 44 சேர் பாலும் வாங்கலாம். தொழிலாளர்களின் நாட்கூலி மிகக் குறைவாக இருந்தது. சாதாரணத் தொழிலாளி ஒருவனின் நாட்கூலி இரண்டு தாம் (dams), அதாவது, ரூபாயில் 1/20 பாகமும்; ஒரு தச்சன் 7 தாம் அல்லது 7/40 ரூபாயும், பிற தொழில் திறமையற்ற தொழிலாளிகள் 7 தாமும் நாட்கூலியாகப் பெற்றனர். எல்லாப் பொருள்களும் எங்கும் மலிவாகவும் குறைந்த விலையிலும் கிடைத்ததால், யாவரும் வாழ்க்கைத் தேவைகளை அதிகத் தொல்லைகளின்றிப் பெற முடிந்தது. 'நிலமற்ற உயர்தரக் கூலியாள், அக்பர் காலத்திலும் ஜஹாங்கீர் காலத்திலும் இன்று பெறுவதைவிட அதிக உணவுப் பொருள்களைப் பெற முடிந்தது' என்று வரலாற்று ஆசிரியர் ஸ்மித் குறிப்பிடுகிறார். 'பொதுவாகச் சொன்னால், பொதுமக்கள் இன்று எந்தப் பொருளாதார நிலையில் இருக்கின்றார்களோ, அதே நிலையில் தான் அன்றும் இருந்தார்கள்' என்று மூர்லண்ட் என்பார் கருதுகிறார். அக்பர் காலத்தில் சாதாரண மனிதனின் வருமானம் அதிகமாக இல்லாவிடினும், அவன் பட்டினி கிடக்கவில்லை ; அதிக அளவிலும் விலை மலிவாகவும் கிடைத்த தானியங்கள் அல்லது பிற வாழ்க்கைத் தேவைகளுக்குப் பற்றாக்குறை ஏற்படவுமில்லை. மேலும், சாதாரண மக்களின் தேவைகள், இன்று அவர்களின் வழித்தோன்றல்களின் தேவைகளைவிடக் குறைவாகவே இருந்தன.

பொருளாதார முறை

அக்பரின் ஆட்சி காலத்திலும் முகலாயர் காலம் முழுவதிலும் நிலவிய பொருளாதார முறையின் ஒரு முக்கிய அமிசம் என்ன

வென்றால், உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் பிரித்து நின்ற பெரும் பிளவுதான். உழவர்கள், தொழில்களில் ஈடுபட்டிருந்த பணியாளர், வணிகர்கள் ஆகியோரை உற்பத்தி செய்வோர்கள், பிரபுக்கள், சீரியல், போரியல் அதிகாரிகள், தொழில் துறை, சமய வகுப்பினர், ஊழியர்கள், அடிமைகள், இரவலர்கள் ஆகியோர் நுகர்வோர்களாக இருந்தனர். அதிகாரிகளும் வீட்டு வேலைக்காரர்களும் தேவைக்கு அதிகமாக இருந்தனர். அரசாங்கமும் தனிப்பட்ட மனைகளும் வைத்திருந்த அதிகாரிகள், பணியாட்களின் எண்ணிக்கையை மிக எளிதாகக் குறைத்திருக்கலாம். ஏவலர்களையும் கீழ்த்தரப் பணியாட்களையும் பரிவாரமாக வைத்துக் கொண்டிருப்பது பணக்காரர்களின் ஒருவித நாகரிகமாக எண்ணப்பட்டது. அதுபோலவே சமயச் சார்பான சாதுக்களும், எந்தவிதப் பயனுள்ள பணியும் செய்யாத பிச்சைக்காரர்களும் அதிக அளவில் இருந்தனர். இதனால் அரசாங்க வருமானத்தின் பெரும்பகுதி அவசியமற்ற துறைகளில் செலவிடப்பட்டது. இந்தச் செலவை உற்பத்தி செய்யும் வகுப்பினர்களே தாங்கவேண்டியதாயிற்று. பிரபுக்களும் அதிகாரிகளும் மிக உயர்ந்த சம்பளம் பெற்றுவந்தனர். அவர்கள் வீண் ஆடம்பரத்திலும் டம்ப வாழ்விலும் ஏராளமான பணத்தைச் செலவு செய்தார்கள். அவர்கள் சுவையுள்ள உணவு, விலையுயர்ந்த ஆடைகள், அணிகலன்கள், யானைகள், குதிரைகள் முதலிய ஆடம்பரப் பொருள்களை விரும்பினர். தங்கள் மக்களின் திருமணங்களுக்கும், கட்டடங்கள், சமாதிகள், மசூதிகள் முதலியவற்றுக்கும், வெளிநாடுகளிலிருந்து வாங்கப்பட்ட நூதனப் பொருள்களுக்கும் அவர்கள் ஏராளமான பணத்தை விரயம் செய்தனர். இத்தகைய ஆடம்பர வாழ்வினால் அவர்களில் பலர் கடன் தொல்லைகளில் சிக்கி, இறுதியில் ஏழை உழவர்களைத் துன்புறுத்திப் பணம் சேர்க்கவேண்டியதாயிற்று. பல தொழில்களைச் சார்ந்தவர்களையும் சாதாரண அரசாங்கப் பணியாளர்களையும் கொண்ட நடுத்தர வகுப்பினர் ஓரளவு நன்னிலையில் இருந்தார்கள். உயர்தர, நடுத்தர வகுப்பு வியாபாரிகளும் பொருளாதார வளம் பெற்றிருந்தனர். இவர்களிலும் அரசவையுடன் தொடர்போ, அல்லது முக்கியப் பிரபுக்கள், அதிகாரிகளின் ஆதரவோ பெற்ற நற்பேறுடையவர்கள் மிகச் சிறந்த முறையில் விளங்கினார்கள். தொழில்நுணுக்கம் தெரிந்த தொழிலாளர்கள், நல்வாழ்வு வாழ்வதற்குப் போதுமான ஊதியம் பெற்றனர். ஆனால், தொழில் நுணுக்கம் அற்ற தொழிலாளிகள், ஏவலர்கள், கீழ்நிலைக் கடைக்காரர்கள் ஆகியவர்களின் நிலைமை மோசமாக இருந்தது. பணியாட்களும் ஏவலர்களும் மிகக் குறைந்த சம்பளம் பெற்றனர். இவர்கள் துன்புறுத்தப்பட்டு வதைக்கப்பட்டாலும், அவற்றைப் பொறுத்துக் கொள்ளவேண்டியதிருந்தது. இவ்வாறு கீழ்நிலையில் இருந்த

மக்கள் ஏழைகளாக இருந்தனர். அவர்களுக்கு வாழ்க்கையின் சாதாரண தேவைகள்கூடக் கிடைக்கவில்லை. இன்றுபோல் அவர்கள் மண்குடிசைகளில் வாழ்ந்தனர். அவர்களின் உடைமைகளும் மிகச் சிலவேயாகும்.

பஞ்சங்கள்

வானம்பார்த்த பூமியாகிய நாட்டில் பருவ மழைகள் தவறிவிட்டால், அதனையடுத்துப் பஞ்சம் ஏற்படுவது இயற்கை. 1555—1556ஆம் ஆண்டில், அதாவது, அக்பர் ஆட்சியின் முதல் ஆண்டில் வடமேற்கு இந்தியாவில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கொள்ளை நோய்க்கு அநேகர் பலியாயினர். 1573–74-ல் ஏறத்தாழ ஆறு மாதங்களாக குஜராத்தில் நிலவிய பஞ்சத்தின் காரணமாக, அங்குள்ள மக்களில் பலர் நாட்டின் பிற பாகங்களுக்கு வெளியேறிச் சென்றனர். 1595–96-ல் மழையின்மையால் காஷ்மீரத்திலும் பஞ்சாபிலும் ஒரு பஞ்சம் ஏற்பட்டது. இதனால் பல மக்கள் மாண்டனர். 1575-ல் வங்காளத்தில் ஒரு பஞ்சம் ஏற்பட்டது. வழக்கம்போல் பஞ்சங்களைத் தொடர்ந்து, கொள்ளை நோய்கள் ஏற்பட்டு ஏராளமான உயிர்களை அழித்தன.

பஞ்சத்தினால் அவதிக்குள்ளாகிய மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதைத் தனது கொள்கையாக அக்பர் கொண்டிருந்தார் என்பதை அபுல் ஃபாஸல் கூறுகிறார். 1595-ல் ஷேய்க் பாரித் என்பவரைப் பஞ்ச நிவாரண ஏற்பாடுகளை மேற்பார்வையிடுவதற்காகச் சிறப்பு அதிகாரியாக அக்பர் நியமித்திருந்தார். அக்பரின் அரசாங்கம் எடுத்துக்கொண்ட பஞ்ச நிவாரண ஏற்பாடுகளைப்பற்றிய முழு விவரங்களும் நமக்குக் கிடைக்கவில்லை.

விளையாட்டுகள்

அக்பர் அவரது முன்னோர்களைப்போல வேட்டையாடுவதில் சிறந்த ஆர்வம் காட்டினார். வேட்டையாடுவது அவரது முக்கியப் பொழுதுபோக்காகும். அவரது பிரபுக்களும் அரசவையினர்களும் அவரைப்போன்றே வேட்டைப் பிரியர்களாக இருந்தனர். பறவை வேட்டை அரசரின் மற்றொரு முக்கியப் பொழுதுபோக்காகும். கோல்பந்தாட்டம், 16ஆம் நூற்றாண்டில் உயர்தர வகுப்பு மக்களிடையே மிகவும் அபிமான விளையாட்டாக இருந்தது. விலங்குகளைக் கொண்டு சண்டையிடும் விளையாட்டுப் போட்டிகளை அரசவை அடிக்கடி நடத்தும். யானைகள், குதிரைகள், இன்னும் பல வனவிலங்குகளின் சண்டைகளைக் காண மக்கள் கூடுவார்கள்.

மல்யுத்தம், குத்துச் சண்டைகள், புருக்களைப் பறக்கவிடும் போட்டி முதலியன சாதாரணமாக நடக்கும் விளையாட்டுகள். அக்பர் காலத்தில் சிறந்திருந்த பெரிய விளையாட்டு வீரர்களின் பட்டியல் ஒன்றை அபுல் ஃபாஸல் தருகிறார். இரண்டு இணையான ஆற்றல் படைத்த மல்லர்கள் தினமும் அரசருக்கு முன்னால் மல்யுத்தம் செய்வார்கள். அது முடிவுற்றதும் அரசர் அவர்கள் இருவருக்கும் பரிசுகளை வழங்குவார். அக்பர் அவரது ஆசிரியர் ஒருவரிடமிருந்து புருக்களைப் பறக்கவிடும் கலையைக் கற்றுக்கொண்டு, தமது முதுமைக் காலம்வரைக்கும் அதனைப் பயிற்சி செய்துவந்தார். முகலாயர் காலம் முழுவதிலும் புருக்களைப் பறக்கவிடுவது மக்களால் விரும்பப்பட்ட பொழுதுபோக்காக இருந்தது. இன்னும் அவரது முக்கிய நகரங்களான ஆக்ரா, லக்னோ முதலிய இடங்களில் இது வழக்கில் இருக்கிறது. காற்றாடி பறக்கவிடும் பொழுதுபோக்கும் இன்றுபோல் அன்றும் பிரபலியமாக இருந்தது.

அக்பர் காலத்தில் வீட்டில் இருந்தவாறே ஆடும் விளையாட்டுகள் உயர்தர வகுப்பு மக்களிடையே சிறப்பாக இடம்பெற்றிருந்தன. நமது நாட்டில், பண்டைக்காலம்முதல் விளையாடப்பட்டுவரும் சதுரங்க ஆட்டத்தில் அக்பர் சிறப்பான ஆர்வம் காட்டினார். இந்தியாவிலிருந்து சதுரங்கம் அரேபியா, பாரசீகம், சீனா முதலிய இடங்களுக்குப் பரவியது. இந்த விளையாட்டு வைதீக முஸ்லிம்களின் மத்தியிலும், சமயச் சட்டத்திற்கு முரணானதாகக் கருதப்படாததால், நல்ல வசதியுள்ள வைதீக முஸ்லீம்களும், இந்துக்களும் இந்த ஆட்டத்தில் ஈடுபாடு காட்டினார்கள். சதுரங்கத்தைப் போன்று மிகவும் சிறப்புற்றிருந்த மற்றொரு மனையாட்டம் சௌபார் அல்லது இருவழிச் சதுரங்கம் என்பது. அதனையடுத்து பான்ஸா என்ற ஆட்டமும், நான்காவதாக, கவுரிகளைக் கொண்டு ஆடப்பட்ட பச்சிஸி என்ற விளையாட்டும் மக்களால் பெரிதும் விரும்பி ஆடப்பட்டன. சௌபார், பான்ஸா, பச்சிஸி போன்ற ஆட்டங்களைச் சிலுவை வடிவத்தில் இருந்த ஒரு துணிப்பலகையின்மேல் ஆடவேண்டும். இந்தஉருவத்தின் நான்கு கைகள் ஒவ்வொன்றும் எட்டுச் சதுரங்களைக்கொண்ட மூன்று வரிசைகளாகவும், மொத்தத்தில் இருபத்துநான்கு சதுரங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. இந்தச் சதுரங்களை வண்ணத்துணிகளால் கட்டியிருந்தார்கள். அக்பருக்கு சண்டல் மண்டல், பச்சிஸி போன்ற ஆட்டங்களில் அதிக ஆர்வம் உண்டு. இந்த ஆட்டத்தின் படங்களை இன்னும் ஆக்ரா கோட்டையில் காணலாம். சீட்டாடுவதும் அக் காலத்தில் சாதாரணமான ஒரு விளையாட்டாக இருந்தது.

விழாக்களும் பொருட்காட்சிகளும்

இடைக்காலத்திலிருந்த இந்தியர்கள் கொண்டாட்டங்கள், களியாட்டங்கள், பொருட்காட்சிகள், விழாக்கள் ஆகியவற்றில் அதிக இன்பம் கொண்டார்கள். அக்பரின் அரசவையில் தேசியத் திருவிழாக்களான ரக்ஷாபந்தன், சுசரா, தீபாவளி, வசந்த பண்டிகை முதலியன கொண்டாடப்பட்டன. முகலாய அரசவை இந்துப் பண்டிகைகளை எடுத்துக்கொண்டு, மிகச் சிறப்பான முறையில் கொண்டாடிவந்தது. பாரசீகப் பெருவிழாவான நௌரோஸ் விழா அக்பர் காலத்தில் ஒரு வார காலத்திற்கும் அதற்கு மேலும் கொண்டாடப்பட்டு வந்தது. அரசர், பட்டத்து இளவரசர் ஆகியோரின் பிறந்த நாள்கள், சூரிய வழி, சந்திர வழி கணக்குகளின்படி அரசரின் முடிசூட்டு வைபவத்தின் நினைவு விழாக்கள் முதலியன தேசியப் பெருவிழாக்களெனக் கொண்டாடப் பட்டன. நாடு முழுவதும் பரந்து கிடந்த திருத்தலங்களுக்குப் புனித யாத்திரை போவதில் இந்துக்கள் சிறப்பான ஆர்வம் காட்டினார்கள். ஹரித்துவார், தானேஸ்வர், மதுரா, அயோத்தி, பிரயாகை, கயை, உஜ்ஜயினி, பூரி, காஞ்சீபுரம், இராமேஸ்வரம் போன்றதிருத்தலங்களில் அடிக்கடி பொருட்காட்சிகள் நடந்ததால், மக்கள் அங்கே கூட்டங் கூட்டமாகச் சென்றனர். 1563ஆம் ஆண்டிலேயே அக்பர் இந்துக்கள்மீது விதிக்கப்பட்டிருந்த ஜிஸ்யா வரியை நீக்கிவிட்டதால், இந்துக்கள் தங்களின் திருத்தலங் களுக்குப் புனித யாத்திரை போவதற்கு அது ஒரு தூண்டுகோலாக இருந்திருக்கவேண்டும். முஸ்லீம்கள் ஆஜ்மீருக்கும் மெக்காவிற் கும் புனித யாத்திரை சென்றார்கள். இதற்காக அரசாங்கம் அவர் களுக்கு வேண்டிய வசதிகள் யாவற்றையும் செய்துகொடுத்தது. இந்தியாவில் கட்டப்பட்ட பல கப்பல்கள், மேற்குக் கடற்கரையில் செங்கடலுக்குச் செல்லும் யாத்திரிகர்களை ஏற்றிச் செல்வதற்காகத் தயாராக இருந்தன. 1575-ல், மெக்காவிற்குப் புனித யாத்திரை செல்ல விரும்புகிறவர்கள் தமது செலவுகளை அரசாங்கக் கருவூலத்தி லிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று அக்பர் ஒரு பொது உத்தரவை வெளியிட்டார். அநேக முஸ்லீம்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டார்கள். கடலாதிக்கத்தில் சிறந்திருந்த போர்த்துகீஸியர்களோடு அக்பர் நல்லிணக்கத்துடன் இருந்தார். போர்த்துகீஸியர்கள் சில சமயங்களில் கப்பல்களுக்கு லைசென்ஸ் வரி விதித்ததோடு, யாத்திரிகர்களிடமிருந்து வல்லந்தமாகப் பெருந் தொகையான கையூட்டும் வாங்கினார்கள்.

கத்புட்லி, களக்கூத்து, குரங்காட்டம், சர்க்கஸ் ஆட்டங்கள், ராம்லீலா நாடகம் போன்றவை பொதுவான பொழுதுபோக்குக

ளாகவும், நாடகங்களாகவும் இருந்தன. திருமணங்களும் பிற சாங்க்ஸ்கார் என்ற சடங்குகளும் பொதுமக்களுக்குப் பொழுது போக்குகளாகவும் களியாட்டங்களாகவும் விளங்கின. சதிர் ஆடலும் இசையும் நாட்டின் பல பகுதிகளில் முக்கியம் பெற்றிருந் தன.

இடைக்காலத்தில் உயர்தர வகுப்பு மக்களிடையே மதுவுண் ணும் பழக்கம் அதிகமாக இருந்தது. அக்பர் தமது முன் னேர்களைப்போன்று மது உண்ணும் பழக்கம் கொண்டிருந்தார். என்ருலும், ஓரளவோடு இருந்தார். அவர் டாடி என்ற உள்நாட்டு மது வகையை விரும்பினுரேயன்றி ஐரோப்பிய நாட்டு மதுக்களை விரும்பவில்லை. அவருடைய குமாரர்கள் யாவரும் தீவிரக் குடிப் பழக்கம் உள்ளவர்கள். அவர்களில் இருவர் அளவுகடந்த குடிப் பழக்கத்திஞல் மாண்டுபோஞர்கள். மூன்ருவது மகஞகிய ஜஹாங் கீர் நல்ல உறுதியான உடல்நிலை இருந்த காரணத்தால், தனது சகோதரர்களின் கதியை அடையாமல் தப்பித்துக்கொண்டான். புனித குரான் குடிப்பழக்கத்தைத் தடைசெய்திருந்தாலும், முஸ்லீம் பிரபுக்கள் மதுவுண்ணும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். இராஜபுத்திரர்களும் அபினையும் மதுவையும் விரும்பிஞர்கள். அரச பணியில் இருந்த இன்னும் பல வகுப்பினர்களும் மது வுண்ணும் பழக்கம் கொண்டிருந்தார்கள். ஆஞல், நமது சாதாரண மக்களிடம் இந்தத் தீய பழக்கம் காணப்படவில்லை. மரபொழுக் கங்களிஞலும் சமயச் சார்பான காரணங்களிஞலும், சாதாரண மக்கள் குடிக்கும் பழக்கம் இல்லாமல் இருந்தனர்.

இலக்கியமும் கலையும்

பாரசீக இலக்கியம்

இடைக்கால இந்திய வரலாற்றில் அக்பரின் காலம் ஒரு மறு மலர்ச்சிக் காலமாகும். அவருடைய சமயப் பொறையும் அறிவு சார்ந்ததுமான கொள்கைகள், அவரது கல்வி ஆதரவு, உள் நாட்டில் நிலவிய அமைதியும் வளமும், வெளிநாட்டுப் படையெடுப் புகள் இல்லாமை முதலிய சூழ்நிலைகள் இருந்த காரணத்தால் இலக் கியமும் கவிகளும் வளர்ந்தன. எனவே, சிறப்பான ஆற்றல்களைப் பெற்ற பேரறிஞர்கள் பல இலக்கிய நூல்களைப் படைத்ததில் வியப் பொன்றும் இல்லை. பாரசீக இலக்கியங்கள், முதல் நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள் என இருவகைகளாகப் பிரிக்கலாம். முதல் வகுப்பில் கடிதங்களும் கவிதைகளும் இடம்பெற்றிருந்தன. அக் காலத்திய எழுத்தாளர்கள் கடிதத் திரட்டுகளை விட்டுச் சென்ருர்

கள். இவைகள் நல்ல இலக்கிய நடைக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்கின. அபுல் ஃபாஸலின் கடிதத் தொகுப்புகளை, இன்ஷா-யி-அபுல் ஃபாஸல் என்ற தலைப்பில் லக்னோவிலுள்ள நாவால் கிஷோர் அச்சகம் வெளியிட்டிருக்கிறது. இவற்றைக் கடிதம் எழுதும் கலையின் எடுத்துக்காட்டுகளென, முகலாயர் காலம் முழுவதிலும் அறிஞர்கள் பலர் கருதிவந்திருக்கிறார்கள். ஆடம்பரத்தை விரும்பாத அவுரங்கசீப்கூட அபுல் ஃபாஸலை, சமயத் துரோகி என்று கண்டனம் செய்தாலும், அவருடைய இலக்கிய நடையைப் பின்பற்றவேண்டுமென்று தமது புதல்வர்களைக் கேட்டுக்கொண்டார். இன்னும் பல சிறப்பான கட்டுரை மன்னர்களின் படைப்புகள் வழி வழியாக நமக்கு வந்துள்ளன. இக் காலத்தில் கலாசார வரலாற்றை எழுதுவதற்கு இந்தப் படைப்புகள் தேவையான பல செய்திகளைக் கூறும். பாரசீகக்கவிதைக்கு அடுத்த இடம் கொடுக்கப்பட்டிருந்தது. உண்மையில் இடைக்காலத்தில் கவிதைகளின் வழியாகவே கருத்துகளைச் சொல்லிவந்தார்கள். உள்நாட்டு, வெளிநாட்டு முஸ்லீம்கள் கவிதைகளைப் பெரிதும் விரும்பினர். பாரசீகர்களும் முகலாயர்களும் தாம் அழகின்மீது கொண்டிருந்த இயல்பான காதலை வெளியிடும் கருவியாகக் கவிதையைப் பயன்படுத்தினார்கள். அக்பர் காலத்தில் கவிதை படைப்பதை ஒரு தொழிலாகக்கொண்டவர்கள் பலர் இருந்தனர். இன்னும் பலர் கவிதை எழுதுவதை ஒரு பொழுதுபோக்காகவும் கலாசார நாட்டமாகவும் கொண்டனர். கவிதைக்குக் கொடுக்கப்பட்ட ஆதரவின் காரணமாக, அக்பரின் அரசவைக்கு உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான கவிஞர்கள் வந்தார்கள். இவர்களில் பலர் ஒரு 'திவானை' எழுதி முடித்தவர்கள் என்றும், அல்லது ஒரு 'மஸ்ராவியை' எழுதியவர்கள் என்றும் அபுல் ஃபாஸல் கூறுகிறார். அக்பருக்கு அறிமுகம் செய்யப்பட்டு, அவரால் ஆதரிக்கப்பட்ட ஐம்பத்தொன்பது தலைசிறந்த பாரசீகக் கவிஞர்களின் பெயர்களை 'ஆயினி-அக்பரி' கூறுகிறது. முதல் தரத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படும் மற்றொரு பதினைந்து கவிஞர்களும் இருந்தார்கள். ஆனால், இவர்கள் அரசருக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவில்லை. இவர்களெல்லாரும் பாரசிகத்தின் பல பகுதிகளிலிருந்தும் அக்பருக்குத் தமது கவிதைகளை அனுப்பியிருந்தார்கள். ஐம்பத்தொன்பது சிறந்த பாரசீகக் கவிஞர்களின் கவிதைத் தொகுதிகளிலிருந்து சில பகுதிகளை அபுல் ஃபாஸல் குறித்திருக்கிறார். இவர்களில் மிகச் சிறந்தவர், அவருடைய சொந்த மூத்த சகோதரராகிய அபுல் பேய்ஸி என்பார். அமீர் குஸ்ருவின் காலத்திற்குப் பின்னர், அபுல் பேய்ஸி தான் மிகச் சிறந்த பாரஸீகக் கவிஞர் என்று கவிதைத் திறனாய்வாளர்கள் கூறுகிறார்கள். இவரை அமீர் குஸ்ருவிற்கும் அமீர் ஹாஸன் டெல்விக்கும் இணையாகக் கூறலாம். இவ்வாறு ஃபேய்ஸி

இந்தியாவிலிருந்த மூன்று சிறந்த பாரசீகக் கவிஞர்களில் ஒருவரா வார். இவர்களது கவிதைகள் வெளிநாடுகளில் புகழ் பெற்றிருந் தன. அக்பரின் அரசவையில் ஃபேய்ஸியும் பிற கவிஞர்களும் எழுதிய கவிதைகளைப்பற்றித் திறனாய்வாளர்கள் பல்வேறுபட்ட கருத்துகளைக் கூறுகிறார்கள். 'சஞ்சிகைகளுக்குக் குறுக்கெழுத்துப் போட்டிகள் எழுதுவோர்களுக்குக் கவிஞர்கள் என்று கருத்ப்பட என்ன தகுதியுண்டோ, அதே தகுதிதான் இவர்களுக்கும் உண்டு' என்பது ஸ்மித் என்பவரின் கருத்தாகும். 'இவர்கள் தங்களுடைய தவறான திறமைகளைக் கொண்டு, சொற்களைச் சித்திரவதை செய்து, பல வடிவங்களைக் கொடுத்து, சில சொற்களை நீக்கிவிட்டு அவற்றைப் புள்ளிகளால் காட்டி, சொற்சாலங்களான சித்திரக் கவிதைகள்போன்ற பயனற்ற போலிக்கவிதைகளையும் அமைத்து வந்தார்கள். இத்தகைய படைப்புகள், அவற்றின் அமைப்பு நுணுக்கங்கள் எவ்வளவிருந்தாலும், உண்மையில் கவிதைகள் ஆக மாட்டா' (Akbar the Great Mogul, பக்கம் 416). எனினும், இக் காலத்திய இலக்கியப் படைப்புகளை இந்திய அறிஞர்கள் பாராட்டு கிறார்கள்.

மிகச் சிறந்த புகழ் பெற்ற பல நூலாசிரியர்கள், புனித குரானுக்கு விரிவுரை எழுதியிருக்கிறார்கள். இவற்றில் பலவற்றிற் குத் தனிப்பட்ட இலக்கியத் தகுதிகள் இருக்கின்றன. இந்தக் காலத் தின் மிகச் சிறந்த இலக்கியப் பணி என்னவென்றால், வடமொழி, துருக்கி, அரபி, கிரேக்கம் ஆகிய மொழிகளிலிருந்து முதல்தரமான நூல்களைப் பாரசீகத்தில் மொழிபெயர்த்த பணியாகும். முன்னோர் இயலில் குறிப்பிட்டவாறு, அக்பர், இந்து-முஸ்லிம் கலாசாரங் களின் இணைப்பை ஏற்படுத்துவதற்காகவும், நாட்டின் அறிவு சார்ந்த மக்களுக்கு ஒரு பொதுவான இலக்கியத்தை வழங்கு வதற்காகவும் தமது அரசவையில் ஒரு மொழிபெயர்ப்புத் துறையை நிறுவினார். இதில் முக்கியமாக வடமொழி, அராபிய, பாரசீக அறிஞர்கள் இடம்பெற்றிருந்தார்கள். இந்தத் துறை அரச ரின் நேரடியான மேற்பார்வையில் இருந்தது. இதன் சார்பில் அமிர் பாதேயுல்லா ஷிராயி என்ற அறிஞர், 'சிக்கி-ஜாடித்-மிராஸி' என்ற பெரு நூலின் ஒரு பகுதியை மொழிபெயர்த்தார். புகழ்பெற்ற பாரசீகப் படைப்பான 'தாஜாக்' என்ற வானநூலும், 'துஸாகி-பாபுரி' என்ற பாபரின் வாழ்க்கை வரலாறும் பாரசீகத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. பாபரின் வரலாற்றை மிர்ஸா அப்துர் ரஹீம் கான் கானு என்பவர் மொழிபெயர்த்தார். 'மாஜ்முல்-புல்தான்' என்ற நகரங்களையும் கிராமங்களையும்பற்றிய சிறந்த நூலானது, முல்லா அகமது, காஸிம் பெக், ஷேய்க் முனவார் என்பவர்களாலும் இன்னும் பலராலும் அராபிய மொழியிலிருந்து பாரசீகத்தில் மொழி

பெயர்க்கப்பட்டது. கிஸான் ஜோஷி, சுங்காதார், மாஹேஷ், மஹானந்த் என்ற நூல்களையும், இன்னும் பிற நூல்களையும் அபுல் ஃபாசல் பாரசீகத்தில் மொழிபெயர்த்தார். நாகிப்கான், அப்துல் காதர் பதோயுனி, தானேஸ்வரத்து ஷேய்க் சுல்தான் ஆகியவர்கள் மஹாபாரதத்தைப் பாரசீகத்தில் மொழிபெயர்த்து, அதற்கு 'ராசும் நாமா" (போர்களின் நூல்) என்று பெயரிட்டனர். இதே அறிஞர்கள் இராமாயணத்தையும் மொழிபெயர்த்தனர். ஹாஜி இப்ராஹிம் ஸிர்ஹிண்டி என்பவர் அதர்வ வேதத்தை மொழிபெயர்த்தார். 'லீலாவதி' என்ற வடமொழிக் கணக்கு நூலை ஃபேய்ஸி என்பவர் பாரசீகத்திலும், காஷ்மீரத்தின் வடமொழி வரலாரான 'ராஜதரங் கிணி'யை ஸாகாபாத்தின்முல்லா ஷா முகமது என்பவரும் மொழி பெயர்த்தனர். மௌலானு ஷெரி என்பவர் ஹார்னிவாஷ் புராணத் தையும். அபுல் ஃபாஸல் பஞ்சதந்திரக் கதைகளையும் (அன்வா-ரி-ஷாஹிலி), அபுல் ஃபேய்ஸி நள தமயந்தியின் கதையையும் பாரசீகத் தில் மொழிபெயர்த்தனர் ('அயினி-அக்பரி', முதல் புத்தகம், பக்கங்கள் 104-6).

முதல் நூல்களில், பாரசீக வரலாற்று இலக்கியம் முதலிடத்தைப் பெற்றது. அக்பர், வரலாற்றில் கொண்டிருந்த பெரும் ஆவலினு லும், வரலாற்று ஆசிரியர்களை ஆதரித்ததாலும், அவர் காலத்திய நிகழ்ச்சிகளை மட்டுமல்ல, நாட்டின் பண்டைய வரலாற்றைப் பற்றிய பல வரலாற்றுக் குறிப்புகளும் எழுதப்பட்டன. மிகப் புகழ் வாய்ந்த படைப்புகளில் அபுல் ஃபாஸலின் 'அக்பர் நாமாவையும்' 'அயினி அக்பரி'யையும், நிஜாம் உதீன் அகமது எழுதிய 'தப்காத்-இ-அக்பரி'யையும், குல்பதான் பேகம் எழுதிய 'ஹுமாயூன் நாமா'வையும், ஜாவ்ஹாரின் 'தாஸ்கிராம்-உல்-வாகாயத்' என்ற நூலையும் சிறப்பாகக் குறிப்பிடலாம். அப்பாஸ் ஸார்வானி என்பவர் 'தாஹ் ஃபா-இ-அக்பர் ஷாஹி' அல்லது 'தாரிக்-இ-ஷெர் ஷாஹி' என்ற நூலை எழுதினுர். இஸ்லாமிய சமயத்தின் ஆயிரம் ஆண்டு வரலாற்றை எழுதுமாறு அக்பர் ஆணையிட்டதற்கு ஏற்ப, நாகிப் கான், தாட்டாவின் முல்லா முகமது, ஜாஃபர் பெக் என்ற வரலாற் றறிஞர்கள் அதனை எழுதுமாறு பணிக்கப்பட்டனர். அபுல் ஃபாஸலின் முன்னுரையுடன் எழுதப்பட்ட இந்த நூல், 'தாரிக்-இல்-ஆல்பி, என்ற பெயருடன் குறித்த கலாத்தில் வெளிவந்தது. இக் காலத்தில் எழுதப்பட்ட வேறு வரலாற்று நூல்கள், அப்துல்காதிர் படோனியின் 'முன்தா ஹாப்-உல்-தாவார்கி', அதுமதுயாத்கரின் 'தாரிக்-இ-சாலதின்-இ-ஆப்கானு', பாயாஸத் சுல்தான் எழுதிய 'தாரிக்-இ-ஹுமாயூன், நூருல்ஹாக்' எழுதிய 'சுப்தாத்-உல்-தவாரிக்', அஸாத் பெக் எழுதிய 'வாகயத்', ஷேய்க் இல்லாதாத் ஃபேய்ஸி ஸார்ஹின்றி எழுதிய 'அக்பர் நாமா' என்பனவாகும்.

இந்திக் கவிதை

அக்பரின் காலம் இந்திக் கவிதையின் பொற்காலம். அக்பரின் மகத்தான வெற்றி சூழ்ந்த ஆட்சியின் சிறப்பினுலும், அவர் இந்து சிந்தையிலும் வாழ்க்கை முறையிலும் காட்டிய ஆர்வத்தாலும், அவரது முழுச் சமயப் பொறையாலும், தகுதிகளை அவர் அங்கீகரித்த முறையாலும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிலவிய அமைதி காரணமாகவும் சிந்தனையும் இலக்கியமும் வளர நல்லதொரு சூழ்நிலை உருவாக முடிந்தது. இதன் விளைவாக அநேக முதல்தரமான இந்திக் கவிஞர்கள் மிகச்சிறப்பான கவிதை நூல்களை வெளியிட்டார்கள். இவைகளெல்லாம் காலத்தை வென்ற காவியங்களாக நிலைத்துவந்திருக்கின்றன. துளஸிதாசர், சூர்தாஸர், அப்துர் ரஹிம் கான் கானு, ராஸ்கான், பீர்பால் ஆகியோர் இந்தி வானில் மின்னும் இணையற்ற தாரகைகளாக விளங்கினர். திறனுய்வாளர்கள் பொதுவாக ஒப்புக்கொள்கின்றவாறு, இந்தியிலும் பாரசீகத்திலும் அக் காலத்துக் கவிஞர்களில் துளசிதாஸரே முதலிடத்திற்கு உரியவர். எனினும், அக்பர் அவரை நெருங்கிய முறையில் அறிந்திருக்கவில்லை. அவர் தம் வாழ்க்கையின் பெரும் பகுதியைக் காசியில் கழித்தார். அவர் மிக உயர்தரமான இருபத்தைந்து நூல்களை எழுதினர். இவற்றில் தலைசிறந்தது வீரகாவியமான 'ராம்சரித் மானஸ்' அல்லது பொதுவாக 'இராமாயணம்' என்று அழைக்கப்பட்ட வரலாருகும். அயோத்தியின் அரசனும், இந்துக்களால் கடவுளின் அவதாரமாகக் கருதப்பட்டவனுமான ஸ்ரீ ராமச்சந்திரனின் வாழ்க்கையை விளக்கும் இந் நூல் ஏழு புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. துளசிதாசரின் மற்ெருரு முக்கியமான நூல் 'விநய பத்ரிகா' என்பது. இது தேவ பாடல்களையும், பிரார்த்தனைகளையும் கொண்ட ஒரு தொகுப்பாகும். இத் துறையில் சிறந்த ஆராய்ச்சிச் சிறப்புள்ள சர் ஜார்ஜ் கிரியர்சனும் ஸ்மித்தும், இராமாயணத்தை ஓர் உயர்ந்த இலக்கியப் படைப்பென்றும், துளசிதாசரைக் கருவிலே திருவுடைய கவிஞர் என்றும் குறிப்பிடுகிருர்கள். அவர்கள் கருத்துப்படி, துளசிதாசரின் நடை அவர் விவரிக்கும் பாத்திரங்களுக்கு ஏற்றவாறு மாறுபடுகின்றது. இந்தப் பாத்திரங்களில் ஒவ்வொருவரும் நன்கு வரையறுக்கப்பட்ட தனித்தன்மையுடன், ஒரு வீரசகாப்தத்தின் மகிமைக்கு ஏற்றபடி வாழ்ந்தும் நடந்தும் காட்டுகிருர்கள். 'துளசிதாசரே இந்திய இலக்கிய வரலாறு முழுவதிலும் மிக முக்கியமானவர்; அவர் இயற்கையிலிருந்து எடுக்கப்பட்ட உவமைகளைக் கையாண்டார்; அவரது வருணனைகள் மிக இயற்கையாக இருக்கின்றன' என்று சர் ஜார்ஜ் கிரியர்சன் என்பார் இன்னும் கூறுகிருர். அடுத்த முக்கியமான இந்திக் கவிஞர் சூர்தாசர். இவரைத் துளசிதாசரைவிட வள

முள்ள கவிஞர் எனலாம். இவரை 'சூர் சாகரை'யும் இன்னும் பல பாடல்களையும் எழுதிய ஆசிரியர் என்ற முறையில் மக்கள் அறிவார்கள். சூர்தாசரைவிட, அவருக்கு முன்னரும் பின்னரும் வாழ்ந்த கவிஞர்களில் எவரும், குழந்தைகளின் உளவியலைப்பற்றி அதிகமாக அறிந்திலர் என்பது உண்மை. சில திறனாய்வாளர்கள் இவரைத் துளசிதாசரைவிடச் 'சிறந்தவர் என்று கருதுகிறார்கள். இவர் அக்பரின் அரசவையில் இருந்தார். மக்கள் இவரை 'ஆக்ராவின் அந்தகக் கவிஞர்' என்று அழைத்தனர். இவரது தந்தையாராகிய ராமதாஸரும் அக்பரின் அவைக்கவிஞர்களில் ஒருவர்.* இன்னும் பல இந்திக் கவிஞர்கள் அக்பரின் அவையை அலங்கரித்தார்கள். இந்தி இலக்கியத்திலும் கவிதைத் துறையிலும் முஸ்லீம்கள் ஆர்வம் காட்டுவதை அக்பர் காலத்தில் காண்கிறோம். தங்களுடைய பெயர்களை, தாங்கள் படைத்த நூல்களிலிருந்து நீக்கிவிட்டால், அவற்றை இந்து அறிஞர்களும் கவிஞர்களும் ஆக்கிய படைப்புகளிலிருந்து வேறுபடுத்த முடியாது என்ற கருத்தில், சில முஸ்லிம் கவிஞர்கள் இந்தியப் பண்பாட்டிற்குப் பொருள் கண்டார்கள்.

இந்த வகையில் அப்துர் ரஹீம் கான் கானாவின் பெயர் சிறப்புற்று விளங்குகிறது. பாரசீகம், அரபி மொழி துருக்கி முதலியவற்றில் புலமை பெற்றிருந்த அவர், வடமொழியிலும் அறிஞராகவும், ஹிந்தி, ராஜஸ்தானி மொழிகளில் புலவராகவும் விளங்கினார். அவர் ஆயிரக்கணக்கான கவிதைகளைப் படைத்திருக்கிறார். அவைகள் யாவும் கலைச்செல்வங்களாக நமக்கு வழிவழியாக வழங்கப்பட்டு, நமது சிறந்த கவிதைத் தொகுதிகளில் மேலான இடத்தை வகிக்கின்றன. இந்த உண்மைக் கவிதா மேதையின் இலக்கியப் பணியைப்பற்றிக் குறிப்பிடாமல் இந்தி மொழியின் கவிதை வரலாற்றை நிறைவுற எழுத முடியாது. இவர் துளசிதாசரின் நண்பர் என்ற முறையில் அவருடன் கடிதப் போக்குவரவு கொண்டிருந்தார். கிருஷ்ணபகவானின் பக்தரான ராஸ்கான் என்பவர் மற்றொரு சிறந்த இந்திக் கவிஞராவார். இவர் எழுதிய முதல்தரமான கவிதைகள் பிருந்தாவனத்தில் ஸ்ரீ கிருஷ்ணரின் வாழ்க்கையை விவரிக்கின்றன. அக்பரின் அவையிலிருந்த பீர்பால், மான்சிங், தோடர்மால் போன்ற பெருமக்களும் இந்திக் கவிதையை விரும்பினார்கள். அக்பரும் இந்திக் கவிதையை விரும்பி இந்திக் கவிஞர்களை ஆதரித்தார். அவர் இந்தியில் சில கவிதைகளை ஆக்கினார் என்றும் சொல்லப்படுகிறது. எனவே, அக்பரின்

* சில நவீன இந்தி அறிஞர்கள், சூர்தாஸர், 'சூர் சாகர்' என்ற நூலை எழுதவில்லை என்று கருதுகிறார்கள்.

ஆட்சியில் இந்திக் கவிதை குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்ததில் வியப்பில்லை.

இலக்கியப் படைப்புகள் அரசவையிலும் பிரபுக்களிடையேயும் மட்டுமே தாம் சிறந்திருக்கவில்லை என்பது அக்காலத்திய சிறப்பின் மிக முக்கியமான அமிசமாகும். இந்த இலக்கிய இயக்கம் உண்மையில் மக்களின் இயக்கமாகும். நாட்டுப்புறங்களில் அநேக அறிஞர்களும் கவிஞர்களும் இருந்தார்கள். இவர்களை அந்தந்த வட்டாரங்களில் உள்ள பெருநிலக்கிழார்களும், செல்வமிக்க பொதுமக்களும் ஆதரித்தார்கள். மிஸ்ரா பந்து விநோத் என்பாரின் நூல்களையும், ராம்சந்திர சுக்லா எழுதிய 'ஹிந்தி சாகித்யகா இதிகாஸ்' என்ற நூலையும் படித்தால், இந்திக் கவிதையின் பொற்காலத்திற்குக் காரணமான அன்றைய மொழிப் பற்றைப்பற்றி அறிந்துகொள்ள முடியும்.

ஓவியக் கலை

ஓவியக் கலையானது புனிதக்குரானில் தடை செய்யப்பட்டிருந்த போதிலும், அக்பர் ஓவியத்தில் ஆர்வம் கொண்டிருந்தார். ஓவியத்தினால் மனிதன் சமயப் பற்றை இழந்துபோவதில்லை; ஆனால், அதற்கு மாருக, ஓவியக் கலை மனிதனைக் கடவுள்பால் திருப்பி, அவனது படைப்புகளின்மீது தனித்தன்மையைப் பொழியும்படி அவரது அருளை நாடவும் அவனைத் தூண்டுகிறது. அக்பரைப் போலவே சாஃபாவி அரசகுலத்தைச் சேர்ந்த பாரசீக மன்னர்களும், புனிதக் குரான் விதித்த தடைக்கு மாருகக் கலைகளைச் சிறப்பாக ஆதரித்தார்கள். இவர்கள் பாரசீகத்தின் சீன அல்லது மங்கோலிய ஓவியக் கலையைப் புகுத்தினர்கள். தங்களின் நாட்டிற்கு சீனப் பெருங்கலைஞர்களை அழைத்து, மக்களுக்குக் கலைகளைக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். பண்டைய முஸ்லிம் ஓவியர்கள் மரங்கள், மலைகள், ஆறுகள்போன்ற உயிரற்ற பொருள்களின் உருவங்களை எழுதுவதோடு தங்கள் ஓவியக் கலையை வரையறுத்துக்கொண்டார்கள். அதனையடுத்துப் பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் உருவங்களையும், இறுதியாக மனித உயிரோவியங்களையும் படைத்தனர். இந்தக் கலையில் மிகச் சிறந்திருந்தவர்கள் மத்திய ஆசியாவில் ஹீரப் நகரின் பிஸாடு என்பாரும், அவரது சீடரான தாப்ரிஸ் நகரின் 'ஆகா மிராக்' என்பாரும் ஆவர். பீஸாடு, சுல்தான் உசேன் பேய்காராவிடம் பணிபுரிந்த பின்னர், பாரசீக மன்னரான ஷா இஸ்மாயில் என்பாரின் சேவையில் கலைத்தொண்டில் ஈடுபட்டார். சீனத்து அல்லது மங்கோலிய முறை தழுவிய ஓவியக் கலையைச் செம்மையாக்கி, அதனை

உண்மையான பாரசீக வடிவமாக்கிய பெருமை பிஸாடுவைச் சார்ந்ததாகும். இந்தக் கலைதான் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டு, அக்பரின் அரசவையில் புகுத்தப்பட்டது. புறக்கணிப்பினாலும் ஆதரவின்மையாலும் வளர்ச்சி பெருதிருந்த இந்திய முறையான ஓவியக் கலையுடன், மேற்கூறிய சீனக்கலை இணைந்தது. இந்திய ஓவியக் கலையின் மரபானது மிகப் பழமையானதாகும். இது 16ஆம் நூற்றாண்டில் அஜந்தாவின் குகைகளில் தீட்டப்பட்ட உன்னதமான படைப்புகளின்மூலம் வழிவழியாக வந்துகொண்டிருக்கிறது. அக்பரின் அரசவையில் இருந்த ஓவியர்கள் பெற்றிருந்த கலை நிறைவைப்பற்றி, அபுல் ஃபாஸல் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'இந்துக்களைப்பற்றிய இந்தச் சிறப்பு மிகவும் உண்மையானதாகும். அவர்கள் தீட்டுகின்ற ஓவியப் படைப்புகள் நமது கற்பனைகளுக்கு எட்டாதவை. அகில உலகிலும் அவற்றிற்கு ஈடாகச் சொல்லக்கூடிய படைப்புகள் மிகச் சிலவே' ('அயினி அக்பரி', முதல் தொகுப்பு, பக். 107). அக்பரின் அரசவையில் ஆதரிக்கப்பட்ட பாரசீக ஓவியக் கலையும் இந்திய ஓவியக் கலையும் ஒன்றோடொன்று இணையத் தொடங்கி, காலப் போக்கில் இரண்டறக் கலந்து ஒன்றாகிவிட்டன. ஓவியக் கலையின் வெளிநாட்டு அமிசங்கள் நாளாவட்டத்தில் தாமே அழிந்துவரவே, இறுதியாக அது முற்றிலும் இந்தியமயமானதாகியது. பாட்னாவில் உள்ள கீழ்நாடுகளின் குதாபாக்ஷ் பொது நூலகத்தில் காப்பாற்றப்பட்டுவரும் 'தாரிகி கண்டானி திமூரியா' என்ற நூலின் பிரதி ஒன்றும், 'பாதுஷா நாமா'வின் பிரதி ஒன்றும் மேற்கூறிய படிமுறை வளர்ச்சியின் போக்கிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். அக்பரின் ஆதரவு அவரது அரசவைக்கு மிகச் சிறந்த ஓவியர்களைக் கொண்டுவந்தது. இவர்களில் இந்து ஓவியர்களே மிகத்திறமைபெற்றவர்களாகவும், எண்ணிக்கையில் மிகுந்தவர்களாகவும் இருந்தனர். ஃபதேபூர் சிக்ரியில் இருந்த அக்பரின் தலைநகரின் சுவரோவியங்களைத் தீட்டவும், சேகர ஏடுகளைத் தயாரிக்கவும் இந்த ஓவியர்கள் பணிபுரிந்தார்கள். அக்பரின் அரசவையில் இருந்த பதினேழு பெரு ஓவியக் கலைஞர்களில் பதின்மூன்று பேர்களுக்குக் குறையாமல் இந்துக்களாவர். இவர்கள் உருவப்பட ஓவியங்களைத் தீட்டுவதில் கைதேர்ந்தவர்களாக விளங்கினார்கள். தாஸ்வந்த், பாஸ்வான், கேசுலால், முகந்த், மது, ஜகன், மஹேஷ், தாரா, எகம், கரன், சன்வ்லா, ஹரிபான்ஷ், ராம் ஆகியோரைச் சிறந்த ஓவியர்களாகக் குறிப்பிடலாம். தாஸ்வந்த் என்பார் ஒரு கஹாரின் மகன். இவர் பல்லக்குச் சுமக்கும் பணிபுரிந்துவந்தார். இவருக்குச் சுவர்களில் ஓவியம் தீட்டுவதென்றால் வெகு பிரியம். ஒரு நாள் அக்பர், தாஸ்வந்தையும் அவரது கலைத்திறனையும் காண நேர்ந்தது. அன்றுமுதல் அரசர் அவரை ஓவியராக

நியமித்து ஆதரித்துவந்தார். தாஸ்வந்த் புகழின் உச்சநிலையை அடைந்தபோது பித்தராகித் தற்கொலை செய்துகொண்டார். பாஸ்வான் என்பாரைச் சில திறனாய்வாளர்கள் தாஸ்வந்தைவிடச் சிறந்த ஓவியரெனக் கருதுகிறார்கள். பின்னணி ஓவியங்கள், முகத் தோற்றங்கள், வர்ணங்களின் பகிர்வு, உருவப் படங்களைத் தீட்டுதல் ஆகியவற்றில் தன்னிரகற்று விளங்கினார். 'அயினி அக்பரி'யில் குறிப்பிடப்பட்டுள்ள இந்து ஓவியர்களில் பெரும்பாலோர் காயஸ்தக, சித்தெரா, சிலாவத், காத்தி முதலிய வகுப்புகளைச் சேர்ந்தவர்களாவர். மகாபாரதத்தின் பாரசீக மொழிபெயர்ப்பான 'ராஸம் நாமா'வின் காட்சிகளைச் சித்திரிக்கும்படி இவர்களில் பலர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஓவியத்துறை என்று தனியாக ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அக்பர் தமது அரசவையின் மிகச்சிறந்த ஓவியர்களில் ஒருவரான குவாஜா அப்துஸ் சமாத் என்பவரை அதன் தலைவராக ஏற்படுத்தினார். அப்துஸ் சமாத், ஷிராஸ் என்ற பகுதியிலிருந்து வந்த ஒரு பாரசீகர். இவருக்கு 'ஓவிய மன்னர்' எனப் பொருள்படும் 'சிரின்-குலாம்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டிருந்தது. ஓவியத்துறையை அரசர் நேரடியாகப் பார்வையிட்டு, அதற்குத் தேவையான எல்லாவித ஆதரவுகளையும் வழங்கினார். அரசவை ஓவியர்களால் தீட்டப்பட்ட ஓவியப் படைப்புகள் யாவும் ஒவ்வொரு வாரமும் அரசரின் பார்வைக்குக் கொண்டுவரப்படும். அவற்றில் சிறந்த படைப்புகளுக்கு அரசர் பரிசுகள் வழங்குவார். அரசரால் அங்கீகரிக்கப்பட்ட கலைப்படைப்புகளைத் தீட்டிய ஓவியர்களுக்குச் சிறப்பான மானியங்கள் கொடுக்கப்பட்டன. அவர்களுக்குச் சம்பள உயர்வுகளும் உடனடியாக வழங்கப்பட்டன. ஓவியர்கள் அரசரின் பணியாளர்கள் என்ற தகுதிபெற்று, அரச சேவையில் 'மான்சப்புகளும்' பெற்றார்கள். அதன் தரவரிசைகளுக்கு ஏற்ப அவர்களின் ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டன. ஓவியத்துறைத் தலைவரான அப்தூஸ் சமாத், நானூறு தரவரிசை பெற்ற மான்சுப்தாராக இருந்தார். ஆனாலும், அவரது வரிசைக்கு உள்ள மதிப்புகளைவிட அதிகமான செல்வாக்கும் மரியாதையும் அவருக்கு அரசவையில் வழங்கப்பட்டன.

ஓவியத்தில் அக்பர் கொண்டிருந்த ஆர்வமும், அதற்கு அவர் காட்டிய ஆதரவும் அவர் ஓர் ஓவியக் கலைப் பள்ளியை நிறுவும்படி தூண்டியது. இதனை ஒரு தேசிய ஓவியப் பள்ளியாகக் கருதலாம். அதில் இருந்த உறுப்பினர்கள் இந்தியாவின் பல பகுதிகளிலும் வெளிநாடுகளிலுமிருந்து வந்தவர்கள். அவர்கள் பல சாதிகளையும் சமயங்களையும் சேர்ந்தவர்கள். ஆனால், அவர்கள்

யாவரையும் ஊக்குவித்தது ஒருபொதுவான குறிக்கோள். அதாவது, கலைச்செல்வரான அக்பரின் ஆதரவைப் பெற்று மிகச் சிறந்த கலைப்படைப்புகளை உருவாக்கவேண்டும் என்பதே.

கையெழுத்துக் கலை

ஓவியக்கலையுடன் தொடர்புகொண்ட மற்றொரு கலை கையெழுத்துக் கலையாகும். இது இந்தியா, பாரசீகம், சீனு ஆகிய நாடுகளில் உயர்வாக மதிக்கப்பட்டது. இதனை ஒரு நுண்கலையெனக் கருதி, அநேக முகலாய அரசர்கள் பெரிதும் விரும்பி வளர்த்துவந்தனர். அக்பர் கல்வியறிவு அற்றவரென்றாலும், அவருக்குக் கையெழுத்துக் கலையில் அதிக ஆர்வம் இருந்ததால், எழுத்துக்கலையில் தேர்ந்தவர்கள் பலரை அவர் வேலைக்கு அமர்த்தியிருந்தார். அரசரின் நூல் நிலையத்திற்கு வேண்டிய நூல்களின் பிரதிகளை அழகான முறையில் தயாரிக்கின்ற பணியில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். கையெழுத்துப் பிரதிகள் சேகரிக்கப்பட்டுப் படவிளக்கக் கலையெனச் சேகர ஏடுகளில் பாதுகாக்கப்பட்டுவந்தன. அக்பரின் அரசவையில் எட்டு வகையான கையெழுத்துக் கலைகள் வழக்கத்தில் இருந்தன என அபுல் ஃபாஸல் குறிப்பிடுகிறார். இதில் எட்டாவது வகையான நஸ்தாலிக் முறையை அக்பர் பெரிதும் விரும்பி ஆதரித்தார். இது முற்றிலும் வளைவான வரிகளைக் கொண்டது. அக்பரின் அரசவையில் இருந்த கையெழுத்து வல்லுநர்களில் மிக முக்கியமானவர், முகமது உசேன் காஷ்மீரி என்பவர். இவருக்கு 'ஸாரின் குலாம்' என்ற பட்டம் வழங்கப்பட்டிருந்தது. மௌலானா பாகீர், மஸாதீன் முகமது அமீன், மீர் உசேன் கலாங்கி, இன்னும் பலரும் சிறந்த கையெழுத்துக் கலைஞர்களாகத் திகழ்ந்தார்கள்.

கையெழுத்துக் கலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மற்றொரு கலை, நூல்களை அழகுறக் கட்டுவதும் எழிலான உருவப் படங்களால் அலங்கரிப்பதும் ஆகும். புத்தகங்களைக் கட்டுவதற்கும், அவற்றின் ஓரங்களையும் மேலுறைகளையும் அலங்கரிப்பதற்கும், அவற்றின் கருத்துகளுக்கேற்ற விளக்கப் படங்களை வரைவதற்கும் பயன்படுத்தப்பட்டவர்களெல்லோரும் கலைஞர்கள் எனக் கருதப்பட்டார்கள். இவர்கள் முழுநேர ஓவியர்களைப்போலவே உயர்வாக மதிக்கப்பட்டுவந்தனர். இந்தக் காலத்தில் எழுதப்பட்டு, விலையுயர்ந்த கட்டுமானம், அதிகச் செலவில் தயாரிக்கப்பட்ட விளக்கப் படங்களின் அலங்காரம் முதலியவற்றால் அழகு செய்யப்பட்டிருந்த பல நூல்கள் இன்றும் நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றை நாட்டின் பல கையெழுத்துப் பிரதி நூல் நிலையங்களில் பாதுகாத்து வருகின்றார்கள். இவை அக்பர் காலத்திலும், அவருக்குப் பின் அரசாண்டவர்கள் காலத்திலும் மேற்கூறிய

இரட்டைக் கலைகள் அடைந்திருந்த உயர்ந்த தரத்தைக் காட்டுகின்றன.

இசைக்கலை

பாபரைப் போலவே அக்பரும் இசைக் கலையில் ஈடுபாடு கொண்டவர். 'மாட்சிமை தங்கிய மன்னர் இசைக் கலையில் அதிக ஆர்வம் கொண்டிருக்கிறார். கவர்ச்சிகரமான இந்தக் கலையைப் பயிற்சி செய்வோர் எவரையும் அவர் ஆதரிக்கிறார்' என்று அபுல் ஃபாஸல் கூறுகிறார். அக்பரின் அரசவையில் இருந்த முப்பத்தாறு முதல் தர இசைவாணர்களின் பெயர்களை 'அயினி அக்பரி' கூறுகிறது. இவர்களை ஏழு பகுதிகளாக வரிசைப்படுத்தியிருக்கின்றது. வாரத்தின் ஒரு குறிப்பிட்ட நாளில் ஒவ்வொரு பகுதியினரும் அரசருக்கு இசைவிருந்தளிக்கவேண்டும். அரசரே திறமையுள்ள இசைவல்லுநராகத் திகழ்ந்தார். 'நகரா' என்ற ஒருவகைத் தோல்கருவியை இயக்குவதில் அவர் யாருக்கும் சளைத்தவரல்லர். அக்பர் இந்தி வாய்ப்பாட்டிசையின் நுணுக்கங்களை லால் கலாவந்த் என்பவரிடமிருந்து கற்றுக்கொண்டார். இவர் 'இந்தி மொழிக்கு இயல்பான சகல மாத்திரைகளையும் ஒலிகளையும்' அரசருக்குக் கற்றுக்கொடுத்தார். தனது ஆட்சியின் தொடக்கத்தில் ரீவா நாட்டிலிருந்த தான்சென் என்பவரை அக்பர் அழைத்து வந்து, அரசவையில் அவருக்கு உயர்ந்த தகுதிகளை வழங்கினார். தான்சென் அக்காலத்திய தலைசிறந்த இசைவாணராவார். 'கடந்த ஆயிரம் ஆண்டுக் காலத்தில் இவரையொத்த ஓர் இசைமன்னர் இந்தியாவில் இருந்ததில்லை' என்று அபுல் ஃபாஸல் தான்சென்னைப் பற்றிக் குறிப்பிடுகிறார். தான்சென், குவாலியரில் ராஜா மான்சிங் தோமார் (1486-1518) என்பார் நிறுவியிருந்த ஒரு கலைக்கூடத்தில் பயிற்சி பெற்றவர். தான்சென் புதிய இராகங்களைக் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படுகிறது. அவர் தமது இசையின் வன்மையால் யமுனை ஆற்றின் ஓட்டத்தையே தடுத்து நிறுத்தியதாகவும் பெருமைப்படுத்தப்பட்டிருக்கிறார். மற்றொரு புகழ்பெற்ற இசைவாணர் பாபா ராம்தாஸ் ஆவார். ஆனால், இவரைத் தான் சென்னுக்கு அடுத்தபடியாகத்தான் கூறவேண்டும். ராம்தாஸ் பைராம்கானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். ஒருசமயம் பைராம்கான் இவர்மீது எவ்வளவு மகிழ்ச்சி கொண்டாரென்றால், அவருக்கு ஒரு லட்சம் டாங்காக்களைப் பரிசாக வழங்கினார். இன்னுமொரு புகழ்பெற்ற இசைவாணர் பேய்ஜு பாவ்லா என்பவர் (இவர் பிர்ஜு பாவ்லா என்றும் அழைக்கப்படுகிறார்). இவருடைய பெயர் அபுல் ஃபாஸல் தரும் பட்டியலில் குறிப்பிடப்படவில்லை என்றால், இவர் தான்சென் காலத்திலும் அக்பர் காலத்திலும் வாழ்ந்தவர்

என்பது உறுதி. பாதேபூர் சிக்ரியில் உள்ள வழிகாட்டி, மன்னரின் அரண்மனைக்கு வெளியே இருக்கும் 'பாவ்லாவின்' வீட்டை இன்றும் காட்டுகிருர். இவருக்கும் தான்செனுக்கும் இடையே இருந்த போட்டியைப்பற்றிக் கர்ணபரம்பரைக் கதைகளும் நாடோடிக் கதைகளும் இன்றுவரை சொல்லப்பட்டுவருகின்றன. சூர்தாஸ், சிறப்புமிக்க இசைமன்னராகிய ராம்தாசரின் மகன். இவர் அக்பர் அவையில் இருந்த மிகச் சிறந்த இந்திக் கவிஞர்கள், இசைவாணர் கள் வரிசையில் இடம்பெற்றவர். அரசர் இசையில் கொண்டிருந்த ஆர்வமும் இசைக்கலைக்குக் காட்டிய ஆதரவும், இசைக்கருவிகளை மீட்டும் கலையிலும் வாய்ப்பாட்டுக் கலையிலும் சிறந்த முன்னேற் றங்கள் ஏற்பட வழிவகுத்தது. அவரது அவையில் இந்து-முஸ்லிம் இசைகள் இணைந்து ஒன்ருயின. இருவேருன இசைமுறைகளை இணைத்து, இந்திய தேசீய இசையைத் தோற்றுவித்த பெருமை அக்பரையே சார்ந்ததாகும்.

கட்டடக் கலை

துருக்கிய-ஆப்கானியர்கள் இந்தியாவைத் தாக்கியபோது, மெஸபொட்டேமியாவில் சிறந்திருந்த பண்டைய விமானக் கட்டடக் கலையை இந்தியாவில் புகுத்திஞர்கள். இந்தக் கட்டடக் கலை முறையானது இந்தியாவுக்கு வருவதற்கு முன்னர், ஸாசா னிட்டுகள், அபாஸிட் காலிபாக்கள் காலத்தில் பெரிதும் மாறுதல் அடைந்து, இஸ்லாமியக் கட்டட முறை என்று தவருன ஒரு பொதுப் பெயரைப் பெற்றது. இந்த வெளிநாட்டுக் கட்டடக் கலையானது இந்தியாவில் புகுத்தப்பட்டபோது, சுதேசக் கட்டட முறையில் பல இயல்புகள் அதனேடு கலக்கத் தொடங்கின. சுதேச கட்டடக் கலை மிகச் சிறப்புப் பெற்று கோலோச்சியிருந்ததோடு, மிக உயர்ந்த ஒரு நிலையான தரத்தையும் பெற்றிருந்தது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவையாவன: (1) சுல்தான்கள் இந்துக் கொத்தர்களையும் கட்டடக் கலைஞர்களையும் அமர்த்திக் கொண்டதால், அவர்கள் தம்மை யறியாமலே முஸ்லீம் கட்டடங் களில் தங்களுடைய சொந்தக் கலைக்கருத்துகளைப் புகுத்திஞர்கள். (2) முஸ்லீம்கள் தொடக்க காலத்தில் இந்து ஆலயங்களை அழித்து அவற்றின் பொருள்களைக்கொண்டே தமது கட்டடங்களை எழுப்பிஞர்கள். இந்த இரு காரணங்கள் இருப்பினும், டெல்லி சுல்தான்கள் எழுப்பிய கட்டடங்களும் சுல்தான்களின் ஆட்சி நலிவுற்றபோது தோன்றிய சுதந்திர அரச பரம்பரையினர் நிறுவிய கட்டடங்களும் பெரும்பாலும் வெளிநாட்டுப் பாணியிலும் வெளி நாட்டுக் கலைத்திறனேடும் கட்டப்பட்டன. இந்த இருவேருன கட்டடக் கலை முறைகளையும் இணைத்து, தேசீய இந்தியக் கட்டடக்

கலையின் அடித்தளத்தை அமைக்கும் பணியினை அக்பர்தான் செய்யவேண்டியதிருந்தது. கட்டடக் கலையைப்பற்றி அக்பர் தனக்கே உரித்தான சில கருத்துகளைக்கொண்டு, பல கட்டடங் களுக்குத் திட்டமிட்டார். இவற்றில் மாளிகைகள், மசூதிகள், சமாதிகள், கோட்டைகள் பலவும் இருந்தன. அக்பர் பொதுப் பணித் துறையை ஏற்படுத்தினுர். கட்டடக் கலை நிபுணர்களும் பொறியியலாளர்களும் அரசர் தரும் திட்டங்களின்படி கட்டடங் களை நிர்மாணித்தார்கள். 'மாட்சிமை மிக்க மன்னர் மகத்தான கலைக்கோவில்களைத் திட்டமிடுகிறுர். அவரது சிந்தனையிலும் இதயத்திலும் எழுகின்ற கலையெண்ணங்களையெல்லாம் கல்லாலும் மண்ணுலும் போர்த்திவிடுகிறுர்' என்று அபுல் ஃபாஸல் குறிப்பிடு கிறுர் (அயினி., 85, கட்டடப் பகுதி, முதல் புத்., பக்கம் 222). ஆக்ரா கோட்டை, லாகூர் கோட்டை, அலகாபாத் கோட்டை ஆகிய மூன்று பிரமாண்டமான கோட்டைகளை அக்பர் கட்டினுர். ஆக்ரா கோட்டைக்கும் குவாலியர் கோட்டைக்கும் ஒற்றுமை இருப்பதைக் காணலாம். குவாலியர் கோட்டையை மாதிரிப் படிவ மாகக்கொண்டுதான் அக்பர் ஆக்ராவின் பெருங்கோட்டையை நிர்மாணித்திருக்கவேண்டுமென்று பெர்ஸி பிரவுன் குறிப்பிடு கிறுர். ஆக்ரா கோட்டையின் சுற்றளவு ஒன்றரை மைல்கள் ஆகும். அதில் டெல்லி வாயில், அமரசிங் வாயில் என இருபெரு வாயில்கள் இருக்கின்றன. கோட்டைக்குள்ளே அக்பர், செந்நிற மணற்கற்களினுல் ஐந்நூறு கட்டடங்களை நிறுவினுர். இவற்றில் பலவற்றை அக்பரின் கட்டடக் கலைக் கருத்துகளினின்றும் வேறு பட்ட கருத்துகளைக் கொண்டிருந்த ஷாஜஹான் அழித்து விட்டார். ஷாஜஹான் செம்மணற் கற்களைவிட வெள்ளைச் சலவைக் கற்களையே பெரிதும் கட்டடங்களுக்குப் பயன்படுத்தினுர். அக்பர் கட்டிய கட்டடங்களில் பல இன்றும் இருக்கின்றன. அக்பரி மஹாலும் ஜஹாங்கிரி மஹாலும் இவற்றில் மிக முக்கியமாகக் குறிப் பிடத்தக்கவை. இந்த இரு அரண்மனைகளும் ஒரே பாணியில் கட்டப்பட்டிருக்கின்றன. ஜஹாங்கிரி மஹாலில் அழகுறச் செதுக்கப் பட்டுள்ள பல கல்வளைவுகளைக் காணலாம். இவை கற்பாளங்களை யும், அகன்ற சுரங்க அறைகளையும், தட்டையான கூரைகளையும் தாங்கி நிற்கின்றன. இந்த மாளிகை கட்டடப் பாணியில் இந்து முறையைத் தழுவியிருப்பதால், இது சித்தூரிலும், உதயபுரி யிலும் உள்ள இந்துக் கட்டடங்களை ஒத்திருக்கின்றது என்பது சில கலை விமர்சகர்களின் முடிவு. லாகூர் கோட்டை, ஆக்ரா கோட்டை கட்டப்பட்ட அதே காலத்தில்தான் நிர்மாணிக்கப் பட்டது. இதனுள் இருந்த கட்டடங்கள் ஆக்ராவில் உள்ள ஜஹாங்கிரி மஹாலை ஒத்திருந்தபோதிலும், அவற்றிற்கு இடையே ஒரு வேறுபாடு இருந்தது. லாகூர் கோட்டையின் கட்டட அலங்

காரங்கள் ஆக்ரா கோட்டையில் இருப்பதைவிட அதிகச் செறிவாகவும் அதிகமான அளவிலும் காணப்படுகின்றன. கட்டடத்தின் வளைவுகளில் யானைகள், சிங்கங்களின் உருவங்களும், கம்பளங்களில் மயில்களின் உருவங்களும் காணப்படுவதிலிருந்து, இந்துக் கலைத் திறன் மேலோங்கியிருந்ததென்றும், முகலாய மேற்பார்வையாளர் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொண்டார்களென்றும் முடிவு செய்ய முடியும். அலகாபாத் கோட்டை காலத்தால் பிந்தியது. அதன் பல கட்டடங்களும் உட்சுவரும் அழிந்துவிட்டன. 'ஸாஞனு மாளிகை' இன்றும் இருக்கின்றது. 'இதில் இருக்கும் தூண்களின் பகிர்வும் அவற்றின் மேல் அமைப்புகளும்' அலகாபாத் கோட்டைக் கட்டடங்களின் சிறப்பியல்புகள் என்பதை ஸாஞனு மாளிகை காட்டுகின்றது. பாதேபூர் சிக்ரியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய தலைநகர்தான் அக்பரின் கட்டடக் கலைப் படைப்புகளில் தலை சிறந்ததாகும். ஒரு சிறு குன்றத்தின்மேல், இரண்டு மைல் நீளமும் ஒரு மைல் அகலமும் கொண்ட இடத்தில் அக்பர் பெருநகர் ஒன்றை அமைத்தார். அதன் மூன்று பக்கங்களில் அரண்களும், ஒரு புறத்தில் ஒரு செய்குளமும் சூழ்ந்திருந்தன. கோட்டைச் சுவரில் ஒன்பது வாயில்கள் இருந்தன. நகரத்திற்கு எதிரே இருந்த ஆக்ரா வாயில்தான் கோட்டையின் முக்கிய வாயில் ஆகும். கோட்டைக்குள்ளே இருந்த கட்டடங்களில் ஆவண மன்றம், திவானிகாஸ், திவானிஆம், கருவூலம், பாஞ்ச் மஹால், மிரியம் மாளிகை, துருக்கி சுல்தான் மாளிகை, அரசரின் துயில் அறை, நூல் நிலையம், ஜோத்பாய் அரண்மனை, பீர்பால் மாளிகை முதலியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. வெளிப்புறத்தில் உயர்ந்த கோபுர வாயிலான புலந்த் தர்வாஸாவுடன் ஜும்மா மசூதி நிற்கின்றது. மசூதியின் உட்புறத்தில் ஷேய்க் சலீம் சிஸ்தியின் சமாதி இருக்கின்றது. இது வெள்ளைச் சலவைக் கல்லாலானது. இங்குள்ள முக்கியக் கட்டடங்கள் பலவற்றில் ஒரு கலப்புக் கட்டட முறை விளங்குவதைக் காணலாம். இது பகுதி முஸ்லீம் பாணியையும் பெரும்பாலும் இந்து முறையான கட்டடக்கலைத் தன்மையையும் பெற்றதாகும். இவற்றின் சிலவற்றில் காணப்படும் அலங்கார அம்சங்கள் இந்து, சமணக் கோயில்களில் காணப்படும் அம்சங்களை ஒத்திருக்கின்றன. திவானிகாஸ் மிகச் சிறந்த கட்டடம் எனக் கலை விமர்சகர்கள் கருதுகிறார்கள். சலவைக் கல்லினாலும் செம்மணற் கற்களினாலும் கட்டப்பட்டுள்ள புலந் தார்வாஸா, 'இந்தியா வெங்கணும் உள்ள குறைவற்ற கட்டடக் கலைப் படைப்புகளுள் ஒன்று'. பாதேபூர் சிக்ரியைக் கட்டி முடிக்கப் பதினோர் ஆண்டுகள் ஆயின. இன்று அந் நகரம் பாழ்பட்டுக் கிடந்தாலும், 'மகத்தான ஒரு பெருமகனின் உள்ளக் கிளர்ச்சி தரும் வெளிப்பாட்டின் சின்னமாகும்.' பெர்குஸன் என்பார் கூறுவதுபோல, பாதேபூர்

சிக்ரி அதனை நிர்மாணித்த பெருந்தகையின் பிரதிபலிப்பாகும். அட்டாக்கிலுள்ள கோட்டை, ஆம்பர், மெர்த்தா என்ற இடங்களில் உள்ள மசூதிகள், இன்னும் பல இடங்களில் உள்ள மசூதிகள், சிக்கந்த்ராவில் உள்ள அக்பரின் சமாதி ஆகிய பல அழகான கட்டடங்களையும் அக்பர் கட்டினார். சிக்கந்த்ரா சமாதியை அக்பர் திட்டமிட்டாரென்றாலும், அவருடைய மகனாகிய ஜஹாங்கீர் அதனைத் திருத்தி அமைத்துக் கட்டி முடித்தார்.

அக்பர் பல ஸராய்களைக் கட்டினாரென்றும், மக்களின் நலங் கருதிப் பல ஏரிகளையும் கிணறுகளையும் வெட்டினாரென்றும் அபுல் ஃபாஸல் கூறுகிறார். அவர் பல பள்ளிக்கூடங்களையும் தொழுகை நிலையங்களையும் அமைத்தார். 'எங்கும் ஸராய்கள் கட்டப்பட்டுள்ளன. இவை வழிப்போக்கர்களின் ஆறுதலாகவும் எளிய அயலார்களின் புகலிடமாகவும் விளங்கின; மக்களின் நன்மைக்காகவும் மண்வளத்தை அதிகரிக்கவும் ஏரிகளும் கிணறுகளும் வெட்டப்படுகின்றன. பள்ளிக்கூடங்களும் தொழுகை மன்றங்களும் எழுப்பப்படுகின்றன; ஆண்டுதோறும் இந்தியாவின் வெற்றி வளைவு நிறுவப்படுகின்றது' ('அயினி அக்பரி', முதல் தொகுப்பு, பக்கம் 24).

சுதேசிக் கட்டடக் கலை, வெளிநாட்டுக் கட்டடக் கலை ஆகிய இருபாணிக் கட்டடக் கலைகளின் மிகச் சிறந்த அம்சங்களின் இணைப்பை பிரதிபலித்த புதுமுறைக் கட்டடக்கலையானது முகலாயக் கட்டடக் கலை என்ற பெயரைப் பெற்றது. இதன் விளைவுகள் இராஜஸ்தானத்தின் இராஜபுத்திர அரசர்கள் எழுப்பிய கட்டடங்கள் உட்பட, நாடு முழுவதும் அமைக்கப்பட்ட கட்டடங்களில் காணப்பட்டது. ஆம்பர், பிகானிர், ஜோதிபுரி, ஓர்ச்சா, தாதியா ஆகிய இடங்களில் அக்பர் காலத்தில் கட்டப்பட்ட அரண்மனைகள் முகலாயக் கட்டடக் கலையின் தன்மையைப் பட்டவர்த்தனமாகக் காட்டுகின்றன. 'நுணுக்கமான வேலைப்பாடுகள் அமைந்த வளைவுகள், கண்ணாடிப் பல்வண்ண ஓவியங்கள், வர்ணம் தீட்டப்பட்ட சாந்து, பொன்மெருகேற்றிய கற்கள், ஓவியச் சுதை முதலியவற்றின் சேர்க்கையால் பண்டைய முகலாயர்களின் கல்வினாலான கட்டடங்கள் இந்து அரசர்களின் பகட்டான தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்துக்கொள்ளப்பட்டனவென்பதை மேற்கூறிய கட்டடங்களில் காண்பது கடினமன்று' என்று பெர்ஸி பிரவுன் என்பார் கருதுகிறார் ('கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு', 4ஆம் புத்தகம், பக்கம் 546).

சிவில் கட்டடங்கள் மட்டுமன்றி, இந்துக் கோவில்கள்கூட, அக்பருடைய கட்டடக் கலையின் தேசீயமயமாக்குதலின் விளைவு

களுக்குத் தப்ப முடியவில்லை. அக்பர் சுதேச ஆலயக் கட்டடக் கலையின் அம்சங்களைத் தாராளமாகப் பயன்படுத்திக்கொண்டார். என்றாலும், அவர் காலத்தில் எழுப்பப்பட்ட இந்துக் கோவில்களில் ஆக்ராவிலும் பாதேபூர் சிக்ரியிலும் வளர்ந்துவந்த புதிய கலப்புக் கட்டடக் கலையின் அம்சங்கள் காணப்பட்டன. பிருந்தாவனத்தில் உள்ள இந்துக் கோவில்களில் இருக்கும் சில இயல்புகள் அக்காலத்திய முகலாயக் கட்டடக் கலையின் அம்சங்களை ஒத்திருக்கின்றன.

வேலைப்பாடுகள் அமைந்த குடைவு வேலைகள் முகலாயக் கட்டடக் கலையின் மிக முக்கியமான அம்சமாகும். பாதேபூர் சிக்ரியில் உள்ள துருக்கி சுல்தான் மாளிகையின் வேலைப்பாடுகளும், சிக்கந்த்ராவின் அக்பர் சமாதியில் உள்ள செதுக்கு வேலைகளும், செடிகள், மலர்கள், வண்ணத்துப்பூச்சிகள், சூரிய மறைவுக் காட்சிகள், பூஞ்சட்டிகளில் உள்ள வழக்கமான படங்கள் முதலியவற்றின் உருவங்களைக்கொண்டிருக்கின்றன. துளையிட்ட பின்னல் வேலைகளுக்கு அதிக மதிப்பிருந்தது. பல்வண்ண ஓவியங்களிலும் கருங்காலி அலங்கார வேலைகளிலும் முகலாயர் காலத்தில் நமது தொழிலாளர்கள் திறமை பெற்றிருந்தார்கள். இத்தகைய வேலைப்பாடுகள் இக்காலத்திய கட்டடங்களில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. மெருகிடப்பட்ட ஓடுகளும் அலங்கார செதுக்கு வேலைகளும் முகலாயக் கட்டடக் கலையின் மற்ெறாரு சிறப்பியல்பாகும். பாதேபூர் சிக்ரியில் உள்ள துருக்கி சுல்தான் மாளிகை, மெருகிடப்பட்ட ஓட்டு வேலைக்கு மிக அழகானவோர் எடுத்துக்காட்டாகும்.

நந்தவனங்கள்

முகலாயர்கள் வருவதற்கு முன்னரே இந்தியாவில் நந்தவனங்கள் இருந்தன. ஆனால், அவை வடிவ இயலின்படி அமைக்கப்படவில்லை. எல்லா நந்தவனங்களைப் பொறுத்தவரையிலும் அவைகள் உல்லாச வனங்களாக விளங்கும்படி அமைக்கப்பட்டிருந்தனவென்றும் கூறமுடியாது. பாரசீகத்திலும் துருக்கிஸ்தானத்திலும் வெகுவாய் வளர்ச்சியடைந்திருந்த புதிய பாணியான நந்தவன முறையை இந்தியாவில் புகுத்தியவர் பாபராவார். இந்த முறையின் முக்கிய அம்சம் என்னவென்றால், கால்வாய்கள், வடிகால்கள், ஏரிகள், சிறிய அருவிகள் முதலிய செயற்கை முறைகளினால் செடிகளுக்கு நீர்பாய்ச்சுவதாகும். இந்த நீர்ப்பாசன ஏற்பாடுகள் இருமருங்கிலுமுள்ள பாதைகளின் மட்டம் வரையிலும் நீர் ததும்பி நிற்குமாறு அமைக்கப்பட்டிருந்தன. இந்தத் திட்டத்தில் சாய்வு நிலத்தில் வரிசையாகப் பல மேல்தளங்கள் அமைக்கப்படும். இந்த வரிசைகள் புனிதக் குரானில் கூறப்படும் சுவர்க்கத்தின் அடையாள

மாக எட்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது வழக்கம். சில வேளைகளில் ஏழு கோளங்களைக் காட்ட ஏழு பிரிவுகளாகவும் பிரிக்கப்படும்'. முக்கியக் கூடாரம் அநேகமாக உச்சித் தளத்தில் அல்லது அடித்தளத்தில் அமைக்கப்படும். இதனுல் கூடாரத்தில் அமர்ந்திருப்பவர் செயற்கை ஊற்றுகள் அல்லது கருவிகளின் காட்சியைத் தடையில்லாமல் அனுபவித்துக்கொண்டிருக்க முடியும். அக்பர் தனது மாளிகைகளில் பல நந்தவனங்களை அமைத்தார். அக்பர் பெயருடன் சம்பந்தப்பட்ட நந்தவனங்களில் சிக்கந்த்ரா நந்தவனத்தைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இந்த நந்த வனத்தின் மையத்தில் அக்பரின் சமாதி எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த வனத்தின் திட்டம் நான்கு பக்கங்களைக்கொண்ட (சார்பாக்) ஓர் அமைப்பாகும். இதனைச் சுற்றி இருக்கும் பிரமாண்டமான அரணில் நான்கு சுவர்களின் மத்தியிலும் பக்கத்திற்கு ஒன்ருக நான்கு வாயில்கள் இருக்கின்றன. மையத்தில் நிற்கும் சமாதியைச் சுற்றிலும் நடுச் செயற்கை ஊற்றுகளைக்கொண்ட செய்குளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்குச் செவ்வொழுங்காய் அமைந்த பல நீர்க்கால்கள் இருக்கின்றன. நீர்க்கால்களும் பிற நீர்வழிகளும் சீன மண்ணினுல் ஆன தளங்களுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் ஓரங்களில் சைப்ரஸ், பைன், பனை முதலிய அழகிய செடிகளின் வரிசைகளைக் காணலாம்.

அக்பர் கனி தரும் பூங்காக்களையும் அமைத்தார். அவருக்குச் செடிகளை வளர்க்கும் தோட்டக் கலையிலும் சிறந்த ஆர்வம் இருந்தது. 'மன்னர் கனிகளைக் கடவுள் தந்த அரிய கொடைகளெனக் கருதி, அவற்றை மிகக் கவனமாகப் பேணிவருகிருர். இரான், துரான் முதலிய நாடுகளில் உள்ள தோட்டக் கலைஞர்கள் இங்கு வந்து தங்கியிருக்கிருர்கள். எனவே, மரங்களை வளர்ப்பதில் முன்னேற்றமான நிலை இருக்கின்றது' என்று அபுல் ஃபாஸல் எழுதுகிருர் ('அயினி அக்பரி', முதல் தொகுப்பு, பக்கம் 64).

அக்பரின் ஆளுமையும் குணச்சிறப்புகளும்

அக்பர் கவர்ச்சி மிக்க தோற்றமுடையவராகையால், அவர் முற்றிலும் அரச கம்பீரத்துடன் விளங்கினுர். அசாதாரணமான மாண்பு அக்பரிடம் விளங்கியதால், அவருடைய தனிச்சிறப்பான தோற்றப் பொலிவு யாரையும் கவர்ந்தது என்று அக்பர் காலத்திய வரலாற்ருசிரியர்கள் யாவரும் ஒருசேரக் கூறுகின்ருர்கள். கீழ்க் கண்ட வருணனை அக்பரைப்பற்றி அவரது மகனுகிய ஜஹாங்கீர் தருவது : 'அவர் நடுத்தரமான உயரமுடையவரென்ருலும், நன்கு உயரமானவர்போல் தோன்றினுர்; அவரது நிறம் கோதுமையின் நிறத்தை ஒத்திருந்தது ; அவரது கண்களும் புருவங்களும்

கருநிறமானவை; அவரது முகத்தோற்றம் கருமையானதென்று தான் சொல்லவேண்டும். அகன்ற மார்பும் நீண்ட கைகளும் கொண்டிருந்ததால், அவரது உடல்சிங்க உடல்போன்று இருந்தது. அவரது மூக்கின் இடப் பக்கத்தில் ஒரு கெட்டியான மச்சம் இருந்தது. அரைப்பட்டாணிப் பயற்றளவு இருந்த இந்த மச்சம் அக்பரது தோற்றத்திற்குக் கவர்ச்சி கொடுத்தது. முகக்குறியியல் வல்லுநர்கள் இந்த மச்சத்தை நல்வாழ்விற்கும் பெருகிவரும் வளத்திற்கும் அறிகுறியெனக் கருதினார்கள். அரசரது கம்பீரமான குரல் மிகவும் வன்மையானது. அவர் பேசும்போது குரல் கணீரென ஒலிக்கும். அதில் தனியான ஒரு சிறப்பு தொனிக்கும். அவரது செயல்களிலும் நடவடிக்கைகளிலும் அக்பர் உலகத்தாரைப் போன்று நடந்துகொள்ளவில்லை. இறைவனின் மகிமை அவரிடத்தில் வெளிப்பட்டது' ('துசுக்கி ஜஹாங்கிரி,' முதல் புத்தகம், பக். 33-34).

அக்பருடன் நேரடியான தொடர்புகொள்ளும் உரிமை பெற்றிருந்த மான்சரத் அடிகளார் தாம் நேரில் கண்டவற்றைக் கூறுகிறார்: 'அவர் (அக்பர்) தோற்றப் பொலிவாலும் உடற்கட்டினாலும் அரசருக்குரிய கண்ணியம் பெற்றிருந்தார். எவரும் கண்ட மாத்திரத்திலே அவரை அரசர் எனத் தெரிந்துகொள்ள முடியும். அவரது தோள்கள் அகன்று திரண்டும், கால்கள் சிறிது வளைந்தும், குதிரை ஏற்றத்திற்குத் தகுந்த முறையிலும் அமைந்திருந்தன. அவரது முகத்தோற்றம் பொலிவுற்றிருந்தது. ஆனால், அவர் சிறிது கருமை நிறமாகக் காணப்பட்டார். அவரது தலையை, வலது தோள்பக்கம் சிறிது சாய்ந்தவாறு வைத்துக்கொள்வது வழக்கம். அவரது நெற்றி அகன்றும் விரிந்தும் இருந்தது; அவரது கண்கள் கதிரவனின் ஒளிபெற்று மின்னுகின்ற கடலைப் போன்று சொலித்தன. சார்மேசிரியர்கள், சீனர்கள், நிப்போனியர்கள், மேலும் வட பகுதிகளில் வாழும் ஆசிய இன மக்களின் இமைகளைப்போன்று அவரது கண்ணிமைகள் தடித்துக் காணப்பட்டன. அவருக்குக் குறுகிய புருவங்கள் இருந்தன. அவரது மூக்கு நடுத்தர அளவில் கீழ்நோக்கி வளைந்திருந்தது. மூக்கின்மேல் உள்ள மேடு சிறிது உயர்ந்து காணப்பட்டது. கோபங்கொண்டவரைப்போன்று அவரது மூக்குத் துவாரங்கள் விரிந்திருந்தன. அவரது மூக்கின் இடப்பக்கத்தில் ஒரு மச்சம் மேல் உதடுவரையிலும் பரந்திருந்தது. அவர் தாடியை நீக்கிவிட்டு மீசையைமட்டும் வைத்திருந்தார். இந்த வழக்கம் முழு மனிதப் பருவத்திற்கான ஆடைகளை அணிந்துகொள்ளு முன்னர் இளந்துருக்கியர்களிடம் இருந்த ஒரு மரபொழுக்கமாகும். அவரது முன்னோர்களைப்போன்று அவர் தலைமுடியை முழுவதும் நீக்கிவிடவுமில்லை; தொப்பி அணிந்து

கொள்ளவுமில்லை. ஆனால், ஒரு தலைப்பாகையால் தலைமயிர் முழுவதையும் கட்டி முடித்துக்கொண்டார். இது இந்தியர்களை மகிழ்விப்பதற்காக அவர் இந்தியர்களைப் பின்பற்றிச் செய்ததாகச் சொல்லப்படுகிறது. அவர் இடதுகால் ஊனமோ என்று எண்ணத் தக்க வகையில் அதைச் சிறிது இழுத்துப்போட்டு நடப்பது அக்பரின் வழக்கம். இடதுகாலில் அவருக்கு எவ்விதக் காயமும் ஏற்படவில்லை. அவரது உடலில் வீரமும் வலிமையும் காணப்படு கின்றன. அவருக்கு நன்கு கட்டமைந்த உடல் இருக்கிறது. அது மெலிந்தோ, குறைந்தோ இல்லையென்றாலும், கனத்தும் பருத்தும் காணப்படவில்லை. சிரிக்கும்போது அவருடைய உருவம் மாறுதல் அடைகிறது. ஆனால், அமைதியும் கம்பீரமும் கொண்டிருக்கும் போது அவர் பெருங் கண்ணியமும் பெருமிதம்மிக்க பொலிவும் பெற்று விளங்கினார். கோபங்கொள்ளும்போது மன்னர் கம்பீரத் துடன் விளங்குகிறார்' ('கேம்பிரிட்ஜ் இந்திய வரலாற்றில்' கூறியபடி மான்சரத் அடிகளார், 4ஆம் புத்., பக். 155).

அக்பரிடம் கவர்ச்சிகரமான தோற்றப் பொலிவு இருந்தது. அவரின் பண்புகள் மாண்புடன் விளங்கின. அவரின் வலிமை எவ்வளவு என்றால், அவர் வாள் கொண்டு ஒரே வெட்டில் ஒரு சிங்கத்தின் பிடரியை வெட்டி வீழ்த்த முடியுமாம். விரும்பிய போதெல்லாம் அவர் காலநிலைகளின் அசௌகரியங்களைப் பொருட் படுத்தாமல் எத்தகைய களைப்பையும் இடர்ப்பாடுகளையும் பொறுத் துக்கொள்வார். கடின உழைப்பு அவருக்கு மிகப் பழக்கமா யிருந்தது. அடிக்கடி பல மைல் தூரம் அவரால் நடக்க முடியும். உரையாடுவதில் கள்ளமில்லா உள்ளமும், கவனமாகக் கேட்கும் பண்பும், நகைச்சுவையும் அவரிடம் காணப்பட்டன. பாமர மக்களிடம் அவர் மிகுந்த பரிவு கொண்டிருந்தார். 'அவர்களின் குறைகளை மகிழ்வுடன் கேட்டு, அவர்களுடைய வேண்டுகோள் களுக்குக் கருணையுடன் செவிசாய்ப்பதற்கு அவர் எப்பொழுதும் விரும்பினார்; ஏழை மக்கள் கொடுக்கின்ற சிறிய காணிக்கை களையும் அவர் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு, அவற்றைத் தொட்டுப் பார்த்து, மார்புறத் தழுவி இன்பங் கொள்வார். அதே சமயத்தில் பிரபுக்கள் வழங்குகின்ற அரும்பெரும் பரிசுகளை அவர் கண்களால் ஏறெடுத்தும் பாராதவர்போல் இருந்துவிடுவார்' ('டு ஃபாரிக்' III; 133; ஸ்மித் எழுதிய 'மாமன்னர்அக்பர்' என்ற நூலின் பக். 335).

கண்ணிய புருடர் என்ற முறையில் அக்பரிடம் ஒரு குறையும் காணப்படவில்லை. அவர் கடமையுணர்ந்த மகனாகவும், மன்னிக் கும் மாண்புள்ள சகோதரராகவும், தந்தையாகவும், அன்புள்ள

கனவாளுகவும் விளங்கினர். விசுவாசமுள்ள நண்பன் என்ற வகையில் அவர் தமது நண்பர்களின் நலஞ் சிறக்க ஆவதெல்லாம் செய்வார். அவரது உயிர்த்தோழராகிய அபுல் ஃபாஸல் இறந்த போது, அவர் கதறி அழுது, இரண்டு நாட்களுக்கு உணவையே தொட மறுத்தார். பிற மன்னர்களைப்போல் அக்பர் பல மனைவியர்களைக் கொண்டிருந்தாலும், மனைவியர்களிடம் உண்மையான பற்றுக்கொண்டிருந்தார். மனித இயல்பில் அவருக்கிருந்த பற்றுறுதியின் காரணமாக, வறியவர்களையும் மெலியவர்களையும் காப்பது தம் கடமையென உணர்ந்தார்.

அக்பர் முழங்கால்வரைக்கும் தொங்கிய நீண்ட கோட்டை அணிவது வழக்கம். இந்த ஆடை பொன் இழைகளைக்கொண்டு பட்டினால் புனையப்பட்டிருந்தது. பின்னால் பூவேலைப்பாடுகள், இலைதழை மாதிரிகள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்த இந்த மேலாடையைப் பெரியதொரு கொக்கியினால் இறுக மாட்டிக்கொள்ளலாம். இந்து, முஸ்லீம் பாணிகளை இணைத்த வகையில் இவரது தலைப்பாகை சுற்றப்பட்டிருந்தது. தலைப்பாகை முத்துகளாலும் விலையுயர்ந்த மணிகளாலுல் அழகு செய்யப்பட்டிருந்தது. அவருடைய கால்சட்டை கரண்டைக்கால்வரையில் நீண்டு, முத்து முடிச்சுகளால் கட்டப்பட்டது. அக் காலத்து வழக்கப்படி அவரது இடையில் ஓர் இடைவாள் தொங்கிக்கொண்டிருக்கும்.

உணவில் அக்பர் நிதானப் போக்குள்ளவர். ஆண்டில் ஒன்பது மாதங்களுக்குமேல் அவர் புலால் உண்பதில்லை. ஆனால், இளம் பருவத்தில் அவர் தினமும் புலால் உண்பது வழக்கம். அப்போதும் கூட அவருக்குப் புலால்மீது பற்றுதல் என்பது கிடையாது. பிற் காலத்தில் அவர் புலால் உணவை முற்றிலும் கைவிட்டார். தினமும் ஒருபொழுதுமட்டும் நன்றாக உண்பதுதான் அக்பரின் வழக்கம். ஆனால் அவரது உணவுப் பட்டியலில் பலவிதமான கறி வகைகள் இடம்பெற்றிருந்தன. விரும்பியபொழுதெல்லாம் அவர் மது அருந்தினாலும், அளவோடுதான் குடித்தார். அவருக்குக் கனிகள் என்றால் கொள்ளை ஆசை; ஏனென்றால், அவர் பழங்களை இயற்கையின் கொடைகள் எனக் கருதினர். அக்பரின் ஆதரவிலும் மேற்பார்வையிலும் நாடெங்கணும் பலவகையான கனிகள் பயிர் செய்யப்பட்டன.

தமது முன்னோடிகளையும் வழித்தோன்றல்களையும்போலன்றி, அக்பருக்கு எழுத்தறிவு இருக்கவில்லை. குழந்தையாக இருக்கும் போது அவர் சுற்றித்திரிந்து, கல்வியில் கவனம் செலுத்தவில்லை. அக்பரின் எழுத்தறிவைப்பற்றி அண்மையில் ஒரு சர்ச்சை எழுந்

துள்ளது. சில அறிஞர்கள் அக்பர் முழுவதும் எழுத்தறிவின்றி இருக்கவில்லை என்று கூறுகிருர்கள். ஆனுல், அவர் எழுத்தறிவு பெற்றிருக்கவில்லை என்ற கொள்கைக்குச் சாதகமான சான்றுகள் பெருமளவில் இருப்பதால், அவரை ஓரளவு கற்றறிந்தவர் என்று கூறுவது, அவரது மானத்தைக் காப்பாற்ற மன்ருடுவது போல் இருக்கின்றது. அக்பர் எழுத்தறிவு இல்லாதவர் என்பதற்கு இயேசு சபை குருமார்களாகிய மான்சரத் அடிகளாரும் ஜெரோம் சேவியர் அடிகளாரும் சான்று பகிர்கின்றனர் (J.R.A.S., 1912, 194ஆம் பக்கத்தையும், 1888, 37ஆம் பக்கத்தையும் காண்க). இவற்றைத் தவிர அக்பர் எழுத்தறிவில்லாதவராக இருந்தாலும், பலவகையான சாத்திரங்களைப்பற்றிய அறிவைப் பெற்றிருந்தார் என்றும், அவற்றை விளக்குவதில் அவருக்கு இருந்த திறமையைக் கண்டால் அவரைக் கல்லாதவர் என்று எவரும் கூற முடியாது என்றும் ஜஹாங்கீர் குறிப்பிடுவதும் வன்மையான ஒரு சான்ருகும் (ரோஜர்சும் பெவரிட்ஜும் மொழிபெயர்த்த 'துசுக்கி ஜஹாங்கிரி', முதல் புத்தகம், பக். 33). 'அக்பரின் தூய உள்ளமும் புனிதமான ஆன்மாவும் உலகியல் அறிவில் என்றும் ஈடுபாடு கொள்ளவில்லை; ஆனுல், மகத்தான சாத்திரங்களைப்பற்றி அவர் கொண்டிருந்த அறிவும் எழுத்தறிவைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் காட்டிய விருப்பின்மையும் அன்றைய நாளில் மக்கள் போற்றிய ஆண்டவனைப்பற்றிய உண்மையைக் கற்றறிந்தோ, தன் முயற்சியாலோ பெற்றுக்கொள்ள முடியாதென்பதையும், அது மனிதர்களின் முயற்சிகளுக்கு அப்பாற்பட்ட இறைவனின் அருட் கொடை என்பதையும் காட்டுவதற்கு அரசர் பயன்படுத்திய ஒரு வழியாகும்' என்று அபுல் ஃபாஸல் குறிப்பிடுகிருர் ('அக்பர் நாமா', முதல் புத்தகம், பக். 589). இத்தகைய இடர்ப்பாடுகள் இருந்தாலும், அக்பரை எந்த விதத்திலும் கல்வியறிவில்லாதவர் என்று கூற முடியாது. மறைவியல், இலக்கியம், கவிதை, தத்துவம், வரலாறு, இன்னும் பல அறிவியல்கள் ஆகிய சாத்திரங்களைப்பற்றி அக்பர் பெருமளவில் அறிவு பெற்றிருந்தார். எல்லாவிதமான அறிவுத் துறையிலும் சிறந்திருந்த மேதைகளுடன் கலந்து உறவாடுவதன் மூலமும், நாள்தோறும் பல நூல்களை வாசிக்கக் கேட்டும் அவர் இத்தகைய சிறந்த அறிவைப் பெற்றுக்கொண்டார். அவரது நினைவாற்றல் எவ்வளவு விந்தைமிக்கதாக இருந்ததெனில், அவர் தான் வாசிக்கக் கேட்கும் நூல்களின் உள்ளுறைகளையும் ஆட்சி முறையின் நுணுக்கமான விவரங்களையும் தப்பிதமின்றி நினைவில் வைத்திருந்தார். அவரிடம் சிந்தனைத் தெளிவும் ஆற்ரெழுக்கான பேச்சுநடையும் இருந்தன. அக் காலத்தில் சிறந்திருந்த அறிஞர் பெருமக்களுடன், அவர் தத்துவம், சமயம் ஆகியவற்றின் மிகக் கடினமான பொருள்கள்பற்றி எத்தகைய பேச்சாற்றலுடன்

சர்ச்சை செய்வாரென்ருல், அவரைக் கல்வியறிவு இல்லாதவரென்று யாரும் கற்பனைகூடப் பண்ணமுடியாது.

அக்பர் ஆழ்ந்த கடவுட் பற்றுடையவர். சில வேளைகளில் ஐயப்பாடுகள் அவரை அலைக்கழிப்பதுண்டு. இவற்றை நீக்கிக் கொள்ள அவர் பல நாட்களைப் படிப்பதிலும், சிந்திப்பதிலும், அறிஞர்களுடன் உரையாடுவதிலும் செலவிடுவார். அவர் பல சமயங்களைப்பற்றி ஒப்புநோக்கிக் கற்றிருந்ததால், இஸ்லாம் சமயத்திலுள்ள குறைபாடுகளை அவரால் நன்கு கண்டுணர முடிந்தது. தனது சிறுவயதிலும் இளம் பருவத்திலும் கடைப்பிடித்துவந்த சமயத்தில் அவருக்கிருந்த பற்றுறுதியை அவர் இழந்துவிட்டாரென்ருலும், அவர் சமயத்தில் தொடர்ந்த பற்றுக்கொண்டிருந்தார். நீண்ட நேரம் பிரார்த்தனைகளில் செலவிட்டு, தினந்தோறும் காலை, பகல், மாலை, இரவு ஆகிய நான்கு வேளைகளிலும் அவர் பிரார்த்தனை செய்வார். இதுமட்டு மன்றி, அவரது வாழ்க்கை முழுவதும் உண்மையினை நாடிச் செய்யப் பட்ட ஒரு சத்திய சோதனை என்றே சொல்லவேண்டும். கடவுளுக் கும் மனிதனுக்கும் உள்ள உறவு முதலிய பொருள்கள்பற்றிய மறைபொருள் ஆராய்ச்சிகள் அவரை மிகவும் கவர்ந்தன. எல்லாம் வல்ல இறைவன்பால் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுறுதியை அவருடைய இன்மொழிகள் காட்டுகின்றன. 'இயற்கை சூனியமான ஓர் இடம் இருக்க முடியாது என்பதைச் சொல்லத் தேவையே இல்லை. ஏனென்ருல், கடவுள் எங்கும் நிறைந்திருக்கிருர்' என்று அவர் அடிக்கடி சொல்வார்.

'படைத்தவனுகிய கடவுளுக்கும் படைப்புப் பொருளாகிய மனிதனுக்கும் இடையே ஒரு பிணைப்பு இருக்கின்றது. இதனைச் சொற்களால் விவரித்துக் கூறமுடியாது.'

'ஒவ்வொருவனும் அவனது நிலைக்கு ஏற்பப் பரம் பொருளைப் பெயர் சொல்லி அழைக்கிருன். ஆனுல், உண்மையில் அறிந்துகொள்ள முடியாத கடவுளுக்குப் பெயர் சூட்டுவது வீண்.'

ஆனுல், அபுல் ஃபாஸல் நம்மை நம்பச்செய்ய முனைவதுபோல், அக்பர் குறையற்ற மனிதர் அல்லர். அவரது தனி வாழக்கையில் ஒரு குறைபாடும் இருக்கவில்லை என்று கூறிவிட முடியாது. அரண்மனைகளில் வாரந்தோறும் நடந்த 'மினு பசார்' என்ற விழாக் களில் அக்பர் அழகிய பெண்களை ஆவலோடு தேடி அலைந்தார் என்ற செய்தியும், பிகானிர் நாட்டு பிருதிவிராஜ் ராதாரின் வீர மனைவியுடன் அக்பர் தவருக நடந்துகொண்டதால் அவள் தன்னைக்

காத்துக்கொள்ள வாளை உருவினுள் என்ற கர்ணபரம்பரைக் கதையும் பிற்காலத்தில் புலவர்களின் கற்பனையினுல் எழுந்த புனைகதைகள். உண்மையில் அவற்றிற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. அக்பர் சிந்தனையாலும் செயலாலும் கட்டுமீறிய ஒழுக்கக் கேடுள்ளவர் அல்லர் என்ருலும், அவர் இளவயதில் மனைவிமார் சம்பந்தப்பட்ட வகையில் சிறிது இளக்காரமாகவே நடந்துகொண்டார். அவரது அந்தப்புரத்தில் 5,000 பெண்கள் இருந்தனர். அங்கிருந்த பெண் உறவினர்கள், பணியாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கையைத் தள்ளிவிட்டாலும்கூட, அவரது மனைவியர்களின் தொகை ஓரளவு அதிகமாகவே இருந்திருக்க வேண்டும். இந்த வகையில் அக்பர், அவரது காலத்தின் தரத் திற்கு உயர்ந்தவராக இருக்கவில்லை. அவர் மதுவை முற்றிலும் துறந்துவிடவுமில்லை. வஞ்சகமாக நடந்துகொள்வதிலும் அவருக்கு நல்ல பரிச்சயம் இருந்தது. சில வேளைகளில் அவர் பொறுமை இழந்து, கோபவெறிச் செயல்களுக்கு அடிமையாகி, குற்றத்திற்குப் பொருந்தாத கொடூர தண்டனைகளையும் வழங்கி விடுவார். ஆனுல், இத்தகைய தவறுகள் எப்போதும் நிகழவில்லை. அதுவும் இவை சிறிது நேரத்திற்குமட்டுமே நீடிக்கும். ஆனுல், அக்பர் நிதானத்தின் பெருமையை அறிந்தவர். எனவே, அவர் வெறி யுணர்ச்சிகளுக்கோ, அல்லது எந்தவிதமான குறைகளுக்கோ பலி யாகிவிடவில்லை என்று சொல்வதுதான் நீதியானது.

அக்பர் பெருவீரரும் படைத்தலைவருமாக இருந்ததால், அவரிடம் அசாதாரணமான வீரமும் உடல் வலிமையும் காணப்பட்டன. அவரிடம் காணப்பட்ட உலைவிலாப் பொறுமை உணர்ச்சி காரண மாக அவரால் காலநிலைகளின் சிரமங்களையும் பிற இடர்ப்பாடுகளை யும் சகித்துக்கொள்ள முடிந்தது. பலர் இத்தகைய தாங்கும் சக்தி இன்மையால் துன்பங்களில் மூழ்கிவிடுவார்கள். தன்முனைப்பும், மிக உயர்ந்த வகையான நிர்வாகத் திறமையும், கவர்ச்சிகரமான தோற்றப் பொலிவும் அவரிடம் விளங்கியதால், அவர் தனது படை வீரர்களிடம் எளிதாகக் கட்டுப்பாட்டைப் புகுத்தி, அவர்களைப் பல வெற்றிகளைப் பெறுமாறு வழிநடத்த முடிந்தது. எனவே, அவ ரது படைத்திறம் தோல்வியே காணுத வெற்றி வாழ்விற்கு அவரை இட்டுச் சென்றது. ‘அரசன் வெற்றி பெறுவதில் கண்ணும் கருத்து மாக இராவிட்டால், அவரது அண்டை நாட்டார்கள் அவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வார்கள். அவரது படைவீரர்கள் எப் போதும் போரில் ஈடுபட்டுக்கொண்டே யிருக்கவேண்டும்; இல்லா விடின், போர்ப் பயிற்சி இல்லாத காரணத்தால் வீரர்கள் சோம் பேறிகளாகிவிடுவார்கள்’ என்பது அக்பரின் விருது மொழியாகும். இவ்வாறு அவர் வலியத் தாக்கி வெற்றி கொள்ளும் வன்முறைக்

கொள்கையில் பற்றுக்கொண்டிருந்தார். அவரது படையமைப்பு முறை குறையற்றதொன்றாகும். அவர் பயன்படுத்திய போர் முறையும், நமது மக்களின் இயல்பான திறமைகளுக்கும் அவர் வாழ்ந்த காலத்துக்கும் ஏற்றதாய் இருந்தது.

இந் நூலின் வேறு பகுதியில் கூறப்பட்டதுபோல் அக்பர் இறைமைக் கொள்கையில் சில தீவிர மாற்றங்களைச் செய்தார். இறைமைக்கு இஸ்லாம்தான் அடிப்படை என்ற கொள்கையை உதறித்தள்ளிய முதல் இடைக்கால இந்திய அரசர் அக்பரே. சாதி, சமயம், இனம் முதலிய வேறுபாடுகளைக் கடந்து, அரசன் தனது குடிமக்களின் தந்தையாக இருக்கவேண்டும் என்ற கொள்கையை வகுத்த முதல் மன்னரும் அவர்தான். இவ்வாறாக, அக்பர் பண்டைய இந்தியக் குறிக்கோளுக்குப் புத்துயிர் தந்து, ஆள்கிறவருக்கும் ஆளப்படுவோர்களுக்கும் இடையே இருந்த பிளவை இணைக்க மனப்பூர்வமானவொரு முயற்சியை எடுத்துக் கொண்டார். 'ஓர் இந்தியா' என்ற கனவைக் கண்டு, அதனை உண்மையாக்கக் கடினமாக உழைத்தார். அவர் வெறும் அரசியல் ஒற்றுமையால் நிறைவு பெற்றுவிடவில்லை. ஆனால், அரசியல் ஒற்றுமையை, கலாசார, சமூக, பொருளாதார ஒற்றுமைகளி னாலும், கூடுமானால் சமய ஒருமைப்பாட்டினாலும் வலுப்படுத்த விழைந்தார். இதைவிட உயர்ந்த நோக்கங்களால் உந்தப்பட்ட வேறு அரசர்களை அந்த யுகத்தில் காணுதல் அரிது.

ஆட்சித்துறை நிபுணர், அரசியல் வல்லுநர் என்ற முறையில் அக்பர் ஒப்பாரும் மிக்காரும் அற்றவர். அவர் ஓர் ஆக்கச் சார்பான மாமேதை. ஆட்சித்துறையின் பொதுவான மூலக் கொள்கைகளைப்பற்றிய அறிவையும், அரசின் பல துறையின் பல நுணுக்கமான விவரங்களின் புலமையையும் இணைக்கின்ற அரிய ஆற்றல் அவரிடம் காணப்பட்டது. மக்களின் இயற்கை ஆற்றல்களுக்கும், குறிப்பிட்ட அவசர காலத் தேவைகளுக்குமேற்ப பொருத்தமான புதிய ஆட்சித்துறை ஏற்பாடுகளைப் புகுத்துவதில் அவருக்குச் சிறப்பான திறமை இருந்தது. காலத்துக்கு ஒவ்வாதன வும் தீமை பயக்கக்கூடியனவுமான வழக்கங்களை நீக்கிவிடும் தைரியம் அவருக்குண்டு. இவை மரபொழுக்கங்களாலும், காலத் தின் தேவைகளாலும், சமயத்தாலும் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் கூட, அவர் அவற்றை நீக்கிவிடுவதற்கு அஞ்சவில்லை. புனிதக் குரானில் கூறப்பட்ட இறைமைக் கொள்கையைப் புறக்கணித்ததும், பல நூற்றாண்டுக் காலமாகச் சமய ஆணை பெற்று அமலில் இருந்து வந்த யாத்திரிகர் வரி, ஜிஸ்யாபோன்ற வரிகளை நீக்கியதும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். அசாதாரணமான திறமையும் மிக

வன்மையான குணவியல்பும்கொண்ட அரசர் ஒருவர்தான் இஸ்லாமியத்தை அரசின் அதிகாரபூர்வமான சமயம் என்ற நிலையிலிருந்து கீழிறக்குகின்றதைப்பற்றியும், முழுச் சமயப் பொறையும் சகல சமயங்களுக்கும் சமநிலையும் வழங்குவதைப் பற்றியும் சிந்தித்திருக்க முடியும். சுருங்கக் கூறின், அக்பர் அறிவாற்றலும் மனவலியும்கொண்ட ஓர் ஆட்சியாளரும் அரசியல் நுண்ணறிவாளருமாவார். காலத்தின் தேவைகளுக்கும் தனது குடிமக்களின் நலத்துக்கும் ஏற்றவாறு அரசின் அடிப்படையையே மாற்றியமைத்த அரசியல் மேதை அவர்.

அக்பர் உண்மையாகவே ஒரு தேசீய அரசர். அவரின் இறைமைக் கொள்கை அனைத்துலகப் பண்புடையதென்றும், தேசீய நோக்குடையதன்றென்றும் டாக்டர் R. P. திரிபாதி அவர்கள் கருதுகிறார்கள். அக்பரின் முன்னோர்கள் ஆண்டுவந்த பர்கானு நாடு உள்ளிட்ட மைய ஆசியா முழுவதையும் வென்று தன் பேரரசில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று அக்பர் கொண்டிருந்த ஆவலே மேற்கூறிய கொள்கைக்கு அடிப்படையாகும். பலதரப்பட்ட இனப்பிரிவுகளைச் சேர்ந்த மக்களைக்கொண்ட ஒரு கலப்பு நாட்டின்மீது, அனைத்துலக அரசுக் கொள்கை என்றவொரு குறிக்கோளைக் கடைப்பிடிக்காமல் மேலாண்மை செலுத்துவதென்பது முடியாத காரியம் என்பது ஆசிரியரின் கட்சியாகும். அக்பர் என்ன செய்திருப்பார் அல்லது செய்யாமல் இருந்திருப்பாரென்பது ஊகத்திற்கு விடப்படவேண்டியதொன்றாகும். எது எப்படி இருந்திருக்கவேண்டுமென்பது நமது அக்கறை இல்லை. இந்தியாவுடனும் அதன் கலாசாரத்துடனும் அக்பர் இரண்டறக் கலந்து செயலாற்றினார் என்பதும், நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நலங்களை முன்னேற்றத் தன்னால் இயன்றதைப் பெரும் அளவில் செய்தார் என்பதும் உண்மை. இந்திய இனத்தையும், இந்தியாவின் பெரும்பான்மையான மக்கள் பின்பற்றும் சமயத்தையும் சேர்ந்த ஒருவர் எவ்விதம் நடந்துகொள்வாரோ அவ்விதமே அக்பர் நடந்துகொண்டார். ஒரே இந்தியா என்பது அக்பர் கண்ட கனவு. அரசியல் வெல்திறத்தாலும் வெற்றிகளாலும் வட இந்தியா முழுவதையும், தக்காணத்தில் ஒரு பகுதியையும் அக்பர் ஓர் அரசின்கீழும் அரசியல் முறையின்கீழும் கொண்டுவந்தார். சந்திரகுப்த மௌரியர், சமுத்திரகுப்தர் போன்றோரின் பேரரசில் இருந்த மாநிலங்களெல்லாம், அரசர்மேல் கொண்ட பற்றுறுதி என்ற ஒரே ஒரு தொடர்பினால் மட்டும் பிணைக்கப்பட்டிருந்தன. அதன் மக்கள் வேறுவிதப் பிணைப்பு இல்லாத ஒரு மனிதக் கூட்டமாகமட்டும் வாழ்ந்தனர். இவ்விதமாகவே அல்லாவுதீன் கில்ஜி, முகமது துக்ளக் போன்ற டெல்லி

சுல்தான்களின் ஆட்சியிலும் மாநிலங்களின் நிலைமை இருந்தது. ஆனால், அக்பரோ தனது பேரரசில் இருந்த எல்லா மாநிலங்களிலும் ஒரேவிதமான ஆட்சிமுறையையும், நிலவரித் திட்டத்தையும், நாணய முறையையும் நிறுவினார். மாநிலங்களின் அதிகாரிகளுக்கும் ஒரேவிதமான பட்டங்கள் வழங்கப்பட்டன; அவர்கள் ஒரே பணித்துறையில் பணிபுரிந்தனர். படைவீரர்களும் அதிகாரிகளும் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றப்பட்டனர். இதனால் அரசியலிலும் ஆட்சித்துறையிலும் மிக உயர்ந்த வகையான ஒற்றுமையை நிறுவ முடிந்தது. இரண்டாவதாக, பாரசீக மொழியை ஆட்சி மொழியாக்கி அதனை எல்லா அரசாங்க அதிகாரிகளும் கட்டாயம் கற்கவேண்டுமென்று விதித்ததாலும், அந்த மொழியில் சமயச் சார்புள்ள, சமயச்சார்பற்ற இந்து-முஸ்லிம் சிறந்த சிந்தனைகளை (மொழிபெயர்ப்புகள் அல்லது மூலநூல்களாக) ஆக்கித்தந்ததன்மூலமும் அக்பர் ஒருவகையான பண்பாட்டு ஒற்றுமையையும் வளர்த்தார். அவரது தலைநகரில் இருந்த மொழிபெயர்ப்புத் துறை வேதங்கள் பல்வேறு அறிவியல்களைப்பற்றிய சிறந்த வடமொழி நூல்கள் போன்ற பண்டைய மறைநூல்களையெல்லாம் பாரசீக மொழியில் ஆக்கியது. இதுபோலவே, அரபி, துருக்கி கிரேக்க மொழிகளின் சிறந்த நூல்களும் பாரசீகத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. நமது மக்களின் மேல்வகுப்பாருக்கும் நடுத்தரத்தாருக்கும் வேண்டிய பொதுவான இலக்கியங்களைத் தருவதற்காகவே இத்தகைய படைப்புகள் உருவாக்கப்பட்டன. மேலும், கட்டடக் கலை, இசை, ஓவியம் போன்ற சிறந்த நுண்கலைகளும் தேசீயமயமாக்கப்பட்டு, இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பொதுவுடைமையாக்கப்பட்டன. மூன்றாவதாக அக்பர், இந்திய சமூகத்திலிருந்த சில தீமைகளை நீக்கி அதனை வலுப்படுத்துவதற்கு முயன்றார். சதி, பாலிய திருமணம், வயோதிகத் திருமணம் முதலியவற்றை அவர் தடை செய்ய முயன்றார். விபசாரத்தில் ஈடுபட்டவர்மீது கண்டிப்பாக இருந்து, அவர்களைத் தனியே பிரித்துவைத்தார். இதுபோலவே கசாப்புக் கடைக்காரர், வேடுவர்கள், பிணங்களைக் கழுவுவோர் முதலியவர்களை நகரத்திற்கு வெளியே தங்குமாறு ஏற்பாடு செய்தார். பன்னிரண்டு வயதாவதற்கு முன்னர் சுன்னத் செய்து கொள்ள அவர் அனுமதிக்கவில்லை. முஸ்லீம் மதத்திற்கு வந்தவர்கள் விரும்பினால் மீண்டும் தங்களது பழைய சமயத்தில் சேர்ந்து கொள்ளவும் அவர் அனுமதித்தார். நான்காவதாக, நாட்டின் பொருளாதார வளத்தை அதிகரிப்பதற்காக, அக்பர் வணிகத்தையும் தொழிலையும் ஒழுங்குபடுத்தினார். பலவகையான உற்பத்தித் தொழில்கள் உருவாகின. பிற நாட்டுத் தூதுவர்களும் பிரயாணிகளும் கண்டு அதிசயிக்கும் வகையில் நாடு பொருளாதார

முன்னேற்றம் அடைந்தது. இறுதியாக, அக்பர் தமது பேரரசில் இருந்து பல்வேறு சமயங்களினிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்த முயன்றார். இதன்மூலம் குறுகிய சமய வெறிகள், சமயப் பிரிவினைகள், பூசல்கள் முதலியவற்றை ஒழிக்கவேண்டுமென்பது அவரது கருத்தாகும். இந்த உன்னதமான பணியில் அவர் வெற்றிபெறவில்லையென்றாலும், அவரது மக்களில் பெரும்பாலோரின் நன்றியையும், தேசிய மன்னர் என்ற பட்டத்தையும் அவர் பெற்றுக் கொண்டார்.

வரலாற்றில் அக்பருக்குள்ள இடம்

அக்பருடைய குறிக்கோள், நெறி, இயற்கை ஆற்றல்கள், குணவியல்பின் ஆக்கம், நிலைபேறுடைய சாதனைகள் ஆகிய யாவும், மனித வரலாற்றின் ஆட்சியாளர்களிடையே அவருக்கு மிக உயர்ந்ததோர் இடத்தைப் பெறுவதற்கான தகுதியைக் கொடுக்கின்றன. அவரது சிறந்த நாட்டுப்பற்றும், அறிவாக்கமான மேம்பாடும் மட்டுமே இடைக்கால இந்தியாவின் பிற அரசர்களுக்குப் பன்மடங்கு மேலாக அவரது தகுதியை உயர்த்தியுள்ளன. ஆனால், அக்பரை வெறும் இலட்சியவாதி அல்லது கனவுலக சித்தாந்தி என்று மட்டும் கருதுவது தவறாகும். உண்மையில் அவர் ஒரு செயலாக்க வீரர். கனவுலகத்திலே எப்போதும் சஞ்சரித்துக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, சந்தர்ப்பங்களுக்கு ஏற்பச் செயலாற்றுதல் என்ற வன்மையான அடித்தளத்தின்மீது ஊன்றி நின்று, காலம் தரும் சவால்களை நேருக்குநேர் நின்று எதிர்த்துத் தாக்குகின்றவர். இதனால்தான் அவர் பல நிலைபேறுடைய சாதனைகளை நிறைவேற்றிப் பெருமையடைய முடிந்தது. இவ்வாறு அவரிடம் நடைமுறைச் செயலாக்கமும் இலட்சியமும் கலந்திருந்ததால்தான், அவர் இந்தியாவை ஆண்ட முஸ்லீம் அரசர்களின் வரிசையில் முதலிடத்தைப் பெற முடிந்தது. மேலும், இந்திய நாடு தோற்றுவித்துள்ள இந்து முஸ்லீம் அரசர்களில் மிக முக்கியமானவர்களிலும், அதிக வெற்றிச் சிறப்புடையவர்களிலும் அவர் முன்னணியில் இருக்கவும் முடிகிறது. அக்பர் ஆண்ட காலம் மாமன்னர்களின் யுகமாகும். ஆங்கில நாட்டின் எலிசபெத் அரசியாரும், ஃபிரான்ஸ் நாட்டின் நான்காவது ஹென்றி மன்னரும், பாரசீகத்தை ஆண்ட மாமன்னர் அபாஸும், அக்பரது காலத்தைச் சேர்ந்தவர்கள். அக்பர் எந்த வகையிலும் இவர்கள் யாவரையும் விட மிகச் சிறந்தவராக இருந்தார். 'அக்பர் மனிதர்களை ஆளப் பிறந்த பிறவி மன்னன். வரலாறு கண்ட பேரரசர்களின் வரிசையில் இடம்பெற அவருக்கு நியாயமான உரிமை உண்டு' என்று வரலாற்று அறிஞர் ஸ்மித் கூறுவது மிகவும் உண்மையாகும்.

மேலும் படித்தற்குரிய நூல்கள்

தொடக்கச் சான்றுகள்

(a) பாரசீகம்

(1) 'Akbarnama' by Abul Fazl in 3 vols., translated into English by H. Beveridge. Bibliotheca Indica Series of R.A.S. Bengal.

(2) 'Ain-i-Akbari' by Abul Fazl in 3 vols., translated into English, vol. I by Blochmann, vols., II and III by Jarrett and revised and corrected by Sir Jadunath Sarkar, 2nd edition, R.A.S. Bengal.

(3) 'Muntakhab-ut-Tawarikh', vols. II and III by Abdul Qadir Badayuni, translated into English-vol. II by W. H Lowe and vol. III by Woolseley Haig. R.A.S. Bengal.

(4) 'Tabqat-i-Akbari' by Nizamuddin Ahmad in 3 vols., translated into English by B. De, R. A. S. Bengal.

(5) Tarikh-i-Farishta by Hindu Beg Farishta (N. K. Press, Lucknow), translated by Lt.-Col. Briggs.

(b) Europeon Languages

(1) 'Monegolicae Legationis Commentarius' (Latin) by Fr. Anthony Monserrate (Published in the Memoirs of the Asiatic Society of Bengal), translated into English by J. S. Hoyland, 1922.

(2) Travels of Ralph Fitch (1583-91) and Fohn Mildenhall (1529-1606) in Early Travels in India, edited by W. Foster, 1921.

(3) 'De Imperio Magni Moglis, etc.' by De Laet, translated into English by J. S. Hoyland (Taraporewala, Bombay).

Modern Works:

(1) Azaa, M. Husain: 'Durbar-i-Akbari' (Urdu), Lahore, 1898.

(2) Aziz Abdul: 'Mansabdari System' (Lahore).

(3) Binyon, L: 'Akbar' 7932.

(4) Haig W: 'Cambridge History of India', vol. IV.

(5) Hasan Ibn: 'The Central Structure of the Mughal Empire', 1936.

(6) Irvine, W: 'Army of the Indian Moguls, 1903'.

(7) Maclagan, E: 'Fesuits and the Great Mogul, 1932'.

(8) Malleson, G. B.: 'Akbar (Rulers of India Series)' 1890.

(9) Modi, J. J.: 'Parsees at the Court of Akbar, 1903'.

(10) Moreland, W. H.: 'India at the death of Akbar', (1920).

(11) Moreland, W. H.: 'Agrarian System of Moslem India, 1929'.

(12) Noer Gount Von: 'Kaiser Akbar', vols. I and II, 1880 and 1885.

(13) Ojha, O. H.: 'Rajputana ka Itihas' (Hindi).

(14) Saran, P.: 'The Provincial Govt. of the Mogul,' 1919.

(15) Smith, V. A.: 'Akbar the Great Mogul', 1919.

(16) Tod. J: 'Annals and Antiquities of Rajasthan'.

(17) Tripathi, R. P.: 'Some Aspects of Muslim Administration', 1946.

ஜஹாங்கிர் (1569—1627)

இளமைப் பருவம், 1569-1605

பிரார்த்தனைகள் பலவற்றின் பயனாகப் பிறந்தவர் ஜஹாங்கீர். தம் இள வயதில் பல குழந்தைகளை இழந்துவிட்ட அக்பர், தமக்குப் பின்னர், தமது பரந்த பேரரசை ஆளுவதற்கு வாரிசாக ஒரு குழந்தையாவது வாழவேண்டுமென்று பெரிதும் ஆவல் கொண்டார், அவர் இறைவனிடம் இரந்து வேண்டினார்; தூய திருத்தொண்டர்களின் ஆசியை நாடினார்; ஆஜ்மீரிலுள்ள குவாஜா முனியுதீன் சிஸ்தி என்ற புனிதரின் சமாதிக்குக் கால்நடையாக யாத்திரை சென்றார். இன்னும் அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த பல பெரியார்களைச் சென்று கண்டார். இறுதியாக பாதேபூர் சிக்ரியின் ஷேய்க்சலீம் சிஸ்தி என்பார் அவருக்கு மூன்று ஆண் மக்கள் பிறப்பார்கள் என்று வாக்குறுதி கொடுத்தார். 1569ஆம் ஆண்டின் தொடக்கத்தில், அக்பரின் இராஜபுத்ர மனைவியாகிய ஜெய்ப்பூர் இளவரசி மிரியம்–உஸ்–ஸாமானி அம்மையார் கருவுற்றபோது அக்பர் அவளை ஷேய்க் சலீமின் ஆசிரமத்திற்கு அனுப்பிவைத்தார். அங்கே 1569ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 30ஆம் நாளில் அவர் ஓர் ஆண் மகவை ஈன்று, ஷேய்க்சலீமின் நினைவாக, அதற்கு சுல்தான் முகமது சலீம் என்ற பெயரையும் சூட்டினார்கள். ஆனால், அக்பர் குழந்தையை ஷேய்கு பாபா என்றழைத்தார். அரசரும் ஆஜ்மீருக்குக் கால்நடையாகச் சென்று, குவாஜா முனியுதீன் சிஸ்தியின் சமாதியில் அவருக்கு அஞ்சலி செய்வதாக எடுத்துக்கொண்ட உறுதி மொழியையும் நிறைவேற்றி வைத்தார். குழந்தையை வெகு கவனத்துடனும் அன்புடனும் வளர்த்து வந்தார்கள். அவன் வளர்ந்துவந்தபோது, புதுத் தலைநகரான பாதேபூர் சிக்ரியில் சலீமின் கல்விக்காக ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டன. இங்குத்தான் அக்பர் வானுற வளர்ந்தவொரு மாளிகையையும், அதனைச் சுற்றிப் பல பிரமாண்டமான கட்டடங்களையும் நிறுவியிருந்தார். 1573ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28ஆம் நாளில் சலீமின் பள்ளி செல்லும் சடங்கு நடத்தப்பெற்றது. இளவரச

ருக்கு பாரசீகம், அரபு, துருக்கி, இந்தி ஆகிய மொழிகளையும், கணிதம், வரலாறு, புவியியல் இன்னும் பல அறிவியல்களும் கற்றுக் கொடுக்க ஒருவர் பின் ஒருவராகப் பல திறமையுள்ள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால், இளவரசரைப் பெருமளவில் ஆட்கொண்டு, அவரது சிந்தனைகளை உருவாக்கியவர் அப்துர் ரஹீம் கான் கானு என்பவர். கருவிலே திருவுடைய இந்தப் பேரறிஞர், அரபு, துருக்கி, பாரசீகம், வடமொழி, இந்தி ஆகிய மொழிகளில் சிறந்த புலமை கொண்டிருந்ததோடு, பெரு வீரராகவும், உயர்ந்த தரமான அரசியல் நுண்ணறிவாளராகவும் திகழ்ந்தார். இவரது மேற்பார்வையில், சலீம் பாரசீகமொழியில் சிறந்த தேர்ச்சிபெற்ற தோடு, துருக்கி, இந்தி ஆகிய மொழிகளையும் கற்றுக்கொண்டார். பாரசீகக்கவிதைகளைப் புனையவும், இந்திப்பாடல்களைச் சுவைக்கவும் சலீம் கற்றுக்கொண்டார். வரலாறும், புவியியலும் அவருக்குக் கற்பிக்கப்பட்டன. தவிரவும், தாவரவியல், உயிரியல், இசை, ஓவியம், இன்னோரன்ன நுண்கலைகளிலும் அவர் ஆர்வம் கொண்டார். உடற்பயிற்சிக் கலையும், படைப்பயிற்சியும் புறக்கணிக்கப் படவில்லை. உடற்பயிற்சிகள் செய்யவும், படைக்கலன்களைப் பயன் படுத்தவும் அவருக்குக் கற்பிக்கப்பட்டது. நாளடைவில் அவர் குறிபார்த்துச் சுடுவதிலும் வேட்டையாடுவதிலும் நல்ல திறமை பெற்றார்.

அக்காலத்திய வழக்கப்படி, இள வயதிலேயே சலீமுக்குப் படைத்துறை ஆட்சியில் பங்கு கொடுக்கப்பட்டது. 1581-ல் நடந்த காபூல் படையெடுப்பில், சலீமின் பொறுப்பில் ஒரு படை நிர்வாகம் கொடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அவர் தாமே பல படையெடுப்புகளை நடத்திச் செல்கின்ற பொறுப்பை மேற்கொண்டார். இதைப்போலவே சிவில் ஆட்சித் துறையிலும் அவருக்குப் பயிற்சி வழங்கப்பெற்றது. 1577-ல் சலீம் 10,000 வரிசையுடன் அரசாங்கப் பணியில் உயர்வு பெற்றார். 1585-ல் அவரது தகுதி 12,000 வரிசையாக மேலும் உயர்ந்தது.

சலீமுக்குப் பதினைந்து வயதானபோது, அவரது உறவினராகிய, ஆம்பர் நாட்டு இராஜா பகவன்தாஸின் மகளான மான்பாய் என்பவரைத் திருமணம் செய்ய முடிவு செய்து, 1585ஆம் ஆண்டு, பெப்ரவரித் திங்கள் 13ஆம் நாளில் அவர்களுடைய திருமணம் நிறைவேறியது. திருமணச் சடங்கு இந்து-முஸ்லீம் முறைகளின்படி நடத்தப்பட்டது. பகவன்தாஸ் தம் மகளுக்குப் பெருந்தொகையைச் சீதனமாகக் கொடுத்தார். இந்தத் திருமணத்தின் விளைவாகப் பிறந்த குழந்தைதான் அவப்பேறுடைய குஸ்ரு என்பவன். இவன் போராட்டமிக்கதொரு வாழ்வைக் கண்டு,

பரிதாபத்துக்குரிய வகையில் மாண்டுபோனான். ஜஹாங்கீர் மனைவி மான்பாயிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். அவளுக்கு ஷா பீகம் என்ற பட்டத்தை அவர் வழங்கினார். ஆனால், தமது மகனான குஸ்ரு, ஜஹாங்கீரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த நடத்தை கண்டு மனமுடைந்து மான்பாய் 1604-ல் தற்கொலை செய்து கொண்டாள். இந்த நிகழ்ச்சி ஜஹாங்கீரை எவ்வளவு தூரம் பாதித்ததென்றால், நான்கு நாட்களாக அவர் எந்த உணவைத் தொடவும், நீர் முதலாயவை அருந்தவும் மறுத்துவிட்டார். மான்பாய் உயிரோடிருந்த காலத்திலேயே, இளவரசர் பல மனைவியர்களை மணந்துகொண்டார். இவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவள் ஜகத் கோஸேன், அல்லது ஜோதாபாய் என்பவள். இவள் மோட்டா இராஜாவான உதயசிம்மரின் மகள். பின்னர் ஜஹாங்கீரின் அந்தப்புரத்தில் இருந்த பெண்களின் எண்ணிக்கை எண்ணூறாக உயர்ந்தது. மிக இளவயதிலேயே அவர் மது அருந்தப் பழகியிருந்தார். இப்போது இன்னும் பல சிற்றின்ப வேட்கைகளில் அவர் ஈடுபடலானார்.

சலீமின் கிளர்ச்சி, 1599-1604

சலீமின் நெறி கெட்ட வாழ்க்கையும், மதுவுண்ணும் பழக்கமும், இன்னும் பல இழிந்த சிற்றின்ப நாட்டங்களும் அக்பருக்குக் கோபத்தை மூட்டின. அக்பர் அறிவுரைகள்மூலமும், தண்டனைகள் வழங்குவதாக அச்சுறுத்தியும் சலீமைச் சீர்திருத்த முயன்றார். ஆனால், சலீம் தந்தையின் உரிமைகளையும் அரியணையையும் அவர் காலமாவதற்கு முன்னரே பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆவலினால் தூண்டப்பட்டதால், தந்தைக்கும் மகனுக்கும் இடையே இருந்த பிணக்கு\மேலும் விரிவடைந்து வந்தது. அவர்களிடையே நிலவிய மனப்புழுக்கத்தின் காரணம் அக்பரின் இஸ்லாமிய சமயத் துறப்பும். சலீமின் இஸ்லாமிய சமயப்பற்றும் எனச் சில வெளிநாட்டு எழுத்தாளர்கள் கருதுகிறார்கள். 1591-ல் அவர்களுக்குள் முதல் பிணக்கு ஏற்பட்டது. அக்பர் பிணியுற்றிருந்தகாலை, அவரை நஞ்சிட்டுக் கொல்ல முயன்றதாக சலீமின்மீது ஐயம் ஏற்பட்டது. இந்த ஐயத்திற்கு ஆதாரம் இருக்கவில்லை. 1595-ல் அக்பர், காண்டேஷ் நாட்டை மீண்டும் கைப்பற்றும்படி தக்காணத்தின்மீது படையெடுத்தபோது, மீவார் மன்னரான ராணா அமரசிங்கரைத் தாக்கும்படி அக்பர் சலீமுக்கு ஆணையிட்டார்; ஆனால், மீவாருக்குச் செல்வதற்குப் பதிலாக, இளவரசர் ஆஜ்மீர் பக்கம் சுற்றியலைந்துவிட்டு, பேராசையினாலும், கெட்ட நண்பர்களாலும் தூண்டப்பட்டு, தந்தைக்கு எதிராக வெளிப்படையாகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார். ஒரு கோடி ரூபாய் ரொக்கத் தொகையைக் கைப்பற்றியும்,

அதுகாலை இறந்துபோன சபாஷ்கான் காம்போ என்பாரின் சொத்துகளை எடுத்துக்கொண்டும், மிகுந்த பொருள் பலத்துடன், ஆக்ரா கோட்டையில் சேமிக்கப்பட்டிருந்த இரண்டு கோடி ரூபாய் களுக்கு அதிகமான மதிப்புடைய பெருஞ் செல்வத்தையும் கைப் பற்றிக்கொள்ளும் எண்ணத்துடன், ஆக்ராவை நோக்கி விரைந் தார். ஆனால், இந்த முயற்சி வெற்றிபெறவில்லை; ஆகையால், சலீம் யமுனையைக் கடந்து, அலகாபாத்துக்குச் சென்று, அங்கே தமது அரசவையை நிறுவிக்கொண்டார். பீஹாரின் ஒரு பகுதியையும் தமது ஆதிக்கத்தில் சேர்த்துக்கொண்டு, தம்மை சுயேச்சையான அரசரென ஆக்கிக்கொண்டார். பீஹாரின் கருவூலத்திலிருந்த முப்பது இலட்சம் ரூபாய்களைக் கையாடி, அவரது அதிகாரத்தின் கீழிருந்த அந்தப் பகுதியை ஆளும்படி ஓர் அதிகாரியையும் ஏற் படுத்தினர். அஸிகாரில் இருந்த அக்பருக்கு, சலீமின் கிளர்ச்சி யைப்பற்றிய செய்தி எட்டியவுடன், சலீமின் விளையாட்டுத் தோழரும், நண்பருமான குவாஜா முகமது ஷாரிஃப் என்பவரை சமரசத் தூதுவராக அவர் அனுப்பிவைத்தார். ஆனால், சலீம், ஷாரிஃபைத் தம் வயப்படுத்திக்கொண்டு, அவரைத் தமது முதல் அமைச்சராக்கிக்கொண்டார். மேற்கூறிய நிகழ்ச்சிகளின் விளை வாக, அக்பர் அஸிகார் முற்றுகையை நிறுத்திவிட்டு, 1601ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் ஆக்ராவிற்குத் திரும்பி வரவேண்டிய தாயிற்று. இந்நிலையில் சலீம் 30,000 வீரர்களைக் கொண்ட படையுடன், வழியெங்கணும் நாடுகளைக் கொள்ளையடித்துக் கொண்டும், தமது நோக்கம் தந்தைக்கு மரியாதை செய்வதே என்று பறைசாற்றிக்கொண்டும், ஆக்ராவை நோக்கிப் புறப்பட் டார். தமது ஆதரவாளர்களையெல்லாம் விலக்கிவிட்டு, உடனே அலகாபாத்துக்குத் திரும்பும்படி அக்பர் சலீமுக்குப் பணித்தார். தமது முயற்சி தோற்றுவிட்டதையும், அரசர் வன்முறையைப் பயன்படுத்துவார் என்ற அச்சத்தையும் கண்ட சலீம், தாம் தந்தையுடன் இனிமேல் விசுவாசத்துடன் இருப்பதாக உறுதி மொழிச் செய்தியை அனுப்பினர். இதற்குப் பின்னர் அக்பர் சலீமை வங்காளத்திற்கும் ஒரிஸாவிற்கும் கவர்னராக நியமித்தார். பின்னர் சலீம் அலகபாத்துக்குத் திரும்பினர். ஆனால், அவர் தமது தீய கருத்துகளை விட்டுவிடவுமில்லை; வங்காளத்தையும், ஒரிஸாவையும் ஒப்புக்கொள்ளத் தமது ஆட்களை அனுப்பவுமில்லை. அரசர் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டு, அரசவை கூட்டி, ஆணைகளை வெளியிட்டு, பட்டங்களையும் ஜாகீர் களையும் வழங்கவும் தொடங்கிவிட்டார். கோவாவில் இருந்த போர்த்துகீஸியர்களிடமிருந்து படை உதவி பெற சலீம் செய்த முயற்சி பயனளிக்கவில்லை. இந்தக் கிளர்ச்சியினுல் அமைதியை இழந்த மன்னர், தக்காணத்திலிருந்த அபுல்ஃபாஸலைக்

கலந்தாலோசனை செய்வதற்காக அவரை வரும்படி அழைத்தார். ஆனால், 1602ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 19ஆம் நாளில் பாக்ரி ஸாராய் என்ற இடத்திற்கும், அந்திரிக்கும் இடையில் ஓர்ச்சா நாட்டின் பந்தல்கண்ட் புரட்சித் தலைவனான பீர்சிங் தேவா என்பவனைக்கொண்டு, சலீம் அபுல்ஃபாஸலைக் கொன்றுவிட்டார். இந்தச் செய்தியைக் கேட்ட அக்பர் துக்கத்திலும் கோப வெறியிலும் மூழ்கினார். மூன்று நாட்களாக அவர் பொதுமக்களுக்குத் தம்மைக் காட்டிக்கொள்ளவில்லை. அக்பர் சலீமை வெகுவாய்க் கடிந்துகொண்டு, பீர்சிங் தேவாவைக் கொன்றுவிடும்படி ஆணையிட்டார். ஆனால், பீர்சிங் தப்பியோடி, பின்னர் ஜஹாங்கீரிடமிருந்து பல நன்மைகளைப் பெற்றுக்கொண்டான்.

சலீம் கடுமையான தண்டனை பெறத் தகுதியுள்ளவராக இருந்தாலும், அத்தகையவொரு நடவடிக்கையை எடுத்துக்கொள்வது கண்ணியக் குறைவு என்று அக்பர் கருதினார். அவரின் இரண்டாவது மகனான முராது ஏற்கெனவே இறந்துபோனான். மூன்றாவது மகன் தானியலும் படிப்படியாகச் செத்துக்கொண்டிருந்தான். அவரது பேரப்பிள்ளைகள் மிகவும் சிறியவர்களாக இருந்தனர். சலீம் செய்தவற்றை மறந்து, அவனை மன்னித்துவிடுமாறு அரசரின் அந்தப்புரத்துப் பெண்டிர் வற்புறுத்தினர். ஜஹாங்கீரின் செவிலித் தாயான சலீமா பீகம் அம்மையார், அலகபாத்துக்குத் தாம் சமரசத் தூது செல்லவேண்டுமென்று அக்பரை வேண்டிக்கொண்டார். அவர்களின் வேண்டுகோளுக்கு மன்னர் செவி சாய்த்தார். இளவரசர் மனந்திரும்பி நல்ல வழியில் செல்லுமாறு தூண்டும் முயற்சியில் சலீமா பீகம் வெற்றி பெற்றார்கள். இளவரசர் ஆக்ராவுக்குத் திரும்பி, அவரது பாட்டியான மிரியம் கோனி அம்மையாரால் அக்பரின் முன்னிலைக்குக் கொண்டு வரப்பட்டார். அம்மையாரின் வேண்டுகோளின்பேரில் சலீம் தந்தையின் காலில் விழுந்து மன்னிப்புக் கோரினார். மன்னர் மகனைத் தூக்கி நிறுத்தித் தழுவிக்கொண்டார். சலீம் 770 யானைகளையும், பன்னீராயிரம் பொன் மோகர் நாணயங்களையும் அக்பருக்குப் பரிசாக அளித்தார். அரசர் சலீமைக் கருணையுடன் மன்னித்து, பரிசளித்துத் தமக்குப்பின் வாரிசாகவும் நியமித்தார்.

சலீமின் கெட்ட தோழர்களிடமிருந்து, அவனை விடுவிக்கும் எண்ணத்துடன், 1603ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 14ஆம் நாளில் சலீமை மீவார் படையெடுப்பை நடத்திச் செல்லும்படி அக்பர் மீண்டும் அனுப்பினார். 1599-ல் சலீம் இந்த முயற்சியில் வெற்றி பெறவில்லை. சலீம் பாதேபூர் சிக்ரி வரையிலும் சென்றார்; ஆனால், மீவாரின் ராணாவைப் பணியச்செய்யும் பணிக்குத்

தாம் திறமையற்றவர் என்று கூறி, மீண்டும் அலகாபாத்துக்குத் திரும்ப அனுமதி தருமாறு சலீம் வேண்டிக்கொண்டார். அக்பர் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றினர். அலகாபாத்தில் இளவரசர் மீண்டும் தீயவழிகளில் வீழ்ந்து, ஓரளவு தம்மைச் சுயேச்சையாக்கிக்கொண்டார். இதனுல் அரசர் மிகவும் கோபங் கொண்டு, அலகாபாத்துக்கு நேரில் சென்று, சலீமை வன்முறை யால் பணியவைக்கவேண்டுமென்று தயார் செய்தார். ஆனுல், இதற்குள் அவரது அன்னையார் பிணியுற்று இறந்துவிட்டதால், இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. சலீமுக்குப் பதிலாக அவருடைய மகனை குஸ்ரூவை வாரிசாக்கிவிட அக்பர் எண்ணி னர். பதினேழு வயதினனை குஸ்ரூ மிக நெருங்கிய இரத்த உறவு களால் பேரரசின் இருபெரும் பிரபுக் குலங்களுடன் தொடர்புகொண் டிருந்தான். அவன் ஆம்பர் நாட்டு மான்சிங்கின் சகோதரியின் மகனும், மிர்ஸா அஸிஸ்கோகா என்பவரின் மருமகனுமாவான். குஸ்ரூ அழகிய தோற்றமும், கவர்ச்சிகரமான பண்புகளும், தூய்மையான தனி வாழ்க்கையும் கொண்டவன். ஆனுல், சலீமைக் கொன்றுவிடாமல், குஸ்ரூவை வாரிசாக நியமிப்பதென்பது தகுதி யுடைய செயலல்ல. எனவே, அக்பர் அந்த எண்ணத்தைக் கைவிட் டார். தம்மைப் பொறுத்தவரையில், சலீம் உடனே ஆக்ராவுக்குச் சென்று, தந்தையிடம் நிபந்தனையின்றிப் பணிந்துவிடுவதே தமது நலத்திற்கு உகந்தது என்று உணர்ந்தார். எனவே, அவர் அரச சபைக்குச் சென்று, அக்பரின் அன்னையார் இறந்ததற்காக அவ ரிடம் பரிவு விசாரித்தார். அக்பரும் பொது அவை மன்றத்தில் சலீமை நல்ல முறையில் வரவேற்ருர். ஆனுல், உள்ளே சென்றதும் சலீமைச் சிறைப்பிடித்து, அவனது கண்ணியமற்ற நடத்தைக்காகக் கடிந்துகொண்டபோது, அவனது கன்னத்தில் அறைந்தார். பின்னர் ஒரு மருத்துவரின் பொறுப்பில் சலீமைக் குளியல் அறை ஒன்றில் காவலில் வைத்தார். பத்துநாள் காவலுக்குப் பின்னர் இளவரசர் விடுதலையடைந்து, அரசரின் அன்பைப் பெற்ருர். 1604ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 20ஆம் நாளில் அக்பரின் இளைய மகன் தானியல் இறந்துபோனதால், சலீம் ஒருவரே அக்பரின் பிள்ளைகளில் உயிருடன் இருந்தவரும், வாரிசும் ஆகிவிட் டார். பின்னர் சமுலீக்கு எந்தத் தண்டனை வழங்குவதையும் அக்பர் நிறுத்திக்கொண்டார்.

இதற்கிடையில் அக்பர் பிணியுறத் தொடங்கினர். 1605ஆம் ஆண்டு, அக்டோபர் 3ஆம் நாளில் அவருக்குச் சீதபேதி கண்டது. நாளுக்குநாள் அவரது நிலைமையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட வில்லை. அரசவையில் இரண்டு கட்சிகள் உருவாகி, ஒன்று சலீமையும், மற்றொன்று குஸ்ரூவையும் ஆதரித்தன. மான்சிங்கும்

மிர்ஸா அஸிஸ்கோகாவும் சலீமை விலக்கிவிட்டு, குஸ்ரூவுக்குப் பட்டமளிக்க வேண்டுமென்று விரும்பினர். ஆனால், அவர்களைப் பலர் ஆதரிக்கவில்லை. இராம்தாஸ் கச்வாஹா என்பவர் சலீமை ஆதரித்து, அரசாங்கக் கருவூலத்தைக் காவல்செய்ய இராஜபுத்திரக் காவல்படையொன்றை நிறுத்தி வைத்தார். பாராவின் சையதுகள் போன்ற பல முஸ்லீம் பிரபுக்கள் சலீமை ஆதரித்தார்கள். அக்டோர் 21ஆம் நாளில் மரணப்படுக்கையிலிருந்த அக்பர், தமது அரசத் தலைப்பாகையை சலீமின் தலைமீதுவைத்தும், வாளை அவனது இடையில் தொங்கவிட்டும், அவனைத் தமது வாரிசாக ஒப்புக் கொண்டார். 1605ஆம் ஆண்டு, அக்டோபர் 25-26ஆம் நாட்களின் நள்ளிரவில் அக்பர் காலமானபோது, சலீமின் கட்சி, குஸ்ரூவின் கட்சியைவிட வன்மையுடன் இருந்தது. அவர்கள் ஏற்கெனவே இளவரசரிடமிருந்து இரண்டு வாக்குறுதிகளைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். அவையாவன: அரசர் இஸ்லாம் சமயத்தைப் பாதுகாக்க வேண்டும்; குஸ்ரூவையும், அவனது ஆதரவாளர்களையும் மன்னிக்கவேண்டும். அக்பர் இறந்து எட்டு நாட்களுக்குப் பின்னர் நடைபெற்ற முடிசூட்டு விழாவின்போது, சலீமுக்கு எவ்விதமான எதிர்ப்பும் இருக்கவில்லை.

அரியணையேறுதல், நவம்பர் 3ஆம் நாள், 1605

1905ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 3ஆம் நாள், வியாழக் கிழமை அன்று, ஆக்ரா கோட்டையில் ஜஹாங்கீரின் முடிசூட்டு விழா நடந்தது. (பழைய முறைப்படி அக்டோபர், 24ஆம் நாள்) அவர் தமது கைகளாலே முடிபுனைந்துகொண்டு, நூருதின் முகமது ஜஹாங்கீர் பாதுஷா காஸி என்ற பட்டத்தையும் சூட்டிக் கொண்டார். அவர் பல கைதிகளை விடுவித்து, தன் பெயரால் நாணயங்களையும் வெளியிட்டார். அவரது கொள்கைகளைப் புகழ் பெற்ற பன்னிரு ஆணைகளின் மூலம் அறிக்கையிட்டார்:

(1) தம்ஹா, மீர்பாரி என்று பல பெயர்களால் அழைக்கப் பட்ட பல்வேறு வரிகள் விதிப்பதை அவர் தடை செய்தார்.

(2) சாலைகளின் ஓரங்களில் ஸராய்களையும், மசூதிகளையும், கிணறுகளையும் கட்ட ஆணையிட்டார்.

(3) வணிகர்களுக்குத் தெரியாமல், அவர்களின் அனுமதியின்றிச் சரக்கு மூட்டைகளைத் திறக்கும் வழக்கத்தைத் தடை செய்தார்.

(4) யாராவது இறந்துபோனால், அவருடைய சொத்து வாரிசுதாருக்குச் சேரவேண்டும்; வாரிசில்லாமல் அவர் இறந்தால், இறந்தவரின் சொத்து அரசாங்க அதிகாரியின் பாதுகாப்பில்

இருக்கவேண்டும். இதனைப் பொதுக்கட்டடங்களைக் கட்டவும், பழுதுபார்க்கவும் பயன்படுத்த வேண்டும்.

(5) மதுவையும், பிற போதையூட்டும் லாகிரிப் பொருள்களையும் உற்பத்தி செய்வதையும் விற்பதையும் அவர் தடை செய்தார்.

(6) யாருடைய வீட்டையும் கைப்பற்றிக்கொள்ளக்கூடாதென அரசாங்க அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

(7) மூக்குகளையும் செவிகளையும் அறுத்துத் தண்டனை வழங்கும் வழக்கத்தை ஒழித்தார்.

(8) உழவனுடைய நிலத்தைப் பலவந்தமாக அதிகாரிகள் கைப்பற்றிக்கொள்வதைத் தடை செய்தார்.

(9) அரசாங்கத் தண்டல்நாயகங்களும், ஜாகீர்தார்களும் அரசரின் அனுமதியின்றித் தங்களுடைய சொந்த பர்காஞவின் மக்களுடன் திருமணம் செய்துகொள்ளக்கூடாது.

(10) மக்களின் மருத்துவ உதவிக்காகப் பெரு நகரங்களில் அரசாங்க மருத்துவ நிலையங்களை நிறுவவேண்டும்.

(11) ஆண்டில் குறிப்பிட்ட நாட்களிலும், வாரத்தில் இரண்டு நாட்களிலும் மிருகங்களைக் கசாப்பு செய்வது தடைசெய்யப்பட்டது. இந்த இரண்டு நாட்களில் வியாழக்கிழமை ஜஹாங்கீர் அரியணையேறிய நாள். ஞாயிற்றுக்கிழமை அக்பரின் பிறந்த நாள்.

(12) அதிகாரிகளும் ஜாகீர்தார்களும் அக்பரின் காலத்தில் எந்தெந்தப் பதவிகளில் இருந்தனரோ, அவற்றில் அவர்களைத் தொடர்ந்து இருக்குமாறு அனுமதித்தார்.

ஆக்ரா கோட்டையில் உள்ள ஷாபூர்ஜ் என்ற இடத்திற்கும், யமுனை ஆற்றின் கரையின் ஓரமாகச் சென்ற சாலையில் நாட்டப்பட்டிருந்த ஒரு தூணுக்கும் இடையே மணிகள் தொங்கிய ஒரு பொற்சங்கிலியை இணைத்தார். இதன்மூலம் எந்த அதிகாரிகள் அல்லது பணியாளர்களின் துணையுமின்றி, அரசரிடம் நீதி கோரி வருகின்றவர்கள் மணியை அடித்துத் தங்களின் குறைகளைத் தெரிவிக்கலாம்.

அக்பர் ஆட்சியின் இறுதிக் காலத்தில், உயர்தர அல்லது கீழ்த்தர அதிகாரிகள் பெற்றிருந்த பதவிகளை அவர்களுக்கு உறுதிப்படுத்தியதோடு, அவருடன் நல்லுறவு கொண்டிராத சிலருக்கும் பதவியுயர்வுகளை வழங்கினர். அப்துர்ரஸாக் மாமுரியும், ஜஹாங்கீரை விட்டுவிட்டு அக்பருடன் சேர்ந்துகொண்ட குவாஜா அப்துல்

லாவையும் தங்களின் பதவிகளையும், ஜாகீர்களையும் தொடர்ந்து அனுபவிக்குமாறு அனுமதித்தார். அபுல் ஃபாஸலின் மகனான அப்துர் ரஹ்மான் 2000 வரிசை பெற்ற மான்சப்தாராக உயர்த்தப்பட்டார். மான்சிங்கும் மிர்ஸா அஸிஸ் கோகாவும், ஜஹாங்கீரின் மகனான குஸ்ருவின் வாரிசுரிமையை ஆதரித்தபோதிலும் மன்னிக்கப்பட்டனர். அவர்களின் பதவிகளில் நீடித்திருக்க அவர்கள் இருவரும் அனுமதிக்கப்பட்ட போதிலும், அவர்கள் அக்பரின் அரசவையில் பெற்றிருந்த செல்வாக்கை இப்பொழுது பெற்றிருக்கவில்லை. சிறிது காலத்திற்குப் பின்னர் மான்சிங் வகித்துவந்த வங்காள கவர்னர் பதவியை, புதிய அரசரின் அபிமானத்தைப் பெற்றவரான குதுப்புதீன் கான் கோகா என்பவர் பெற்றுக்கொள்ளவே, மான்சிங் அரசவைக்கு அழைக்கப்பட்டார். ஜஹாங்கீரிடம் இயல்பாக விளங்கிய நன்றியுணர்வின் காரணமாக, அவர் தமது அபிமானத் தோழர்களில் பலரை, திறமையில்லாமல் இருந்தபோதிலும், உயர்ந்த பதவிகளில் இருத்தினார். இந்தப் பிரிவில் ஷாரிஃப்கான் (இப்போது பிரதம வாஸிராக நியமனம் பெற்றிருந்தார்), குதுப்தீன் கோகா, ஓர்ச்சாவின் பீர்சிங் தேவா புந்தலா முதலியவர்கள் இருந்தனர். இவர்கள் யாவரும் உயர்ந்த பதவிகளைப் பெற்றிருந்தார்கள். புதியதாகப் பதவி உயர்வு பெற்றிருந்தவர்கள் இருவர் நல்ல தகுதியுடையவர்களாவர். பின்னர் நூர்ஜஹானின் தந்தை என்ற முறையில் புகழ்பெற்ற கியாஸ்பெக் என்பார், திவான் அல்லது நிலவரி அமைச்சராக நியமிக்கப்பட்டு, இதிமத்–உத்–துல்லா என்ற பட்டத்தையும் வழங்கப்பெற்றார். ஸாமன்பெக் என்பவர் மஹபத்கான் என்ற பட்டம் பெற்று, 1500 வரிசை கொண்ட மான்சப்தார் ஆனார்.

குஸ்ருவின் கிளர்ச்சி, ஏப்ரல் மே, 1606

ஜஹாங்கீர் அரியணையேறிய சில மாதங்களுக்கெல்லாம், அவரது மூத்த மகனாகிய குஸ்ரு கிளர்ச்சி செய்தார். ஆம்பர் நாட்டு ராஜா மான்சிங் தலையிட்டதால், மாமனின் முகத்திற்காக, ஜஹாங்கீர், குஸ்ருவின் பழைய குற்றங்களை மன்னித்துவிட்டார். ஆனால், மான்சிங் வங்காளத்திற்குச் சென்றவுடன், அரசர் இளவரசர் குஸ்ருவை ஆக்ரா கோட்டையின் ஒரு மூலையில் காவலில் வைத்தார். தமது பாட்டனாரின் அரியணைக்குத் தமக்கு உள்ள வாரிசுரிமையின் சாத்தியக் கூறுகளை மறந்துவிடாத குஸ்ரு, பல பிரபுக்களின் ஆதரவும் தமக்கிருப்பதைக் கண்டு, அரசாங்கக் கைதிபோல் தம்மைக் காவலில் வைத்திருக்கும் இழிநிலையைப்பற்றிச் சிந்தித்தபோது, தமக்கு இழைக்கப்பட்ட அநீதியை அவர் மறக்கவில்லை. எனவே, தம்மை விடுவித்துக்கொண்டு, ஒரு காலத்தில்

தமது கைக்கு எட்டிய அரியணையை அடைவதற்கு மீண்டும் ஒரு முயற்சி செய்யத் திட்டமிட்டார். 1606ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 6ஆம் நாளில் மாலை நேரத்தில் சிக்கந்த்ராவில் இருந்த அக்பரின் சமாதியைக் காணச் செல்வதாகக் கூறிக்கொண்டு, குஸ்ரூ 350 குதிரைகள் பின்வர, ஆக்ரா கோட்டையிலிருந்து தப்பி, டெல்லியை நோக்கி விரைந்தார். வழியில் 300 குதிரைகளுடன் உசேன்பெக் படாக்ஷி அவருடன் சேர்ந்துகொள்ளவே, வெகுசீக்கிரம் அவருடைய படைபலம் 12,000 ஆக உயர்ந்தது. இதனையடுத்து இளவரசர், பாதுகாப்புடன் சென்ற அரச பரிவாரத்தை வழிமறித்து, ஓர் இலட்ச ரூபாய்களைக் கைப்பற்றினார். டெல்லியைக் கடந்து, குஸ்ரூ லாகூர் நோக்கி விரைந்தார். வழியில் லாகூரின் திவானான அப்தூர் ரஹ்மான் அவருடன் சேர்ந்துகொண்டார். இளவரசர் அப்தூர் ரஹ்மானைத் தமது வாஸீராக நியமித்தார். தரான் தரான் என்ற இடத்தில் சீக்கியர்களின் ஐந்தாவது குருவாகிய அர்ஜுன் சிங்கின் ஆசியை குஸ்ரூ பெற்றுக்கொண்டார். அவர் லாகூரை அடைந்தபோது, அதன் கோட்டை வாயில்கள் அடைக்கப்பட்டிருப்பதையும், அதன் கவர்னர் திலவர்கான் கோட்டையைப் பாதுகாத்து வருவதையும் கண்டார். எனவே, குஸ்ரூ கோட்டையை முற்றுகையிட்டார். ஆனால், அவரால் அதனைக் கைப்பற்ற முடியவில்லை.

குஸ்ரூ தப்பியோடிய சில மணி நேரத்திற்குள் செய்தி அரசருக்கு எட்டவே, தப்பியோடியவரைப் பின்சென்று பிடிப்பதற்கான ஏற்பாடுகள் உடனடியாகச் செய்யப்பட்டன. ஷேய்க் பாரித் என்பவரின் தலைமையில் ஒரு படை அனுப்பப்பட்டது. காலத்தை வீணாக்கக்கூடாது என்ற நோக்கத்துடன், இளவரசர் குஸ்ரூ முற்றுகையிட்டிருந்த லாகூரை நோக்கி, அரசரே நேரில் புறப்பட்டார்.

இந்த இரு படைகளிடம் சிக்கிக்கொள்வதைத் தடுக்க குஸ்ரூ தம் படையில் ஒரு பகுதியை லாகூருக்கு முன்னால் நிறுத்திவிட்டு. பத்தாயிரம் வீரர்களைக்கொண்ட படையுடன் அரசரின் படைகளை எதிர்க்கும்படியாகத் திரும்பினார். மகனை அமைதியான முறையில் பணிந்துவிடும்படி, ஜஹாங்கீர் செய்த முயற்சிகள் பயனளிக்காமல் போகவே, இரு கட்சிகளும் பெர்ரோவால் சமவெளியில் போரிடவேண்டியதாயிற்று. குஸ்ரூவின் படை, எண்ணிக்கையில் அதிகமிருந்தபோதிலும், படுதோல்வி கண்டு, குஸ்ரூ அப்தூர் ரஹ்மான், உசேன்பெக் போன்ற சில நம்பிக்கையுள்ள நண்பர்களுடன் தப்பியோடவேண்டியதாயிற்று. அவர் விட்டுச்சென்ற அணிகலப் பெட்டியை அரசரின் படையினர்கள் கண்டெடுத்தார்கள்.

காபூலைக் கைப்பற்றுவதற்கு, உசேன்பெக் கொடுத்த திட்டத்தைப் பின்பற்ற முடிவு செய்த குஸ்ரூ, டெல்லிக்குச் சென்று, அங்கிருந்து அரியணையைக் கைப்பற்றும் நோக்கத்துடன், ஷாப்பூர் வாராவதியில் செனுப் ஆற்றைக் கடந்தார்; ஆனால், தப்பியோடியவர்களை விரட்டிக்கொண்டுவந்த அரசர் படையினர் குஸ்ருவையும் அவரது ஆட்களையும் கைப்பற்றினார்கள். லாகூரில் பாசறை அமைத்திருந்த ஜஹாங்கீர், இந்தச் செய்தியைக் கேட்டவுடன் மகிழ்ச்சிகொண்டு, சிறைப்பிடிக்கப்பட்டிருந்த மகனைத் தமது பாசறைக்குக் கொண்டுவருமாறு பணித்தார். 1607ஆம் ஆண்டு மே திங்கள் முதல் நாளன்று, தர்பாரில் இருந்த அரசரின் முன்னிலையில் கைவிலங்கிடப்பட்டும், சங்கிலிகளால் பிணைக்கப்பட்டும் குஸ்ரூ கொண்டுவரப்பட்டார். வலப் புறத்தில் உசேன் பெக்கும், இடப் புறத்தில் அப்தூர் ரஹ்மானும் சூழ, நடுவில் நின்ற இளவரசன் நடுங்கி, அழுது கதறி, அரசரின் முன்னால் தண்டனிட முயன்றார். ஆனால், அவர் நின்ற இடத்திலேயே நிற்குமாறு ஆணை பிறந்தது. புரட்சி செய்த இளவரசரைக் கடிந்துரைத்த மன்னர் அவரைக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இளவரசரின் முக்கிய ஆதரவாளர்களான உசேன் பெக்கும், அப்தூர் ரஹ்மானும் முறையே எருது, கழுதை ஆகிய விலங்குகளின் புதுத்தோலுக்குள் உயிருடன் வைத்துத் தைக்கப்பட்டனர். மிருகங்களின் வால் புறத்தை நோக்கி அவர்களின் முகத்தைத் திருப்பிய பாணியில் அவர்களைக் கழுதைமேலேற்றி, லாகூரின் தெருக்களின் வழியாக ஊர்வலமாகக் கொண்டுவந்தனர். உசேன்பெக் பன்னிரண்டு மணி நேரத்திற்குள் இறந்தார். இருபத்துநான்கு மணிநேரம் துன்புறுத்தப்பட்ட பின்னர் அப்தூர் ரஹ்மான் மன்னிப்புப் பெற்றார். குஸ்ருவின் பிற ஆதரவாளர்களை ஒரு மைல் வரிசையாகக் கழுவில் ஏற்றினார்கள். குஸ்ருவை யானைமீதேற்றி கழுவில் தொங்கியவர்களைக் காணும்படி அழைத்துச் சென்று, அவர்களின் மரியாதையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேலி செய்தார்கள். அவரின் இளகிய மனது இதனால் அதிர்ச்சியுற்றது. அவர் பல நாட்களாக அழுது கொண்டிருந்தார்.

குஸ்ரூ ஆக்ராவிலிருந்து லாகூருக்குச் செல்லும் வழியில், அவருக்குத் தமது ஆசியை வழங்கிய குரு அர்ஜுன் சிங்கைத் தண்டிக்க, ஜஹாங்கீர் முற்பட்டார். அவர் புரட்சிக்காரன் ஒருவனை ஆதரித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார். ஜஹாங்கீர் குரு அர்ஜுன் சிங்கின்மீது இரண்டு இலட்சம் ரூபாய் அபராதத்தொகை விதித்ததாகவும், அவர் அதனைச் செலுத்த மறுத்துவிட்டாரென்றும் கூறப்படுகிறது. இறுதியில் அவர் கொலைசெய்யப்பட்டார். குரு அர்ஜுன்சிங்போன்ற ஒரு புனிதரை ஒரு சாதாரணக் குற்றவாளியை

நடத்துவதுபோன்று நடத்தியது, அரசரைப் பொறுத்தவரையில் ஆராயாமல் செய்யப்பட்ட அவசரச் செயலாகும். சீக்கிய மரபின் படி ஜஹாங்கீர் குருவுக்கு வழங்கிய தண்டனை, சமயவெறியின் காரணமாகக் கொடுக்கப்பட்டதென்றும், அதில் நாகரிகமற்ற முறையில் சித்திரவதையும் கலந்திருந்ததென்றும் சொல்லப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமில்லை. ஆனால், குருவின் கொலை சீக்கியர்களிடம் முகலாயர்களுக்கு எதிராக மனக்கசப்பை உண்டாக்கி, அவுரங்கசீபின் காலத்தில் அவர்களைக் கிளர்ச்சி செய்யுமாறு தூண்டியது.

குஸ்ரூ ஆக்ராவில் இருந்து புறப்பட்ட ஒரு மாதகாலத்திற்குள், ஜஹாங்கீர் கிளர்ச்சியை அடக்கிவிட்டார். இந்த முயற்சியின் வெற்றிக்காகத் துணைபுரிந்தவர்களுக்கெல்லாம், அவர் பரிசு வழங்கி விட்டு ஆக்ராவுக்குத் திரும்பினார். ஆனால், மிகவும் நெருங்கிய உறவினர் ஒருவர், அதுவும் அவருடைய சொந்த மகனே கிளர்ச்சி செய்ததானது, இன்னும் ஒரு சில கிளர்ச்சிகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தது. இதில் முதலில் குறிப்பிடத்தக்கது, பிகானிரைச் சேர்ந்த ராய்சிங் என்பார் செய்த கலகமாகும். ராய்சிங் 5000 வரிசை மான்சப் பெற்ற முகலாய அரசவையில் உயர்தர பிரபுக்களில் ஒருவராவார். இவர் பஞ்சாபுக்கு அரசவையின் பெண்டிரைப் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லும் பொறுப்பை வகித்தார். தமது பொறுப்பை மதுராவில் உதறித் தள்ளிவிட்டு, அனுமதியின்றி பிகானிருக்குச் சென்று, அங்குக் கிளர்ச்சியைத் தொடங்கினார். நாகபுரியைக் கைப்பற்றிக்கொண்டு, அரசரின் அதிகாரத்தை மீறினார். அவருக்கு எதிராக ராய் ஜெகநாத் கச்வாஹா என்பவர் அனுப்பப்பட்டார். இவர் ராய் சிங்கைத் தோற்கடித்து, அவரை அரசவைக்குக் கொண்டுவந்தார். ஜஹாங்கீர் அவரை மன்னித்து, மீண்டும் அவருக்கு மான்சுப்பையும், அதற்கான உரிமைகளையும் வழங்கினார். குஸ்ரூவின் கிளர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு, சங்ராம் என்ற பீஹாரின் குறுநிலத் தலைவர் ஒருவரும் கலகம் செய்தார். பீஹாரின் கவர்னரான ஜஹாங்கீர் குலிகான் என்பவர் அவரைத் தோற்கடித்தார். ஆனால், குஸ்ரூவின் கிளர்ச்சியின் மிகத் தீமையான விளைவும், நாட்டில் நிலவிய அமைதியற்ற நிலையும், பாரசீக மன்னராகிய ஷா காந்தகார் கோட்டையைத் தாக்குமாறு தூண்டின.

காந்தகார், 1606—1607

பாதுகாப்புக் கேந்திரமும், வாணிப முக்கியத்துவமும் பெற்று விளங்கிய காந்தகார், இடைக்காலத்தில் பாரசீகத்திற்கும் இந்தியாவுக்கும் இடையில் வன்மையான போட்டியின் காரணமாக

இருந்தது. காந்தகார் இந்தியாவுக்கு நுழைவாயிலாக இருந்ததோடு, நமது நாட்டை மைய ஆசியாவிலிருந்தோ, அல்லது பாரசீகத்திலிருந்தோ தாக்கக்கூடிய படையெடுப்பாளர்களுக்குப் படைத் தளமாகவும் விளங்கியது. இந்தக் கோட்டையின் உரிமையாளர் காபூலைத் தீடீரெனத் தாக்கிக் கைப்பற்றிக்கொள்ள முடியும். எனவே, காந்தகார் இந்திய அரசாங்கத்தின் மிக முக்கியமான எல்லைக் காவல் அரணுக இருந்தது. அதன் வாணிக முக்கியத்துவமும் குறைந்ததல்ல. இங்கு இந்தியா, பாரசீகம், துருக்கி, மைய ஆசியா முதலிய நாடுகளிலிருந்து வாணிகர் வந்து கூடினுர்கள். மேலும் காந்தகார் இந்தியாவிலிருந்து மைய ஆசியாவிற்கும், பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் முக்கிய வர்த்தக வழிகளையும் இணைத்தது. அதன் இரட்டை முக்கியத்துவத்தை நன்குணர்ந்திருந்த பாபர், 1522ஆம் ஆண்டில் காந்தகாரைப் கைப்பற்றியிருந்தார். ஆனுல், 1558-ல் ஹுமாயூனின் மரணத்திற்குப் பின்னர் காந்தகாரை முகலாயர்கள் இழந்துவிட்டனர். பாரசீக மன்னர் அதனை ஷா உசேன் மிர்ஸா என்பவரின் பொறுப்பில் ஒப்படைத்தார்; ஆனுல், 1594-ல் அக்பர் காந்தகாரை மீண்டும் கைப்பற்றினுர். அக்பரின் மரணமும் குஸ்ருவின் கிளர்ச்சியும் காந்தகாரைத் தாக்கும்படி குரோஸன் நாட்டுத் தலைவர்களைத் தூண்டிவிடுவதற்கு ஷா அபாஸ் என்ற பாரசீக மன்னருக்கு ஒரு வாய்ப்பை வழங்கின; ஆனுல், காந்தகாரின் இந்திய கவர்னரென ஷாபெக்கான் வீரம் மிக்க முறையில் அரணைப் பாதுகாத்தார். 1607ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மிர்ஸாகாஸி என்பவரின் தலைமையின்கீழ் முற்றுகையிடப்பட்டிருந்த ஷாபெக்கானை விடுவிப்பதற்காக ஜஹாங்கீர் படையை அனுப்பினுர். உதவிக்குவரும் படை அணுகிவருவதைக் கண்ட பாரசீகர்கள் அச்சமுற்று, முற்றுகையை விடுவித்து, குரோஸானை நோக்கிப் பின்வாங்கினுர்கள். இந்த முயற்சியில் தோல்வியுற்ற ஷா அபாஸ், காந்தகாரைத் தாக்கியதைப்பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாதென்று மறுத்துவிட்டார். குரோஸானின் பிரபுக்களை அவர் கடிந்துகொண்டதோடு, ஜஹாங்கீரிடம் மன்னிப்பும் கேட்டார். அமைதியற்ற எல்லைப்புற மலைக்குடிகள்தாம் இந்தத் தாக்குதலைத் தமது விருப்பாகச் செய்தார்களென்றும், இந்த அடாத செயலுக்காகத் தாம் அவர்களைத் தண்டித்துவிட்டதாகவும் ஷா விளக்கமாக எழுதினுர். இந்த சச்சரவை மேலும் தூண்ட விரும்பாத ஜஹாங்கீர் அவரது விளக்கத்தை ஏற்றுக்கொண்டார். இவ்வாறு இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்தது.

எனினும், பேரரசர் இத்தகைய தாக்குதல்கள் மேலும் நிகழாதவாறு, அந்தப் பகுதிகளைச் சென்று பார்வையிடுவது நல்லதென்று உணர்ந்தார். 1607ஆம் ஆண்டு, மார்ச்திங்கள், 27ஆம், நாளில்

அவர் லாகூரிலிருந்து புறப்பட்டு, ஜுன் 4ஆம் தேதி காபூலுக்குள் நுழைந்து, பதினொரு வாரங்கள் அங்குத் தங்கிய பின்னர், மீண்டும் ஆகஸ்ட் திங்களில் லாகூருக்குத் திரும்பினார், காபூலில் தங்கியிருந்த காலத்தில் அந்த மாநிலத்தின் மக்களுடன் நல்லுறவுகளை ஏற்படுத்தி, காபூலில் வாங்கப்பட்டுவந்த வணிகச் சுங்க வரிகளையும் நீக்கிவிட்டார். வழியில் ஜஹாங்கீரை வேட்டையாடும்போது கொன்றுவிட்டு, அவரது மகனான குஸ்ரூவை அரியணையில் அமர்த்துவதற்காக ஒரு சதித்திட்டம் செய்யப்பட்டது. குஸ்ரூ உட்பட, முக்கியச் சதிகாரர்கள் நூருதீன், பாதேயுல்லா, இதிமா உத்தௌலாவின் மகனான ஷாரிஃப், இதிபார் என்ற ஓர் அலி ஆகியோர் முக்கியமானவர்கள். குஸ்ரூவின் கவர்ச்சியான பண்புகளும், இன்சொற்களும், பழுதற்ற தனி வாழ்க்கையும் ஏறத்தாழ நானூறு ஆதரவாளர்களை அவர்பால் இழுத்தன. இத்தனை அதிகமான பேர்களிடம் நம்பிக்கை கொண்டதால், சதித்திட்டம் இரகசியமாக இருக்க முடியவில்லை. இரகசியம் வெளியாகவே, அதனை அறிந்து கொண்ட குர்ரம், செய்தியை ஜஹாங்கீருக்கு அறிவித்தார். உடனே ஒரு விசாரணை நடந்தது. அதில் இதிபார்கான் எழுதிய பல கடிதங்கள் கைப்பற்றப்பட்டன. சதிகாரர்களில் ஒருவனான மிர்ஸா முகமது உஸ்பெக் என்பவன் பொது மன்னிப்பு அளிப்பதாக வாக்குறுதி கொடுக்கப்படவே, அவன் சதித்திட்டம் முழுவதையும் வெளியிட்டான். மன்னர் சதிகாரர்கள் யாவரையும் பெருந்தன்மையுடன் மன்னித்துவிட்டார். ஆனால், முக்கியத் தலைவர்களான நூருதீன், இதிபார், ஷாரிஃப், ஸடா சர்க்மேன் ஆகிய நால்வரும் மரண தண்டனை பெற்றனர். குஸ்ரூவின் கண்கள் குருடாக்கப்பட்டாலும், அவரது விழிகளை அவர் இழக்கவில்லை. லாகூரில் சில நாட்கள் தங்கியபின், 1608ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 22ஆம் நாளில் ஜஹாங்கீர் ஆக்ராவுக்குத் திரும்பினார். குஸ்ரூ கோட்டையில் காவலில் வைக்கப்பட்டார். அவர் மீது பரிவுகொண்ட ஜஹாங்கீர், குஸ்ரூவின் விழிகளைக் குணப்படுத்துமாறு மருத்துவர்களுக்கு ஆணையிட்டார். விழிகளில் ஒன்று ஒளி பெற்றது. ஆனால், அடுத்த விழியில் பார்வை மீண்டும் ஏற்படவில்லை.

நூர்ஜஹான்

1611ஆம் ஆண்டு, மே திங்களில் ஜஹாங்கீர் மீருனிஸா என்ற ஒரு விதவையை மணந்துகொண்டார். நூர்மஹால் என்று வழங்கப்பட்ட இந்த அம்மையாரின் பெயர், மேலும் நூர்ஜஹான் என்று மாற்றப்பட்டது. இவள் அரசர்மீதும் பேரரசின் ஆட்சித் துறையின்மீதும் அளவுகடந்த செல்வாக்கைப் பயன்படுத்தத்

தொடங்கினுள். இவள் அக்பரின் அரசவையில் பணிபுரிந்து, இதிமாதுத் தௌலா என்ற சிறப்புப் பட்டம் பெற்ற கியாஸ் பெக் என்னும் பாரசீகரின் மகள்; பெக் நாடோடி வீர வாழ்க்கை நடத்தியவள். நூர்ஜஹானின் வாழ்க்கையைப்பற்றிப் பல புனைகதைகள் எழுந்துள்ளன. வறுமை காரணமாக நூர்ஜஹானின் பெற்றோர்கள் பாரசீகத்தைவிட்டு, இந்தியாவில் தங்களுடைய வாழ்க்கைவழியைத் தேடிவந்தார்களென அவளுடைய தொடக்க கால வாழ்க்கையை விவரிக்கும் ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். வழிக்கு அவசியமான முக்கியத் தேவை எதுவுமின்றி அவர்கள், மிக அபாயகரமானவொரு பயணத்தைத் தொடங்கினுர்கள். இந்தத் தம்பதிகள் மிகவும் வறுமைப்பட்டார்கள். மேலும், கியாஸ் பெக்கின் மனைவி கருவுற்று, மகப்பேற்றின் நெருங்கிய நிலையில் இருந்ததால் அவர்களின் தொல்லைகள் இன்னும் அதிகமாயின. வழியில் களைத்துத் தவித்து, அரைப்பட்டினியாய்க் கிடந்த அந்த அம்மையார் ஒரு பெண் மகவை ஈன்றுர்கள். இந்தக் குழந்தையைக்கூடச் சுமப்பதற்கு சக்தியில்லாத காரணத்தால், அதனை ஒரு மரத்தடியில் எறிந்துவிட்டு, அவர்கள் இருவரும் தம் பயணத்தைத் தொடர்ந்தார்கள். நெடுந்தூரம்கூட நடந்திருக்கமாட்டார்கள், அதற்குள், குழந்தையைக் காணுமல் தான் வாழமுடியாது என்பதை உணர்ந்த தாயானவள், உடனே சென்று, குழந்தையை எடுத்துக்கொண்டு வருமாறு தனது கணவனை இறைஞ்சினுள். ஆனுல், என்ன விந்தை! ஒரு நல்ல பாம்பு குழந்தையின் உடலில் சுற்றிக்கொண்டு, தனது படத்தை விரித்துக் குழந்தைமீது கதிரவனின் வெயில் படாமல் பாதுகாத்துக்கொண்டிருப்பதைக் கண்ட பெற்றோர்கள் திகைத்துப்போனுர்கள். கியாஸ் பெக் உரக்கக் கத்தவே, நல்ல பாம்பு விலகிச் சென்றது. குழந்தையைப் பெற்றோர்கள் மகிழ்ந்து எடுத்துக்கொண்டார்கள். மிகவும் தொல்லைப்பட்டு அவர்கள் லாகூரை அடைந்தபோது, அங்குள்ள பழைய நண்பர் ஒருவர் கியாஸ் பெக்கை அக்பருக்கு அறிமுகம் செய்துவைத்தார். பேரரசர் அவரைச் சாதாரணமான பொறுப்பில் அமர்த்தினுர். ஆனுல், அவரிடம் திறமையும் அறிவுக் கூர்மையும் இருந்ததால், மிர்ஸா கியாஸ் பெக் சீக்கிரமே அரண்மனைக் காப்பாளர் என்ற பதவிக்கு உயர்த்தப்பட்டார். இதனிடையில் மீருனிஸா என்ற அவரது மகள் அழகானவொரு பெண்ணுக வளர்ந்திருந்தாள். இணையற்ற அழகையும் பெண்களுக்குரிய நற்பண்புகளையும் பெற்றிருந்த மீருனிஸா பட்டத்துக்குரிய வாரிசான சலீமை வெல்ல ஆவல் கொண்டாள்; சலீமும் அவளை மணந்துகொள்ள வேண்டுமென்று வெகுவாய் விரும்பினுர். ஆனுல், இத்தகைய மணவுறவுக்கு அக்பர் உடன்படவில்லை. எனவே, மீருனிஸா, அவளது தந்தையைப்போன்ற ஒரு நாடோடி வீர வாழ்வை விரும்பிய பாரசீகனுன ஷெர் ஆப்கன் என்ன

பவருக்கு மணமுடித்துவைக்கப்பட்டாள். ஷெர் ஆப்கன் இந்தியா வில் வந்திறங்கி, அக்பருடைய அரசப் பணியில் ஈடுபட்டிருந்தான். ஜஹாங்கீர் அரசரானபோது, அவர் ஷெர் ஆப்கனைத் தந்திர மாகக் கொல்லச் செய்தார். இதனால் மீருனிஸாவை அடைய வேண்டுமென்பது அவருடைய திட்டம். இதில் அவர் வெற்றி யடைந்து, அவளை அரசவைக்கு அழைத்துவரச் செய்தார். நான்காண்டுகளுக்குப் பின்னர் அவளை மணமுடித்துக்கொண்டு, தனது தலைமையான அரசி என்ற நிலைக்கு அவளை உயர்த்தினர்.

இந்தக் காதற் கதைக்கு வரலாற்றில் ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. வரலாற்றின்படி கியாஸ் பெக்கின் தந்தையாரான, குவாஜா முகமது ஷாரிஃப், பாரசீகத்தின் ஒரு மாநிலமான குரோ ஸானில் இருந்த சுல்தான் பெகார் பெகி என்பவரின் வஸிராகப் பணியாற்றியவர். அவர் உயர்குடிப் பிறப்பும், விரிநோக்குடைய கல்வியறிவும் பெற்றிருந்தார். 1587-ல் அவர் இறந்த பின்னர், அவரது குடும்பம் தனது முக்கியத்துவத்தை இழந்து, வறுமையில் ஆழ்ந்தது. அவருடைய மகனான மிர்ஸா கியாஸ் பெக் தனது இரு புதல்வர்களையும், ஒரு மகளையும், கருவுற்றிருந்த மனைவியை யும் அழைத்துக்கொண்டு, இந்தியாவில் தனது வருங்காலத்தைத் தேடும் நோக்கத்துடன் லாகூர் நோக்கிப் புறப்பட்டார். வழியில் அவர் மிகுபொருளையும், தனது உடைமைகளையும் இழந்தார். ஆனால், வணிகக் கூட்டத்தின் தலைவரான மாலிக் மசூத் என்பவர் அவருக்கு மிகவும் உதவியாக இருந்தார். காந்தகாரில் இருக்கும் போது அவருடைய மனைவியார் பெண் மகவை ஈன்றார். அதற்கு மீருனிஸா என்றபெயர் கொடுக்கப்பட்டது. வணிகரான மாலிக் மசூத், கியாஸ் பெக்கை அக்பருக்கு அறிமுகம் செய்துவைக்கவே, பெக் அக்பரின் அரசப் பணியில் சேர்ந்தார். கல்வியறிவும் பண் பாடும் பெற்றிருந்த கியாஸ் பெக் சீக்கிரமே வாழ்வில் உயர்வு பெற்றார். அவர் முந்நூறு தர வரிசை பெற்ற மான்சுப்தாராக உயர்த்தப்பட்டு, 1595-ல் காபூலின் திவானாக நியமிக்கப்பட்டார். இதற்கிடையில் மீருனிஸா வளர்ந்து பெரியவளாகிவிடவே, அப்துர் ரஹீம்கான் கானுவின் சேவையில் இருந்த பாரசீக அகதி யான அலிகுலி இஸ்தாஜிலு என்பவருக்கு அவளை மணமுடித்து வைத்தார்கள். ஆனால், அதனைத் தொடர்ந்து அவன் அரசப்பணி யில் சேர்த்துக்கொள்ளப்பட்டான். 1509-ல் இளவரசர் சலீம், மீவாருக்கு எதிராகப் படையெடுப்புக்குத் தலைமை தாங்கிச் சென்ற போது, அலிகுலி, சலீமின் கீழ்ப் பணி செய்துவந்தார். அவர் தனி யாக எவ்வித ஆயுதங்களுமின்றி ஒரு புலியைக் கொன்றதால், இள வரசர் அவருக்கு ஷெர் ஆப்கன் என்ற பட்டத்தை வழங்கினர். சலீமின் கிளர்ச்சி நடந்த சில காலத்திற்குப் பின்னர், ஷெர்

ஆப்கன் அக்பரின் சேவையைத் துறந்து விலகிக்கொண்டார். ஜஹாங்கீர் அரசரான பின்னர், ஷெர் ஆப்கனின் பழைய நடத்தையை மன்னித்து, அவரை வங்காளத்திலுள்ள புர்துவானுக்கு கவர்னராக்கி, அங்கு அவருக்கு ஒரு ஜாகீரையும் வழங்கினர் (1605). அரச துரோகச் செயல்களில் ஈடுபட்டதாக ஷெர் ஆப்கன்மீது ஐயம் எழுந்தது. எனவே, ராஜா மான்சிங்குக்குப் பின்னர், 1606ஆம் ஆண்டு ஆகஸ்டில் வாங்காளத்தின் புதிய கவர்னராகப் பதவியேற்ற குதுப்புதீன் கானிடம் ஷெர் ஆப்கனை அரசவைக்கு அனுப்பிவைக்குமாறும், அவன் பணிய மறுத்தால் அவனைத் தண்டிக்குமாறும் பணித்தார். கவர்னரின் ஆணைப்படி 1607ஆம் ஆண்டு, ஏப்ரல் 9ஆம் நாளில் ஷெர் ஆப்கன் இரண்டு பணியாளர்களுடன் குதுப்தீனின் பாசறைக்குச் சென்றான். கவர்னரின் படைகள் அவனை உடனே சுற்றி வளைத்துக்கொண்டன. ஷெர் ஆப்கான் தனக்கு ஏற்பட்ட ஆபத்தையும் இழிவையும் கண்டுணர்ந்து, தான் இவ்வாறு நடத்தப்படுவதற்கு என்ன காரணமென்பதை வெகு சினத்துடன் குதுப்புதீனிடம் கேட்டான். இதற்குப் பதிலளிக்குமாறு, குதுப்புதீன் முன்னே சென்றபோது, ஷெர் ஆப்கன் தனது வாளை ஓங்கி கவர்னரைத் தாக்கினன். குதுப்புதீனின் ஆட்கள் ஷெர் ஆப்கன்மீது பாய்ந்து, அவனைத் துண்டு துண்டாக வெட்டி வீழ்த்தினர்கள். இதற்கு முன்னர் கவர்னரின் காவலர்களில் ஒருவனான அம்பார்கான் என்பவனை ஷெர் ஆப்கான் தாக்கிப் படுகாயப்படுத்தினன். அவனும், கவர்னரும் பன்னிரண்டு மணி நேரத்திற்குள் இறந்தனர்.

குதுப்புதீனின் மரணச்செய்தி கேட்ட மன்னர் கடுங்கோபங் கொண்டார். 'ஷெர் ஆப்கன் நரகத்திற்கு அனுப்பப்பட்டானென்றும், அந்த கருமுகக் கயவனுக்கு ஏற்ற இடம் என்றுமே நரகம்தான்' என்றும் அரசர் தமது நாள் குறிப்பேட்டில் குறித்து வைத்தார். ஷெர் ஆப்கனின் விதவையையும், மகளான லாட்லி பீகத்தையும், ஜஹாங்கீர் தமது அரசவைக்குக் கொண்டுவரச் செய்தார். கைம்பெண்ணான அந்த அம்மையார், அக்பரின் விதவையான சலீமா பீகத்தின் காவல் தோழியாக நியமிக்கப்பட்டார். 1611ஆம் ஆண்டு, மார்ச் திங்களில் நடந்த ஒரு நவ்ரோஷ் விழாவின்போது ஜஹாங்கீர் அவளைக்கண்டு காதல்கொண்டார். அவர் அவளை 1611ஆம் ஆண்டு மே திங்களில் திருமணம் செய்துகொண்டார்.

ஜஹாங்கீருக்கும் நூர்ஜஹானுக்கும் உள்ள தொடர்புகள்

ஷெர் ஆப்கன் இறப்பதற்குக் காரணமாக இருந்த சம்பவங்களும், இந்தத் தனிச்சிறப்புப் பெற்ற அம்மையாரை அவர் மணம்

செய்துகொண்டதும், சர்ச்சைக்குரிய பொருளாகும். மேற்கூறிய மரணத்திற்கும் திருமணத்திற்கும் காரணமாக இருந்த சம்பவங்களைப்பற்றியும், அவற்றில் ஜஹாங்கீர் தனிப்பட்ட முறையில் பெற்ற பங்கைப்பற்றியும் வரலாற்றாசிரியர்கள் பல வேறுபட்ட கருத்துகளைக் கொண்டிருக்கிறார்கள். இளவரசராக இருந்தபோது ஜஹாங்கீர், மீஹ்ருனிஸாவைக் கண்டதில்லையென்றும், அக்பர் அவர்களுடைய திருமணத்தைத் தடைசெய்யவில்லையென்றும், ஷேர் ஆப்கனின் கொலையில் ஜஹாங்கீருக்குப் பங்கில்லையென்றும், அவர் 1611-ல்தான் முதன்முதலாக மீஹ்ருனிஸாவைக் கண்டார் என்றும் டாக்டர் பெனி பிரஸாத் கூறுகிறார். ('ஜஹாங்கீர்'. பக். 152). தமது கட்சியை நிலைநாட்ட இந்த வரலாற்று அறிஞர் கொடுக்கின்ற காரணங்கள் வருமாறு:

(1) ஜஹாங்கீர் இளவரசராக இருந்தபோது அவர் மீஹ்ருனிஸாவை மணந்துகொள்ள விரும்பினாரென்றும், அக்பர் அதற்கு அனுமதி வழங்கவில்லை என்றும் சொல்லப்படும் செய்திகளுக்குச் சமகால பாரசீக வரலாற்றில் சான்றுகள் இல்லை. மேலும் ஷேர் ஆப்கனின் கொலையை ஜஹாங்கீர் சதிசெய்து தூண்டினார் என்பதற்கும் சமகால பாரசீக வரலாற்றில் சான்றுகள் இல்லை.

(2) வழிவழியாக நம்பப்பட்டுவரும் இந்தக் கதைக்கு ஆதரவாக அக் காலத்திய ஐரோப்பிய யாத்திரிகர்களும், சமய போதகர்களும் ஒன்றும் கூறவில்லை. அரச குடும்பத்தின் ஒழுக்கக் கேடுகளைப்பற்றிய எந்தவிதமான வதந்திகளையும் அறிந்துகொள்வதற்கு ஐரோப்பிய யாத்திரிகர்கள் மிக ஆவலாக இருந்தார்களென்றாலும், இந்தப் சந்தர்ப்பத்தில் அவர்களின் சான்றுகள் ஒன்றும் இல்லை.

(3) அக்பர் ஏன் சலீம், மீஹ்ருனிஸாவை மணந்துகொள்வதைத் தடைசெய்தார் என்பதற்குச் சரியான காரணத்தை யாரும் தர முடியாது. இத்தகைய திருமணங்கள் அக் காலத்தில் மிகச் சாதாரணமாக இருந்தன.

(4) அவ்வாறே அக்பர் அந்தத் திருமணத்தைத் தடைசெய்திருந்தாலும், 1599-ல் ஷேர்ஆப்கனை இளவரசர் சலீம் பணியாளர்களில் ஒருவராக அக்பர் நியமித்திருக்கமாட்டார். மேலும் சலீம், ஷேர் ஆப்கனைத் தனது காதல் எதிரி என்று கருதியிருந்தால், அவர் தம்மைவிட்டு ஓடிய குற்றத்திற்காக அவனை மன்னித்திருக்கவும் மாட்டார். பின்னர் அவனுக்குப் பதவி உயர்வு வழங்கியிருக்கவும் மாட்டார்.

(5) குதுப்புதீனை வங்காள கவர்னராக நியமித்தது, மான்சிங் முக்கியமானவொரு மாநிலத்தின் செல்வ வளங்களைப் அவர் பயன் படுத்திக்கொள்வதையும், பேரரசில் தனது செல்வாக்கை விரிவு செய்துகொள்வதையும் தடை செய்வதற்காகவே. ஏனென்றால், புதிய அரசருக்கும் மான்சிங்குக்கும் இடையே பிணக்கு ஏற்பட் டிருந்தது. இவையெல்லாம் மீலீனிஸாவை அரசர் அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்யப்படவில்லை. ராஜா மான் சிங்கின் பதவி மாற்றத்திற்குச் சற்று முன்னர் மற்றொரு மனக்குறை யுள்ள பிரபுவாகிய அஸிஸ் கோகா என்பவருக்கு எதிராகவும் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(6) நூர்ஜஹானைப்போன்றவொரு கண்ணியமான மாது, தனது முன்னுள் கணவரின் கொலையில் ஜஹாங்கீர் வஞ்சகமாக நடந்துகொண்டாரென்று உறுதியாக நம்பியிருந்தால், அவள் அவரைத் திருமணம் செய்துகொள்வதற்கு ஒருபோதும் உடன்பட் டிருக்கமாட்டாள்.

(7) ஷெர் ஆப்கனின் விதவை, அவளது தந்தையும், சகோ தரனும் பணிபுரிந்துவந்த அரசவைக்குக் கொண்டுவரப்பட்டது இயல்பானதே. அவளை சலீமா பேகத்தின் காவல் தோழியாக நியமித்ததிலும் தவறொன்றுமில்லை.

இதற்கு மாறாக, ஜஹாங்கீர் இளவரசராக இருக்கும்போது நூர்ஜஹானைக் காதலித்து மணந்துகொள்ள விரும்பியதும், ஷெர் ஆப்கனின் கொலையில் அவருக்குப் பங்குண்டு என்பதும் ஒருவேளை உண்மையாக இருக்கலாம் என்று டாக்டர் ஈஸ்வரி பிரஸாத் கருது கிறார். இந்தக் கருத்திற்கு ஆதரவாக அவர் கீழ்க்கண்ட சான்று களைக் காட்டுகிறார்:

(1) அரசர் குற்றமற்றவர் என்ற கொள்கைக்கு ஆதரவாக டாக் டர் பெனி பிரஸாத் அவர்கள் கொடுக்கின்ற சான்றுகள் எதிர்மறை யானவை. எனவே, பிற்கால இந்திய வரலாற்று ஆசிரியர்கள் கொடுக்கும் 'நேர்மறை உறுதிப்பாடுகளை' மறுத்துரைக்க அவைகள் வன்மையற்றவைகளாகும். 'பிற்கால அறிஞர்கள், அவர்களது முன்னோடிகளைவிட இத்தகையதொரு சிக்கலில் நல்ல முறையில் உண்மையை எடுத்துரைக்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள்.'

(2) ஷெர் ஆப்கனுக்கு எதிராகத் தெளிவான குற்றச் சாட்டு எதுவும் இருக்கவில்லை. அவர்மீது சாட்டப்பட்ட அரசத் துரோகக் குற்றம் ஐயத்தின்மேல் எழுந்ததாகும். ஷெர் ஆப்கான் 'பயனற்ற

அரசத் துரோக எண்ணங்களை' வெளியிட்டால், அவனைத் தண்டிக்கும்படி குதுப்புதீனுக்கு ஆணையிடப்பட்டது. எனவே, 'ஷெர் ஆப்கானைச் சிறைபிடிப்பதற்குக் காட்டிய விரைவு, நமது ஐயப்பாடுகளை உறுதி செய்கிறது' என்று டாக்டர் ஈஸ்வரி பிரஸாத் எழுதுகிறார்.

(3) தனது வாழ்க்கையில் நடந்த அற்பமான நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்வதில்கூட விருப்பங்கொண்ட, ஜஹாங்கீர், நூர்ஜஹானுடன் அவர் கொண்ட மணவுறவுக்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகளைப்பற்றி ஒன்றுமே கூறாமல் மௌனமாக இருப்பது ஐயத்திற்கிடமளிக்கிறது. அவர் தம் திருமணத்தின் மூன்றாண்டுகளுக்குப் பின்னர்தான் நூர்ஜஹானின் பெயரை முதன்முதலில் குறிப்பிடுகிறார்.

(4) அரசரின் ஆணையின்பேரில் மீருனிஸா அரசவைக்குக் கொண்டுவரப்பட்டதும், அரசரின் அந்தப்புரத்தில் பெருங்கோப் பெண்டாகிய சலிமா பீகத்தின் பொறுப்பில் அவளை வைத்ததும் வியப்பான செய்திகள். தலைநகரிலேயே தங்கியிருந்த அவளுடைய தந்தையும் சகோதரனும் அவளை வெகு எளிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்க முடியும். அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்ட பிற பிரபுக்கள், அதிகாரிகளின் குடும்பங்களைப் பொறுத்தவரையில் இத்தகைய நடிவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(5) சமகால டச்சு எழுத்தாளராகிய டி லேயத் என்பார், தாம் எழுதிய 'Description of India and Fragment of Indian History' என்ற நூலில், ஜஹாங்கீர் இளவரசராக இருந்தபோதே, நூர்ஜஹானைக் காதலித்திருக்கலாம் என்று கூறுகிறார். ஜஹாங்கீர் ஏன் ஷெர் ஆப்கனின் மரணத்திற்குப்பின் நூர்ஜஹானை உடனே மணந்துகொள்ளவில்லை யென்றால், ஷெர் ஆப்கனின் மரணத்தைப் பற்றிய ஐயம் நீங்கும்படி காலத்தைத் தள்ளிப்போட ஜஹாங்கீர் ஆவல் கொண்டார். மேலும், அவர் நூர்ஜஹானை அவசியமில்லாமல் எரிச்சலூட்ட விரும்பவில்லை. 'ஷெர் ஆப்கனின் மரணத்திற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகள் பெரும் ஐயப்பாட்டிற்குக் இடமளிக்கின்றன. என்றாலும், அரசர் அந்தக் கொலைக் குற்றத்தைச் செய்தவர் என்பதற்கு முடிவான ஆதாரம் எதுவும் இல்லை' என்று டாக்டர் ஈஸ்வரி பிரஸாத் முடிவாகக் கூறுகிறார். (A Short Histroy of Muslim Rule in India, பக். 465-467).

இந்த முக்கிய உட்கதையின் சிறப்பான பிரச்சினைகளைக் கீழ்க்கண்டவாறு தொடுக்கலாம்: முதலாவதாக, ஜஹாங்கீர்

இளவரசராக இருந்தபோது மீருனிஸாவை மணந்துகொள்ள விரும்பியதும், அவரது தந்தையாரால் தடை செய்யப்பட்டதும் உண்மையா? இரண்டாவது, ஷெர் ஆப்கனின் கொலையில் அவருக்கு எந்தப் பங்கும் உண்டா? முதல் சிக்கலைப் பொறுத்த வரையில் டாக்டர் பெனி பிரஸாத் கூறுகின்றபடி, 'மீருனிஸாவுக்கும் சலீமுக்கும் இடையே நிகழவேண்டிய திருமணத்தை அக்பர் தடைசெய்வதற்கு எந்த நோக்கமும் இருந்ததென்று யாரும் கூற முடியாது' என்ற கருந்து ஆராய்ச்சிக்குட்பட்டது. சலீமுக்கும், உயர்குடி மகனுன அஸிஸ் கான் கோகா என்பாரின் மகளுக்கும் இடையே நிகழவேண்டிய திருமணத்தை அக்பர் தடைசெய்தாரென்றும், 'தமது மைந்தனின் உள்ளம் ஓரளவு உடைந்தபோது தான்,' மீண்டும் திருமணத்தை அனுமதித்தாரென்றும், அபுல் ஃபாஸலிடமிருந்து நாம் அறிகிறேம் (அக்பர் நாமா : தொகுதி 3, பக்கம் 1058). இந்தச் சந்தர்ப்பத்தில் அக்பர் தமது அனுமதியை மறுத்ததற்குச் சரியான காரணம் இருந்தது. டி லேயத் கூறுவது போல் மீருனிஸாவுக்கும் ஷெர் ஆப்கனுக்கும் ஏற்கெனவே திருமணம் உறுதியாகி இருந்தது. ஜஹாங்கீர் நூர்ஜஹானைக் காதலித்தார் என்பதும் மேற்கூறிய சமகாலத்திய டச்சு எழுத்தாளர் தருகின்ற சான்றிலிருந்து தெளிவாகிறது. 'அச்பர் (அக்பர்) உயிரோடு இருந்த காலத்தில், மீருனிஸா கன்னியாக இருந்தபோதே ஜஹாங்கீர் அவளைக் காதலித்தார். ஆனால், அவள் ஏற்கெனவே துருக்கியனுன சீர் ஆபிகன் (ஷெர் ஆப்கன்) என்பானைத் திருமணம் முடித்துக்கொள்ள நிச்சயமாகியிருந்தது. எனவே, அவனது தந்தை அவளை மணந்துகொள்ள அனுமதிக்க வில்லை. ஆனால், அவள்மீது கொண்ட காதலை அவன் முற்றிலும் விட்டுவிடவில்லை' என்று டி லேயத் எழுதுகிறார் (Description of India and Fragment of Indian History, பக்கம் 181). அரசருக்கு எதிராக விருப்போ, வெறுப்போ இல்லாத ஒரு சுயேச்சையான எழுத்தாளர் தருகின்ற இந்தச் சான்று, பிற்கால முஸ்லீம் வரலாற்று ஆசிரியர்களின் சான்றுகளுக்கு ஆதாரமாகவுள்ளது. அண்மையில் பாட்னு பேராசிரியர் அஸ்காரி அவர்கள் கண்டுபிடித்துள்ள அக் காலத்திய பாரசீக நூலொன்றும் இதை வலியுறுத்துகிறது. இதன்படி சலீம், மீருனிசாவை வன்முறையாகத் தாக்கியதாகவும், அவள் நீதி கோரி அக்பரிடம் முறையிட்டதாகவும் ஒரு செய்தி உள்ளது. அரசர் அவர்களின் திருமணத்தைத் தடைசெய்தார். ஜஹாங்கீர் தனி வாழ்க்கையின் நடத்தைகள், எடுத்துக்காட்டாக, அவர் ஏற்கெனவே பல மனைவியர்களை மணந்திருந்தபோதிலும், சேய்ன் கான் கோகாவின் மகளைக் காதலித்ததுபோன்ற நிகழ்ச்சிகள், நூர்ஜஹான்மீது, அவர் தொடக்கத்தில் காதல் கொண்டிருந்தார் என்ற கொள்கையை உறுதிப்படுத்துகின்றன.

ஷேர்கான், ஜஹாங்கீரின் தூண்டுதலால் கொல்லப்பட்டான் என்ற குற்றச்சாட்டிற்கு, வன்மையான, மறுக்கமுடியாத, சமகாலத்திய ஆதாரம் எதுவுமில்லை. அரசரின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எளிதான வாய்ப்பளிப்பதற்காகத்தான் வங்காள கவர்னர் பதவியினின்று மான்சிங் விலக்கப்பட்டார் என்ற கொள்கையை யாரும் ஏற்றுக்கொள்ளார். அதேநேரத்தில் ஷேர்கான்மீது தெளிவான குற்றச்சாட்டு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அவன் செய்த குற்றம் என்னவென்று அவனுக்கே தெரிவிக்கப்படவுமில்லை. அவனது நிலையை விளக்க வாய்ப்பும் அளிக்கப்படவில்லை. மேலும், அவனை ஒழித்துக்கட்டுவதற்காகத் தேடப்பட்ட வழிவகையின் விரைவும், அந்த நோக்கத்தை நிறைவேற்றிய முறையும், கொலைக்குப் பலியானவன்மீது ஜஹாங்கீர் கொண்டிருந்த வெறுப்புணர்ச்சியும், நூர்ஜஹானைப்பற்றிய செய்திகளை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லாமல்விட்டதும் ஆகிய எல்லாம் இந்த நிகழ்ச்சிபற்றிய ஐயப்பாடுகளை மிகவும் ஆழமாக்குகின்றன. டாக்டர் ஈஸ்வரி பிரஸாத் கூறுவதுபோல் அரசரின் காதல் கொள்கை சரியென்றால், ஷேர்கானைக் கொலை செய்த நோக்கமும் தெளிவாகிறது.

இன்றும் விடையளிக்கப்படவேண்டிய ஒரு வினா இருக்கின்றது. நூர்ஜஹானை அடைவதற்கு ஜஹாங்கீர் இவ்வளவு ஆவல் கொண்டிருந்தாரென்றால், அவர் ஏன் அவளை 1607-ல் அரசவைக்கு அழைத்து வந்தவுடன் மணந்துகொள்ளவில்லை? அவர் ஏன் நான்காண்டுகளாகக் காத்திருந்து 1611-ல்தான் திருமணம் செய்துகொண்டார்? நூர்ஜஹானை அரசவைக்குக் கொண்டுவந்து, சலீமா பீகத்தின் பொறுப்பில்விட்டது நினைவிருக்கலாம். சலீமா பீகம் ஜஹாங்கீரின் சிற்றன்னை என்ற முறையில் அவரிடம் அன்புடனும் நட்புறவுடனும் நடந்துகொண்டாள். ஜஹாங்கீர் இளவரசராக இருந்தகாலை கிளர்ச்சி செய்தபோது, சலீமா பீகம் தான் அவரை அக்பருடன் சமரசம் செய்துவைத்தாள். அரசரின் அந்தப்புரத்துப் பெண்டிர் யாவரும் திருமண உறவுகளை ஏற்படுத்தி வைப்பதில் கைதேர்ந்தவர்கள் என்பது நமக்குத் தெரியும், எனவே, சலீமா சுல்தானா பீகத்துடன் வாழ்ந்திருந்தபோது, மீருனிஸா ஏற்கெனவே அரசரை அடைந்துவிட்டாள் என்றே சொல்லவேண்டும். பொதுமக்களின் ஐயங்களைத் தவிர்ப்பதற்காகத்தான் அரசரின் திருமணம் ஒத்திப்போடப்பட்டது. ஜஹாங்கீர் ஏன் நூர்ஜஹானின் பெயரை அவர்களின் திருமணம் முடிந்து மூன்றாண்டுகள்வரையிலும் குறிப்பிடவில்லை என்பதை இது விளக்குகிறது.

நூர்ஜஹானின் குணச்சிறப்பு

இந்தத் திருமணம் முடிந்தபோது ஜஹாங்கீருக்கு நாற்பத்திரண்டாவது வயது நிறைவாகவிருந்தது. அப்போது நூர் ஜஹானுக்கு முப்பத்துநான்கு வயதாக இருந்தது. ஆனால், பல ஆண்டுகளாக அவளது இளமையின் அழகையும் புத்துணர்ச்சியையும் அவள் இழக்கவில்லை, அவளிடம் நோயற்ற பெருவாழ்வும் சிறந்த உடல் வலிமையும் விளங்கின. செயற்கை அழகு சாதனங்களாலும், அணிகலன்களைப் புனைந்துகொள்வதாலும் அவளின் பொலிவு பன்மடங்கு அதிகரித்தது. நூர்ஜஹானிடம் வன்மையான அறிவுத்திறமும், எதையும் எளிதில் புரிந்துகொள்ளும் ஆற்றலும் மிகுந்திருந்தன. அவள் சிறப்பான கல்வியறிவு பெற்றிருந்ததுடன், கவிதை, இசை, ஓவியம் ஆகியவற்றிலும் ஆர்வம் கொண்டாள். அவளுக்குப் பாரசீக மொழியில் கவிதைகள் புனையத் தெரியும். புதுமை புனையும் ஆற்றல் மிக்க நூர்ஜஹான், புத்தாடைகளை ஆக்குவாள். புதுப்புது வகையான அணிகலன்கள், நாகரிக முறைகள், அலங்காரங்கள் ஆகியவற்றையும் படைப்பாள். அவள் புகுத்திய நாகரிகத் தினுசுகள் அவுரங்கசீபின் ஆட்சிவரையிலும் சமுதாயத்தில் விளங்கிவந்தன.

யாவற்றிற்கும் மேலாக நூர்ஜஹான் சமூகப் பண்பும் தாராள குணமும் பெற்று விளங்கினாள். அவள் வறியவர்களுக்கும் துன்புறுத்தப்பட்டோருக்கும் நட்புறவு செய்தாள். ஆதரவற்ற பெண்களின் திருமணச் செலவுகளை அவள் ஏற்றுக்கொள்வதை விதியெனக் கொண்டாள். நாள்தோறும் பெருமளவில் தான தருமம் வழங்குவாள். ஆண்மகனுக்குரிய அறிவும் ஆவலும் அவளிடம் விளங்கின. மிக நுணுக்கமான அரசியல், ஆட்சித் துறைச் சிக்கல்களைத் தெரிந்து, அதில் புலமை காண்பது அவளுக்கு எளிதாக இருந்தது. அவள் எதிர்கொண்ட எந்தச் சந்தர்ப்பங்களையும் நபர்களையும் ஆட்டிப்படைப்பதென்றால் அவளுக்கு மிக விருப்பம். அவள் வீரமும் மனவலியும் நிரம்பப் பெற்றிருந்தாள். அவள் என்றும் நிதானம் இழக்கவில்லை. உண்மையில் எவ்வளவுக்கெவ்வளவு அபாயம் மிகுந்திருந்ததோ, அதற்கேற்றபடி அவளிடம் தாளாண்மையும் திறமை வளமும் விளங்கின.

நூர்ஜஹான் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் பெற்றிருந்தாள். 1613-ல் அவள் பாதுஷா பீகம் அல்லது நாட்டின் தலைமகள் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டாள். இந்த முறையில் அவள் தலைநகரின் பெண்கள் சமூகத்திற்கும் அரண்மனைக்கும் தலைவியாகிவிட்டாள். அவள் அதிகாரத்தின்மீது எவ்வளவு

வேட்கை கொண்டிருந்தாளென்றால், ஆட்சித்துறையில் பங்கு பெற்றதோடு, எல்லா அதிகாரங்களையும் தன் கைகளில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று முயன்றாள். வயது காரணமாகவும் குன்றிவரும் உடல்நிலை காரணமாகவும், சுகவாழ்விலும் சோம்பலிலும் ஆழ்ந்துவிட்ட ஜஹாங்கீர், அறிவுக் கூர்மையுடன் கடின உழைப்பும் கொண்டு, தன் இயல்புகொண்டவரையிலும் தன்னை உண்மையாக அன்பு செய்த நூர்ஜஹானிடம் தன் ஆட்சிப் பொறுப்பை விட்டுவிடவும் தயங்கவில்லை. சில வேளைகளில் அவள் ஜரோகா தரிசனத்தில் தோன்றி, பொதுமன்றத்தில் அரசாங்க நடவடிக்கைகளில் கலந்துகொள்வதுண்டு; சில நாணயங்களில் அவளுடைய பெயர்கூடப் பொறிக்கப்பட்டிருந்தது. திருமணமாகிய சில ஆண்டுகளில், நூர்ஜஹான் தனது ஆதரவாளர்களின் சிறு குழுவொன்றை அமைத்து, ஆட்சிப்பொறுப்பைத் தன் கைகளில் எடுத்துக்கொண்டாள். நூர்ஜஹானின் சிறு குழு என்றழைக்கப்பட்ட இக் கட்சியில் அவள், அவளுடைய பெற்றோர், சகோதரர்கள், அவளுடைய மருமகளின் கணவனான இளவரசர் குர்ரம் ஆகியோர் இருந்தனர். நூர்ஜஹானின் அன்னையாகிய அஸ்மத் பீகம் என்ற கல்வியும், அறிவுத்திறமும், நிதானப்போக்கும் சார்ந்த அம்மையார், அவளுக்கு ஆலோசகராக விளங்கினார். இவர் பண்பட்ட சுவைகளைக் கொண்டவர். ரோஜா மலர்களிலிருந்து அத்தர் தயாரிக்கும் முறையை அவர் கண்டுபிடித்தார். இவர், பேராவலும் அமைதியற்ற போக்கும் கொண்டிருந்த தம் மகளுக்கு நிலையான ஒரு துணையாக இருந்தார், நூர்ஜஹானின் தந்தையாராகிய இதிமாதுத் தெளலா என்பவர், ஆட்சித் துறையில் சிறந்த நிபுணர். அவளுடைய சகோதரனாகிய ஆஸப் கான் நிதி நிபுணரும், புகழ்பெற்ற அரசியல் நுண்ணறிவாளராகவும் விளங்கினார். இவர்கள் யாவரும் கடின உழைப்பிற்கும் ஆற்றல்களுக்கும் பெயர் பெற்றவர்கள். எனவே, இவர்கள் நூர்ஜஹான் கட்சிக்குத் தூண்கள்போல் துணை நின்றார்கள். பின்னர் ஷாஜஹான் என்று சிறப்புப்பெயர் பெற்ற இளவரசர் குர்ரம், ஆஸப் கானின் மகளாகிய அர்ஜுமாந்த் பானு பீகத்தை மணந்திருந்தார். இவரை நூர்ஜஹான் தன் செல்வாக்கின் தொடக்க நாளில் ஆதரித்தாள் (1611-1622).

நூர்ஜஹான் பெற்றிருந்த செல்வாக்கின் விளைவுகள்

நூர்ஜஹான் தன் கணவரை முறையான வகையில் ஆட்கொண்டிருந்தாள். இணையற்ற கவனத்துடனும் பக்தியுடனும் அவள் அரசரைப் பேணிப் பாதுகாத்துவந்தாள். அரசர் நாள்தோறும் அருந்திவந்த மதுவின் அளவைக் குறைத்துக்கொள்

வதற்கு நூர்ஜஹானின் செல்வாக்கே காரணமாகும். இதனால், அரசர் குடிப்பழக்கத்திற்கு இரையாகி மாண்டுபோன தனது இரண்டு இளைய சகோதரர்களின் கதி தனக்கும் ஏற்படாதபடி, அதிகமாகக் குடிப்பதைக் குறைத்துக்கொண்டு, கட்டுப்பாட்டுடன் இருந்தார். எல்லா அரசர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் ஏற்படக்கூடிய ஆட்சித்துறையின் சலிப்புகளையும், கவலைகளையும், ஏக்கங்களையும் அவள் பெருமளவில் குறைக்கத் துணைபுரிந்தாள். முகலாய அரசவையின் ஆடம்பரத்தை அவள் வெற்றியுடன் உயர்த்தினாள்; கல்வியையும் கலைகளையும் ஆதரிப்பதில் ஜஹாங்கீர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவற்றிற்கும் பின்னின்று உதவினாள்; பெருமளவில் அறம் வளர்த்துப் பெண்களுக்குப் பாதுகாப்பையும் பேராதரவையும் நல்கினாள். இவ்வாறாக ஜஹாங்கீர்மீது, நூர்ஜஹான் கொண்டிருந்த செல்வாக்கு முறையாக இருந்து, ஏழைகள், உதவி தேவைப்படுவோர், கலைஞர்கள், அறிஞர்கள் யாவருக்கும் நன்மை பயந்தது.

ஆனால், அரசியலிலும், ஆட்சித்துறை விவகாரங்களிலும், அரசக் கொள்கைபற்றிய முக்கிய காரியங்களிலும் அவளுடைய செல்வாக்கு நிச்சயமாகத் தீமை விளைவித்தது; அவளது எழுச்சிக் காலம் முழுவதிலும் அவளிடம் பலத்தைப் பற்றிக்கொள்வதில் தணியாத வேட்கையும், கட்சி அரசியல்களில் ஈடுபடுவதில் விருப்பமும் விளங்கின. 1611 முதல் 1613 வரை அவள் புகழ் பெற்ற நூர்ஜஹான் சிறு குழுவின் தலைவியாக இருந்தாள். இந்தக் குழு அதிகாரம் முழுவதையும் முழு உரிமையாக்கிக்கொண்டு, இந்தக் கட்சிக்கு எதிராக இருந்தவர்கள் யாவரையும், அரசவையில் பலமும் செல்வாக்கும் பெற்றுவிடாமல் தடுத்துவந்தது. நூர்ஜஹான் தனது தந்தையையும், சகோதரர்களையும், பிற உறவினர்களையும் பெரிய பதவிகளுக்கு உயர்த்தினாள். இக்காலத்தில் அவள் இளவரசர் குர்ரத்தை ஆதரித்து, அவரைப் புகழிலும் மதிப்பிலும் உச்சநிலைக்குக் கொண்டுவந்தாள். இளவரசர் கேட்டதையெல்லாம் பெற்றார். அவரது வாரிசுரிமை அநேகமாக முடிவானதாகக் கருதப்பட்டது; ஆனால், தந்திரமிக்க அரசி, தனது முதல் கணவனான ஷெர் ஆப்கனுக்குப் பிறந்த தன் மகளான லாட்லி பீகத்தை இளவரசர் ஷாரியாருக்கு மணமுடித்துக் கொடுத்தபின்னர், பொதுமக்களால் நாஷுண்டி அல்லது உதவாக்கரை என்று அழைக்கப்பட்ட தனது மருமகனை ஆதரிக்கத் தொடங்கினாள். குர்ரத்தின் பலத்தை ஒன்றுமில்லாமல் ஆக்கியதால், அவனைத் தற்காப்புக்காகக் கிளர்ச்சி செய்யும் நிலைக்கு ஆக்கிவிட்டாள். இவ்வாறு நாட்டின் விவகாரங்களில் நூர்ஜஹான் தலையிட்டதின் விளைவாக, நாடு உள்நாட்டுக் குழப்பத்தில் ஆழ்ந்தது.

அவள் கொண்டிருந்த அதிகார வெறியும், நாட்டின் உயர்தர அதிகாரிகள் செய்த உண்மைத் தொண்டுகளைப் புறக்கணித்த முறையும், தன்னுடன் கருத்து வேறுபாடு கொண்டவர்களிடம் அவள் காட்டிய ஐயங்களும், அரசியாருக்கும் முகலாய அரசின் திறமைமிக்க சில உண்மைத் தொண்டர்களுக்கும் இடையில் மனக் கசப்பை விளைவித்தது. புகழ்ச்சிக்குரிய சேவைகளினால் 'அமீர் உல் உம்ரா' என்ற உயர்ந்த பதவிக்கு உயர்த்தப்பட்டிருந்த மாபாத் கான் கிளர்ச்சிக் கொடியை நாட்டி, அரசரையே சிறைபிடிக்கும் நிலைக்குச் செல்லவேண்டியதாயிற்று. ஏனென்றால், செருக்குமிக்க அரசியார் மனம்போனபோக்கில் சென்றாரானால், தாம் தமது குடும்பத்தாருடன் அழியவேண்டியதாயிருக்கும் என்பதை அவர் உணர்ந்தார். பெண்ணுக்குரிய செருக்கும், அரசு உரிமையைக் காட்டுவதில் வெளிப்பகட்டில் பிரியமும் கொண்டிருந்த நூர்ஜஹானின் செல்வாக்கு, அரசவையிலும் பேரரசிலும் தீமையான விளைவுகளை உண்டாக்கியது. நாட்டு மக்களில் எத்திறத்தாரும் அவளுக்கு விலையுயர்ந்த பரிசுகளை வழங்கவேண்டுமென்ற அவா மேலீட்டினால், நாட்டில் லஞ்சம் கொடுக்கும் பழக்கமும் ஊழல்களும் மிகுந்தன. ஆனால், அவள் பெண் என்ற காரணத்தால் உயர்ந்த நிலையில் அரசாங்கக் காரியங்களைத் தனிப்பட்ட முறையில் பார்வையிட அவளால் முடியவில்லை. இவ்வாறு அரசாங்கத்துடன் தனிப்பட்ட தொடர்பு இல்லாமையால் திறமையின்மையும், சதிகளும், அறநெறிக் குலைவும் ஏற்பட்டு வளர்ந்தன.

மீவாருடன் போரும் சமரச உடன்பாடும்

எவ்வளவோ முயன்றும், அக்பர், மீவார் முழுவதையும் வெல்ல முடியவில்லை. 1597-ல் மன அமைதியுடன் ராணா பிரதாப் சிங் காலமானபோது அவர் ஒரு காலத்தில் இழந்த தம் நாட்டின் பெரும்பகுதியை மீண்டும் பிடித்துக்கொண்டார். அவரது மகனும் வாரிசுமான அமரசிங் தம் தந்தையைப்போல் வெல்லமுடியாத வீரமும், தணியாத உரிமை வேட்கையும் கொண்டிருக்கவில்லை யென்றாலும், அவர் சிறந்த வீரராக இருந்ததால், தமது முன்னோர்கள் செய்துவந்தபடி முகலாயர்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்தார். அக்பர் ஆட்சியின் இறுதியாண்டுகளில் அனுப்பப்பட்ட பல படையெடுப்புகள், முகலாயப் படைத் தலைவர்களின் அசிரத்தையாலும், ஸிசோடிய மரபினரின் வன்மையான எதிர்ப்புக் காரணமாகவும் தோல்வி கண்டன.

அரியணை ஏறியதும், ஜஹாங்கீரும் நாட்டை முழுவதையும் வெல்லவேண்டுமென்ற தம் தந்தையின் பேரரசக் கொள்கையைப் பின்பற்றி, 1605-ல் தமது இரண்டாவது மகனை பார்வெஸ்

என்பவரை, 20,000 குதிரை வீரர்களின் தலைமையில் ராணு அமர சிங்கை வென்று அடக்குமாறு அனுப்பிவைத்தார். 5000 மான்சுப் வரிசைக்கு உயர்த்தப்பட்டு, வஸீராகவும் நியமிக்கப்பட்டிருந்த ஆஸப்கான் ஜாபர்பெக் என்பவரை, இளவரசர் பார்வெஸுக்கு ஆலோசகராகப் பணியாற்றுமாறும், இன்னும் பல சிறந்த பிரபுக்களை அவருடன் ஒத்துழைக்குமாறும் அனுப்பிவைத்தார். ராணு அமர சிங்கின் மருமகனுன ஸாகர் என்பவர் தமது மாமனிடமிருந்து ஓடிவந்து, முகலாய அரசவையில் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருந்தார். அவரையும் இந்தப் படையெடுப்பில் கலந்து கொள்ளுமாறு அனுப்பிவைத்தார். அமரசிங் தம் நாட்டை வீரமுடன் காத்து, திவார் கணவாயில் முழு வெற்றி காண முடியாத ஒரு கடும்போரை நிகழ்த்தினுர். இருதரப்பினரும் தாம் வெற்றிபெற்றதாகக் கூறினுர்கள். அரசர் படையினர் திவார் கணவாயை அடுத்திருந்த சமவெளிகளை இரக்கமின்றி அழித்துப் பாழ்செய்தனர். ஆனுல், அதற்குமேல் அவர்களால் முன்னேற முடியவில்லை. அதற்குள் குஸ்ரூவின் கிளர்ச்சி தொடங்கி விட்டதால் அவர்கள் பின்வாங்கவேண்டியதாயிற்று. தாம் திரும்பிச் செல்வதற்கு முன்னர், இராஜபுத்திரர்களுக்குள் பிளவை உண்டாக்கும் நோக்கத்துடன், ஸாகரை சித்தூர் ராணுவாக நியமித்து விட்டுச் சென்றனர்.

இரண்டாண்டுகளுக்குப் பின்னர், 1608-ல் ஜஹாங்கீர் மீண்டும், 12,000 குதிரை வீரர், 500 அகதியர், 2,000 துப்பாக்கி வீரர், 60 யானைகள், 80 சிறு பீரங்கிகளைக்கொண்டவொரு படையை, ராணுவை அடக்குமாறு மாபாத்கானின் தலைமையில் அனுப்பிவைத்தார். மாபாத்கான் பெரு வீரத்துடன் போராடி, ராணுவின் நாட்டை அழித்து, அவர் மலைக்குன்றுகளுக்கு ஓடி ஒளிந்துகொள்ளுமாறு அவரை விரட்டினுர். ஆனுல், காடுகளடர்ந்த குன்றுகளும் கணவாய்களும் நிறைந்த மீவார் நாட்டிற்குள் மாபாத்கான் மேலும் முன்னேறிச்செல்லமுடியவில்லை. 1609-ல் அவர் திருப்பியழைக்கப்படவே, அப்துல்லாகான் என்பவர் படையெடுப்பின் தலைமையை ஏற்றுக்கொண்டார். அப்துல்லா, மீவாரின் குன்றுகளைத் தாக்கியபோதிலும் ராணுவைக் கைப்பற்ற முடியவில்லை. ஒரு போரில் அவர் இளவரசர் கரன்சிங்கைத் தோற்கடித்தாரென்ருலும், மீவாரின் வடகோடிக் கேந்திரத்தில் இருந்த ராண்புரா என்ற இடத்தில் இராஜபுத்திரர்களிடம் படுதோல்வியடைந்தார். அப்துல்லாகானுக்குப்பின் இராஜபாஸு என்பவர் படைத் தலைமையைத் தாங்கியபோதிலும் அவரால் இராஜபுத்திரர்களைப் பணியவைக்க முடியவில்லை. எனவே, அவருக்குப்பதில் மிர்ஸா அஸிஸ் கோகா நியமிக்கப்பட்டார். 1613-ல் போர்

நடக்கும் இடத்தில் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடும் எதிரியை அச்சுறுத்தவும் ஜஹாங்கீரே ஆஜ்மீருக்குப் புறப்பட்டார். மீவார் படையின் உயர் தலைமைப் பதவி இளவரசர் குர்ரத்தின் பொறுப்பில் விடப்பட்டது. படையெடுப்பு 1614-ல் மிகவும் ஊக்கத்துடன் தொடங்கியது. ஆனால், சீக்கிரமே இளவரசர் குர்ரத்திற்கும் அஸிஸ் கோகாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதன் விளைவாக அஸிஸ் கோகா திருப்பி அழைக்கப்பட்டார். இதன் பின்னர், படையெடுப்பின் தனித்தலைமையை ஏற்றுக் கொண்ட குர்ரம், 'முழுத்திறமையோடும், கருணையற்ற கடுமையோடும், மிகச்சிறந்த நல்ல காலத் துணையுடனும் இந்தப் படையெடுப்பை நடத்தினார்'. அவர் ராணாவின் நாட்டை அழித்து, ஊர்களையும், நகரங்களையும், நந்தவனங்களையும் தீக்கிரையாக்கி, கோவில்களையும் இடித்துத் தள்ளினார். மலைகளுள் சென்று, ஒளிந்துகொண்டிருந்த ஸிசோடியர்களைப் பட்டினிபோட்டுக் கொல்லும் நோக்கத்துடன், உணவுப் பொருள்கள் செல்லும் எல்லா வழிகளையும் அடைத்துவிட்டார். இவ்வாறு பல தொல்லைகளுக்குள்ளான போதிலும், இ ரா ஜ பு த் தி ர ர் க ள் உலைவில்லாத வீரத்துடன் போரார்டி, எதிரிகளைப் பலமுறை தாக்கினார்கள். இவ்வித இடைவிடாத போராட்டத்தினால் இரு தரப்பினரும் மிக்க துன்பம் அடைந்தார்கள்; ஆனால், பஞ்சத்தாலும், கொள்ளைநோய் காரணமாகவும், முகலாயர்களைவிட, இராஜபுத்திரர்களே அதிகம் தொல்லைப்பட்டார்கள். இந்நிலையில் ராணாவின் ஆதரவாளர்கள் அவரைவிட்டு நழுவத் தொடங்கினார்கள். அவருடைய பிரபுக்கள் சமரசம் செய்ய ஆலோசித்தார்கள். அதுவே சிறந்த வழியென இளவரசர் சுரண்சிங்கும் அறிவுரை கூறினார். சிறு நாடான மீவாரின் செல்வ வளங்கள் யாவும் தீர்ந்து போய்விட்டன. எனவே, பெருமளவில் மக்களையும் பொருளையும் கொண்டிருந்த ஒரு பேரரசுடன் தொடர்ந்து போராடுவதென்பது முடியாத காரியம். எனவே, அமரசிங், குர்ரத்துடன் சமரசப் பேச்சுகளைத் தொடங்கினார். ராணாவின் பிரதிநிதிகளான சுப்கரன், ஹரிதாஸ் என்ற இருவரையும் குர்ரம் மனமார வரவேற்று, தமது சொந்தச் செயலருடன் ஆஜ்மீரில் ஜஹாங்கீரின் பாசறைக்கு அனுப்பிவைத்தார். ராணாவின் நிபந்தனைகளை ஜஹாங்கீர் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். தமது கைரேகை முத்திரையுடன் அவர் ஓர் ஆணையை அனுப்பி, இளவரசர் குர்ரம் சமரச உடன்படிக்கையைச் செய்துகொள்ள அனுமதி வழங்கினார்.

ராணா அமரசிம்மர் இளவரசர் குர்ரமைச் சந்தித்து, அவருக்கு விலையுயர்ந்த மாணிக்கக் கல் ஒன்றையும், ஏழு யானைகளையும், ஒன்பது குதிரைகளையும் இன்னும் பல பரிசுப்பொருள்களை

யும் கொடுத்தார். குர்ரம் ராணுவை மனமார வரவேற்று, தழுவிக்கொண்டு, அவரின் அருகில் இருக்கை வழங்கி, பல விலையுயர்ந்த பரிசுகளையும் கொடுத்தார். ராணு சென்ற பின்னர் இளவரசர் சுரன், குர்ரமைப் பேட்டிகண்டு, முன்போலவே வரவேற்பும் கவுரவமும் பெற்றார். இவ்வாருக 1615-ல் அரசருக்கும் ராணுவுக்கும் இடையே ஓர் உடன்படிக்கை கையெழுத்தானது. அதன் நிபந்தனைகள் வருமாறு:

(1) ராணு, ஜஹாங்கீரைத் தமது மேலரசராக ஏற்றுக் கொண்டார்.

(2) அக்பர் காலந்தொடங்கி முகலாயர்கள் கைப்பற்றியிருந்த சித்தூர் உள்ளடங்கிய ராணுவின் பகுதிகள் யாவற்றையும், அரசர் ராணுவுக்குத் திருப்பிக்கொடுத்தார்.

(3) சித்தூர் கோட்டையைப் பாதுகாப்பதோ, பழுதுபார்ப்பதோ கூடாது.

(4) ராணு அரச தர்பாரில் கலந்துகொள்ள வேண்டியதில்லை; ஆனால், அவருக்குப் பதிலாக அவருடைய மகன் வகையாளாக வந்திருக்கவேண்டும். அரசருக்குத் துணையாக ஒரு படையையும் கொடுக்கவேண்டும்.

(5) பிற இராஜபுத்திரத் தலைவர்களைப் போலன்றி, ராணு முகலாய அரசகுலத்துடன் மணவுறவுகள் செய்துகொள்ளும்படி வற்புறுத்தப்படவில்லை.

மீவாருக்கும் டெல்லிக்கும் இடையேயுள்ள உறவுகளைப் பொறுத்தவரையில் இந்த உடன்படிக்கை வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். ஸிசியோடா குலத்தைச் சேர்ந்த எந்த அரசனும் இதுவரை முகலாயப் பேரரசர்கள் எவருடையவும் மேலுரிமையை ஏற்றது கிடையாது. 1615ஆம் ஆண்டின் உடன்படிக்கை இரண்டு நாடுகளுக்குள் நீண்ட நாட்களாக நடந்துவந்தவொரு போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. முக்கால் நூற்றாண்டுகாலமாக ஜஹாங்கீரையும் அவரது பெரு முன்னோர்களான அக்பரையும் பாபரையும் எதிர்த்துப் போராடி வந்த எதிரிக்கு மிகத் தாராளமான நிபந்தனைகளை விதித்த, பெருமை ஜஹாங்கீருக்கும் அவரது மகனாகிய குர்ரத்திற்கும் உரியது. மீவாரின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்று விலகிக்கொண்டதற்கும், இராஜபுத்திரர்களுடன் நட்புறவான இணக்கக் கொள்கையை வளர்த்ததற்கும் அரசரை இன்னும் போற்றலாம். இதனுல், இரு தரப்பாருக்கும் நன்மை விளைந்தது. அவுரங்கசீப், முன்யோசனை

இல்லாமல் ராஜ்சிம்மரைக் கிளர்ச்சி செய்யும்வரை தொல்லை கொடுத்தது வரைக்கும், மீவார் நாட்டு ராணு முகலாய அரசருக்குப் பற்று விசுவாசம் காட்டிவந்தார். போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தாமல், பரம்பரை எதிரிகளான முகலாயர்களுக்குப் பணிந்து விட்டதைப்பற்றிச் சில வரலாற்று ஆசிரியர்கள் அமரசிம்மரைக் குறை கூறுகிருர்கள். இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. சிறு நாடான மீவார், வரையறையில்லாத காலத்துக்கு, இத்தகைய சம நிலையில்லாத போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருப்பது என்பது இயலாத காரியம். முகலாயப் பேரரசின் செல்வ வளங்கள் மிக அதிகமாக இருந்த காரணத்திஞல், மீவார் எப்படியும் போராட்டத்தை நிறுத்தியே ஆகவேண்டும். மீவாரின் வருங்கால வளத்திற்கு அமைதி தேவைப்பட்டது. 1615ஆம் ஆண்டு உடன்படிக்கை மானத்துடன் அமைதியையும் தந்தது. மீவாரின் உள் நாட்டு இறைமை உரிமை பறிக்கப்படவில்லை. அதன் அரச குலத்தின் பண்டைய மரபுகள் யாவற்றையும் வெற்றிகொண்ட முகலாயர்கள் மதித்தனர். முகலாயரின் மேலரசுரிமையை ராணு பெயரளவில்மட்டும் ஏற்றுக்கொண்டார். அமைதி யிழந்திருந்த மீவார் நாட்டிற்குத் தேவையான அமைதியை வழங்கக்கூடிய இந்தப் பொன்ஞன வாய்ப்பை அமரசிம்மர் புறக்கணிப்பது அறிவுடைய செயலாகாது.

தக்கணப் போர்

அகில இந்தியாவையும் வென்று, அதை முற்றிலும் தம் அரச பரம்பரையின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரவேண்டுமென்ற அக்பரின் கொள்கையை ஜஹாங்கீர் பின்பற்றிஞர். எனவே, அவருடைய தக்கணக் கொள்கையானது, அக்பர் பின்பற்றிய தக்கணக் கொள்கையின் தொடர்ச்சியே ஆகும். அக்பர் பண்டைய இந்து அரசர்களைப் பின்பற்றி, வடபகுதியும் தென்பகுதியும் பொதுவான கலாசாரத்தையும் நலன்களையும் கொண்ட ஒரே நாட்டின் பிரிக்க முடியாத பாகங்கள் என்ற முறையில் கருதிஞர்; இதஞல் தக்கணத்தைச் சமரச முறையில் வெல்லவேண்டுமென்றும், அது தோல்வியடைகின்றபோது போரைப் பயன்படுத்த வேண்டுமென்றும் முயன்ருர். 1605-ல் அவர் இறந்தபோது காண்டேஸ் நாடு முழுவதும், ஆமது நகரில் ஒரு பகுதியும் முகலாயர்களுக்குச் சொந்தமாக விருந்தன. ஆமது நகரில் எஞ்சியிருந்த பகுதிகளையும், முடிந்தால் இன்னும் வெல்லாமல் விடப்பட்டிருந்த நாடுகளான பீஜப்பூரையும் கோல்கொண்டாவையும் வென்று, பேரரசுடன் சேர்த்துக்கொள்ளும் பணியையும் ஜஹாங்கீர் செய்யவேண்டுமென்றிருந்தது. 1608-ல் தக்கணத்தை வெல்லும்படியாக 12,000

பொறுக்கி எடுக்கப்பட்ட குதிரை வீரர்களைக் கொண்ட படையின் தலைவராக கான்கானுவை அவர் அனுப்பிவைத்தார். அவரை மிக்க திறமைபெற்ற படைத்திற நிபுணரான மாலிக் ஆம்பர் என்பவர் எதிர்த்தார். பிறப்பில் அபிசீனியனான மாலிக் ஆம்பர் ஆமது நகரின் தலைமையமைச்சராக உயர்ந்து, பதவி வகித்துவந்தான். அறிவாக்கமான ஆட்சி முறையாலும், தாராளமான நிலவரி முறையாலும் சிதைந்துகிடந்த ஆமது நகரை ஒன்றுபடுத்தி, ஆற்றல் மிக்க மாலிக் ஆம்பர் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றிருந்தார். நைசாம் ஷாகிப் படையில் மராட்டியர்களைப் பெருமளவில் சேர்த்துக்கொண்டு, அவர்களை கொரில்லாப் போர் முறையை விருத்திசெய்யுமாறு மாலிக் ஆம்பர் ஊக்குவித்ததால், அவரது அறிவுக்கூர்மை புலனாகிறது. இத்தகைய போர் முறையில் மராட்டியர்கள் வல்லுநர்களாக இருந்தனர். இது அவர்களுடைய நாட்டின் இயற்கையமைப்பிற்கும், அங்கு வாழ்ந்திருந்த மக்களின் திறமைகளுக்கும் ஏற்றதாக இருந்தது. இவ்வாறு வலுவாக்கப் பட்டிருந்த நைசாம் ஷாகிப் அரசாங்கம், படை எடுத்துத் தாக்கிய வர்களை வீரத்துடன் எதிர்த்துப் போராடியது. கான் கானுவுக்கு முகலாயப் படை வீரர்களின் மனவுறுதியைப் பேணிக் காக்க முடியாமல் போய்விட்டது. எனவே, படைவீரர்களுக்குள் ஒற்றுமையையும் வலிமையையும் உண்டாக்கும் நோக்கத்துடன் ஜஹாங்கீர், இளவரசர் பார்வெஸிடம் படைத்தலைமையைப் பெயரளவில் ஒப் படைத்து, ஆஸப்கானை அவருக்குக் காவலராக நியமித்தார். இளவரசர் காண்டேஷ், பீரார் பகுதிகளின் கவர்னராக நியமனம் பெற்று, 1610ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தக்கணத்திற்கு அனுப்பப்பட்டார். ஆனால், அவரால் கான்கானுவைவிட அதிகச் சிறப்பாக ஒன்றும் செய்யமுடியவில்லை. அவர் தக்கணத்தில் தலைமை தாங்கிய பல ஆண்டு காலத்தில் ஒன்றும் சாதிக்கவில்லை. ஒருவர் பின் ஒருவராக கானிஜஹான் லோடி, அப்துல்லாகான் போன்ற முகலாயப் படைத் தலைவர்கள் முயற்சி செய்தும், வெற்றி கிடைக்கவில்லை. மாலிக் ஆம்பரின் மராட்டிய கொரில்லா வீரர்கள் நேரடியாகப் போர் செய்வதேயில்லை. முகலாயப் படைக்கு அண்மையில் அவர்கள் வட்டமிட்டுக்கொண்டு, அவர்களை மெதுவாகப் பதுங்கிடங்களுக்கு இட்டுச் சென்று, உணவுப் பொருள்களின் வழிகளைத் தடைசெய்து, சரியான காலத்தில் அவர்களின்மீது பாய்ந்து தாக்கினார்கள். இத்தகைய தந்திரங்கள் முகலாயர்களுக் குப் பழக்கமில்லாத காரணத்தால் அவர்கள் சலிப்படைந்து, மன வுறுதியை இழக்கவேண்டியதாயிற்று. படைத்தலைவர்கள் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிக்கொண்டு, தளபதிகளின் திட்டங் களைச் சிதைத்துக்கொண்டிருந்தார்கள்.

1611-ல் முகலாயர்கள் ஆமது நகரைச் சுற்றி வளைத்துக் கொள்ள ஒரு பெரு முயற்சி செய்தனர். குஜராத் பகுதியிலிருந்து அப்துல்லாகான் தாக்கவேண்டியது. கானி ஜஹான் லோடி, மான்சிங், அமிர் உலும்ரா ஆகியோர், பீரார், காண்டேஷ் பகுதிகளிலிருந்து புறப்பட்டு அதே நேரத்தில் தாக்கவேண்டியது. ஆனால், பீராரிலும் காண்டேஷிலுமிருந்து தனது சக தளபதிகள் புறப்படுவதற்கு முன்னரே, அப்துல்கான் அதிவிரைவாகத் தான் தாக்கவேண்டிய இடத்தைநோக்கிப் புறப் பட்டுவிட்டதால், இந்தத் திட்டமும் வெற்றிபெறவில்லை. மாலிக் ஆம்பரின் கொரில்லா வீரர்கள் அவர்மீது பாய்ந்து, அவரைப் பெருத்த சேதத்துடன் குஜராத் நோக்கி ஓடும்படி விரட்டியடித் தனர். ஜஹாங்கீர் பெருஞ் சினங்கொண்டார். அவர் அப்துல்லா கானைக் கண்டித்து நீக்கிவிட்டு, கான் கானுவை மீண்டும் தக்கணப் படைத்தலைவராக நியமித்தார். 1612-ல் கான் கானு மீண்டும் படையெடுப்புகளைத் தொடர்ந்து, தக்கணத்தாரை முறியடித்தார். ஆனால், முகலாயர்கள் முழு வெற்றி பெறவில்லை. அவர்களுக்குள் முன்போலவே பிணக்குகள் ஏற்பட்டுத் தொல்லைகள் விளைந்தன.

மாலிக் ஆம்பருக்கு எதிராக முகலாயர் தொடர்ந்து தோல்வி யுற்றதால், ஏற்பட்ட களங்கத்தை நீக்கவேண்டுமென்று, நூர் ஜஹான் சிறு குழுவின் ஆலோசனையின்மேல், இளவரசர் பார் வெஸியை அலகாபாத்துக்கு மாற்றிவிட்டு, அவருக்குப் பதிலாக இளவரசர் குர்ரத்தைத் தக்கணப் படையெடுப்புக்குப் பொறுப்பாள ராக ஆக்கவேண்டுமென்று முடிவு செய்தார். 1616ஆம் ஆண்டின் தொடக்கத்தில், குர்ரம், ஷா சுல்தான் என்ற சிறப்புப் பெயர் வழங்கப் பெற்று, ஆமது நகருக்குச் செல்ல விடைபெற்றுக்கொண்டார். போர்க்களத்தின் அருகே இருக்கவேண்டுமென்றும், எதிரிக ளிடையே அச்சத்தை உண்டாக்கவும், அரசரே தமது அரசவை யுடன் மாண்டூ நகருக்குச் சென்று தங்கினார். 1617ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் பூரான்பூர் வந்தடைந்த இளவரசர் குர்ரம், உடனே மாலிக் ஆம்பருடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார். அதிகப் படைவலிமையைக் கண்டஞ்சிய மாலிக் ஆம்பர், நிபந்தனை களை ஏற்றுக்கொண்டு, முகலாயர்களிடமிருந்து அண்மையில் கைப் பற்றியிருந்த பலகாத் நாட்டின் பகுதிகளை அவர்களுக்குக் கொடுப்ப தாக ஒப்புக்கொண்டார். அவர் முகலாயர்களுக்கு ஆமது நகர் கோட்டையையும் கொடுத்தார். அரசரான அடில்ஷாவும், இளவரசர் குர்ரத்தை நேரில் சந்தித்து, பதினைாயிரம் இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பரிசுப் பொருள்களை வழங்கினார். இந்த நிபந்தனை களை ஜஹாங்கீர் ஏற்றுக்கொள்ளவே, 1617ஆம் ஆண்டின் உடன் படிக்கை கையெழுத்தாகியது. முகலாய அரசவை இந்தச் சமரச

உடன்பாட்டைச் சிறந்த சாதனையெனப் பாராட்டி, குர்ரத்தின் வெற்றிகளை மிகைப்படுத்தியது. இளவரசர் பெரிய வெற்றியை அடைந்துவிட்டதாக, நூர்ஜஹானின் சிறு குழு, அதனை ஆரவாரச் சிறப்புடன் கொண்டாடி மகிழ்ந்தது. இதனால், பெரு மகிழ்வுற்ற ஜஹாங்கீர், இளவரசர் குர்ரத்திற்கு ஷாஜஹான் என்ற பகட்டான பட்டத்தை வழங்கினார். ஆனால், குர்ரம், அல்துல்லாகான் ஓரளவு பெற்றிருந்த வெற்றிகளைப் பயன்படுத்திக் கொண்டு, தம்மிடமிருந்த சிறந்த படை வன்மையால் அச்சுறுத்தி, ஒரு தாற்காலிக சமரச உடன்பாட்டைச் செய்துகொண்டார் என்பது தான் உண்மை. ஆனால், மாலிக் ஆம்பர் தோற்கடிக்கப்படவில்லை; இன்னும் இரண்டாண்டுகளில் அவன் மீண்டும் தலைதூக்கினான்.

1620-ல் மாலிக் ஆம்பர், 1617ஆம் ஆண்டில் செய்து கொண்ட உடன்படிக்கையை உதறித்தள்ளிவிட்டு, பீஜப்பூர், கோல்கொண்டா நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு, கான் கானாவைத் தாக்கி, அவரை ஆமது நகர்க் கோட்டையில் முற்றுகை யிட்டான். முகலாயர்கள் நேரடிப்போர்களில் வெற்றி பெற்றாலும், தக்கணத்தாரின் கொரில்லாப் போர் முறைக்கு முன்னர் வலுவிழந்து, பூரான்பூரில் தஞ்சம் தேடி ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது. தக்கணப் படைகள் மாண்டூ வரையிலும் திடீர்தாக்குதல்களைச் செய்தன. கான்கானா பல முறை கேட்டுக்கொண்டதன்பேரில் ஜஹாங்கீர், இறுமாப்புகொண்ட மாலிக் ஆம்பரைத் தண்டிக்கும் படி, ஷாஜஹானைத் தெற்கே அனுப்பிவைத்தார். ஆனால், பஞ்சா பில் காங்க்ரா முற்றுகை நடந்துகொண்டிருந்ததால், இளவரசர் சிறிது காலத்திற்குத் தக்கணத்திற்கு வரமுடியாத நிலை இருந்தது. அவரது மூத்த சகோதரரான குஸ்ருவைத் தம் காவலில் விட்டு விடும்படி ஷாஜஹான் வற்புறுத்திக்கொண்டிருந்தார். இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டதும், ஷாஜஹான் தந்தையிடம் விடை பெற்றுக்கொண்டு, தக்கணத்தை நோக்கி விரைந்தார்; உஜ்ஜயினியிலிருந்து அபுல் ஹாஸன் தலைமையில் 5,000 குதிரை வீரர்களையும், பைராம் பெக்கின் தலைமையில் ஒரு படையையும் அனுப்பி, மாண்டூவின் சுற்றுப்புறத்திலிருந்து மராட்டியர்களை விரட்டியடிக்க ஏற்பாடு செய்தார். இந்த ஏற்பாடு அதிகச் சிரம மில்லாமல் நிறைவேறியது. ஆமது நகர் அரசரின் புதிய தலை நகரான கிர்க்கியிலிருந்து (ஆமது நகர் அருகில்) மராட்டியர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். ஷாஜஹானின் படை வீரர்கள் ஆமது நகரின் உள்ளே செல்லத் தொடங்கினர். அங்கு இன்னும் முகலாயப் படைகள் போராடிக்கொண்டிருந்தன. முகலாயப் படைகள் பாதானை நெருங்கியதும், மாலிக் ஆம்பர் சரணடைந்தார். அதே சமயத்தில் தக்கணத்தார் ஆமது நகர் முற்றுகையை விடுவித்

தனர். தக்கணப் படையெடுப்பை விரைவாக முடித்துவிடவேண்டு மென்று ஷாஜஹான் துடித்துக்கொண்டிருந்தார். அவரைப் பொறுத்தவரையில், நூர்ஜஹானின் போக்குமாறிக்கொண்டு வந்த தால், அவர் 1621-ல் அவசரகோலமாகச் சமரச உடன்படிக்கை யொன்றைச் செய்துகொண்டார். 1617-க்குப் பின்னர் தாம் கைப் பற்றியிருந்த முகலாயப் பகுதிகள் அனைத்தையும் தக்கணத்தார் திருப்பிக்கொடுத்தனர். மேலும், பதினான்கு இலட்சம் ரூபாய் வருமானம் தரக்கூடிய சில சுற்று வட்டாரங்களையும் கொடுத்தார்கள். ஆமது நகர், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய நாடுகள் முறையே பன்னிரண்டு இலட்சம், பதினெட்டு இலட்சம், இருபது இலட்சம் ரூபாய்களைத் திறையாக அரசருக்குச் செலுத்தின.

இந்த உடன்படிக்கை ஷாஜஹானுக்கு மேலும் புகழைத் தேடித் தந்தது. அவரது மதிப்பு இன்னும் பல மடங்கு உயர்ந்தது. 1621 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அவரது தந்தையார் பிணியுற் றிருக்கிறார் என்ற செய்தி அவருக்குக் கிடைத்தது. சிறிது பின்னர் அவர் தமது மூத்த சகோதரனான குஸ்ருவை, ராஸா என்பவரின் துணையோடு சுருக்கிட்டுக் கொல்ல ஆணையிட்டார். அவர் கொல்லப்பட்ட வேளையில் தன்மீது யாரும் ஐயங்கொள்ளக்கூடா தென்று, ஷாஜஹான் வேட்டையாடச் சென்றுவிட்டார். இந்த நிகழ்ச்சி நடந்து சில நாட்களில், குஸ்ரு குடல்வலி காரணமாக இறந்துவிட்டானென்று அவர் தம் தந்தைக்கு அறிவித்தார். ஜஹாங்கீர் மிக மனம் வருந்தினார். அரிய மனப்பண்புகளையும் ஆற்றல்களையும் கொண்டு, எல்லா வகுப்பு மக்களிடையேயும் பெரு மதிப்புப் பெற்று விளங்கிய இளவரசர் இறந்ததைப்பற்றி, நாடு முழுவதுமே துக்கம் கொண்டாடியது.

காந்தகாரை இழத்தல்

தகர்க்க முடியாத அரணாகிய காந்தகார் எவ்வாறு பொறாமை கொண்ட இரு எதிரிகளான, இந்தியா, பாரசீகம் ஆகிய இரண்டு பேரரசுகளுக்கும் இடையே தீராத போட்டியின் காரணமாக இருந்துவந்தது என்பதை ஏற்கெனவே கண்டோம். இரு நாடுகளும் அமைதி பூண்டிருந்தபோதிலும், தங்கள் தங்கள் நோக்கங்களை அடையவேண்டுமென்று, ஒன்று மற்றொன்றின் ஐயங்களைத் தூண்டிக்கொண்டிருந்தது. ஜஹாங்கீருக்குப் புகழுரை கூறி, அவரைத் தம்வயப்படுத்தி, அரசர் எதிர்பாராத சமயத்தில் காந்த காரைத் தாக்கிக் கைப்பற்றிக்கொள்ளவேண்டுமென்பது பாரசீக ஷாவின் கொள்கை. இத்தகையவொரு முயற்சியை 1606-ல் பாரசீகர்கள் செய்து பார்த்துத் தோல்வி கண்டார்கள். தனிப் படை மட்டும் இந்தத் திட்டத்தைக் கைகூடச் செய்யாது என்று கண்ட

ஷாஅப்பாஸ் 1611ஆம் ஆண்டின் தொடக்கத்தில், பல பரிசுகளுடனும், அக்பர் இறந்ததற்காகப் பரிவுச் செய்தியும், ஜஹாங்கீர் அரியணையேறியதைப் பாராட்டி வாழ்த்துகளும் கொண்டு, ஒரு தூதுவரை ஆக்ராவுக்கு அனுப்பிவைத்தார். இதைத் தொடர்ந்து இன்னும் பல தூதுக் குழுக்களும் சென்றன. இவை யாவும், ஜஹாங்கீரைப் பாதுகாப்பில்லாமல் இருக்கச்செய்து, தக்க நேரத்தில் காந்தகாரைக் கைப்பற்றிக்கொள்வது என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. 1615-ல் இரண்டாம் தூதுக்குழுவும், 1616-ல் மூன்றும் குழுவும், 1620-ல் நான்காவது ஒன்றும் அனுப்பப்பட்டன. 1621ஆம் ஆண்டின் இறுதியில் நூர்ஜஹான் சிறு குழுவின் செல்வாக்குச் சிதறடிக்கப் பட்டதையும், நூர்ஜஹானுக்கும் ஷாஜஹானுக்கும் இடையே மனக்கசப்பு வளர்ந்து வருவதையும் கேள்விப்பட்டிருந்த ஷா, காந்தகாரைக் கைப்பற்ற ஒரு பெரும் படையை அனுப்பினார், 1622ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்த முற்றுகை ஆரம்பித்தது. இன்னொரு பாரசீகப் படை தாட்டா நாட்டைக் கைப் பற்றுவதற்காக விரைந்து வருகிறது என்ற வதந்தியும் பரவியது. அதுகாலை ஜஹாங்கீர் காஷ்மீரில் தங்கி, பிணிக்குப் பின் குணம் பெற்றுக்கொண்டிருந்தார். அப்போது தக்கணத்திலிருந்த ஷாஜஹானை, காந்தகாரை மீட்க விரையும்படி அரசர் பணித்தார். ஆனால், ஏற்கெனவே அரசருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யவேண்டு மென்று சிந்தித்துக்கொண்டிருந்த இளவரசர், அரசரின் ஆணையை ஏற்க மறுத்துவிட்டார். நாற்பத்தைந்து நாள் முற்றுகைக்குப் பின்னர் காந்தகார் வீழவே, பாரசீகர்கள் அதனைப் பிடித்துக் கொண்டனர். காந்தகார் பாரசீகத்தின் ஒரு பகுதி என்ற முறையில் அதனைக் கைப்பற்றியது நீதியானது என விளக்கி, ஷா அப்பாஸ், ஜஹாங்கீருக்கு எழுதினார். இனியாவது இரு நாடுகளும் நட்புறவுகொண்டு இருக்கவேண்டும் என்ற நம்பிக்கை அந்தக் கடிதத்தில் காணப்பட்டது. ஆனால், ஜஹாங்கீர் ஷாவின் துரோகச் செயலுக்கும் இழிகுணத்திற்கும் அவரைக் கடிந்துரைத்துவிட்டு, கோட்டையை மீண்டும் கைப்பற்றுமாறு இளவரசர் பார்வெஸிக்கு ஆணையிட்டார். இதற்கிடையில் ஷாஜஹானின் கிளர்ச்சி தொடங்கிவிட்டபடியால், இந்த முயற்சி வெற்றிபெறவில்லை.

ஷாஜஹானின் கிளர்ச்சி

1611 முதல் பேரரசை ஆண்டுவந்த நூர்ஜஹானின் கட்சி 1621ஆம் ஆண்டின் முடிவுக்குள் நலிவுறுகின்ற அறிகுறிகள் காணப்பட்டன. ஜஹாங்கீர் கட்டமைந்த தனது உடலைச் சிற்றின்

பங்களினாலும், அபினி, மது முதலியவற்றை அளவற்று அருந்திய தாலும் கெடுத்துக்கொண்டதால் அவர் பிணியுறத் தொடங்கினார். இதனால் நூர்ஜஹான் பீதியடைந்தார். இயல்பாகவே பேராசையும், யாருக்கும் பணியாத பண்பும் கொண்ட நூர்ஜஹான், அரசர் இறந்து, ஷாஜஹான் அரியணையேறினால், தனது மேலாதிக்க அதி காரம் பறிபோவது மட்டுமன்றி, அரசியல் விவகாரங்களில் தனக் குள்ள செல்வாக்கும் மறைந்துவிடும் என்பதைக் கண்டுணர்ந்தார். ஷாஜஹானின் திறமை, ஊக்கம், ஆவல், செருக்கு முதலியவற்றை மிகச்சிறப்பாக அறிந்திருந்த நூர்ஜஹான், அவர் அரசாங்க காரி யங்களில் தமக்கு எந்தவிதமான அதிகாரத்தையும் விட்டுவைக்க மாட்டார் என்பதை உறுதியாக நம்பினார். பேரரசில் நூர்ஜஹான், ஷாஜஹான் ஆகிய இரு பெருஞ் சிறப்பாற்றல் பெற்றவர்களுக்கு இடம் இல்லை என்பதைப் புரிந்துகொண்டு, அவர் ஜஹாங்கீரின் கடைசி மகனான ஷாரியாரை வாரிசுரிமைக்காக ஆதரிக்க முடிவு செய்தார். ஷாரியார், தாம் கூறியபடியெல்லாம் ஆடக்கூடிய கைப்பாவையாக இருப்பான் என்பது நூர்ஜஹானுக்குத் தெரியும். வன்மை படைத்த இந்த இருவருக்கும் இடையே நிலவிய அரசியல் கருத்து வேறுபாடுகளை, இவ்விருவருக்கிடையேயும் இருந்த சமயச் சார்பான நோக்கங்களும் அதிகப்படுத்தின. நூர்ஜஹான் விரி நோக்குடைய ஷியா வகுப்பைச் சேர்ந்தவள். பிற சமயங்களைச் சகித்துக்கொள்ளும் இயல்புள்ளவள். அதற்கு மாறாக ஷாஜஹான் தனது சுன்னி வகுப்புக் கொள்கையில் நாளுக்கு நாள் அதிக தீவிர மான நம்பிக்கை கொண்டிருந்தார். பாரசீகர்களின் மேலாண்மையை யும், அரசவையில் ஷியா சமயக் கொள்கை வளர்ந்து ஆதிக்கம் பெறுவதையும், அவர் வெறுக்கத் தொடங்கினார். அரியணை வாரிசுரிமைக்கு, ஷாரியாரை ஒரு வேட்பாளராக நிறுத்திவைக்கும் திட்டத்துடன், நூர்ஜஹான் தனக்கும் ஷெர் ஆப்கனுக்கும் பிறந்த குழந்தையாகிய லால்டி பீகத்தை 1620ஆம் ஆண்டு டிசம்பரில் இளவரசர் ஷாரியாருக்குத் திருமண நிச்சயம் செய்தாள். 1621 ஏப்ரலில் இந்தத் திருமணம் ஆக்ராவில் நடைபெற்றது. ஷாரியார் 8,000 ஸாத், 4,000 ஸாவர் மான்சுப் தகுதிக்கு உயர்த்தப்பட்டார்.

கெட்ட காலம் காரணமாக, நூர்ஜஹான்மீது நிலையான செல் வாக்கைச் செலுத்திவந்த அவளுடைய அன்னையார் 1621ஆம் ஆண்டிலும், அவளின் தந்தையான இதிமத் உத்தௌலா, அடுத்த ஆண்டு ஜனவரியிலும் இறந்துபோனார்கள். இந்த இரு மரணங் களும், நூர்ஜஹானின் சிறு குழு சிதைவதற்கும், நூர்ஜஹானுக்கும் ஷாஜஹானுக்கும் இடையே மனக் கசப்பு வளர்வதற்கும் வழி வகுத்தன.

இச் சமயத்தில்தான் பாரசீகர்கள் காந்தகார் அரணை முற்றுகை செய்தனர். முற்றுகையிடப்பட்ட கோட்டையை விடுவிக்குமாறு ஷாஜஹான் உடனே புறப்பட்டுச் செல்லவேண்டுமென்று அரசர் பணித்தார்; ஆனால், இளவரசர் நூர்ஜஹான்மீது பெரும் ஐயம் கொண்டிருந்ததால், அவர் தக்கணத்தில் தனக்கிருந்த பிடியை விட்டுவிட விரும்பவில்லை. மிக விரைவாகக் குன்றிவந்த அரசரின் உடல் நிலை காரணமாக அவர் இறந்துபோக நேரிட்டால், நூர் ஜஹான் ஷாரியாரை அரசனாக அறிக்கை செய்து, தாம் பிறப் புரிமை என்று கொண்டாடிய வாரிசுரிமையைப் பறித்துவிடுவாள் என்று ஷாஜஹான் பயந்தார். எனவே, காந்தகார் படையெடுப்பின் தனித்தன்மையையும், பஞ்சாபின் கவர்னர் பதவியையும் தனக்குத் தரவேண்டுமென்றும், அவரது குடும்பத்தினர் தங்குவதற்காக ரத்தாம்பர் கோட்டையையும் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், அரசரிடம் கேட்டுக்கொண்டார். இந்தக் கோரிக்கைகளெல்லாம் நிறைவேற்றப்படுமானால், மழைக்காலம் முடிந்தபின் தாம் காந்த காருக்குப் புறப்படுவதாகச் சொன்னார். ஜஹாங்கீரை ஒருவித மான அறிவாக்கப் பிணைப்பினால் கவர்ந்திருந்த நூர்ஜஹான், ஷாஜஹான் அரசத் துரோக நோக்கம் கொண்டிருப்பதாகத் தன் கணவரை உறுதியாக நம்பும்படி செய்தாள். மழைக்காலம் முடிந்ததும் காந்தகாருக்குச் செல்வதை ஷாஜஹான் விரும்பினால், அரசவைக்கு அரசாங்க அதிகாரிகளையும், அவனது தலைமையில் உள்ள படைகளையும் உடனடியாக அனுப்புமாறு ஜஹாங்கீர் கோபத்துடன் எழுதினார். இந்த நேரத்தில் நடந்த ஓர் அவல நிகழ்ச்சி இரு கட்சிகளுக்கும் இடையில் பெரும் பிளவை உண்டாக் கியது. இதற்குச் சின்னாட்களின் முன்னர்தான் ஷாஜஹான் டோல்பூர் பர்கானாவைத் தமக்கு ஜாகீராக மான்யம் செய்யவேண்டு மென்று மனுச் செய்திருந்தார். அரசரின் அனுமதி கிடைத்து விடும் என்ற எண்ணத்தில் அவர் டாரியாகானை முன்னதாக அனுப்பி, டோல்பூரில் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு அனுப்பி வைத்தார். ஆனால், நூர்ஜஹான் ஏற்கெனவே அதனை ஷாரியாருக் காக ஜாகீர் பெற்று, அதன் பொறுப்பில் ஒரு பௌஜ்தாரை நியமித் தாள். டாரியாகான் டோல்பூரைக் கைப்பற்ற முனைந்தபோது, அவருக்கும் ஷாரியாரின் பௌஜ்தாரான ஷாரிஃப்-உல்-மாலிக் என்பவருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. மாலிக்கின் கண்ணில் காயம் பட்டது. பலபேர் இந்தப் போராட்டத்தில் உயிரிழந் தார்கள். அரசியார் இந்த நிகழ்ச்சியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார். ஜஹாங்கீர் ஷாஜஹானைக் கடிந் துரைத்து, அவரை அரசவைக்கு அழைத்துத் தக்கணப் படையை உடனே தலைநகருக்கு அனுப்பிவைக்குமாறு ஆணையிட்டார்.

ஷாஜஹானைப் பகைத்துக்கொண்ட அரசர், ஷாரியாரை 12,000 ஸாத், 8,000 ஸாவர் மான்சுப் தகுதிக்கு உயர்த்தி, அவரைக் காந்தகார் படையெடுப்பின் தலைமைத் தளபதியாகவும் நியமித்தார். இதனைத் தொடர்ந்து ஷாஜஹானுக்கு பஞ்சாபில் கொடுக்கப்பட்டிருந்த சில ஜாகீர்கள் ஷாரியாருக்கு மாற்றப்பட்டன. இறுதியாக ஷாஜஹான் எவ்வளவோ விளக்கங்களும் மன்னிப்பும் வழங்கியபோதிலும், வடக்கில் அவனுக்கிருந்த ஜாகீர்கள் யாவும் ஷாரியாருக்குக் கொடுக்கப்பட்டன. இவற்றில் ஹிஸார் என்ற ஜாகீர் பட்டத்து இளவரசரின் தனியுரிமைச் சொத்தாகக் கருதப் பட்டது. நூர்ஜஹானின் சகோதரரான ஆஸப்கான் அவருடைய மருமகனை ஷாஜஹானுக்கு மறைமுக ஆதரவு அளிப்பதாக ஐயங் கொண்ட அரசியார் காபூலிலிருந்து மாபாத்கானை வரவழைத்து அவனை 6,000 ஸாத், 5,000 ஸாவர் மான்சப்புக்கு உயர்த் தினுள். முகலாயப் பேரரசின் மிக்க ஆற்றல்படைத்த வீரனுன மாபாத், இதுவரையிலும் அரசவையினுல் புறக்கணிக்கப்பட்டிருந் தான். மாபாத்தின் எதிரியான ஆஸப்கான், ஆக்ராவிலிருந்த அரசருக்குச் சொந்தமான செல்வங்களைக் கொண்டுவருமாறு அனுப்பப்பட்டான்.

இத்தகைய நடவடிக்கைகள் யாவும் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே, காந்தகாரை எதிரிகள் கைப்பற்றிக்கொண்டதாகச் செய்தி வந்தது. பாரசீக ஷா மன்னரின் மீது அரசர் துரோகக் குற்றம் சாட்டி, அந்த முக்கியக் கோட்டையை மீண்டும் கைப்பற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஷாஜஹானுக்குப் பணித்தார். இதே சமயத்தில் ஷாஜஹான் வெளிப்படையாகக் கிளர்ச்சி செய்திருப்பதாகச் செய்தி வந்தது. அதுகாலை செருக்குற்ற தமது மனைவியின் ஆதிக்கப் பிடியில் சிக்கிக்கிடந்த வன்மையற்ற தமது தந்தையிடமிருந்து நீதி கிடைக்காதென உணர்ந்தஷாஜஹான் மிகவும் அவநம்பிக்கை கொண்டிருந்தார். மேலும், அரசரின்படைகள் அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்குள், ஆக்ராவைத் திடீரெனத் தாக்கு கின்ற அவரது வருங்காலத் திட்டத்தைப்பற்றியும் ஷாஜஹான் நம்பிக்கை இழந்திருந்தார். நூர்ஜஹானின் ஒற்றர் படையினர் வெகு சிறப்பாகத் துணைபுரிந்தனர். கிளர்ச்சிக்காரரின் திட்டங் களை முறியடிக்கத் தேவையான ஏற்பாடுகளை அரசியார் தகுந்த காலத்திலும், பயன்விளைக்கும் வழியிலும் செய்தார்கள். பீஹாரி லிருந்து இளவரசர் பார்வெஸ், அவருடைய ஆட்களுடன் வரவழைக்கப்பட்டார். ஆம்பர், மார்வார், கோட்டா, புந்தி, ஓர்ச்சா முதலிய நாடுகளில் உள்ள உண்மையான இராஜபுத்திரத் தலைவர்கள் அரியணையைக் காக்க வரும்படியாக அழைக்கப்பட் டார்கள். மிர்ஸா அஸிஸ் கோகாவுடன் சமரசம் செய்யப்பட்டது.

அரசரின் படைகளுக்குத் தலைமை தாங்கும்படி மாபாத்கான் நியமிக்கப்பட்டார். மாண்டுவிற்குச் சென்று, தற்காப்பு ஏற்பாடுகளைத் தலத்திலே பார்வையிடும் நோக்கத்துடன் அரசரும், அரசியாரும் டெல்லிக்குப் புறப்பட்டார்கள் (பிப்ரவரி 1623). அதே நேரத்தில் காலத்தைக் கடத்தும் எண்ணத்துடன், கிளர்ச்சிக்கார இளவரசருக்கு அபாய அறிவிப்புச் செய்வதற்காகத் திறமையுள்ள ஒரு தூதுவர் அனுப்பப்பட்டார். 1623ஆம் ஆண்டு மே திங்களில் அரசர் ஆஜ்மீரை வந்தடைந்தார்.

தலைமையிடமாகிய மாண்டுவிலிருந்து, ஷாஜஹான் தக்கணப் படையின் முக்கிய அதிகாரிகளுடன் பதேபூர் சிக்ரியை நோக்கி விரைந்தார். இந்த அதிகாரிகளில் பெரும்பாலோர் ஷாஜஹானின் கிளர்ச்சி நோக்கம் நியாயமானது என்று உறுதியாக நம்பினார்கள். பதேபூரின் கோட்டைவாயில்களை அதன் காவலர் முன்னறிவுடன் அடைத்துவிட்டதால், ஷாஜஹான், நகரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் வெற்றிபெறவில்லை. பின்னர் இளவரசர் ஆக்ராவைத் தாக்கினார். ஆனால், 1623ஆம் ஆண்டு பிலோச்புரா என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் அரசர் படையினர் அவரை முறியடித்தார்கள். இந்தப் போர்க்களத்தில் ஷாஜஹானுக்கு ஒரு பேரிழப்பு ஏற்பட்டது. இந்தியாவிலுள்ள தளபதிகளில் மிகச் சிறந்தவர்களில் ஒருவராகக் கருதப்பட்டவரும், ரேய் ராயன் விக்ரமஜித் என்று சிறப்புப் பெயர் பெற்றவரும், ஷாஜஹானின் வன்மையான ஆதரவாளருமாகிய சுந்தர் என்ற வீரர் இந்தப் போரில் வீழ்ந்தார். அரசர் படையினர் ஒருமாத காலத்திற்குப் பின்னர் பார்வெஸின் தலைமையில், மாண்டுவிற்கு ஓடித் தஞ்சம் புகுந்திருந்த கிளர்ச்சிக்காரர்களைத் துரத்திச்சென்றனர். பெயரளவில் மட்டும் தலைமை தாங்கிய பார்வெஸ் பீஹாரிலிருந்து வந்திருந்தார். ஷாஜஹானுக்கு எதிராக அவரை உயர்த்தவேண்டும் என்ற நோக்கத்தோடு இது வரையிலும் இல்லாத வகையில் இவருக்கு 40,000 ஸாத், 30,000 ஸாவர் மான்சுப் வழங்கப்பட்டது. அரசர் படைகளின் உண்மைத் தலைவரான மாபாத்கான் வருகிறதைக் கேள்விப்பட்டு ஷாஜஹானை விட்டுப் பலர் ஓட்டம் பிடித்தனர். ஷாஜஹானே அஸிகாருக்குத் தப்பியோடினார். நர்மதை ஆற்றைக் கடக்கும் இடங்களைக் காவல் செய்யவும், மாபாத்கான் தக்கணத்துக்குள் புகுந்துவிடாதபடி தடுக்கவும், அவர் பைராம் பெக்கின் தலைமையில் ஒரு படையை மட்டும் விட்டுச் சென்றார். ஷாஜஹான் பின்வாங்கிச் சென்றதால் குஜராத்திலிருந்த அவருடைய அதிகாரிகளுக்குள்ளும் படை வீரர்களிடையேயும் பிணக்குகள் ஏற்பட்டன. ஷாஜஹான் குஜராத்திற்கும் கவர்னராக இருந்தார். இந்த நிகழ்ச்சிகளின் காரணமாகக் கிளர்ச்சிக்காரர்கள் குஜராத் மாநிலத்தை இழக்க

வேண்டியதாயிற்று. ஷாஜஹான் தமது குடும்பத்தை அஸிகாரில் வைத்துவிட்டு, அவர்மட்டும் முகலாயத் தக்கணத்தின் தலைநகரான பூரான்பூருக்குப் புறப்பட்டார். இதுவரை அவருடைய எதிரியாக இருந்த ஆமது நகரின் மாலிக் ஆம்பரிடம் அவர் செய்து கொண்ட பரிதாபகரமான வேண்டுகோளும் மறுக்கப்பட்டது. மாலிக் ஆம்பர் ஆதரவற்ற இளவரசர் ஒருவருக்காக மாபெரும் முகலாயப் பேரரசின் கோபத்தைச் சம்பாதித்துக்கொள்ள விரும்பவில்லை. பீஜப்பூர் தலைவருக்குக் கொடுக்கப்பட்ட அத்தகைய கோரிக்கையும் ஏளனத்துடன் மறுக்கப்பட்டது. எனவே, ஷாஜஹான் மாபாத்கானுடன் சமரசப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதைத் தவிர, வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்ட போதிலும், இதிலும் அவருக்குத் தோல்வியே காத்திருந்தது. இளவரசர் தம் கட்சிக்கு ஆதரவாக இருக்கவேண்டுமென்று தனிப்பட்ட கோரிக்கையாலும், புனித குரானின்மேல் ஆணையாலும் சேர்த்துக்கொள்ள நாடிய, ஷாஜஹானின் தூதுவராகிய அப்துர் ரஹிம் கான்கானு, மாபாத்கானுடன் சேர்ந்து கொண்டான். இதற்குள் தப்பியோடிய ஷாஜஹானைக் கைப்பற்றவேண்டுமென்று மாபாத்கான் நர்மதையாற்றைக் கடந்து விட்டார். இளவரசரைத் துரத்திச் சென்று, அரசவைக்குச் சிறைப் பிடித்துக்கொண்டுவரவும், அவரை நாட்டைவிட்டு வெளியேற்றவும், அரசர் மாபாத்கானுக்குக் கட்டளையிட்டார். எனவே, ஷாஜஹானின் பழைய எதிரியாகிய கோல்கொண்டா சுல்தானின் நாட்டில் தஞ்சம் புகுவதைத் தவிர, அவருக்கு வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை (அக்டோபர்). அரசர் படையினரும் மழைக் காலம் முடியும்வரை பூரான்பூரில் இருக்கவேண்டுமென்று அங்குத் திரும்பினார்கள். ஜஹாங்கீரும் ஆஜ்மீரில் தமது முகாமைக் கலைத்துவிட்டு 1623ஆம் ஆண்டு நவம்பர் தொடக்கத்தில் காஷ்மீருக்குப் புறப்பட்டார்.

தெலிங்கானு வழியாக ஷாஜஹான் மசூலிப்பட்டணத்தையடைந்தார். அங்குச் சில நாட்கள் தங்கிப் பின் அங்கிருந்து கிளம்பி, வடகிழக்கு முகமாக, அதுகாலை முகலாய மாநிலமாக இருந்த ஒரிஸாவிற்குள் நுழைந்தார். ஒரிஸாவின் கவர்னராக இருந்த அறிவற்ற கோழையான அகமது பெக்கான் என்பவர் நகரத்தைக் காக்கப் போதிய ஏற்பாடுகளைச் செய்யாமல், முதலில் கட்டாக்கிற்கும், பின்னர் பர்துவானுக்கும், இறுதியாக டாக்காவுக்கும் தப்பியோடினன். சாலித் என்ற பூர்துவானின் வீரமிக்க பௌஜ்தார் ஷாஜஹானை எதிர்க்க முடிவு செய்தார்; ஆனால், அவர் தோல்வியுற்றுச் சரணடையவேண்டியதாயிற்று. பர்துவானை ஆக்ரமித்தபின் ஷாஜஹான் ராஜ்மஹாலுக்குள் புகுந்தார் (அதுகாலை அது அக்பர்

நகர் என்று அழைக்கப்பட்டது). ராஜ்மஹாலை முற்றுகையிட்டு, வன்மையானவோர் எதிர்ப்பின் பின்னர்தான் அதனைக் கைப்பற்ற முடிந்தது. இந்த முற்றுகையில் வங்காள கவர்னரான இப்ராஹிம் கான் இறுதிவரை வீரத்துடன் போராடி வீழ்ந்தார். ஒரிஸாவின் கவர்னரான அகமது பெக்கான் ,டாக்காவில் சரணடைந்தார். இவ்வாறு வங்காளம், ஒரிஸா ஆகிய மாநிலங்களை ஷாஜஹான் கைப்பற்றிக்கொண்டார்.

இந்த இரு கிழக்கு மாநிலங்களையும் தமது தளமாகக் கொண்டு, பீஹார், அவதா, அலகாபாத், ஆக்ரா ஆகிய இடங்களைக் கைப்பற்ற ஷாஜஹான் திட்டமிட்டார். இதனால் அவர் கோபங்கொண்ட தமது தந்தையிடமிருந்து தமக்குச் சாதகமான நிபந்தனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். ஷாஜஹானின் வீர மிக்க தளபதியாகிய, மீவார் நாட்டு இளவரசர் பீம், பாட்னாவைத் தாக்கி, போரிடாமல் அதனைக் கைப்பற்றினார் ; பாட்னாவின் கோழை மனம்படைத்த கவர்னரான முக்லிஸ்கான், இராஜபுத்திரப்படையெடுப்பைப்பற்றிய முதல் செய்தியைக் கேள்விப்பட்டவுடனேயே, தமது பொறுப்பைக் கைநெகிழவிட்டுத் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும்படியாகத் தப்பியோடிவிட்டார். பீஹார் முழுவதும், வன்மைமிக்க அரணாகிய ரோதாஸ் உட்பட ஷாஜஹானின் வசமாயிற்று. இவ்வாறே ஜான்பூரும் வீழ்ந்தது. ஷாஜஹான் பனாரஸுக்கு அருகில் கங்கையாற்றைக் கடந்து, காந்தித் என்ற இடத்தில் முகாமிட்டார். அங்கிருந்து அவர் அலகாபாத்தை முற்றுகையிடுமாறு பணித்தார். 1624ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில், பார்வெஸும் மாபாத்கானும் பூரான்பூரிலிருந்து விரைந்துசென்று, தக்க காலத்தில் முற்றுகைகளை விடுவித்திருக்காவிடில், அலகாபாத்தும் அவதாவும் வீழ்ந்திருக்கும். இவ்வாறு எதிரிகள் அண்மித்து வந்ததால், அப்துல்லாகான் அலகாபாத் முற்றுகையை விடுவித்து, ஜூஸி நகருக்குள் பின்வாங்கினான். மாபாத்கான் சில படகுகளைச் சேர்த்து, அலகாபாத்துக்கு மேலே நாற்பது 'கோஸ்' தொலைவில் கங்கையாற்றைக் கடந்தார். இளவரசருக்குச் சென்றுகொண்டிருந்த உணவுப்பொருள்களை அவர் தடைசெய்தார். எனவே, ஷாஜஹான், நேரடிப்போர், அல்லது தக்கணத்துக்குப் பின்வாங்குதல் என்ற இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, ஷாஜஹான் தயாரில்லாமல் போரிடவேண்டியதாயிற்று. மீவார் இளவரசர் பீமின் முன்யோசனையற்ற தாக்குதல்கள், அரசர் படைகளின் வன்மைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அவர் தமது இறுதி மூச்சுவரை போராடி வீழ்ந்தார். இதனைத் தொடர்ந்து ஷாஜஹான் படுதோல்வியுற்று, நல்ல காலமாக உயிருடன் தப்பிப் பிழைத்தார். அவர் ரோத்தாசுக்

குச் சென்று, மகப்பேற்றுக்குப் பின்னர், பயணம் செய்யமுடியாத நிலையில் இருந்த மும்தாஜ்மஹாலை அங்கு விட்டுவிட்டு, வங்காளத்திற்குச் சென்றுவிட்டார்.

வங்காளத்திலிருந்து ஷாஜஹான் மீண்டும் தக்காணத்துக்குச் சென்றார். பின்னர் ஒரிஸா, தெலிங்கானா கோல்கொண்டா ஆகிய பகுதிகளைக் கடந்து, ஆமது நகரில் காலடி வைத்தார். ஷாஜஹான் இல்லாதிருந்த காலத்தில், ஆமது நகரின் சகல வன்மையுள்ள அமைச்சராகிய மாலிக் ஆம்பருக்கும், பீஜப்பூர் சுல்தானுக்கும் இடையில் மனக்கசப்பும் பகைமையும் வளர்ந்திருந்தன. 1623ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் இவர்கள் இருவரும் முதலாயத் தளபதியான மாபாத்கானின் துணையை நாடினார்கள். ஆனால், ஷாஜஹான் புரட்சி முடிகிறவரையிலும், அவர்களுடைய சண்டையில் தாம் கலந்துகொள்வதில்லையென்று மாபாத்கான் வெகு திறமையாக மறுத்துவிட்டார். கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த இளவரசர், தக்காணத்தைவிட்டு ஒரிஸாவுக்குச் சென்றபின்னர் தான், மாபாத்கான் பீஜப்பூர் சுல்தானுக்கு உதவ முன்வந்தார். (1623ஆம் ஆண்டின் இறுதி) ஷாஜஹானை வேட்டையாடுவதற்காக, மாபாத்கான் வடநாட்டிற்குப் புறப்பட்டவுடன், இடர் நீங்கப்பெற்ற மாலிக் ஆம்பர், கோல்கொண்டாவுடன் உடன்படிக்கை செய்துகொண்டு, பீடாரில் பீஜப்பூர் படையைத் தோற்கடித்தான். பீடாரைக் கொள்ளையடித்தபின், அவன் அடில் ஷாவை பீஜப்பூரில் முற்றுகையிட்டான். முற்றுகையிடப்பட்ட சுல்தான் முகலாயர்களின் சேவையில் இருந்த தனது படைகளைத் திருப்பியழைத்தார். மேலும், முகலாயத் தக்கணத்தை ஆட்சி செய்துவந்த அரசர் கட்சியினிடம் உடனே உதவி செய்யுமாறு கோரினார். இந்த இரு படைகளுக்கும் இடையே சிக்கித் தவிக்க நேரிடுமோவென்று பயந்த மாலிக் ஆம்பர், தமது படையில் ஒரு பகுதியை பீஜப்பூர் அரண்களுக்கு முன்னால் நிறுத்திவிட்டு, திடீரென விரைந்து, முல்லா முகமது, லஷ்கார்கான் என்ற இருவரும் நடத்திச்சென்ற முன்னணிப்படைகளை பாட்வி முகாமில் எதிர்பாராத நேரத்தில் தாக்கினான். தலைவர்களுள் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றவர் தப்பியோடினர். பின்னர் மாலிக் ஆம்பர், முகலாய தக்கணத்தின் தலைநகரான ஆமது நகரை முற்றுகையிட்டு, அதே நேரத்தில் பீஜப்பூர் முற்றுகையையும் வலுப்படுத்தினான். இந்நிலையில் வடக்கே படுதோல்வியடைந்திருந்த ஷாஜஹான் தக்கணத்திற்குத் திரும்பவே, அவருடைய ஆயுள்நாள் எதிரியான மாலிக் ஆம்பர் அவரை வரவேற்றார். மாலிக், ஷாஜஹானை அவருடைய தந்தைக்கு எதிராக ஒரு கூட்டணியில் தம்முடன் சேர்ந்து கொள்ளுமாறு வற்புறுத்தினார். மாலிக் ஆம்பரின் கோரிக்கைப்படி,

ஷாஜஹான் பூரான்பூர் கோட்டையை முற்றுகையிட்டார். ஆனால், அதனைக் கைப்பற்ற முடியவில்லை. இதற்கிடையில் பார்வெஸும், மாபாத்கானும் ஷாஜஹானைத் துரத்திக்கொண்டு தக்கணத்தினுள் மீண்டும் புகுந்தார்கள். எனவே, ஷாஜஹான் பூரான்பூரின் முற்றுகையை விடுவித்து, பாலகாத்திலுள்ள ரோஹான்கார் என்ற இடத்திற்குப் பின்வாங்கினார். இங்கு இளவரசர் பிணியுற்றார். அவருடைய உண்மையான, சிறப்பு மிக்க ஆதரவாளனாகிய அப்துல்லாகான் துறவு பூண்டான். எனவே, தந்தையிடம் சரணடைவதைவிட, ஷாஜஹானுக்கு வேறு வழியில்லை.

ஷாஜஹானின் முக்கிய அனுதாபிகளில் பலர் இறந்ததாலும், கைவிட்டு ஓடியதாலும் நம்பிக்கையிழந்தும், உடல் பிணியாலும் மனநோயாலும் நலிவுற்றும், மாபாத்கானின் வெல்லமுடியாத படையாலும், தலைமை தாங்கும் திறத்தைக் கண்டு பயந்தும், அல்லற்பட்ட ஷாஜஹான் அழிவு ஒன்றையே தம்முன் காண முடிந்தது. எனவே, தமது வருங்காலத்துப் போக்கைப்பற்றி ஓர் உடனடியான முடிவெடுக்கும்படி, இந்த நிலைகள் அவரை வற்புறுத்தின. ஷாஜஹான் நிபந்தனையின்றி சரணடைய வேண்டுமென்று முடிவு செய்து, தந்தையின் மன்னிப்பை இறைஞ்சி அவருக்குக் கடிதம் எழுதினார். மாபாத்கானின் போக்கிலும், வளர்ந்து வரும் அவனது பலத்திலும், புகழிலும் ஐயங்கொண்ட நூர்ஜஹான் 1626ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் அவன் ரோதாஸ்கார், அஸிகார் ஆகிய கோட்டைகளை விட்டுவிடவேண்டுமென்றும், அரசவைக்கு ஷாஜஹானின் குழந்தைகளான பத்து வயது தாராவையும், எட்டு வயது அவுரங்கசீபையும் அனுப்பிவைக்க வேண்டுமென்றும் பணித்தாள். ஷாஜஹான் இந்த நிபந்தனைகளுக்குத் தயக்கமின்றி உடன்பட்டார். அவர் மன்னிப்புப் பெற்று, பாலகாத்தின் கவர்னராக நியமனம் பெற்றார்.

இவ்வாறு மூன்றாண்டுகளாக நீடித்து, நாட்டை உள்நாட்டுப் போரில் ஆழ்த்தி, பெருமளவில் பொருளும் உயிர்களும் அழிவதற்குக் காரணமாக இருந்த கிளர்ச்சி 1626ஆம் ஆண்டு ஏப்ரல் இறுதியில் முடிவுற்றது.

மாபாத்கானின் திடீர் புரட்சி: மார்ச்சு 1626

ஷாஜஹானுடன் சமரசம் செய்துகொண்ட உடனேயே, ஆதிக்க வெறிகொண்ட அரசியார், பேரரசின் தலைசிறந்த வீரனும், அரசியல் நுண்ணறிவாளனுமாகிய மாபாத்கானை ஒடுக்கிப் பணிய வைக்க முடிவு செய்தார். ஷாஜஹானின் கிளர்ச்சியின்போது

மாபாத்கானின் புகழ் மிக உயர்ந்திருந்தது. ஆனால், இளவரசரை நசுக்குவதற்கு மாபாத்தின் துணை தேவையாக இருந்ததால், அவனை அந்நிலையில் ஒழித்துக்கட்டுவது விவேகமாகாது என நூர்ஜஹான் எண்ணினாள். எனினும், மாபாத்கானைப் போன்ற தொரு வெல்ல முடியாத நபரை வாழும்படி விட்டுவைப்பது அவளுக்குச் சகிக்க முடியாததாக இருந்தது. மாபாத்கானும் தனக் கிருந்த திறமையினாலும், அவனது சாதனைகளின் காரணமாகவும் யாருக்கும் பக்கதாளம் போடுவதற்குத் தயாராக இருக்கவில்லை. அவனுக்குத் தனியான சில பேராவல்கள் இருந்தன. அவனது ஆதரவாளரும், அரசருமான ஜஹாங்கீரிடமிருந்து மட்டுமே அவர் ஆணைகளைப் பெற்றுச் செயலாற்றுவார். நூர்ஜஹான் அதிகாரத்தைக் கைப்பற்றியதை அவர் வெறுத்தார். ஏனென்றால், அரசரை மணந்துகொள்வதற்கு முன்னர் நூர்ஜஹான் ஒரு சாமான்ய பெண்ணாகவே இருந்தாள். அதுமுதற்கொண்டு அவள், பேரரசிற்கு உண்மையான பணியாற்றிய பிரபுக்களைப் புறக்கணித்து, அரசவையை ஆட்டிப்படைக்கவேண்டுமென்று வெற்றிகரமான திட்டம் வகுத்து வந்தாள். வாரிசுரிமைக்காக அவள் முன்னிறுத்திய வேட்பாளனாகிய ஷாரியார் ஓர் உதவாக் கரை. எனினும், பேராசையுள்ள மாமியாரின் கைப்பாவை யாக இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் அவன் தேர்ந்தெடுக் கப்பட்டான். அவனுக்கு எதிராக, மாபாத்கான் இளவரசர் பார்வெஸை ஆதரித்தான். பார்வெஸ், எந்த வகையானும் ஷாரியாரைவிடச் சிறந்த திறமையுள்ள இளவரசன். மேலும் பார்வெஸ், நூர்ஜஹானின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. மாபாத்கானின் திறமையையும், அரச குடும் பத்தில் அவன் கொண்டிருந்த பற்றுறுதியையும், அவன் தன்மீது கொண்டிருந்த வெறுப்பையும் கண்டு அவள் அஞ்சினாள். இக் காரணங்களினால் வன்மைமிக்க இவ்விருவரும் அமைதியாக வாழ முடியாமல் இருந்தனர். எனவே, இந்த மாபெரும் தளபதியை அழிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நூர்ஜஹான் எடுக்கத் தொடங்கினாள். ஷாஜஹான் நிபந்தனையின்றி சரணடைய உடன் பட்டதும், நூர்ஜஹான் மாபாத்கானை வங்காளத்திற்கு மாற்றி விட்டாள். அவனுக்குப் பதிலாக, இளவரசர் பார்வெஸின் ஆலோசகராக, கான்ஜஹான் லோடி நியமிக்கப்பட்டார். சிறிது தயக்கத்திற்குப் பின்னர், இளவரசர் கான்ஜஹானைத் தமது வக்கீலாக ஏற்றுக்கொள்ள உடன்பட்டு, அரசராணையின்படி பூரான்பூரில் தங்கியிருக்கவும் ஒப்புக்கொண்டார். மாபாத் கானும் வங்காளத்திற்குப் புறப்படத் தயாரானான். நூர் ஜஹான் தன்னைப் போலவே பொறுமை கொண்டிருந்த, தன்னுடைய சகோதரனாகிய ஆஸப்கானுடன் கூட்டுச்

சேர்ந்துகொண்டு, மாபாத்கானுக்கு எதிராக, அவர் பணிய மறுத்ததாகவும், அரசத் துரோகம் செய்ததாகவும் குற்றச்சாட்டுகளை ஏவினுள். ஷாஜஹானின் கிளர்ச்சியின்போது வங்காளத்திலும் பீஹாரிலும் மாபாத்கான் பெற்றதாகக் கூறப்பட்ட யானைகளை அரசவைக்கு அனுப்புமாறு கேட்டு, அவருக்கு ஓர் ஆணை கொடுக்கப்பட்டது. இந்த இரு மாநிலங்களிலும் உடைமைகளை இழந்த ஜாகீர்தார்களிடமிருந்து மாபாத் தண்டல் செய்ததாகக் கூறப்பட்ட பெருந்தொகையான பணத்துக்கும் கணக்குக் கொடுக்குமாறு அந்த ஆணையில் கூறப்பட்டிருந்தது. அந்த ஆணைகளின்படி நடக்காவிட்டால், மாபாத் உடனடியாக அரசவைக்கு அழைக்கப்பட வேண்டும். மாபாத்கான் இந்தத் திட்டத்தின் உட்கருத்தைப் புரிந்துகொண்டான். நூர்ஜஹானின் திட்டம் தன்னை இழிவுபடுத்தி மண்ணோடு மண்ணுக அழிக்கவேண்டுமென்பதே. எனவே, அதுகாலை பஞ்சாபில் தங்கியிருந்த அரசரைச் சென்று காண வேண்டுமென்றும், அரசரிடம் தனது வழக்கை நேரடியாகக் கூற வேண்டுமென்றும் மாபாத் முடிவுசெய்தான். அவன் தனக்கு நீதி கிடைக்காவிட்டால், திடீர் புரட்சியொன்றை நடத்தி, அரசரைக் கைப்பற்றி, நாட்டில் நூர்ஜஹானுக்கு அதிகாரம் இல்லாமல் செய்துவிடவேண்டுமென்று திட்டமிட்டிருந்தான். அவன் 1626ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் தன்னுடன் நாலாயிரம் முதல் ஐயாயிரம் வரை இருந்த விசுவாசமான இராஜபுத்திர வீரர்களுடன், ஜீலம் ஆற்றங்கரையில் அரசரின் முகாமை அண்மித்திருந்த இடத்தை அடைந்தான். காஷ்மீரிலிருந்து திரும்பிய ஜஹாங்கீர் காபூலுக்குச் சென்று கொண்டிருந்தார். அடுத்த நாள் காலையில் அவர் ஜீலம் ஆற்றைக் கடப்பதாக இருந்தது. மாபாத்கான் பலமிக்கவோர் இராஜபுத்திரப் பெரும் படையுடன் வருகிறுன் என்ற செய்தி அரசரின் முகாமில் கலவரத்தையுண்டாக்கியது. மாபாத்தின் படைகளைக் கலைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல், கான் இருந்த இடத்திலேயே இருக்கவேண்டும் என்றுமட்டும் மன்னர் பணித்தார். அரசியார் மாபாத்தை மேலும் அவமதித்து, அவன் ஏன் தனது மகளை பார்குர்தார். என்ற பிரபு மகனுக்கு அரசவையின் அனுமதியின்றி மணமுடித்துக் கொடுக்க நிச்சயித்தான் என்று விளக்கம் தருமாறு கேட்டாள். பார்குர்தார் அரசவைக்கு அழைக்கப்பட்டு, மான பங்கப்படுத்தப்பட்டு, கழுத்துடன் கைகளைப் பிணைத்துக் கட்டிச் சிறைக்கு அனுப்பப்பட்டான். அவனுக்கு மாபாத் கொடுத்திருந்த சீதனப்பணம் பறிமுதலாயிற்று. இத்தகைய நடவடிக்கையின் பின், மாபாத்கான் அரசரை வல்லந்தமாய்க் கைப்பற்றவும், அரசியாரின் அதிகாரத்தைத் திடீரெனத் தாக்கி அழித்துவிடவும் முடிவு செய்தான்.

அடுத்த நாள் அதிகாலையில் மாபாத் தனது இராஜபுத்திர வீரர்களுடன் அரசரும் அவரது பரிவாரங்களும் தங்கியிருந்த முகாமின் முன்னால் திடீரெனத் தோன்றினான். அதற்கு முன்ன தாகவே ஜீலம் ஆற்றில் இருந்த பாலத்தைக் காவல் செய்யவும், யாரும் அதனைக் கடந்து செல்வதைத் தடுக்கவும், 2,000 குதிரை வீரர்களை அனுப்பிவைத்திருந்தான். அரசர் படையின் பெரும் பகுதி ஆற்றைக் கடந்து அக்கரை சென்றுவிட்டன. ஆனால், அரசரும் அரசியாரும் சில பணியாளர்களுடன் ஆற்றைக் கடக்க வேண்டுமென்று அதன் இடக் கரையில் காத்துக்கொண்டிருந் தார்கள். மாபாத் அரசப் பாசறையின் முக்கிய வாயிலின் முன் தோன்றியபோது, அரசர் படையினர் பீதிகொண்டதால், அவனை எதிர்க்க அநேகமாக ஒருவித முயற்சியும் எடுத்துக்கொள்ள வில்லை. மாபாத்கான் அரசர் தங்கியிருந்த கூடாரத்தின் வாயில் வரை சென்று, குதிரையிலிருந்து இறங்கினான். இந்தச் செருக் கான செயலைப்பற்றிக் கேள்விப்பட்டதும், ஜஹாங்கீர் வெளியே வந்து ஒரு ப்ல்லக்கில் ஏறிக்கொண்டார். மாபாத் சற்று முன்னே வந்து அரசரை வணங்கித் தான் அவரது காலில் விழுந்து மன்னிப் புக் கோர முன்வந்திருப்பதாகவும், அரசரின் முன்னிலையில் எத் தகைய தண்டனையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்ப தாகவும் கூறினான். அவனை அழிக்க வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டிருந்த எதிரியாகிய ஆஸப்கானின் கைகளில் சிக்கித் தான் இறந்துபோக விரும்பவில்லை என்றும் பசப்பினான். அவன் அரச ரோடு உரையாடிக்கொண்டிருக்கும்போதே அவனது இராஜ புத்திர வீரர்கள் அரசரின் கூடாரங்களைச் சூழ்ந்துகொண்டனர். பெருஞ் சினங்கொண்ட ஜஹாங்கீர், மாபாத்தை வெட்டி வீழ்த்து வதற்காக ஒருமுறைக்கு மேலாகவே தம் வாளை உருவ முயன்றார். ஆனால், அவரைத் தடுத்து நிறுத்தினார்கள். அரசரை உள்ளே சென்று வேறுடை தரித்துக்கொள்ளவிடாமல் மாபாத் அவரைத் தடை செய்த பின்னர், அரசர் குதிரையில் ஏறிக்கொண்டு அவனுடன் செல்ல ஒப்புக்கொண்டார். இதன் பின்னர் அரசரை யானைமீதேற்றி, மாபாத்கானின் முகாமுக்குக் கொண்டு சென்று, அவனது புதல்வர்களின்கீழ்க் காவலில் வைத் தான்.

மாபாத்கான் ஒருவிதத் தூண்டு விசையினால் உந்தப்பட்டு இந்தத் திடீர்ப் புரட்சியை நிகழ்த்தினான். உண்மையில் அரச வதிகாரத்தின்மூல சக்தியாகவிருந்த அரசியாரையும் சிறைப்பிடித் துக் காவலில்வைக்க அவன் மறந்துவிட்டான், இந்தத் தவற்றை அவன் உணர்ந்ததும், அரசரின் முகாமுக்குச் சென்றான். ஆனால், அதற்குள் அரசியார் ஆற்றைக் கடந்து அக்கரை சென்று தனக்கு

எட்டாத தூரத்தில் போய்விட்டதை உணர்ந்தான். அடுத்த நாள் நூர்ஜஹானையும், ஆஸப்கானையும் தனது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரத் திட்டமிட்டான்.

அரசியாருக்கு மாபாத்கானின் திடீர்ப் புரட்சியைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவன் ஜீலம் ஆற்றைக் கடந்த பின்னர்தான் புரட்சியைப்பற்றி அறிய நேர்ந்தது. அவள் உடனே போர்க் குழுவைக் கூட்டி, உதாசீனமாக இருந்ததற்காக அவளது சகோதரன் ஆஸப்கானைக் கடிந்துரைத்துவிட்டு, அரசரை மீட்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தாள். அரசியாரின் ஏற்பாடுகளைப் பற்றி ஜஹாங்கீர் கேள்விப்பட்டு, அரச நோக்கத்தை மீள முடியாத வகையில் ஊறு செய்யக்கூடிய நடவடிக்கைகள் எடுப்பதைப்பற்றி எச்சரிக்கை செய்தார். தாம் கொடுத்திருக்கும் எச்சரிக்கை தமது சொந்த அளிப்பு என்றும், அது மாபாத்கானின் தூண்டுதலால் கொடுக்கப்படவில்லை என்பதற்கு அறிகுறியாகத் தமது சொந்தக் கணையாழியையும் அனுப்பிவைத்தார். எனினும், யாருக்கும் பணியாத அரசியார் அதனை நம்ப மறுத்து, தாம் கொண்ட முடிவில் உறுதியாக நின்றார்கள். பெரும்படையொன்று துணைவர, அவள் ஆற்றைக் கடந்து மாபாத்தின் படைகளைத் தாக்குவதற்கு முயற்சி செய்தார். ஆனால், தகுந்த தலைமை யில்லாத காரணத்தால், அந்தப் படையில் பிளவுகள் ஏற்படவே. அதில் ஒரு சிறிய பகுதி மட்டும் ஆற்றின் மறு கரைக்குப் போய்ச் சேர்ந்தது. மாபாத்தின் இராஜபுத்திர வீரர்கள் பீகத்தின் படைகளைத் தக்க முறையில் வரவேற்கத் தயாராக இருந்தனர். அரசியின் வீரர்களில் பலர் கொல்லப்பட்டனர். சிலர் காயப்பட்டனர். பெரும்பாலோர் ஆற்றைக் கடந்து அக்கரை செல்லுகின்ற முயற்சியில் அமிழ்ந்துபோனார்கள். யானை மீதமர்ந்து, இந்தத் தாக்கு தலை முன்னின்று நடத்தி வந்த நூர்ஜஹான் பின்வாங்க வேண்டியதாயிற்று. அவளுடைய யானை பல இடங்களில் காயப் பட்டது. நூர்ஜஹானின் கரங்களில் இருந்த ஷாரியாரின் பெண் குழந்தையை ஓர் அம்பு தாக்கிற்று; ஆஸப்கான் இந்தப் போராட்டம் முழுவதிலும் கோழைபோலவே நடந்துகொண்டு, தன் பாதுகாப்புக்காக அட்டாக் கோட்டைக்குள்போய் ஒளிந்து கொண்டான். ஃபிதேய்கான் தலைமையில் உண்மையுள்ள ஆதரவாளர்களைக் கொண்ட ஒரு சிறு பகுதியினர், ஊக்கமும் வீராவேசமும் விளங்கப் போராடி, மாபாத்தின் ஆட்களை வன்மையாகத் தாக்கினர். ஆனால், இவர்களில் பலர் படுகொலை செய்யப்பட்டுப் பின்வாங்கவேண்டியதாயிற்று.

தன் முயற்சி தோல்வியுற்றபின் நூர்ஜஹான், மாபாத்கானிடம் தன்னிச்சையாகவே சரணடைந்து தனது கணவருடன் சேர்ந்து

கொள்ள அனுமதிக்கப்பட்டாள். மாபாத்கானின் ஆதிக்கம் முற்றிலும் நிலைநாட்டப்பட்டது. அவன் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, உயர் பதவிகளில் தனது ஆட்களை நியமித்து, அரசியாரின் கட்சியைச் சேர்ந்தவர்களை அழிக்க முனைந்தான். அட்டாக்கில் தஞ்சம் புகுந்திருந்த ஆஸப்கானுக்கு எதிராக ஒரு படை அனுப்பப்பட்டது. அவனும் சரணடைந்தான். இரண்டு மாதங்கள்வரை அரசர் பஞ்சாபில் தங்கியிருந்துவிட்டு, காபூலுக்குப் புறப்பட்டார். அவர் வெளிப்படையாக மாபாத்தின் மேலாண்மைக்கு உடன்பட்டதாகக் காட்டிக்கொண்டார். ஆனால், தளபதியின் அதிகாரம் வன்முறையை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், அரசவையின் உறுப்பினர்களுக்குள் மனக்குறைகள் தோன்றின. மேலும், மாபாத்கான் முதன்முதலில் ஒரு வீரராகவும், அரசியல் தந்திரியாகவும் இருந்தாரேயன்றி, அரசியல் நுண்ணறிவாளராகவோ, அல்லது 'ஆட்சித்துறையில் திறமையுள்ளவராகவோ விளங்கவில்லை. அவனது அபிமானத்தைப் பெற்றவர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளைச் சரிவரச் செய்யாமல், பொதுமக்களிடையே எதிர்ப்பைக் கிளப்பக் காரணமாக இருந்தார்கள். காபூலில் அவனது இராஜபுத்திர வீரர்களுக்கும், அகதியர் என்ற அரசரின் படையில் ஒரு பகுதியினருக்கும் சச்சரவு மூண்டது. அரசருக்குச் சொந்தமான வேட்டை நிலங்களில், இராஜபுத்திரர்கள் தங்களின் குதிரைகளை மேய்ச்சலுக்கு விட்டார்கள். இதனை அகதியர்களும் பிற காவலர்களும் எதிர்த்தார்கள். இதனால் ஏற்பட்ட கைகலப்பில் ஓர் அகதியர் கொல்லப்பட்டார். குற்றவாளியை விசாரித்து, தண்டிப்பதாக மாபாத் கொடுத்த வாக்குறுதியை அகதியர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. அவர்கள் இராஜபுத்திரர்களைத் தாக்கி எண்ணூறு அல்லது தொள்ளாயிரம்பேரைக் கொன்றுவிட்டனர். மாபாத் பொதுமக்களிடையே மதிப்பிழந்தார். இராஜபுத்திரர்களின் செல்வாக்கை விரும்பாத முஸ்லீம் மக்கள் கலவரம் செய்தனர். இதனை மாபாத் எளிதாக அடக்கிவிட்டாரென்றாலும், இது அவரது அதிகாரத்திற்கும், மதிப்பிற்கும் ஒரு சாட்டையடியாக இருந்தது. அரசவையில் வளர்ந்துவந்த பகைமையும் அதிகரித்து, மாபாத்தின் படைபலம் குறையத் தொடங்கியது. இது தந்திரசாலியான நூர்ஜஹானுக்குத் தளபதிக்கு எதிராகச் சதிசெய்ய வாய்ப்பளித்தது. ஜஹாங்கீரின் முழுமையான வஞ்சகம், அரசர் தமது ஆதிக்கத்தின் கீழ் மகிழ்ச்சியுடன் இருக்கிறார் என்று வன்மையாக நம்பச்செய்ததால் அவன் கவனமில்லாமல் இருந்தான். காபூலிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தபோது, அரசரை விடுவிக்கும் நோக்கத்துடன் நூர்ஜஹான் ஒரு சதித்திட்டத்தை வகுத்தாள். ரோதார் அரணுக்கு அருகில் முகாம் அமைக்கப்பட்டபோது, ஜஹாங்கீர் அரசப் படைகளைப் பார்வை

யிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மாபாத் தனது படைகளைச் சிறிது தூரத்தில் நிறுத்திக்கொண்டால் இருதரப்பினருக்கும் எந்த வித மோதலும் ஏற்படுவதைத் தடுக்கலாம் என்று அரசர், மாபாத்துக்குச் செய்தி அனுப்பினர். தமது பலம் குன்றி வருவதைக் கண்ட தளபதியும் இதற்கு உடன்பட்டார். படைகளைப் பார்வையிடுவதுபோல் நடித்து, ஜஹாங்கீர் அரசப் படைகளின் தலைமையைக் கைப்பற்றிக்கொண்டார். தமது ஆதிக்கம் முடிவுற்றதை உணர்ந்த மாபாத் லாகூருக்குப் புறப்பட்டார். இவ்வாறு மாபாத்தின் 'நூறு நாள் ஆட்சி' முடிவுற்றது.

லாகூருக்குப் பின்வாங்கிச் சென்றபோது, மாபாத்கான் தன்னுடன் ஆஸப்கானையும், சில முக்கிய பிரபுக்களையும், இளவரசர் தானியலின் குமாரர்களையும் பிணையாகக் கூட்டிச்சென்றுன். அவர்கள் யாவரையும் அவன் திருப்பியனுப்பவேண்டியதாயிற்று. தனது பழைய ஆதிக்கத்தைக் கைப்பற்றிக்கொண்ட நூர்ஜஹான், மாபாத்தின் சரிந்துகொண்டு வரும் அதிகாரத்தை அழிப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுத்தாள். மாபாத்தின் ஆட்சியில் சீர்கெட்டுக் கிடந்த ஆட்சித் துறையையும் சீர்திருத்தி அமைப்பதற்கான ஏற்பாடுகளையும் அவள் செய்தாள். அரசர் விடுதலையான உடனே ரோதார் அரணில் முறையான ஒரு தர்பார் நடத்தப்பெற்று அதுகாலை உயர்பதவிகள் யாவும் மீண்டும் பகிர்வு செய்யப்பட்டன. தானியலின் குமாரர்களையும், ஆஸப்கானையும், பிற பிரபுக்களையும் விடுவிக்கும்படி மாபாத்கானுக்குக் கண்டிப்பான ஆணையிடப்பட்டது. தனக்கு எவ்வித அதிகாரமும் இல்லையென்று கண்ட மாபாத் செருக்குற்ற அரசியாரை எதிர்ப்பதில் இனிப் பயனில்லை என்று கண்டு, அவளுக்குப் பணிந்தான். மேலும் மாபாத்கானின் வெற்றிகரமான திடீர்ப் புரட்சியைப்பற்றிக் கேள்விப் பட்டு, தக்காணத்திலிருந்து புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்த ஷாஜஹானைச் சந்திக்கும்படி தாட்டா என்ற இடத்திற்குப் போவதாகவும் அரசர் கொடுத்த ஆணைக்கு மாபாத் உடன்பட்டான்.

தக்காணப் போரின் முடிவு

1626ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தக்காணத்திலிருந்து மாபாத்கானை நூர்ஜஹான் திருப்பி அழைத்துக்கொண்டபின், அந்த மாநிலத்தின் பொறுப்பு கான் ஜஹான் லோடிக்குக் கொடுக்கப்பட்டது. வீரமும் அஞ்சாநெஞ்சமும் படைத்தவரென்றாலும், கான் ஜஹானிடம் முன்னறிவும், அரசியல் விவேகமும் இல்லாததால், ஆமது நகரின் 'அரியணை அளிப்போனுன' மாலிக் ஆம்பருக்கு அவனால் ஈடுகொடுக்க முடியவில்லை. அபிஸீனிய அமைச்சராகிய மாலிக்கை எதிர்த்து கான் ஜஹானுல் முன்னேற முடியாத காரணத்

தால் தென் இந்தியாவில் முகலாயரின் மதிப்புக் குறைந்து வந்தது. ஆனால், 1626ஆம் ஆண்டு மே திங்களில் மாலிக் ஆம்பர் இறந்துபோனபின், மீண்டும் போர் மூண்டது. மாலிக் ஆம்பருக்குப் பின் அமைச்சரான அமீது கான் என்பவர் சிறந்த தளபதியாகவும், அரசியல்வாதியாகவும் விளங்கினர். அமீதிடமிருந்து பெருந்தொகையைக் கைக்கூலியாகப் பெற்றுக்கொண்டு, கான் ஜஹான் அவனுடன் சமரச உடன்படிக்கை செய்து ஆமது நகர் வரையிலும் நீடித்திருந்த பாலகாத் பகுதியை அவனுக்கு விட்டுக் கொடுத்துவிட்டான். இவ்வாறு முகலாயர்களின் செல்வாக்கு தக்கணத்தில் நலிந்துகொண்டிருந்தபோது, ஜஹாங்கீர் இறந்து விட்டார். முகலாய அதிகாரிகளுக்குள் இருந்த ஆட்சிச் சீர்கேடு, லஞ்ச ஊழல்கள், பிளவுகள் காரணமாக ஜஹாங்கீரின் தக்கணக் கொள்கை தோல்வி கண்டது.

ஜஹாங்கீரின் ஆளுமையும் குணச் சிறப்பும்

மாபாத்கானின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுத் தன்னுரிமை பெற்ற ஜஹாங்கீர், 1627ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் காஷ்மீருக்குப் புறப்பட்டார். ஏனெனில், அவரது உடல்நிலை முற்றிலும் சிதைந்துபோயிருந்தது. ஆனால், காஷ்மீரிலும், அரசர் தாம் இழந்த சுகத்தை மீண்டும் பெற முடியவில்லை. எனவே, லாகூருக்குத் திரும்பினர். வழியில், 1627ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 7ஆம் நாளில் (28, அக்டோபர் பழைய கணக்குப்படி) பிம்பார் என்ற இடத்திற்கு அருகில், அவரது பிணி அதிகரிக்கவே, ஜஹாங்கீர் இறந்துபோனர். அவருக்கு அதுகாலை 58 வயதாகும். லாகூருக்கு அருகில் ஷாதாரா என்ற இடத்திலுள்ள ஓர் அழகிய நந்தவனத்தில் அவருடைய சடலம் அடக்கம் செய்யப்பட்டது. அவரது விதவையான நூர்ஜஹான் அரசியார் பின்னர் அரசரின் கல்லறைக்குமேல் அழகானவொரு சமாதியை எழுப்பினர்.

ஜஹாங்கீரின் ஆளுமையையும், குணச் சிறப்புகளையும்பற்றி இரண்டு முரண்பட்ட கருத்துகள் இருக்கின்றன. அவர் நிலையற்ற மனம்படைத்த கொடுங்கோலர் என்றும், மதுவையும், மங்கையரையும் பெரிதும் விரும்பியவரென்றும், தனி மனிதன் என்ற முறையிலும், அரசர் என்ற முறையிலும் தோல்வியே கண்டவரென்றும் சில தற்கால ஐரோப்பிய ஆசிரியர்கள் கூறுகிருர்கள். ஆனல், அதற்கு மாருக, அவர் நேர்மையும் கண்ணியமும் படைத்த அரசர் என்றும், நீதியுடனும், சமநிலையுடனும் ஆள முயன்ற மன்னரென்றும், சில இந்திய எழுத்தாளர்கள் கருதுகிருர்கள். இரு முனைகள்போன்ற இந்த இரு மிகைப்பட்ட கருத்துகளுக்கும் நடுவழியான எண்ணமே உண்மையானது. தனி

மனிதன் என்ற முறையில் ஜஹாங்கீர் முற்றிலும் அன்பிற்குத் தகுதி வாய்ந்த பெருமகன். அவர் தமது அன்னையாரிடமும், குடும்பத்தின் பிற முதியவர்களிடமும் மரியாதையுடன் நடந்துகொண்டார். அவர் தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சிசெய்து, பல ஆண்டுகளாகக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தாலும், அவர் ஒரு தவருன தூண்டுதலாலும், தன்னலமிக்க தோழர்களின் ஆலோசனைகளாலும் உந்தப்பட்டே இந்தக் கிளர்ச்சியைச் செய்தார். ஆனல், இறுதியாக அவர் தமது தவற்றை உணர்ந்து, தான் அரியணையேறியபின்னர் அதற்கான பரிகாரங்களைச் செய்தார். அவர் தமது தந்தையாரின் அன்புள்ள நினைவைப் பேணிக்காத்து, சொல்லாலும் சிந்தனையாலும் அக்பரை மரியாதையுடன் போற்றி வந்தார். அவர் சிக்கந்த்ராவில் இருந்த, அக்பரின் சமாதிக்கு நடந்துசென்று, அதன் வாயிலில் தமது தலையை இடித்துக் கொள்வார். ஜஹாங்கீர் விசுவாசமுள்ள கணவராக விளங்கினர். அவர் பல மனைவியர்களைக் கொண்டிருந்தாலும், மனைவியிடம் அன்புசெலுத்துவது எத்தகைய சிறப்புவாய்ந்தது என்பதை அவர் அறியாமல் இல்லை. அவரது முதல் மனைவியாகிய ஜெய்ப்பூர் இளவரசி இறந்தபோது அவர் கதறியழுது, நான்கு நாட்களாக உணவையும் பானங்களையும் தொட மறுத்துவிட்டார். அவர் நூர்ஜஹான்மீது கொண்டிருந்த பற்று முழுமை பெற்றது. அவருக்கு அடிமையாகிவிட்ட நிலையைக்கூட அது பெற்றிருந்தது எனலாம். அவரைப் பொறுத்தவரையில், நூர்ஜஹானைக் கலந்தாலோசிக்காமல் எந்த நடவடிக்கையும் எடுப்பது என்பது நினைக்கவும் முடியாதவொன்று. அவர் ஒரு சிறந்த நண்பர். ஜஹாங்கீர் அரசனுன பின்னர், தமது இளவரசப் பருவத்தில் தமக்கு எவ்வித உதவி செய்தவர்களையும் நினைவுபடுத்தி, அவர்களுக்கு உயர் பதவிகளைக் கொடுத்தார். அவர் பொதுமக்களின் நலத்தில் உண்மையான ஆர்வம்கொண்டு, அவர்களின் உலகீய, அறநெறி வாழ்வை உயர்த்த முயற்சி செய்தார்.

ஜஹாங்கீர் சிறந்த கல்வி அறிவும் பண்பாடும் கொண்ட இளவரசர். அவர் துருக்கியிலும் பாரசீகத்திலும் சிறந்த புலமை கொண்டிருந்ததோடு, ஹிந்தி, அரபு, இன்னும் பல மொழிகளையும் அறிந்திருந்தார். அவர் பாரசீக மொழியில் கொண்டிருந்த அறிவுச் சிறப்புக் குறிப்பிடத்தக்கது. அவரது எழுத்து நடையில் தெளிவும் அழகும் விளங்கின. எழுத்தாற்றலில் அவருக்குள்ள சிறப்பை விளக்க 'துஜுக்கி ஜஹாங்கிரி' என்ற பெயர்பெற்ற அவருடைய வாழ்க்கை வரலாறு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். இலக்கியச் சுவை, கவிதையில் ஆர்வம், கட்டடக் கலை, இசை, ஓவியம் இன்னும் பல நுண்கலைகளிலும் ஈடுபட்டிருந்த அரசர், தாவரவியல்,

விலங்கியல், மருத்துவம் போன்ற கடினமான அறிவியல்களிலும் உண்மையான ஈடுபாடு கொண்டிருந்தது வியக்கத்தக்கதொன்ருகும். அவரது சொந்த வாழ்க்கை வரலாறு மேற்கூறிய பாடப் பொருள்களில் அவருக்கிருந்த அறிவுச் சிறப்பைக் காட்டும் அருமையான சான்ருகும். இந்த நூல் அவரிடம் விளங்கிய அறிவுவேட்கையையும், ஆய்வு மனப்பான்மையையும் எடுத்துக்காட்டுகிறது. மேலும், அவர் பூக்கள், செடிகள், ஓடைகள், ஆறுகள், மலைகள், மடுக்கள் போன்ற இயற்கையின் அழகுகளில் லயித்திருப்பார். நாடு முழுவதும் அவர் சுற்றுலாச் செல்லும்போதும், சிறப்பாகக் காஷ்மீரில் இருந்தபோதும் தாம் காண நேர்ந்த மலர்களையும், கனிகளையும்பற்றித் தமது வரலாற்றில் மிக நுட்பமாக வர்ணிக்கிருர். விலங்குகளையும் பறவைகளையும்பற்றி அவர் தருகின்ற தெளிவான குறிப்புகள் விலங்கியலில் சிறப்பான அறிவு கொண்ட ஒருவர் தருகின்ற விளக்கத்தைப்போன்று அவ்வளவு நுட்பமாக இருக்கின்றது. அவரது ஆதரவில் முகலாய ஓவியக் கலையும் இசையும் மிக உயர்ந்த நிலையான முன்னேற்றத்தைக் கண்டன. ஓவியக்கலைச் செல்வர் என்று தம்மைச் சொல்லிக் கொள்வதில் ஜஹாங்கீர் பெருமை கொண்டார். பல ஓவியப் படைப்புகளை எழுதியவர்கள் யார்யார் என்றும், ஓர் ஓவியத்தைப் பலர் தீட்டியிருந்தாலும், அந்தப் படத்தைக்கொண்டு அதன் பாகங்களை எழுதிய ஓவியர்களை யாரென்றும், அவர்கள் எழுதிய பகுதிகள் எவையென்றும் சொல்லக்கூடிய திறமை அவரிடம் இருந்தது. ‘என்னைப் பொறுத்தவரையிலும், ஓவியத்தில் எனக்குள்ள விருப்பமும், ஓவியத்தைத் திறனாய்வதில் எனக்குள்ள பயிற்சியும் எத்தகையவொரு நிலையை அடைந்திருக்கின்றனவென்ருல், இறந்துபோன ஓவியர் அல்லது நவீன ஓவியர் எவருடைய படைப்பை என் முன்னர் நிறுத்தி. அவர்களுடைய பெயரைச் சொல்லாவிட்டாலும், அந்தக் கணத்தில்தானே, குறிப்பிட்ட ஒரு படைப்பு இன்னாருடையது என்பதை என்னால் கூற முடியும். மேலும், பல உருவங்கள் வரையப்பட்ட ஒரு படத்தை எனக்குக் காட்டினுல், அதிலுள்ள பலதரப்பட்ட முகங்களைத் தீட்டியவர்கள் வேறுபட்ட ஓவியர்களாக இருந்தாலும், எந்த முகத்தை எந்த ஓவியன் தீட்டினுன் என்பதை நான் கண்டுகொள்ள முடியும். ஒரு குறிப்பிட்ட முகத்தில் கண்களையோ, கண் புருவங்களையோ வேருெருவர் தீட்டியிருந்தாலும், நான் மூல முகத்தை எழுதியவர் யாரென்றும், கண்களையும், கண் புருவங்களையும் தீட்டியவர் யாரென்றும் சொல்லிவிடுவேன்’ என்று ஜஹாங்கீர் தமது சுய சரிதையில் எழுதுகிருர் (ஜஹாங்கீரின் வாழ்க்கை வரலாறு, இரண்டாம் தொகுதி, பக். 20). ஜஹாங்கீரின் அவை ஓவியர்கள் உருவங்களைத் தீட்டுவதிலும், மூல ஓவியங்களை அவ்வாறே

உயிரோவியங்களாகத் தீட்டுவதிலும் திறமைபெற்றிருந்தார்கள். சர் தாமஸ்ரோ, ஜாஹங்கீருக்கு ஆங்கிலச் சிறு ஓவியப் படம் ஒன்றைப் பரிசளித்தார். ஜஹாங்கீரின் ஆணைப்படி அவை ஓவியர் ஒருவர் அந்தப் படத்தின் சரியான பிரதி ஒன்றை ஒருவித மாற்றமும் இல்லாமல் படைத்தார். இந்த இரு படங்களும் ரோவுக்கு முன்னால் வைக்கப்பட்டபோது, எது மூல ஓவியம் என்பதைக் கண்டுபிடிப்பதற்குச் சிரமப்பட்டார். ஆனால், ஜஹாங்கீரோ மிக எளிதாக இரண்டையும் வேறுபடுத்திக் கண்டு கொண்டார்.

ஜஹாங்கீர் கட்டடக் கலையில் மிகுந்த ஆர்வம் கொண்டார். ஆனால், அவர் ஓவியக் கலைத்துறையில் செய்ததைவிட மிகக் குறைந்த அளவில்தான் கட்டடக் கலைத்துறையின் வளர்ச்சியில் சாதித்திருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். அவர் எழுப்பிய சிறந்த கட்டடங்களில் சிக்கந்தராவில் கட்டப்பட்ட அக்பரின் சமாதியைத் தனிச் சிறப்புடன் குறிப்பிடவேண்டும். அவர் அதன் உருவத்தைச் சிறிது மாற்றியமைத்து, ஒருவகையில் அதனை திரும்பக் கட்டினார் என்று சொல்லவேண்டும். ஆக்ராவுக்கு அருகில், நூர்ஜஹானின் ஆணைப்படி கட்டப்பட்ட இதிமா உத்தௌலாவின் சமாதி, இந்தியாவில் உள்ள அத்தகைய கட்டடங்களில் மிக அழகுவாய்ந்ததாகும். அதன் வெளியில் பல்வண்ண ஓவியங்களும், உள்ளே ஓவியப் படைப்புகளும் அதனை அலங்கரிக்கின்றன. ஜஹாங்கீரின் ஆதரவின்கீழ் லாகூரின் பெரிய மசூதி கட்டப்பட்டது. இது டெல்லியில் ஜஹாங்கீரின் மகனான ஷாஜஹான் கட்டிய மசூதிக்கு ஈடு கொடுக்கிறது.

ஓவியக் கலைக்கு அடுத்தபடியாக ஜஹாங்கீர் அழகான நந்தவனங்களை அமைப்பதில் மகிழ்ச்சிகொண்டார். காஷ்மீரிலும், லாகூரிலும் இருக்கும் சில நந்தவனங்கள் அவருடைய ஆணையின் பெயரில் அமைக்கப்பட்டவை. அவர் நாட்டின் நாணயங்களை அழகான கையெழுத்து உருவங்களால் அலங்கரிக்க முனைந்தார். தம் உருவம் பொறித்த அழகான பதக்கங்களையும் நாணயங்களையும் ஜஹாங்கீர் அச்சிட்டார்.

ஆடையணிகலன்களிலும், சுவையான உண்டி தயாரிக்கும் கலையிலும் நல்ல விமர்சக ரசனை கொண்டிருந்தார். அவர் தமக்காகப் புதுத் தினுசான ஆடைகளையும் உணவு வகைகளையும் உருவாக்கிக் கொண்டு, மற்றவர்கள் அவற்றைப் பயன்படுத்துவதைத் தடை செய்தார். அவருக்குக் கனிகளை யுண்ணுவதென்றால் தனிப் பிரியம் உண்டு. மாங்கனிகளைச் சிறந்த கனிவகைகளில் ஒன்றாகக் கருதினார்.

அவருக்குக் காபூலின் சுவையுள்ள செரிப்பழங்கள் என்றால் மிகப் பிடிக்கும்.

சுகவாழ்வு, மது, சிற்றின்பம் ஆகியவற்றில் அளவு கடந்த பற்றும், யாராவது ஒருவரின் மேலாண்மைக்குப் பணிந்துவிடும் இயல்பான பழக்கமும், ஜஹாங்கீரிடமிருந்த முக்கியக் குறைபாடுக ளாகும். இளவயதில் சுறுசுறுப்பாக இருந்த அவர் வயது வளர வளரச் சோம்பலுக்கு இடம் கொடுத்தார். அவர் செய்யவேண்டிய பொறுப்புகளில் பலவற்றைப் பிறருடைய கைகளில் விட்டுவிடுவார். இளவரசராக இருந்தபோது அவர் தீய நண்பர்களின் பிடியில் சிக்கிக்கிடந்தார். அரசரான பின்னரோ, முதலில் நூர்ஜஹானின் தலைமையில் இயங்கிய சிறு குழுவினரிடமும், அதனையடுத்து அரசியாரின் கட்டுப்பாட்டுக்கும் பணிந்தார். அவருடைய சுய வரலாற்றில், அவர் கள்ளங்கபடின்றிக் கூறுவதுபோல், அவர் பதினெட்டாவது வயதிலிருந்தே குடிப்பழக்கத்தை மேற்கொண் டார். அதுமுதல் ஒன்பது ஆண்டுகளில் அவர் அருந்திவந்த இரு முறை வடிக்கப்பட்ட மதுவின் அளவு தினமும் இருபது கிண் ணங்கள் என்ற எண்ணிக்கைக்குப் படிப்படியாக உயர்ந்தது. இதில் பதினன்கு கிண்ணங்கள் பகலிலும், எஞ்சிய ஆறு கிண்ணங்கள் இரவிலும் அருந்தப்படும். மதுவருந்தும் பழக்கத்திற்கு அவர் எவ்வளவு அடிமையாகிவிட்டாரென்றால், கனிரசமும் அவருக்குப் போதை கொடுக்கமுடியாமல், சாராய வகைகளை அருந்தத் தொடங் கினர். ஆனால், வியாழக்கிழமை மாலையில் அவர் மதுவருந்த மாட்டார். வியாழக்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அவர் புலால் உண்பதும் கிடையாது. வியாழக்கிழமை அவர் முடிசூட்டிக்கொண்ட நாள், ஞாயிற்றுக் கிழமை அக்பரின் பிறந்தநாள்.

ஜஹாங்கீரின் சமயக் கொள்கையை வரையறுத்துக் கூறுவது எளிதன்று. சர் தாமஸ்ரோ அவரை கடவுள் பற்றற்றவர் என்று பழித்தார். இன்னும் சில சமகாலத்திய எழுத்தாளர்கள் அவரைப் பல சமய நம்பிக்கையுள்ளவரென்றும், பக்தியுள்ள முஸ்லீம் என்றும், கிறிஸ்தவர் என்றும்கூடக் கூறுகிறார்கள். ஆனால், எந்தச் சமயத் தின் வைதீகக் கொள்கைகளிலும் அவர் நம்பிக்கையில்லாதவர் என்பது மட்டும் உண்மை. பிற சமயங்களின் கொள்கைகளைச் சமயப் பொறையுணர்ச்சியுடன் புரிந்துகொள்ளுவதை அடிப்படை யாகக்கொண்ட சமய நம்பிக்கைகளும் பயிற்சியும் கொண்ட விரி நோக்குடைய முஸல்மான் என்று ஜஹாங்கீரைக் குறிப்பிடலாம். ஜஹாங்கீரின் சுயசரிதை உள்ளிட்ட, சமகாலத்திய நூல்களைப் படித் தால், ஜஹாங்கீர் கடவுள் நம்பிக்கை கொண்டவரென்பதையும்,

இந்துமுஸ்லிம் சமயப்பெரியார்களை வணங்கி, அவர்களின் நட்புறவில் மகிழ்ச்சிகொண்டார் என்பதையும் ஐயந்திரிபற எளிதாகக் காண லாம். அவரது சமயக் கொள்கையில் வைதீக வெறியில்லாமையால், அவர் முஸ்லிம் சமய வெறியர்களுக்குப் பரிவு காட்டவில்லை. சிலை வழிபாட்டிலும் அவதாரத்திலும் நம்பிக்கைகொள்ளும் நவீன இந்து சமயத்தையும் அவர் போற்றவில்லை. கிறிஸ்து பெருமானின் பெற்றோர்களைப்பற்றியும், அவருடைய சிலுவை மரணத்தைப் பற்றியும் அவர் முழுவதும் நம்பியதாகத் தெரியவில்லை. நாள் தோறும் ஐந்து முறை தொழுகை செய்வதையும், இஸ்லாமில் கூறப்பட்ட ரம்ஸான் நோன்பைப்பற்றியும் அவர் கவலைப்படவில்லை. அவரது தந்தையாரைப்போன்று, கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு, மரணத்திற்குப் பிந்திய மறுவாழ்வு ஆகிய நுட்பமான பிரச்சினைகளில் அவர் ஆழமாக ஈடுபடாவிட்டாலும், அவர் ஒரு கடவுளை நம்பினார் என்பதில் ஐயப்பாட்டிற்கு இடமில்லை.

வீரவிளையாட்டுகளிலும் போர்க்கலையிலும் தம் தந்தையின்கீழ்ப் பயிற்சி பெற்றிருந்த ஜஹாங்கீர் தமது இளமையில் ஒரு திறமை மிக்க வீரராகப் பக்குவப்பட்டிருந்தார். விளையாட்டுகளில் அவருக்கு ஆர்வம் இருந்தது. அவர் துப்பாக்கி சுடுவதிலும், வில்லில்பூட்டி அம்பெய்வதிலும் ஆற்றல் மிக்கவர். போரிலும் அரசியல் வெல் திறத்திலும் அவர் பயிற்சிபெற்று, இவை இரண்டிலும் சிறந்த அனு பவம் கண்டார். ஆனால், ஒரு தளபதிக்கு அவசியமான ஊக்கமும், கடமையுணர்ச்சியும் இவரிடம் விளங்கவில்லை. உண்மையில் ஜஹாங்கீர் படைக்கலன்களைப் பயன்படுத்துவதில் திறமையும், தனிப் பட்ட வீரமும் கொண்டிருந்தாரேயன்றி, ஒரு படைத் தலைவருக்கோ அல்லது தளபதிக்கோ உரிய அறிவுத்திறமும் ஆவலும் அவரிடம் சிறக்கவில்லை. இளவரசராக இருந்தபோதோ அல்லது அரசரான பின்னரோ அவர் போர்க்களத்தில் குறிப்பிடத்தக்க வெற்றியெதுவும் பெறவில்லை. அவருடைய தந்தையாரையே மலைக்கச்செய்த மீவார் சரணகதியிலும், காங்க்ரா வெற்றியைப்பற்றியும் அவர் பெருமைப் பட்டுக்கொள்வார். ஆனால், இந்த வெற்றிகளெல்லாம் ஜஹாங்கீரின் படைத்தலைமைத் திறத்தால் என்று கூறமுடியாது. காலத்தின் சூழ்நிலைகளும், எதிரிகளின் பலமின்மையும், ஷாஜஹானும் பிற தளபதிகளும் காட்டிய திறமைகளும்தாம் மேற்கூறிய வெற்றிகளைச் சாதித்தன என்று சொல்வதே பொருத்தமாகும். அரசரைப் பொறுத்தவரையில், படைப்பயிற்சியை—படை அமைப்பை, தளவாடங்களை அல்லது முகலாயப் படையின் ஒழுக்கக் கட்டுப் பாடுகளை முன்னேற்ற அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றிய ஒரு சிறு குறிப்பை முதலில் நாம் சமகாலத்திய ஆசிரியர் களின் நூல்களில் காணமுடியவில்லை. மேலும், தமது படைவீரர்

களின் மன உறுதியைத் தூண்டிவிட்டு, அவர்கள்பால் கடமையுணர்ச்சியையும், நாட்டுப்பற்றையும் ஊட்டவேண்டுமென்ற எண்ணமும் அவருக்கு என்றும் எழவில்லை. உண்மையில் அவரது தந்தை காலத்தில் இருந்ததைவிட, ஜஹாங்கீரின் ஆட்சியில் படைமுறையில் ஓரளவு நலிவு ஏற்பட்டது எனக் கூறலாம்.

ஜஹாங்கீரை ஓரளவு திறமையுள்ள ஆட்சியாளர் என்றும் நிர்வாகி என்றும் கூறலாம். காலத்திற்கேற்ற தேவைகளையும், சூழ்நிலைகளையும் கண்டுரைக்கக்கூடிய திறமை அவரிடம் இருந்தது. அவர் அக்பர் உருவாக்கிய கொள்கைகளையும், ஆட்சி முறைகளையும் தொடர்ந்து நடத்தக்கூடிய நல்லெண்ணம் படைத்தவர். ஆனால், புதிய பெரும் ஆட்சித்துறை சீர்திருத்தங்களையும், வருங்காலத் தலைமுறைகளின் நலத்துக்கான சட்டங்களையும் தொடங்கி நடத்தக்கூடிய மாபெரும் ஆக்கச் சார்பான அரசியல் நுண்ணறிவாளராக அவரைக் கருதமுடியாது. அக்பரிடம் விளங்கிய உயர்ந்த இலட்சியவாதமும், அறிவாக்கமும் ஜஹாங்கீரிடம் இருக்கவில்லை. அக்பர் வகுத்திருந்த ஆட்சி முறையில் ஒருவிதமான மாற்றங்களும் செய்யப்படவில்லையென்றே கூறவேண்டும். வக்கீல் அல்லது வக்கீலிமுட்லக் என்பவர் அரசருக்கு அடுத்தபடி உயர்ந்த அதிகாரியாகவும், இதுபோலவே பிற அமைச்சர்களும் முக்கியம் பெற்று அக்பர் காலத்திய நிலை தொடர்ந்து அமலில் இருந்து வந்தது. ஜஹாங்கீரின் ஆட்சி முறைக்கும், அக்பரின் ஆட்சி முறைக்கும் உள்ள இன்றியமையாத வேறுபாடு இதுதான். அக்பர் மனிதர்களின் குணவியல்புகளையும் ஆற்றல்களையும் சரிவரக் கண்டு முடிவு செய்யும் தவறாத திறமையைப் பெற்றிருந்ததால், அவர் குறித்த பதவிகளுக்குச் சரியான ஆட்களை இயல்பாகவே நியமிக்க முடிந்தது. ஆனால், ஜஹாங்கீரோ திறமை, நீதி, மக்கள் நலம் இவற்றைத் தவிரப் பிற சலுகைகளினாலும் அலைக்கழிக்கப்பட்டார்.

சமயக் கொள்கைகள்

ஜஹாங்கீர் அரியணையேறியபோது, இஸ்லாம் சமயத்தை அக்பர் காலத்தில் முன் இருந்த உயரிய நிலைக்கு ஜஹாங்கீர் மீட்டுக் கொடுப்பார் என்று முஸ்லீம் மறைவாணர்கள் நம்பினார்கள். இஸ்லாம் நாட்டின் தலைமைச் சமயமாக விருந்த நிலையை அக்பர் மாற்றிவிட்டார். ஜஹாங்கீரின் புகழ்மிக்க தந்தையாராகிய அக்பர் அரசாங்கத்தைச் சமயச் சார்பற்றதாக ஆக்குகின்ற பணியை ஓரளவு முடித்திருந்தார். இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்ற தங்கள் கருத்துக்குப் புதிய அரசரை உடன்படச் செய்யுமாறு மேற்கூறிய மறைவாணர்கள் வற்புறுத்தினர். தொடக்கத்தில் இந்தக் கொள்கைக்குச் சிறிது வெற்றி கிடைத்தது. ஆனால், அரியணை

யேறிய சில ஆண்டுகளின் பின்னர், அக்பர் அரசவையின் பொது நோக்கான சூழ்நிலையில் வளர்ந்திருந்த ஜஹாங்கீர், உலிமாவின் பிடியில் இரையாகின்ற தவற்றை உணர்ந்தார். விரிநோக்குடைய மன்னராகிய ஜஹாங்கீர் தமது தந்தை தொடங்கிவைத்த சமயப் பொறையாகிய வழியினின்று விலகிச் செல்ல விரும்பவில்லை. எனினும், அக்பரைவிட ஜஹாங்கீர் இஸ்லாம் சமயத்தின் முன்னேற்றத்தில் அதிக ஆர்வம் கொண்டதோடு, சில சமயங்களில் அதன் மதிப்பை நிலைநாட்டவும் முயன்றார். அவரது ஆட்சியின் பதினைந்தாவது ஆண்டில், இராஜபுரி இந்துக்கள், அந்த வட்டாரத்திலுள்ள முஸ்லிம் பெண்களை மணந்து, அவர்களை இந்து சமயத்திற்கு மதமாற்றம் செய்துகொண்டால் அவர்களைத் தண்டிக்குமாறு பணித்தார். சில சமயங்களில் அவர் இந்துக்களுடன் போர் செய்யும்போது, மீவாரிலும் கங்க்ராவிலும் நடந்ததுபோல் இந்துக் கோவில்களை இடித்துத்தள்ளுமாறு உத்தர விட்டார். போர்த்துகீசியர்களுடன் போரிட்டபோது, அவரது பேரரசில் உள்ள கிறிஸ்தவக் கோவில்களை மூடிவிடுமாறு ஆணையிட்டார். சில வேளைகளில், ஆனால் அரிதாகத்தான், அவர் தெய்வ நிந்தனை செய்யும் குற்றமும் புரிவதுண்டு. ஆஜ்மீரில் பன்றி அவதாரமான வராக அவதாரக் கோவிலை இடிக்கவும், சிலைகளைக் குளத்தில் எறிந்துவிடவும் கட்டளையிட்டார். இவை யாவும் ஜஹாங்கீருக்கு ஏற்பட்ட தற்காலிக வெறியுணர்ச்சி அல்லது திடீர் வெறுப்புகளின் விளைவாகச் செய்யப்பட்டன. பொதுவாக எல்லாச் சமயங்களிடமும் பொறையுடன் இருக்கும் கொள்கையை ஜஹாங்கீர் பின்பற்றினார். முஸ்லீம் அல்லாதார் பொதுத் தொழுகைக் கூடங்களைக் கட்டிக்கொள்ள அவர் அனுமதித்தார். எவ்வித இடர்ப்பாடின்றியும், யாத்ரிகர் வரி விதிக்கப்படாமலும், இந்துக்கள் தங்களுடைய திருத்தலங்களைத் தரிசிக்கவும் அனுமதி வழங்கப் பட்டது. அரசவையின் செலவில் கிறிஸ்தவ திருவழிபாடுகளைத் தொடர்ந்து நடக்க அனுமதித்து, கிறிஸ்தவ அடியார்களுக்கு உதவிப் பணமும் வழங்கினார். இந்துக்கள் தமது திருவிழாக்களை வெளிப்படையாகக் கொண்டாட அவர் எவ்விதத் தடையும் விதிக்க வில்லை; அரசரே வசந்தம், ரக்ஷபந்தம், தசரா முதலிய இந்துத் திருவிழாக்களில் கலந்துகொண்டார். சிவராத்திரியன்று அவர் புகழ்பெற்ற யோகிகளைக் காண்பதுண்டு. கிறிஸ்து ஜெயந்தி, ஈஸ்டர், இன்னும் பல பண்டிகைகளைக் கொண்டாட கிறிஸ்துவர் களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

எல்லாச் சமயங்களிடமும் வழக்கமாக விரிநோக்கும் பொறையும் கொண்டிருந்தாலும், ஜஹாங்கீர் சில சமயங்களில் முஸ்லீம் சமய மறுப்பாளர்களுக்கு எதிராக அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு

அனுமதி கொடுத்தார். லாகூரைச் சேர்ந்த ஷேய்க்ரஹீம் என்பவர் ஒரு சமயப் பிரிவுக்குத் தலைமை தாங்கியதால் அவர் கோட்டையில் காவலில் வைக்கப்பட்டார், புகழ்பெற்ற ஷியா சமயப் பிரிவின் எழுத்தாளராக இருந்ததற்காக காஸிநுருல்லா என்பவர் கொலைத் தண்டனை பெற்றார். ஷேய்க் அகமது ஸர்ஹிண்டி என்பார் குவாலியர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டார். ஆனால், சிறிது காலத்திற்குப் பின்னர் அவர் விடுதலைபெற்று, பரிசுப்பொருள் களுடன் ஸர்ஹிண்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

ஜஹாங்கீருக்கும் சீக்கியர்களுக்கும் இடையே உள்ள உறவு அவ் வளவு நல்ல முறையில் அமையவில்லை. சீக்கிய குருவாகிய அர்ஜுன் சமயம் பரப்பும் நடவடிக்கைகளுக்காகவும், முக்கியமாகக் கிளர்ச்சி செய்த இளவரசரான குஸ்ருவுக்கு ஆசி அளித்த காரணத்திற் காகவும், ஜஹாங்கீரின் வெறுப்பைத் தேடிக்கொண்டார். எனவே, ஜஹாங்கீர் குருவை வரவழைத்து மரணதண்டனை விதித்தார். செல்வாக்குள்ள சில இந்துக்கள் தலையிட்டதால், அரசர் மரண தண்டனையை மாற்றி ஒரு லட்ச ரூபாய் அபராதம் விதித்தார்; ஆனால், குரு அர்ஜுன் அபராதத்தொகையைச் செலுத்த மறுத்ததால் காவலில் வைக்கப்பட்டார். துன்புறுத்தப்பட்டதன் விளைவாக குரு சிறையில் மாண்டார். குருவிற்காக அபராதத் தொகைக்குப் பிணையாக நின்ற லாகூரைச் சேர்ந்த திவான் சந்துலாலும் கொலை செய்யப்பட்டார். இதன் பின்னர் ஜஹாங்கீர் சீக்கியர்களின் விவகாரங்களில் தலையிடுவதில்லை. குரு அர்ஜுனுக்கு எதிராக அரசர் எடுத்த நடவடிக்கை சமய உணர்ச்சிகளாலும், அரசியல் காரணங்களாலும் தூண்டப்பட்டது. அர்ஜுன் முஸ்லீம்களைத் தமது சமயத்திற்கு மதமாற்றம் செய்துகொண்டிருந்ததால், சீக்கிய குருவின் 'கடையை அடைத்துவிட'த் தாம் ஆவல் கொண்டதாக ஜஹாங்கீர் தமது நாள்குறிப்பில் எழுதினார். குருவின் மரணத் திற்குப் பின்னர் அவருடைய வழித் தோன்றல்களின் விவகாரங் களில் தலையிடாமல் அரசர் விவேகமாக விலகிக்கொண்டார்.

இதுபோலவே அரசர் சமணர்களுடனும் நல்லுறவு கொண் டிருக்கவில்லை. சமணத் தலைவராகிய மான்சிங் என்பவர் குஸ்ரு வின் கிளர்ச்சியின்போது, ஜஹாங்கீரின் ஆட்சி இரண்டாண்டு களுக்குள் முடிவுறும் என்று வருவதுரைத்தார். இது ஜஹாங் கீருக்குக் கோபத்தை மூட்டியது. ஆனால், மான்சிங் பிகானிர் அரசரின் பாதுகாப்பில் இருந்ததால், அவர்மீது உடனே நட வடிக்கை எடுக்க முடியவில்லை. அவரது ஆட்சியின் பன்னிரண் டாம் ஆண்டில், அரசர் குஜராத்துக்குச் சென்றபோது, சமணர்கள் ஆலயங்களைக் கட்டி அவற்றைக் குழப்பமுண்டாக்கும் கேந்திரங்

களாக ஆக்கியிருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டினர். எனவே, சமணர்களை முகலாயப் பகுதிகளில் இருந்து வெளியேற்ற உத்தரவு கொடுத்தார். எனவே, சமணர்களில் பெரும்பாலோர் குஜராத்தி லிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. இந்த ஆணை பின்னர் நீக்கப்பட்டதாக டாக்டர் பெனி பிரசாத் கூறுகிறார். இந்தக் கூற்றுக்கு சமகாலத்திய சான்றுகள் எதுவும் இல்லை. சமணர்களைத் துன்புறுத்தியது பகுதி அரசியல் காரணங்களுக்காகவும், பகுதி சமய உணர்ச்சிகளின் விளைவாகவும் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

ஜஹாங்கீரும், தமது தந்தையைப் போலவே பல சமயத்தார் களுடன் சமயச் சர்ச்சைகள் செய்வதில் ஆர்வங்கொண்டிருந்தார். அவர் இந்துப் பண்டிதர்களையும், கிறிஸ்துவ சமயப் பெரியார் களையும், சிலவேளைகளில் முஸ்லிம் உலிமாவையும் அழைத்து அவர்களின் சமய வாதங்களைக் கவனமாகக் கேட்பார். வைணவப் பெரியாராகிய ஜாதுருப் என்பவரின் நட்பில் பிரியம் கொண்டு, அவர் உஜ்ஜயினி, மதுரா ஆகிய இடங்களில் சமயச் சர்ச்சைகள் செய்தார். இவற்றின் விளைவாக இந்து வேதாந்தமும், முஸ்லிம் சூஃபிவாதமும் ஒற்றுமை கொண்டுள்ளன என்ற முடிவுக்கு வந்தார். லாகூரிலுள்ள புகழ்பெற்ற முஸ்லீம் புனிதரான மியான்மீர் என்பவ ருடனும், அரசர் சமய உரையாடல்களை நிகழ்த்தினர். அக்பரைப் பின்பற்றி ஜஹாங்கீரும் சமய வாதங்களை நடத்தினர். ஆனால், அவர் சமயச் சர்ச்சைகளில் மாமன்னர் அக்பரைப்போன்று தீவிர ஈடுபாடு கொள்ளவில்லை.

பொதுப் பணியில் இந்துக்களுக்கு உயர்ந்த பதவிகள் வழங்கும் அக்பரின் கொள்கையை ஜஹாங்கீர் மாற்றவில்லை. உண்மையில் அவர், அரசாங்கப் பதவிகளைப் பொறுத்தவரையில் சமயம், இனம் ஆகியவற்றின் அடிப்படையில் தமது குடிமக்களில் எந்த வகுப்பின ரிடமும் வேறுபாடு காட்டவில்லை. மான்சிங், தோடர்மாலின் மகனான கல்யாண்சிங், விக்ரமஜித் ஆகிய மூவரும் ஜஹாங்கீர் காலத்தில் இருந்த இந்து கவர்னர்களாவர். பிற உயர் பதவிகளில் இன்னும் பல இந்துக்கள் இருந்தனர். அவர்களும் முஸ்லீம்களைப் போலவே பேரரசின் குடிகளாவர்.

பொதுவாகக் காணுமிடத்து, ஜஹாங்கீரை வெற்றியுடன் அர சாண்ட மன்னர் என்று கூறுவது தகும். அவரது ஆட்சியில் மக்களின் பொருள்வளம் நல்லமுறையில் இருந்தது. உழவும், தொழிலும், வணிகமும் சிறந்திருந்தன. மக்கள் வறுமையால் வாட வில்லை. அக்பர் செய்ததுபோல், ஜஹாங்கீர் மக்களின் உலக நலத்

திற்காகவும், அறநெறி வாழ்வுக்காகவும் பெரும் சீர்திருத்தங்களைச் செய்யவில்லையென்றாலும், அவர் சில சமூகத் தீமைகளை ஒழிக்க முயன்றதோடு, மனிதாபிமான அறப்பணிகளிலும் ஈடுபட்டார். அவரது ஆட்சியின் தொடக்கத்தில் பாங் செடியிலிருந்து தயாரிக்கும் மதுவையும், பிற தாவர வடிபானங்களையும், அரிசிச் சாராயத்தையும் குடிப்பதையும், விற்பதையும் தடைசெய்தார். அவர் சூதாட்டத்தையும் தடை செய்தார். உழவர்களின் நலன்களைப் பாதுகாக்க முயன்றார். படைகள் அணிவகுத்துச் செல்லும்போது பயிர்கள் பாழ்செய்யப்பட்டால், அதற்கு இழப்பீட்டுத்தொகை வழங்கினார். மேலும், இந்து விதவைகள் அரசாங்க அனுமதியின்றி உடன் கட்டை ஏறும்படி வற்புறுத்தப்படக்கூடாதென்றும், பெண் குழந்தைகளைக் கொல்வதைத் தடைசெய்தும் ஆணைகளை வெளியிட்டார். தர்மச் செயல்களைச் செய்வதில் இன்பங்கொண்டார். ஏழைகளுக்காக இலவச உணவு விடுதிகள் ஏற்படுத்தி, பக்கிரிகளுக்கு தர்மப்பணம் வழங்கினார். பல்வேறு சமூகங்களின் சமூகப் பழக்க வழக்கங்களில் தலையிடாமல் பொதுமக்களின் சமூக நிலைமையை முன்னேற்ற வேண்டுமென்பது அவரது கொள்கையாகும். மக்களின் நலத்தில் ஜஹாங்கீர் உண்மையான நாட்டம் கொண்டிருந்தார். தோட்டங்களுக்கு வரிவிதித்த ஓர் அரசனின் கதையை அவர் வெறுப்புணர்ச்சியுடன் கூறுவார். இதன் விளைவாகக் கனிகளின் எண்ணிக்கையும் தரமும் குறைந்துவிட்டதாம். ஆனால், தமது பேரரசில் உள்ள நந்தவனங்களைப் பொறுத்தவரையிலும் அவ்விதப் பேராசைகள் இல்லை என்பதில் அரசர் பெருமை கொண்டார். தமது குடிமக்களின் வளத்தில் அரசர் எவ்வளவு நல்லெண்ணம் கொண்டிருந்தார் என்பதை இது காட்டுகிறது.

ஏதோ வெறியுணர்ச்சியில் மிகக் கடுமையான தண்டனை வழங்கிய ஒரு சில நிகழ்ச்சிகளைத் தவிர, ஜஹாங்கீர் பொதுவாக நீதியை விரும்பிய மன்னராக இருந்தார். பிறப்பு, வாழ்க்கை நிலை, பதவிகள் முதலிய வேறுபாடுகளின்றிச் சகலருக்கும் சமநீதி வழங்குவதில் அவர் பெருமை கொண்டார். நீதிவழங்குவதைப் பொறுத்தவரையிலும் பிரபுக்களுக்கும், ஏன், இளவரசர்களுக்கும் கூடச் சலுகை காட்டாமல் இருக்கும்படி கடவுள் காப்பாற்றுவாராக என்று சொல்வது வழக்கம். இது வெறும் புகழுரையன்று; அரசர் வழக்குகளைச் சமநீதியோடு தீர்த்தார் என்ற செய்தியை அவரது சுயசரிதையிலும், சமகாலத்திய ஆசிரியர்களின் நூல்களிலும் அறிகிறோம். விதிப்படி கொலைத்தண்டனையை அரசரே, அதுவும் வெகு அரிதாகவே வழங்கினார். கொலைத் தண்டனை வழங்கப்படும்போது, சூரியன் மறைவதற்கு முன்னர் அரசர் ஆணை நிறைவேற்றப்படக் கூடாது என அரசரின்

கட்டளைகளை நிறைவேற்றும் அதிகாரிகளுக்குக் கண்டிப்பான உத்தரவு கொடுக்கப்பட்டிருந்தது. அவரது நீதியில் கருணை கலந்திருந்தது.

ஜஹாங்கீரைச் சிறந்த அரசர் என்றோ, மிகச் சிறப்பான திறமையுள்ள அரசியல் நுண்ணறிவாளர் அல்லது ஆட்சித்துறை நிபுணர் என்றோ கூறமுடியாது. அவர் எந்த வகையானும் சிறந்த தளபதியும் அரசியல் தந்திரியும் ஆகமாட்டார். ஆனால், தமது குடிகளின் நலத்தை விரும்பித் தக்க முறையில் அவர்களால் விரும்பப்பட்ட ஒரு வெற்றியுள்ள, நன்மையில் நாட்டமுள்ள அரசர் என்று ஜஹாங்கீரே ஒப்புக்கொள்வது தவறன்று. பெரும்பாலான அரசர்களைப்போன்று ஜஹாங்கீரிடம் நற்பண்புகளும் குறைகளும் இருந்தன. காலஞ்சென்ற சர் ரிச்சர்ட் பர்ன்ஸ் என்பார் ஜஹாங்கீரின் குணச் சிறப்புகளை விருப்புவெறுப்பின்றி நீதியான முறையில் படம்பிடித்துக் காட்டுகிறார். அதனை இங்கே மேற்கோளாகத் தருவது தகுதியுடையதாகும். 'தாராள குணமும், விளையாட்டுகளில் ஆர்வமும், கலைகளிலும், நல்வாழ்விலும் நாட்டமும்கொண்ட மனிதராக அவரை இந்திய அரசர்களின் வரிசையில் நிற்கக் காண்கிறோம். யாவருக்கும் நலம் செய்யவே அவர் நாடினார். ஆனால், அறிவு சார்ந்த ஆற்றல்கள் இல்லாமையால் அவர் மாபெரும் ஆட்சித் துறையின்றியும் வல்லுனர்களின் தகுதியைப் பெற முடியாதவராகவும் தோல்விகண்டார்.'

மேலும் படித்தற்குரிய நூல்கள்

தொடக்கச் சான்றுகள்

(a) Persian

1. 'Tuzuk-i-Jahangiri' by Jahangir him-self to the 17th year of his reign and brought to the 19th year by Mutamid Khan, Translated into English by A Rogers, edited by H. Beveridge in two Volumes.

2. 'Iqbalnama' by Mutamid Khan, Published by the Royal Asiatic Society, Bengal.

3. 'Tatimma Weqiat-i-Jahangiri' by Muhammad Madi.

4. 'Maasir-i-Jahangiri' by Khwaja Ghairat Khan.

5. 'Akbarnama' by Abul Fazl, Published by the Royal Asiatic Society, Bengal and translated into English by H. Beveridge in 3 Volumes.

6. 'Takmil Akbarnama', by Inayat Ullah, Published by Royal Asiatic Society, Bengal and translated into English by Lieut Chalmers.

7. 'Tabaqat-i-Akbari', by Nizamuddin Ahmed, Published by Royal Asiatic Society, Bengal and translated into English in 3 Volumes by B. De.

8. 'Muntakhab-iet-Tawarikh', by Abul Qadir Badayuni, Published by the Royal Asiatic Society, Bengal and translated into English by Rantin Low and Haig respectively in 3 volumes.

9. 'Gulshan-i-Ibrahimi alias Tarikh-i-Farishta', by Hindu Beg Farishta, published by N. K. Press, Lucknow and translated into English by John Briggs under the title of 'History of the Rise of Muhammedan Power in India'.

(b) European languages

1. 'The Annual Relation of Father Fernao Guerreiro for 1607-8', Abstract translation by H. Hosten, Journal of Panjab Historical Society', vol. 7, p. 50.

2. 'Early Travels in India', Edited by W. Foster, 1921.

3. 'The Embassy of Sir Thomas Roe to India (1615-19)', Edited by W. Foster, 1926.

4. 'Jahangir's India' (The Remonastranie of Fr. Pelsaert), translated from the Dutch by W. H. Moreland and P. Geyl; Cambridge, 1925.

5. Letters received by the East India Co., from its Servants in the East (1902-27), vols. 1 to 6.

6. 'English Factories in India'. Edited by W. Foster.

7. 'Voyage of Peter Floris to the East Indies (1611-15)', Edited by W. H. Moreland, 1934.

8. 'Voyage of Thomas Best', (1612-14). Edited by W. Foster, 1934.

Modern Works

1. 'History of Jahangir', by Dr. Beni Prasad, 1922.

2. 'From Akbar to Aurangzeb', by W. H. Moreland, 1923.

3. 'Reign of Jahangir' by Gladwin, Calcutta, 1788.

4. 'De imperio Magna Mogolisive, India ver a commentarius exuaris Auetoribus congesis', by De Laet, Translated into English by J. S. Hoyland, Bombay, 1928.

கலைச்சொல் அகராதி

Abwabs	—	தல வரிகள்
Administration	—	நிர்வாகம்
Ashraffs	—	தங்க நாணயங்கள்
Astrology	—	சோதிடம்
Astronomy	—	வான நூல்
Badusha	—	பேரரசர்
Chronicler	—	காலவரிசை வரலாறு எழுதுபவர்
Dak chauki	—	தபால் நிலையம்
Darbar	—	அரசவை
Divine right theory	—	தெய்வீக உரிமைக் கோட்பாடு
Dynasty	—	வமிசம்
Farman	—	அரச ஆணை
Fatwa	—	சமய ஆணை
Fortress	—	அரண்
Ghazi	—	நம்பிக்கையற்றவர்களைக் கொல்பவர்
Hawa	—	காற்று
Ibadat Khana	—	தொழுகை இல்லம்
Infalliability Decree	—	தவறுபடா ஆணை
Jagir	—	ஜாகிர் ; ஊழிய மானியம்
Jarokha Dharsan	—	முகமாடி தரிசனம்
Jauhar	—	இராசபுத்திரப் பெண்கள் கையாண்ட பயங்கரத் தீக் குளிப்புச் சடங்கு
Jihad	—	புனிதப்போர்
Jizya	—	முஸ்லீம் அல்லாதார் மீது விதிக்கப்பட்ட தலைவரி
Khams	—	நிலவரி
Memoirs	—	வாழ்க்கைக் குறிப்புகள்

Munsifa-munsifan	—	தலைமை முன்ஸீப்
Patta	—	உரிமைச் சாசனம்
Philosophy	—	தத்துவம்
Qabuliat	—	ஒப்பு சாசனம்
Qalandar	—	சுற்றித்திரியும் யாசகர்
Siege	—	முற்றுகை
Shiqdar-i-Shiqdaran	—	தலைமை ஷிக்தார்
Sovereignty	—	இறைமை
Subhikul	—	உலக அமைதி
Territory	—	ஆட்சிப் பகுதி
Throne	—	அரியணை ; சிம்மாசனம்
Trunk Road	—	நெடுஞ்சாலை
Zakat	—	ஒருவரிடம் ஓர் ஆண்டுவரை பணம் சேமிக்கப்பட்டு இருந்தால் அதில் நூற்றுக்கு $2\frac{1}{2}$ சதவிகிதம் கட்டாயமாகக் கொடுக்கவேண்டிய தானம்

பொருள் அகராதி

ய

ர

ல

ஹ

தமிழ் வெளியீட்டுக் கழகம்

சென்னை-9

1966 வரை வெளியீட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

*1.	பொருளாதாரம்—II ...	சி. வேலாயுதம்	9—00
2.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	திருமதி ஆர். தாமரஜாட்சி	12—00
3.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்—I	தி. சி. மோகன்	12—00
4.	,, —II	எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	10—75
5.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	க. முத்தையன்	7—00
*6.	பணவியலும் பாங்கியலும்-II	சி. வேலாயுதம்	11—50
7.	நவீன பாங்கு இயல் ...	க. வெற்றிவேல்	7—50
*8.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	பி. வி. ஸ்ரீநிவாசன்	5—50
*9.	அரசாங்க நிதி இயல் ...	அர. சேஷாசலம்	4—75
10.	இந்தியப் பொருளியல்—I	எம். பாலசுப்பிரமணியன்	10—00
11.	,, —II	எம். லூர்துநாதன்	4—25
12.	நமது பொருளாதாரப் பிரச்சினை—I	சி. சுந்தரராஜன்	10—75
13.	,, —II	எஸ். குழந்தைநாதன்	10—50
14.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு—I	கீ. சீ. இராமசாமி	6—00
15.	,, —II	,,	6—00
16.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	தி. சி. மோகன்	5—50

17.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு-I	மு. க. சுப்பிரமணியம்	11—00
18.	,, II	பி. வி. சீனிவாசன்	6—00
19.	,, III	,,	6—50
20.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்—I	மா. குமாரசாமி	10—00
21.	,, II	அர. சேஷாசலம்	9—50
22.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி—I	தே. வேலப்பன்	10—00
23.	,, II	ஜி. சிதம்பரம்	8—00
24.	பணம்—சிறு விளக்கம்...	கோ. இராதாகிருஷ்ணன்	10—00
*25.	வணிக இயலின் தத்துவங்கள்	கு. ஆளுடைய பிள்ளை	9—50
26.	பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சி	சூ. ரா. கறுப்பண்ணன்	11—00
27.	பென்ஹாம் பொருளாதாரம்-I	ஏ. குழந்தை	11—00
28.	,, II	எஸ். குழந்தைநாதன்	7—00
*29.	வரவு செலவுத் திட்டம்	ஆர். ரங்காச்சாரி	6—00

வரலாறு

*30.	பிரிட்டன் வரலாறு—I	கி. ர. அனுமந்தன்	10—00
*31.	,, II	,,	9—75
*32.	ஐரோப்பிய வரலாறு—I	டி. வி. சொக்கப்பா	4—50
33.	ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றுண்டு காலச் சரித்திரம்	வை. விருத்தகிரீசன்	15—00
34.	இங்கிலாந்து வரலாறு...I	இரா. அண்ணாமலை	13—00
35.	,, II	பா. மாணிக்கவேலு	13—00
36.	,, III	என். ஜே. ராஜகோபால்	8—00
37.	,, IV	,,	8—00

* மூலநூல் (Original Book)

வரலாறு—தொடர்ச்சி

38.	இங்கிலாந்தின் வரலாறு—I ...	... க. த. திருநாவுக்கரசு	... 15—00
39.	,, II ...	... எம். எக்ஸ். மிராண்டா	... 8—00
40	,, III ...	... ,,	... 5—00
41.	இந்தியாவின் சிறப்பு வரலாறு—I	... தி. வெ. குப்புசாமி	... 7—50
42.	,, II...	... ஏ. உஸ்மான் ஷெரீப்	... 9—00
43.	,, III ...	... அ. பாண்டுரங்கன்	... 11—00
44.	கிரேக்க நாட்டு வரலாறு-I	... சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன்	... 7—50
45.	,, II ...	... ,,	... 7—00
46.	,, III ...	... பி. இராமானுஜம் தேவதாஸ்	... 7 75

அரசியல்

*47.	இந்திய அரசியலமைப்பு ...	... வீ. கண்ணையா	... 4—75
48.	அரசியலுக்கு ஓர் அறிமுகம் ...	... டி. செல்லப்பா	... 8—50
49.	தற்கால அரசியல் அமைப்புகள் ...	... மோ. வள்ளுவன் கிளாரன்சு	... 8—50
50.	பன்னாட்டு அரசியல்—I ...	... திருமதி நூர்ஜஹான் பாவா	... 16—0
51.	பொதுத்துறை ஆட்சி இயல்—I ...	... வீ. கண்ணையா	... 9—00
52.	,, II ...	... அ. ஜெகதீசன்	... 7—25
53.	பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்-I...	வீ. கண்ணையா	... 7—50
54.	,, II...	டி. செல்லப்பா	... 7—50

உளவியல்

55.	குழந்தை உளவியல்—I	... கி. ர. அப்புள்ளாச்சாரி	... 8—00
56.	,, II	,,	... 7—00

57.	உட்கவர் மனம்	சி. ந. வைத்தீஸ்வரன்	7—00
58.	இளையோர் உளவியல்—I	தி. இரா. அரங்கராசன்	12—00
59.	,, —II	,,	9—00
60.	சமூக உளவியல்	என். வேதமணி மானுவேல்	9—25
61.	பிறழ்நிலை உளவியல்	அ. பெசன்ட் கிரீப்பர் ராஜ்	11—00
62.	பித்தரின் உள்ளம்	,,	3—00
*63.	குமர உள்ளம்	டாக்டர் மு. அறம்	6—25

தத்துவம்

64.	இந்து சமயத் தத்துவம்	ஞா. ராஜாபகதூர்	5—50
*65.	அறிவு ஆராய்ச்சி இயல்	ஆர் இராமானுஜாச்சாரி	3—50
*66.	மேலை நாட்டுத் தத்துவம்	ஆர். எஸ். தேசிகன்	3—50
67.	அத்துவித தத்துவம்	கோ. மோ. காந்தி	6—50
68.	ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	5—50
69.	இந்தியத் தத்துவம்	வ. அ. தேவசேனபதி, பா, நா. சண்முகசுந்தரம்	3—50

அறவியல்

70.	அறவியல்—ஓர் அறிமுகம்	கோ. மோ. காந்தி	8—50

அளவையியல்

71.	அளவை இயல்—தொடக்க நூல்	கி. ர. அப்புள்ளாச்சாரி	2—50

*மூல நூல் (Original Book)

மானிடவியல்

*72.	மானிடவியல்	ம. சு. கோபாலகிருஷ்ணன்	4—75
73.	பண்பாட்டுக் கோலங்கள்	கி. பூ. சுப்பிரமணியன்	5—50
74.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	எஸ். இலட்சுமி	3—50

சமூகவியல்

75.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	ஜெ. நாராயணன்	10- 00

புவியியல்

76.	ஆசியா—I	கொ. சேஷ. நரசிம்மன்	9—50
77.	,, II	,,	8—75
78.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	ஏ. எஸ். நாராயணன்	8—50
*79.	தென்கிழக்கு ஆசியா	ஜி. கிருஷ்ணமூர்த்தி	8—50
*80.	வட அமெரிக்கா	குமாரி இரா. அலமேலு	8—25
*81.	தென் அமெரிக்கா	எம். என். பத்மநாபன்	9—00
*82.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா	திருமதி எச். நியூமன்	4—00
*83.	,, —ஆஃப்பிரிக்கா	எஸ். முத்துகிருஷ்ணக் கரையாளர்	3—25
*84.	புவிப்புறவியல்—II	நா. அனந்தபத்மநாபன்	6—00
*85.	செய்முறைப் புவியியல்	சு. ஜெயச்சந்திரன்	9—00
*86.	மக்கட் பரப்பியல்	வி. எஸ். அனந்தபத்மநாபன்	6—25
*87.	சமுத்திரவியல்	கோ. இராமசாமி	6—50
88.	காலநிலை இயல்—I	கொ. சேஷ. நரசிம்மன்	10—00
89.	,, II	,,	5—00

90.	வளியியலுக்கு ஓர் அறிமுகம்	கோ. இராமசாமி	11—00
*91.	புவி அமைப்பு இயல்	சி. விசுவநாதன்	4—75

புள்ளியியல்

*92.	புள்ளியியல்—அறிமுகம்	சு. வைத்தியநாதன்	10—00
93.	புள்ளியியல் முறைகள்—I	கோ. சண்முகசுந்தரம்	10—00
94.	,, II	கே. ஆர். இராஜகோபாலன்	14—00
95.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	தி. வி. லட்சுமிநரசிம்மன்	6—50

உயர்கணிதம்

*96.	ஆயத்தொலை வடிவகணிதம்	டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை	12—50
*97.	வகை நுண்கணிதம்	,,	8—00
*98.	தொகை நுண்கணிதம்	தி. கோவிந்தராசன்	9—00

விலங்கியல்

*99.	விலங்கியல்	பெ. மா. அண்ணாமலை, இரா. முருகேசன்	12—00

பௌதிகவியல்

100.	ஒளி நூல்	ச. சம்பத்து	10—00

*மூல நூல் (Original Book)

விஞ்ஞானம்			
*101.	வானவெளி வெற்றி	டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	6—00
*102.	ரேடியோ	,, பி. திருஞானசம்பந்தம்	4—75
*103.	எக்ஸ்–கதிர்கள்	பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம்	4—50
*104.	பாம்புகள்	பெ. மா. அண்ணாமலை	3—50
*105.	தாவரம்—வாழ்வும் வரலாறும்	டாக்டர் கு. சீனிவாசன்	8—00
*106.	கரும்பு	கு. பெரியசாமி	4—00
மருத்துவம்			
*107.	நீரிழிவு-க்ஷயரோகம்	டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன்	2—50
108.	மகப்பேறும் மாதர் நோயும்	டாக்டர் (குமாரி) மணிமேகலை	8—25
*109.	பாக்டீரியா	சு. சுந்தரம்	2—50
பொறியியல்			
110.	நீங்களே வீட்டைக் கட்டலாம்	கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்பிரமணியம், ஆர். இராமசாமி, கே. வேணுகோபால்	8—50
சட்டம்			
*111.	குற்றவியல் சட்டம்	எம். சண்முகசுப்பிரமணியம்	10—00
பொது நூல்கள்			
112.	மகாத்மா காந்தி	சரஸ்வதி தங்கையன்	3—25
113.	விவசாயப் புரட்சி	வி. கார்த்திகேயன்	8—00
114.	சேமக் கை-நூல்	ஆர். சுப்பிரமணியம்	2—50
*115.	முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்	எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்	9—00
*116.	உணவும் ஊட்டமும்	தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்	4—50

*மூலநூல் (Original Book)